அமைச்சரவை ஆட்சி இயல்

(CABINET GOVERNMENT)

நல். முருகேச முதலியார்

கற்க கசடற

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

அமைச்சரவை ஆட்சி இயல்

நல். முருகேச முதலியார்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண் —444

அமைச்சரவை ஆட்சி இயல்

ஆசிரியர்

நல். முருகேச முதலியார், பி.ஏ.,

தமிழ்நாட்டு அரசு செயலர் (ஓய்வு),

முன்னாள் முதலமைச்சர் ஆய்வுரையாளர்,

சென்னை

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—April, 1973

T.N.T.B.S. (C. P.) No. 444

© Tamil Nadu Text Book Society

CABINET GOVERNMENT

N. MURUGESA MUDALIAR

Price Rs. 6-00

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

Printed by
Shanmugam Press Private Ltd.,
Madras-1.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்

(தமிழகக் கல்வி- உள்ளாட்சித்துறை அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பன்னிரண்டாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப்படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்றுவருகிறது. இவ் வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுவருகிறது.

இவற்றுள் ஒன்றுன 'அமைச்சரவை ஆட்சி இயல்' என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **444** ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க்குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை **479** நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

முகவுரை

பாராளுமன்றங் கொண்ட ஜனநாயகத்தில் அமைச்சரவை முக்கிய அம்சமாகும். அமைச்சராட்சி நிறுவப்படவில்லையாயின் மக்களின் வாக்குரிமைக்கும் அரசியல் கட்சிகளுக்கும் பயனில்லை. நம் நாட்டில் பண்டைக் காலத்திலும் ' அமைச்சு ' நாட்டின் ஓர் அங்கமாக இருந்தது. அது முடியாட்சிக்குத் துணையாக இருந்தது. பிரிட்டனில் முடியாட்சி இருப்பினும், பாராளுமன்றம் பல நூற்றாண்டுகளாக அமைச்சரவை — மக்களாட்சியை நடத்தி வருகிறது. இன்றைவரையும், ஜனநாயகத்தை மேற்கொண்ட வேறு நாடுகள் பிரிட்டனின் அமைச்சரவை முறைகளைப் பெரும் பான்மை பின்பற்றிவருகின்றன. இந்தியாவில் 1935ஆம் ஆண்டு அரசியல் சட்டப்படி பிரிட்டிஷ் அரசாங்கம் மாகாணங்களில் சட்டமன்றத்துக்குப் பொறுப்புடைய தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களுக்குச் சில துறைகளில் அதிகாரம் தந்தது. 1947ஆம் ஆண்டில் இந்தியா சுதந்திரம் பெற்றபின் பூரண மான அமைச்சரவை ஆட்சி பெற்றது. மக்கள் பிரதிநிதிகளால் வரையப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் அமைப்புச் சாசனத்தில் (Constitution) அமைச்சரவையின் அமைப்பும் இலக்கணங்களும் எழுதப்பட்டுள்ளன.

இந்தியாவில் இன்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளாக அமைச்சரவை ஆட்சி மத்திய அரசிலும் மாநில அரசு களிலும் நிலவிவருகின்றது. இந்தியாவில் பிரிட்டனைப்போல் ஒருமுக ஆட்சியாய் (Unitary Government) இல்லாமல் 'ஃபெடரேஷன் ' அல்லது ' சமஷ்டி ' ஆட்சியாய் நிறுவப் பட்டது. இது இந்திய அரசுகளும் (Princely States) பிரிட்டன் வெளியேறினபிறகு மத்திய அரசுடன் சேர்க்கப்பட வேண்டியிருந்ததன் அவசியமாகும். அன்றியும் மாநிலங்கள் ஏற்கெனவே ஓரளவு தனிஆட்சி (Autonomy) பெற்றிருந்தன. எனவே, இந்திய சமஷ்டியில் அமைச்சரவை ஆட்சியியல் இரண்டு நிலைகளில் நடந்துவருகிறது. ஒன்று மத்திய அரசிலும், மற்றொன்று மாநிலங்களிலும். இந்தியாவில் பல்வேறு கட்சிகள், மொழிகள், மக்கள், அரசியல் வளர்ச்சி வேறுபாடுகள் காணு வதால், இங்கு அமைச்சரவை ஆட்சியின் இலக்கணங்களையும் வெற்றி அம்சங்களையும், தோல்வி அம்சங்களையும், நடைமுறை

வழக்குகளையும் மக்கள் தெளிவாக அறிந்துகொள்வது கடினம்; ஆனால், இன்றியமையாதது.

இந்திய அமைச்சரவை ஆட்சியியலைப்பற்றி நூல்கள் பல இன்னும் எழுதப்படவில்லை. பிரிட்டனின் சுமார் அறுநூறு ஆண்டு அனுபவங்களை இங்குச் சுமார் ஐம்பது ஆண்டுகளில் பின்பற்றவும், நாட்டின் நிலைக்கேற்ப மாற்றிச் சொந்தமாக்கவும் இன்றியமையாததாக ஆயிற்று. அரசியல் பிரச்சினைகளைப் பற்றிய விவாதங்கள் பாராளுமன்றத்திலும், நீதிமன்றங்களிலும், பத்திரிகைகளிலும் நடைபெறுகின்றன. அரசியல் அமைப்பையும், சென்ற காலத்தின் அனுபவங்களையும், நிகழ்ச்சிகளையும் கொண்டு பிரிட்டிஷ் காபினெட்டைப்பற்றிச் சர் ஐவார் ஜென்னிங்க்ஸ் (Sir Ivor Jennings) முதலாயினோர் எழுதியுள்ள பெரு நூல்கள் இங்கு இதுவரை எழுதப்படவில்லை.

இந்திய அமைச்சரவை ஆட்சியியலைப்பற்றிப் பலர் ஒருவாறு அறிந்திருப்பினும், அரசியல்வாதிகள் அதைப்பற்றித் தத்தம் கோணத்திலிருந்து கருத்துக் கொண்டிருப்பினும், பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணவர்கள் அதைப்பற்றிய தெளிவான தகவல்களையும், அதனுடைய நுண்பொருள்களையும் அறிய வேண்டியது அவசியம். எனவே, சுருக்கமான பாடநூல் பட்டப் படிப்பு நிலைக்கு ஒத்ததாகத் தேவைப்பட்டுள்ளது. அத்தகைய நூல் ஒன்று தமிழில் எழுதும்படி தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் எனக்குப் பணித்ததை மகிழ்ச்சியுடன் மேற்கொண்டு இந்த நூலை எழுதியுள்ளேன்.

இந் நூல் பிரிட்டன், அமெரிக்கா, இந்தியா என்ற மூன்று நாடுகளின் அமைச்சரவை ஆட்சி இயலைச் சுருக்கமாக விளக்குகிறது. இந்திய இயலைத் தெளிவாக அறிவதற்கு பிரிட்டிஷ் இயலையும் அறிதல் வேண்டும். அமெரிக்கா, ஜனநாயக அரசியலாயினும், பிரசிடென்டு ஆட்சியும் அவரது காபினெட் சபையும் பெரிதும் வேறுபாடுடையன. பிரதமரைவிடப் பிரசிடென்டுக்கு அதிக அதிகாரம் உண்டு. இந்தியாவில் பிரதமர், ஜனாதிபதியின் பேரில் எல்லாக் காரியங்களையும் சட்டப்படி நிகழ்த்த வேண்டும். பிரிட்டனில் அரசி இந்திய ஜனாதிபதிக்கு ஒத்த நிலை என்று கூறுவதுண்டு. ஆனால், முற்றும் அப்படி அன்று. எனவே, நுணுக்கமான வித்தியாசங்களை அறிய மூன்று இயல்களையும் படிப்பது நன்று. ஃபிரான்சு முதலான நாடுகளைப்பற்றி எழுத இந்தச் சிறுநூல் இடம் தரவில்லை.

இந்த நூலில் அடிப்படையான அமிசங்கள் எளிய முறையில் விளக்கப்பட்டிருக்கின்றன. சட்டம், கொள்கைகள், மரபு மட்டுமன்றி, சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள், தேதிகள், குத்துப் புள்ளிகள், பாத்திரங்கள் எல்லாம் கூடியவரையில் சேர்த்து எழுதப்பட்டுள்ளன. எல்லாத் தகவல்களையும் ஒரே நூலிலிருந்து அறிந்துகொள்வது ஆகாததலால் துணைநூல்களின் அட்டவணையும் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது. சமீப கால நிகழ்ச்சிகள் பத்திரிகைகளிலிருந்து தொகுத்துக் கூறப் பட்டுள்ளன. பல துணைநூல்களின் உதவியைப் பொதுவாக ஈண்டு அங்கீகரிக்கின்றேன். அடிப்படையான உண்மைகளை இந்த நூலிலிருந்து உணர்ந்துகொண்டு, மாணவர்களும் மற்றவர்களும் மற்றைய நூல்களைச் சேர்த்துப்படித்துப் பயனடையலாம். கூடியவரை அடிப்படை விஷயங்கள் ஐயம் வராதபடி கூறப்பட்டுள்ளன. இந்த நூலைப் படிப்பவர்கள் வேறு எந்த நூலையும் சேர்த்துப் படிக்காவிடினும், இந்திய அரசியல் அமைப்பை முதற்கண் படித்தல் நலம். முக்கியப் பிரிவுகள் பிற்சேர்க்கையில் தரப்பட்டுள்ளன.

இந்த நூல் தமிழில் எழுதப்பட்டுள்ளது. பல்கலைக்கழகப் பட்டப்படிப்புக்குத் தமிழைப் பாடமொழியாக எடுத்துக் கொண்ட மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும். இந்த நூலில் உபயோகப்படுத்தியுள்ள குறியீட்டுச் சொற்கள் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் 1971-ல் வெளியிட்ட ‘கலைச்சொற்கள் — அரசியல்’ தொகுப்பைப் பின்பற்றுகின்றன. அதில் கிடைக்கப் பெறாத பல சொற்களுக்குத் தகுந்த தமிழ்ச் சொற்கள் உண்டாக்கப்பட்டுள்ளன. ஆங்கில நேர்ச்சொற்கள் தமிழ்ச் சொற்களுக்குப் பக்கத்திலேயே வளைவுக்குறிக்குள் தரப்பட்டுள்ளன. இந்த நூல் எளிய தமிழில் எழுதப்பட்டுள்ளது. இது மொழிபெயர்ப்புப் பாடப் புத்தகத் தமிழுமன்று; பத்திரிகைத் தமிழுமன்று. ஆசிரியர் உரை நிகழ்த்தும் போது எம் முறையில் விளக்குவாரோ அதே முறையில் எழுதப் பட்டுள்ளது. இந்த நூலின் எந்தப் பகுதியும் மொழிபெயர்ப் பன்று. முழுதும் சுயமாக எழுதப்பட்டது.

இந்த நூலை எழுதுவது சுலபமான காரியமன்றென்று சொல்லாமலே விளங்கும். துணைநூல்களையும் அரசாங்க அறிக்கைகளையும் மற்றும் ஆதாரமான பத்திரங்களையும் சேர்ப்பதற்குப் பல பாடுகள் படவேண்டியிருந்தன. பிரிட்டன், அமெரிக்காவைப்பற்றிய நூல்கள் கிடைக்குமளவுக்கு, இந்தியாவைப்

பற்றிய ஆதாரமான நூல்கள் இல்லை. கிடைக்கக் கூடிய எல்லா முக்கிய நூல்களை மீண்டும் பார்வையிட்டும், அரசாங்க அறிக்கைகள் முதலியவற்றையும் பத்திரிகை இதழ்களையும் பார்வையிட்டும், அரசாங்கத் துறைகளைக் கேட்டும், ஆராய்ச்சி நிலையங்களுடன் தொடர்புகொண்டும் கூடியவரை, தகவல்கள் பிழையின்றி எழுதப்பட்டிருக்கின்றன. பிழைகள் ஏதேனும் காணப்படின், தெரிவித்தால், அடுத்த பதிப்பில் திருத்தப்படும்.

பல பாடநூல்கள், வரலாற்று நூல்கள்கூட, 1950ஆம் ஆண்டோடு நின்றுவிடுவதாய்க் காணப்பட்டன. இந்த நூலுள் 1972 ஏப்ரல் வரையிலுள்ள சம்பவங்கள் சுருக்கமாக வடித்துக் காட்டப்படுகின்றன. வாதத்துக்குரிய விஷயங்கள் தவிர்க்கப் பட்டன. மாணவர்கட்கு மட்டுமன்றி, மற்றை யாவர்க்கும் தேவையானது நேரான தகவல்கள். கருத்துகள் அவரவர்கள் ஊகத்துக்கு விடப்படுதல் நல்லது. பல்கலைக்கழக மாணவர்களும் நூலில் உள்ளதைக் கைக்கொள்ளாமல், ஏதேச்சையாகச் சிந்தனை செய்வது நல்லதொரு கல்வி முறையாகும்.

இந்த நூல் எழுதுவதற்கு எனது அரசியல் நூல்களின் பரிச்சயமும், தமிழ்நாட்டு அரசாங்கச் செயலராகவும், பின் சிலகாலம் முதலமைச்சர் காலஞ்சென்ற டாக்டர் அறிஞர் சி. என். அண்ணாதுரை அவர்கட்குத் தனி ஆலோசகராகவும் இருந்த அனுபவமும், அமைச்சரவை ஆட்சி எப்படி நடைபெறுகிறது என்பதைப்பற்றிய நேரிடை அறிவும், பல முதலமைச்சர்களுக்கும், அமைச்சர்களுக்கும் அரசாங்க அலுவலராகப் பணிபுரிந்து அவர்களுடைய திறமைகளை அறிந்த வாய்ப்பும் பெரிதும் பயன்பட்டன. எனவே, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன வேண்டுகோளுக்குச் சிரமத்தைப் பாராட்டாது மகிழ்ச்சியுடன் இணங்கி இதை எழுதியுள்ளேன். இந்த நூலில் ஏதேனும் வாதுக்குரிய கருத்துகள் காணப்படின் அவைகளுக்கு அந்த நிறுவனமோ, அரசாங்கமோ உத்தரவாதமல்ல. இந்த நூல் மாணவர்களுக்குமட்டுமன்றி, அரசியல்வாதிகட்கும், பத்திரிகையாளர்கட்கும் அரசியலை அறிய விரும்பும் குடிமக்களுக்கும் உதவும் என நம்புகிறேன்.

நல். முருகேசமுதலியார்

பொருளடக்கம்

பாகம் I

பிரிட்டன்

			பக்கம்
1.	அரசியல் அமைப்பில் அமைச்சரவை	...	3
2.	அமைச்சரவை இலக்கணம்	...	9
3.	பாராளுமன்றமும் அமைச்சரவையும்	...	14
4.	பிரதமரைத் தேர்ந்தெடுத்தல்	...	21
5.	பிரதமரின் நிர்வாகப் பொறுப்பு	...	28
6.	பிரதமரின் ஆட்சிமுறை	...	41
7.	அமைச்சர்களின் தொழில்முறை	...	45
8.	காபினெட்டின் கூட்டுப்பொறுப்பு	...	52
9.	காபினெட்டுச் செயலகம்	...	58

பாகம் II

அமெரிக்கா

1.	அமைச்சரவை	...	69
2.	அமெரிக்கக் காபினெட்டும் கட்சிகளும்	...	82
3.	அமெரிக்கக் காபினெட் சீர்திருத்தங்கள்	...	93
4.	அண்மைக்கால அமெரிக்க அனுபவம்	...	97

பாகம் III

பாரதம்

1.	பழங்கால அரசியல் அமைச்சு	...	109
2.	கௌடில்யத்திலும் வள்ளுவத்திலும் அமைச்சு	...	112
3.	இந்திய வரலாற்றில் அமைச்சு (பிரிட்டிஷ் ஆட்சி ஆரம்பம் வரை)	...	122
4.	பிரிட்டிஷ் ஆட்சி ஆரம்ப முதல் இரட்டை ஆட்சி வரை	...	133

5. இரட்டை ஆட்சியில் கூட்டுப்பொறுப்பு ... 143

6. 1935ஆம் ஆண்டுச் சட்டம் முதல் 1947 விடுதலை வரை அரசியலும் அமைச்சும் ... 155

7. சுதந்திர இந்திய அரசியல் அமைப்பு ... 166

8. அரசியல் அமைப்புச் சட்டத்தில் அமைச்சரவை இலக்கணம் ... 183

9. சுதந்திரத்திற்கு முன் இடைக்கால அமைச்சரவை ... 195

10. சுதந்திரத்தின் பின் அமைச்சரவைகள்
   (அ) நேரு சகாப்தம் ... 199
   (ஆ) லால்பகதூர் சாஸ்திரி சகாப்தம் ... 211
   (இ) இந்திரா காந்தி சகாப்தம் ... 215

11. அமைச்சரவை ஆட்சியில் பிரதமரின் முக்கியத்துவம் ... 225

12. அமைச்சரவைச் செயலகம் ... 237

13. மாநில அமைச்சரவைகள்
   (அ) பொது ... 241
   (ஆ) தமிழ்நாடு ... 243

14. அமைச்சரவையும், பாராளுமன்றமும் ஜனாதிபதியும் ... 257

15. எதிர்காலம் ... 262

பிற்சேர்க்கை

1. இந்திய அரசியல் அமைப்பு முக்கியப் பிரிவுகளின் தொகுப்பு ... 267

2. அமைச்சரவைகள் ... 299

மேற்கோள் நூல்கள் ... 299

பாகம் I

பிரிட்டன்

1. அரசியல் அமைப்பில் அமைச்சரவை

பிரிட்டிஷ் பாரர்ளுமன்றம் மற்றெல்லாப் பாராளுமன்றங் கட்கும் தாய் போன்றது என்னும் சிறப்புடையது. குடியரசில் சட்ட மன்றம், நீதி, நிர்வாகம் என்ற மூன்று அங்கங்கள் இன்றி யமையாதவை. இவையின்றி ஓர் அரசியல் அமைப்பும் பொருந் தாது. இம் மூன்றும் பிரிட்டிஷ் அரசியலில் ஒழுங்கு பெற்றவை. அமைச்சரவை இயங்குவதால் இம் மூன்றும் ஒருமைப்பாடு பெறுகிறது. இல்லையேல் ஒவ்வொன்றும் தொடர்பின்றித் தனித்தனியே இயங்கும். பிரிட்டனில் எழுதப்பட்ட அரசியல் சட்டம் இல்லை. ஓர் அரசியல் நிர்ணய சபை[1] சட்டம் எழுதி இருப்பின் அமைச்சரவைக்கு முக்கிய இடம் கொடுத்திருக்கும். அமைச்சரவைக்கு முதன்மையுடையவர் பிரதமர் ஆவார்.

அமைச்சரவையை உருவாக்கி இயங்க வைப்பது பிரதமரே. அமைச்சரவைக்கும் மன்னருக்கும், அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்துக்கும் தொடர்பு ஏற்படுத்தி, அரசாங்கம் என்ற இயந்திரத்தை இயைபுடன் தொழில் புரியச் செய்வது பிரதமரின் பணியாகும். அரசியல் சட்டத்தில் பிரதமருக்கும், அமைச்சரவை போலவே தனி இடம் தரல் வேண்டும். இப்போது பிரிட்டனில் தனி அரசியல் அமைப்புச் சட்டம் இல்லை எனக் கூறினேம். ஆனால், பல தனிச் சட்டங்களும், நீதிமன்றத் தீர்ப்புகளும், வரலாற்று நிகழ்ச்சிகளும், அரசியல் மரபு நெறிகளும் சேர்ந்து பிரிட்டிஷ் அரசியல் அமைப் பாக எண்ணப்படும். பிரிட்டிஷ் பாராளுமன்றமும், நீதிமன்றங் களும் அரசியல் அமைப்பைப் பாதுகாக்கின்றன. ஒரு சட்ட மாவது அரசியல் சபையையோ, பிரதமர் பதவியையோ குறிப்பிட்டுக் கூறவில்லை என்பது வியப்பாகவே இருக்கும். இது பிரிட்டிஷ் மக்களின் சிறப்பும் அவர்களுடைய அரசியல் உணர்வின் நுட்பமும் ஆகும்.

[1] Constituent Assembly.

கி.பி. 1937ஆம் ஆண்டு வரை ஒரு பாராளுமன்றச் சட்டத்திலாவது பிரதமரின் பதவி குறிப்பிடப்படவில்லை. கி.பி. 1937ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 'அரசு அமைச்சர்கள் சட்டத்தில்'[1] அமைச்சர்களின் ஊதியத்தைப் பற்றிக் கூறுமிடத்தில், யார்யார் அமைச்சரவையில் இடம் பெறும் அமைச்சர்கள் என்று குறிப்பாகச் சொல்லவேண்டி யிருந்தது.

அமைச்சரவையோ அல்லது பிரதமரோ குறிப்பிட்ட ஒரு சட்டத்தின் அடிப்படையில் அதிகாரம் செலுத்துவதாகக் காணப்படவில்லை. இவர்களின் முடிவுகள் பின்பு சட்ட அடிப்படையில் நடைமுறைக்கு வரும்போது, அவை அரசியின் அங்கீகாரம் பெற்றவையென்றோ, பாராளுமன்றத்தின் இணக்கம் பெற்றவையென்றோ பெயர் பெறும். அவைகளின் சார்பில் பல விதிகளும் செய்யப்படும். இவை எல்லாம் சேர்ந்து அரசியல் இணக்கங்கள்[2] எனப் பெயர் பெறும். பிரிட்டிஷ் அரசியலைப் பொறுத்தமட்டில் இந்த இணக்கங்கள் மிக மதிப்புடன் காப்பாற்றப்பட்டு வருகின்றன.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் எழுதப்பட்ட ஒன்று என்பது தெரிந்ததே. எவ்வகை அரசியல் அமைப்புச் சட்டமாயினும் நாளடைவில் வழக்காறுகளும் மரபுகளும் இணக்கங்களும் வளர்ந்து, அவை சட்டத்திற்குரிய மதிப்பையும் உறுதியையும் பெறும். எழுதப்பட்ட சட்டமாயினும், அதைச் செயற்படுத்தும்போது பாராளுமன்றமோ, நீதிமன்றங்களோ சட்ட வாய்பாட்டின் பொருளையும், கருத்தையும் விளக்குவதற்குச் சட்டத்தில் வெளிப்படையாகக் கூறப்படாத, ஆனால் அதற்கு முரண்படாத, பொருள்களை விரித்துக் கூறுதல் இன்றியமையாததாகும். இந்த முறையில் எடுக்கப்படும் தீர்ப்புகள் நாளடைவில் எடுத்துக்காட்டுகளாகவும், அடிகோலிகளாகவும் அமைந்துவிடும்.

உண்மையிலேயே சட்டம் வழக்காற்றைப் பின்பற்றி உறுதிப்படுகிறது. வழக்காறு மேலும் சட்டத்தைப் பின்பற்றி வலுவடைகிறது. பிரிட்டனில் தனியுரிமை முடியாட்சியிலிருந்து பாராளுமன்றத்தையுடைய முடியாட்சியாக மாறியபின் பாராளுமன்றத்தின் உரிமைகள் சட்டத்தில் அமைக்கப்பட்டன. பாராளுமன்றத்தின் சட்டபூர்வமான அதிகாரத்தின் அடிப்படையில் அமைச்சரவை அதிகாரம் பெற்றுவிட்டது.

[1] Ministers of the Crown Act, 1937.
[2] Conventions of the Constitution.

சட்டத்திற்கும் மரபுக்கும் அடிப்படையில் வேறுபாடு இல்லை. இரண்டும் மக்கள் இணக்கத்தைப் பெற்றதனுல்தான் தகுதி பெறுகிறது. குடியாட்சியில் ஒருவரும் மக்கள் இணக்க மின்றியோ நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு மீறியோ எதனையும் மாற்றமுடியாது. இதுதான் குடியரசுக்கும் வல்லரசுக்கும் உள்ள வேற்றுமை. மக்களைப் பொறுத்தமட்டில் எது சட்டம், எது சட்டத்துக்கு இணையான மரபு என்று அவர்கள் வேற்றுமை பார்ப்பதில்லை. அவர்களது நோக்கம் நல்லாட்சியும் நீதியுமே. விவாதத்தில் வேற்றுமைகளைக் காண்பது சட்ட நிபுணர் கட்கும் அரசியல் மேதைகட்கும் மட்டுமே நுட்பமான ஒரு பொருளாய் அமையும்.

அரசியல் பண்பாடு, சட்டத்துக்கும் மரபுக்கும் அடங்கி நடப்பதே ஆகும். ஆனுல், சட்டத்தைக் கைவிட்டால் நீதி மன்றங்கள் தீர்மானம் செய்யலாம். மரபைக் கைவிட்டால் சில சமயம் அது கவனிக்கப்படாமலும் போகலாம் ; அரசியல் விவாதத்திற்கும் உள்ளாகலாம். மரபென்பது ஒருவரால் வேண்டுமென்று செய்யப்படுவதில்லை. அவை வழக்காற்றில் வந்து நாளடைவில் மரபாக நிலைத்து நின்று விடும்.

பிரிட்டனில் வெஸ்ட்மினிஸ்டர் சட்டத்தின் முகப்பில் காமன்வெல்த் நாடுகளைப்பற்றிய மரபுகள் சில கூறப்பட்டுள் ளன. இவைகளைத் தொடர்ந்து கணக்கற்ற பின்பற்றுகள் நிலவி வருகின்றன. பிரிட்டனில் இவைகளெல்லாம் பொது நீதி[1] போன்ற தகுதி பெற்றுவிட்டன. நம் நாட்டில் இத்தகைய மரபுகள் இன்னும் அதிகமாக வளரவில்லை; நாளடைவில் வளர்ந்து அரசியலைச் செழிப்புறச் செய்யும்.

உண்மையிலேயே இந்த மரபுகள் அமைச்சரவை பற்றிய அலுவல்களில் தான் அதிகமாக வழக்காற்றில் வரும். எடுத்துக் காட்டாக, அமைச்சரவையில் சேர்க்கக்கூடிய அமைச்சர்களைத் தேர்ந்தெடுப்பது முதலமைச்சரின் உரிமையாகும். இது ஒப்புக்கொள்ளப்பட்ட மரபு. அமைச்சரவை கலைக்கப்படின், எல்லா அமைச்சர்களும் விலகவேண்டுமென்ற கூட்டுப் பொறுப் பும் அத்தகையதே. இவைகளெல்லாம் அரசியல் சட்டத்தில் காணப்பட மாட்டா.

இவ்வித இணக்கங்கள் மக்கள் ஆட்சியில் காணப்படும் சிறப்புகளாகும். யாவராலும் எடுத்துக்காட்டாகக் கருதப்படும்

[1] Common Law.

பிரிட்டிஷ் அரசியலில் நான்கு தத்துவங்கள் காணப்படும். அவை : (1) மக்கள் இணக்கம் (2) தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் ஆய பாராளுமன்றம் (3) அரசியல் சட்டத்துக் குட்பட்ட மன்னர் (அரசி கூட) (4) அமைச்சரவை. இந்த நான்கும் மக்கள் பெயரிலேயே செயல்பட வேண்டும்.

முதல் வகையின் அறிகுறி மக்களுக்குள்ள வாக்குரிமை. இரண்டாவதன் அறிகுறி பொதுத் தேர்தலில் ஆதரவுபெற்ற வேட்பாளர்களால் ஆய காமன்ஸ் சபை. மூன்ருவது சட்ட அடிப்படையில் வரும் அரச மரபைச் சேர்ந்த அரசியல் சட்டத் துக்குட்பட்ட மன்னர். நான்காவது காமன்ஸ் சபைக்குட் பட்டதும் பொறுப்புடையதுமான மேற்பட்ட மூன்றுக்கும் முரணுகாத அமைச்சரவை.

இந் நான்கும் மக்கள் விருப்பத்தின் கருவிகளே தவிர தனி ஆதிக்கம் பெற்றவை அல்ல. வாக்குரிமை என்பது சட்டத் திற்கு மீறி ஒருவராலும், நீதிமன்றத்தாலும்கூடப் பறிக்க முடியாததொன்று. தேர்தலில் வாக்குரிமை மட்டுமன்றி, கருத்தை வெளிப்படுத்தப் பேச்சுரிமை, தட்டுத் தடையின்றி ஒன்று சேர்ந்து செயல்படும் உரிமை,[1] விருப்பப்படியுள்ள தேர்தல் உரிமை, அவரவர்கட்கு உகந்த கொள்கைகட்கு ஆதரவு கொடுக்கும் உரிமை இவைகளெல்லாம் அமைச்சரவை அரசியலின் பின்னணியில் நிற்கும் நல்லமைப்புகளாகும். இப் பண்புகள் பொது மக்கள் கருத்தையே[2] அரசாங்கத்தில் அமர்த்திவைக்கும் குறிக்கோளுடையன.

வாக்குரிமையாலும் கொள்கை உரிமையாலும் பலவகைப் பட்ட கட்சிகள் நாட்டிலும் நாடாளுமன்றத்திலும் அமையும். அக் கட்சிகளில் தேர்தலில் அதிக ஆக்கம் பெற்ற ஒன்றே அமைச்சரவை ஏற்படுத்தத் தகுதி பெறும். இது பருப்பொரு ளான உண்மை. இந்தக் கட்டுப்பாடின்றி மக்கள் ஆட்சி இயலாததாகும்; அன்றி ஒருவிதமாக நேர்படினும் வலுவற்ற தாக முடிந்துவிடும்.

இந்த அமைப்பின் நேர்த்தி என்னவெனின், பல கட்சி களுக்கு இதில் இடம் உண்டு. ஒவ்வொரு கட்சியும் தன் கொள்கைகளுக்கு உண்மையாக இருத்தல் வேண்டும். அமைச்சரவை ஏற்படுத்திய கட்சி மக்கள் பொதுநலத்திற்கு உண்மையாக இருத்தல் வேண்டும். அதன் நோக்கங்களையும்,

[1] Freedom of Association. [2] Public Opinion.

குறிக்கோள்களையும், ஏற்பாடுகளையும், வேலைகளையும் மக்கள் ஏற்கிறார்களா என்பதை நிர்ணயிக்கத் தேர்தல் உரைகல்லாக அமைந்துவிடும்.

பாராளுமன்றத்தில் சிறுபான்மையான எதிர்க்கட்சி (கட்சி களின்) இசைவு பெறுவது போட்டியால் இயலாதாயினும் பொதுத் தேர்தலில் பெற்றே தீரவேண்டும். எல்லாக் கட்சி களின் அறைகூவலையும் கேட்டுப் பொதுமக்கள் தங்கள் வாக் குரிமையின் வாயிலாகத் தீர்ப்பு அளிப்பார்கள். அங்ஙன மின்றிப் பாராளுமன்றத்தில் அமைச்சர்கள் கொண்டுவரும் சட்டத்திற்கோ, ஏற்பாடுகளுக்கோ தோல்வி வரின், அக் கணமே அமைச்சரவை பதவியை இழக்கும். எதிர்க் கட்சி மக்களின் அதிருப்திக்கு அறிகுறியாய்ச் செயல்படும். இது தொடர்ந்து வரக்கூடிய தேர்தலில் தீர்ப்புக்கு வரும்.

அமைச்சரவைக்கு எதிர்க்கட்சி இன்றியமையாதது. எதிர்க் கட்சி ஆளும் கட்சியை எதிர்க்குமேயன்றி, மக்கள் நலத்திற்கு எதிரியாக நிற்கலாகாது. அமைச்சரவை பொது ஆதரவில் நிற்கும். எதிர்க்கட்சிகள் தம்முள் ஒற்றுமையால் நிற்கும். இரு தரத்தாரும் பாராளுமன்றத்தில் பொறுப்பற்று நடப்பதோ ஓட்டுப் பெறுவதில் மோசடியோ செய்யலாகாது. இவைகட்குத் தண்டனை அடுத்த தேர்தலில் ஏற்பட்டு விடலாம். தாங்கள் ஈடுபட்டுள்ள அரசியல் அமைப்பில் நம்பிக்கையும், உண்மை யான நடத்தையுமே உயிர்நாடி என்று பிரிட்டிஷ் அரசியல் மேதைகள் கூறுவார்கள்.

பொறுப்பு என்பதே எல்லாவற்றிற்கும் அடிப்படை. பாராளு மன்றத்தின் உறுப்பினர் தமது தொகுதியிலுள்ள பெரும் பாலோர் கருத்தைப் பிரதிபலிக்கிறார். அவர் சார்ந்த கட்சி, உறுப்பினர்களுள் பெரும்பாலோரின் கருத்தைக் கைக்கொள்ள வேண்டும். அமைச்சரவை ஏற்படுத்தி ஆளும் கட்சி பாராளு மன்றத்தின் பெருவாரியான கருத்தை ஏற்றுச் செயல்பட வேண்டும். பெரும்பான்மைக் கட்சி என்ற எண்ணத்தில் அமைச்சரவை சிறுபான்மையோரை அளவுக்கு மீறி நிரா கரித்துச் செயல்பட்டால் கொடுங்கோன்மையாக முடிந்து ஜனநாயகம் குலைந்துபோகும்.

ஆளும் கட்சி தன் கட்சியின் ஆக்கத்தைப் பெருக்கிக்கொள் வதில் குற்றமில்லை. நாட்டு மக்களின் ஆதரவு தம் பக்கம் இருந்ததென்ற துணிவில் அமைச்சரவை நினைத்தவை எல்லா

வற்றையும் ஆராயாமல் செய்ய முடியாது. வாக்காளர்கள் கொடுத்த வலிமை தனித்தனியான ஆட்களுக்குத் தந்ததன்று; கட்சியின் முந்திய சாதனைகளையும் எதிர்காலத்தில் அது செய்ய எண்ணியிருக்கும் செயல்களையும் கவனித்துப் பொதுவாகத் தந்த வலிமையாகும்.

ஒற்றை மாற்று வாக்கு[1] இல்லாமல் விகிதப் பிரதிநிதித்துவ வாக்காயிருந்தால் மக்களின் ஆதரவு சிறிது மாறுபடலாம். அமைச்சரவை இவைகளை மனத்தில் கொண்டு செயல்படின் ஜனநாயகம் விளக்கம் பெறும். இப்படிக் கூறின், அமைச்சரவை செய்யும் ஒவ்வொரு செயலையும் எல்லோரும் ஆதரித்த பின்தான் செய்ய வேண்டுமென்பதன்று. அது நடைமுறையில் இயலாத செயலாகும். இது அரசியல் வாதிகளின் முதிர்ந்த உணர்வால் நடுநிலையில் நின்று செய்யத் தக்க நடவடிக்கையாகும்.

இதுகாறும் கூறியவற்றால் மக்கள் ஆட்சியில் அமைச்சரவை செயல்படும் முறை சட்டத்தில்மட்டும் பொருத்தி வைத்து முடிவு பெறுது என்பதும், நல்ல மரபுகளைக் கடைப்பிடிப்பதால் மட்டுமே தலையாய மக்கள் நலன் வளர்ச்சி பெறும் என்பதும் நனி விளங்கும். பாராளுமன்றம் நீதிமன்றமுமன்று. அரசியலில் ஒவ்வொன்றுக்கும் சட்டமும் கிடையாது. எனவே, பாராளுமன்றம் அமைச்சரவையைக் கட்டுப்படுத்த முடியாது. ஆனால், அது பொதுமக்களின் கருத்தைத் தட்டுத் தடங்கலின்றிக் கூற வாய்ப்புத் தரும் மன்றமாகும்.

அமைச்சரவை நிர்வாகக் குழுவன்று. அது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கூடிய பாராளுமன்றத்துக்குப் பொறுப்புடையது. அமெரிக்காவில் நிர்வாகத்துக்கும் பிரசிடென்டே தலைவர். அவரால் நியமிக்கப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளுக்கும் அமைச்சரவை (காபினெட்) என்பதே பெயர். நம் நாட்டில் ஏறக்குறைய பிரிட்டிஷ் அமைப்பைப் பின்பற்றியே மைய அரசாங்கத்திலும், மாநில அரசாங்கங்களிலும் அமைச்சரவைகள் செயல்படுகின்றன.

இவ்வத்தியாயத்தில் பொதுவாக அமைச்சரவையின் சட்டத்தைப் பற்றியும், அமைப்பைப் பற்றியும் பொதுவாகக் கூறினேம். இனி வெவ்வேறு நாடுகளில் உள்ள அமைச்சரவையின் முறையைச் சிறிது கவனிப்போம்.

[1] Single Transferable Vote.

2. அமைச்சரவை இலக்கணம்

பிரிட்டனின் அரசியல் அமைப்பும், அமைச்சரவை உருவான வகையும் சுமார் முந்நூறு ஆண்டுகளின் வரலாற்றில் தொடர்ந்துவரும். இந்தக் கால அளவில் எத்தனையோ மாறுதல்களும் சீர்திருத்தங்களும் இயல்பாகவே தேவைகட்கு ஏற்றபடி உண்டாயின. அரசியல் சீர்திருத்தச் சட்டம்[1] இதில் முக்கிய இடம் பெறும். இச் சட்டம் மன்னரின் முடியாட்சியையும் அமைச்சரவையின் இலக்கணத்தையும் பெரிதும் சீர்திருத்தியது. ஆனால், அமைச்சரவையின் சில பகுதிகள் முந்நூறு ஆண்டுகட்கு முன்பே மன்னரின் ஆலோசகர் சபை[2] செயல்பட்ட முறையில் காணலாம்.

இந்தச் சபை உறுப்பினர் மன்னரின் ஊழியரே யாவர். இந்தச் சபை அடிக்கடி கூடி எல்லா நிர்வாக விஷயங்களிலும் மன்னருக்கு ஆலோசனை கூறவேண்டும்; பாராளுமன்றத்தில் சட்டங்களை நிறைவேற்றவும் திருத்தவும் ஆலோசனை கூற வேண்டும். மன்னருக்கும், பாராளுமன்றத்துக்கும் ஏற்பட்ட முரண்பாட்டினுல் சட்டம் நிறைவேற்றும் பொறுப்பையும் நிர்வாகம் நடத்தும் பொறுப்பையும் பிரித்துவிட வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாயிற்று.

ஹேனேவர் மரபு மன்னர்கள், குறிப்பாக மூன்றும் ஜார்ஜ், தம் ஊழியர்கள் காமன்ஸ் சபையால் அங்கீகரிக்கப்படுபவர்கள் என்பதை விரும்பவில்லை. எனவே, காமன்ஸ் சபையின் ஆதரவு பெறுவதற்குச் சூழ்ச்சிகளும் ஊழல்களும் மலிந்தன. இக் காரணத்தால் மன்னரின் நம்பிக்கையைப் பெற்ற ஒரு பிரதமர் காமன்ஸ் சபையின் ஒரு சிறுபான்மையினரின் கூட்டுறவோடு நிர்வாகத்தை நடத்த முடிந்தது. எனவே, கி.பி. 1688-ல்

[1] Reforms Act, 1832. [2] Privy Council.

நிகழ்ந்த புரட்சியும் போராட்டமும் பயனற்றுப் போகும் வகையில் இருந்தன. மன்னர் பாராளுமன்றத்தை நிராகரிக்கவும் முடிந்தது. அமைச்சரவை மன்னர் ஆலோசகர்களின் சிறு குழுவாக வேலை செய்துவந்தது.

முதலாம் ஜார்ஜ், இரண்டாம் ஜார்ஜ் மன்னர்கள் தங்கள் மறுப்பாணை[1] அதிகாரத்தால் ஆதிக்கம் செலுத்தி வந்தார்கள். மூன்றும் ஜார்ஜ் தமது பிரதமரின் திறமையால் தம்போக்கில் காமன்ஸ் சபையைச் சமாளித்து வந்தார். சுமார் கி.பி. 1782ஆம் ஆண்டு முதல் இந்த நிலை மாறுதல் அடைந்தது. அரசியல் கட்சிகள் பெரிய நில உரிமையாளர்களும், அவர்களின் உறவினர்களும், கையாள்களும் கொண்டவையாக இல்லாமல், அரசியலில் பற்றும் நம்பிக்கையும் உள்ளவர்களைக் கொண்டவையாக மாறின. பொது மக்களின் கருத்துக்கு மேன்மேலும் மதிப்பு ஏற்பட்டது. கி.பி. 1830-ல் 'விக் கட்சி'[2] அதிகாரத்திற்கு வந்தது இந்தக் கூற்றை வலுப்படுத்தியது. கி.பி. 1832ஆம் ஆண்டு அரசியல் சீர்திருத்தச் சட்டம் இதற்குச் சிகரமாக ஏற்பட்டது. இந்தச் சட்டம் நிறைவேறுவதற்கும் மன்னரின் அங்கீகாரம் பெறுவதற்கும் எத்தனை தொல்லைகள் இருந்தன என்பதை வரலாற்றில் காணலாம்.

கி.பி. 1834ஆம் ஆண்டில் நான்காம் வில்லியம் மன்னர் விக் கட்சி அமைச்சரவையைக் கலைத்து, சர் இராபர்ட் பீல் என்பவரை அமைச்சரவை ஏற்படுத்த நியமித்தபோது, அந்தப் பணி அவ்வளவு எளிதன்று என்பது விளக்கமாயிற்று. காமன்ஸ் சபை மன்னர் நியமித்த அமைச்சர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தது. எனினும், நிர்வாகம் மன்னரின் பொறுப்பு. எனவே, மன்னரின் பிரதிநிதிகள் கொண்டுவரும் பிரேரேபணைகள் தமக்கு முழுதும் இணக்கமாக இல்லாவிட்டாலும், மறுக்கவேண்டிய தேவை இல்லை என்ற மனப்பான்மை வளர்ந்தது. பிட் பிரபு (மூத்தவர்), கிரென்வில் பிரபு[3] ஆகியவர்களும் இந்தக் கருத்துடையவர்களாகவே இருந்தார்கள்.

உண்மையிலேயே பாராளுமன்றம் மக்கள் பிரதிநிதிகட்கும், மன்னரால் நியமனம் செய்யப்பட்ட அமைச்சர்கட்கும் இடையே நடக்கும் ஒரு மாநாடாக இருந்துவந்தது. அமைச்சரவையின் பொறுப்பைப்பற்றிய இன்றைய நாள் கருத்து அக் காலத்தில் உருவாகவில்லை. காமன்ஸ் சபையினர் மன்னரின் அமைச்

[1] Veto. [2] Whig Party. [3] Pitt, the elder; Lord grenville.

சருடன் நேர்முகமாக வழக்குரைக்கவும், அவர்கள் வெளிப் படையாகச் செயல் புரியவும், தாங்கள் மன்னருக்கு நல்கிய ஆலோசனைகட்கு முழுப் பொறுப்பை ஏற்றுக்கொள்பவர்களா யும் இருந்தால் போதும் என்ற கருத்து நிலவியது. அந்தரங்க ஆலோசகர்கள் சொல்லுவதுபோலெல்லாம் மன்னர் ஆடாமல், காமன்ஸ் சபைக்குப் பொறுப்புள்ள அமைச்சர்களால் இயக்கப்பட்டால் போதும் என்ற கருத்து உருவாயிற்று.

இக் காரணங்கள் பற்றியே முன்னைய அமைச்சரவை[1] (காபி னெட் கவுன்சில்) வெறுக்கப்பட்டது. அத்தகைய காபினெட் கவுன்சில் முதலாம் சார்லஸ் மன்னர் காலத்தில் இருந்தது. அந்தப் பெயரே அவர் காலத்தில் கிளாரண்டன் பிர்புவால் இழிவுரையாகத் தரப்பட்டது. இரண்டாம் சார்லஸ் மன்னர் காலத்தில் சிறிது மாறி அது மன்னரின் தனி ஆலோசகர்களின் (பிரிவி கவுன்சில்) குழுவாக ஆயிற்று. இதில் சேர்க்கப்பட்ட பிரபுக்களே[2] எல்லா அதிகாரங்களையும் செலுத்தினர்கள். இதனால் ஆலோசகர்கட்கும் அமைச்சர்கட்கும் வேறுபாடில் லாமல் போயிற்று. இது அமைச்சரவையின் இளமைக் காலம் எனலாம்.

இந்த நிலை மாறுவதற்கு முன் கூறியதுபோல் ஒரு நூற்றுண்டுக்காலம் ஆயிற்று. பிரிவி கவுன்சில் பிரபுக்கள் மறைந்து போனர்கள். பிரிவி கவுன்சிலும் வலிமை அற்றுப் போயிற்று. தனிக் குழுக்கள் மறைந்து அமைச்சரவை உருவாயிற்று. ஆனல், அமைச்சரவை (காபினெட்)[3] என்ற பெயர் அப்போதும் வழக்குக்கு வரவில்லை. பிரபுக்கள் சபையில் கொண்டு வரப்பட்ட சில கண்டனத் தீர்மானங்களில் கூட காபினெட் என்ற பெயரைப் பயன்படுத்தவில்லை. அப்படி ஒரு சபை அரசியல் சட்டத்தில் காணப்படாத ஒன்று என்ற கருத்தும் இருந்தது. மெக்காலே[4] போன்ற வரலாற்று ஆசிரியர் களும் காபினெட் என்ற ஓர் உருப்படி அதுவரை இருந்த தாகப் பாராளுமன்றங்கூட ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறினர்கள்.

எவ்வாருயினும் கி.பி. 1851ஆம் ஆண்டில் காமன்ஸ் சபை, பாராளுமன்றத்தைத் துவக்குதல் கலைத்தல் என்பவைகளை ஒழுங்குபடுத்துவதற்கு ஏற்படுத்திய குழு ஒன்று தனது அறிக்

[1]Cabinet Council. [2]Lords of the Council. [3]Cabinet. [4] Lord Macaulay.

கையில் 'காபினெட் அமைச்சர்கள்'[1] என்று குறிப்பிட்டுப் பேசிற்று. ஆனால், காமன்ஸ் சபை அப்படிப்பட்ட அமைச்சர்கள் அரசியல் சட்டத்தில் காணப்படாதவர்கள் என்று மறுத்தது. அரை நூற்றாண்டுக்குப் பின்னரே காமன்ஸ் சபை இத்தகைய பெயரை ஏற்றுக்கொண்டது. கி.பி. 1900ஆம் ஆண்டில் மன்னருக்குச் சமர்ப்பித்த ஒரு பத்திரத்திற்குக் கொண்டுவரப்பட்ட திருத்தப் பிரேரேபணை ஒன்றில் இந்தப் பெயர் வழங்கப்பட்டது. அதிகார பூர்வமான ஓர் அறிக்கையில் இது வழங்கப்பட்டது.

பார்ட்லி என்பவர் கொண்டுவந்த அத் திருத்தம் பின்வருமாறு: ''பிரதம அமைச்சர் தமது குடும்பத்தைச் சேர்ந்த அத்தனை பேரையும் 'காபினெட்' பதவிகட்கு நியமனம் செய்ய மாட்சிமை தங்கிய மன்னருக்கு ஆலோசனை சமர்ப்பித்துள்ளதற்கு நாங்கள் எங்கள் இணக்கமின்மையை வணக்கத்துடனும் வருத்தத்துடனும் தெரிவிக்கிறோம்.''

அன்றுதொட்டு அரசியலின் முக்கியமான அந்தக் குழுவிற்குக் காபினெட் என்னும் இந்தப் பெயர் அமைந்துவிட்டது. காபினெட் உறுப்பினர்கள் பிரிவி கவுன்சில் உறுப்பினர்களுமானபடியால் அரசியல் சட்டத்தில் குறிக்கப்படத் தகுதி உடையவர் ஆவர். மற்றப்படி முன் கூறியவாறு காபினெட் உறுப்பினர் என்ற முறையில் மட்டும் காணப்பட மாட்டார்கள். பிரிவி கவுன்சிலர் எடுக்கும் உறுதிமொழி மன்னருக்குச் செய்ய வேண்டிய பல கடமைகளைக் குறிக்கும். ஆனால், காபினெட் உறுப்பினர் என்ற முறையில் எடுக்கும் பதவியேற்பு மொழியும் பற்றுறுதி மொழியும் அவ்வளவு பெரிதல்ல.

பிரிவி கவுன்சிலர் உறுதிமொழி சிற்சில சமயங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களுக்கு வில்லங்கம் ஏற்படுத்தலாம். பிரிவி கவுன்சில் அரச மரபினர், பிரபுக்கள், மத குருக்கள், நீதிபதிகள், அரண்மனை அதிகாரிகள், சமூகப் பிரமுகர்கள் முதலியவர்கள் அடங்கியது. அது கௌரவமானது. அரசாங்க நிகழ்ச்சிகளில் அதன் உறுப்பினர்கட்கு இடமுண்டு. நடைமுறையில் பிரிவி கவுன்சில் பெயரளவில் தான் உள்ளது. அதன் முக்கியமான தொழில் முறையில் உள்ள அங்கம் நீதிக்குழு[2] ஆகும். இந்தக் குழு காமன்வெல்த்தில் உள்ள நீதிமன்றங்கட்கெல்லாம் தலையானது.

அமைச்சரவைக்கும் பிரிவி கவுன்சிலுக்கும் நிறுவனங்கள் என்ற முறையில் ஒரு தொடர்பும் இல்லை. ஆனால் காபினெட்,

[1] Cabinet Ministers. [2] Judicial Committee.

மன்னரின் நம்பிக்கையுள்ள பிரிவி கவுன்சிலர்களின் தனிக் குழு எனக் கருதப்பட்டது. அரசியல் சீர்திருத்தச் சட்டம் வந்தபிறகும் தேர்தலில் வந்த அமைச்சர்கள் மன்னருக்கோ, மேல் சபைக்கோ முரணுக இருத்தல் தகாது என்ற கருத்து இருந்துவந்தது. மேல் சபையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், காமன்ஸ் சபையில் நம்பிக்கை உறுதித் தீர்மானம் பெறவேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்தது.

நான்காம் வில்லியம் காலத்திலும் மன்னரின் நம்பிக்கையின்றி அமைச்சர் ஆட்சி நீடிக்கக் கூடாது என்ற கருத்து இருந்தது. இக் காரணம் பற்றியே சர் இராபர்ட் பீல் கி.பி. 1839-ல் பதவி ஏற்கத் தயங்கினுர். புகழ்பெற்ற பிரதமர் கிளாட்ஸ்டன்[1] காலத்தில்தான் (கி.பி. 1868) அமைச்சரவை நன்ருக உருவாகியது எனக் கூறலாம். முன் ஐம்பது ஆண்டுகளில் அரசியல் அமைப்பே மாறிக்கொண்டு வந்தது. நாளடைவில் அமைச்சரவை சிறப்பிடம் அடைந்துவிட்டது.

கிளாட்ஸ்டனுக்குப் பின்னுல் டிஸ்ரேலி[2] போன்ற பிரதம அமைச்சர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். அமைச்சரவை பொது அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுக் காணப்பட்டாலும், 'பிரதம அமைச்சர்'[3] என்ற பெயர் கி.பி. 1878ஆம் ஆண்டு வரை எதிலும் காணப்படவில்லை. அவ்வாண்டில் பெர்லின் உடன்படிக்கையில் பீகன்ஸ்பீல்டின்[4] பெயர் இங்கிலாந்தின் 'பிரதம அமைச்சர்' என்று குறிப்பிடப்பட்டது. இருபத்திரண்டு ஆண்டுகட்குப்பின் ஓர் அரண்மனைச் சுற்றறிவிப்பில் சாலிஸ்பரி பிரபு (Marquis of Salisbury) 'பிரதம அமைச்சர்' என்ற பதவிப் பெயரால் குறிக்கப்பட்டார். நூற்று அறுபத்து மூன்று ஆண்டுகட்குப்பின் விக்டோரியா அரசியார் ஆட்சியில் பட்டம் பெற்றவர் பட்டியல் ஒன்று 'பிரதம அமைச்சர் பட்டியல்' என்று குறிக்கப்பட்டது.

பாராளுமன்றத்தில் பிரதம அமைச்சருக்குச் சட்ட அடிப்படையான தகுதி உளதா என்று கேள்வி கேட்கப்பட்டதால் பிரதம அமைச்சரின் சிறப்போ, அமைச்சரவையின் சிறப்போ குறைவுபடவில்லை. கிளாட்ஸ்டன் ஒரு சமயம், "இந்த உலகிலே பிரதம அமைச்சருக்குள்ள ஆதிக்கம் எவ்வளவோ இருந்தும், ஒரு பெயரோ பட்டமோ இல்லாத பேர்வழி இல்லை" எனக் கூறினுர். பிரதம அமைச்சரின் பொறுப்பைப் பற்றி வேறு அத்தியாயத்தில் விரிவாகக் கூறுவோம்.

[1] Gladstone. [2] Disraeli. [3] Prime Minister. [4] Beaconsfield.

3. பாராளுமன்றமும் அமைச்சரவையும்

பிரிட்டிஷ் அமைச்சரவை அமைப்பு, திட்டமிட்டு ஆக்கப்படவில்லையாலும், அது நாளடைவில் நல்ல அரசியல் அங்கமாய் விட்டது. அதுவே சட்டமன்றத்தோடு கூடிய மக்கள் ஆட்சிக்கு[1] ஒரு சிறந்த எடுத்துக்காட்டாய் நிலவுகிறது. அது ஒரு நுட்பமான கருவி என்பதில் ஐயமில்லை. மக்கள் ஆட்சியில் பல்வேறு விருப்பு வெறுப்புகளைச் சமப்படுத்தி ஒரு நம்பிக்கைக் குரிய பெருவாரிக் கட்சியின் பொறுக்கி எடுக்கப்பட்ட நிர்வாகக் குழு போன்ற ஒரு கருவியாக நின்று நிர்வாக இயந்திரத்தைச் செயல்படுத்துகிறது. இதைவிடப் பொது மக்கள் கருத்துக்குப் பொறுப்பான வேறு ஒரு திட்டம் அமைவது அரிது.

இது எல்லா முக்கிய இனங்களையும் மக்கள் தீர்ப்புக்கே விட்டு, தேர்தல் மூலம் அந்தத் தீர்ப்புகளைச் செயல்படுத்த ஓர் ஆட்சிக் குழு அமைவதற்கு வாய்ப்புத் தருகிறது; மக்கள் சபையின் பெருவாரியான உறுப்பினர்களின் எண்ணத்திற்கு ஒப்ப நிர்வாகம் செய்யவும் சட்டங்களை நிறைவேற்றவும் வாய்ப்புத் தருகிறது ; அதோடுகூட ஆட்சிக் குழுவுக்குப் போதுமான சுதந்தரம் தரப்படுவதால் அதற்கு வலிமை தந்து அசைவின்மையையும் தருகிறது; எல்லா நேரத்திலும் தீர்ப்பளிப்பவர்கள் பொதுமக்கள் என்பதைக் கவனப்படுத்துகிறது.

இது, எல்லாப் பொது விஷயங்களையும் வெளிப்படையாக விவாதத்தில் கொண்டு வரவும், மக்கள் பிரதிநிதிகள் தம் கருத்துகளை வெளியிடவும் வாய்ப்புத் தருகிறது. உயர் அதிகாரம் பெறும் அமைச்சர்கள் தங்கள் செயல்களைப் பொதுத் தீர்ப்புக்கு வைக்க வேண்டியிருப்பதால், பொருந்தாத சமயத்தில் வெளியேற்றப் படுவதற்கும் உள்ளாவது சிறந்த

[1] Parliamentary Government.

ஓர் அமைப்பாகும். இது சட்டம் இயற்றுவதற்கும் நிர்வாகம் செய்வதற்கும் சிறந்த பொறுப்பை உண்டாக்குகிறது; வாக்காளர் பெருவாரியாக விரும்புவதைச் செயல்படுத்தச் சட்ட அடிப்படையில் பெரிய மாறுதல்களையும் சீர்திருத்தங்களையும் செய்ய அதிகாரம் கொடுக்கிறது.

நாகரிகமுள்ள சமுதாயத்திற்குத் தனி முடியாட்சி[1]யைத் தவிர்த்து, இந்த அமைச்சரவை ஆட்சியோ[2] அல்லது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனுதிபதிக் குழுவின் ஆட்சியோ[3] தான் வழி. ஜனுதிபதி ஆட்சிமுறையைப் பற்றி வேறு ஓர் இடத்தில் கூறுவோம். ஒற்றுமை வேற்றுமை காண்பவர்கள் பிரிட்டிஷ் முறையைச் சிறிது அதிகமாகவே பாராட்டுவார்கள். ஆனுல், அதில் நுட்பமாக அடங்கியுள்ள ஒரு பகுதி குறைந்தாலும், பழுதுபட்டாலும் முழுதுமே சிறப்பாக விளங்காது. எனவே, பிரிட்டிஷ் முறையைப் பின்பற்றி வேறு நாடுகளில் திட்டம் வகுக்கப்பட்டவை அசலின் நகல் என்று சொல்ல முடியாது. அப்படி இருக்கவும் தேவை இல்லை.

இந்தியாவின் திட்டம் பெரும்பான்மை பிரிட்டிஷ் அமைப்பை ஒட்டியும், கூட்டாட்சி அரசு[4] என்ற காரணத்தால் சிறிதளவு அமெரிக்க அமைப்பை ஒட்டியும் செய்யப்பட்டுள்ளது. அமைச்சரவை அமைப்பு பெரும்பாலும் மக்களின் அரசியல் உணர்வைப் பொறுத்தும், திருத்தமான கட்சிகள் ஏற்படுத்தப்பட்ட நிலையைப் பொறுத்தும் சீர்படும். சிறப்பாக, பொது மக்களின் கருத்தைப் பிரதிபலிக்கும் கட்சி[5] எதிர்க் கட்சி[6] என்ற இரண்டு சார்புகள் உருவாக வேண்டும். இப்படி இருந்தால்தான் நிராகரிக்கப்பட்ட அமைச்சரவையை ஆதிக்கத்திலிருந்து வெளி ஏற்ற முடியும். அந்த அமைச்சரையும், தேவை யிருந்தால் பிரதமரையும் ஆலோசித்து முடிவு செய்ய வேண்டும்.

குறிப்பிட்ட சில தீர்ப்பு இனங்களை முழுக் காபினெட் பரிசீலனைக்கு வைத்தே முடிவு செய்யவேண்டும். அமைச்சர்கள் தங்களுக்குத் தொடர்புள்ள துறை விவகாரங்களில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும் என்பது தேவை இல்லை. சில சமயங்களில் அத்தகைய அனுபவம் இடைஞ்சலாகக் கூட

[1] Monarchical Government.
[2] Cabinet Government.
[3] Presidential Government.
[4] Federal system of Government.
[5] Popular Government.
[6] Opposition.

ஏற்பட்டுவிடும். எடுத்துக்காட்டாகப் பாதுகாப்புத் துறைக்கு ஓர் இராணுவ அனுபவமுள்ள அமைச்சரைப் போடுவதில்லை. (ஆனால் சட்டத் துறைக்கு இது பொருந்தாது). புதிய துறையாக இருந்தாலும், அக்கறையுடன் துறை நிர்வாகிகளின் உதவி கொண்டு விஷயங்களைப் புரிந்து கொள்ள முயலவேண்டும்.

பிரிட்டனில் பொதுவாக அமைச்சராக வருபவர்கள் பாராளுமன்றத்தில் சில காலம் உறுப்பினராக இருந்து அனுபவம் பெற்றவர்களாகவே இருப்பார்கள். சிலர் பாராளுமன்றச் செயலாளர்களாக[1] முன்பே பணியாற்றி அனுபவம் பெற்றவர்களாகவும் இருப்பார்கள். சிலர் முன்னரே பழைய அமைச்சரவைகளில் அமைச்சர்ாகவும் இருந்திருப்பார்கள். அந்த அனுபவம் வேறு துறைகளில் இருந்தாலும் நல்ல பயன் தரும். துறைகளிலுள்ள கீழ் அதிகாரிகளை, அரசு எடுத்துக் கொண்ட செயல்களில் செலுத்தி வழிகாட்டிகளாகப் பயன் படுத்திக்கொள்ள அமைச்சர் முயலவேண்டும்.

சில விஷயங்கள் அமைச்சர் பார்வைக்கு வராவிட்டாலும், அமைச்சர் பெயரிலேயே முடிவுகள் எடுக்கப்படும். எனவே, துறையின் செயல்கள் எல்லாவற்றிற்கும் அதன் தொடர்புடைய அமைச்சர் முழுப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். அமைச்சர் தமது துறை விஷயங்களில் நிபுணராக இராமல் போனாலும், தொடர்புடைய அதிகாரிகளை நல்ல முறையில் வேலை வாங்கவும், விஷயங்களைப் புரிந்துகொள்ளவும், தெளிவான முடிவுகள் எடுக்கவும் திறமை பெற்றிருத்தல் வேண்டும்.

முன்னரே அமைச்சராக இருந்து பாராளுமன்றத்தின் அனுபவம் இருந்தால், எதிர்க் கட்சிக்காரர்களை நன்றாகச் சமாளிக்கலாம். அமைச்சரவையில் குற்றம் காட்டித் தாம் அதிகாரத்துக்கு வருவதற்கு எதிர்க் கட்சியில் சில தலைவர்கள் ஆயத்தமாக இருப்பார்கள். அவர்கட்குச் சாயல் அமைச்சரவை[2] என்பது பெயர். சில கட்சிகள் முதன் முறையாகப் பதவிக்கு வரும். அத்தகைய கட்சி அமைச்சர்கள் முதலில் சிறிது திணறலாம். ஆனால், நாளடைவில் திறமை வந்துவிடும்.

தமக்குத் தொடர்புடைய துறையிலுள்ள கீழ் அதிகாரிகளை அமைச்சர்கள் மேற்பார்வை பார்த்து, துறை நல்ல முறையில்

[1] Parliamentary Secretary. [2] Shadow Cabinet.

தொழில் புரிய வழிகாட்டியாக இருத்தல் வேண்டும். துறையின் வேலைகளைப் பற்றிய தகவல்களை அடிக்கடி பெற்றும், தக்க சமயங்களில் முடிவுகளை எடுத்தும் துறையின் முன்னேற்றத்தை வளரச் செய்ய வேண்டும். அத்தகைய முன்னேற்றத்தின் தொடர்பாக அமைச்சரின் கருத்துகளையும் விருப்பங்களையும் கீழ் அதிகாரிகள் உணர்ந்து அதற்கு ஆவன செய்வதற்கு வாய்ப்புகளைத் தர வேண்டும். அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே நிலவ வேண்டிய உறவைப் பற்றிக் கூற வேண்டியவை பல உள.

அமைச்சர்களின் கொள்கைகளையும் திட்டங்களையும் காபினெட் சபை தீர்வு செய்தபடியோ அல்லது தம் சொந்த அதிகாரத்தில் முடிவு செய்தபடியோ அதிகாரிகள் விரைவாகவும், திறமையுடனும், மக்களுக்கு நலம் தரும் வகையிலும் செயல்படுத்த வேண்டும். முடிவுகள் எடுப்பதற்கு முன் அதிகாரிகள் தங்கள் சொந்தக் கருத்தையோ மறுப்புரைகளையோ தெரிவிக்கலாம். மக்களோடு தொடர்பு கொண்ட அமைச்சர்கள் அவைகளை நன்கு சிந்தித்துத் தங்கள் சொந்த முடிவுகளை எடுப்பதற்கு உரிமை யுடையவர்களாவர். முடிவுகள் எடுத்தபின் அதைப் பின்பற்றி நடைமுறையில் கொணர்வது அதிகாரிகளின் கடமையாகும்.

திட்டங்களில் நடைமுறையில் சீர்திருத்தங்களும் மாறுதல்களும் செய்வது தேவையாய் இருப்பின், அவைகளை அமைச்சர்கட்கு எடுத்துக் கூறுதல் அதிகாரிகளின் உரிமையும் கடமையும் ஆகும். அதிகாரிகள் முட்டுக்கட்டை போடுவதோ, அக்கறை கொள்ளாமல் இருப்பதோ தகாது. பிரதமர் வெவ்வேறு துறை அதிகாரிகளை அறிந்திருந்தாலும், அமைச்சர்களின் கருத்தைத் தான் நாடவேண்டும். அமைச்சர்களை நிராகரித்து அதிகாரிகளிடம் யோசனை கேட்பது வழக்கம் இல்லை. தொடர்புடைய அமைச்சர் அறியாமையினலோ, அறிந்தோ ஏற்கக் கூடாத ஒரு முடிவை எடுத்தால், தப்புத் தகவல்களினுல் வந்த பிழைகளையோ சட்டக் கவனம் இல்லாததினுல் வந்த குறைகளையோ, உடனடியாக எடுத்துக்காட்டுவது அதிகாரிகளின் கடமை ஆகும்.

அதிகாரி ஒருவர் அறியாமையினுலோ அறிந்தோ, திசை மாற்றமாக ஒரு யோசனையைக் கூறினுல் அமைச்சர் விளக்கம் கேட்டோ கேட்காமலோ அதனை நிராகரிக்கலாம். அரசியல்

2

வாதங்களின் அடிப்படையில் நிர்வாகிகள் யோசனை கூறுதல் தகாது. அத்தகைய குற்றம் இல்லாதபோது அதிகாரிகள் அச்சமின்றித் தங்கள் கருத்துகளை விதிப்படி கூறவேண்டியது இன்றியமையாததாகும்.

அமைச்சர்கள் தங்கள் கீழதிகாரிகளைத் தவிர்த்து வெளியாரை ஆலோசனை கேட்கக் கூடாது என்ற தடை இல்லை. ஆனால், தாங்கள் எடுத்துக்கொண்ட இரகசியப் பிரமாணத்துக்கு[1] முரண் இல்லாமல் வெளி நிபுணர்களை யோசனை கேட்கலாம். எடுத்துக்காட்டாகத் தொழிற் கட்சி[2] தனது சித்தாந்தத்தை அதிகாரிகள் நன்கு உணர முடியாதவர்கள் என்று எண்ணியதுண்டு. தொழிற்கட்சிக் கொள்கைகளின் சித்தாந்தத்தை விளக்கப் பொருளாதார நிபுணர்கள், தொழிலாளர் தலைவர்கள் முதலிய பலர் மிகவும் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தனர். இருப்பினும் நிரந்தர அதிகாரிகளின் உதவியின்றிக் கட்சித் திட்டங்களைப் பிரேரேபிக்க முடியாது. ஆனால், அதிகாரிகள் தங்களால்தான் எல்லாம் செய்ய முடியும் என்ற மனப்பான்மையைக் கொள்ளுதல் தகாது.

அமெரிக்காவில் உள்ளது போல் வெற்றி பெற்று அதிகாரம் ஏற்ற கட்சி அரசு அலுவல்களைப் பங்குபோட்டுத் தமது நண்பர்களை அவற்றில் நியமித்தல்[3] என்ற வழக்கம் பிரிட்டனில் கிடையாது. எனவே, அதிகாரிகள் அரசியல் சார்பற்றவர்கள். அவர்கள், எந்தக் கட்சி அதிகாரத்தில் இருக்கிறதோ அந்தக் கட்சியின் கொள்கைகளைச் சட்டப்படி நிறைவேற்றுவதற்கு உடன்பட்டும் உதவியாகவும் இருத்தல்வேண்டும். துறையில் நடக்கும் எல்லாச் செயல்களுக்கும் அமைச்சரே பொறுப்பு. ஆகையால் அமைச்சரும் அதிகாரிகளும் சேர்ந்து உழைக்க வேண்டும்.

காபினெட் அமைச்சர் தம் துறையைப் பொறுத்த மட்டில் எல்லா அதிகாரங்களையும் பெற்றிருப்பினும், காபினெட்டின்ஒவ்வோர் அமைச்சருடைய நிர்வாகச் செயல்களிலும் கொள்கைகளிலும் பொறுப்பில்லாமல் இருத்தல் முடியாது. ஓர் அமைச்சரின் துறை மற்றோர் அமைச்சரின் துறையுடன் தொடர்பு கொண்டிருக்கும். எடுத்துக்காட்டாக, வேளாண்மையை எடுத்துக்கொண்டால், நீர்ப்பாசனத்தோடு அதற்கு நெருங்கிய தொடர்பு உண்டு. எல்லாத் துறைகளின் நடவடிக்கைகள் மக்களின் நலனுக்கும், அரசின் அமைதியான நடை

[1] Oath of Secrecy. [2] Labour Party. [3] 'Spoils System'.

முறைக்கும் காரணமாக இருப்பதால், தொடர்புடைய அமைச்சர்கள், தொடர்புடைய துறையின் கீழ் அதிகாரிகள்போல் கலந்து செயல்படவேண்டும்.

இது நேரில் பேசுதல், தொடர்புள்ள கட்டுகளை (பைல்) அனுப்பிக் கருத்தைப் பெறுதல், அன்றியும் பொதுவாக ஆலோசனைக் கூட்டங்கள் கூட்டுதல் அல்லது காபினெட்டிலேயே விவாதித்தல் போன்ற முறைகளில் நிறைவேற்ற வேண்டும். ஒரு துறைக்கும் மற்றொரு துறைக்கும் சரியான தொடர்பு இல்லாது இருப்பின் பிரதமரே இந்தக் குறைபாட்டைத் தவிர்க்கத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். அரசியல் நிலையில் காபினெட் சபைக்குக் கூட்டுப்பொறுப்பு[1] இருக்கவேண்டியதுபோல் நிர்வாக மட்டத்திலும் அத்தகைய பொறுப்பு இருத்தல் வேண்டும்.

அமைச்சரவை பாராளுமன்றத்துக்குப் பொறுப்பு ஏற்பது போல் மன்னருக்கும் பொறுப்பு உடையதாக இருக்கவேண்டும். சிற்சில சமயங்களில் குறிப்பிட்ட விவகாரங்களுக்குத் தனிக் காபினெட் குழுக்கள் தற்காலிகமாகவோ நீடித்தோ நியமிக்கப்படுவதும் உண்டு. சிறப்பாகப் போர்க் காலங்களில் அத்தகைய குழுக்கள் நியமிக்கப்படுவதுடன் ஓர் இணைப்பு[2] அமைச்சரையும் நியமிப்பதுண்டு. இந்த அமைச்சர், தொடர்புடைய அமைச்சர்களோடு கலந்து அலுவல்களைச் சரிபார்த்துப் பிரதமருக்கு உதவியாக இருப்பார்.

தனிப்பட்ட அமைச்சர்களிடையே வேற்றுமைகள் இருப்பினும் அமைதிக் காலமானாலும் சரி போர்க் காலமானாலும் சரி பொதுச் செயல்களுக்கு ஊனம் ஏற்படும். போர்க் காலங்களில் நிலம், கடல், விமானப் படைகளின் செயல்களைத் தொடர்பு படுத்துதல் மிகவும் இன்றியமையாத செயல் ஆகும். போர்க்காபினெட்டுக்கும் கடற்படைத் துறைத் தலைமை அகத்துக்கும்[3] கருத்து வேற்றுமைகள் வருவதுண்டு. அந்த நேரங்களில் இணைப்பு அமைச்சர் சிக்கல்களை விரைவாகத் தீர்த்துவைக்க முடியும்.

கி.பி. 1936-39-ல் பால்டுவினும் (Baldwin), நெவில் சாம்பர்லெயினும் (Neville Chamberlain) இணைப்பு அமைச்சரை ஏற்படுத்தினார்கள். சர்ச்சில் (Churchill) பிரதமரானபோது தாமே

[1] Collective Responsibility. [2] Co-ordination. [3] Admiralty

பாதுகாப்பு அமைச்சராக இருந்தபடியால் அந்தப் பதவி கைவிடப்பட்டது. அட்லீ (Attlee) தனிப் பாதுகாப்பு அமைச்சரை நியமித்தார். இம்மாதிரி ஒழுங்குபடுத்துதல் இராணுவ உற்பத்தித் துறைக்கும் பாதுகாப்புத் துறைக்குங்கூடத் தேவை. எல்லாத் துறைகளும் நிதித்துறை[1]யோடு சேர்ந்து தொழில் புரியவேண்டும்.

பணம் ஒதுக்குவதில் பல வில்லங்கங்கள் ஏற்படும். ஒவ்வொரு துறையும், தனது திட்டங்களுக்கே பணம் தேவை என்று கருதுவது இயல்பு. எல்லாருடைய தேவைகளையும் சீர்தூக்கிப் பணம் பங்கீடு செய்வது கடினமான கடமை. நிதித் துறை பணம் வழங்குவதைத் தவிர, தனிப்பட்ட துறையின் வேலைகளை மேற்பார்வை இடுவதில்லை. எனவே, தொடர்புடைய அமைச்சரின் பொறுப்பு இதனால் விளங்கும்.

இக் கால அரசாங்கத்தில் பல்வேறு பிரச்சினைகளும் சிக்கல்களும் தலைப்படுகின்றன. எனவே, தனிப்பட்ட அமைச்சர்கள் காபினெட்டில் நெருக்கடி வாராமல் பார்த்துக்கொள்வதற்குத் தமது நிர்வாகத் துறையைச் சரியாக இயக்குவதுமன்றி, தொடர்புடைய துறைகளுடனும் அவைகளுக்குப் பொறுப்பான அமைச்சர்களுடனும் நிர்வாக மட்டத்திலும், அமைச்சர் மட்டத்திலும் கலந்து செயல் புரியவேண்டும். இந்த முறை நாளடைவில் பிரிட்டனில் செம்மையாக உருவாகிவிட்டது.

[1] Treasury

4. பிரதமரைத் தேர்ந்தெடுத்தல்

பிரதமரின்றி அமைச்சரவை இல்லையாதலால், பிரதமர் தேர்ந்தெடுக்கப்படும் முறை மிகவும் சிறப்புக்குரியது. அமைச்சரவையினர் பாராளுமன்றத்தில் பெரும்பான்மைக் கட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல்வாதிகள். பொதுமக்கள் பாராளுமன்றத்தின் மூலம் அச் சபையைக் கட்டுப் படுத்தல் வேண்டுமே தவிர வேறு வழி இல்லை. ஏனெனின், அமைச்சரவை உறுப்பினர்கள் வாக்காளர்களால் நேராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்லர். ஆனால், அமைச்சரவை பாராளுமன்றத்தில் தனக்குள்ள பெரும்பான்மை வலிமையால் அதைக் கட்டுப்படுத்தலாம்.

அமைச்சரவை உறுப்பினர்கள் மன்னரால் பிரதமரின் விருப் பப்படி நியமிக்கப்பட்டவர்கள் ஆவார்கள். எனவே, பிரதமர் எவரென உறுதிசெய்யப்பட்ட பிறகுதான் அமைச்சரவை அமையும். பிரதம அமைச்சரின் தேர்வு அரசியல் நிலைமை யைக்கொண்டு தீர்மானிக்கப்படும். பிரதமராகத் தேர்ந்தெடுக் கப்பட்டவர் தமக்கு நம்பிக்கையுள்ள தோழர்களை அமைச்ச ரவையில் சேர்த்துக்கொள்ள உரிமை உடையவராக இருத்தல் வேண்டும். மற்றும் தாமும் தமது அமைச்சரவை யினரும் காமன்ஸ் சபையின் ஒத்துழைப்பைப் பெறும் திறமை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

பெரும்பான்மையினராக வெற்றிபெற்ற கட்சி முன்னரே தனக்கு ஒரு தலைவரைப் பெற்றிருந்தால் பிரதமர் தேர்வில் தொல்லை இராது. சில சமயங்களில் வேறு ஒருவரைத் தேர்ந் தெடுக்கவேண்டியும் நேரலாம். அத்தகைய சமயங்களில் பிரதமர் தேர்வு ஒரு சங்கடமான வேலையாகத்தான் இருக்கும்.

பிரிட்டிஷ் மன்னர் கட்சிச்சார்பு இல்லாதவராகையால் அமெரிக்கப் பிரசிடென்டைப்போல் அல்லாமல் அரசியல் தொல்லைகளால் இன்னல் படமாட்டார். இருப்பினும் மன்னருக்குக் கட்சி வெறுப்பு விருப்புகள் இருக்கலாம். எனவே, மன்னர் அரசியல் நிலைமையைப் பற்றி நன்கு அறிந்திருத்தல் இன்றியமையாதது. மற்றும் பிரிட்டிஷ் மன்னர்களின் ஆட்சிக் காலம் (ஆயுள் காலம்) நீடித்தால் மாறுபட்ட அரசியல் நிலைமைகள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். விக்டோரியாப் பேரரசியார் பல ஆண்டுகள் வரை ஆட்சிபுரிந்தார். அண்மைக் காலத்தை எடுத்துக்கொண்டாலும், ஆறும் ஜார்ஜ், இரண்டாம் எலிசபெத் ஆகியோர் ஆட்சியில் பல கட்சிகள் பதவி ஏற்று மாறி உள்ளன.

பிரதமர், தேர்ந்தெடுக்கப்பட்ட காமன்ஸ் சபை உறுப்பினராகவேனும் அல்லது பிரபுக்கள் சபையில் உட்காரத் தகுந்த பிரபுவாகவேனும் இருத்தல் வேண்டும். காமன்ஸ் சபையில் இருத்தலே சிறந்தது. பிரபுக்கள் சபையில் உள்ளவர்கள் மிதவாதிகளாகவே இருப்பார்கள். காமன்ஸ் சபையில் வருபவர்கள் முற்போக்காளர்களாக இருப்பார்கள்.

சாலிஸ்பரி பிரபு[1]வுக்குப்பின் (கி.பி. 1902) ஒரு பிரபுவாவது பிரதமராக இருந்ததில்லை. கி.பி. 1923ஆம் ஆண்டில் கர்சான் பிரபு[2] பிரதமர் பதவிக்கு வர விருப்பம் கொண்டார். ஆனால், ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் பால்டுவின் (Baldwin) என்பவரையே பிரதமர் பதவி ஏற்க அழைப்பு விடுத்தார்.

காமன்ஸ் சபையில் எதிர்க்கட்சி தொழிற் கட்சியாக இருந்தது. எனவே, அந்தக் கட்சி உறுப்பினர் இல்லாத பிரபுக்கள் சபையில் பிரதமர் இருப்பது பொருத்தமற்றது. காமன்ஸ் சபைக்குத்தான் அரசு பொறுப்புடையது. காமன்ஸ் சபையின் ஓட்டுத் தீர்ப்பால் அரசு மாறவேண்டி இருப்பினும் இருக்கும். அல்லது பொதுத்தேர்தல் நடத்த நேரினும் நேரிடும்.

பிரதமர் அரசாங்கத்தின் தலைவர் என்பது மட்டும் அல்லாமல் தமது கட்சித் தலைவருமாவார். எனவே, காமன்ஸ் சபையில் தமது கட்சியின் நிலைமை அவரைப் பாதிக்கும். தம் கட்சிக்குப் பிரபுக்கள் சபையில் பெரும்பான்மை உறுப்

[1] Lord Salisbury. [2] Lord Curzon.

பினர்கள் இருந்தாலும், முக்கிய அலுவல்கள் காமன்ஸ் சபையில் தான் தீர்வு செய்யப்படும். எனவே, பிரதமர் காமன்ஸ் சபையின் நாடியை எப்போதும் கவனித்து வரவேண்டும். அவர் காமன்ஸ் சபையில் இடம் பெற்று அவ்வப்போது தமது ஆட்சியைத் தாக்குதல்களினின்று பாதுகாத்து வரவேண்டும்.

பிரதமர் காமன்ஸ் சபையில் இருக்கவேண்டுமென எதிர்க் கட்சி வற்புறுத்தும். ஏனெனில், தாங்கள் எழுப்பும் கேள்வி களுக்கும் பிரச்சினைகளுக்கும் அவரே பதில் சொல்லக் கூடும். பிரபுக்கள் தங்கள் பரம்பரை உரிமைகள் பறிக்கப் பட்டால் காமன்ஸ் சபையில் உட்காரலாம். அல்லது சர் அலெக் டக்ளஸ் ஹ்யூம்[1] போன்று பிரபு பட்டத்தை ஏற்காமல் விடலாம்.

மன்னர் பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்கு முதல் இன்றி யமையாமை அவருடைய கட்சி காமன்ஸ் சபையில் பெரும் பான்மை எண்ணிக்கையில் உறுப்பினரைப் பெற்று இருத்தல் வேண்டும். அத்தகைய கட்சியின் பிரபல தலைவரே பிரதமர் பதவிக்கு உரியவர். இப்படி இருந்தால் பொதுத் தேர்தலுக்குப் பின் பிரதமரைத் தேர்ந்தெடுக்கும் முறையில் தொல்லை இல்லை. ஆனால், ஒருவர் பிரதமர் பதவியைவிட்டு விலகியோ, இறந்தோ போய்விட்டால் அப் பதவிக்குத் தக்கவர் எவர் என்று தேர்ந்தெடுப்பது எளிதன்று.

சில சமயங்களில் ஆட்சியில் இருக்கும் அரசு காமன்ஸ் சபையில் தோல்வியுற்றுப் பதவியிலிருந்து விலகுவதும் உண்டு. அவ்வப்போது எந்த எதிர்க்கட்சி ஆட்சியை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதும், அதில் எவர் பிரதமராக நியமிக்கப்பட வேண்டுமென்பதும் சில சமயங்களில் முடிவு செய்ய முடியாத படி சங்கடமாக இருக்கும். எதிர்க் கட்சி பெரும்பான்மையாக இருந்தால் இந்தத் தொல்லை இராது. சர் இராபர்ட் பீல்,[2] கிளாட்ஸ்டன் பிரபு[3]வுக்குப் பின் டிஸ்ரேலி, மாக்டோனல்டுக் குப்[4] பின்னுல் பால்டுவின், சர்ச்சிலுக்குப்பின்னுல் அட்லீ ஆகிய வர்கள் இவ்வாறே எளிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இவ்வாறு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தலைவர் இருப்பின் தொல்லை இல்லை.

[1] Sir Alec Douglas Hume.
[2] Sir Robert Peel.
[3] Lord Gladstone.
[4] Macdonald.

ஒருவர் பிரதமர் பதவியிலிருந்து விலகுகிறுர் என்ருல் பின் இரண்டாவதாக அப் பதவிக்குரிய ஒருவர் சில சமயங்களில் இருப்பதில்லை. அந்தச் சமயங்களில் மன்னர் தமது சொந்தக் கருத்தைப் பயன்படுத்தியே தீரவேண்டியிருக்கும். கிளாட்ஸ் டன் கி.பி. 1894-ல் பதவியிலிருந்து விலகியபோது, விக்டோரியாப் பேரரசியார் ஸ்பென்சர் பிரபு,[1] ரோஸ்பரி பிரபு,[2] சர் வில்லியம் ஹார்க்கோர்ட்[3] என்னும் இவர்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுக்கவேண்டியிருந்தது. அரசியார் ரோஸ்பரி பிரபுவைப் பிரதமராக நியமித்தார். இது வரவேற்கப்பட்டது.

கி.பி. 1935-ல் மாக்டோனுல்டு பதவியிலிருந்து விலகிய போது ஒரு பிரச்சினை உண்டாயிற்று. மாக்டோனுல்டு தொழிற் கட்சியைச் சேர்ந்தவர். ஆனுல், அவர் அமைச்சரவை தேசிய அரசு[4] என்ற பெயரில் பல கட்சியினர்களைக் கொண்டதாக இருந்தது. அவருக்குப்பின் வேறு கட்சியினரான பால்டுவினே ஐந்தாம் ஜார்ஜ் மன்னரால் பிரதமராக நியமிக்கப்பட்டார்.

பால்டுவினுக்குப்பின் அடுத்துச் செல்வாக்கு உடையவராக நெவில் சாம்பர்லெயின் இருந்ததால் அவரே எளிதில் பிரதமரானுர். ஆனுல், அவருக்குப் பின் மிதவாதக் கட்சி[5] யிலிருந்து தேர்ந்தெடுக்கக்கூடாமையால், தொழிற் கட்சியிலிருந்து, திரு அட்லீயைத் தேர்ந்தெடுக்க நேர்ந்தது.

துணைப் பிரதமர் என்ற ஒருவர் பிரதமரால் நியமிக்கப்பட்டிருந்தால், பிரதமர் விலகலுக்குப் பின் பிரதமரை நியமிப்பதில் தொல்லை இராது. ஆனுல், சர்ச்சில் ஒருவரே துணைப் பிரதமர் பதவியை ஏற்படுத்தினுர். அதன்படி துணைப் பிரதமராய் இருந்த சர் அந்தோணி ஈடன்[6] சர்ச்சிலுக்குப்பின் பிரதமரானுர். அவர் நோய்வாய்ப்பட்டபோது திரு. R. A. பட்லர்[7] என்பவர் பிரதமர் கடமைகளைக் கவனித்து வந்தார். ஆனுல், பின்னுல் அவர் பிரதமராக வரவில்லை. சர் அந்தோணி ஈடனுக்குப்பின் பொதுவாகத் திரு பட்லரே பிரதமராக வரவேண்டும், ஆனுல், அரசியார் திரு. ஹரால்டு மாக்மில்லனையே[8] பிரதமராக நியமித்தார். இந்தத் தேர்வு சர்ச்சிலின் யோசனைப்படி நடந்தது.

[1] Lord Spencer.
[2] Lord Rosebery.
[3] Sir William Harcourt.
[4] National Government.
[5] Conservative.
[6] Sir Anthony Eden.
[7] R.A. Butler.
[8] Harold Macmillan.

சில சமயங்களில் எந்த ஒரு கட்சியும் பெரும்பான்மை உடையதாகவோ, செல்வாக்குடையதாகவோ இல்லாமல் போனாலும், திடமான தலைவர் இல்லாமல் போனாலும் கூட்டு ஆட்சிச் சபை[1] ஏற்படுத்த நேரிடுகிறது. கி.பி. 1852-ல் முதன்முதலாக இத்தகைய கூட்டு ஆட்சிச் சபை ஏற்படுத்தப் பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் தம் கட்சிக்குப் புறம்பாக உள்ள கட்சிகளின் ஒத்துழைப்பையும் பெறுதல் வேண்டும்.

கூட்டு அரசு ஏற்படுத்த முடியாவிட்டால் சிறுபான்மைத் தனி அரசு[2] ஏற்படுத்தலாம். அதுவும் பிறர் ஆதரவு பெற வேண்டும். இல்லையேல் இத்தகைய அரசுகள் நீடித்து நிற்க மாட்டா. சிறுபான்மைத் தனி ஆட்சி இங்கிலாந்தில் பல சமயங் களில் இருந்துள்ளது. இது அந் நாட்டு அரசியல் முது மைக்கு எடுத்துக்காட்டாக அமையும்.

சில சமயங்களில் அரசு தோல்வி அடையாவிட்டாலும், அரசியல் சூழ்நிலைகளால் வலிமை இல்லாமல் இருக்கும். மறு தேர்தலுக்கு முன்போ அல்லது இடைத் தேர்தலினாலோ வேறு அரசு ஏற்படுத்தப்படுவதும் உண்டு. கி.பி. 1931-ல் தொழிற் கட்சி இவ்வாறு தன் கட்சிக்குரிய வலிமை இல்லாமை யால் லிபரல் கட்சியின்[3] ஆதரவுடன் சிறிது காலம் ஆட்சி புரிந்தது; ஆனால், நிடிக்க முடியவில்லை. பின்பு மாக்டோனல்டு தலைமையில் கூட்டு ஆட்சி அமைக்கப்பட்டது.

பொதுத் தேர்தலுக்குப்பின் ஒரு கட்சியும் அமைச்சரவை ஏற்படுத்த முடியாமற் போனால் இரு கட்சிகள் சேர்ந்து கூட்டு அரசு ஏற்படுத்தலாம். அல்லது சிறுபான்மையான கட்சி எதிர்க்கட்சிகளின் ஆதரவை எதிர்பார்த்துத் தனியாக அரசு ஏற்படுத்தலாம். ஏனெனில், மீண்டும் தேர்தல் நடத்துவது ஆகாத செயல்.

இந்தியாவில் ஜனாதிபதி ஆட்சி[4] என ஒருமுறை இருப் பதால் இந்த ஏற்பாடுகள் தேவையில்லை. ஆனால், அது கட்சி கள் சேர்ந்து உழைப்பதற்கு வழி செய்வதன்று. இதனால் கட்சி களின் கூட்டுறவுக்குப் பதிலாகக் கட்சிவிட்டுக் கட்சி மாறும் நிலைமைக்குத் தூண்டுதல்கள் ஏற்பட்டு விடுகின்றன.

[1] Coalition.
[2] Minority Government.
[3] Liberal Party.
[4] President's Rule.

சென்ற நூற்ருண்டில் ஏறந்தாழ 12 முறை சிறுபான்மைக் கட்சி அரசுகள் நிலவின ; 4 முறை கூட்டு அரசுகள் நிலவின; ஒரு முறை தேசிய அரசு நிலவிற்று. இரு கட்சி நிலைமையும் சரியாக இல்லாவிட்டால், மன்னர் எவரை வேண்டுமாஞலும் முதலமைச்சராக அழைக்கலாம் என்பதற்கு இடம் இல்லை. எடுத்துக்காட்டாக, எதிர்க்கட்சித் தலைவரை முதலில் அழைத்துக் கேட்பது முறையாகும்.

இங்கிலாந்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி, அமைச்சர்களைப் போல் சம்பளம் பெறக்கூடிய பதவியாகும். இது ஒருதலைச்சார்பின்மையையும், கட்சிகளுக்குள் நல்ல போட்டி மனப்பான்மையையும் வளர்க்கும். கி.பி. 1839-ல் சர் இராபர்ட் பீல் இத்தகைய அமைச்சரவை அமைக்க அழைக்கப்பட்டார். பிரிட்டிஷ் வரலாற்றில் பன்முறை இவ்விதம் எதிர்க்கட்சித் தலைவர்கள் அமைச்சரவை அமைக்க அழைக்கப்பட்டுள்ளார்கள்.

ஒரு சமயம் சாலிஸ்பரி பிரபு, 'மாட்சிமை தங்கிய அரசியார் ஒருபோதும் அமைச்சரவை இல்லாமல் இருக்கக் கூடாது. ஏனெனில், அரசியார் அரசாங்கத்தில் நடக்கும் குற்றங்களுக்குப் பொறுப்புடையவர் அல்லர். குற்றம் சாட்ட ஒரு பொறுப்புடைய அமைச்சரவை எப்போதும் இருந்தே தீர வேண்டும்' எனக் கூறிஞர். இது உண்மையே. (இந்தியாவில் கவர்னர் ஆட்சியில் ஏதாவது தவறுகள் நடந்தால் அல்லது குறைபாடுகள் இருந்தால் ஒருவரையும் குற்றங்கூறுவதற்கில்லை).

அண்மைக் காலத்தில் கி.பி. 1923, 1924, 1929, 1945, 1951 ஆண்டுகளில் எதிர்க்கட்சித் தலைவர்கள் அமைச்சரவை அமைக்க அழைக்கப்பட்டுள்ளார்கள். பொதுவாக, எதிர்க்கட்சித் தலைவரை அழைப்பதற்குமுன் வேறு ஒரு தலைவரையும் மன்னர் அழைக்கவும் ஆலோசனை கேட்கவும் கூடாது என்பது முறை. அப்படிச் செய்வது எதிர்க்கட்சித் தலைவரையோ, எதிர்க்கட்சியையோ மறுக்கச் செய்யும் முயற்சி போல் காணப்படும். ஆனல், ஒரு பிரதமர் இறந்தாலோ அல்லது தனிப்பட்ட முறையில் பதவியை விட்டு விலகிஞலோ மன்னர் எவரை வேண்டுமாஞலும் ஆலோசனை கேட்கலாம்.

ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் லாயிடு ஜார்ஜ்[1] பிரதமராவதற்கு முன், எல்லாக் கட்சித் தலைவர்களையும் கூட்டி ஆலோசனை கேட்டார். லோஞர்லாவுக்கும் ஆஸ்குவித்[2]துக்கும்

[1] Lloyd George. [2] Asquith.

இடையே இருந்த கருத்து வேறுபாடுகளால், இறுதியில் லாயிடு ஜார்ஜ் அழைக்கப்பட்டார். பால்டுவின் பதவி ஏற்பதற்கு முன்பும் பலர் கேளாமலே ஆலோசனை கூறினார்கள். மன்னரின் சொந்தக் கருத்துக்கிசையப் பிரபுக்கள் சபையில் இடம் பெற்ற கர்சான் பிரபு கைவிடப்பட்டார்.

கி.பி. 1931-ல் மாக்டோனல்டு பதவியை விட்டு விலகிய போது அவர் கூறியபடியே பால்டுவினையும், சர் ஹெர்பர்ட் சாமுவேலையும்[1] மன்னர் அழைத்து அவர்களுடைய கட்சிக் கருத்துகளைக் கேட்டார். இவ்வாறு பிரிட்டிஷ் வரலாற்றில் அரசியல் நெறிகள் உருவாகி விட்டன. பின் மேற்கூறிய இருவரும் நெருக்கடி தீரும்வரை மாக்டோனல்டு தலைமையில் அமைச்சர்களாக இருக்க இசைந்தார்கள்.

ஒரே கட்சியில் இருவர் பிரதமர் பதவிக்குத் தகுதி உடையவர்களாக இருந்தால், மன்னர் தம் யோசனையைக் கொண்டோ பிறர் யோசனைகளைக் கேட்டோ முடிவு எடுப்பது வழக்கம். கி.பி. 1957-ல் எலிசபெத் அரசியார் பட்லரையாவது, மாக்மில்லனையாவது தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. இந்த நிலையில் அரசியார் சர்ச்சிலுடன் ஆலோசித்ததாகக் கூறப்படுகிறது. இறுதியில் மாக்மில்லன் பிரதமராக அழைக்கப்பட்டார். பட்லர் பாராளுமன்றத்தில் கட்சித் தலைவர் ஆனார்.

பிரதமர் அரசுக்கு அச்சாணியானதால் அவரைத் தேர்ந்தெடுப்பதில் எவ்வளவு யோசனையுடன் நடக்க வேண்டுமென்பது மேற்கூறியவற்றால் விளங்கும்.

'மன்னர் ஆட்சி புரிய எவ்வாறாயினும் அமைச்சரவை ஏற்படுத்தவேண்டும் என்பது பிரிட்டிஷ் அரசியலில் ஓர் அடிப்படைத் தத்துவமாக ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது' என்று வெல்லிங்க்டன் பிரபு[2] கூறியுள்ளார். அமைச்சரவை ஏற்படுத்துவதற்குப் பெரும்பான்மைக் கட்சியும் சரி, சிறுபான்மைக் கட்சியும் சரி நாட்டின் நலனுக்காகத் தக்க ஆலோசனை கூறி அரசு அசைவின்றி நடைபெற உதவி புரியவேண்டும்.

இந்தியாவில் கூடியவரை இதே தத்துவம் மேற்கொள்ளப் பட்டாலும் சிற்சில சமயங்களில் முட்டுக்கட்டை போடுவதும், கட்சி மாறுவதும், மேலிடத்துத் தலையீடுகளும் போன்ற இடர்ப்பாடுகளாலும், சிக்கல்களாலும் அரசியல் மரபுகள் இன்னும் சரியாக விளக்கம் அடையவில்லை. வருங்காலத்தில் அவை நிறைவேறும் என்பதில் ஐயமில்லை.

[1] Sir Herbert Samuel. [2] Duke of Wellington.

5. பிரதமரின் நிர்வாகப் பொறுப்பு

அமைச்சரவை ஏற்படுத்துவதுடன் பிரதமரின் கடமைகள் முடிந்து விடுவதில்லை. உண்மையிலேயே அது தொடக்கக் கட்டம்தான். அமைச்சரவையில் எத்தனை அமைச்சர்கள் இருக்கவேண்டுமென்று முடிவு செய்வது முதல் வேலை. முதலில் சிலரும் பின் கூடுதலாகச் சிலரும் அமைச்சர்களாக நியமிக்கப்படலாம். ஆனால், முக்கியத் துறைகளுக்கு முதல் கட்டத்திலேயே அமைச்சர்கள் நியமனம் செய்யப்பட்டு ஆகவேண்டும். இல்லையேல் பொதுமக்கள் அமைச்சரவையின் தகுதியையும், திறனையும் சரியாக உணரமுடியாது. அமைச்சரவை உறுப்பினர்களை நியமிப்பதுடன் சில முக்கிய அதிகாரிகளையும் நியமிக்கவேண்டும்.

பிரிட்டனில் இத்தகைய நியமனங்கள் பல ஆகும். எடுத்துக்காட்டாகப் பிரிவி கவுன்சில் பிரபு, லங்காஸ்டர் டச்சி அதிகாரி, அட்மிரால்டி முதல் பிரபு முதலியன பிரிட்டனில் நியமிக்கப்படும் முக்கிய அதிகாரப் பதவிகளாகும். அரசியல் துறைச் செயலரும் (Secretary of State), பாராளுமன்றச் செயலர்களும் (Parliamentary Secretaries) நியமிக்கப்பட வேண்டும். இவர்கள் அமைச்சர் அவைக்குள் வராவிட்டாலும் அமைச்சர்களுக்குத் துணை புரியும் அரசியல் உதவியாளர்கள் ஆவார்கள். மேற்கூறிய எல்லாரையும் சேர்த்தால் ஏறத்தாழத் தொண்ணூறு பேர் ஆவர்.

காமன்ஸ் சபை அல்லது பிரபுக்கள் சபை உறுப்பினர்களே அமைச்சரவையில் சேர்க்கப்படலாம். சிற்சில சமயங்களில் அப்படி இல்லாதவர்களையும் சேர்ப்பதுண்டு. மற்றைய அமைச்சர்களை நியமனம் செய்வது பிரதமரின் உரிமையாகும். அவர் செய்த நியமனங்களை அப்படியே மன்னர் ஏற்றுக்

கொள்வார். இதனல் மன்னர் இதைப் பற்றி ஒன்றுமே கேட்கக் கூடாது என்பது பொருள் அன்று.

குறிப்பிட்ட ஒருவரை விட்டுவிடவோ சேர்க்கவோ மன்னர் தம் கருத்தைத் தெரிவிக்கலாம். ஆனல், முடிவு செய்வது பிரதமரே ஆவார். அமைச்சரவையை நடத்துவது பிரதமரின் பொறுப்பு. எனவே, மன்னர் பிரதமர் கருத்துக்கு இசையத் தான் வேண்டும். இல்லையேல் வேறு பிரதமரைத் தேட வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். பெரும்பான்மைக் கட்சியில் இவரே வேண்டும் அல்லது இவர் வேண்டா எனக் கூறுவது கட்சியின் உட்செயல்களில் தலையிடுவதாகக் காணப்படும். இது வெற்றி பெற்ற கட்சியையே மறுப்பது போலும் ஆகும்.

இடைக்காலத்திலும் சேர்க்கவேண்டிய அமைச்சரையும், விடவேண்டிய அமைச்சரையும் நியமிப்பது பிரதமரின் உரிமை யாகும். மன்னர் அதனை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் மரபு. சிற்சில சமயங்களில் மன்னர் தம் சொந்தக் கருத்தையோ, பிறர் கூறும் கருத்தையோ தெரிவிப்பது உண்டு. இவை மன்னரின் பக்குவத்தைப் பொறுத்தது. ஆனல், எந்த மாற்றமும் மன்னர் இணக்கம் இன்றிச் செய்ய முடியாது. அதாவது அமைச்சர் பட்டியலைப் பற்றி மன்னருடன் கலந்து பேசிவிட்டு மாறுதல்கள் செய்யப் படும். விக்டோரியாப் பேரரசியார் தம் கருத்துகளை அந்தக் கட்டத்தில் தாராளமாகக் கூறுவார் என்று அறியப் படுகிறது.

மன்னருக்கும் பிரதமருக்கும் இதில் இருக்கும் தொடர்பு போலத்தான், பிரதமருக்கும் அமைச்சரவையில் உள்ள வேறு அமைச்சர்களுக்கும் தொடர்பு உண்டு. பிரதமர் அவர்களைக் கேட்டுச் செய்யவேண்டும் என்பது தேவையில்லை. அவர்களையோ அல்லது கட்சியில் வேறு பிரமுகர்களையோ ஆண்டுப் பார்க்கலாம். ஆனல், பிரதமர் பிறர் ஆலோசனையைக் கேட்டுத்தான் செய்யவேண்டும் என்பது இல்லை. இவ்வகையில் கிளாட்ஸ்டனும், டிஸ்ரேலியும் தம் விருப்பப்படி நடப்பதில் பெயர் பெற்றவர்கள்.

முதலமைச்சர் இன்னர் என்று உருவாகும்போதே மற்றையவர்கள் தாங்கள் அமைச்சராக வேண்டுமென்பதையும் இன்ன துறைகள் வேண்டுமென்பதையும் குறிப்பாக வெளிப்

படுத்துவார்கள், ஆனால், பிரதமர் தமது அறிவுத்திறன் கொண்டேதான் பிற அமைச்சர்களையும் அவர்களுக்குத் தரப் படவேண்டிய துறைகளையும் முடிவு செய்வார். தொடர் புடையவர்களை மறைவாகக் கூப்பிட்டுப் பேசி முடிவு செய்யலாம். அமைச்சர்கட்குக் கீழ்ப் பணிபுரிய வேண்டிய சில அரசியல் நியமனங்கட்குத் தொடர்புடைய அமைச்சரைப் பின் ஆலோசித்து முடிவு செய்வது நடைமுறை வழக்கம்.

அமைச்சர் அவைக்குத் தகுதியானவர்களை முடிவு செய்யும் போது எவரெவர் கீழ்ச்சபையில் இருக்கவேண்டும், எவரெவர் மேல் சபையில் இருக்கவேண்டும் என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும். பிரிட்டனில் அரசு அமைச்சர்கள் சட்டப்படி[1] சான்சலர் பிரபு, பாராளுமன்றச் செயலர்கள் (Parliamentary Secretaries), குறைந்த அளவு மூன்று அமைச்சர்கள் காமன்ஸ் சபையின் உறுப்பினர்களாக இருக்கவேண்டும். இதனுடன் கட்சியின் கொறடாக்கள்[2] காமன்ஸ் சபையில் இருக்கவேண்டுமென்பது இன்றியமையாதது.

ஒரு துறையின் முதல்வர் பிரபுக்கள் சபையில் இடம் பெற்றவராயிருந்தால், அவரது பாராளுமன்றச் செயலர் காமன்ஸ் சபையில் இருக்க வேண்டும். பிரதமர் அமைச்சர் களின் எண்ணிக்கையையும் பாராளுமன்றச் செயலர்களின் எண்ணிக்கையையும் மிகுதிப்படுத்த முடியாது. கீழ்த்தரப்பி லுள்ள அலுவல்களை அரசு ஆணைப் பத்திரம்[3] பெற்று உண்டாக்கலாம்.

சில அமைச்சர்களின் பொறுப்பு அதிகமாக இருந்தால் அவர்களுக்கு உதவியாக அரசியல் துறைச் செயலர்களை ஏற் படுத்தலாம். அவர்களுக்குக் காபினெட் சபையில் இடமில்லை. சில சமயங்களில் துறையில்லாமல் சில அமைச்சர்கள் நியமிக் கப்படுவதும் உண்டு. (துறை இல்லா அமைச்சர்கள்[4] என்பது அவர்களுக்குப் பெயர்.)

முதல் உலகப் போரின்போது பத்து அமைச்சர்கள் லாயிடு ஜார்ஜால் இவ்வாறு நியமிக்கப்பட்டார்கள். சர்ச்சிலும்

[1] Ministers of Crown Act, 1937.
[2] Party Whips.
[3] Royal warrant.
[4] Ministers without Portfolios.

கி.பி. 1940 முதல் 1945 வரையுள்ள காலத்தில் சிலரைத் துறை (Portfolio) இல்லா அமைச்சர்களாக நியமித்தார்.

எத்தனை பேர் காபினெட் அமைச்சர்களாக இருக்க வேண்டும், அவர்கள் இன்னின்னார் என்பனவற்றை முடிவு செய்வது பிரதமரின் உரிமையாகும். பொதுவாகப் பின் குறிப்பிட்டவர்கள் அமைச்சரவையில் உறுதியாக இடம் பெறுவர்:

பிரசிடென்ட் ஆஃப் தி கவுன்சில்,[1] லார்டு பிரிவி சீல்,[2] கடற்படை முதல் லார்டு,[3] அரசியல் துறைச்செயலர்கள்,[4] கருவூலத் தலைவர்,[5] வணிக வாரியத் தலைவர், கல்வி,[6] தொழில், சுகாதாரம், வேளாண்மைத் துறைகளின் அமைச்சர்கள். எனவே, இவர்கள் அரசியல் செல்வாக்கு உடையவர்களாகவும் இருப்பார்கள்.

காபினெட்டின் எண்ணிக்கை நிறைவேற்ற வேண்டிய வேலைகளைப் பொறுத்தது. அண்மையில் அரசின் வேலைகள் பெருகிக்கொண்டே போயுள்ளது. அலுவலர்களின் எண்ணிக்கை பெருகுவதுபோல், காபினெட் அமைச்சர்களின் எண்ணிக்கையும் சிறிது கூடுதலாக ஆகி வருகிறது.

போர்க் காலத்தில் போர்க் காபினெட்[7] என்னும் குழுவில் பொறுக்கி எடுத்த சில அமைச்சரவை உறுப்பினர்களை விரைவு வேலைகளைக் கவனிக்கவென்று நியமிப்பது ஒரு முறை. போர் இல்லாத அமைதிக் காலங்களிலும் குறிப்பிட்ட சில அலுவல்களை ஆய்வு செய்யக் காபினெட் குழுக்கள்[8] ஏற்படுத்துவதும் வழக்கத்தில் உள்ளது.

லாயிடு ஜார்ஜும் சர்ச்சிலும் போர்க் காபினெட் அமைத்தார்கள். சர்ச்சில் அமைத்த போர்க் காபினெட் உறுப்பினர்களுக்குப் போர் ஏகாதிகாரிகள்[9] என நாள்தாள்கள் பெயரிட்டன. இந்தப் போர்க் காலக் காபினெட் முறையை யொட்டியே பின்னுல் சில அமைச்சர்களை மட்டும் காபினெட் அமைச்சர்களாகவும் சிலரைக் காபினெட்டில் சேர்க்காமல் துறை அமைச்சர்களாகவும்[10] அமைக்கும் வழக்கம் பரவிற்று. காபினெட் நிலைப் பதவி ஓர் அமைச்சருக்குத் தருவது பிரதமரின் விருப்பம்தான். இதற்கு மன்னரின் இசைவு தேவை

1 President of the Council.
2 Lord Privy Seal.
3 First Lord of Admiralty.
4 Secretaries of State.
5 Chancellor of the Exchequer.
6 President, Board of Trade.
7 War Cabinet.
8 Cabinet Committees.
9 'War Lords'.
10 Departmental Trustees.

இல்லை. முன்னுளில் காபினெட் அமைச்சர் பிரிவி கவுன்சில ராகவும் ஆக்கப்பட வேண்டும். இப்போது அந்தக் கட்டுப் பாடு இல்லை.

ஒரு பிரதமர் மாறினுல் முழுக் காபினெட்டும் மாற்றப் பட்டதாகவே கருதப்படவேண்டும். ஒரே பிரதமர் எக் காரணம் பற்றியோ, காபினெட்டை மாற்றி அமைத்தால், அந்த நிலையில் அவரும் சேர்ந்து பதவியினின்று விலகவேண்டும். ஒரு பிரதமர் அமைச்சரவை ஏற்படுத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட தற்கு அடையாளம், மன்னர் அழைத்தபோது மன்னருடைய புறங்கையை அவர் முத்தமிடுதல் என்பது பிரிட்டிஷ் மரபு. தனிப்பட்ட ஓர் அமைச்சர் பதவியிலிருந்து நீங்கி, வேறு ஒருவர் அழைக்கப்பட்டால், மன்னர் நீங்கினவரின் .சாவிக் கொத்தை (சீல்)[1] வாங்கிப் பதவி ஏற்பவரிடம் தருவார். அப்படிச் சீல் ஒன்றும் இல்லையானுல், புதியவர் மன்னர் கைக்கு முத்தமிடுவார்.

எல்லாக் காபினெட் அமைச்சர் அலுவலும் அரசு அமைச் சர்கள் சட்டம் 1937படி லண்டன் கெஜட்டில் உத்தரவுடன் வெளியிடப்படவேண்டுமென்பது சட்டமுறையாகும்.

எத்தனை அமைச்சர்களைக் காபினெட்டில் சேர்க்கவேண்டு மென்பது பிரதமருக்கு ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கும். ஜனநாயகத்தில் பல கோணங்களிலிருந்து அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடைய தகுதியையும், வேலைக்கு உரிய அவர்கள் எண்ணிக்கையையும் மட்டும் கருதி முடிவு செய்ய முடியாது. இது ஓர் அரசியல் திறமை. இல்லையேல் மனக்குறைகள் ஏற்படும். நாட்டிலுள்ள பல பிரதேசங்களுக்கும் ஏறக்குறைய இடம் தரல் வேண்டும். பிரிட்டனில் ஆதியில் அமைச்சரவை குறைந்த எண்ணிக்கை யுடையதாகவே இருந்தது. நாளடைவில் அது பெருகியுள்ளது.

சர் இராபர்ட் பீலின் (கி. பி. 1841) சபையில் 14 பேர், டிஸ் ரேலி சபையில் 12 பேர், ஹென்றி காம்பெல் பானர்மன் சபை யில் (கி.பி. 1906) 19 பேர், பால்டுவின் சபையில் (கி.பி. 1935) 22 பேர், அட்லீ சபையில் (கி.பி. 1951) 16 பேர், மாக்மில்லன் சபையில் 21பேர், சர் அலெக் டக்ளஸ் ஹ்யூம் சபையில் 26 பேர்,

[1] Seal of Office. [2] Ministers of the Crown Act, 1937.

வில்சன் சபையில் 36 பேர் இருந்தார்கள். இப்போது எட்வர்டு ஹீத் சபையில் 40 பேர் உள்ளார்கள்.

பொதுவாக பிரிட்டனில் அமைச்சரவை, 20 பேரைக் கொண்டிருந்தால் போதும் என்பதுதான் கருத்து. அளவோடுள்ள காபினெட் சபைகளைச் சமாளிப்பது எளிது. எண்ணிக்கை பெருகினால் வில்லங்கங்கள் ஏற்படும். எல்லோரையும் சேர்த்துப் பிடிப்பதும் எல்லா விஷயங்களிலும் ஒருமனதான தீர்ப்பு எடுப்பதும் தொல்லையாக இருக்கும். மேலும், அமைச்சரவை உறுப்பினர் தொகை மிகுதியாக இருந்தால் காபினெட் மறைபொருள்களைப் பாதுகாத்தல் சிறிது சங்கடமாக இருக்கும். ஆனால், கட்சியின் உள் ஆக்கம் பெற்ற பிரிவுகளுக்கு மனநிறைவு அளித்துத் தீர வேண்டும். இந்த இரண்டு தேவைகளையும் மனத்தில் வைத்துப் பிரதமர் தமது திறமையையும் நுண்ணறிவையும் அனுபவத்தையும் பயன்படுத்தி முடிவு செய்யவேண்டும்.

பிரிட்டன் சிறிய நாடு. சாதிப்பிரிவுகள் முதலியன ஆங்கு மிகுதியாக இல்லை. இந்தியாவில் பல்வேறு வேறுபாடுகள் இருப்பதால், இங்கு அமைச்சரவையினரைத் தேர்ந்தெடுப்பது ஒரு கடினமான வேலை. இத்தனை அமைச்சர்கள்தாம் இருக்க வேண்டும் என்று பிரிட்டன் அரசியல் திட்டத்திலும், இந்திய அரசியல் திட்டத்திலும் இல்லை. எனவே, நிலைமைக்கேற்றபடி இந்தப் பிரச்சினை தீர்க்கப்படுகின்றது.

பிரிட்டனில் பிரதமராக வருபவர்கள் பழுத்த பார்லிமென்ட் அனுபவமுள்ளவர்கள். காம்பல் பானர்மனுக்குக்[1] காமென்ஸ் சபையில் 36 ஆண்டுகள் அனுபவம் உண்டு. லாயிடு ஜியார்ஜுக்கு 26 ஆண்டும், பால்ஃபோருக்கு[2] 28 ஆண்டும், ஆஸ்குவித்துக்கு 26 ஆண்டும், பால்டுவினுக்கு 15 ஆண்டும், மாக்டோனல்டுக்கு 18 ஆண்டும், சர்ச்சிலுக்கு 40 ஆண்டும், அட்லிக்கு 20ஆண்டும், மாக்மில்லனுக்கு ஏறத்தாழ 30 ஆண்டும், வில்சனுக்கு ஏறத்தாழ 25 ஆண்டும் அனுபவம் உண்டு.

மேற்கூறியவற்றால், பிரதமர் பொறுப்பேற்க வருபவர்களுக்குத் தக்க நல்ல அனுபவமும் அரசியல் அறிவும் நிர்வாகத் திறனும் இருத்தல் வேண்டுமென்பது தெளிவாகும்.

[1] Campbell Bannerman [2] Balfour

சென்ற ஒரு நூறு ஆண்டுகளில் 19 பிரிட்டிஷ் பிரதமர்கள் இருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பொறுப்பைச் செலுத்தும் முறையைக் கையாண்டார்கள். சர் ராபர்ட் பீல் என்பாரின் நாள் முதற்கொண்டு இன்று எட்வர்ட்டு ஹீத் காலம்வரை இரண்டொருவரைத் தவிர்த்து ஒவ்வொரு பிரதமரும் நல்ல வல்லமை உடையவர்கள். சிற்சில சமயங்களில், சிறப்பாகப் போர்க்காலத்தில், இவர்கள் எதேச்சாதிகாரிகளைப்போல்கூட நடந்துகொள்ள வேண்டியவர்களாக இருந்தார்கள்.

எடுத்துக்காட்டாக, பால்மர்ஸ்டன், லாயிடு ஜியார்ஜ், சர்ச்சில் முதலியோர் இந்த வகையில் நினைவுக்கு வருவார்கள். அந்த எதேச்சையைப் பிரிட்டிஷ் மக்கள் நாட்டின் நலத்துக்காகத் தருவார்கள். போர் முடிந்தபின் அத்தகைய பிரதமர்கட்கு ஓய்வுகொடுத்து அனுப்பிவிடுவது வழக்கம்.

சர்ச்சில் வைத்தது சட்டமாயிருந்தாலும், ஒரு முறை அவர் 'பிரிட்டிஷ் பொதுமக்கள் தங்கள் பிரதமரை எந்த நேரத்திலும் நீக்கிவிடும் சக்தி உடையவர்கள். ஆனால், உங்களை நீக்குவது அவ்வளவு எளிதன்று' என்று ரூஸ்வெல்டிடமும்[1] ஸ்டாலினிடமும்[2] கூறினர். ரோமச் சக்கரவர்த்திக்குள்ள அதிகாரம் பிரிட்டிஷ் பிரதமருக்கு உண்டு என்று சிலர் கூறுவர். இது பொதுவான உண்மையன்றெனினும், அந்தந்தப் பிரதமர்கள் தத்தம் பொறுப்பை எப்படிச் செலுத்துகிறார்கள் என்பதையே பொறுத்ததாகும். சாதாரண காலங்களில் பிரதமர் தமது அமைச்சர்களுடைய துறை விவகாரங்களில் தனித்தனிப் பங்கு எடுத்துக்கொள்ள உரிமை பெற்றிருப்பதுடன், கூட்டாக எல்லா அமைச்சர் துறைகளுக்கும் ஒரு தலைவர் போன்றவராகவும் இருக்கிறார்.

நிர்வாகத்தின் அன்றாடச் செயல்களைத் தவிர்த்து அமைச்சரவையும் பிரதமரும் அடுத்த தேர்தலை எண்ணிக்கொண்டேதான் இருக்கவேண்டும். தேர்தலுக்குமுன் தமது கட்சியின் கொள்கைகளைத் தேர்தல் அறிக்கையாக[3] வெளியிட்டுத் தேர்தல் பிரசாரங்கள் செய்யவேண்டும். இந்தப் பிரசாரத்தில் கட்சிக் கொள்கைகளைவிடப் பிரதமரின் புகழ்தான் பெரிதும் பாடப்படும். ஏனெனில், வெற்றிகரமான கட்சியில் பிரதமரும் கட்சியும் ஒன்று.

[1] Roosevelt [2] Stalin [3] Election Manifesto

கட்சியின் வலிமையும் பிரதமரின் வலிமையும் சமயத்துக்கு மாருக ஒன்ருக நிலவும். வளரவும் வளரலாம்; குன்றவும் குன்றலாம். பிரதமரின் செல்வாக்கிஞல் கட்சி வேட்பாளர் களின் செல்வாக்கும் வளரும். எனவே, தேர்தலுக்கு முன் பிரதமரும் தமது துணைவர்களான அமைச்சர்களும் சேர்ந்து வேலை செய்வார்கள். பிளவுகள் இருப்பின் தேர்தல் நேரத்தில் அவை வெட்ட வெளிச்சமாகிவிடும். அவைகளால் சில சமயங்களில் இரு பிரிவினரும் பாதிக்கப்படுவார்கள்.

சுருங்கக் கூறின், ஒரு காபினெட்டின் ஆயுளில் முதல் தொட்டுக் கடைசிவரை, அதாவது மீண்டும் தேர்தலில் மறு பிறப்பு எடுக்கும்வரை, பிரதமர் நெருங்கிய தொடர்பு உடையவ ராவார். அவர் செயல்களைப் பட்டியல் செய்யலாம்.

(1) மன்னரின் இசைவு பெற்று அமைச்சரவையையும் தனிப்பட்ட அமைச்சரையும் அமைக்கலாம்; நீக்கலாம்.

(2) தொடர்புடைய அமைச்சர் துறைகள் ஒவ்வொன்றிலும் அதிகாரம் செலுத்தலாம். தம்மைக் கேட்டு எந்த அலுவலையும் நடத்துமாறு ஏவலாம். இந்தப் பொறுப்பு வெளிநாட்டு விவகாரங்களில் மிக இன்றியமையாததாகும்.

(3) அமைச்சர் துறைகளுக்கிடையே வரும் வேற்றுமைகளை அதிகாரத்துடன் தீர்த்து வைக்கலாம்.

(4) அமைச்சரவைக் கூட்டங்களைத் தலைமை வகித்து நடத்தி முடிவுகளை எடுக்கலாம். சமயத்திற்குத் தகுந்தவாறு அமைச்சர் கூட்டங்களை நடத்தித் தலைமை தாங்கலாம்.

(5) காபினெட் குழுக்களைத் தவிர வேறு பல ஆலோசனைக் குழுக்களையும் நியமிக்கலாம்.

(6) பாதுகாப்புத் துறையில் நிலப்படை, கப்பற்படை, விமானப்படை என்ற மூன்றையும் ஒருமைப்பாடு செய்யலாம்.

(7) பாதுகாப்புக் குழுவின் தலைவர் பிரதமராவார்.

(8) காபினெட் செயலகத்தைக் கண்காணித்து, அமைச்சர் கள் காபினெட்டில் தீர்வு செய்யவேண்டிய அலுவல்களை ஆய்ந்து முடிவு செய்யலாம்.

(9) காபினெட்டின் முடிவுகளை நிர்வாகத்துறைகள் நடைமுறையில் கொண்டு வருகின்றனவா என்று பார்ப்பது பிரதமரின் கடமை.

(10) நெருக்கடி நேரங்களில் காபினெட்டுக்குக் கொண்டு வராமல் முடிவெடுப்பதற்கு மற்றைய அமைச்சர்களுக்கு அனுமதி தரவேண்டியவர் பிரதமர்.

(11) அமைச்சரவைக்கும் மன்னருக்கும் தொடர்பு உண்டு பண்ணுபவர் பிரதமர் ஒருவரே ஆவார்.

(12) காமன்வெல்த்தின் மற்றப் பிரதமர்களுடன் தொடர்பு உண்டாக்குபவர் பிரதமரே. சர்வதேசக் கூட்டங்களில் பங்கெடுத்துக் கொள்பவர் பிரதமரே.

(13) கட்சியின் தலைவராகையினாலே பாராளுமன்றத்தில் மற்றைய கட்சித் தலைவர்களோடு அதிகாரபூர்வமான தொடர்பு வைத்துக்கொள்பவர் பிரதமர்.

(14) அரசின் பொதுக் கொள்கைகளைப்பற்றிப் பாராளு மன்றத்தில் பேசும் பொறுப்புடையவர் பிரதமரே.

(15) பாராளுமன்றத்திலும் வெளியிலும் தமது கட்சி எந்திரத்தைச் சரியாக இயங்கச் செய்வது பிரதமரின் கடமை யாகும்.

இத்தகைய பல்வேறு கடமைகளால் பிரதமர் நாட்டின் முழு நேர ஊழியர் ஆகிருர். அவருக்கு டிரஷரி[1] முதல்வர் என்ற பதவியோடுகூட ஆண்டுக்கு 10,000 பவுண்டு ஊதியம் அளிக்கப் படுகிறது. மற்ற அமைச்சர்களின் ஆண்டு ஊதியம் 5,000 பவுண்டு. இவர்கள் எல்லாம் வேறு தொழிலைக் கவனிக்க முடியாதாகையால், இந்த ஊதியம் அதிகமன்று. பிரதமரின் பொறுப்பு ஊதியத்தைப் பொறுத்ததன்று. அவரது சேவை நாட்டுக்குத் தேவை எனக் கட்சி தேர்ந்தெடுக்கிறது.

அமைச்சர்களை நீக்கவோ, அமைச்சரவையைக் கலைக்கவோ பிரதமருக்கு அதிகாரம் உண்டு. அமைச்சர்கள் பிரதமரின் நியமனத்தின்மீது மன்னரால் அமர்த்தப்படுகிருர்கள். அமைச்சர்கள் மன்னரின் விருப்பக் காலம்வரை[2] பதவியை வகிக்கிருர்கள் எனக் கூறப்படுவது ஒரு மரபு. எனவே, எந்த நேரத்திலும் அமைச்சரைப் பதவியினின்றும் நீக்கலாம். ஆனல்,

[1] Lord of the Treasury [2] Pleasure of the Corwn

இந்தச் செயலை மன்னர் பிரதமரின் கருத்துப்படிதான் செய்யலாம்.

ஓர் அமைச்சர் திறமையற்றவர் என்றோ, நன்னடத்தை இல்லாதவர் என்றோ, நிர்வாகத்தில் சீர்கேடு விளைவித்தவர் என்றோ பிரதமர் அவரை நீக்கிவிட முடிவு செய்யலாம். பிரதமர் தம் கருத்தைத் தெரிவித்தவுடன் அமைச்சர் பதவியிலிருந்து விலகுவதுதான் முறை. அமைச்சர் விலக மறுத்தாலோ கீழ்ப்படியத் தாமதித்தாலோ அவரை நீக்குமாறு பிரதமர் மன்னருக்கு யோசனை கூறி நீக்கிவிடலாம்.

ஓர் அமைச்சர் பதவியிலிருந்து விலக மறுத்துப் பாராளு மன்றத்தில் அவருக்குப் போதுமான ஆதரவு இருந்தால், பிரதமருக்குத் தோல்வி என்றுதான் கருதவேண்டும். காபினெட்டுக்கு உள்ளேயே அந்த அமைச்சருக்கு ஆதரவு இருக்குமாயின் பிரதமர் தமது கருத்தைக் கைவிட வேண்டும் அல்லது காபினெட்டைக் கலைக்கவேண்டும்.

பொதுவாக, கருத்து வேற்றுமை நேரிடின் குறிப்பிட்ட அமைச்சர் தாமாகவே பிரதமரால் கேட்கப்படுமுன் பதவியி லிருந்து விலகிவிடுவது வழக்கம். சில சமயங்களில் பிரதமர் ஓர் அமைச்சரை நீக்குவதோ மாறுதல்கள் செய்வதோ குறிப் பிட்ட அமைச்சர் தகுதி இல்லாதவர் என்னும் காரணம் கருதி அன்று. அரசியல் வற்புறுத்தல்களால் பிரதமர் அந்த முடிவை எடுக்க நேரிடலாம்.

பிரதமரால் அழைக்கப்பட்டபோது ஓர் அமைச்சர் அவருக்கு உதவியாக வந்ததாகத்தான் கருதவேண்டும். உதவி தேவை இல்லை என்று பிரதமர் கருதினால் கைவிடப்படுவது இழுக்கன்று. இதனால்தான் ஓர் அமைச்சர் விலகிவிட்டதாகக் கூறுவது வழக்கமே யொழிய நீக்கப்பட்டார் என்று கூறப் படுவதில்லை.

ரஸ்ஸல் பிரபு[1] பிரதமராக இருந்தபோது (கி. பி. 1851) பாமர்ஸ்டனுடன்[2] பிணக்கு நேர்ந்தது. பாமர்ஸ்டன் தம் பதவியிலிருந்து விலகிவிட்டார். பாமர்ஸ்டன் விவாதம் செய்தது பிரதமருக்கு ஓர் அமைச்சரைக் கைவிட அதிகாரம் இல்லை என்பது அன்று. ஒவ்வோர் இனத்திலும் பிரதமரின்

[1] Lord Russel [2] Palmerston

முன் இசைவு பெற்றுச் செய்தல்வேண்டும் என்பது இயலாத செயல் என்னும் கூற்றை வற்புறுத்தவே தாம் பதவியினின்று விலகியதாக அவர் கூறினார்.

ஒவ்வொரு பிரதமரும் வேண்டாத அமைச்சரை நீக்க வெவ்வேறு முறையைப் பயன்படுத்துவார். பால்ஃபோர்[1] கையாண்டது ஒரு முறை. ஆஸ்குவித்து கையாண்டது ஒரு முறை. சிலர் நேர்முகமாக வாயால் சொல்லுவார்கள்; சிலர் தனிப்படக் கடிதம் எழுதித் தெரிவிப்பார்கள்.

இளைஞர்கட்கு இடம் தருவதற்காகப் பதவியினின்று நீங்க வேண்டும் என்று தம் துணைவர்களான அமைச்சர்களுக்கு வேண்டுகோள் விடுத்த போதெல்லாம் அவர்கள் உடனே இசைந்தார்கள் என்று அட்லி பாராட்டி எழுதியுள்ளார். இவ்வாறான கட்டுப்பாடு பிரிட்டிஷ் விவகாரங்களில் இருந்து வருகிறது. அமைச்சர்கள் மன்னரால் நீக்கப்படவேண்டிய நிலைமையே ஏற்படுவதில்லை. பிரதமர் இடத்தில் வைத்துள்ள நம்பிக்கையும், பிரதமர் பொது நன்மைக்கென்றே மாறுதல் செய்கிறார் என்ற எண்ணமும்தான் இந்த நல்ல நடவடிக்கைக்குக் காரணம் எனலாம்.

பிரதமருக்கும் அமைச்சர்களுக்கும் உள்ள உறவு நெருக்கமானது. அமைச்சர்கள் தங்கள் துறைகளின் அலுவல்களைப் பற்றிப் பிரதமரைச் சந்தித்துப் பேசிவிட்டுத்தான் முக்கியமான முடிவுகளை எடுப்பார்கள். வேண்டியிருப்பின் காபினெட் அவையில் அதைப்பற்றி முடிவு எடுக்கப்படும். ஆனால், அமைச்சரவையில் முடிவெடுக்கும் கட்டாயம் மிகச் சில அலுவல்களில் தான் நேரிடும்.

அமைச்சர் தம் கருத்துக்களைத் தமது அந்தரங்க அல்லது நேர்முக ஆலோசகர்களிடம் பேசுவது போலவே, தட்டுத்தடையின்றிப் பிரதமரோடு வேண்டிய நேரங்களில் பேசி மன உறுதி பெறலாம்.

வெளிநாட்டு விவகாரங்களில் மட்டும் பிரதமரே தொடர்புடைய அமைச்சர்களோடு அன்றாடம்கூடத்தொடர்புவைத்துக் கொள்ளவேண்டியிருக்கும். இந்த விஷயங்களை எல்லாம் காபினெட் கூடும் நேரத்தில் பேச இயலாமல் இருக்கும்.

[1] Balfour

கிளாட்ஸ்டன் தாமும் வெளிநாட்டு அமைச்சரும் முன்னரே பேசியவைகளைக் காபினெட்டுக்கு வரும் எனக்கூறுவார். ஆனால் பிரதமர் பொதுக் கொள்கைகளில்தான் முன்ஆலோசனை கூறலாம். விவரமான நடவடிக்கைகளில் தொடர்புடைய அமைச்சர் ஏதேச்சையாய் நடந்துகொள்வதற்கு உரிமையுண்டு.

காபினெட்டுக்கு ஒரு விஷயத்தை முறைப்படி கொண்டு வருவதற்கு அவ் விஷயம் வரையப்பட்டு எல்லா அமைச்சர் கட்கும் அனுப்பப்படல் வேண்டும். இதற்குக் காலதாமத மாகும்.

ஓர் உள்துறைக் காபினெட் போர்க் காபினெட் என்று நியமிக்கப்பட்டால், அது விரைவாகச் செயல்படும். சாதாரணக் காலங்களில் போர்க் காபினெட் தேவையில்லை. போர்க் காபினெட்டில் பிரதமர் வாக்கே செல்லும். நிர்வாக அதிகார மும் அவரே செலுத்துவார். போர்க்காலங்களில் ஒவ்வொரு மணி நேரத்திலும் நிலைமைகள் மாறிவரும். உடனுக்குடன் முடிவு எடுத்துப் போர்த் தலைவர்கட்கு அறிக்கைகள் அனுப்ப வேண்டும்.

லாயிடு ஜியார்ஜ் லெவர்ஸ் உடன்படிக்கையை[1] (கி. பி.1921) உயர்நிலைப் போர் ஆலோசனை சபையில் முடிவெடுத்து உடனே நிறைவேற்றினர். அந்த உடன்படிக்கையில் இரண்டு விதிகளுக்குக் கர்சன் பிரபு இசைவு தராவிட்டாலும் அது நிறைவேற்றப்பட்டது.

போர்க்காலத்திலே வெளிநாட்டுக் கொள்கை என்று தனியாக ஒன்றும் இல்லை. எல்லாம் போரின் போக்கு வெற்றி கரமாக முடிவதற்கென்றே முடிவு செய்யப்படும். அண்மைக் காலத்தில் பிரதமர் இசைவின்றி ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்படிக்கை ஹோர்-லவால் ஒப்பந்தம் என்பது. இது சர் சாமுவேல் ஹோர்[2] வெளிநாட்டு அமைச்சராக இருந்த போது ஃபிரெஞ்சு வெளிநாட்டு அமைச்சருடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம். இதைப்பற்றிப் பெரிய கிளர்ச்சி ஏற் பட்டது. ஹோர் பின்னால் இதைப்பற்றி எழுதியபோது தாம் காபினெட் சபையில் இந்த விவகாரத்தை வைக்கப் பிரதமரை வேண்டாதது தவறு என்று ஒப்புக்கொண்டார்.

[1] Treaty of the Levers [2] Sir Samuel Hoare

பிரதமர் நெவில் சேம்பர்லேயினுக்கும் வெளிநாட்டு அமைச்சர் அந்தோணி ஈடனுக்கும் ஒரு சமயத்தில் இத்தாலி சர்வாதிகாரி முசோலினிக்கு எழுதப்பட்ட கடிதம்பற்றிக் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. ஹிட்லருக்கு அனுப்பப்பட்ட ஒரு காகிதம்பற்றிச் சேம்பர்லேயினுக்கும் ஹாலிபாக்ஸ் பிரபுவுக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டது.

சர்ச்சில் தாமே சர்வாதிகாரிபோல் போர்க்காலத்தில் அலுவல்களை நடத்தி வந்தார். வெளிநாட்டுக் கொள்கைகளில் தாமே முழுப் பொறுப்பு எடுத்துவந்தார். எனவே, பழுது ஒன்றுமில்லை; விவாதங்களும் தலையெடுக்கவில்லை.

சாதாரணக் காலங்களில் பிரதமர், துறை அமைச்சர்களுக்கு முழு அதிகாரம் தருவது நல்லது. அவர்களைப் பிரதமர் தமது செல்வாக்கினால் வசப்படுத்த வேண்டுமேயொழியத் தலையீடு களாலும் தந்திரங்களாலும் கட்டுப்படுத்துவது தொல்லையாய் முடியும். பிரிட்டிஷ் மரபில் இந்த அனுபவம் சிறந்ததாக விளங்குகிறது.

6. பிரதமரின் ஆட்சிமுறை

அமைச்சரவையை நியமிப்பதுபோல் அதனைக் கட்டி ஆளும் பொறுப்பும் பிரதமரைச் சார்ந்ததே ஆகும். பிரிட்டிஷ் அரசியல் திட்ட நடைமுறைக்கே அவர் அடிப்படைக் கல் போன்றவர். பாராளுமன்றத்தில் அவர் தலைவராக இருப்பது மட்டுமன்றி, நாட்டில் தமது கட்சிக்கும் ஆட்சிக்கும் நல்ல பெயர் தேடித் தருவதும் அவரது பொறுப்பாகும். பொதுமக்களின் கருத்துகளை அறிந்து நடப்பதும், அடுத்த தேர்தலில் அவர்களின் ஆதரவைப் பெறுவதும் அவரது திறமையாகும்.

பிரதமர் தமது அமைச்சர் அவையிலும் கட்சியிலும் உள்ள தோழர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்வதல்லாமல், எதிர்க்கட்சியுடனும், பொதுமக்களுடனும், பத்திரிகை உலகுடனும் நல்ல முறையில் நடந்துகொள்ள வேண்டும். பேச்சு வன்மையும், பிரசாரத் திறமையும் உடையவராக அவர் இருத்தல் வேண்டும்.

பிரதமருடைய நடை, உடை, பேச்சு, பாவனைகள் பொதுமக்களின் அன்பைத் தேடித்தருமாறு இருத்தல் வேண்டும். பேச்சு அளவோடும், திறமையுடனும், அழுத்தமாகவும், ஆனால் பிறரைப் புண்படுத்தாமலும் இருத்தல் வேண்டும். இப்படிப் பேசும் திறமை மிகவும் முக்கியமாகும். எல்லாக் குணங்களும் ஒருவரிடத்திலேயே காண்பது இயலாதெனினும், பதவிக்கு வந்த ஒருவர் தம்மிடம் என்ன குணங்கள் காணப்படவேண்டும் என்பதை மறத்தல் ஆகாது.

பிரிட்டனின் பிரதமர் ஒவ்வொருவரிடமும் சிற்சில குணச் சிறப்புகள் உயர்ந்து விளங்கின. பால்டுவின் மற்ற அலுவல்களில் அவ்வளவு திறமையுள்ளவராக இல்லாவிட்டாலும், அவர் பாராளுமன்ற நடவடிக்கைகளில் இடையறாக் கவனம் செலுத்தி நல்ல பெயரைப் பெற்றவர். லாயிடு ஜியார்ஜ் தாமே கட்சி

என்று எண்ணி நடந்துகொண்டாலும், அரசியல் சூழ்ச்சி, பேச்சுத் திறன் உடையவர். சர்ச்சில் மிக நுண்ணறிவு உடையவர். ஆனால், அவர் தேர்தல் விவகாரங்களில் மக்கள் மனப்போக்கை அறிந்து நடந்துகொள்ள மாட்டாதவர்.

பாராளுமன்றத்தின் அன்றாட விவகாரங்களை நன்கு சமாளித்தற்குப் பிரதமருக்குப் பக்குவம் தேவை. இல்லையேல் அது பாரமாகத் தோன்றிக் கட்சியின் வெற்றிக்கு வில்லங்கம் ஏற்படும்.

இராம்சே மாக்டோனல்டுக்குக் கட்சித் திறமை போதாத தாலும் தோழர்களும் வேலையைப் பகிர்ந்து கொள்ளாததாலும் அவர் வெற்றிபெற முடியவில்லை.

பால்டுவின் சாந்தமும் அமைதியும் மற்றக் குறைபாடுகளை மறைத்து அவருக்கு வெற்றியைத் தந்தன.

சர்ச்சில் கட்சிச் சார்பில் மட்டும் பேசாமல், எப்போதும் நாட்டையே குறிப்பிட்டு அறைகூவுதல் வழக்கம். சிறப்பாக, இரண்டாவது உலகப் பெரும் போரின்போது அவர் பேசிய பேச்சுக்களும் அவருடைய தலைமையும் இன்றும் மெச்சப்படத் தக்கவையாகும்.

அட்லி படாடோபமற்றவர். அவரை எதிரிகளும் கடுமை யாகத் தாக்கமாட்டார்கள்.

மாக்மில்லன் விட்டுக்கொடுக்கும் தன்மையுடையவர்.

ஹராால்டு வில்சன் (Harold Wilson) தன்னம்பிக்கையும் உறுதி மனப்பான்மையும் உடையவர்.

இப்போது பிரதமராக உள்ள எட்வர்டு ஹீத் விடாமுயற்சி யும் முற்போக்குவாதிகட்கு இடம்தராமல் சமாளிக்கும் திறமை யும் உடையவர். பல ஆண்டுகள் ஐரோப்பியப் பொது மார்க் கட்டில் பிரிட்டனுக்கு இடம் கிடைக்காத நிலையை மாற்றி இவர் வெற்றி கண்டுள்ளார்.

காபினெட் சபை அலுவல்களிலும் துறை வேலைகளைக் கண் காணிப்பதிலும் பிரதமர் ஓரளவு முதல் முயற்சி எடுப்பவராயும், அக்கறை காட்டுபவராயும் இருத்தல் வேண்டும். ஆதி / நாளில் பிரதமர் சர் இராபர்ட் பீல் சிறிய அலுவல் நியமனங்களைக் கூடத் தாமே செய்வார் என்று படிக்கிறோம்.

கிளாட்ஸ்டன் காபினெட் சபையைப் பொறுத்த மட்டில் சமத் தகுதி உள்ளவர்களுள் ஒருவராகத் தம்மை எண்ணினர். ஆனல், காபினெட்டில் வரும் கருத்து வேற்றுமைகளைச் சமன் படுத்துவது பிரதமரின் பொறுப்பு ஆதலால், அது முற்றிலும் உண்மை அன்று.

பிரதமரின் பதவியை வல்லாட்சியாகவும் ஆக்கிவிடலாம்; அல்லது வலிமையற்றதாகவும் ஆக்கிவிடலாம். இவை பிரதமரின் அரசியல் பக்குவத்தையும் சொந்தக் குணச் சிறப்புகளையும் பொறுத்தது. பிரதமர் வலிமையுள்ளவராக இருந்தால் அமைச்சர்கள் பிரதமருடன் கூடி யோசித்தே காபினெட்டில் பிரச்சினைகளைக் கொண்டுவருவார்கள். இல்லையேல் அறிவிக்காமலும், அல்லது முன்அறிவிப்பில்லாமலும் விவாதங்களை எழுப்புவார்கள். இது காபினெட் சபை நடவடிக்கைகளில் சிறிது உராய்தல் ஏற்படுத்தவும் கூடும். இவைகளுக்குப் பிரதமர் சமாதானமோ மறுப்போ தெரிவித்து வேலையை நடத்த வேண்டும்.

கிளாட்ஸ்டன் தமது சபையில் பிளவுகள் இருந்தாலும் அவற்றைத் திறமையுடன் சமாளித்து வந்தார்.

பால்ஃபோர் கூர்மையான அறிவு உடையவர். அவர் அமைச்சர்களிடையே ஒற்றுமையைப் பெரிதாக்கி வேற்றுமைகளைக் கண்ணுக்குத் தெரியாமல் செய்து விடுவார்.

ஆஸ்குவித் அதிகமாகத் தலையிடாமல் இருந்ததால், காபினெட் கூட்டங்களில் பிடிப்பு இல்லாதவர் போல் தோன்றினர்.

லாயிடு ஜியார்ஜ் சிக்கல்களை ஒரு நொடியில் புரிந்து கொண்டு அவற்றைப் போக்குவதற்கு வழி கூறுவார்; வெளி நாட்டு விவகாரங்களில் அத் துறை செய்யும் வேலைகளில் தலையிட்டுத் தாமே பொறுப்பு ஏற்றுக்கொள்வார்.

பால்டுவின் விவாதங்களில் தலையிடாமல் இருந்து கடைசியில் பொருத்தமான ஒரு வழியைச் சுட்டிக்காட்டிப் பொது இசைவைப் பெற்றுக்கொள்வார்.

இராம்சே மாக்டோனல்டு தொடர்புடைய குறிப்பேடுகளை நன்கு படிப்பார். ஆனால், பிற அமைச்சர்களின் பொது இணக்கத்தை விரைவில் பெறுவதற்குத் தந்திரமாகப் பேச அவருக்குத் தெரியாது.

சர்ச்சில் போர் நாள்களில் பிரதமராக இருந்தார். அவர் ஒவ்வொரு செயலிலும் போரில் வெற்றிபெறும் அடிப் படையிலேயே கண்ணேட்டம் செலுத்தி எல்லோருக்கும் மனநிறைவை உண்டாக்கும் வேலைகளைச் செய்துமுடிப்பார். எனினும், வல்லாட்சியாளரைப் போல் தாமே முடிவுகளை எடுத்துவிடுவதில்லை.

அட்லி ஆடம்பரம் இல்லாமல் இருந்ததால் அவர் ஆட்சியில் சிறு சிக்கல்களும் வருவதில்லை.

இதுகாறும் கூறியவற்றுல் பிரதமர் சமத் தகுதி உடையவர்களுள் முதல்வர் என்று பொதுவாகக் கருதப்பட்டாலும், சூரியனை மற்றக் கிரகங்கள் சுற்றிவந்து ஒளியைத் தருவது போல், அமைச்சரவையில் உண்மையிலேயே தலைமைப் பதவி உடையவராக விளங்கினுர் என்பது மிகையாகாது. பொதுத் தேர்தலின் போதே பிரதமர் பதவிக்குத் தகுதி உடையவர் எவர் என்று கட்சி உறுப்பினர்கள் எடைபோட்டு விடுவார்கள். ஆனால், தேர்தலுக்குப் பின் அணைத்துப் பிடித்துத் தோழர்களை ஒத்துழைக்கச் செய்வது பிரதமரின் அரசியல் தந்திரமே எனக் கூறலாம்.

7. அமைச்சர்களின் தொழில்முறை

அமைச்சரவையின் நிர்வாகத்திற்குப் பிரதமர் பொறுப் புடையவர் ஆவார். ஒவ்வோர் அமைச்சரின் கடமையும் அதனை நிறைவேற்றும் முறையும் ஒன்றுகூடி அமைச்சரவை யின் பொதுமதிப்பை உருவாக்கும். அமைச்சர்கள் திறமை வாய்ந்தவர்களாயிருப்பினும் பொதுப்பணியில் தூய்மையும் நெறியுடைமையும் உள்ளவர்களாக இருத்தல்வேண்டும். ஓர் அமைச்சருக்குக் குறிப்பிட்ட தகுதிகள் நிர்ணயிக்கப்படுவ தில்லை. பொதுவாக, கொடுக்கப்பட்ட துறையை அக்கறை யுடன் கண்காணித்து மக்களுக்கு மன நிறைவையும், அமைச்ச ரவைக்கு நல்ல பெயரையும் தமக்குப் புகழையும் தேடவேண்டும் என்பது குறிப்பிடப்படாமலே ஏற்றுக்கொள்ளப்படும் விதியாகும்.

ஓர் அமைச்சர் பதவி ஏற்றுக்கொள்வதற்கு முன் அரசாங்கத்தோடு தொடர்புடைய வாணிக நிலையங்களிலோ, வேறு முறையிலோ, ஒப்பந்தப் புள்ளிகள் ஒப்பணை முதலிய வைகளிலோ தொடர்புகொண்டிருந்தால் அந்த நிலையங்களின் இயக்குநர் போன்ற நிர்வாகப் பதவியிலிருந்து உடனடியாக விலகிவிடவேண்டும். அமைச்சருக்கு வேறு தொழில் இருந் தால் எடுத்துக்காட்டாக மருத்துவர், வழக்கறிஞர் முதலிய தொழில்கள் இருந்தால் அவற்றை விடவேண்டுமென்பது தேவையில்லை. ஆனால், அரசாங்கக் கடமைகளுக்குப் பாதகம் ஏற்படக்கூடாது.

அரசாங்கத்திலேயே ஊதியம் பெறும் அலுவல் பெற்றிருந் தால் தேர்தலுக்கு முன்பே அந்த அலுவலைவிட்டு விலகிவிட வேண்டும். இல்லையேல் வேட்பாளர் மனுத் தள்ளுபடியாகி பாராளுமன்ற நடவடிக்கைகளில் இடையருக் கவனம் செலுத்தி நல்ல பெயரைப் பெற்றவர். லாயிடு ஜியார்ஜ் தாமே கட்சி

அரசாங்கத் தீர்ப்புக்கு வர நேரிடின், தமது தொடர்பை அமைச்சரவைக்கோ, பிரதமருக்கோ தெரிவித்து, அந்தத் தீர்ப்பில் தாம் பங்கு கொள்ளாமல் விலகி இருப்பது நெறியாகும். வழக்கறிஞர் குழுவில்[1] பங்கு இருந்தால், அதிலிருந்து விலகத் தேவையில்லை. ஆனால், அரசுக்கு எதிரான வழக்குகள்வரின் அந்த வழக்குகளில் பங்கெடுத்துக் கொள்ளக்கூடாது. இல்லையேல், அரசின் இரகசியங்களை நெறியற்றமுறையில் வெளியிடும் இடர் வந்து சேரும்.

எந்த அமைச்சராயினும் சரி தமக்கோ, தம் நண்பர்களுக்கோ, உறவினர்கட்கோ உதவி செய்யக்கூடிய செயல்களில் கலந்துகொள்ளாமல், அந்த நிலையைப் பிரதமருக்கு அறிவித்தல் வேண்டும். எந்த நேரத்திலும் அரசாங்க இரகசியங்களைப் பயன்படுத்தவோ வெளிப்படுத்தவோ கூடாது. இந்த அடிப்படையில்தான் செய்தித்தாள் நிர்வாகங்களில் பங்கு எடுத்தல் ஆகாது. செய்தித்தாள்களுக்கு எழுதுதல் முதலியவைகளை மிக விழிப்புடன் செய்யவேண்டும்.

அரசாங்கத்தின் செலவுகளை விளக்கவோ தமது சொந்தக் கருத்துக்கள் குழறுபடையாக வெளியாகி இருந்தால் அவற்றைத் திருத்தவோ செய்தித்தாள்களுக்கு எழுதலாம். ஆனால், அரசாங்க இரகசியங்களைச் சிறிதளவேனும் வெளிப்படுத்த நேரிடும் என்றிருந்தால் செய்தித்தாள்களுக்கு எழுதுவதைத் தவிர்த்தலே முறையாகும். தமக்குக் கொடுக்கப்பட்ட துறையில் முக்கிய மேல் அலுவலர்கள் தமது நெருங்கிய உறவினர்களாக இருந்தால், அதனை உடனே பிரதமருக்குத் தெரியப்படுத்தல் வேண்டும்.

தம் துறைக்குத் தொடர்புடைய செயல்களில் முடிவெடுத்து ஆணைகள் இடுவது அமைச்சரின் கடமையாகும். அந்தச் செயல்களில் வேறு ஓர் அமைச்சர் தொடர்பு கொண்டிருந்தால் அந்த அமைச்சர் துறையுடனும் ஆலோசித்து முடிவு செய்தல் வேண்டும். முதற்கண் தங்கள் செயலர்கள் மட்டத்தில் விவாதத்தைவிட்டுப் பின் அமைச்சர் மட்டத்தில் முடிவு எடுத்துக்கொள்ளவேண்டும். அலுவலர் மட்டத்தில் தரப்பட்ட கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவோ, தள்ளிவிடவோ, மாற்றவோ அமைச்சர்கட்கு அதிகாரம் உண்டு. ஆனால், சட்டம், விதி இடம் கொடுக்காதாயின் அவைகட்கு மாறாக முடிவு செய்தல் ஆகாது. ஒரு பிரச்சினையில் நிதி அலுவல்களில் தொடர்பு

[1] Solicitor Company

இருந்தால், நிதி அமைச்சரையும் கலந்து ஆலோசிக்க வேண்டும். சட்ட அலுவல்களின் தொடர்பு இருந்தால், சட்ட அமைச்சரையும் கலந்து ஆலோசிக்க வேண்டும். ஒரு பிரச்சினைக்குப் பொறுப்புடைய அமைச்சர், மற்ற அமைச்சர்களுடன் அதுபற்றிக் கருத்து வேற்றுமை கொண்டால், அவருடன் நேரில் கலந்து பேசி உடன்பாட்டைப் பெறலாம். நேரில் கலந்து எடுத்த முடிவுகளைப் ஃபைலில் (கட்டில்) எழுத்து மூலமாக எழுதி ஒப்புதல் பெறவேண்டும். கருத்து வேற்றுமை ஏற்பட்டால், தொடர்புடைய அமைச்சர்களுள் எவராயினும் பிரதமருக்குக் கட்டை அனுப்பி உத்தரவு பெறவேண்டும். முக்கியமான பிரச்சினையானுல், அமைச்சரோ பிரதமரோ அமைச்சரவைக்கு அதை வைக்கும்படி கேட்கலாம். ஆனுல், அப்படி வைப்பதற்குப் பிரதமர் ஒப்புதல் வேண்டும்.

அமைச்சர்கட்கு இடையேயும், பிரதமருக்கும் அமைச்சர்கட்கும் இடையேயும் அடிக்கடி தொடர்பு இருப்பது நல்லது. நிர்வாகமும், அரசியல் நிலையும் சிக்கலாயுள்ள இந்தக் காலத்தில் பெரும்பாலும் எல்லா அலுவல்களிலும் தனிப்பட்ட ஓர் அமைச்சர் தமக்குட்பட்ட துறையில் முழு அதிகாரம் பெற்றிருப்பினும் தாமே முடிவு எடுக்க முடியாது. அரசியல் தொந்தரவுகள் வராமலிருப்பதற்கும், நிர்வாகம் நல்ல முறையில் நடப்பதற்கும் அதிகார முனையிலிருந்து ஓர் அலுவலை நோக்காமல், நாலுப்பக்கங்களிலிருந்தும் கவனித்துச் செயல்படவேண்டும். விரைவாகச் செய்யவேண்டியவைகளை விரைவாகவும், சிந்தித்துச் செய்ய வேண்டியவைகளைச் சிந்தித்தும் செய்து மக்கள் நலனைத் தேடுவது வினைத்திட்பமாகும். ஓர் அமைச்சர் தமது புகழையே எண்ணி ஒவ்வோர் அலுவலையும் செய்யலாகாது. பகட்டுக்குச் செய்யப்படும் செயல்கள் நல்லவையாயினும் அவை மக்களிடம் மதிப்பை இழக்கும் ; பிறர் பொருமையையும் தேடிக் கொள்ளும் ; எதிரிகளின் ஏசலுக்கும் இடம் தரும். மக்கள் தொடர்பை ஒரு புறமும், தமது அமைச்சரவைத் தோழர்களின் தொடர்பை மற்ருெரு புறமும் பெற்றுக் கண்ணியமாகக் கடமையாற்றுவது மதியுடைமையாகும்.

ஓர் அமைச்சர் தம் பிரதமருடனே அமைச்சரவையுடனே கருத்து வேற்றுமை கொண்டால், தம் பதவியிலிருந்து விலகிக் கொள்வதுதான் அழகு. சிறிய செயல்களில் அப்படிச் செய்வது பொருளற்ற செயலாகும், பிரதமருக்குத் தம்மிடத்தில் நம்பிக்கை குறைந்தாலோ, கருத்துவேற்றுமை வலுத்தாலோ

அவர் தம் பதவிலிருந்து விலகும்படி கேட்டுக்கொண்டால், அவ்வாறு தயங்காமல் செய்வதே அழகு. ஓர் அமைச்சரின் அதிகாரத்தின்கீழ் வெளியேற்றப்பட்டார் என்ற செய்தி இது வரை கிடையாது. குறிப்பறிந்து நடந்துகொள்வது அமைச்சர்களுக்குரிய தகுதியாகும்.

பிரதமர் அமைச்சரவையிலிருந்து சிலரை நீக்கவோ, சேர்க்கவோ வேண்டுமென்று முடிவுசெய்தால், அப்படிச் செய்வதற்கு அவருக்கு முழு அதிகாரம் உண்டு. சில சமயம் பிரதமரின் முடிவு சிறந்ததாக இல்லாமல் இருக்கலாம். அதன் விளைவை அவர் ஏற்றுக்கொள்வதுடன் மற்ற அமைச்சர்களும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஓர் அமைச்சரின் துறையைப்பற்றிச் சில சமயங்களில் முறையீடுகள் வருவது இயல்பே. அவை ஆதாரமுடையவையாகவும் இருக்கலாம்; ஆதாரமற்றவையாகவும் இருக்கலாம். நாவடக்கம் இல்லாமலோ, இறுமாப்பாலோ, திறமையின்மையாலோ, சட்டமன்றத்திலும், பொது மக்களிடத்திலும் ஓர் அமைச்சர் எதிர்ப்பையும், வெறுப்பையும் தேடிக்கொள்ளலாம். அவ்வப்போது கண்காணிப்பாக உள்ள பிரதமர் அதைத் திருத்துவது அவருடைய கடமையேயாகும்; கட்டுப்பாட்டு உணர்ச்சியுள்ள அமைச்சர் அதனால் வருத்தப் படுதலோ கோபங் கொள்ளுதலோ தகாது. அவர் தம்மை முதலில் திருத்திக்கொள்ள முயலவேண்டும்.

அமைச்சர் தமது சொந்த நடவடிக்கைகளிலும் கண்ணியமாக நடந்துகொண்டு மாசின்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். பணத்தின்மீது ஆசை அல்லது நண்பர்களின் பாராட்டுதல்கள் மீது விருப்பம் முதலியவற்றை அளவுடன் கொண்டிருத்தலே நல்லது. அமைச்சர் தம் கடமைகள் தொடர்பாக வெளியூர்ச் சுற்றுலாப் போகும்போது ஐயப்பாட்டிற்கு இடந்தரும் ஆள்களிடமிருந்தோ அளவுக்கு மீறியோ முகமன்களை (உபசாரங்களை) ஏற்றுக்கொள்வது இடுக்கணை உண்டுபண்ணும். அமைச்சர்களை நெறிதப்பி நடக்குமாறு செய்து தம் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள விரும்பும் சிலர், இந்தவிதமான தூண்டுதல்களுக்கு அமைச்சரை உள்ளாக்குவது உலக இயல்பு. அமைச்சர்கள் இத்தகைய வலையில் சிக்காமல் இருக்க எந்த நேரத்திலும் விழிப்புடன் இருக்கவேண்டும். சீசரின் மனைவி ஐயத்திற்கு இடமின்றி உன்னதமாக இருக்கவேண்டும் (Caesar's wife must be abode suspicion) என்று கூறப்படுவது அமைச்சர்கட்குப் பொருந்தும்.

இனி, அமைச்சர்கள் தம் கீழ் அலுவலர்களுடன் (Civil Servants) எந்த வகைத் தொடர்புகொள்ள வேண்டுமென்பதைக் கவனிப்போம். அலுவலர்கள் அமைச்சரின் அதிகாரத்துக்குட்பட்டு நடக்க வேண்டிய நிர்வாக உறுப்பினராவார்கள். அதிகாரத்துக் குட்பட்டவராயினும் மேல்தரப்பில் உள்ள அலுவலர்கள் அமைச்சர்கட்குத் தக்க வழிகாட்டிகளாவார்கள். அந்த அலுவலர்களை அமைச்சருக்கு அமைச்சர்கள் எனவும் கூறலாம். அலுவலர்கள் ஒரு பிரச்சினையைப்பற்றிய எல்லாச் செய்திகளையும் அலசிக் கூறி, அமைச்சர் தக்க முடிவுகள் செய்வதற்கு நம்பிக்கையுள்ள ஆலோசகர்களாக இருத்தல் வேண்டும். கருத்துவகையில் அமைச்சருக்கு அதிகாரமிருப்பினும், தகவல்களை (facts) அவர் தவருகக்கொண்டால் அதை எடுத்துக்காட்டுவது அலுவலர்களின் உரிமையும் கடமையும் ஆகும். அதனுல் அமைச்சர் கோபம் கொள்ளலாகாது. தகவல்களைத் திருத்திய பின்னும் அமைச்சர் தம் முடிவையே வற்புறுத்திஞல் அதற்கு அலுவலர்கள் பொறுப்புடையவர்கள் ஆகமாட்டார்கள். அதைப்பற்றி அலுவலர்கள் வேறு முகமாகத் திருத்தவோ, தமது கருத்துகளைச் சாதிக்கவோ முற்படவேண்டியதில்லை. ஆனுல், அமைச்சர் ஆணை பிறப்பிப்பதற்கு முன் அலுவலர் தமது கருத்தை எழுதிச் சமர்ப்பிப்பது முறையாகும். அமைச்சர்கள் வருவார்கள் போவார்கள்; அலுவலகம் நிரந்தரமானது.

அமைச்சர் பிறப்பித்த ஆணை சட்ட அடிப்படையிலிருந்தாலும் தங்களுடைய சொந்தக் கருத்துக்கு மாறுபட்டிருந்தால், அதை அலுவலர்கள் மனநிறைவுடன் ஏற்று அந்த ஆணைகளைச் செயற்படுத்தவேண்டும். அலுவலர்கள் தங்கள் சொந்த அரசியல் கருத்துகளை நிர்வாகத்தில் புகுத்தல் கூடாது. அவர்கள் அரசியல் சார்பற்றவர்களாக[1] இருக்கவேண்டுமென்பது நியதி. அமைச்சர்களும், தமது அரசியல் கருத்துக்கு ஆக்கம் தரும் முறையில் அலுவலர்கள் சார்புடையவர்களாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கக்கூடாது.

அலுவலர்கள் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கும் மற்றச் சட்டங்கட்கும் உட்பட்டவர்களாவார்கள். பொதுவாகச் சட்டமன்றம் ஏற்றுக்கொண்ட ஆளுங்கட்சியினரின் அரசியல் அடிப்படை முறைகட்கும் உட்பட்டவர்களே ஆவார்கள்.

[3] Political neutrality of Civil Servants

அமைச்சரவையின் அரசியல் போக்கைத் திருத்துவதோ மாற்றுவதோ அலுவலர்களின் பணியன்று. அப்படி ஓர் அலுவலர் தலைப்படின் அமைச்சர் அந்த அலுவலரைக் கண்டித்து நடவடிக்கையும் எடுக்கலாம். 'கட்டுப்பட்ட அலுவலர்கள்'[1] என்று சொல்லப்படுவது கட்சிச் சார்புகொள்ள வேண்டுமென்ற பொருளில் அன்று. அப்படிக் கட்சிச் சார்புக்கு மறுக்கிற அலுவலர்களை அசட்டை செய்வதும், கட்சிச் சார்புக்கு உடன்படும் அலுவலர்களைத் (தந்நலத்தைக் கருதி) தூக்கிவிடுவதும் நேர்மையோ நீதியோ ஆகாது.

ஒரு மேற்றர அலுவலர், அமைச்சருக்கு எப்போதும் முட்டுக்கட்டை போடுவதாகத் தோன்றினால், அவரை வேறு துறைக்கு மாற்றிவிடுவதே நல்லதும் எளியதுமாகும். அல்லது ஓர் அலுவலர் திறமையில்லாதவர் என்று காணப்பட்டால் அதைச் சுட்டிக் காட்டலாம். அப்படியும் திருந்தவில்லை யென்றால், அவரை மாற்றிவிடலாம். இப்படிச் செய்வது தண்டனை[2] ஆகாது. அலுவலர்கள் தம் நிலையிலிருந்து கீழே தள்ளப்பட்டாலோ, சம்பளம் குறைக்கப்பட்டாலோ அதுதான் தண்டனையாகும். இடமாற்றம் தண்டனை ஆகாது. அமைச்சருடைய கருத்துகளில் பிழை காண்பித்ததால் அவர் தம்மை இடம் மாற்றி இகழச் செய்தார் என்று அலுவலர் செய்யும் முறையீட்டுக்கு ஆதாரம் இல்லை. அச்சமின்றித் தம் கருத்தை அமைச்சருக்குக் கூறுவது அலுவலரின் கடமையாகும். அதனால் மனக்கசப்பு நேரிட்டாலும் அதைப் பொறுத்துக் கொள்ளுதலே அலுவலரின் நேர்மைக்கு அடையாளமாகும். கருத்துவேறுபாட்டால் பதவி, சம்பளம், அலுவலில் உரிய இடம்[3] ஆகிய இவை பாதிக்கப்பட்டால், முதலில் தம்குறைகளை அமைச்சருக்குத் தெரிவித்து, வழிபிறக்க வில்லையாயின் நீதி மன்றம்மூலம் நீதி பெற நடவடிக்கை எடுக்கலாம்.

அலுவலர்கள் அமைச்சர்களுக்குத் தமது அனுபவத்தால் உண்டான ஆலோசனையைத்[4] துணிவுடனும் தயக்கமின்றியும் தரவேண்டும். ஆனால், அலுவலர்கள் மக்கள் தொடர்பு கொண்டவர்கள் அல்லர். அமைச்சர்கள் மக்களுடைய பிரதி நிதிகள்; மக்களுடன் தொடர்புகொள்கிறவர்கள். எனவே, மக்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதைப்பற்றி அமைச்சர்களே முடிவு எடுக்க முடியும். ஆனால், மக்கள் விரும்புகிற

[1] Committed Civil Servants [2] Punishment [3] Seniority
[4] Expert advice

படியெல்லாம் நடவடிக்கை எடுக்கச் சட்டம் இடம் கொடுக்கிறதா, நிதிநிலை இடம் கொடுக்கிறதா, நடைமுறை ஆட்சியில் அது நிறைவேறுமா என்பவற்றையெல்லாம்பற்றி அலுவலர்கள் எடுத்துக் கூறலாம். இவ்வளவும் ஆனபின் அமைச்சர், “நீங்கள் கூறியதைப்பற்றிச் சிந்தித்தோம். இது எமது முடிவு, நிறைவேற்றும்!” என்று அலுவலருக்கு ஆணை பிறப்பித்தால் அதை நிறைவேற்றுவது அலுவலரின் முழுக் கடமையாகும். இந்த இருபால் தொடர்பு நுட்பங்களை நன்கு உணராமல் அமைச்சர்கள் அலுவலர்களைக் குறைகூறுவதும், அலுவலர்கள் அமைச்சர்களைக் குறைகூறுவதும், எதிர்க்கட்சியாளர்களும், பொதுமக்களுட் சிலரும், நாள்தாள் உலகமும் தமக்கு விருப்பின்மை காரணமாக அவதூறுகளைப் பரப்புவதும் நிர்வாகத்துக்கும் பொதுவாழ்க்கைக்கும் நல்லதல்ல. அனுபவமில்லாத அமைச்சர்களும் சிற்சில சமயங்களில் தமது நெறியை உணராது நடந்துகொள்ளுதல் இயல்பே. பொதுவாக, அமைச்சர் தொழிற்படும் முறை மிகவும் கடினமானதாகும். அமைச்சர் பதவியில் வெற்றி எளிதில் வாராது.

8. காபினெட்டின் கூட்டுப்பொறுப்பு

பிரிட்டிஷ் அமைச்சரவைத் தத்துவத்தின் உயிர்நாடியான பகுதி, அமைச்சர்களின் கூட்டுப்பொறுப்பு (Collective Responsibility) என்பதாகும். நாட்டின் அலுவல்களைத் தொடர்ச்சியாகக் கவனித்து வருவது அரசாங்கத்தின் கடமையாகும். அந்தக் கடமையின் பொறுப்பு அமைச்சரவையின்மேல் வைக்கப்படும். இது முன்னுளில் மன்னருக்கு உத்தரவாதமான பொறுப்பாகக் கருதப்பட்டது. பின் மன்னருக்கும் பாராளுமன்றத்திற்கும் உத்தரவாதமான பொறுப்பு என்று கருதப்பட்டது. கி. பி. 1832-க்குப் பிறகு பாராளுமன்றத்துக்கு அதிகமாக எண்ணப்பட்டது. கி.பி. 1867 முதல் இது பாராளுமன்றத்துக்கென்றே உள்ள பொறுப்பு என்று உணரப்பட்டது. பாராளுமன்றத்திற்கெனின், உண்மையிலேயே அது வாக்காளர்களாகிய பொதுமக்களுக்கு என்றுதான் கருதவேண்டும். இந்தப் பொறுப்பை வகிக்கும்படி செய்வதற்குத்தான் ஆளுங்கட்சி என்றும் எதிர்க்கட்சி என்றும் ஏற்பட்டுள்ளன.

இந்தப் பொறுப்பு எந்த அளவில் நிறைவேற்றப்படுகிறதென்பதை அன்ருடம் பாராளுமன்றத்தின் நடைமுறைகளைக் கொண்டு அறியலாம். பாராளுமன்றத்திற்கு வெளியே கட்சி விவாதங்களிலும் காபினெட்டின் நடவடிக்கைகள் ஆராய்ந்து அளவிடப்படும். காபினெட்டின் சொந்தக்கட்சிச் சார்புடையவர்களும்கூடக் கட்சி அமைச்சர்கள் எந்த அளவு கட்சிக் கொள்கைகளையும் இட்ட பணிகளையும் நிறைவேற்றுகிருர்கள் எனக் கண்காணிப்பார்கள். எதிர்க்கட்சியின் கண்காணிப்புப்பற்றிச் சொல்லத் தேவையே இல்லை. அமைச்சரவை எங்கு வழுக்குகிறது, எந்தச் சமயத்தில் பிளவுபடுகிறது என்று கண்குத்திப் பாம்புபோல் எதிர்க்கட்சி பார்த்துக்கொண்டேயிருக்கும்.

அரசியல் சித்தாந்தப்படி ஒவ்வோர் அமைச்சரும் தம் சொந்தத் துறைக்குப் பொறுப்புடையவராவார். எல்லா அமைச்சர்களும் சேர்ந்து எல்லா அலுவல்களுக்கும் கூட்டாகப் பொறுப்பு உடையவர்கள் ஆவார்கள். அந்தப் பொறுப்பைப் பாதுகாப்பது பிரதமரின் பொறுப்பாகும். தனிப்பட்ட அமைச்சர் துறையளவில் தமக்குக் கீழ்ப்பட்ட அலுவலர்கள் செயற்படுவதற்கு வழிகாட்டியாகவும் ஊக்கம் ஊட்டுபவராகவும் இருப்பதும், பாராளுமன்றத்தளவில் அமைச்சரவையின் பெயரால் தாம் நிறைவேற்றும் ஒவ்வோர் அலுவல்பற்றியும் ஆய்வுரை வழங்குவதும், அமைச்சரவையின் போக்குச் சரி என்று காட்டித் தாக்குதல்களினின்று அதனைப் பாதுகாப்பதும் பிரதமரின் கடமையாகும். இந்தப் பொறுப்பு என்பது கூட்டுப்பொறுப்பாகையினலே பிரதமரும் தொடர்புடைய வேறு அமைச்சர்களும் பாராளுமன்றத்தில் அமைச்சரவையின் கொள்கைகளும் நிர்வாகமும் சரியானவை என்பதை எடுத்துக்காட்டுவதற்குக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். சிற்சில அலுவல்களில் கருத்துவேறுபாடும், செயலாற்றலில் குறைபாடும் இருந்தாலும் பொறுப்புக் கைவிடற்பாலதன்று. ஏதோ குறைகள் இருந்தால் அவற்றை ஒப்புக்கொள்வதில் குற்றமில்லை; அவைகளைத் தாமே கண்டித்துப் பேசுவதென்பது கூடாது.

இதே முறைப்படிதான் ஓர் அமைச்சரின்கீழ் உள்ள அலுவலர்களின் செயல்களுக்கெல்லாம் அமைச்சரே பொறுப்பேற்றுக் கொள்வார். இது சட்டப்படி ஏற்பட்டுள்ள பொறுப்பு. அப்படியே முழு அமைச்சரவையும் தனித்தனி அமைச்சர்களின் செயல்களுக்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்வது அரசியல் நெறிப்படியுள்ள கூட்டுப்பொறுப்பு. ஓர் அமைச்சர் அப்படிக் கூட்டுப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றால் அவர் தம் பதவியிலிருந்து விலகிவிடுவதுதான் முறை. அல்லது பிரதமர் ஓர் அமைச்சரின் செயலை ஆதரித்துப் பேசுவதற்கு இயலவில்லை என்றால், அந்த அமைச்சரைப் பதவியிலிருந்து விலகச் சொல்வதுதான் சரி. இதிலிருந்தே பாராளுமன்றம் அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்புத் தன்மையை உணர்ந்து கொள்ளும். அமைச்சரவையில் சாதாரண அமைச்சர்களுக்கு இதுதான் வழி. மிகச் சிறப்புப் படைத்த அமைச்சர்களாயின் அல்லது தவறிப்போன அலுவல் மிகவும் சீரியதொன்றாயின், முழு அமைச்சரவையே பதவியைவிட்டு விலக வேண்டும். மனச்சான்றை எண்ணித் தாம் மட்டும் பதவியைவிட்டு விலகப் பிரதமர் விரும்பினாலும் எல்லோருடைய பதவி விலகல் கடிதங்களையும் சேர்த்துத்தான் கொடுக்கவேண்டும். பின்னால் ஏற்படுத்

தப்படும் அமைச்சரவையில் தள்ளப்பட்டவர்களின் குற்றம் குறைபாடுகள் அம்பலமாகும்.

கி. பி. 1948-ல் ஷின்வெல் என்பவர் காபினெட்நிலை அமைச்சர் பதவியிலிருந்து சாதாரண அமைச்சர் பதவிக்குத் தள்ளப்பட்டார். கி.பி. 1947-ல் டால்டன் தமது வரவுசெலவுத் திட்டம்பற்றிய ஏதோ தகவலை ஒரு பத்திரிகையாளருக்கு, அதனைப் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிப்பதற்கு முன் கொடுத்துவிட்டபடியால், அவர் தம் பதவியைவிட்டு விலக வேண்டியதாயிற்று. மாக்மில்லன் பிரதமராக இருந்தபோது பிரோஃப்யூமா என்ற அமைச்சர் வாழ்க்கையில் ஏற்பட்ட தவற்றுக்குத் தம் பதவியை விட்டு விலகினார். பின்பு பிரதமரும் தம் பதவியைவிட்டு விலகினார்.

இந்தக் கூட்டுப்பொறுப்பு அரசியல் நன்மைக்கு மட்டும் தேவையானதென்று கருதக்கூடாது. அரசியல் அலுவல்களில் ஒரு கட்டுப்பாடும் கடமை ஒருமைப்பாடும் இல்லையாயின் அரசியல் நிர்வாகம் நிலைகுலைந்துவிடும். இந்தத் தத்துவம் பிரிட்டிஷ் வரலாற்றில் கி.பி. 1869ஆம் ஆண்டு முதல் மேலும்மேலும் உருவாகி வந்துள்ளது. இது அமைச்சரவையின் திறமையைப் பெருக்குவதுடன் மட்டும் அமையாமல் கடமை உணர்ச்சியையும் விரைவுபடுத்துகிறது. இது அமைச்சரவை பிழையில்லாதது என்று காட்டுவதற்கன்று. அமைச்சரவை ஓர் உடம்பும் ஒரு மனமும் உள்ளதாகச் செயற்படுவதற்கு என்றுதான் கருத வேண்டும்: ஒவ்வோர் அமைச்சரும் தமது நன்மையோ குற்றமோ தமது அமைச்சரவைத் தோழரைப் பாதிக்கும் என்று உணர்ந்தால் அமைச்சர்களிடையே பரிவும் ஒத்த மனமும் ஏற்படும். தம் குற்றம் எல்லோரையும் பாதிக்கும் என்ற அச்சம் இருப்பதும் நல்லது. எதிர்க்கட்சி குறிப்பிட்ட அமைச்சரைத் தாக்கி அழிப்பதைவிட அமைச்சரவையையே தாக்கி அதற்கு அசைவு ஏற்படுத்தக் கூடும். இந்த அச்சமும் அமைச்சரவையின் தூய்மைக்கும் திறமைக்கும் காரணமாக இருக்கும்.

இந்தக் கூட்டுப்பொறுப்புக் கொள்கை பிரிட்டிஷ் அரசியல் பாடத்தில் திருத்தமாகக் கற்பிக்கப்பட்டாலும், வாய்ப்பு இடங் கொடுக்கும் அளவுக்குத்தான் இது மேற்கொள்ளப்படும். ஆனால், இந்தக் கூட்டுப்பொறுப்புக் கொள்கை மறக்கப்படுவதே இல்லை. இதனை மேற்கொள்ளும் அளவில் எல்லோருக்கும் மேன்மை ஏற்படுகிறது. இது ஒருவரை ஒருவர் கட்டித்தழுவிச் சீர்படுத்துவதுபோல் ஆகிறது. எனினும், ஓர் அமைச்சரின்

குறைபாட்டால் மற்றொருவர் பாதிக்கப்படுகிறாரே என்று சிலர் கூறலாம். உண்மையில் அப்படி நடந்ததும் உண்டு. ஆனால், காபினெட் திட்டத்தில் இது தவிர்க்க முடியாதது. தவிர்க்க முடியுமாயின் ஒரு சிறிய நன்மைக்குப் பெரிய நலனை இழக்க வேண்டியிருக்கும். பிரிட்டிஷ் அரசியலின் மாண்பே இந்தக் கொள்கையின் வலிமையைக் கொண்டு வளர்வதாயிற்று. தன் சொந்த நலனைமட்டும் காப்பாற்றிக்கொள்வதில் சிறப்பு இல்லை. இதனால் தனிப்பட்ட பொறுப்புக் குறைவுபடுவதில்லை. பொறுப்பும்பிழையும் அமைச்சரவைக் கூட்டத்திலும் நேர்முகப் பேச்சிலும் பேசி விடப்படும். அமைச்சரவை அமைக்கும்போது எப்படிச் சமரசமும் ஒருமைப்பாடும் ஏற்பட்டனவோ அதே போல் கடைசி வரையும் அந்த ஒருமைப்பாடு நிலவவேண்டு வது இன்றியமையாதது. வாழ்ந்தாலும் வீழ்ந்தாலும் அது ஒருமைப்பாட்டில் நிகழவேண்டும். இதுதான் காபினெட் ஆட்சி யின் 'கற்பு' எனலாம்.

ஒவ்வோர் அமைச்சரும் தாம் செய்யும் செயல்களை அமைச்ச ரவையைக் கலந்து ஆலோசித்துக் கூட்டுமுடிவாகச் (Collective decision) செய்வதில்லை. அப்படி இருக்கும்போது, ஏன் முழு அமைச்சரவையும் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஐயம் அல்லது வினா எழலாம். அமைச்சரவை கூட்டாளி வாணிகம் அன்று; குடும்ப ஒற்றுமை போன்றது எனலாம். குடும் பத்தில் யார் ஒருவர் நன்மை, அல்லது தீமை செயினும் அது குடும்பத்தின் பெயரையும் நலனையும் பாதிக்கும். அதனைக் கருத்தில் கொண்டுதான் குடும்பத்தின் முதியோர்கள் முடிவுகள் எடுப்பார்கள். அதுபோல் காபினெட்டிலும் அனுபவம் படைத்தவர்கள் ஆலோசனைகளை அதிகமாகக் கூறலாம். இதனால் மற்றவர்கட்குப் பேசும் உரிமை இல்லை என்பதன்று. ஆனால், குடும்பத்தில் பெரியவர் சிறியவர் என்பதுண்டு. காபி னெட்டில் எல்லோரும் சரிசமமானவர்கள். தங்கள் கருத்துகளைக் கூற எல்லோருக்கும் உரிமை உண்டு. அப்படிக் கூறவில்லை என்றால் பொதுமுடிவுகளை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதுதான் பொருள். பதவி போய்விடுமோ என்ற அச்சம் கிடையாது. அந்த அச்சம் ஒருவருக்கு இருப்பின், அவர் காபி னெட் பொறுப்புக்குத் தகுதியற்றவரே ஆவார். ஐயம் ஏற்படும் நேரத்தில் தொடர்புடைய அமைச்சர் மற்ற அமைச்சர்களுடன் தனித்துப் பேசியோ காபினெட் கூட்டத்தில் தயங்காமல் பேசியோ தம் கடமையை நிறைவேற்ற வேண்டும். காபினெட் சபையில் ஒற்றுமை காட்டிவிட்டுப் பின்னால் முணுமுணுப்பதோ

பொது இடங்களிலோ, கூட்டங்களிலோ தமது கருத்து வேறுபாட்டை விளம்பரப்படுத்துவதோ முறையற்றது.

இந்த நாள்களில் காபினெட் அமைச்சர்களின் எண்ணிக்கை பெருகிவருகிறது. எனவே, சிறு கருத்துவேறுபாடுகளை எல்லாம் காபினெட் கூட்டத்தில் பேசி வெளியிடுவதற்கு நேரம் இராது. பொதுஇணக்கம் கோரப்பட்டுச் சமர்ப்பிக்கப்படும் பெரிய பிரச்சினைகள் தீர விவாதிக்கப்படும். அப்போது கருத்து வேறுபாடுகளினால் நெருக்கடிகள் நேரக்கூடும். அந்த நேரத்தில் பிரதமரின் திறமையால் எல்லாம் சமன் செய்யப்பட்டுத் தக்க முடிவு செய்யப்படும். பொதுக் கொள்கைகளில் மிகுந்த வேறுபாடு ஏற்படுவதற்கு நியாயம் இல்லை. அவை அரசியல் மட்டத்தில் கட்சியினால் முடிவு செய்யப்படும். பொதுக் கொள்கைகளைச் செயற்படுத்தும் அளவில் நிர்வாக முறையில் அனுபவ வேறுபாடும் கருத்து ஐயங்களும் ஏற்படலாம் (எடுத்துக்காட்டு எத்தனை எஃகு ஆலைகளைப் பொது உடைமையாக்குவது என்பதுபோல்). இந்தச் செயல்களில் காபினெட்டின் பொதுக் கருத்து, தொடர்புடைய அமைச்சரின் நெருங்கிய அனுபவச் சான்றின்மேல் உருவாகும். அது எல்லாரும் ஒப்புக்கொள்ளக் கூடியதாக இருக்கும். அப்படி ஏதேனும் ஆழ்ந்து ஆய்வு செய்யக்கூடிய அலுவல்கள் இருப்பின், முன் கூறியபடி காபினெட் குழு ஒன்று ஏற்படுத்தி ஆய்வு செய்யப் படும். இந்த முறை நெருக்கடிகளைத் தவிர்க்கும்; ஒருவருக்கும் மனக்குறையை உண்டாக்காது. விரிவான ஆய்வுகளில் மேல் அலுவலர்களின் (Officials) அனுபவமும் முன்னரே திரட்டி வைக்கப்பட்ட தகவல்களும் உதவும். எனவே, சிந்தனைக் கட்டுக்கோப்பில் மோசமான பழுது ஒன்றும் காபினெட் திட்டத்தில் ஏற்படவழியில்லை.

இவ்வளவு ஆழ்ந்து ஆலோசித்து முடிவு செய்தபின், ஒரு பிரேரேபணை பாராளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகளால் எதிர்க்கப்பட்டுத் தோல்வி அடைந்தால், அமைச்சரவை பதவியிலிருந்து விலகவேண்டியதுதான். தெளிவான தோல்வி நேரிடாவிட்டாலும் எதிர்க்கட்சியின் எதிர்ப்புக் கடுமையாகவும், ஆளும் கட்சியின் ஆதரவு மிதமாகவும் இருந்தால், அமைச்சரவை தனது பிரேரேபணையை மீண்டும் ஆய்வு செய்து சீர்திருத்தம் செய்யவேண்டும். சில சமயங்களில் அதைத் திருப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டியும் நேரிடலாம். இதனால் ஆளுங்கட்சிக்குத் தோல்வியோ, காபினெட்டுக்கு ஆதரவின்மையோ ஏற்பட்டுவிட்டது என்று கருதலாகாது. ஆனால்,

காபினெட்டே இந்தச் செயல் மதிப்பை இழக்கவைப்பது என்று கருதுமாயின், அப்போதுதானே பதவியிலிருந்து விலகிப் பின் தேர்தலில் வாக்காளர்களின் தீர்ப்பை எதிர் நோக்கலாம்.

சில சமயங்களில் காபினெட்டுக்குள்ளேயே சமன்செய்ய முடியாத கருத்துவேறுபாடுடையவர்கள் இருந்தால், பிரதமர் தமது அரசியல் திறமையால் அப்போதைக்கப்போது தமது காபினெட் சபையைக் கூட்டவோ குறைக்கவோ செய்யலாம். கூடாதவர்களை வைத்துக்கொண்டு குடைச்சலுக்கு ஆளாவது துன்பம். எனவே, கருத்துவேறுபாடு உடையவர் தாமே விலகி விடவேண்டும்; அல்லது பிரதமர், கருத்து வேறுபாடுடையவர் பதவியைவிட்டு விலகிவிடுவது நலம் என்று கூறிவிடலாம்; அல்லது திறமையற்ற அமைச்சர்களால் பாதிக்கப்பட்டால், அவர்களை நீக்கிவிட்டு வேறு ஆள்களை நியமிக்கலாம். இது காபினெட்டின் வலிமையைக் காப்பாற்றும் வழிகளுள் ஒன்ருகும். ஓர் அமைச்சர் சண்டைக்காரராய் அல்லது வேறு செல்வாக்கு உடையவராய் இருந்தால் அவரை நீக்குவது எளிதன்று. ஆனுல், பிரதமரின் செல்வாக்கும், நுண்ணறிவும், திறமையும் இவற்றையெல்லாம் வெல்லவேண்டும். மன ஒருமைப்பாடும், இகல்களை விட்டுக்கொடுக்கும் தன்மையுமுள்ள அமைச்சரவையே வெற்றியுள்ளதாகும்.

9. காபினெட்டுச் செயலகம்

முன்னுளில் காபினெட்டுக்கு ஒரு செயலாளரோ செயல கமோ இல்லை. அவையில் அமைச்சர்கள் தங்கள் திட்டங் களைக் கொண்டுவந்து விவாதிப்பார்கள். பிரதமர் அவற்றின் நிரலை ஒருவாறு முன்பே ஏற்படுத்திவிடுவார். முதலில் வெளி நாட்டு அலுவல்களும், பின்பு தொடர்புடைய அமைச்சர்களின் துறை அலுவல்களும் எடுத்து விவாதிக்கப்படும். பொதுவாகப் பிரதமருக்கு முன் அறிவிப்பில்லாமல் எந்த அலுவலும் விவாதத் திற்குக் கொண்டுவரப்படமாட்டாது. ஒவ்வோர் அலுவலும் விவாதிக்கப்பட்ட பிறகு, மன்னருக்குத் தெரிவிக்க வேண்டிய முடிவுகளைப் பிரதமர் சுருக்கமாகக் குறித்துக்கொள்வார். எடுத்த முடிவுப்படி தொடர்புடைய அமைச்சர் தமது நிர்வாகத் துறைக்கு ஆணைகளை அனுப்புவார். பால்ஃபோர் போன்ற பிரதமர்கள் முடிவுகளைத் தெளிவாகச் சொல்லிக் குறிப்பு எழுதி விடுவார்கள். சிலர் தெளிவாகக் கூருத குறையால் பின்னுல் கேட்டு விளக்கம் பெற வேண்டியிருக்கும். இந்தக் குறைபாடு களை நீக்க லாயிடு ஜார்ஜ் காபினெட்டுச் செயலகம் ஒன்றைத் தனியே ஏற்படுத்திப் போர்க் காபினெட் (War Cabinet) அலு வல்களைக் கவனிக்கச் செய்தார்.

காபினெட் செயலகம் கி. பி. 1916-ல் ஏற்பட்டது எனக் கூறலாம். அந்த ஆண்டில் பேரரசு பாதுகாப்புக் குழுவின் (Imperial Defence Committee) செயலகமே காபினெட் குழு வாக மாற்றப்பட்டது. முதலாவது காபினெட் செயலாளர் கர்னல் (பின் பிரபுவான) ஹாங்கி (Lord Hankey) என்பவ ராவார். பின் நிர்வாக முறையை ஆய்வு செய்த ஒரு தனிக் குழு கி. பி. 1918ஆம் ஆண்டில் காபினெட் செயலகம் நிலை யாக அமைக்கப்பட வேண்டுமெனப் பரிவுரை கூறிற்று. அந்தச் செயலகத்தின் வேலை காபினெட் கூட்டத்திற்கான நிகழ்ச்சிநிரலைத் தொகுத்து அதற்கு வேண்டிய குறிப்புகள்

முதலானவைகளைத் தொடர்புடையை துறைகளினின்றும் வாங்கி அமைச்சர்களுக்கு வழங்குவதாகும். செயலர் ஹாங்கி பிரபுவுக்கு இரண்டு உதவியாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். காபினெட் கூட்டங்களில் செயலர் இருப்பார். இந்தச் செயலகம் செய்யவேண்டிய முக்கிய அலுவல்கள்: (1) பிரதமரின் அங்கீகாரம் பெற்று ஒவ்வொரு கூட்டத்தின் நிகழ்ச்சிநிரலை முடிவு செய்தல், (2) எல்லா அமைச்சர்களுக்கும் நிகழ்ச்சிநிரலையும் தொடர்புடைய குறிப்புகளையும் அனுப்பிவைத்தல், (3) முடிவுகளைக் குறிப்பெடுத்துப் பிரதமர் அங்கீகாரத்துக்கு வைத்தல், (4) ஆணைப்படி தொடர்புடைய குறிப்பேடுகளைப் பேணிக்காத்தல், முடிவுகளைத் தொடர்புடைய துறையின் மேல்அலுவலர்களுக்கு அனுப்பிவைத்தல் முதலியவைகளாகும்.

காபினெட் தொடர்புகொள்ளும் விவாதங்களையும் முடிவுகளையும் முக்கியமாக மூன்று பிரிவுகளாகக் கூறலாம்: (1) சட்டச் சீர்திருத்தங்கள், (2) நிர்வாக நடைமுறைகள், (3) வெளிநாட்டு அலுவல்கள். முதல் இரண்டும் அரசியல் அமைப்புச் சட்டத்துக்குட்பட்டவை. சட்டச் சீர்திருத்தங்கள் நிர்வாக அதிகாரங்களை விரிவுபடுத்தவோ, குறைக்கவோ, மாறுபடுத்தவோ வேண்டியிருக்கும். அதில் தனிமனிதரைப் பாதிக்கும் சொத்து முதலிய உரிமைகளும் அடங்கும். நிர்வாகத்தில் நீதி, நிதி இவைகளும் அடங்கும்; போரும் சமாதானமும் அடங்கும். வெளிநாட்டு அலுவல்கள் அவைகளோடு தொடர்பு உடையவை. கட்சி உள்விவகாரங்கள் காபினெட் விவாதத்திற்கு வரமாட்டா; வெளிக்கட்சியார் விவகாரங்களும் வரமாட்டா. ஆனால், குறிப்பிட்ட மசோதா, நிர்வாக முடிவுகளைப்பற்றி மாற்றுக் கட்சியின் நோக்கங்களும், ஆதரவு அல்லது எதிர்ப்பு ஆகியவைகளும் மிக முக்கியமாகக் கவனத்துக்கு வரும். பிரிட்டனில் ஒற்றை ஆட்சி நிர்வாகம் உள்ளபடியால், அரசியல் அலுவல்களில் மைய ஆட்சிக்கும் மாநில ஆட்சிக்கும் இடையே உள்ள தொடர்புகள் முதலியவை இல்லை. எனினும், ஸ்காட்லாந்து, அயர்லாந்து ஆகியவற்றின் அலுவல்கள் தனிக் கவனத்துக்கு அடிக்கடி வரலாம்.

காபினெட் பொதுவாகக் கொள்கைகளைத்தான் (Policy) விவாதித்து முடிவுக்குவரும் என்பது பொதுவாக உள்ள நம்பிக்கை. இது முற்றிலும் உண்மையன்று. தனிப்பட்ட நிகழ்ச்சிகளே கொள்கைகளை உருவாக்கும்; பாதிக்கும். எனவே கொள்கைகட்கும் நிகழ்ச்சிகட்கும் இருபால் தொடர்பு உண்டு. எல்லாக் கொள்கைகளுக்கும் சட்டம் நிறைவேற்றல் தேவை

இராது. சட்டம் தேவை இருப்பின் அது காபினெட்டால் நிறைவேற்றப்படாது. தொடர்புடைய துறை அமைச்சரால் அது பாராளுமன்றத்தில் பிரேரேபிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும். சிறப்பாகக் கவனிக்கத்தக்கது காபினெட்டுக்கென்று தனிப்பட்ட சட்ட அடிப்படையான அதிகாரம் இல்லை என்பதேயாகும். காபினெட் பெயரால் ஒரு சட்ட விளம்பரம் அல்லது அறிக்கை அல்லது விதிகள் வெளிப்படுவது இல்லை. அரசாங்க ஆணையின்மீது தொடர்புடைய துறை அமைச்சரோ அவருடைய நிரந்தரச் செயலாளரோ 'லண்டன் கெஜட்'டில் வெளியிடல் வேண்டும். காபினெட்டுக்கு எல்லாவற்றையும் பொதுநோக்காகக் கண்காணிக்கும் கடமை உண்டு தொடர்புடைய துறை அமைச்சர் சிறப்பாகக் கண்காணிக்க வேண்டும்.

பிரிட்டிஷ் காபினெட் பொதுவாக வாரத்துக்கு இருமுறை கூடி வந்தது. பிரதமர் இசைவுபெற்றுத் தொடர்புடைய அமைச்சர்கள் ஒவ்வொரு கூட்டத்துக்கும் முன்னதாகவே விவாதிக்கவேண்டிய அலுவல்களை அறிவித்தல் வேண்டும். சில அமைச்சர்கள் பல அலுவல்களை விவாதத்துக்குக் கொண்டுவருவார்கள். சிலர் முக்கிய அலுவல்களைக்கூடக் கொண்டுவர மாட்டார்கள். காபினெட்டுக்கு எல்லாவற்றையும் கொண்டுவருவது தமது அச்சத்தை அல்லது கோழைத்தனத்தை வெளிப்படுத்துவதாகும் என்று சிலர் நினைக்கக்கூடும். மற்றும் சிலர் எதேச்சாதிகாரத்தை எளிதில் விட்டுக்கொடுக்க மாட்டார்கள். ஆனால், இன்ன இன்ன அலுவல்கள் காபினெட்டில் வைக்கப்படவேண்டும் என்ற பொதுவிதிகளைப் பிரதமர் அமைக்கலாம். சில அலுவல்களை அப்படி வைக்க வேண்டாம் என்ற ஒப்பந்தமும் செய்யப்படலாம். சான்றுகச் சில முக்கிய அலுவலாளர் நியமனங்களைத் தவிர்த்து மற்றவைபற்றித் தொடர்புடைய அமைச்சர்களும் பிரதமரும் முடிவு செய்யலாம். குற்றவாளிகட்குக் கருணை வழங்குதல், தூக்குத் தண்டனையை மாற்றி வேறு தண்டனை தருதல் முதலியவை காபினெட்டுக்கு வரத் தேவையில்லை. பட்டங்கள், விருதுகள் தருவதும் காபினெட்டுக்கு வாராது. பிரிட்டிஷ் பேரரசில் அடங்கிய நாடுகளுக்கு வைசிராய் நியமனங்கள் காபினெட்டுக்கு வரவேண்டும் என்று கிளாட்ஸ்டன் விரும்பினர். சிற்சில சமயங்களில் குற்ற நடவடிக்கைகள் அரசியல் தொடர்புடையவைகளாயும் பொது உணர்ச்சியைக் கிளரக்கூடியவைகளாயும் இருந்தால், அவை காபினெட்டில் வைக்கப்பட்டுச் சிந்திக்கப்படும். அரசியல் வாதிகளைச் சிறைப்படுத்துதலும், விடுதலை செய்தலும் இந்த இனத்தில் சேரும். தலைமை வழக்கறிஞர் (Attorney-General)

இந்த இனங்களைப் பிரதமர்மூலம் காபினெட்டுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று கருதக்கூடும்.

ஆண்டு வரவுசெலவுத் திட்ட (Budget) வகையில் ஒரு தனி ஏற்பாடு உண்டு. வரவுசெலவுத் திட்டம் மிக முக்கியமானது என்றபோதிலும், அது காபினெட்டில் வைக்கப்படுவதில்லை. அது பாராளுமன்றத்தில் வைக்கப்படுவதற்குச் சில நாள்கட்கு முன் காபினெட்டில் வாய்மொழியாக அதுபற்றிய விளக்கம் தரப்படும். புது வரிகள் விதிக்கப்பட இருப்பதைப்பற்றி வெளியிடுவதில்லை. அவைகளைப்பற்றி நிதி அமைச்சர் (Chancellor of Exchequer) தொடர்புடைய அமைச்சரிடம் ஆலோசனை கேட்கலாம். ஆனால், பிரதமருடன் கூடி வெளிப்படையாக இன்றி மறைவாகவே முடிவு எடுக்கப்படும். வரி விதிப்புகள் மறைவாகவே வைக்கப்பட வேண்டியவை. இது முன்கூட்டியே வெளிப்பட்டால் பண மார்க்கெட்டும் வாணிகமும் பாதிக்கப்படும்; அல்லது புதிய வரிகளினால் பாதிக்கப்படுபவர்கள் அவற்றிலிருந்து தப்பிக்கொள்வதற்குக் கள்ளத்தனமான சூழ்ச்சிகள் செய்ய வாய்ப்புத் தரும். எனவே, காபினெட்டில் இதுபற்றி முழு ஆலோசனை கேட்கப்படாதது காபினெட்டுக்குப் பொறுப்பு இல்லை என்பதால் அன்று.

அண்மைக் காலத்தில் வரவுசெலவுத் திட்டம்பற்றிய செய்திகள் சில வெளியானதன் பயனாக டால்டன் என்னும் நிதி அமைச்சர் பதவியினின்று நீங்க வேண்டியதாயிற்று. ஒரு புதிய வரியின் கொள்கைகள், விகிதங்கள் முதலியவைகளைப் பற்றிப் பல நாள்களுக்கு முன்னதாகக் காபினெட்டில் விவாதிக்கலாம்; தனிக் குழுக்கள் விவாதிக்கலாம். பத்திரிகைகளும் பொதுமக்களும் அவற்றைப்பற்றித் தெரிந்துகொள்ளலாம். ஆனால், வரவுசெலவுத் திட்டத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டுவரவிருக்கும் சமயத்தில் வரிவிதிக்க முடிவு செய்து விட்டால், அதை மிகவும் மறைவாக வைத்திருப்பது வழக்கமும் இன்றியமையாததுமாகும்.

பாராளுமன்றத்தைக் கலைக்கும் செயலும் காபினெட்டுக்குக் கொண்டுவரப்படமாட்டாது. இது பிரதமர் மன்னருக்கு மறைவாகக் கூறவேண்டிய இனமாக இருந்துவருகிறது. பிரதமர் இது குறித்துத் தம் நோக்கத்தைக் காபினெட்டில் வைக்கக் கூடாது என்ற விதி ஒன்றும் இல்லை. ஆனால், வழக்கமாக வைக்கப்படுவதில்லை. இது பிரதமரின் உரிமையாகும். பிரதமர் கட்சியின் தலைவர் என்ற முறையில் அவரே இதுபற்றி முடிவு

செய்வது வழக்கம். அவர் நம்பிக்கையுள்ள அமைச்சர்களுடன் தம் சொந்த விருப்பத்தின்மீது யோசனை கேட்கலாம். ஆனால், அப்படிக் கேட்கப்பட வேண்டுமென்பது தங்கள் உரிமை என ஒருவரும் எதிர்பார்க்க முடியாது.

விரைந்து செயற்படவேண்டும் என்பதற்காக வேறு சில இனங்களும் காபினெட்டில் வைக்கப்படாமற் போக நேரிடலாம். தொடர்புடைய அமைச்சர் பிரதமர் இசைவுபெற்று முன்கூட்டியே அவற்றை நிறைவேற்றலாம். பின் காபினெட் உறுப்பினர்களுக்கு அறிவிக்க வாய்ப்பு உண்டாகும். இத்தகைய நிகழ்ச்சிகள் சிறப்பாக வெளிநாட்டு விவகாரங்களில் நேரிடும். வெளிநாட்டு விவகாரங்கட்குக் காபினெட் குழு ஏற்படுத்தப்பட்டிருந்தால், எல்லாம் அந்தக் குழுவோடும் பிரதமரோடும் நின்றுவிடும். இரண்டாவது உலகப் போரின் முன் மியூனிச் ஒப்பந்தம் (Munich Agreement) பிரதமர் நெவில் சேம்பர்லெயினால் (Neville Chamberlain) காபினெட்டுக்குத் தெரிவிக்காமல் கையெழுத்திடப்பட்டது. இதுபற்றித் தமது மனக்குறையைத் தெரிவிக்கவேண்டி டஃப் கூப்பர் (Duff Cooper) என்ற அமைச்சர் தம் பதவியைவிட்டு விலகிவிட்டார்.

பொதுவாகக் கூறப்படின், பிரிட்டிஷ் காபினெட் அலுவல்களில் நியதியும் பண்பும் மட்டுமன்றிச் செயல்முறையில் நல்லவை எவையோ அந்த முறைகளைக் காபினெட்டவை கைக்கொண்டு நடவடிக்கை எடுத்துவந்த தெனலாம். பல ஆண்டுப் பழக்கத்தால் அவை புரிந்துகொள்ளும்படியானவையும், உடன்பாடுள்ளவையுமான மரபுகளாக வந்துள்ளன. சிற்சில சமயங்களில் கருத்துவேறுபாடுகளும் உராய்தல்களும் உண்டாகலாம். ஆனால், அவை மிகவும் குறைவு எனலாம். பிரிட்டிஷ் முறையே பெரும்பாலும் நம் நாட்டில் கையாண்டு வரப்படுகிறது.

காபினெட் கூட்டங்களில் பொதுவாக முன்னதாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டவைகளே நிகழ்ச்சிநிரலில் சேர்க்கப்படும். பிரதமர் இசைந்தால் வேறு அலுவல்களைப்பற்றியும் விவாதிக்கலாம். பொதுவாக ஓர் அமைச்சர் புதிய செய்தியைப் புகுத்த முயன்றால் பிரதமர் அடுத்த கூட்டத்தில் அதைக் கொண்டுவரலாம் என்று முடிவு கூறுவார். ஒரு பொருளைக் காபினெட்டில் கொண்டுவர வேண்டுமெனில், அதற்கு வேண்டிய குறிப்பைக் காபினெட் கூடும் நாளுக்குக் குறைந்தது இரண்டு நாள்கட்கு முன் அங்கீகாரம் பெற்று எல்லா அமைச்

சர்கட்கும் தொடர்புடைய துறை அனுப்பி இருக்கவேண்டும். அத்தகைய பொருள்களை மட்டுமே காபினெட் செயலகம் நிகழ்ச்சிநிரலில் சேர்க்கும். அதன் பிரதிகள் எல்லா அமைச்சர்கட்கும் அனுப்பப்படும். பொதுவாக நிகழ்ச்சிநிரலில் காட்டியுள்ள முறைப்படியே பொருள்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். முதலில் வெளிநாட்டு அலுவல்களைப்பற்றித் தொடர்புடைய அமைச்சருக்குப் பேச வாய்ப்புத் தரப்படும். சில சமயங்களில் பாராளுமன்றத்தில் அதிகார அடிப்படையில் அமைச்சர்கள் கொண்டுவர வேண்டிய அலுவல்கள் முதலில் எடுத்துக்கொள்ளப்படும். ஒவ்வோர் அமைச்சரும் நிகழ்ச்சிநிரலையும் தொடர்புடைய குறிப்புகளையும் நன்றுகப் படித்துக்கொண்டு காபினெட் கூட்டத்திற்கு வரவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுவார்கள். விரைந்து செயற்படவேண்டிய சில அலுவல்களுக்குப் பின்தொடர்ச்சியாகக் (Supplimentary) குறிப்புகள் காபினெட் கூடும் நாளில்கூடப் பிரதமர் ஆணையின்மீது அனுப்பப்படும். அதையும் அமைச்சர்கள் விரைந்து படித்து ஆயத்தமாக இருக்கவேண்டும்.

ஓர் ஆண்டில் ஏறத்தாழ 40 முதல் 60 முறை அமைச்சரவை கூடும். நாளுக்குநாள் சிந்திக்க வேண்டிய பொருள்கள் பல திறத்தனவாய்ப் பெருகி வருவது இயல்பே. எனினும், பொதுவாகக் காபினெட் அமரும் நேரம் அதிகப்படுவதில்லை. ஏனெனில், பிரதமருக்கும் அமைச்சர்கட்கும் வேறு பல வேலைகள் உண்டு. காபினெட் செயலகம் ஏற்பட்டபின் ஒவ்வோர் அலுவலுக்கும் குறிப்புகள் முன்னரே அனுப்பப்படுவதால், விரிவான விவாதங்கள் தேவைப்படுவதில்லை. அமைச்சர்கள் தங்கள் கருத்துகளைச் சுருக்கமாகக் கூறுவர்; சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படுவதில்லை. தேவையான சமயங்களில் அலுவலர்கள் தொடர்புடைய கீழ்நிலை அமைச்சர்களையோ, துறைச் செயலாளராகிய மேற்றர அலுவலரையோ அழைப்பது வழக்கம். அவர்கள் கேட்டபோது விவரங்கள் தருவார்களே ஒழிய விவாதத்தில் பங்குகொள்ள மாட்டார்கள். முதல் உலகப் போர் பற்றிய முடிவு, பிரதமர் வெளிநாட்டு அமைச்சருடன் கலந்தாலோசித்துச் செய்யப்பட்டது; பின் காபினெட் உறுப்பினர்கட்கு அறிவிக்கப்பட்டது. இரண்டாவது உலகப்போரும் அயல்நாட்டுக் கொள்கைக் குழுவினுல் (Foreign Policy Committee) முடிவெடுக்கப்பட்டது. அந்தக் குழுவில் பிரதமருடன் எட்டு முக்கிய அமைச்சர்கள் இருந்தார்கள். இந்த ஒன்பது பேர்கூட அதிகமென்று நாளடைவில் கருதப்பட்டது. பல

அலுவல்கள் 'உள் காபினெட்' (Inner Cabinet) என்று சொல்லக்கூடிய சில அமைச்சர்களினுல் முடிவெடுக்கப்பட்டன.

அமைதிக் காலச் செயல்கள் காபினெட் குழுக்களின் ஆய்வுக்கு முன்னதாகவே விடப்படுவதால் முழுக் காபினெட்டில் விரைந்து முடிவு எடுக்க உதவியாக இருந்தன. இந்த நாளில் காபினெட் குழுக்கள் முறைகையாளப்பட்டு வருகிறது. இவைகளுட் சில தாற்காலிகமானவை (Adhoc Committees); சில நிரந்தரமானவை (Standing Committees). சர்ச்சில் தொடங்கிய சில குழுக்கள் அட்லி காலத்திலும் செயலாற்றி வந்தன. காபினெட் குழுக்கள் விரைவின்றிப் பிரச்சினைகளை அடிப்படைப் பொருள்களாகத் துருவி ஆராய்ந்துவிடுவதால், முழுக் காபினெட்டுக்கு வேலை குறைகிறது; முடிவுகளும் விரைவில் எடுக்கப்படுகின்றன. காபினெட் குழுக்களில் கீழ்நிலை அமைச்சர்களும் (Junior Ministers), பாராளுமன்றச் செயலர்களும் (Parliamentary Secretaries) தாராளமாகப் பங்கு கொள்ளலாம். இந்த முறையினுல் எல்லாருடைய காலமும் வீணுகாமல் பயனுடையதாகச் செலுத்தப்படும்.

இந்த முறை முக்கியமாகச் சட்ட மசோதாக்களை ஆய்வு செய்யும் சமயங்களில் மிகவும் பயன்படுகிறது. காபினெட் கொள்கைபற்றிய வகையில் கவனம் செலுத்திஞல் போதும். சிறிய அலுவல்களைக் காபினெட் குழு கவனித்துவிடும். பணம்பற்றிய எல்லா அலுவல்களும் நிதி அமைச்சரையோ அவரது துறையையோ கலந்து ஆலோசிக்காமல் காபினெட்டுக்குக் கொண்டுவரப்பட மாட்டா. காபினெட் குழு பொதுவாகச் சுருக்கமான ஓர் அறிக்கையை முழுக் காபினெட்முன் வைக்கும். அதைக் கொண்டு காபினெட்டில் முடிவுகள் எடுக்கப்படும்.

காபினெட்டில் ஓட்டு எடுத்து முடிவுகள் செய்யப்படுவதில்லை. பொதுக்கருத்து ஒற்றுமையின்மீது பிரதமர் தம் சொந்த முடிவுரையுடன் தீர்வு செய்யப்படும். சாதாரணமாக ஓர் அலுவல் குறித்துப் பொது ஒற்றுமை ஏற்படவில்லையென்ருல் தள்ளிப்போடப்படும்; அல்லது கைவிடப்படும்; அல்லது பிரதமர் கருத்தே முடிவாக நிற்கும். ஏதோ ஓர் அமைச்சருக்குக் கருத்துவேறுபாடு இருப்பின் அதை அவர் வற்புறுத்துவதில்லை. பொதுக்கருத்துக்கு அவர் இணங்கவேண்டும். அப்படி இன்றித் தம் சொந்தக் கருத்தைக் கைவிடவோ, பிற அமைச்சர்களின் கருத்துக்கு ஒத்துப்போகவோ இயலாதெனின் அந்த அமைச்சர் தம் பதவியை விட்டு விலகவேண்டியதுதான்.

கூட்டுக்கட்சி (Coalition) அரசு காபினெட் என்றால் ஒவ்வோர் அமைச்சரும் தம் கருத்தை வற்புறுத்திச் சொல்லலாம். ஏனெனில், அத்தகைய காபினெட்டில் கட்சி ஒருமைப்பாடு இல்லாததால் ஒரு கருத்துக்கு மேற்பட்ட கருத்துகள் எழ இடம் உண்டு. கிரிமியாப் போரின்போது கூட்டுக்கட்சி அரசு ஒன்றுபட்ட மனத்துடன் இல்லாததால், ஒரு நடுத்தரமான செயலாய், பிரிட்டிஷ் கப்பற்படை டார்டனல்சுக்கு அனுப்பப் பட்டது. இது கிரிமியாப் போரில் தலையிடுவதற்கு பிரிட்டனை உள்ளாக்கியது. பொதுவாக, கூட்டு அரசைப் பிரிட்டிஷ் அரசியல்வாதிகள் விரும்புவதில்லை. முதல் உலகப்போரில் லாயிடு ஜார்ஜ் இதைத் தவிர்ப்பதற்குக் காபினெட்டைக் கலந்து ஆலோசித்ததே இல்லை. சர்ச்சிலும் அதே வகையில் இரண்டாவது போர்க்காலத்தில் செயலாற்றினார். அப்போதிருந்த தேசிய அரசில் இருந்த தொழிற்கட்சி உறுப்பினர்கூடச் சர்ச்சிலுக்கு முழு அதிகாரம் தரப்பட்டதாலும், பிரிட்டன்மீது ஜெர்மன் படையெடுப்பைத் தவிர்ப்பதே குறிக்கோளாக இருந்தபடியாலும் தங்கள் சொந்தக் கருத்துகளை வெளியிடாமல் பின்னணிக்குள் வைத்துக்கொண்டார்கள்.

காபினெட் விவாதங்கள் எல்லாம் மறைவானவை. அவ்விவாதங்களை அமைச்சர்களும் தொடர்புடைய அதிகாரிகளும் மட்டுமே அறியக்கடவார்கள். அமைச்சர்கள் பதவிப்பிரமாணம் எடுக்கும்போது அரசாங்க இரகசியச் சட்டப்படி (Official Secrets Act) இரகசியங்களை வெளியிடுவதில்லை என்ற வாக்குறுதி தருகிறார்கள். சட்ட அடிப்படையான தத்துவம் எவ்வாறாயினும், காபினெட் முடிவுகள் எல்லாம் மன்னருக்கு ஆலோசனையாகத் தரப்பட்டு அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டவையென்பதுதான் மரபு. எனவே, இந்த இரகசியங்களில் ஒருவருக்கும் தனிஉரிமை இல்லை. ஓர் அமைச்சர் பதவி வேண்டாவென விலகியபின், பாராளுமன்றத்தில் அதைப்பற்றி அறிக்கை செய்ய விரும்பினால், அதாவது காபினெட் இரகசியம் ஏதாவது வெளிப்பட வேண்டியிருந்தால் அவர் பிரதமர்மூலம் மன்னரின் இசைவைப் பெறுதல் கடனாகும்.

சிற்சில சமயங்களில் இந்த விதி மீறப்படுவதும் உண்டு. அமைச்சரின் கருத்துவேற்றுமைக்குக் காரணம் முன்னதாகவே பாராளுமன்றத்துக்கும் பொதுமக்களுக்கும் எட்டிவிடும். எந்தப் பொது விவாதங்களினால் இது நேர்ந்தது என்று பத்திரிகை

உலகமும், அரசியல்வாதிகளும் ஊகித்துவிடுவர். இருப்பினும் மரபுபடி பொறுப்புள்ள அமைச்சர் காபினெட் இரகசியங்களை வெளியிடலாகாது. தமது சொந்தக் கருத்து இன்னதென்று கூறி அம்மட்டில் நிறுத்திக்கொள்ளலாம்.

காபினெட் விவாதங்களின் குறிப்புகளை அமைச்சர்கள் எழுதிக் கொள்வதில்லை. பழைய நாளில் பிரதமர் காபினெட் முடிவுகளை மன்னருக்குக் கடிதம்மூலமாகத் தெரிவிப்பார். சிற்சில சமயங்களில் முடிவுகளின் குறிப்புகளைப் பிரதமர் எழுதிவைப்பதுண்டு. அமைச்சரவையில் பிரதமர் முடிவாக வாயால் கூறியதே அமைச்சர்களுக்குத் தகவலாக நிற்கும். கி.பி. 1916-க்குப் பின் காபினெட் செயலகம் ஏற்பட்டது. காபினெட் செயலர் ஒவ்வொரு கூட்டத்திற்கும் வருவார்; அவர் காபினெட் நடவடிக்கைகட்குக் குறிப்பெடுப்பார்; முடிவுகளை எழுதிப் பிரதமரின் கையெழுத்தைப் பெறுவார். காபினெட் கடிதங்கள் எல்லாம் 'இரகசியம்' எனக் குறிப்பிடப்பட்டுச் 'சீல்' வைத்த வெளி உறைகளிலோ இரகசியப் பெட்டிகளிலோதாம் அனுப்பப்படும். முன்னாளில் அமைச்சர்கட்குத் தரப்பட்ட காபினெட் குறிப்புகள்கூடத் திருப்பி வாங்கிக்கொள்ளப்படுவது வழக்கம். ஓர் அமைச்சர் தம் பதவியைவிட்டு விலகினால் அவர் தம்மிடம் உள்ள அரசு குறிப்பேடுகளைக் காபினெட் செயலகத்துக்கு அனுப்பிவிட வேண்டும் என்பது முறை. காபினெட் செயலரும், செயலகமும் பிரமருக்கு உதவிபுரியும் ஒரு சிப்பந்தி நிலையமே ஒழிய வேறு ஆலோசனை நிலையமோ, மற்ற அமைச்சர்களைக் கட்டுபடுத்தும் நிலையமோ அன்று. காபினெட் செயலகம் அமைச்சர்கள் பொறுப்பில் தலையிடுதல் கூடாது.

காபினெட் எடுத்த முடிவுகளைக் காபினெட் செயலாளர் காபினெட் அவை அமைச்சர்களுக்குமட்டும் இரகசியக் கடிதமாக அனுப்புவார். இது ஒன்றே தொடர்புடைய அமைச்சர்களுக்கு மேல்நடவடிக்கை எடுக்க நினைவுக்குறிப்பாக அமையும். அமைச்சர் தங்கள் செயலாளர்கட்கு அந்த முடிவுகளின்மீது நடவடிக்கை எடுக்க ஆணை பிறப்பிப்பார். காபினெட் முடிவுகள் எல்லாரையும் உட்படுத்தும். அவைகளை நிராகரிக்க முடியாது. காபினெட் அவைக்குத்தான் அவற்றை மாற்றவோ, நீக்கிவிடவோ அதிகாரம் உண்டு. செயற்படுத்தும் முறையில் அமைச்சர்கள் தத்தம் ஊக்கத்தின் அளவுப்படி நடவடிக்கை எடுப்பார்கள். காபினெட் செயற்படும் மர்மம் இதுகாறும் விளக்கப்பட்டது.

பாகம் II

அமெரிக்கா

1. அமைச்சரவை

அமெரிக்காவின் அரசியலில் ஆட்சித்துறைத் தலைவர் (Chief Executive) ஜனாதிபதியே (President)ஆவார். அவரால் நியமிக்கப்பட்டு, அவருடன் நெருங்கி, அவருக்குக் கீழ்ப்பட்டுப் பணிபுரியும் அதிகாரிகட்கு அமைச்சரவை (President's Cabinet) எனப் பெயர் வழக்கில் வந்துள்ளது. பிரிட்டிஷ் அமைச்சரவைக்கும் அமெரிக்க ஜனாதிபதி நிர்வாகக் குழுவுக்கும் பெயரளவில் (காபினெட் என்ற பெயர்) ஒற்றுமைப்பாடு இருப்பினும் இரண்டுக்கும் அடிப்படையான வேற்றுமைகள் பல உள. பிரிட்டனில் கி. பி. 1622ஆம் ஆண்டு மன்னரின் ஆலோசகர்கட்கு அமைச்சரவை (காபினெட்) எனப் பெயர் ஏற்பட்டது. அமெரிக்காவில் இந்தப் பெயர் வழக்குக்கு வந்தபோது, அது ஜனாதிபதியின் நிர்வாகக் குழுவுக்கே பொருந்தியது. அது பிரிட்டிஷ் அமைச்சர் குழுவைப் பார்த்து ஏற்படுத்திக்கொண்ட நகல் அன்று. எந்தத் தலைவருக்கும் ஒரு குழு இருப்பது இயல்பே. பழங்குடிமக்களின் தலைவர்கள்கூட, ஒவ்வொருவரும் ஒரு கூட்டாளிக் குழுவை வைத்திருப்பார்கள். அமைச்சரவையானது பிரிட்டனில் மன்னருக்கு ஆலோசனைக் குழுவாக முதலில் தொடங்கிப் பின் 18ஆம் நூற்றாண்டில் நிர்வாகப் பொறுப்புடையதாக மாறிற்று.

அமெரிக்காவில் அரசியல் சட்டம் (Constitution) வரையப்பட்டபோது அரசியல் தலைவருக்கு முழு அதிகாரமும் அளிக்கப்பட்டபோதிலும் பொறுப்பு ஒருவர் யோசனையிலேயே விடப்படவில்லை. கி.பி. 1787ஆம் ஆண்டில் அமெரிக்காவின் குடியேற்றப் பகுதிகள் யாவும் ஆளுநருக்கு (கவர்னருக்கு) உதவியாளர் சபைகளை ஏற்படுத்திக்கொண்டன. ஆனால், உதவியாளர்கட்கு நிர்வாகப் பதவிகள் இல்லை. உதவியாளர்கள் பல்வேறு வகைகளில் நியமிக்கப்பட்டார்கள். கி.பி. 1817-ல் நான்கு பேர் உதவியாளர்களாக நியமிக்கப்பட்டார்கள்

(வெளிநாட்டு விவகாரங்கள், நிதி, போர், கடல் வாணிகம்). பின்னுல்தான், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு துறை பிரித்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

அரசியல் திட்டத்தைப்பற்றி முடிவு செய்யக் கூட்டப்பட்ட பேரவை (Constitutional Convention) ஒரு பிரதம நிர்வாக அதிகாரி வேண்டுமென்றுதான் கூறிற்று. அந்த அடிப்படையில் அவ் வதிகாரிக்குட்பட்ட கீழ்அதிகாரிகள் ஒரு குழுவாக இணைந்து அமையவேண்டு மென்னும் முறை பின் உருவாயிற்று. ஆனுல், அந்தக் குழு ஒன்றிப்பையும் ஒருமைப்பாட்டையும் உடையதாய் இருக்க வேண்டுமேயன்றித் தலைவருக்குக் கட்டுப்பட்டதாய் இருக்கக்கூடாது என்று திண்ணமாக எண்ணப்பட்டது. தலைவருக்கே முடிவெடுக்கும் அதிகாரம் தரப்பட்டது. எனவே, தலைவருக்கும் அதிகாரக் குழுவுக்கும் அதிகாரப் பிரிவினை இருக்கவேண்டுமென்பது இரண்டாவது அம்சமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அரசியல் திட்டப் பேரவையில் இக் கருத்துகளை உருவாக்கிய உறுப்பினர் சார்லஸ் பிக்னி (Charles Pickney) என்பவர். அவர்தாம் முதன் முறையாகக் காபினெட் குழு (Cabinet Council) என்ற பெயரைப் பயன்படுத்தினுர். இந்தக் குழுவுக்கு அதிகாரிகளை நியமிக்கும் பொறுப்பு ஜனுதிபதிக்கே உரியது. ஆனுல், நியமனங்களைச் செனேட்டுக்குச் (Senate) சமர்ப்பிக்க வேண்டும். நடைமுறையில் ஜனுதிபதியின் நியமனங்களைச் செனேட் சபை நிராகரிப்பதில்லை. அதுபோல நியமிக்கப்பட்டவர்களை நீக்கும் உரிமையும் ஜனுதிபதிக்கு இருந்தது. சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தப் பதவிகளை வகிக்க உரிமை இல்லை.

காபினெட்டின் தனிப்பெருமை, சட்டத்தில் எழுதப்படாவிட்டாலும் நடைமுறை வழக்கில் வளர்ந்து உருவாயிற்று. கி.பி. 1791 ஆம் ஆண்டில் இந்தக் காபினெட் முதன்முறையாகக் கூடிற்று. ஜார்ஜ் வாஷிங்டன் (George Washington) காலத்தில் தலைமை வழக்கறிஞரும் (Attorney General) காபினெட் கூட்டங்களில் கலந்துகொண்டார். இந்தக் குழு, அதுதொட்டு ஏறக்குறைய ஒவ்வொரு நாளும் கூடிப் பணி ஆற்றியது. ஜனுதிபதி ஜேம்ஸ் மேடிசன் (James Madison) தாம் இந்தக் குழுவுக்குக் காபினெட் கவுன்சில் என்ற பெயரைக் கைவிட்டு வெறும் 'காபினெட்' என்ற பெயரை வழங்கலானுர். இந்தப் பெயர் அமெரிக்கக் காங்கிரஸ் விவாதங்களில் பயன்படுத்தப்பட்டது. ஜனுதிபதி தாமஸ்ஜெஃபர்சன்

(Thomas Jefferson) காலத்தில் 'காபினெட்' என்பது யாது என்பதை அனைவரும் உணர்ந்தார்கள்.

இந்தக் காபினெட் நிர்வாகிகள் முதலில் கட்சிச் சார்பில்லாமல் இருந்தாலும், மிகச் சிறிது காலத்திற்குள் ஜனாதிபதியின் கட்சியுடன் சார்புடையவர்களாக இருக்கவேண்டுமென்பது உறுதியாயிற்று. மிகப் பெரிய அதிகாரப் பொறுப்புடையவர்களாக ஜனாதிபதியின் கட்சிக்கு எதிராக உடையவர்களை நியமிப்பதில் பொருளில்லை. ஜனாதிபதி வாஷிங்டன் காலத்தில் இது சிறிது தளர்ந்தது. ஒவ்வொரு பிரச்சினையையும் வாஷிங்டன் ஓட்டுக்குவிட்டு முடிவுஎடுப்பார். காபினெட்டின் சிறப்பு இதனால் வளர்ந்தது. கி.பி. 1793 முதல் இன்றுவரை காபினெட் சட்டத்துக்குள் காணப்படாத ஒரு குழுவாகிச் சட்டத்தின் சல்லடைக் கண்ணுக்குள் அடங்கியதான ஒரு குழுவாய் வளர்ந்து செயற்படுகிறது. இது அந்தந்தக் கால நிலவரம், தொடர்புடைய பிரமுகர்களின் மனப்பாங்கு ஆகியவைகட்கு நெகிழ்ந்து கொடுத்து உயிர்வளர்ச்சியை அடைந்துவிட்டது. எனவே, அரசியல் சட்டத்திற்குள் காபினெட் என்பது சட்டத்திற்கும் பகுத்தறிவுக்கும் முரண்படாத, ஆனால் மரபாலும் வழக்காற்றாலும் வளர்க்கப்பட்ட ஓர் அமைப்பாக ஆகிவிட்டது. குறிப்பிட்டுக் கூறத் தகுந்த சட்டம் இல்லாமையால், இந்த அமைப்பு அவ்வப்போது ஏற்படும் தாக்குதல்களைத் தாங்கி ஊடாடி வலிமைபெற்றது. ஜனாதிபதி எந்த ஒரு சட்டத்தின்படி காபினெட்டை ஏற்படுத்த வேண்டியதுமில்லை ; அதன் வலிமையின்மீது சார்புடையவராக இருக்கவேண்டியதுமில்லை. இது காபினெட்டின் வலிமைக்குக் காரணமாகவும், அதே சமயத்தில் வலிமைக் குறைவுக்குக் காரணமாகவும் இருக்கிறதென்பதை மறுப்பதற்கில்லை.

அமெரிக்கக் காபினெட் இருதலைப்பட்ட குழு. அதில் சிலர் காபினெட் உறுப்பினர்களாகவே ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்கள். சிலர் சட்டத்தின்கீழ் வேறு அலுவல்களை வகிப்பவர்கள் என்ற காரணத்தாலே காபினெட்டில் இடம்பெறுவார்கள். இரண்டாம் வகையினர்கட்குக் காபினெட் தகுதி மட்டும்தான் உண்டு. எடுத்துக்காட்டாகத் தலைமை வழக்கறிஞர் (Attorney General) கி. பி. 1853 வரை தகுதிமட்டுமே பெற்றிருந்து, பின் முழு உறுப்பினராக ஆனார். இன்னார் இன்னாரே காபினெட்டில் இடம்பெற வேண்டுமென்ற சட்டக் கட்டுப்பாடு இல்லை. கி.பி. 1939ஆம் ஆண்டில் பொதுநலம், கல்வித்துறைத் தலைவருக்குக் காபினெட் குழுவில் இடமுண்டா என்பது விவாதிக்கப்பட்டது. வெவ்வேறு துறைத் தலைவர்கள் வெவ்வேறு

காலங்களில் காபினெட் குழுவிற்குள் வந்தார்கள் என்பது ஏறத்தாழ 150 ஆண்டுக்கால வரலாறு தெளிவுபடுத்துகிறது. கூட்டுப் பொறுப்பும், ஒவ்வொரு துறை உறுப்பினர்களைச் சரிவரத் தொடர்புபடுத்துவதற்கு அதிகாரமும் ஜனாதிபதியின் கடமையாகிவிட்டது. எனவே, ஜனாதிபதியே காபினெட் சபையின் வலிமைக்கும் நற்பணிக்கும் பொறுப்புடையவரானார். இதை நோக்குமிடத்து, பிரிட்டிஷ் பிரதமருக்கும் அமெரிக்க ஜனாதிபதிக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை நன்கு உணரலாம்.

வெவ்வேறு ஜனாதிபதிகள் வெவ்வேறு கருத்தும் இயல்பும் உடையவர்களாக இருப்பது இயற்கை. ஒரு ஜனாதிபதி காபினெட் உறுப்பினர்களின் விருப்பங்கட்குக் கீழ்ப்படிய வேண்டுமென்ற தேவை இல்லை. நெடுஞ்சாலைப் போலீஸ் அதிகாரி கைகாட்டியபடி வண்டிகள் செல்லவேண்டியதைப்போல் ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.

ஆபிரகாம் லிங்கன் (Abraham Lincon) ஒரு சமயம் ஓர் அலுவலுக்கு ஆறு உறுப்பினர்கள் இணக்கம்தர மறுத்தும், ஒருவர் இணக்கம் தந்தபடியால் அதை நிறைவேற்றினர் எனக் கூறப்படும். உறுப்பினர்களின் ஆலோசனையை ஜனாதிபதி (President) மறுக்கலாம். ஆனால், ஒரு வல்லதிகாரியைப்போல் நினைத்தபடியெல்லாம் செய்ய முடியாது. அவரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் திறமையோ, திறமையின்மையோ அவரைப் பாதிக்கும். ஒருவர் திறமை மற்றொருவருடைய திறமைஇன்மையைச் சரிக்கட்டாது; இன்னல்களுக்கு இடம் தரும். ஜனாதிபதி ஹார்டிங்கு (Warren Harding), ஹூவர் (Hoover) காலங்களில் இவ்வாறான இக்கட்டுகள் நேர்ந்தன. எனவே, எவ்வாறுயினும் ஜனாதிபதியின் திறமை தேவைப்படும்; இல்லையேல் அமெரிக்கக் காபினெட் முறை பயனற்றுவிடும். இக் காரணம்பற்றியே ஜனாதிபதியின் முதன்மைத் தன்மை சிறப்புடையதாகக் கருதப்படுகிறது.

ஜனாதிபதிக்கும் காபினெட் உறுப்பினர்கட்கும் இருக்க வேண்டிய தொடர்பு இத்தகையது எனக் குறிப்பிட்டுச் சொல்ல இயலாது. இக் காரணம்பற்றியே ஒவ்வொரு ஜனாதிபதியும் தத்தம் போக்குப்படி அவைகளை அமைத்துக் கொண்டார்கள்: எடுத்துக்காட்டாகத் தியோடர் ரூஸ்வெல்ட் (Theodore Roosevelt) 'ஜனாதிபதி காபினெட்டை இயக்குவதே முறையாகுமேயன்றி காபினெட்டு ஜனாதிபதியை இயக்குவதென்பது முறையன்று' என்ற கருத்தைக் கொண்டார். உட்ரோ வில்சனும் (Woodrow

Wilson) ஏறக்குறைய இதே கருத்தைக் கொண்டார். 'ஜனுதிபதிக்குப் பொறுப்பும் உள்ளது. மக்களின் மன உறுதியை அறியும் தகைமையும் உள்ளது. எனவே, ஜனுதிபதிக்குக் காபினெட்டு ஓர் உறுதுணையே யன்றி வேறு சிறப்பொன்றும் அதற்கு இல்லை' யென அவர் கருதினுர். வாரன் ஹார்டிங்கு (Warren Harding) அதைக் கடுமையாக மறுத்தார். 'ஜனுதிபதி எவராயினும் வந்துவிடலாம். ஆனுல், காபினெட் உறுப்பினர்கள் அறிவுக் கூர்மையுடையவர்களாக இருக்க வேண்டு'மென்று அவர் வற்புறுத்தினுர். எனவே, இருவேறு கொள்கைகள் இவ் விஷயத்தைப்பற்றி இருந்துகொண்டே இருந்தன. ஜனுதிபதி ஐசனேவரும் (Eisenover) ஹார்டிங்கின் கொள்கையையே பின்பற்றியவர்; ஆனுல், காபினெட் குழுவை மொத்தமாக மதிக்க வேண்டும் என்ற கருத்துக் கொண்டவர்.

ஆராய்ந்து பார்க்குமிடத்து, ஜனுதிபதி காபினெட்டின் ஆலோசனையைக் கேட்கிருர் ; ஆனுல் அவர் அதன்படி நடக்க வேண்டியவரா என்பதைச் சொல்வதற்கில்லை. ஒவ்வொரு ஜனுதிபதியும் தத்தம் சொந்த விருப்பத்துக்கு ஏற்றபடி காபினெட்டின் வலிமையைப் பொறுத்து நடந்து வந்தார். எடுத்துக் காட்டாக, ஜனுதிபதி ட்ரூமன் (Truman) காபினெட்டின் கருத்தை அக்கறையாகக் கேட்பார், ஹூவர் (Hoover) எவராவது தம் கருத்துக்கு வேறுபட்டால், வேறுபட்ட அவர் கருத்துக்கு அக்கறையே காட்டமாட்டார். வில்சன் (Woodrow Wilson) முதல் உலகப்போரின்போது நிபுணர்களின் ஆலோசனையைக் கேட்டார். வெளிநாட்டுக் கொள்கைகளில் தம் ஆலோசகர்கள் தம் கருத்துக்கு முரண்பாடாகக் கூறியபோது தாமே தனித்து நின்று செயற்பட்டார். வில்சன் காபினெட் உறுப்பினர்களின் யோசனையைக் கேட்பதில் பின்வாங்குவதில்லை. ஆனுல், தாமே சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தபின் அவரை மாற்றுவது அரிது. ஃபிராங்க்ளின் ரூஸ்வெல்ட் (Franklin Delono Roosevelt) நிதானமாகத்தான் முடிவெடுக்க முயலுவார். திடுமென ஒரு தாற்காலிகமான முடிவைக்கூறி அதற்கு மறுமாற்றங்கள் என்ன என்பதைக் கவனிப்பார். ஜனுதிபதி கூலிட்ஜ் (Coolidge) முடிவெடுக்கும் முயற்சியைத் தாமே தொடங்குவதில்லை. பத்துப் பிரச்சினைகள் இருந்தாலும் நேரே தாக்கும் ஒரு பிரச்சினையைத்தான் தீர்க்க அவர் முயல்வார். மற்றவைகளை, வந்தபோது பார்த்துக் கொள்ளலாம் என அசட்டையாக இருந்துவிடுவார். இதனுல் காபினெட் உறுப்பினர்கட்கு முதல் முயற்சி எடுக்க இடமில்லாமல் போய்விடும். ஐசனேவர் பிரச்சினைகளை விவாதத்திற்கு விட்டுக் காதுகொடுத்துக் கேட்பார். ட்ரூமன் முடி

வெடுப்பதன் பொறுப்புத் தமதாயிருந்தாலும் காபினெட் உறுப்பினர்கள் தம் கருத்துகளைக் கூறுவதற்கு வாய்ப்புத் தருவார். ஆனால், தமக்குள்ள கருத்துவேறுபாடுகளைப் பொதுவில் தெரிவிக்கலாகாது எனும் ஒழுக்கத்தை அவர் வற்புறுத்தினர்.

இதுகாறும் கூறியவற்றால். அமெரிக்க ஜனாதிபதிக்கும் காபினெட் உறுப்பினர்கட்கும் உள்ள தொடர்பு விதிவகுத்துக் கூற முடியாதது என்பதும், அது அமெரிக்க அரசியல் அமைப்பைப் பொறுத்தது என்பதும், அந்தந்த ஜனாதிபதியின் மனநிலையையும் பொறுத்தது என்பதும், ஆனால், ஜனாதிபதிதாம் முடிவெடுக்கும் பொறுப்பு உடையவர் என்பதும் தெளிவாகும். காபினெட் உறுப்பினர்கட்குத் தம்மைப் பொறுத்தவரை 'கூட்டுப் பொறுப்பு' என்பது ஒன்றும் இல்லை. ஆனால், தம் கருத்தைத் தெரிவிக்கப் போதுமான வாய்ப்பும் உரிமையும் அவர்களுக்கு உண்டு. ஜனாதிபதிக்குத் தனிப்பட்ட உறுப்பினர்களை நீக்குவதற்கு அதிகாரம் உண்டு. இந்த முறையில் பிரிட்டிஷ் கூட்டுப் பொறுப்புக் கொள்கையினின்றும் அமெரிக்கமுறை வேறுபட்டதாக இருக்கிறது.

இனி ஜனாதிபதி காபினெட்டுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் முறையைக் கவனிப்போம். ஜனாதிபதியின் சொந்த முடிவுப்படியே உறுப்பினர் நியமனம் செய்யப்டுவர் என்பதில் ஐயமில்லை. ஆனால், நியமனத்திற்குரியவர்களைத் தேர்ந்தெடுப்பதில் விளக்கமான திட்டத்தைச் சொல்ல இயலாது. அந்த நேரத்தில் தம்மனத்தில் தோன்றியவர்களை ஜனாதிபதி நியமிக்கிறார் என்று சொல்வதும் தகாது. காரணம் இன்னதென்று குறித்துக்காட்ட இயலாதாயினும், பல்வேறு காரணங்களை மனத்தில் கொண்டுதான் நியமனம் நடக்கும். ஆனால், நியமனங்கள் ஆனபின், இவை நலமிக்கவை இவை நலமற்றவை என்பது தெளிவாகக் காணப்படும். நிர்வாகத்தில் வேறு நிர்வாகிகளை நியமனம் செய்வதில் வேண்டுமானால் ஜனாதிபதி பொறுப்புத் தேவைஇல்லாமல் இருக்கலாம். அரசியல் சட்டத்தையும் பொது நலத்தையும் தாங்கிக் காப்பாற்றுவது ஜனாதிபதியின் கடமையாதலால், அவருக்குகந்த நபர்களைத் தம் விருப்பப்படி தேர்ந்தெடுக்க உரிமை தரவேண்டுமென்பதுதான் அமெரிக்கப் பொதுமக்கள் கருத்து.

காபினெட் ஜனாதிபதியையும் அவரது கட்சியையும் தொடர்புபடுத்தி நிர்வாகத்தில் ஓர் ஒற்றுமையையும் நெகிழ்ச்சியையும் தருவதுதான் சிறப்பு எனக் கருதப்பட்டது. ஆனால்,

பின்னுளில் காபினெட் அரசியல் சிறப்பைவிட நிர்வாகச் சிறப்புத்தான் உண்மை என்பது உணரப்பட்டது. அரசியல் இனப் பொருத்தம் ஒருபுறம் இருக்க மன ஒற்றுமை அல்லது கருத்தைப் பின்பற்றி ஒழுகும் தன்மையுள்ளவர்களே காபினெட் தோழர்களாக இருக்கவேண்டுமென்பது இன்றியமையாதது. ஜனுதிபதி ஹூவர்கூட ஒரு நபரின் தகுதியையே சிறப்பாகக் கருதி நியமனங்களைச் செய்தார். ஆனுல், ஜனுதிபதி ஹார்டிங்கு, கட்சியைச் சேர்ந்தவர்களை நியமிப்பதே நல்லதென்றும், வெறும் நிர்வாகக் குழுவைச் சேர்ந்தவர்கள் (Civil service) அவ்வளவு பயன்படமாட்டார்கள் என்றும் கருதினுர். ஜனுதிபதி காபினெட் தமது 'ஆட்சித்துறைக் குடும்பம்' (Official family) என்னும் கருத்துடையவர். எனவே, தேற்றமான தனிக்காரணங்கள் இல்லாமல் பொதுவாக ஒத்துழைப்பு நலனை நோக்கி நியமனம் செய்தார். நியமிப்பவரின் உள்நோக்குகள் இவ்வாறெல்லாம் இருக்க, நியமிக்கப்படுபவர்களின் மனப்பான்மை எவ்வாறு இருக்கவேண்டுமென்றும் சிந்திக்க வேண்டும். காபினெட் பதவி பெறுவதன் பயனை அவர்கள் கருதுவது இயல்பே.

ஒரு சமயம் ஹூவரால் நான்கு நியமனங்களில் நியமிக்கப்பட்டவர்கள் அப் பதவிகளை வகிக்கத் தயங்கினுர்கள். காபினெட் பதவியின் மேன்மையை எல்லோரும் உணர்ந்தாலும் அப் பதவியில் அதிகமாக ஆற்றக்கூடியது ஒன்றும் இல்லை என்று எண்ணுபவர்களும் இருக்கிறுர்கள். சில ஜனுதிபதிகள் சட்டத் தொழிலில் உள்ளவர்களையே பெரும்பான்மையாக விரும்புவார்கள். ஐசனேவர் வணிகத் துறையிலுள்ளவர்களையே பெரிதும் விரும்பினுர். அத் துறையிலுள்ளவர்கட்கு நிர்வாகத் திறமை இல்லை என்று சொல்வதற்கு இடம் இல்லை. எனவே, பொதுவாகக் காபினெட் நியமனத்திற்குரிய முக்கியத் தகுதி (Norms) தேர்ந்தெடுக்கப்பட்டவர் குறிப்பிட்ட வேலைகளை நன்ருக நிறைவேற்றி ஜனுதிபதிக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் தரவேண்டும் என்பதே ஆகும். மேலும், அனைவரும் சேர்ந்து ஒரு குழுவாகத் தொழில்புரிய வேண்டும் என்பதும் ஆகும்.

ஐசனேவர் தமது 1952ஆம் ஆண்டுத் தேர்தல் அறிக்கையில் 'வாஷிங்டனில் நிர்வாகத்திற்கு என்னுல் அழைக்கப்படுகிறவர்கள் தகுதியுள்ளவர்களாகவும் (merit), ஆர்வமுள்ளவர்களாகவும் (dedication), நம்பிக்கையுள்ளவர்களாகவும் (loyalty) இருப்பார்கள் என்று உறுதிமொழி தருவேன்" என்ருர்.

எந்த அளவுகோல் வைத்துக்கொண்டாலும், எல்லா நியமனங்கட்கும் பொருத்தமானவர்கள் கிடைப்பதென்பது அரிது தான். பொருத்தம் மட்டுமன்றி, அவரவர்களுடைய இருப்பிடங்கள், அவர்களின் தனித்திறமை, அவர்களின் குடும்பநிலை, பொருளாதார நிலை முதலியவற்றையும் கவனிக்கவேண்டும். எல்லாவற்றையும் சிந்தித்துத்தான் காபினெட் குழுவின் குணுதிசயங்களைச் சரிசமப் (balance) படுத்தவேண்டும். இல்லையேல், குழு சேர்ந்து பணி செய்தாலும், இணங்கிப் பணி செய்ய இயலாமல் போய்விடலாம். எனவே, காபினெட் நியமன முயற்சியில் அரசியல், ஆட்சித்துறை என்ற இரண்டையும் கவனித்தல் வேண்டும் என்பதே அமெரிக்க அனுபவம். வெறும் கொள்கைகளைக் கொண்டு தேடப்புகின் கானல்நீரை மொள்ள எண்ணுவது போல்தான் ஆகிவிடும்.

இந்த வில்லங்கம் பிரிட்டிஷ் அமைச்சரவையினைத் தேர்ந்தெடுப்பதில் அவ்வளவு ஏற்படுவதில்லை. காரணம் எல்லோருமே கட்சி உறுப்பினர்களாகவும் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவும் இருக்கவேண்டுமென்றிருப்பதால் ஆய்வு செய்யவேண்டிய வேலை அதிகமில்லை. அக் காரணம் பற்றியே எல்லோரும் திறமைவாய்ந்தவர்களாக (நிபுணர்களாக) இருப்பார்கள் என்ற வாய்ப்பும் எப்போதும் இராது. நியமித்த பின் பாராளுமன்றத்தில் நல்ல கருத்து அவர்கள்பால் ஏற்படவேண்டும். ஆனல், அமெரிக்க ஜனுதிபதி தனிமையாக இருந்தே நியமனத்துக்கும், நல்ல ஆட்சிமுறைக்கும் பொறுப்பின் பாரத்தைத் தாங்கவேண்டும்.

காபினெட் சேர்ந்து தொழில்புரிய வேண்டுமென்ருல் அடிக்கடி கூடினுல்தான் ஒருமை உணர்ச்சி உண்டாகும். ஜனுதிபதிக்கு ஆலோசனைக் குழுவே காபினெட் என்பதை மறக்கலாகாது. அதுவுமன்றி, ஜனுதிபதியின் கருத்துகளுக்கு அது உரைகல் போன்றது ஆகும். கருத்துகளின்மேல் முடிவுகள் எடுத்தபின் ஆட்சித்துறை அணிவகுப்பினர் மூலம் அவைகளைத் தொழிற்படுத்தி ஆட்சிபுரிவதும் ஒவ்வொரு காபினெட் உறுப்பினரின் பொறுப்பாகும். இந்த நாளில் பல்வேறு துறைகளும் பல்லாயிரம் ஆட்சித்துறை ஊழியர்களும் இருப்பதால் இது ஒரு பெரிய வேலையாகும். நடவடிக்கைகளின் தகவலை ஒவ்வொரு காபினெட் உறுப்பினரும் ஜனுதிபதிக்கு அவ்வப்போது சமர்ப்பிக்கவேண்டும். எனவே, குறிப்பிட்ட கால அளவுப்படி காபினெட் கூடித் தொழில்புரிய வேண்டும்.

அமெரிக்க ஜனாதிபதி ஆட்சித்துறைத் தலைவரும் ஆனபடியால் இது பிரிட்டனை விட இன்றியமையாததாகும்.

ஜனாதிபதி வில்சன் (Wilson) காலத்திலிருந்து ஒவ்வொரு செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும் காபினெட் கூடிற்று. வெவ்வேறு ஜனாதிபதிகள் சிறுசிறு மாறுதல்கள் செய்தாலும், குறிப்பிட்ட இடைவெளியில் காபினெட் கூடிற்று. காபினெட் சிறிது நேரம் கூடினாலும், அதன் தொடர்ச்சியாக அந்தக் காபினெட் உறுப்பினருடன் தனியாக ஆலோசனைகளும் விவாதங்களும் நடத்துவது உண்டு. காபினெட் கூட்டங்களில் ஜனாதிபதியுடன் உதவி ஜனாதிபதியும் சேர்ந்து உட்காருவார். சிற்சில சமயங்களில் ஜனாதிபதி வெளிநாடு சென்றிருந்தால் உதவி ஜனாதிபதி தலைமை வகிப்பதுண்டு. காபினெட் கூட்டங்களில் வாக்கெடுப்பதில்லை. காபினெட் விவாதங்களுக்குக் குறிப்பெடுக்கப்பட்டாலும், முடிவுகளைத் தீர்மானங்களாகப் பதிவு செய்தல் வழக்கமில்லை.

ஜனாதிபதி ஐசனோவர் (Eisenover) காலத்தில்தான் காபினெட்டுக்கு ஒரு செயலாளர் நியமிக்கப்பட்டார். அவர் கடமை காபினெட் உறுப்பினர்களுக்கு அனுப்பவேண்டிய காகிதங்களை அனுப்புதல், காபினெட் குழுவின் விவாதங்கட்குக் குறிப்பு எடுத்தல் முதலியனவாகும், காபினெட் உறுப்பினர்கள் விவாதத்திற்குக் கொண்டுவர விரும்பும் எல்லா விஷயங்களையும் விடாது நிகழ்ச்சிநிரலில் சேர்ப்பதும் அவரது கடமையாகும். ஒவ்வொரு பொருள்பற்றியும் சிறு குறிப்பை அவர் ஆயத்தம் செய்துவைப்பதும் வழக்கம். இந்த ஏற்பாடுகளினால் காபினெட் ஒரு நிறுவனமாகவே ஆகிவிட்டது. காபினெட் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் கூட்டத்தில் கலந்து கொள்ள உரிமை உண்டு. வேண்டிய சமயங்களில் ஆட்சித்துறைத் தலைமை அதிகாரிகளைக் கூட்டத்திற்கு அழைப்பதும் உண்டு.

கி. பி. 1954 ஆம் ஆண்டில்தான் காபினெட் செயலகம் என்பது உருவாயிற்று. ஆட்சித்துறையின் பொதுக் கொள்கைகளின் விவாதமும் முறைப்படி நடைபெறுவதாயிற்று. அதற்கு முன்பு அந்தந்த நேரத்தின் முக்கிய நிகழ்ச்சிகள் எடுத்துப் பேசப்பட்டு வந்தன. எடுத்துக்காட்டாகக் கொரியாப்போரைப் பற்றி வேறு கூட்டங்களில் திட்டமிடப்படாமலும் முழுமையில்லாமலும் விவாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. பின், நிகழ்ச்சிநிரல் முறை ஏற்பட்டபோதிலும் தொடர்புடைய எந்த முக்கியப் பொருள் பற்றியும் உறுப்பினர்கள் தகவல்

தருவதுமன்றி விவாதிக்கவும் வாய்ப்பு இருந்தமையால், காபினெட் கூடிச் சிந்திக்கிறது என்ற உணர்ச்சி பெருகிற்று. எடுத்துக்காட்டாகக் கி. பி. 1951-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவு (Recession) பற்றி அடிக்கடி விவாதிக்கப்பட்டது. பின்னால், ஜனாதிபதி ரூஸ்வெல்ட் காலத்தில் அவர் காபினெட் கூட்டங்களை முறைப்படி நடத்தினார்.

காபினெட் விவாதங்களில் கருத்துவேற்றுமைகள் வருவது இயல்பே. ஆனால், கருத்துகளை விட்டுக்கொடுக்க இசையாத உறுப்பினர் அதைப் பொருட்படுத்தாது வேறு விஷயங்களில் இணங்கித் தொழில்புரியலாம். இன்றி, அதைப் பெரிதாகப் பாராட்டினால், பதவியைவிட்டு விலகுவதன்றி வேறு வழி இல்லை.

ஜனாதிபதி கூலிட்ஜ் (Coolidge) உறுப்பினர்களிடையே வேற்றுமை வரக்கூடாதென்று மிகத் திறமையுடன் நடந்து கொண்டார். ஜனாதிபதி ட்ரூமனும் (Trueman), ரூஸ்வெல்ட்டும் (Rossevelt) விவாதத்தை விரும்பினார்கள். ஆனால், உராய்தலையும் பிளவுகளையும் தவிர்த்தார்கள். ட்ரூமன் காபினெட் தோழர்களுக்குப் பகல் உணவு (lunch) கொடுத்தபின்தான் காபினெட் கூட்டங்களைத் தொடங்குவாராம்.

ஜனாதிபதிக்கு யோசனை கூறுவதுதான் காபினெட் குழுவினர் ஒவ்வொருவருடையவும் கடமையாதலால், அவர்களுக்குள்ளே கருத்துவேற்றுமையால் கட்சிப் பிரதிகட்சி உருவாவதற்கு இடம் இல்லை. ஜனாதிபதியைக் கவிழ்க்க வேண்டுமென்ற எண்ணம் பலிக்காது. பிரிட்டன் போன்ற நாடுகளில் காபினெட்டுக்குள்ளே கருத்துவேற்றுமை ஏற்பட்டால் அது நெருக்கடி நிலைமையை ஏற்படுத்திவிடலாம். அமெரிக்க ஜனாதிபதி நேரடித் தேர்தலில் பதவிக்கு வருவதால் காபினெட் பிளவால் பாதிக்கப்படமாட்டார். முடிவெடுக்கும் பொறுப்பு ஜனாதிபதியினுடையதே ஆகும்.

ஜனாதிபதி ஹார்டிங்கு (Harding) பல வேளைகளில் இத்தகைய இக்கட்டுக்கு ஆளானார். இரயில் வேலைநிறுத்தம் ஏற்பட்டபோது தலைமை வழக்கறிஞர் (Attorney General) பேச்சைக் கேட்டதால், மற்ற உறுப்பினர்கள் அவரைக் கடுமையாக எதிர்த்தனர். ஜனாதிபதி கூலிட்ஜும் ஒருதலைச் சார்பாகச் சிலருடைய கருத்துகளையே ஏற்றுக்கொள்வார். காபினெட் ஜனாதிபதியின் ‘ஆட்சித்துறைக் குடும்பம்’ என்றாலும், இரத்தபாசமுள்ள

குடும்பத்தினர்களிடையே பற்று வேற்றுமை உள்ளதுபோல, ஆட்சித்துறைக் குடும்பத்திலும் வேற்றுமைகள் இருக்கத்தான் செய்யும். காபினெட்டுக்குள்ளும் ஒருசிலர் 'உள் காபினெட்' டாகக் (Inner Cabinet) கருதப்பட்டாலும் கருதப்படுவார்கள். இதைத்தவிர, காபினெட்டுக்குப் புறம்பான அதிகாரிகளும் ஜனாதிபதிக்கு அந்தரங்க ஆலோசகர்களாக அமைந்துவிடலாம். இதைச் 'சமையலறைக் காபினெட்' (Kitchen Cabinet) எனக்கூறு வார்கள். வெள்ளை மாளிகையின் (White House) சமையலறைக்கு அருகில் இவர்கள் கூடியதால் சமையலறைக் காபினெட் என்னும் பெயர் ஏற்பட்டது. முன்னதை உள் காபினெட் (Inner Cabinet) எனக் கூறுவார்கள்.

ஜனாதிபதி ஆண்ட்ரூ ஜாக்சன் (Andrew Jacksan) காபி னெட்டை அசட்டை செய்து, சமையலறைக் காபினெட்டைக் கேட்டு எல்லா அலுவல்களையும் செய்வார் எனக் கூறுவார்கள். வில்சனும், ரூஸ்வெல்ட்டும்கூட ஓரளவு காபினெட்டுக்குப் புறம் பாக ஆலோசனை எடுப்பது வழக்கம். காபினெட்டின் குறுகிய வரம்பு அமெரிக்க ஜனாதிபதியின் ஆதிக்கத்தின் அளவை நன்கு எடுத்துக்காட்டும். மேற்கூறிய இருவேறு சார்புமின்றி ஜனாதிபதி தம் சொந்த முடிவுகளிலே நம்பிக்கை கொள்வது காபினெட் டிற்கு மனக்குறை இல்லாமலிருக்குமென அனுபவம் காட்டும்.

வில்சன், காபினெட் உறுப்பினர்களை நிர்வாகத் துறைத் தலைமை அலுவலர்களைப்போல் மதித்துவந்தார். வெளிநாட்டு விவகாரங்களில் தாமே எல்லாப் பொறுப்பையும் முதலிலிருந்தே ஏற்றுக்கொண்டார். முதல் உலகப்போரில் சில விஷயங்களில் இவ்வாறே செய்தார். இதனால் அரசியல்துறைச் செயலர் (Secretary of State) தம் பதவியைவிட்டு விலகநேர்ந்தது. போர்க்காலத்தில் ஆற்றல்வாய்ந்த தலைவர்கள் தம் விருப்பப்படி நடந்துகொள்வது இயல்பே. வில்சன் இயல்பாகவே காபினெட் உறுப்பினர்களின் மறுமாற்ற உணர்ச்சிகளை ஆழ்ந்து பார்க்க எண்ணினரே ஒழிய, அவர்கள் கருத்தை அறிந்து அதனுடன் ஒத்து நடக்கவேண்டுமென்ற கருத்தைக் கொள்ளவில்லை. அவ்வாறிருந்தும் ஜனாதிபதி என்ன செய்ய எண்ணுகிறார் என்பதைக் காபினெட் உறுப்பினர்கள் அறிந்துகொள்ள வாய்ப்பு இருந்தது. எனவே, இருதரத்தாரும் காபினெட் கூட்டங்கள் வேண்டாவென்று முடிவுகட்டிவிடவில்லை.

ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டும் ஏறக்குறைய இதே மனப்பான்மை உடையவராகக் காணப்பட்டார். உயர்நீதி மன்ற (Supreme

Court) நீதிபதிகள் நியமன மசோதா திடுமென ஜனாதிபதியால் கொண்டுவரப்பட்டது. இது தலைமை வழக்கறிஞர் (Attorney General) ஒருவருக்கே முன்கூட்டித் தெரிந்திருக்கலாம். பொதுவாக, காபினெட் கூட்டங்களில் கருத்துப் பரிமாற்றம் தெளிவாக உருவாகாவிட்டாலும், பொது அலுவல்களைப்பற்றி ஒவ்வொருவருடைய உணர்வுகளும் மனப்போக்கும் நன்கு புலனாகக் கருவியாய் அமைகிறது.

அமெரிக்க அரசியல் தத்துவத்தில் பன்மைக்குத் (Pluralism) தாராளமான இடமுண்டென்பது விளங்கும். காபினெட் உறுப்பினர் தத்தம் துறையோடு ஒருமைப்பாட்டை வைத்துக்கொள்வார்கள். காபினெட்டில் எல்லோரிடையும் ஒரே ஒற்றுமை நிலவுதல் வேண்டும் என்பது தேவையில்லை. இதனால் உட் பிரிவுகள் ஏற்படுவதில்லை. இதுதான் 'பன்மைத்' தத்துவத்தின் சிறப்பு எனலாம். இந்தக் கூட்டுப்பொறுப்பு (Collective responsibility) என்ற நியதி அமெரிக்கக் காபினெட் அமைப்பில் தேவையில்லை. பிரிட்டிஷ் காபினெட்டுக்கும் அமெரிக்கக் காபினெட்டுக்கும் இது முக்கியமான வேற்றுமை. ஜனாதிபதி ஹார்டிங்கு காலத்தில் விபரீதமான இரண்டொரு நிகழ்ச்சிகள் நடந்தபோதிலும் காபினெட் அதிர்ச்சி அடையவில்லை. தொடர்பில்லாத காபினெட் உறுப்பினர்கள் தங்களுக்கு ஒன்றும் தெரியாததால் ஒருவிதமான எதிர்ப்பும் இன்றி வாளா இருந்தார்கள். வேறு ஐரோப்பியக் காபினெட் சபைகள் அந்த நேரத்திலேயே பதவியைவிட்டு விலகியிருக்கும். இத் தன்மையைக் கண்டே 'அமெரிக்கக் காபினெட் ஒன்றாய் நிற்கவும் தேவையில்லை; ஒன்றாய் வீழவும் தேவையில்லை' என்று கூறுவார்கள். ஒவ்வோர் உறுப்பினரும் அவரவர்கள் கடமைகளைக் கவனிப்பதோடு சரி. மற்றவை ஜனாதிபதியின் பொறுப்பாகும். ஒவ்வொருவரும் தத்தம் துறை அலுவல்களைக் கவனிக்கவில்லையெனின், அரசாங்க அலுவலின் முழுமை நோக்கம் குறைவுபடும். ஒவ்வோர் உறுப்பினரும் தனித்தனியே ஜனாதிபதியிடம் பேசிவிடுவதற்கும் காபினெட் கூட்டத்தில் பேசுவதற்கும் வேறுபாடும் பொருளும் இல்லாமற் போகிறது.

நிதி, வரி விஷயங்களில் நிதி உறுப்பினர் தவிர மற்றவர்கள் தலையிடுவது தவிர்க்கப்படும். இத்தகைய காரணங்களால் உறுப்பினர்கள் காபினெட் கூட்டம் முடிந்தபின் ஜனாதிபதியைத் தனித்துப் பேட்டி கண்டு, தங்கள் கருத்துகளையும் பிரச்சினைகளையும் கூறுவது வழக்கமாயிற்று. ஜனாதிபதி காபினெட் குழுவைத் தம் நிழலுருவமாகச் செய்வதற்கு வாய்ப்பு இல்லை.

முதலாவது, சாதனைகள் இன்னவென்பன உணர்த்தப்படுவ தில்லை. இரண்டாவது, உறுப்பினர்களுக்குள்ளேயே கருத்துப் பரிமாறுதல் இல்லை. மூன்றாவது, முரண்பாடுகளைத் தீர்த்து வைக்க வேண்டுமென்ற தேவைஇல்லை. இவை மூன்றும் பிரிட்டிஷ் மரபில் பிரதம அமைச்சரின் பொறுப்பாக உள்ளன. அமெரிக்க ஜனாதிபதிக்கு அவ்வளவு பொறுப்பு இல்லை. ஆனால், அண்மையில் ஜனாதிபதியின் துணைப் பணியாளர்கள் (Piesidential Assistants) இணைப்பு வேலையை மேற்கொண்டு காபினெட் நோக்கங்களை நிறைவேற்றினார்கள். இந்த வகையில் பணி யாற்றியவர்கள் ஹார்ரி ஹாப்கின்ஸ் (Harry Hopkins), ஜேம்ஸ் பர்னஸ் (James Bernays), ஆவரெல் ஹார்ரிமென் (Averell Harraiman), ஷேர்மன் ஆடம்ஸ் (Sherman Adams) ஆவர். ஆனால், இத்தகையவர்களின் செல்வாக்கைக் கண்டு தனிப்பட்ட காபினெட் உறுப்பினர்கள் பொறுமை கொண்டதும் வெறுத் ததும் உண்டு. அமெரிக்க ஜனாதிபதிக்கும் அவர் காபினெட் டுக்கும் உள்ள தொடர்பு ஒரு கட்டுக்கோப்பால் வரையறுக்கப் படமுடியாதவொன்றாகும்.

2. அமெரிக்கக் காபினெட்டும் கட்சிகளும்

அமெரிக்க ஜனாதிபதி நான்கு முகமாக இயங்குவது அரசியல் திட்ட அமைப்பின் கட்டாயமும் அரசியல் கட்சிக் காரணமான கடமைப்பாடும் ஆகும். அவையாவன : (1) நாட்டின் முதல் பிரதிநிதி, (2) தம் கட்சியின் தலைமையிடம், (3) சட்டமன்றத்தின் தலைமை, (4) நிர்வாகத்தின் முழுப்பொறுப்பு. இந்த நான்கு கடமைகளையும் நிறைவேற்ற மிகுந்த திறமையும் அறிவுக் கூர்மையும் வேண்டும். இவைகட்குக் கட்சியின் வலிமை மட்டுமன்றிக் காபினெட்டின் உதவியும் வேண்டும். காபினெட் உறுப்பினர்களுக்கு நிர்வாகப் பொறுப்புடன் கட்சிச் சார்பில் பல கடமைகள் உண்டு. தத்தம் துறையைப் பொறுத்த மட்டில் ஒவ்வோர் உறுப்பினரும் முழு நிர்வாக அதிகாரம் பெற்றவராவார். ஜனாதிபதியும் காபினெட்டு உறுப்பினர்களும் கூடிச் சட்டமன்றக் குழுவிற்குப் பதில்சொல்லக் கடமைப்பட்டவர்கள். எனவே, ஒவ்வோர் உறுப்பினரும் காபினெட்டில் ஆலோசனை கூறுவதுமட்டுமன்றிச் சட்டமன்றத்திற்கும் பொது மக்களுக்கும் மனநிறைவு உண்டாக்கவேண்டும். ஒவ்வோர் ஆலோசகரும் நான்கு பாத்திரங்களாக நடிக்கவேண்டும். அவை : (1) தமக்கு நல்ல பெயர், (2) கட்சித் தொண்டு, (3) காங்கிரஸ் மன்றத்திற்கு மனநிறைவு அளித்தல், (4) தமக்குக் கொடுக்கப்பட்ட துறையில் நல்ல நிர்வாகம் நடத்துதல்.

ஜனாதிபதி நாட்டின் முதல் பிரதிநிதி என்ற முறையில் எல்லாவற்றையும்விடச் சிறந்த முறையில் நடந்துகொள்ள வேண்டும். தேர்தலிலும், சட்டமன்றத்திலும் பெரும்பான்மை பெற்றதைவிடப் பெரிய பொறுப்பு, ஜனாதிபதி நாட்டுமக்களின் மனத்தைப் பிரதிபலிக்க வேண்டும் என்பதே. இதில் கட்சி மனப்பான்மைக்கு இடம் இல்லை. தாம் சொல்வதை நாட்டு

மக்கள் முழுவதும்கேட்டுச் சிந்திக்கும் ஆற்றல் படைத்திருத்தல் வேண்டும். நாட்டின் குறிக்கோள்களை உறுதிப்படுத்திக் கொடுக்கும் பொறுப்பும் அவைகளை மக்கள் ஏற்றுக்கொள்ளச் செய்யும் பொறுப்பும் அவருடையது. மக்களுடைய விருப்பங்களையும் போற்றும் குறிக்கோள்களையும் அறிந்து நிறைவேற்றும் கடமையும் அவருடையது. எனவே, அவர் அரசியல் தலைவர்கட்குத் தலைவராகக் காணப்படவேண்டும். இவைகளில் தமக்குச் சொந்தமான குணாதிசயங்கள் பயன்படுமே யொழியக் காபினெட் உதவி தேவையில்லை. ஜனாதிபதி நாட்டின் வீரராக மக்களால் பாராட்டப்படவேண்டும். ஏதோ ஓர் அலுவலைச் செய்துவிட்டு மக்கள் பாராட்டைப் பெற்றுக் கொள்ள முடியாது. அந்தப் பாராட்டைத் தொடர்ந்து பெறுவதற்குக் காபினெட் தோழர்களுதவியாக இருக்கலாம். இந்த விஷயத்தில்தான் ஜனாதிபதி எவ்வளவு திறமையுடன் தம் தோழர்களைத் தேர்ந்தெடுத்தார் என்பதை ஆய்வு செய்ய முடியும்.

ஜனாதிபதி பதவி ஏற்றவுடன் அவர் எவரெவர்களைக் காபினெட் தோழர்களாக நியமிக்கிறார் என்பதைப் பொதுமக்கள் மிக ஆவலோடு கவனித்து மதிப்பிடுவார்கள். காபினெட் நியமனந்தான் அரசியல் மாளிகைக்குக் கண்ணாடிச் சன்னல் போன்றது. இந் நியமனம் சிறப்பில்லாமல் இருந்தால், மக்களின் ஆர்வம் சுவையற்றுப் போய்விடும். முதல் காபினெட் கூட்டத்தைப்பற்றிய தகவல்களை மக்கள் நுட்பமாகக் கவனித்துத் தங்கள் கருத்துகளை உருவாக்குவார்கள். முதற்கண் பெருமை தேடிக் கொடுப்பதற்குக் காபினெட் தோழர்கள் பயன்படமாட்டார்கள். அது ஜனாதிபதியின் சொந்த முயற்சியைப் பொறுத்ததே யாகும். ஆனால், ஒவ்வொரு தோழரின் தனிப்பெருமையையும் செல்வாக்கையும் மக்கள் கவனித்துப் பார்ப்பார்கள். ஒவ்வொருவரும் நல்ல பெயர் வாங்கினவர்களாக இருத்தல் வேண்டும். இதுவரை புகழ் இல்லாதவர்களாயினும் அக்கறையில்லை; கெட்ட பெயர் வாங்காதவர்களாக இருக்க வேண்டும். முன்னரே புகழ் பெற்றவர் பதவியை நாடாமல் இருக்கலாம். ஆனால் பதவி, புகழைக் கொடுக்கிறதென்பதில் ஐயமில்லை. நியமிக்கப்பட்டவர்கள் உடனே பொதுமக்கள் கவனத்துக்கு உள்ளாகிறார்கள்.

பதவி ஏற்றவுடனே பொதுமக்கள் கருத்தறியும் வாக்கு (Public opinion poll) எடுப்பின், பலபேர் காபினெட் உறுப்பினர்களைப்பற்றி ஒன்றும் அறியோம் என்ற கருத்தைத் தெரிவிக்கலாம். எனவே, உறுப்பினர்கள் மக்களின் கவனத்தை ஈர்த்

துத் தம் நடவடிக்கைகளைக் கூர்ந்து கருத்துத் தெரிவிக்கும்படி செய்தால்தான் காபினெட் பயன்படும் முறையில் தொழிற்படும். இல்லையேல் உறுப்பினர்கள் யார் என்று கூடத் தெரியாமல் பெரும்பாலோர் இருந்துவிடுவார்கள். இந்த வாய்ப்புக்குச் செய்தித்தாள்களும், அரசாங்க விளம்பரக் கருவிகளும் உதவியாக இருத்தல் வேண்டும். ஒன்றிரண்டு ஆண்டுகள் வரையில் கூட ஒருவர் பெயர் பத்திரிகைகளில் வாராமலே இருக்கக்கூடும். மற்றும் சிலருடைய பெயர் அடிக்கடி முதல் பக்கத்தில் வரலாம். திறமை இருந்தும் சிலருடைய பெயர் விளம்பரத்தில் வாராமல் இருப்பதும் இயல்பே. எவ்வாறுயினும் எல்லோரும் விரைவில் நாட்டில் நல்லபெயர் பெற்றவர்களானல் அது ஜனதிபதிக்குப் பெருமை தரும்.

ஜனதிபதி பயன்படாதவர்களை நியமித்தால் ஒருகாலத்திலும் அவருக்குச் சிறப்பு வாராது. வெளிப்பகட்டால் மட்டும் இச் சிறப்பு வாராது; உள்சரக்கும் இருத்தல்வேண்டும். திறமையும் துறை நிர்வாகம் செய்வதுமட்டுமன்றி, எந்த நேரத்திலும் இடையருது மக்களுக்குத் தொண்டு செய்கிறேம் என்ற நினைப்பும் வெளித்தொடர்புகளும் இல்லாதவர்கள் வெற்றி அடைவதில்லை. சிலர் தங்களுக்குத் தொடர்புடைய தனியார் நிறுவனங்களோடு மட்டும் தொடர்புகொண்டு புகழ்பெறுவார்கள். ஆனல், பொதுமக்களுக்கு அவர் தொண்டு தெரியாமலிருக்கும். எடுத்துக்காட்டாக இது தொழிலாளர், முதலாளிகள், கைத்தொழில் முதலிய துறைகளில் உண்மையாகும். கல்வி, பாதுகாப்பு, பொதுநலம் முதலிய துறைகள் மக்கள் கவனத்துக்குப் பெரிதும் வரும். சிலர் குறிப்பிட்ட அரசியல் கொள்கை வட்டாரங்களில் மட்டும் அறிமுகப்பட்டவர்களாக இருப்பார்கள். [எடுத்துக்காட்டு: மக்களாட்சிக் கட்சி (Democratic Party), குடியரசு கட்சி (Republican Party) வட்டாரங்கள்.] நாட்டு மக்கட் சமுதாயம் முழுவதும் அறிந்துள்ளவராக ஜனதிபதி மட்டுமாவது இருக்கவேண்டுமென்பது அமெரிக்க அரசியலின் கருத்தாகும்.

காபினெட் உறுப்பினர்களுட் சிலர் தொடக்கத்தில் பெயர் பெற்றவர்களாக இல்லாமலிருந்து பின்னல் புகழ் பெற்றவர்களாக ஆனதுண்டு. இதற்கு எடுத்துக்காட்டாக மெல்லன், ஹல் என்பவர்களைக் கூறலாம். எனவே, ஜனதிபதி காபினெட் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்போது ஒரு தோழரின் எதிர்காலம் எவ்வாறிருக்கும் என்பதையும் மதிப்பிட்டுத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

ஜனாதிபதி கூலிட்ஜ் காலத்தில் மெல்லன் நிர்வாகம் மிக்க புகழைப் பெற்றுத்தந்தது. ஹல் மிதவாதி. ஆனால், திடமான திறமையுடையவர். அவர், 12 ஆண்டுக் காலத்தில் வந்த ஜனாதிபதிகள் ஒவ்வொருவருக்கும் நல்ல பெயர் வாங்கிக்கொடுத்தார். ரூஸ்வெல்ட் அதை நன்றாகப் பயன்படுத்திக்கொண்டார். ஜனாதிபதி தம் புகழையும் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்; காபினெட் தோழர்களின் புகழை வளர்க்கவும் வேண்டும். தாம் தேர்ந்தெடுப்பவர்கள் இரண்டுக்கும் பயனற்றவர்களாக இருந்தால் காபினெட் நிர்வாகத்தைப்பற்றிப் பொதுமக்கள் சரியான கருத்துகளைக் கொள்ளமாட்டார்கள். புகழ்பெற்ற ஒருவரைத் தம் சபையிலிருந்து கருத்துவேற்றுமையினால் இழக்கநேரிடின், அதுவும் ஜனாதிபதிக்கு வலுக்குறைவைக் கொடுக்கும். இது காறும் கூறியவற்றால் ஜனாதிபதியும், காபினெட் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் நற்பணியாலும் நன்மதிப்பாலும் காபினெட்டின் பெருமையை நிலைநாட்ட வேண்டுமென்பது வெளிப்படை.

இனி ஜனாதிபதி கட்சித் தலைவர் என்ற முறையில் காபினெட் எப்படிப் பாதிக்கப்படுகிறது என்பதைக் கவனிப்போம். பிரிட்டனில் நடைபெறும் அரசியல் கட்சி நிர்வாகத்தில், பெரும்பான்மைக் கட்சி தான் நினைத்தபடி சட்டமன்றத்தில் யாதொன்றையும் செய்யமுடியும். ஆனால், அமெரிக்க அமைப்பில் அது முற்றிலும் இயலாத செயல். அமெரிக்க ஜனாதிபதியின் சட்டமன்றத் தொடர்பு சட்ட அடிப்படையானதாகும். கட்சிப் பெரும்பான்மையைமட்டும் பொறுத்ததன்று. கட்சித் தொடர்பில்லாத பல கடமைகள் ஜனாதிபதிக்கு உண்டு (எடுத்துக் காட்டாக இராணுவத்தின் தலைமை). தேர்தலில் கட்சியின் மூலமாக ஜனாதிபதி பதவிக்கு வந்தாலும், மற்றக் கட்சிக் குழுக்களிடையேயும் அவருக்குப் பெரும்பான்மை மதிப்பு இருக்க வேண்டும். அடுத்த தேர்தல்வரை நான்காண்டுகட்கு அவர் பாதிக்கப்படாவிட்டாலும் எல்லாக் கட்சிகளிடையேயும் தமது முதன்மைக்குச் செல்வாக்கு இருக்கவேண்டும். வேறுகட்சித் தொடர்பைச் சட்டமன்றத்தில் பயன்படுத்தினாலும் பயன்படுத் தாமற் போனாலும், அல்லது தமது சொந்தக் கட்சியின் வலிமையின் சார்பாக நின்றாலும், தேசியக்கொள்கைகளிலும் நடவடிக்கைகளிலும் கட்சி வரம்பின்றிப் பெரும்பான்மையை நாட வேண்டும். அந்தச் செல்வாக்கிருந்தால்தான் ஜனாதிபதியின் புகழ் விளக்கம் அடையும்.

காபினெட் குழு ஜனாதிபதியின் அரசியல் கட்சிக்கு நிறுவன முறையில் இணைக்கப்பட்டதன்று. கட்சியின் அதிகாரம் அதைப்

பாதிக்கலாம். ஆனால், அது கட்சியின் உறுப்பு அன்று. ஜனாதிபதி பொதுவாக எல்லாக் காபினெட் உறுப்பினர்களையும் தம் கட்சியிலிருந்துதான் பொறுக்கி எடுப்பார். அவர்களுள் இரண்டொருவர் கட்சிச் சலுகைகள் முதலியவற்றைக் கவனித்து வருவார்கள். மற்றவகைகளில் காபினெட், கட்சியின் வேலையிலோ கட்சி, காபினெட் வேலையிலோ தலையிடுவதில்லை. ஜனாதிபதியே கட்சிக் கொள்கைகள்படி காபினெட் நடவடிக்கைகளைச் சமாளிப்பார். நம்பிக்கையான ஆள்களை ஜனாதிபதி தேர்ந்தெடுப்பதன் அளவில்தான் கட்சியின் நம்பிக்கை பொருந்தும். ஜனாதிபதி கட்சி மனப்பான்மையை நிராகரித்துக் காபினெட் குழுவுக்கு வேறு ஆள்கள் சிலரை நியமித்தாலும் நியமிக்கலாம். ஆனால், அது சாதாரணமாக நடக்காது. காபினெட்டைத் தேர்ந்தெடுப்பதில் சில சமயம் கட்சியே வெளியில் வலுப்படுத்தப்படலாம். சில சமயங்களில் தமது தேர்வுக்கு உதவி செய்தவர்கட்கு ஜனாதிபதி சில சலுகைகள் காட்டலாம். ரூஸ்வெல்ட்டும் ஐசனோவரும் இத்தகைய நியமனங்கள் செய்தது உண்டு. பொதுவாக, ஜனாதிபதி தம் கட்சிக்குள்ளே இருக்கும் பிரிவுகளைச் சேர்த்துத் தழுவ முயல்வார். ஏனெனில், எல்லாருடைய ஆலோசனைகளும் அவருக்குப் பயன்படும்.

ஆபிரகாம் லிங்கன் தம் காபினெட் குழுத் தேர்தலில் போட்டிக்கு நின்றவரையும் சேர்த்துக்கொண்டார். ஹார்டிங்கும் ஐசனோவரும் கருத்துவேற்றுமை கொண்ட சிலருக்கும் சலுகை காட்டினார்கள். ஆனால், நியமனம் ஆனபின் அவர்கள் சொல்லுகிறபடி எல்லாம் ஜனாதிபதி ஆடவேண்டுமென்பது இல்லை. கட்சிக்கு அதிதமாகவும் கட்சியைத் தழுவியும் நடந்துகொள்வதற்கு மிகுந்த திறமை தேவையே. இதனால் கட்சி பிளவுபடுவதில்லை. வெளிப்புறமாக ஒற்றுமை இருந்தாலும் அன்றாட விவகாரங்களில் முரண் இல்லாமல் ஜனாதிபதி கவனித்துக்கொள்ள வேண்டும். கூட்டுக் காபினெட் (Coalition) அமைச்சரவை தலைவலிதான். ஆனால், ஆபிரகாம் லிங்கன் தம் நம்பிக்கையால் அதனை நன்றாகச் சமாளித்தார் என்பது வரலாற்று உண்மை. சில சமயங்களில் காபினெட்டுக்குள் செல்வாக்கு உடையவர்களாயிருந்தால் காபினெட்டில் இரு பிரிவுகளும் உருவாகி விடலாம். ஐசனோவர் சபையில் டாஃப்ட் (Taft) பிரிவு ஒன்று இருந்ததாகக் கூறுவர்.

காபினெட்டில் பெரும்பான்மையோருக்கு ஜனாதிபதியின் தொடர்பினால்தான் ஆதிக்கம் பெருகும். அவர்களால் ஜனாதிபதிக்கும் வலிமை அதிகரிக்கும். ஆனால், தனிப்பிளவுக் குழுக்

களின் சமூகமாக ஆகிவிடக்கூடாது. அவ்வாறிருப்பின் அடுத்த தேர்தலில் பிளவுக் குழுவின் பிரசாரங்கள் அதிகரிக்கும்.

ஒருசமயம் ட்ருமன் பெயரைக்கூடச் சொல்லாமல் சிலர் பிரசாரம் நடத்தினர்களாம். இத்தகைய குழறுபடைகள் காபினெட் உறுப்பினர்களால் ஏற்படுவது இயல்பே. உட்பிரிவுகள் இல்லாமல் பார்த்துக்கொள்வது ஜனாதிபதியின் திறமையாகும். முக்கியமாக, ஜனாதிபதி பதவியின்மேல் நோக்கம் உடையவர்களைத் தழுவியும் அதே சமயத்தில் அடக்கியும் ஆட்சி செலுத்தவேண்டும். அமெரிக்காவில் அரசியில்வாதிகட்கு ஒரே மட்டத்தில் ஆக்கம் பெருகிவிடுவதில்லை; படர்ந்து பரவி எல்லா நிலைகளிலும் இருக்கும். அமெரிக்காவில் மற்றைய நாடுகளைப்போல் தனிப்பட்ட அரசியல்வாதிகள் அளவுக்குமீறிச் செல்வாக்கு வகிக்கமுடியாது. இது காபினெட் அதிகாரத்துக்கு வில்லங்கத்தைத் தருவதில்லை; அதிக வலிமையையும் தேடித் தருவதில்லை.

அமெரிக்கக் காங்கிரஸ் ஜனாதிபதியின் ஏவுதல்களைத்தான் சிந்தித்து முடிவுகளைத் தெரிவிக்குமே ஒழிய, தனிப்பட்ட காபினெட் உறுப்பினர்களின் ஏவுதலுக்குக் கட்டுப்படவேண்டுமென்ற சட்டமில்லை. ஜனாதிபதியே காங்கிரசுக்குத் தமது பரிந்துரைகளை அனுப்பி ஆமோதிப்பைப் பெற வேண்டும். சில சட்டங்களை நிராகரிக்க (Veto) ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு. வெளிநாட்டு விவகாரங்களில் சில பகுதிகளைத் தாமே முடிவு எடுப்பதற்கும் ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு. அமெரிக்கக் காங்கிரசுக்குச் செயல்துறைகளை ஏற்படுத்தவும், அவைகட்குப் பணம் ஒதுக்கவும், ஜனாதிபதி செய்த பதவி நியமனங்களை உறுதிசெய்யவும், நிர்வாகத்தில் குற்றங்குறைகளைப்பற்றி ஆய்வுசெய்யவும் சட்ட அடிப்படையான அதிகாரம் உண்டு. மேற்கூறியவை அத்தகைய அதிகாரங்களில் முக்கியமான ஒரு சிலவே யாகும்.

நிர்வாகத்தின்மீது காங்கிரசுக்கு ஓரளவு அதிகாரம் உண்டென்பது வெளிப்படை. ஜனாதிபதியின் மறுப்பாணை (Veto) அதிகாரம், அவர் கையாளும் செல்வாக்கு முதலியவை காங்கிரசின் நட்பையோ எதிர்ப்பையோ பாதிக்கும். காங்கிரஸ் உறுப்பினர்கட்கும், காபினெட் உறுப்பினர்கட்கும் (ஜனாதிபதி உட்பட) இடையே உள்ள நேர்முகத் தொடர்புகள் ஒருவருக்கொருவரிடை நேசமனப்பான்மையை வளர்க்கும். எனவே, இருதிறத்தார்க்கும் சட்ட அடிப்படையான விவகாரப் போக்குவரவுகள்

தவிர ஒன்ருேடொன்று நெருங்கிய தொடர்புகொள்ளுதலும் தேவை. காபினெட் உறுப்பினர் காங்கிரசில் இருவேறு வகை களில் செயற்படவேண்டும். ஜனுதிபதியின் ஆலோசகராகை யால் அவர் கொள்கைகளேயும் கருத்துகளேயும் சார்ந்து தொழிற் படவேண்டியிருப்பது ஒருவகை; தத்தம் துறை நிர்வாக அலு வல்களில் தம் விருப்பப்படி நடக்கும் உரிமை போதுமான அளவில் இருப்பதால் காங்கிரஸ் அதிகாரத்திற்கு உட்பட்டவர் களாக இருக்கவேண்டி யிருப்பது மற்ருெருவகை. ஜனுதி பதியின் ஆட்சிக்கும் காங்கிரசின் அதிகாரத்திற்கும் இடையே தனிப்பட்ட காபினெட் உறுப்பினர் இயங்க வேண்டும். காங் கிரசில் பல குழுக்களின் கேள்விகட்கும் ஆய்வுகட்கும் காபினெட் உறுப்பினர் பதில் சொல்லக் கடமைப்பட்டவராவார் அதிகார மும் நிர்வாகமும் பிரிக்கப்பட்டுள்ளதால், உறுப்பினர்கள் சிற்சில சமயங்களில் இடர்பாட்டிற்கு உள்ளாவார்கள். வாக்கா ளர்கள் காங்கிரஸ் பிரதிநிதிகளின் மனத்தை மாற்றும் ஆற்ற லுடையவர்கள். எனவே, காபினெட் உறுப்பினர்கள் காங் கிரசைப் பகைத்துக்கொள்ள இயலாது.

ஜனுதிபதி செய்யும் பதவி நியமனங்கள் காங்கிரசுக்குப் பிடித்தமாக இருக்குமாயின், பொதுவாக எல்லா விஷயங்களிலும் ஓரளவு இணக்கநிலே ஏற்படும். ஆனல், குறிப்பிட்ட விவ காரங்களில் கருத்துவேற்றுமை ஏற்படுவது இயல்பு. இத் தகைய சமயங்களில் காபினெட் உறுப்பினர் ஒற்றைக் கம்பியில் நடப்பதுபோல் சாயாமல் சமாளிக்கவேண்டும், காங்கிரசின் நெகிழ்வுசுழல்வுகளே அறிந்தவர்கள் சரியான பாலம் அமைத்துக் கொண்டு சிக்கல்களே விலக்கிக் கொள்ளலாம். ஜனுதிபதியே காங்கிரஸ் உறுப்பினர்களுடன் இசைவான தொடர்புகள் ஏற்படுத்திக்கொள்ளத் தனிப்பட்ட ஒருவரைத் தொடர்பு ஆளாக (liaison) ஏற்படுத்துவதும் உண்டு. வில்சன் தமது அஞ்சல்துறைத் தலேவர் (Post Master General) பர்லிசன் என்பவரை இப்படித்தான் பயன்படுத்திஞர். ஹார்டிங்கு மூன்று பழைய செனேட் உறுப்பினர்களேத் தம் காபினெட்டில் சேர்த்துக்கொண்டார். அப்படி இருந்தும் செனேட்டில் மாற்றுக் கருத்துள்ளவர்களேச் சேர்த்துப்பிடிக்க ஆள் இல்லாமல் இருந்தது.

ஒவ்வொரு காபினெட் உறுப்பினரும் செனேட், காங்கிரஸ் ஆகியவற்றின் ஆதரவைப் பெற்றே தீரவேண்டும். ஜனுதிபதி தம்மை நியமனம் செய்ததைச் செனேட் அங்கீகாரம் செய்ய வேண்டும். சில சமயங்களில் செனேட் அங்கீகாரம் செய்

வதற்கு முன்பே நியமிக்கப்பட்டவரைக் கூப்பிட்டு விசாரிக்கலாம். நியமிக்கப்பட்ட பின்பும் காங்கிரஸ் தம் துறைப் பணிகளுக்குப் பணம் அனுமதிக்கவேண்டும். காங்கிரஸ் ஆதரவின்றி ஒன்றும் செய்யமுடியாது.

கார்டல் ஹல் இந்த விஷயத்தில் மிகவும் வெற்றிகரமாகத் தொழில்புரிந்தார் என்று சொல்லுவதுண்டு. ஒருசமயம் காங்கிரஸ் இரு சபைகளின் கூட்டுப் பேரவையில் பேச்சு நிகழ்த்த அழைக்கப்படும் சிறப்பு அவருக்குக் கிடைத்தது. பதவி அணியிலிருந்து தேர்ந்த காபினெட் உறுப்பினர்கள் காங்கிரசுடன் நெருக்கமான தொடர்பு ஏற்படுத்திக்கொள்வது கடினம். வேறு உறுப்பினர்கள் உயர்அதிகார அலுவலர்கள் (Bureaucrat) போல் நடந்துகொள்ளமாட்டார்கள். அப்படி நடந்துகொள்ளவும் கூடாது. எனவே, அவர்கள் நல்ல தொடர்பு தேடிக்கொள்வது அவ்வளவு கடினமன்று. சிலர் தம் துறை விவகாரங்களைப்பற்றி முன்பே முக்கியமான காங்கிரஸ் உறுப்பினர்களோடு கூடிப்பேசிப் பின் நடைமுறைக்குக் கொண்டுவருவார்கள். இது ஒரு நல்ல வழி. இந்தவிதமான முயற்சிகளால் ஜனாதிபதியின் பொறுப்புச் சிறிது குறையும். டீன் அச்சீசன் (Dean Acheson) என்ற ஒரு காபினெட் உறுப்பினர் வாஷிங்டனில் காங்கிரஸ் உறுப்பினர்களோடு அடிக்கடி கூடிப்பேசுவது வழக்கம்.

காங்கிரசுடன் நயமாகப் பழகத் தெரியாதவர்கள் ஜனாதிபதிக்குத் தலைவலியைத் தரக்கூடும். வில்சன் காபினெட்டில் இருந்த காரிசன் என்பவர் இவ்வாறு இடர்ப்பட்டுத் தம் பதவியை விட்டுவிலகவேண்டி வந்தது. ஜெனரல் மோட்டார் நிறுவனத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் மிகவும் அசட்டையாய் நடந்துகொண்டபடியால் காங்கிரசில் எதிர்ப்புக்கு உள்ளாக வேண்டியதாயிற்று. இம்மாதிரி எடுத்துக்காட்டுகள் பல உண்டு. பொதுவாகத் தீவிரவாதிகளும் விட்டுக்கொடுக்காத பிடிவாதக்காரர்களுமே தொல்லைகட்கு உள்ளாவார்கள். டீன் அச்சீசன் தம்மை எவ்வளவு தொல்லைகட்கு உட்படுத்திக்கொண்டாலும், அவருடைய வேறு திறமைகளுக்காக ஜனாதிபதி ட்ரூமன் எப்போதும் அவருக்கு ஆதரவுகாட்டிவந்தார். ஆனால், ஜனாதிபதி இப்படித் தம் செல்வாக்கை இந்த விவகாரங்களில் செலவிடுவது அன்றாட வேலையாகிவிடக்கூடாது. ஒருவருக்கு வெளியே எவ்வளவு செல்வாக்கு இருந்தாலும் காபினெட் யந்திரத்தில் உராய்தல் இல்லாமல் தொழிற்பட்டால்தான் காபினெட்டும் ஜனாதிபதியும் காங்கிரசுடன் இணக்கமான முறையில்

இருக்கலாம். இது பிரிட்டிஷ் காபினெட் விவகாரத்திலும் உண்மையேயாகும். ஆனால், அமெரிக்கக் காபினெட்டில் நிர்வாகச் சட்டப்பிரிவினையாலும், வெளியார்களும் அலுவல்துறையில் இருப்பவர்களும் காபினெட்டிற்குத் தேர்ந்தெடுக்கப்படுவதாலும் இந்தப் பிரச்சினை வலுவானதென்பது விளங்கும்.

ஜனாதிபதி அமெரிக்க நிர்வாக அமைப்பின் உச்சியில் உள்ளார். அவரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் பல்லாயிரம் பேர் ஆவர். அமெரிக்க நிர்வாகம் சட்டப்படி நிறைவேறுமாறு கவனித்துக்கொள்வது ஜனாதிபதியின் பொறுப்பு. இவற்றையெல்லாம் தம் தனி மேற்பார்வையில் சமாளிப்பது மிகவும் கடினமாகும். துறைக்குத் தலைவர்களான காபினெட் உறுப்பினர்களும் இந்தப் பொறுப்பில் உண்மையாகவே முழுப் பொறுப்பு எடுத்துக்கொள்ள வேண்டும். எனவே, ஒவ்வொருவரும் தங்கள் துறை விவகாரங்களில் நல்ல தேர்ச்சி உடையவராக இருக்கவேண்டும். நோக்கங்களும் தமது சமுதாய நிலை, சூழல் முதலியவைகளால் பாதிக்கப்படும். எடுத்துக்காட்டாகத் தொழிலாளர்துறை காபினெட் உறுப்பினர், முதலாளி மனப்பான்மை அல்லது தொழிற்சங்க மனப்பான்மையை ஒட்டி நோக்கங்களும் செயலும் உடையவராக இருப்பார்.

பல்வேறு துறைகளிலிருந்து காபினெட் தேர்ந்தெடுக்கப்படுவதால், பதவிக்கு வந்த பிறகுதான் நிர்வாகத்திறன் வளர வேண்டியிருக்கிறது. சிலர் வாணிகத் துறையினராகவும், சிலர் பாங்கி அதிகாரிகளாகவும், சிலர் வழக்கறிஞர் தொழில் புரிந்தவர்களாகவும், மற்றும் சிலர் கல்வி கற்பிக்கும் ஆசிரியராகவும் இருக்கலாம். அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு உரிய காரணங்கள் இருப்பினும், நிர்வாகத் திறமை எல்லோருக்கும் ஒரே அளவில் இராது. முதற்கண் தாம் நிர்வாகம் செய்ய வேண்டியுள்ளவற்றைப்பற்றி அறிந்துகொள்ளாமலே பதவிக்கு வந்துவிடுவதும் உண்டு. ஒரு வழக்குரைஞரைக் கப்பற்படைத் துறைக்குத் தலைவராக நியமித்தால், அத் துறை விவகாரங்களில் அறியாமையை அகற்றிக்கொள்வது கடினமாகும். சில சமயங்களில் நிபுணர்களும் நிர்வாகத்தில் திறமை உடையவர்களாக அமைவதில்லை. ஃபாஸ்டர் டல்லஸ் என்பவரை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

நிபுணர்கள் தமக்குத் தொடர்புடைய துறையில் சாதாரணமானவர்கள் செய்யும் பணியின் முக்கியத்துவத்தை உணராமல் தம் அறிவுக்கூர்மையை வேறு எங்கோ செலுத்திவிடுவார்கள்.

சில சமயங்களில் எல்லாப் பதவிகட்கும் ஜனாதிபதியே நியமனம் செய்யத் தலையிட்டால், காபினெட் உறுப்பினர் அதிகாரம் குறைந்துதான் போகும். உதவிச் செயலாளர்கள் (Under Secretary, Assistant Secretary) நியமனங்களில்கூட ஜனாதிபதியோ, காங்கிரசோ தலையிட்டால் காபினெட் உறுப்பினருக்கு என்ன அதிகாரம் இருக்கும்? ஒவ்வொரு துறைக்குட்பட்ட எத்தனையோ சிறு பிரிவுகள் (Agencies and Bureaux) இருக்கும்; அதிகாரிகளுக்குப் புறம்பான இணைப்பு நிறுவனங்களும் இருக்கும்; அவைகளின் அதிகாரங்களிலும் காங்கிரஸ் தலையிட்டால் காபினெட் உறுப்பினரின் அதிகார முதன்மை வலிவு இழக்கும். அல்லது ஒவ்வோர் உறுப்பும் தனி அதிகாரம் செலுத்தத் தலைப்படும். இவைகளால் காபினெட் உறுப்பினரின் அதிகார முதன்மை நிலைகுலைந்துவிடும். எல்லா அதிகாரங்களையும் இணைத்து நிர்வாகம் நடத்துவதுதான் குறிக்கோளாக இருக்க வேண்டும். கீழ்மட்டம் வரையில் சிறிய விவகாரங்களைக் கவனிக்கும்போது பெரிய விவகாரங்களின் மேலுள்ள கண்ணோக்கம் குறைந்துவிடலாகாது. கீழ்மட்ட விவகாரங்களிலேயே அமிழ்ந்துவிட்டால் ஜனாதிபதி மட்டத்தில் கண்காணிக்கும் ஆற்றல் மங்கிவிடும்.

காபினெட் உறுப்பினர் சிங்கநோக்காகத் துறை படித்துறை ஒரு பக்கமும், ஜனாதிபதியின் விருப்பங்கள் மற்றொரு பக்கமுமாகக் கவனித்துப் பணிபுரியவேண்டும். துறை விவகாரங்களிலேயே சிறைப்பட்டுவிட்டால், அது அமைச்சுத் தொழிலின் சிறப்பாகாது. அவ்வாறு வெறும் அதிகாரி (Bureaucrat) இருந்துவிடலாம். ஆனால், காபினெட் உறுப்பினரிடம் எதிர்பார்ப்பது வேறு. தவிர, காபினெட் உறுப்பினர் மற்றைய உறுப்பினர்களின் துறைகளைப் பாதிக்காமல் தமது பணியினைச் செய்ய வேண்டும். இல்லையேல் அடிக்கடி ஜனாதிபதி தலையிடல் வேண்டியிருக்கும். இத்தகைய வில்லங்கங்கள் சட்ட விவகாரங்களில் மட்டுமன்றி அன்றாட நிர்வாகத்திலும் தலையெடுக்கலாம்.

ஜனாதிபதி விருப்பத்திற்கு மாறாகக் காபினெட் உறுப்பினர் செனேட்டுக் குழுக்களின் ஆதரவைத் தேடுதலும் முறையாகாது. சிற்சில சமயங்களில் அப்படித் தேடினவர்களும் உண்டு. இதைப் பெரிதும் பொருட்படுத்தாமல் இருந்தால் ரூஸ்வெல்ட்டைப் போல நிர்வாகத்தைச் சிக்கல் இல்லாமல் நடத்தலாம்; அது ஜனாதிபதியின் மறுதேர்தலுக்கும் பயன்படும். ஆனால், காபினெட் உறுப்பினர் நிர்வாகத்தில் தத்தம் விருப்பப்படி நடந்தாலும், அரசியல் தோழமையில் இத்தகைய சொந்த விருப்பங்

களினுல் வலுக்குறைவு ஏற்பட்டாலும் ஜனதிபதி அத்தகைய உறுப்பினரைக் காபினெட்டிலிருந்து தள்ளிவிடுவதுதான் சரி. இத்தகைய நிகழ்ச்சி ஜெஸ்ஸி ஜோன்ஸ் (Jesse Jones) என்பவருக்கு நேர்ந்தது. ஆனல், காபினெட் உறுப்பினர் பரம்பரை நிலக்கிழார்கட்கு அடிமைகள் (feudalism) போல் நடக்க வேண்டியதில்லை. அளவறிந்து நடந்தால் ஒரு வில்லங்கமும் வராது. ஒருவருக்குமேல் ஒருவர் வெற்றிபெறவேண்டும் என்ற மனப்பான்மையும் இருத்தலாகாது. இத்தகைய நுட்பத்துடன் சரிசமமான தடைகட்டி நிர்வாகத்தை நடத்துவதுதான் அமெரிக்கக் காபினெட் முறையில் இன்றியமையாதவொன்றுகும்.

இதுகாறும் கூறியவற்ருல், காபினெட்டின் கூட்டுப்பொறுப்பானது தற்புகழ்ச்சி, எதிர்ச்சார்பு, வெளிச் சூழல்களில் மிகுந்த ஈடுபாடு ஆகிய இவைகளால் பாதிக்கப்படும். வெளித்தோற்ற அளவுக்குக் கூட்டுப்பொறுப்பு இருந்தாலும், தீவிரமான விவகாரங்களினுல் அது மங்கிவிடலாம். காபினெட் ஒற்றுமையைச் சிந்திக்காமலே நடந்துகொள்வதற்கு வாய்ப்பு நேரிடினும், அதைப் புறக்கணித்து ஒற்றுமையைக் காப்பாற்றச் செய்வது ஜனதிபதியின் வழிகாட்டுந் திறனும் அறிவுக்கூர்மையும் ஆகும். ஒவ்வோர் உறுப்பினரின் நடத்தையாலும் ஜனதிபதியின் அரசியல் ஆதிக்கம் வளர்கிறது. கட்சியின் வலிமைமட்டும் இந்த ஆக்கத்தை வளர்க்காது; உண்மை உதவியைவிடக் குந்தகமின்மை உண்மையிலேயே விரும்பத்தக்க தாகும். ஜனதிபதி மட்டத்தின் பொறுப்புத் தனிக் காபினெட் உறுப்பினரின் பொறுப்பைவிடப் பலமடங்கு நுட்பமானது. ஜனதிபதி, உறுப்பினர்கட்குக் காபினெட்டைப் பொறுத்த அளவில் சுவாசப்பை போலிருப்பினும், வெளி விவகாரங்களில் தனி உறுப்பினரிடையே அது முற்றிலும் இன்றியமையாததன்று. தங்கள் சொந்த ஆதிக்கத்துக்கு ஒவ்வொருவரும் தங்கள் திறமைக்கேற்றவாறு தொழிற்பட இடம் உண்டு. ஆனல், அது ஜனதிபதிக்கு வலுக்குறைவை உண்டாக்கக்கூடாது. நியமனத்தில் உள்ள விழிப்பைவிடக் கூட்டுப்பணியில் ஒற்றுமையைக் காப்பது அதிக இன்றியமையாததாகும். பல்வேறு அரசியல் ஆக்கக் கூட்டங்களின் நன்மை தீமைகளுக்கான சாயலும் காபினெட்டை வந்து சாரும். இவ்விதப் பன்மைத்துவம் (Pluralism) அமெரிக்க அரசியலின் இயல்பாகும்.

3. அமெரிக்கக் காபினெட் சீர்திருத்தங்கள்

பிரிட்டனில் காபினெட் சபை அமைப்பை மாற்றவேண்டு மென்று பிரச்சினைகள் அதிகம் எழுந்ததில்லை. அமெரிக்காவின் காபினெட் அமைப்பைச் சீர்திருத்தம் செய்யவேண்டு மென்று அடிக்கடி யோசனைகூறப்படும். சிலர், அரசியல் அமைப்பையே மாற்றவேண்டு மென்பர்; சிலர் இப்போதுள்ள சட்ட அமைப்பின் வரம்பிற்குள்ளேயே திருத்தங்கள் செய்யலாம் என்பர். பொதுவாக அமெரிக்க மக்கள் இந்தியர்களைப்போல் அரசியலைப்பற்றி எப்போதும் குறை தெரிவித்துக்கொண்டே இருப்பார்கள். நிர்வாகம், சட்டம் இயற்றுதல் என்ற இரண்டு தொழில்கள் பிரிவினையின் (Seperation of Executive and Legis. lative functions)அடிப்படையாகக் கிளம்பும் பிரச்சினைகள்தாம் அதிகம்.

வில்சன் தாம் ஜனாதிபதியாவதற்கு முன் இந்தப் பிரிவினை பற்றிக் குறைகூறி எழுதிவந்தார். பிரிவினையால் பொறுப்புக் குறைந்தும் மறைந்தும் போய்விடுகிறது என்பது அவர் கூற்று. காங்கிரஸ் பல சமயங்களில் முழு உணர்வின்றியும் பொறுப் பின்றியும் இருப்பதால், அதை மாற்றுவதற்கு வலிமை மிக்க காபினெட் அரசாங்கம்தான் தகுந்த மாற்று என்று அவர் எண்ணினார். பிரிட்டனிலிருப்பதைப்போல் நிர்வாகம், சட்டம் என்ற இரண்டையும் தொடர்புபடுத்துவது இன்றி யமையாதது எனக் கூறினார். காபினெட் உறுப்பினர்கள் காங்கிரசில் இடம் பெற்றிருக்க வேண்டு மென்பது அவர் கொள்கை. அப்படிச் செய்தால்தான் காபினெட் உறுப் பினர்கள் சட்டங்களைக் கொண்டுவருவதற்கும் விவாதங்களில் பங்கு எடுத்துக்கொள்வதற்கும் வாய்ப்பு உண்டாகும்.

காங்கிரசில் பெரும்பான்மைக் கட்சியிலிருந்து ஜனாதிபதி தமது காபினெட் தோழர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். அவர்கள் கொண்டுவரும் பிரேரபணைகள் தோல்வி அடைந்தால் அவர்கள் பதவியைவிட்டு விலகவேண்டும். இவைகளால்தான் பிரிட்டனில் உள்ளதுபோல் காபினெட்டுக்குக் கூட்டுப்பொறுப்பு உண்டாகும். தாம் கொண்டுவரும் பிரேரபணை தோற்கடிக்கப்பட்டால் தொடர்புடைய காபினெட் உறுப்பினர் தாமே பதவியைவிட்டு விலக வேண்டியதற்குரிய தேவை இருக்கவேண்டும். இப்போது காபினெட் உறுப்பினரின் அதிகாரம், ஜனாதிபதியிடமிருந்து பெறப்பட்டது. எனவே, அடிப்படை மாறுதல்களால்தாம் காபினெட் திருத்தம் அடையும்.

வில்சனின் சீர்திருத்தங்கள் ஜனாதிபதிக்குக் காபினெட்டின் மேல் உள்ள அதிகாரத்தையும், அரசியல் ஆற்றல்கள் ஜனாதிபதியின்பால் செலுத்தக்கூடிய நிர்ப்பந்தத்தையும் சீர்தூக்கவில்லை. இன்னும் வேறு சிலர் பிரிட்டிஷ் காபினெட்டைப்போல் மாற்றுவதற்கு ஜனாதிபதியின் நிர்வாக, சட்ட அதிகாரங்களைப் பிரிக்கவேண்டு மென்பர். மற்றும் சிலர் ஜனாதிபதிக்குக் காங்கிரஸ் சபையைக் கலைக்க அதிகாரம் தரவேண்டும் என்பர். ஜனாதிபதியின் போக்குகளைத் திருத்தக் காபினெட்டுக்கு அதிகாரம் வேண்டுமென்பர் சிலர்.

இவ்வாறு அதிகமாகத் தாக்கப்பட்ட மைய நிர்வாக, சட்ட அதிகாரங்கள் பிரிக்கப்பட வேண்டுமென்பதே யாகும். இல்லையேல் இரண்டு பிரிவுகளையும் இணைக்க ஒரு கூட்டுச் சபை (Joint Council) ஏற்படுத்தவேண்டுமென்பதும் ஆகும். இவை ஏறக்குறைய அமெரிக்க ஜனாதிபதி, பிரிட்டிஷ் பிரதம மந்திரி இலக்கணத்துக்கு மாற்றப்படவேண்டிய நிலைக்கு வந்துவிடும். பிரிட்டிஷ் அரசியல் நிபுணர் பேராசிரியர் லாஸ்கி (Professor H. G. Laski) என்பவரும் இத்தகைய கருத்துடையவரேயாவார். காங்கிரசுக்குச் செல்வாக்கு அதிகமாய்விடும்; தனிப்பட்ட காபினெட் உறுப்பினர்களின் ஆதிக்கம் பெருகிவிடும்; ஆனால், எல்லோரும் இணைந்தாலும் ஜனாதிபதியின் அதிகாரத்தைத் தகர்க்க முடியாது. அடிக்கடி அந்த அதிகாரம் எதிர்ப்பை வெல்வதற்குப் பயன்படுத்தப்பட்டால் அது குன்றிவிடும். தம் விருப்பப்படி நடக்கும் உறுப்பினரை நீக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் இருப்பினும், இடுக்கண் வரும்போது தக்க துணைவரில்லாமல் நிற்பது இரக்கப்படத்தக்க நிலையாகக் காணப்படும். காபினெட்டால் உட்பகை நேரிடாவிட்டாலும், ஜனாதி

பதியின் முழு அதிகாரம் குறைந்துவிடும். மக்கள் ஆட்சியிலும் (Democracy) அமெரிக்க ஜனாதிபதித்துவம் ஒரு வேடிக்கையான தனியுரிமை ஆட்சியாகக் காணப்படினும், காபினெட் அதன் தேர்முட்டுப்போல் பயன்படலாம். ஆனால், அந்த முட்டுக் கட்டை காங்கிரஸ் கருத்தின் பிரதிபலிப்பு என்றோ, மக்கள் கருத்தின் பிரதிபலிப்பு என்றோ கூற இயலாது.

ஜனாதிபதியின் ஒழுக்கமுறை இல்லாவிட்டால் அதிகார வர்க்கத்தினர் (Bureaucracy) தலைகால் தெரியாமல் நடந்து கொள்ளக்கூடும். அந்த ஒழுக்கமுறையும் பல துறைகளை இணைத்துத் தொழிற்படச் செய்தலும் காபினெட்டின் மூலம்தான் சாதிக்கமுடியும். போர்க்காலத்தில் வேண்டுமென்றால் ஜனாதிபதி முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், அமைதிக் காலத்தில் ஆக்கவேலைகளிலும் வெளிநாட்டு விவகாரங்களிலும் காபினெட் சேர்ந்து தொழிற்பட்டால் பயன் மிக்குக் காணப் படும்.

சிலர் காபினெட்டுக்குப் புறம்பாக ஜனாதிபதியின் செயலகம் (President's Secretariat) ஏற்படுத்தப்பட்டால், அது ஒருவாறு இணைப்பு வேலையை நிறைவேற்றும் என்று கூறுவார்கள். பிரிட்டனிலும் பிரதம அமைச்சருக்குத் தம் சொந்த அலுவலகம் (No. 10, Downing Street) உள்ளதல்லாமல், ஒரு காபினெட் செயலகமும் (Cabinet Secretariat) உண்டாகிவிட்டது. (இந்தியாவிலும் இதுபோல் உண்டாகி இருக்கிறது.) அமெரிக்கா வில் நிர்வாகச் சீர்திருத்தம் செய்ய ஏற்படுத்தப்பட்ட ஹூவர் கமிஷன் தனது அறிக்கையில் ஜனாதிபதிக்குத் துணையாக ஒரு செயலர் இருக்கவேண்டுமெனப் பரிந்துரை கூறியது. இந்தச் செயலர் பிரசிடென்ட் அலுவலகத்திலிருந்தும் பல்வேறு துறை களில் இருந்தும் வரும் செய்திகளை ஆராய்ந்து ஜனாதிபதிக்குச் சமர்ப்பித்தால் இணைப்பும் ஒழுங்கும் பயனுடையதாக அமையும். இந்தத் திட்டம் தனி ஜனாதிபதியின் செயலகத்தைத் தவிர்க்கிறது. ஐசனோவர் காலத்தில் இவ்வாறு செய்யப் பட்டது.

எப்படிப் பார்த்தாலும் காபினெட்டைத் தவிர்க்கமுடியாது. ஆனால், காபினெட் நிர்வாகத்துக்கு ஒரு கருவியாய்ப் பயன் படுத்தலாம். இப்போதுள்ள சட்டம் வரிச்சட்டத்துக்குள்தான் இப்படிச் செய்யமுடியும். அரசு நிர்வாகத்தில் அதனுடைய இணைப்பு ஆற்றல் எல்லையுடையதுதான். அதற்கும் கீழ் மட்டத்தில் இருக்கும் இயக்கும் அதிகாரிகட்கும் தொலைவு

அதிகம் இல்லாவிட்டாலும் இடைவெளி உண்டு. புனரமைப்பில் ஜனாதிபதிக்குத் தலைமையதிகாரிகளை இணைக்க ஒரு முதல்வரை ஏற்படுத்தினால் ஒருவாறு இந்தக் குறை தீரும். ரூஸ்வெல்ட் காலத்தில் ஹார்ரி ஹாப்கின்ஸ் என்பர் ஒருவகையில் இவ்வாறு நியமிக்கப்பட்டார். அதற்குக் காபினெட் உறுப்பினர்களிடையே முணுமுணுத்தலும் அவநம்பிக்கையும் உண்டாயின. அவர் ஆட்சியில் இவ்வாறு ஒருவர் இல்லாவிடினும் ஐசனோவர் செயலாற்றிய முறை ஒருவாறு இணைப்பை உண்டாக்கியது எனலாம். ஆனால், இவை நிறுவனமுறைச் சீர்திருத்தங்கள் அல்ல. அந்தந்த ஜனாதிபதி அதிகாரத்தைவிட்டு நீங்கியவுடன் பின் வருபவர் அவைகளை நீட்டித்துக் கொள்வார் என்பதற்கில்லை. நிறுவனமுறைச் சீர்திருத்தங்கட்கும் சில குறைபாடுகள் இருக்கத்தாம் செய்யும்.

இருவேறு வகைகளிலும் பொருத்தமும் இணைப்பும் பெருக வேண்டும். சில ஆற்றல்கள் மையத்தினின்றும் வெளியே போவனவாகவும், சில மையத்தை நாடி நிற்பனவாகவும் இருக்கும். இரண்டும் தேவை. ஆனால், முன்னவை பின்னவையை விழுங்கிவிடக்கூடாது. ஜனாதிபதி தனிப்பட்டவராகச் செயலாற்ற இயலாது. பல்வேறு ஆற்றல்களின் தாக்கும் எதிர்த் தாக்கும் வலிவை உண்டாக்கும். மீறிப்போனால் தீங்கை விளைவிக்கும். பன்மைத்தத்துவம் உள்ளது இயல்பே. அவைகளை ஒருமை நாட்டத்தில் ஈர்த்துவைப்பது ஜனாதிபதியின் திறமையும் அவருடைய காபினெட் சபையின் குறிக்கோளுமாகும். அமெரிக்க அரசியல் அனுபவம் ,வேறு மக்கள் ஆட்சி அரசியல்களில் பயன்படக்கூடியவைகளாகவே காணப்படும்.

4. அண்மைக்கால அமெரிக்க அனுபவம்

அமெரிக்கக் காபினெட்டைப்பற்றியும் ஜனாதிபதியைப் பற்றியும் ஜார்ஜ் வாஷிங்டன் (George Washington) காலம் தொட்டு ரிச்சர்டு நிக்சன் (Richard Nixon) காலம்வரை கருத்து மாறுதல்களும் வளர்ச்சியும் காணப்படும். கி.பி. 1789ஆம் ஆண்டு ஜார்ஜ் வாஷிங்டன் ஜனாதிபதியானார். அமெரிக்க அரசியலை வகுத்தவர்கள், ஜனாதிபதி மன்னர்போல் ஆகி விடக்கூடாது என்று பல வரையறை செய்தார்கள். உண்மை யிலேயே ஜனாதிபதிக்கு அவர்கள் எண்ணியதைவிட மிகுதி யான அதிகாரமே இருந்துவந்தது. பதவியேற்பு நிகழ்ச்சிகளில் சிறிது ஆடம்பரம் இருந்துதான் வந்தது. முப்பது ஆண்டுக் குடியேற்ற நாடாக (colony) இருந்ததன் வெறுப்பு மன்ன ருக்குரிய பகட்டுகளை விரும்பவில்லை. அரசியல் சட்டத்தை எழுதியபோது காங்கிரசின் கருத்தை நிறைவேற்றுவதுதான் ஜனாதிபதியின் கடமை என்ற எண்ணம் மேலிட்டது. அதற்கெனவே ஓர் ஆலோசகர் குழு அவர்மேல் சுமத்தப் பட்டது. ஆனல், அரசியல் சட்டம் ஜனாதிபதியைத்தாம் தனி நிர்வாகத் தலைவர் எனக் குறிப்பிட்டது. அத்தகைய தலைவர் தனி அரசுகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருத்தல் வேண்டுமென்று எழுதப்பட்டது. அமெரிக்க அரசியல் சட்டத்தின் பிரிவுகள் (1), (2), (3), இதைத் தெளிவாகக் காட்டுகின்றன. உட்பிரிவு (4), ஜனாதிபதியை நீக்குவதற்கு முறையை விதிக்கிறது.

தலைவர் என்ற முறையில் ஜனாதிபதி ஏழு கடமைகள் ஆற்றக்கடவர்: (1) அரசின் தலைவர், (2) நிர்வாகத் தலைவர், (3) சேனைகளின் தளபதி, (4) அயலரசு விவகாரங்களின் முதல் பிரதிநிதி, (5) சட்டமன்றத் தலைவர், (6) அரசின் முதல் ஒழுங்கு முறை அதிகாரி, (7) குற்றவாளியை மன்னிப்பதற்கு அருகதை யுடையவர்.

வாஷிங்டன் நெடுநாள் தளபதியா யிருந்தமையால், அரசியல் அமைப்புச் சட்டம் எழுதிய தொடக்கத் தந்தைகளின் எண்ணங்களோடு தம் கடமை முடிந்துவிடும் என்று எண்ணினர். ஆனால், ஜனாதிபதி எல்லாவற்றிலும் முதன்மைப் பங்கு எடுத்து வழிகாட்டியாக இருக்கவேண்டுமென்று பின்னர் உணர்ந்தார். எனினும், தம் காபினெட் குழுவில் ஹாமில்ட்டனுக்கும் ஜெஃபர்சனுக்கும் (Hamilton and Gefforson) நேரிட்ட சண்டைகளில் தலையிடாமல் விட்டுவிட்டார். ஆனால், அதன் விளைவாக இருவரும் பதவியைவிட்டு விலகிவிட நேரிட்டது. இவ்வாறு பின்வந்தவர்கட்கும் பிரச்சினைகள் ஏற்படுவதுண்டு. ஜனாதிபதி தம் குழுவில் நடுவர்பணி ஆற்றுவதுடன் அதைச் சிறந்த முறையில் இயக்கவேண்டுமென்பது அடிநாள்தொட்டு இன்றுவரை உண்மையாகும். காபினெட் உறுப்பினர்களை நியமிப்பதில் தகுதி ஒன்றைமட்டும் பார்க்காமல் வட்டாரத் தேவைகள், அரசியல் போக்கு, சமயத்தொடர்புகள், ஆதரிக்கப்பட்டவர்களின் பின்னணியிலுள்ள வற்புறுத்தற் பேர்வழிகள், நிர்வாகத்திறன், பொதுமக்களிடையே உள்ள செல்வாக்கு முதலியவற்றையும் கவனிக்கவேண்டும்.

அண்மையில் ஜான் கென்னடியின் (John Kennedy) காபினெட் குழுவைப் பார்த்தாலும் பல உண்மைகள் விளங்கும். கென்னடி தமது அரசியல் துறைச் செயலாளராக (Secretary of State) டீன் ரஸ்க் (Dean Rusk) என்பவரைத் தேர்ந்தெடுத்தார். அவருக்குக் காபினெட் சபையில் நான்கு ஆண்டுகள் அனுபவம் உண்டு. ஆனால், கென்னடி தாமே உண்மையில் அந்த அதிகாரத்தை அந்தரங்கமாக நடத்தவேண்டுமென்றும், ரஸ்க் நடைமுறை வேலைகளுக்குப் பயன்படுவார் என்றும் கருதினர். ஐசனேவர் காலத்தில் டல்லஸ் (Dulles) என்பவர் தாமே எல்லா வேலைகளையும் பார்த்துவந்தார். கென்னடி அப்படி விரும்பவில்லை. பாதுகாப்புச் செயலாளர் பதவிக்குக் கென்னடி, இராபர்ட் மெக்நாமராவைத் (Robert Macnemara) தேர்ந்தெடுத்தார். மெக்நாமராவுக்கு மோட்டார்த் தொழில் நிர்வாகத்தில் நல்ல அனுபவம் உண்டு. அவருக்குக் குடியரசு கட்சித் (Republican Party) தொடர்பு இருந்தபோதிலும், கென்னடி அதைப் பொருட்படுத்தவில்லை. நிதித்துறைக்குக் குடியரசு கட்சியினரான டக்ளஸ் டில்லனைத் (Douglas Dillon) தேர்ந்தெடுத்தார். அவர் ஐசனேவர் ஆட்சிக்காலத்தில் அரசியல்துறை உதவிச் செயலராக இருந்தார். கென்னடியால் தோற்கடிக்கப்பட்ட நிக்சனுக்குக் கி. பி. 1960 ஆம் ஆண்டுத் தேர்தலில் உதவி செய்தார். நிக்சன் தடுத்தும் கேளாமல் டில்லன், கென்னடி தந்த

பதவியை வகித்தார். டில்லன் நிதி மார்க்கெட்டில் செல்வாக்குடையவர். கென்னடி தம் தம்பியாகிய இராபர்ட் கென்னடியையே (Robert Kennedy) தலைமை வழக்கறிஞராக (Attorney General) நியமித்தார். தமக்கு நெருங்கி இருந்து உதவி செய்பவர் என்ற தேவையில், அதிக அனுபவம் இல்லாவிட்டாலும், இராபர்ட் கென்னடி நியமனம் செய்யப்பட்டார். உள்நாட்டுச் செயலர் பதவிக்கு பாரி கோல்டுவாட்டர் (Barry Goldwater) என்பவர் நியமிக்கப்பட்டார். இவைகளெல்லாம் பல வசதிகளை மனத்தில் கொண்டு செய்யப்பட்ட நியமனங்களாகும். கென்னடியின் குழு நல்ல முறையில் செயலாற்றியது.

கென்னடி கொல்லப்பட்டபின், லிண்டன் ஜான்சன் (Lyndon Johnson) காபினெட்டில் மாறுதல் செய்யவில்லை. ஆனால், சிறிது காலத்திற்குப்பின் அவர் சில முக்கியமான மாறுதல்களைச் செய்தார். கென்னடி ஐக்கியநாட்டுச் சபைக்கு (United Nations) அட்லாய் ஸ்டீவென்ஸனை (Adlai Stevenson) நியமித்தார். இவர் நல்ல பேச்சுத்திறமை உடையவர். ஆனால், கியூபாவில் (Cuba) அமெரிக்கா தலையிட்டபோது கென்னடி அவரைக் கலந்தாலோசிக்கவே இல்லை. ஜான்சனே ஸ்டீவென்ஸனுடன் நெருங்கி ஆலோசனை கேட்டார். கென்னடி நியமித்த கோல்டுவாட்டரை ஜான்சன் ஐக்கிய நாட்டுச் சபைக்கு நியமித்தார். வீட்டுவசதித் துறைக்கு நீக்ரோவரான இராபர்ட் வீவரை (Robert Weever) ஜான்சன் நியமித்தார். இராபர்ட் கென்னடியை நெடுநாள் கழித்துத்தான் ஜான்சன் மாற்றினார். இடையில் இராபர்ட் கென்னடி செனேட் தேர்தலில் வெற்றிபெற்றுச் செனேட் சபையில் இடம்பெற்றார். ஜான் கென்னடி பெரும்பாலும் தம் ஆலோசகர்களைத்தாம் ஆலோசனை கேட்பார். ஜான்சன் காபினெட் உறுப்பினர்களுடன் ஆலோசித்ததாக விளம்பரப்படுத்துவார்.

அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி ஜனாதிபதி காபினெட் உறுப்பினர்களின் ஆலோசனையைப் பெறவேண்டுமென்பது கட்டாயமானதன்று. அந்தந்த உறுப்பினர்களின் துறை நடவடிக்கைகளைப்பற்றி அறிக்கையைப் பெறவேண்டுமென்று மட்டுமே சட்டத்தில் உள்ளது. இருப்பினும் ஜார்ஜ் வாஷிங்டன் முக்கிய விவகாரங்களில் உறுப்பினர்களிடம் ஆலோசனை கேட்பது வழக்கம். பின் வந்த ஜனாதிபதிகள் அப்படியே இம் முறையைப் பின்பற்றினார்கள். ஆனால், ஜாக்சனின் (Andrew Jackson) போக்கு வேறாக இருந்தது. அவர் சமையலறைக் காபினெட்டைத்தான் அதிகமாகக் கேட்பார்.

ஆபிரகாம் லிங்கன் கருத்தொற்றுமையை (consensus) விரும்புவார். ஆனால், வேண்டிய சமயங்களில் அதை நிராகரிப்பார். அவர் நீக்ரோ விடுதலை அறிக்கையை எழுதித் தம் காபினெட் உறுப்பினர்கட்குப் படித்துக்காட்டி, அதற்குத்தான் அவர்களைக் கூட்டியதாகவும் மற்றபடி அவர்களுடைய யோசனைகள் வேண்டியதில்லை என்றும் கூறினார். ஃபிராங்க்ளின் ரூஸ்வெல்ட் (Franklin D. Roosewelt) தம் உறுப்பினர்களை வாதில் விட்டு, அவர்கள் கூறும் நல்ல கருத்துகளைமட்டும் எடுத்துக் கொள்வார். ஐசனோவர் தம் உறுப்பினர்களுள் திறமையானவர்களை அவர்கள் வழியிலே போவதற்கு உடன்படுவார். கென்னடி சில்லறை விவகாரங்களில் தம் காபினெட் உறுப்பினர்கள் வாதாடி வீண்காலம் கழிப்பதற்கு உடன்படார். அவர் தம் காபினெட் உறுப்பினர்களைத் தனிப்பட்ட முறையில் யோசனை கேட்க விரும்புவார். இதனால் சில விவகாரங்கள் காபினெட் கவனத்துக்கு வராமல் விட்டுப்போகும். லிண்டன் ஜான்சன் காபினெட்டைக் கூட்டி ஒவ்வோர் உறுப்பினரது கருத்தையும் கேட்பார்; தாம் முடிவெடுப்பது சரி என்று உறுதி செய்துகொள்ள இவ்வாறு செய்வார்; ஆனால், எடுத்த முடிவுகளை உறுப்பினர்கள் விரைந்து நிறைவேற்றுவிட்டால் அதைப் பொறுத்துக்கொள்ளமாட்டார்.

ரிச்சர்டு நிக்சன் (Richard Nixon) கி.பி. 1971-ல் ஜனாதிபதிப் பதவி ஏற்றார். அவர் நியமித்தவர்களுள் ஒருவரை விட்டுவிட வேண்டி இருந்தது. பாகிஸ்தான்-இந்தியப் போராட்டத்தின் போது நிக்சன் தமது காபினெட்டைக் கூடிக்கலந்து அமெரிக்கக் கொள்கையை முடிவு செய்தார் என்று கொள்வதற்கில்லை. போர் தொடங்குமுன் தமது அரசியல்துறைச் செயலரை இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் தூது அனுப்பவில்லை. ஆலோசகரான ஹென்றி கிஸ்ஸிங்கர் (Henry Kissinger) என்பவரை அனுப்பினார். அவர் பாகிஸ்தான் தலைநகரிலிருந்து சீனர்களோடு இரகசியமாகப் பேசப் பீக்கிங்குக்குப் போனார். இது விபரீதமாகவும் முறையற்றதாகவும் காணப்பட்டது. 1971ஆம் ஆண்டு டிசம்பர் 3ஆம் நாள் பாகிஸ்தான் போரைத் தொடங்கிய பின்னும் இந்தியாவுக்குப் பாதகமான அமெரிக்க அரசின் கருத்துகளை நிக்சன் தனிப்பட்ட அதிகாரிகள் வாயிலாகத் தெரிவித்தார். காபினெட் உறுப்பினர்களின் முழுக் கருத்து என்னவென்பது மர்மமாகவே இருந்தது. அமெரிக்கப் பத்திரிகை ஆசிரியர்களும் இராபர்ட் கென்னடி போன்ற செனேட் உறுப்பினர்களும் இந்தியாவுக்கு ஆதரவாகப் பேசினார்கள். காபினெட் உறுப்பினர்கள் யாவரும் ஜனாதி

பதியின் கொள்கைக்கு இசைவு கொடுத்தார்களா என்பது வெளியாகவில்லை. சீனவுடன் உறவுகொள்ளுதலும் வியட்நாமில் கொள்கை மாறுபாடு இல்லாமல் இருத்தலும் முழுக் காபினெட்டுக்கு உடன்பாடா என்பதும் எவருக்கும் தெரியாது. அமெரிக்கா, போரில் ஒருபக்கம் சேராவிட்டாலும், தளவாடங்கள் கொடுப்பது, நிறுத்திவிடுவது போன்ற விவகாரங்களில் ஜனதிபதி தமது தனிஉரிமையைப் பயன்படுத்தியிருக்கக் கூடும். அமெரிக்காவின் ஏழாம் கப்பற்படையை (Seventh Fleet) வங்காள விரிகுடாக்கடலில் நுழையும்படி உத்தரவிட்டதும் ஜனதிபதியின் முடிவு என்றுதான் கருதவேண்டும். இந்தக் காலத்திலும் வெளிநாட்டு விவகாரங்களில் ஜனதிபதிக்கு அளவற்ற அதிகாரம் உளது. ஜனதிபதியுடன் உடன்படாது காபினெட் உறுப்பினர்கள் எப்படிக் கருத்தைத் தெரிவிக்கிருர்கள் என்பது புலனுகவில்லை.

இக்காலத்து ஜனதிபதிகளின் வேலையின் பெருக்கம் பன்மடங்கு விரிந்துவிட்டது. இப்போது 25 லட்சம் அரசாங்க ஊழியர்கள் இருக்கிருர்கள். அவர்களுடைய சம்பளத் தொகை மொத்தம் 17 பில்லியன் டாலர்கள். ஏறத்தாழ 2,000 அலுவலகங்கள் உள்ளன. அவை செலவிடும் தொகை 15 கோடி டாலர்கள். ஜனதிபதிக்கு ஏறத்தாழ மூன்று செயலர்களும் ஆறு உதவியாளர்களும் உள்ளார்கள். ஹாரி ஹாப்கின்ஸ் (Harry Hopkins) என்ற ஒருவரை ஃபிராங்கிளின் ரூஸ்வெல்ட் தமது ஆலோசகராக நியமித்துக்கொண்டார். ஐசனேவர், ஷர்மன் ஆடம்ஸ் (Sherman Adams) என்பவரை நியமித்துக்கொண்டார். கென்னடி தம் தம்பி இராபர்ட் கென்னடியைத் தலைமை வழக்கறிஞராக நியமித்து அவரையே ஆலோசகராகப் பயன்படுத்திவந்தார். சிவில் உரிமைகளை வற்புறுத்தும் நடவடிக்கைகளில் இராபர்ட் மிகவும் பேருதவியாக இருந்தார். கென்னடியை நெருங்கி இருந்தவர்களை எல்லாம் ஹார்வார்டு பல்கலைக்கழகத்துக் கூட்டம் என்று சொல்வது வழக்கம். ஜனதிபதி ஜான்சன் பலரைப் புதிதாக நியமித்தார்; எல்லோரையும் யோசனை கேட்டார்; ஆனல், தம் கருத்தை வெளியிட மாட்டார். எந்த ஜனதிபதியும் தாம் நியமித்த ஒருவரை அவர் முடிவுகள் ஏற்கத்தக்கனவாக இல்லாவிட்டாலும் வெளியேற்றுவது கடினம்.

நெருக்கடி காலங்களில்தான் ஜனதிபதியின் திறமை மிகவும் தேவை. கி.பி. 1962-ல் கியூபாவில் (Cuba) ரஷ்யர்கள் வெடிகுண்டுகளை வீசினர்கள் என்ற செய்தி ஜனதிபதிக்கு எட்டியது.

பகைவர்களை விமானத்திலிருந்து தாக்குவதெனத் தீர்மானிக்கப் பட்டது. பல ஆலோசகர்கள் கூடி இந்த யோசனையைக் கூறினார்கள். கென்னடி இதனை ஏற்றுக்கொண்டார். பின்னுல் கியூபா விவகாரம் அமெரிக்காவின் புகழைப் பெருக்கவில்லை.

சென்ற இரண்டாவது உலகப்போரில் ஜப்பானைச் சரணுகதி அடையச் செய்வதற்குக் காபினெட் உறுப்பினர்களும் அரசின் விஞ்ஞான நிபுணர்களும் பலவிதமான யோசனைகளை ஜனுதிபதி ட்ருமனுக்குக் கூறினுர்கள். விமானத் தாக்கிஞல் ஜப்பானைப் பணிய வைப்பதற்குப் பல அமெரிக்கர்களைப் பலிகொடுக்க வேண்டியிருக்குமாகையால், முக்கிய இராணுவத் தளவாட உற்பத்தி நிலையத்தின்மேல் அணுகுண்டு வீசலா மென்றும், முதலில் ஜப்பானியர்களைச் சரணடையுமாறு எச்சரிக்கை கொடுக்க வேண்டுமென்றும் ட்ருமன் முடிவு செய்தார். ஜப்பானியர்கள் சரணடைய மறுத்துவிட்டபடியால், ஆகஸ்டு மாதம் 6ஆம் நாள் காலை அணுகுண்டு வீசப்பட்டது. 17 விஞடிக்குள் ஹிரோஷிமா நகரம் ஒரு நெருப்பு உருண்டை யாய் மாறி நாசமடைந்தது. ட்ருமன் அதைத் தவிர்த் திருக்கலாம். ஆஞல், வரலாறு என்ன சொன்னுலும் சொல் லட்டும். அமெரிக்க உயிர்களைக் காப்பதற்கு அதைத்தவிர வேறு வழியில்லை என்றுதான் தாம் அந்த முடிவுக்கு வந்ததாக ட்ருமன் கூறினுர். இஸ்ரேயில் அங்கீகார விவகாரத்திலும் அரசியல்துறைப் பகுதியும் (State Department) இராணுவ அதிகாரிகளும் அதற்கு எதிராக இருந்தனர். எனினும், ட்ருமன் தமது யூத நண்பர் இருவருடன் ஆலோசித்து அதற்கு அங்கீகாரம் நல்கினர். கொரியாப் போரிலும், தெற்குக் கொரியாவுக்கு விமானப்படை, கப்பற்படை உதவி அனுப்ப ஒரு நொடியில் முடிவெடுத்துத் தளபதி மேக் ஆர்தரை (General Mac Arther)அனுப்பிஞர். நல்ல காலமாக ஐக்கிய நாடு சபையின் தீர்மானம் இதைத் தடுக்கவில்லை.

வியட்நாம் விவகாரம் ஜனுதிபதியின் பொறுப்பை நன்கு விளக்கும். கென்னடி காலத்திலேயே தெற்கு வியட்நாமுக்கு உதவியாக அமெரிக்கப் படையினர் பல்லாயிரவர் அனுப்பப் பட்டனர். டோங்கின் வளைகுடாவில் அமெரிக்கக் கப்பல்களை வடக்கு வியட்நாம் தாக்கி மூழ்கடித்தது. ஜனுதிபதி ஜான்சன் அமெரிக்கப் படையினரைக் காப்பாற்றப் பாதுகாப்பு வேலையை விடத் தாக்குதல் வேலையில் செல்லவிடுவதே நல்லதென்று எண்ணிக் கடும்போர் செய்ய உத்தரவிட்டார். ஐசனேவர் காலத்திலிருந்து நான்கு ஜனுதிபதிகள் செய்த முடிவுகளினுல்

ஆசியாவில் போர் செய்வது முட்டாள்தனம் என்று தளபதி ஒருமுறை கூறியபோதிலும், இன்னும் வியட்நாம் போரில் அமெரிக்கா சிக்கிக்கொண்டிருக்கிறது. நிக்சனுக்கும் வியட்நாமிலிருந்து விடுதலை பெறுவதற்கு மனமில்லை. ஆசிய நாடுகளைக் கம்யூனிஸ்ட் பிடிப்பில் அகப்படாமல் காப்பாற்றுவதற்காக அமெரிக்கா இப்படிச் சிக்கிக் கொண்டிருக்கிறது. பின் வந்த ஜனாதிபதிகள் முன் போனவர்களின் செயல்களின் விளைவிலிருந்து தப்பமுடியவில்லை. மீண்டும் வியட்நாமில் அமெரிக்க விமானங்களிலிருந்து குண்டு வீசும்படி நிக்சன் உத்தரவிட்டார். அது சில நாள்களில் நிறுத்தப்பட்டது. வியட்நாமில் என்ன செய்வது என்று காபினெட் உறுப்பினர்கள் கூடி முடிவு செய்வதில்லை என நன்கு விளங்குகிறது.

இந்த விவகாரங்களில் காங்கிரசுக்கு அதிகாரம் இல்லை. படைகளைப் பயன்படுத்துவதற்கு ஜனாதிபதிக்குத்தான் முழு அதிகாரம் இருக்கிறது. ஜனாதிபதி அப்போதைக்கப்போது அமெரிக்க ஐக்கிய நாட்டின் நிலைமையைப்பற்றி அறிக்கை தர வேண்டுமென்பது அரசியல் மரபு. அதன்மேல் காங்கிரஸ் உறுப்பினர்கள் கூறும் கருத்துகளை ஜனாதிபதி ஆய்வு செய்வார் என்ற நம்பிக்கையும் மரபேயாகும். வெளிநாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்யும் வேலைகளைத் தவிர்த்துச் செனேட் பரிவுரைகளை ஜனாதிபதி ஆராயவேண்டுமென்பது கட்டாயம் இல்லை.

ஆபிரகாம் லிங்கன் காலத்தில். ஜனாதிபதியின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்த எண்ணி உள்நாட்டுப்போர் விவகாரங்களில் தலையிடுவதத்கு ஒரு கூட்டுக் குழுவைக் காங்கிரஸ் நியமித்தது. ஆனல், லிங்கன் தந்திரமாக அதைப் பொருட்படுத்தாமல் தமது காபினெட் சபை தமக்குட்பட்டதாக வைத்து முடிவுகளை எடுத்தார். முதல் உலகப் பெரும் போரிலும் வில்சன் தம் சொந்த அதிகாரத்தைக்கொண்டே வணிகக் கப்பல்களை ஆயுதம் தாங்கிய போர்க் கப்பல்களாக மாற்ற உத்தரவிட்டார்.

ஜனாதிபதி கரங்கிரசுக்கு அறிக்கை விடும் வழிகள்: (1) ஐக்கிய நாட்டின் நிலையைப்பற்றி நேரிலோ அரசியல் துறைச் செயலர் மூலமாகவோ அறிக்கை செய்தல். (2) வரவு செலவுத் திட்டம், மற்றும் பொருளாதாரத் திட்டங்களைப் பற்றிய அறிக்கைகள் செய்தல், (3) சட்டங்கள் நிறைவேற்றப் பிரத்தியேகமான அறிக்கைகளைச் சமர்ப்பித்தல், (4) உதவி

ஜனுதிபதிக்கும் மற்றையோர்க்கும் கடிதம் எழுதித் தெரிவித்தல், (5) நெருக்கடியான சமயங்களில் செனேட்டு, காங்கிரசு சந்திப்புக் கூட்டம் ஏற்படுத்துதல் முதலியன. இவைகளிலும் கூடக் காபினெட் அங்கீகாரம், கருத்து, இசைவு எவையேனும் பெறவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. எனவே, காங்கிரசுக்கும் ஜனுதிபதிக்கும் இடையே ஒருவிதமான இழுப்பு (tension) எப்போதும் இருந்துகொண்டே இருக்கும் என்று ட்ரூமன் கூறியது உண்மையே.

ஜனுதிபதி ஏதாவது விரைந்து நடவடிக்கை எடுக்க முயற்சி செய்தால், உடனே காங்கிரஸ் அதற்கு இடம் தராது. இது போல ஜனுதிபதிகள் பலர் தொல்லைப்பட்டதுண்டு. ஃபிராங்ளின் ரூஸ்வெல்ட் காலத்தில்மட்டும் பொருளாதார நெருக்கடியாலும் விலைவாசிகள் வீழ்ந்தமையாலும், ஜனுதிபதியின் திட்டங்களில் காங்கிரஸ் தலையிடுவதில்லை. நாட்டின் நன்மையை நாடி ஜனுதிபதி முன்நின்று விரைந்து செயலாற்றினர். காங்கிரஸ் அதற்கு உடன்பட்டது. காங்கிரஸ் பலதிறப்பட்ட கருத்துகள் கொண்டவர்களைப் பெற்றிருப்பதால் ஒருதலையாகச் செயல்பட மாட்டாது. எனவே, ஜனுதிபதி பல சமயங்களில் முன்நின்று செயலாற்ற வேண்டும். ரூஸ்வெல்ட்கூடக் குடியானவர்களுக்குப் புது நியாயம் (New Deal) என்ற திட்டப்படி நடவடிக்கைகள் எடுத்தபோது, அதற்கென்று ஏற்படுத்தப்பட்ட அதிகாரவர்க்கம் சட்ட வரம்பிற்குப் புறம்பானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எனவே, ரூஸ்வெல்ட் தமக்குக் கீழ்ப்படியக்கூடிய நீதிபதிகளை நீதிமன்றத்திற்கு நியமிக்க முயன்றுர். காங்கிரஸ் அதற்கு ஆதரவு காட்டவில்லை. இதனுல் ரூஸ்வெல்டுக்குக் காங்கிரசின்மீது இருந்த ஆதிக்கம் குறைந்தது.

ஐசனேவர் காங்கிரசை நயமாக்த் தம்வசப்படுத்தும் முறையைக் கையாண்டார். அது ஓரளவுக்குப் பயன்பட்டது. ஜனுதிபதி நாட்டின் நலத்தை நாடி முன்வந்து எல்லா நடவடிக்கைகட்கும் முற்படவேண்டுமென்பதும் பலதிறப்பட்ட கருத்து உடையவர்கட்கிடையே தரகர்போல் மட்டும் இருக்கக் கூடாது என்பதும் கென்னடியின் கொள்கை ஆகும். நகர்ப்புறத்து விவகாரங்கள் மற்றும் வீட்டுவசதி முதலியவைபற்றி ஒரு புதிய துறையை ஏற்படுத்தக் கென்னடி எண்ணியபோது காங்கிரசு அதனை மறுத்துவிட்டது. இது கென்னடிக்கு ஒரு தோல்வியே.

ஜான்சன் சட்டமன்றத்தவர்களோடு தாமும் ஒன்றுகூடி ஒற்றுமையை ஏற்படுத்தினர். இது ஜான்சன் சிகிச்சை (Johnson Treatment) என வழங்கப்பட்டது. செனேட்டில் ஜான்சன் பலகாலம் சேவைசெய்து அதன் தலைவராக இருந்தமையால், அவருடைய அனுபவம் இந்த விவகாரத்தில் பயனளித்தது. உண்மையிலேயே காங்கிரசுக்கும் ஜனாதிபதிக்கும் ஓர் இழுப்பும் முரணும் தேவையில்லை. ஆனால், இது ஜனாதிபதியின் திறமையைப் பொறுத்தது. இதில் காபினெட்டுக்குப் பங்கில்லை.

நாட்டின் தளபதி (Commander-in-Chief) என்ற முறையில் போர் விவகாரத்தில் ஜனாதிபதியே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டியவர் ஆவார். அணுகுண்டுபற்றிய விவகாரத்தில் ஜான்சன் தாமே எல்லாப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு படைத்தலைவர்கட்கு அதிகாரம் தரவில்லை. ஜனாதிபதி இராணுவங்களின் முதல் அதிகாரியுடன் (Chief of staff) ஆலோசனை செய்தால் மட்டும் போதும் என்ற நிலை உள்ளது. சட்டத்தில் காங்கிரசுக்கு இராணுவம், கடற்படை முதலியவைகளைப் பெருக்கவும் அவற்றிற்கு வேண்டிய தளவாடங்களைக் கொடுக்கவும் அதிகாரம் உண்டு. ஆனால், படைகளைப் பயன்படுத்துவது ஜனாதிபதியின் தனி விருப்பமேயாகும்.

ஜனாதிபதியின் ஆக்கத்தின் விரிவு அவரவரின் தகுதியையும் திறமையையும் பொறுத்தது. அரசியல் சட்டத்தில் ஜனாதிபதியின் பொறுப்புகள் திட்டமிடப்பட்டுள்ளன. அவைகட்குப் புறம்பான, ஆனால் தொடர்புள்ள பல விவகாரங்களில் அவர் தம்முடைய ஆக்கத்தின் சிற்பியாக இருக்கலாம். அதற்கு ஒரு தடையும் இல்லை. எடுத்துக்காட்டாகக் கென்னடி உருக்கு விலைகளை உயர்த்தக் கூடாதென்று தம் சொந்த அதிகாரத்தால் கட்டளையிட்டுப் பிரபல உருக்கு வணிகப் பிரமுகர்களை முறியடித்தார். இந்த விவகாரத்தில் கென்டியின் காபினெட் உறுப்பினர் ஹாட்ஜஸ் உருக்கு உற்பத்தியாளர்கள் ஜனாதிபதியின் விருப்பத்துக்கு இடங்கொடுக்காவிட்டால், சட்ட அடிப்படையில் விலை ஒழுங்குகள் நடைமுறைக்கு வரும் என்று எச்சரிக்கை செய்தார். பாதுகாப்புத் துறை குறைந்த விலையை நிறுவப் பெரிய கொள்முதல்களைச் செய்தது. இத்தகைய சமயங்களில் காபினெட் ஜனாதிபதியின் திட்டங்கட்குத் தனது சட்ட அடிப்படை வலிமையை உதவியாக வழங்கலாம்.

சட்டத்தில் வரையப்படாத கடமைகளை யாற்றும்போது பொதுமக்கள் கருத்தொன்றே ஜனாதிபதியின் ஆக்கத்திற்கு உதவிபுரியும். காபினெட்டும் அதற்கு எதிர்ப்பாக இருக்க இயலாது. ஆனால், பொதுமக்கள் கருத்து எவ்வாறு இருக்கும் என்று முன்னதாக முடிவுசெய்ய முடியாது. அண்மைக் காலத்தில் பொதுக்கருத்து ஆய்வுத்தேர்தல் (opinion poll) நடத்திப் பொதுமக்கள் கருத்து அறிந்துகொள்ள முடிகிறது. அதன்படி சிற்சில சமயங்களில் ஜனாதிபதி தமது முடிவுகளையும் திருத்திக்கொள்ள வேண்டியிருக்கும். எனவே, பொதுவாக ஜனாதிபதிகள் தங்கள் ஆக்கத்திற்குத் தாங்களே சிற்பிகள் என்று நினைப்பார்கள். ஆனால், ஜனாதிபதி டாஃப்ட் போன்று சட்டத்தில் தோய்ந்தவர்கள் யாதொன்றுக்கும் ஓரளவு சட்ட ஆதாரம் வேண்டுமென்று நினைத்தார்கள். ஹூவர் மக்கள் ஆதரவே ஜனாதிபதியின் ஆக்கம் என்று நம்பினார். ரூஸ்வெல்ட் ஜனாதிபதி ஒரு தலைமை அதிகாரிமட்டுமல்லர்; அவர் அறத்தை நிலைநாட்டும் பொறுப்பையும் ஏற்பவராவார் என்று கருதினார். அவர் நான்குமுறை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜனாதிபதி ஒரு சர்வாதிகாரி அல்லர். சர்வாதிகார மனப்பான்மையோ ஒருதலைச் சார்பான போக்குகளோ உடையவராய் இருந்தால், அவரது செல்வாக்கு நீடிக்காது. மக்கள் அவரைப் பின்பற்றமாட்டார்கள். ஜனாதிபதி உதவி ஜனாதிபதியிடம் ஆலோசனை கேட்கவேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை. பதவி நியமனங்களிலும் ஜனாதிபதி அவரைக் கேட்க வேண்டியதில்லை. காபினெட் சபையிலும் உதவி ஜனாதிபதிக்கு இடம் இல்லை. ஆனால், உதவி ஜனாதிபதி, ஜனாதிபதி இறந்தாலோ, கொல்லப்பட்டாலோ, நீக்கப்பட்டாலோ ஜனாதிபதி ஆகலாம். தவிர, தேர்தலிலே ஜனாதிபதி ஆகலாம். 36 ஜனாதிபதிகளுள் எண்மர் உதவி ஜனாதிபதிகளாக இருந்தவர்களே ஆவர். இந்தியாவில் உள்ளது போல் உதவி ஜனாதிபதிக்குக் காபினெட்டில் இடமில்லை. ஜனாதிபதிக்கு விபத்து நேர்ந்தால் யார் அடுத்த ஜனாதிபதி என்று முடிவு செய்வதற்குக் காபினெட்டுக்கும் அதிகாரம் இல்லை.

பாகம் III

பாரதம்

1. பழங்கால அரசியலில் அமைச்சு

பாரதம் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து கி. பி. 1947ஆம் ஆண்டு விடுதலை அடைந்தது. இந்திய அரசியல் அமைப்பு (Constitution of India) 1950ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் நாள்முதல் நடைமுறையில் வந்தது. இந்தச் சட்டத்தில் அமைச்சரவையைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்த அமைச்சரவை அமைப்பு ஏறக்குறைய பிரிட்டிஷ் அமைப்பைப் பின்பற்றியதாகும். இந்திய அரசியல் அமைப்பைப்பற்றி அடுத்த பகுதியில் கவனிப்போம்.

பழங்காலத்தில் இந்தியாவில் நடைபெற்ற பல்வேறு அரசாட்சிகளில் முடியாட்சிதான் நிலவிற்று. இக்காலத்துக் குடியாட்சிமுறை அக்காலத்தில் இல்லை. முடிமன்னர்கள் அமைச்சர்களின் ஆலோசனையுடன் ஆட்சிபுரிந்தார்கள். அமைச்சர்கள் மக்களின் பிரதிநிதிகள் அல்லர். அவர்கள் ஒரு கூட்டு அவையாகவும் தொழில் புரியவில்லை. மன்னரும் அமைச்சரும் மக்களின் நலன்களைக் கவனித்துவந்தார்கள். மக்கள் மன்னரிடம் முறையிடுவதற்கு வாய்ப்புகள் உண்டு. மக்கள் குறைகளைத் தீர்ப்பதற்கும் நீதி செலுத்துவதற்கும் மன்னர் அமைச்சர்களை ஆலோசனை கேட்பார். வடநாட்டில் மௌரிய மரபு அரசர்களும் குப்தமரபு அரசர்களும் இவ்வாறுதான் ஆட்சி நடத்தினார்கள். தெற்கே சேர, சோழ, பாண்டிய, பல்லவ அரசர்களும் இவ்வாறுதான் அரசுபுரிந்தார்கள். இவர்கள் மக்களோடு மிகுந்த தொடர்புகொண்டவர்களாக இருந்தார்கள்.

இந்தியாவில் பழங்காலத்திலேயே அறநூல்களும் நீதிநூல்களும் எழுதப்பட்டிருந்தன. மனுநூல் எழுதப்பட்ட காலம் ஏறத்தாழக் கி.மு. 1800 என்பர். அதற்குப் பின் ஏறத்தாழக் கி. மு. 400 வரை பலர் அறநூல்களை எழுதினார்கள். மகாபாரதம்

போன்ற இதிகாசங்களில் (ஏறத்தாழக் கி.மு. 900) அரசியல் முறையைப்பற்றிச் சிற்சில இடங்களில் காணலாம். அரசியலைப்பற்றிய மிகப் பழைமையான தனிநூல் கௌடில்யர் இயற்றிய பொருள்நூல் (அர்த்த சாத்திரம்) ஆகும். கௌடில்யர் காலம் ஏறத்தாழக் கி.மு. 400-320 என்பர்.

தென்னாட்டில் திருவள்ளுவர் எழுதிய திருக்குறட் பொருட் பாலில் அரசியல் அழகாகக் கூறப்பட்டுள்ளது. திருவள்ளுவர் காலம் ஏறத்தாழக் கி.மு. 100 என்று கூறப்படுகிறது. கௌடில்யரின் பொருள்நூல்தான் முதன்முறையாக அரசியலைச் சமயநூல்களின்றும் வேறுபடுத்தித் தொகுக்கபட்டதென்பர். இதை ஆன்விக்ஷி என்பர். எனினும் கௌடில்யரின் பொருள் நூலிலும் (அர்த்த சாத்திரத்திலும்) அறியாமைக்குரிய சில நம்பிக்கைகளும், மாந்திரிகம் போன்ற கூற்றுகளும் காணப்படு கின்றன. கௌடில்யர் தமது நூலின் தொடக்கத்தில் தாம் பழைய பொருள்நூல்களை ஆதாரமாகக் கொண்டு புதியவற்றைப் புகுத்தியும் பழையவற்றைக் கழித்தும் நல்லாட்சிக்கும் வீரத் தன்மைக்கும், கலைகள் விளங்குவதற்கு ஆதாரமாக உள்ள வற்றிற்கும் உகந்த முறையையே எடுத்துக் கூறுவதாகக் கூறியுள்ளார். எனினும், கௌடில்யர் வருணாசிரம அடிப் படையில் மன்னராட்சியை விளக்கி இருக்கிறார்.

திருவள்ளுவர் காட்டிய அரசும், அமைச்சும், குடியும் அத்தகையவை அல்ல. பரம்பரை வழக்கங்களைக் கொண்ட சமூகத்துக்குக் (Traditional Society) கூறப்பட்டவை யல்ல. மனித சமூகத்திற்கு (Open Society) எந்தக் காலத்துக்கும் உகந்த உண்மைகளே திருக்குறளில் கூறப்பட்டுள்ளன. அது தமிழர் நாகரிகத்தின் சிறந்த பண்புகளைத் தழுவி எழுதப்பட்ட தெனலாம். திருவள்ளுவர் பொருட்பாலைத் தனி அரசியல் நூலாக அமைக்கவில்லை. எனினும், மக்கள் தொடர்புகொண்ட மன்னராட்சியின் அம்சங்களை அவர் பொருட்பாலில் இனிது விளக்கியுள்ளார்.

கௌடில்யரின் அரசுமுறைக்கு ஆதாரங்கள் ஆன்விக்ஷி, திரையீ, வார்த்தை, தண்டநீதி (Anvikshi, Trayi, Vartha, Dan-danithy) என்பவை. ஆன்விக்ஷி என்பது பொருளுண்மையை ஆராய்தற்குரிய காரணங்களை எடுத்துக்கூறும் தருக்கநூல் முதலியன; திரையீ என்பது இருக்கு, யசுர், சாமவேதங்கள்; வார்த்தை என்பது உழவு, பசுக்காவல், வாணிகம் எனும் மூன்று; தண்டநீதி என்பது அரசநீதி. கௌடில்யம் தண்ட

நீதிக்கே மிகுந்த சிறப்புத் தருகிறது. மற்றைய மூன்றைப் பெறுவதற்கும் காத்தற்கும் தண்டம் கருவியாக உள்ளது என்றும், அதனைப்பற்றி நிகழும் நீதி தண்டநீதி என்றும் கௌடில்யர் கூறுகிறார். நால்வகை வருண மக்களையும் காப்பது அரசனது தண்டநீதியாகும். தண்டம் என்பதன் பொருள் நூன்முறை வழுவாது நன்கு நுனித்துணர்ந்து செலுத்தப்படும் அரசநீதி. முதலதிகரணம் ஒன்று முதல் பதினாறு பிரகரணங்களில் அமைச்சரின் இலக்கணங்களும் அரசனது செயல் முறையும் கூறப்பட்டுள்ளன. அமைச்சர்களின் முதல்வர் மந்திரி எனப்படுவார்.

கௌடில்யர், திருவள்ளுவர் ஆகியவர்களுடைய அரசியல் கருத்துகளை முழுதும்கூற ஈண்டு இடம் இல்லை. அமைச்சரவைபற்றிய கருத்துகளைமட்டும் மேலே கூறுவோம்.

2. கௌடில்யத்திலும் வள்ளுவத்திலும் அமைச்சு

அமைச்சரவையில் அமைச்சர் பன்னிருவர் இருக்கவேண்டு மென்று மானவரும், பதினறுவர் இருக்கவேண்டுமென்று பார்க்கற்பத்தியரும், இருபதின்மர் இருக்கவேண்டுமென்று ஔசனரும் கூறுவர். கௌடில்யர் திறமைக்குத் தக்கவாறு இருக்கவேண்டுமென்று கூறுகிருர். அமைச்சர்களுக்கு முதல்வர் 'மந்திரி'; அடுத்தபடி முக்கியமானவர் 'நிதி காப்பாளர்'; சேனைத்தலைவர் அமைச்சராகக் கருதப்படவில்லை. புரோகிதர் சில நேரங்களில் அழைக்கப்படுவர். அரசன் அமைச்சரவையை ஒன்றுகூட்டி ஆலோசனை கேட்கத் தேவையில்லை. எக் காரியத்தில் யார் தகுதி உடையவராகத் தெரியப்பட்டனரோ அன்னரோடு அரசன் சூழக்கடவன். மூன்று நான்கு பேரைக் கூட்டி ஆராயவேண்டும். ஒருவனையே கூடினல் அவன் விரும்பியவண்ணம் நடந்துகொள்பவனுக அரசன் ஆவான். இருவராயின் அவ் விருவரும் ஒத்தகருத்தை உடையவர் களாயின் அரசனை அம் முறையால் தம்வயப்படுத்திக்கொள் வர்; அல்லது அவ் விருவர் முரண்பட்ட கருத்துடையராயின் காரியத்துக்குக் கேடும் தாமதமும் நேரிடும். மூவர் அல்லது நால்வர் ஆயின் மேற்கூறிய குற்றங்கள் அறவே ஏற்படா. நான்கு பேருக்கு மேற்படுமானல் காரியத்தை முடிவுசெய்தலும் அதை வெளிப்படாமல் காத்தலும் சிரமம். இது பொதுவிதி. ஓரொரு சமயம் ஒருவனேடாயினும், இருவரோடாயினும், தனித்தோ, கூட்டியோ திறமைக்கு ஏற்றவாறு சூழ்ச்சி செய்யலாம். ஒரு காரியத்தை முடிவு செய்வதற்கு ஐந்து அம்சங்களைக் கருதவேண்டும் என்று கௌடில்யர் கூறுவர். அவை: (1)உபாயம் அல்லது முறை, (2)போதுமான பொருளும் வினைசெய்வாரும் உடைமை, (2) ஏற்றகாலம், இடம் முடிவு

செய்தல், (4) வரக்கூடிய இடையூறுகளை முன்னறிந்து களைதல், (5) காரியத்தின் பயனை நன்கு அறிந்துகொள்ளுதலும் செய்து முடித்தலும் என்பன. அரசன் தன் அணிமையிலுள்ள உறுப்பினரோடு கலந்தும், சேய்மையிலுள்ளவரோடு முடங்கலைப் போக்கியும் ஆலோசிக்கவேண்டும். சில காரியங்களில் அமைச்சர்களோடு, வேறுபட்ட சூழ்ச்சித் துணைவர்களையும் ஒன்று கூட்டி வினவுதல்வேண்டும். அக் குழுவில் மிகுதியான உறுப்பினர் கூறுவதையே ஏற்றுக்கொள்ளலாம். இது பொதுமுறை. சில சமயங்களில் காரியம் நிறைவேறுவதற்கு எது உரியதோ அதை ஏற்றுக்கொள்ளல் தகுதி. அரசனது ரகசியத்தைப் பிறர் அறியக்கூடாது. ஆனால், அவன் பிறருடைய ரகசியத்தைத் தான் அறிய வழிதேடலாம். எப்படி வேதம்படிக்காதவன் சில காரியங்கட்குத் தகுதியற்றவனோ, அதுபோல் அரசியல் நூல் உணராதவன் அரசனது ரகசியங்களில் கலந்துகொள்ளத் தகுதியற்றவன் ஆவான்.

இனி அமைச்சர்களின் தகுதிகளைக் கூறுங்கால் கௌடில்யர் அக்காலத்துச் சூழ்ச்சிகளையொட்டிச் சில விதிகளைக் கூறுவர். அரசர் தம் உடன் கற்றவர்களுடைய திறமையையும் மனத் தூய்மையையும் நன்கு அறிந்திருப்பாராதலின், நம்பிக்கைக்குத் தகுதியுடைய அன்னாரை அமைச்சராக நியமிக்கலாம். ஆனால், உடன்கற்றவர் விளையாட்டிலும் கலந்திருப்பர்; ஆதலின் அவர்கள் அரசனை அவமதித்தலும் கூடும். அன்றியும் அரசனது மறை ஒழுக்கத்தில் கூடி ஒழுகினோர் ஒத்த ஒழுக்கக் கேடுடையவராக இருப்பர். ஆனாலும், தம் ஒழுக்கக்கேட்டை அறிந்தவனாகையால் அவர்கள் அச்சத்துடன் நடக்கக்கூடும். பொதுவாக அன்பின்பால் மட்டுமல்லாமல் அறிவின் திறனையும் சிந்தித்து அமைச்சரை நியமித்தல் தகுதி. ஒருவருடைய காரியங்களின் திறமையாலும் அறிவு முதலியவற்றின் திறமையாலும் அவருக்கு அவ்வப் பதவிக்குரிய தகுதி துணியப்படல் வேண்டும்.

அமைச்சர்களின் தலைவர் 'மந்திரி' எனப்படுவார். ஏனைய அமைச்சர் எல்லாம் அவருக்கு உட்பட்டவர். முதலமைச்சருக்குரிய குணங்கள் வருமாறு: தம் அரசனது நாட்டிற் பிறத்தல், நற்குடிப் பிறப்பு, நற்சுற்ற முடைமை, கலைப்பயிற்சி, பொருள் நூல் உணர்ச்சி, மதிநுட்பம், மறவியின்மை, சோர்வின்மை, சொல்வன்மை, காலம் இடங்களுக்கு ஏற்ற அறிவுடைமை, தூய்மை, அரசனிடத்து உறுதியான அன்பு, செருக்கின்மை,

ஆசையின்மை, பகைசெய்யாமை முதலியவாம். எல்லாம் அமைவது அரிது. எனினும், காற்கூறு குறைந்தவர் இடையவர்; முக்கால்கூறு குறைந்தவர் கடையவர். மேற்கூறிய குணங்களை நம்பிக்கையுடையோர் முகமாகவும், ஒத்த கல்விப் பயிற்சியுடையார் முகமாகவும், காரியம் செய்தல் முகமாகவும், நடத்தை கொள்ளும் முறையினின்றும் அறியக்கூடும். மந்திரி, புரோகிதனை அமைத்தல் வேண்டும். புரோகிதன் வேதங்கள், வேதாங்கங்கள், கணிதநூல், நிமித்த நூல், அரசநீதி முதலியவைகளைப் பயின்றிருக்கவேண்டும். தவிர, அரசனுக்குத் தெய்வத்தாலும் மனிதராலும் வரக்கூடிய கேடுகளை மந்திரங்களாலும், உபாயங்களாலும் போக்கவல்ல திறமை படைத்தவனாகவும் இருத்தல் வேண்டும்.

அரசன், மந்திரி புரோகிதரோடு கலந்துகொண்டு அமைச்சர்களைப் பலவிதச் சோதனைகளினால் மறைமுகமாக ஆராய்தல் வேண்டும். ஆனால், அந்தச் சோதனைகளை அமைச்சருக்குக் கலக்கமுறும்படி செய்யலாகாது. (திருக்குறளில் இக் கருத்துகள் எல்லாம் 'தெரிந்து தெளிதல்' என்று மேலான முறையில் கூறப்பட்டுள்ளது). அரசன் அமைச்சர்களைத்தவிர ஒற்றர்களையும் அமைத்துக்கொள்ள வேண்டும். மந்திரி முதலியோரைக் குறித்தும் ஒற்றுடல் செய்யச்செய்து ஆராயக்கடவன். கௌடில்யர் அமைச்சர் இலக்கணங்களை வெகு நுட்பமாகக் கூறியுள்ளார். அமைச்சர்களுக்குக் கூட்டுப்பொறுப்பு என்பது இந்நாளைப்போல் அப்போது இல்லை. எல்லோரும் அரசனுக்கு ஆலோசகர்களே தவிரத் தங்கள் கூட்டுப்பொறுப்பால் ஒன்றையும் செய்யஇயலாது. மக்கள்தொடர்பு அமைச்சர்கட்கு உண்டு எனினும், மக்களால் ஒரு மன்றத்தில் குற்றம்சாட்டப் பட்டு நீக்கவோ, வேறுவிதத்தில் ஆதரவு கூறவோ பொறுப்பு இல்லை. முடியாட்சியில் மன்றம்கொண்ட மக்களாட்சிக்கு (பார்லியமென்டரி அரசுக்கு) இடமில்லை. ஆனால், அரசன் எப்போதும் குடிமக்களின் நலத்தை நாடவேண்டும். அரசனுக்குப் பிரியமான காரியம் அவனுக்கு நன்மை பயப்பதாகாது. குடிமக்களுக்குப் பிரியமான காரியம் அரசனுக்கு நன்மை பயப்பதாகும். ஆதலின், அரசன் என்றும் முயற்சியுடையவனாய் அரசியற் காரியங்களைச் செய்யவேண்டும். அரசனுக்கும், குடிகளுக்கும் தொடர்பு முறைமைகளைக் கௌடில்யர் விரிவாகக் கூறவில்லை. அமைச்சர்கட்குப் புதிய சட்டங்களை நிறைவேற்றுதல் முதலிய பொறுப்புகள் இல்லை. ஒவ்வொரு துறைத் தலைவர்களுடைய பணிகளை மேற்பார்வை பார்த்து நீதி செலுத்துவதே அமைச்சர்களின் கடமையாகும். அரசனுடைய

நிலை வேறுபாட்டிற்கேற்ப அரசியற் புத்தமைப்பு ஏற்படுத்துதல் அமைச்சர் கடமையாகும். ஓர் அரசன் அரசியலுக்கு உதவானுனல் அவன் புதல்வனுக்கு முடிசூட்டி முன்னைய அரசியலைப் புதிப்பித்தமைத்தல் அமைச்சர் தொழிலாகும். அரசனுக்குக் கடும் நோய், இறந்துவிடக்கூடும்நிலை முதலியவைகளும் புத்தமைப்புக்கு இடம்தரும். எந்தச் சந்தர்ப்பமாயினும் தனித் தலைமையரசாக இருக்கவேண்டும் என்று கௌடில்யர் குறிப்பிடுவர். அதாவது, தனி அரசனின்றி அரசு நடைபெறக்கூடாது என்பது பொருள். முடியாட்சியின் கூறு இதுதான். அரச பரம்பரையைப் பேணுதல் அமைச்சரின் கடமை. அமைச்சர்கட்கிடையே முரணிருப்பின் வேற்றரசனுக்கு இடம்கொடுத்தல் போலாகும். நிலையான அரசன் இருந்தால், மக்கள்நலம் பேணப்படும் என்பது பொருள்.

கௌடில்யர் காலத்தில் இக்காலத்துக் குடியாட்சி அமைச்சை எதிர்பார்க்கலாகாது. முடியாட்சியிலும் அமைச்சர்கள் ஒரு முக்கிய அம்சம் பெற்றிருந்தார்கள். அரசன் அமைச்சர்களின் ஆலோசனையைக் கேட்கவேண்டுமென்று கூறப்படுகிறது. அமைச்சர்களைக் கேட்காமல் அரசன் அரசு செலுத்துவானுயின், அவன் கருத்தும் நிறைவேருது; அரசையும், குடிமக்களின் ஆதரவையும் இழப்பான் என்றும் காட்டப்படுகிறது. அரசர்களுக்கு அமைச்சர்களின் ஆலோசனையை நிராகரிக்கும் அதிகாரம் உண்டு. ருத்திரதாமன் என்ற மௌரிய அரசன் சுதர்சன ஏரியைத் தூர்வார வேண்டுமென்பதை அமைச்சர்கள் எதிர்த்தார்கள்; அதன் விளைவாக அரசன் தனது சொந்தப் பணத்திலிருந்து அந்த வேலையை நிறைவேற்றியதாகக் கூறப்படுகிறது.

மௌரிய வம்சத்தைச் சேர்ந்த அசோகச் சக்கரவர்த்தி மௌரிய வமிசத்தில் மிகவும் புகழ்பெற்றவர். அவரது அமைச்சர்களுக்கு 'மாமாத்திரர்கள்' என்றும், முதலமைச்சருக்கு 'ஆக்கிர ஆமாத்தியர்' என்றும் பெயர். அவர் ஆட்சியில் நீதியும் மக்கள்நலமும் பெருகிற்று. அவர் தமது அமைச்சர்களை மக்கள்தொடர்பு கொள்ளும்படி வற்புறுத்தி வெகு திறமையாக ஆண்டார். மக்கள் அரசனிடத்திலும், அமைச்சர்களிடத்திலும் கண்காணிப்பாக இருந்தார்கள். அசோகர் ஆட்சியில் இரண்டுவகை அமைச்சர்கள் இருந்தார்கள். அவர்கட்கு மந்திரிகள் என்றும், ஆமாத்தியர் என்றும் பெயர். மந்திரிகளே அரசனது ஆலோசகர்கள்; அசோகர் ஆட்சியில் அரசு உத்தியோகஸ்தர்கள் பல்லாயிரம்பேர் இருந்தனர். தர்மத்தைப்

புகட்டுவதற்கு 'தர்மமகாமாமாத்தியர்' என்ற ஒருவகை அதிகாரிகளேயும் நியமித்தார். 'மந்திரி பரிஷட்' என்பது மந்திரிகள் அடங்கிய அவைக்குப் பெயர். இதற்குத் தலைமை வகிப்பது அரசன். இந்த மந்திரி பரிஷட் குறித்து அசோகர் கல்வெட்டு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. கௌடில்யர் கூறும்வண்ணம் அசோகர் மந்திரி பரிஷட்டைக் கலந்தே முக்கியமான காரியங்களே முடிவுசெய்வார் என யூகிக்கலாம்.

தக்ஷசீலநகரின் குடிகள் ஒருசமயம் அசோகரின் மகனிடம், அரசனிடத்தில் தங்களுக்கு ஒரு பகையும் இல்லை என்றும், கொடுமை செய்யும் அமைச்சர்பால்தாம் தங்களுடைய அதிருப்தி என்றும் முறையிட்டார்கள். எனவே, அரசன் நீதி தவறிஞல் அமைச்சர்கள் காப்பாகவும், அமைச்சர்கள் நீதி தவறிஞல் அரசர் காப்பாகவும் மக்களேப் பேணிஞர்கள். குப்த அரசர்களும் ஏறக்குறைய மௌரியர்கள் போலவே ஆண்டார்கள். அவர்கள் தங்களேத் தெய்வத்தால் நியமிக்கப்பட்டவர்கள் (டிவைன் கிங்ஷிப்) என்று எண்ணிக்கொண்டாலும், அமைச்சர்களின் முக்கியத்துவத்தைக் குறைவுபடுத்தவில்லை. உண்மையிலே, அமைச்சர்களுக்குப் பாரம்பரிய உரிமை (ஹெரிடிட்டரி ரைட்) தந்தார்கள். அசோகர் காலம் கி.மு. 272 முதல் கி.மு. 232; குப்தர் காலம் கி.பி. 320—550. சுமார் இந்த 700 ஆண்டுகள் இந்து அரசர்களின் பொற்காலம் எனலாம். அரசும் அமைச்சும், தர்மசாத்திரங்களேயும், நீதிசாத்திரங்களேயும் அடிப்படையாக கொண்டு நடத்தப்பட்டன. மக்கள் அக் காலத்துச் சமுதாய முறைகட்கும், நீதிசாத்திரங்கட்கும் உட்பட்டு இருந்தார்கள்.

இனி, தென்ஞட்டு அரசியலில் அமைச்சு என்ன இடம்பெற்றதென்றும், என்ன முறையில் தொழிற்பட்டதென்றும் கவனிப்போம். பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காவியங்களிலும் அரசியல் தத்துவத்தின் கருவூலமான கொள்கைகளேக் காணலாம். முக்கியமாக, கீழ்க்கணக்குகளுள் ஒன்ருகிய திருவள்ளுவரது திருக்குறளில் அரசைப் பற்றியும் அமைச்சைப்பற்றியும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. திருவள்ளுவரின் பொருட்பால் கௌடில்யரின் அர்த்தசாத்திரத்தைப் பின்பற்றியதன்று என்பதை இரண்டு நூல்களேயும் ஒத்திட்டுப்பார்த்தால் நன்கு விளங்கும். திருவள்ளுவர் காட்டும் அரசும், அரசியலும், சமுதாயமும் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைத் தழுவியதல்ல, மனுதர்ம சாத்திரம் போன்ற

பழைய நீதிநூல்களின் கருத்துகளைத் தழுவியதும் அல்ல. அரசன் இறைவம்சம் என்ற கொள்கை பொருட்பாலில் காணப் படவில்லை. வர்ணாசிரமம், சோதிடம், முதலிய கூற்றுகள் காணப்படமாட்டா. பழைய தர்மசாத்திரங்களுக்குக் கட்டுப் பட்ட சமுதாயத்துக்கு (டிரடிஷனல் சொசைட்டி) மட்டும் செய்யப்பட்ட நூல் திருவள்ளுவரின் பொருட்பால் அன்று. நாயனார் அறிவியலின்பால் வைத்து அரசியலையும், சமுதாயத் தையும் விளக்கிக் காட்டியுள்ளார். சிற்சில கருத்துகள் கௌடில்யருக்கும்; திருவள்ளுவருக்கும் பொதுவாகக் காணப் படும். அவை எல்லோராலும் எக்காலத்திலும் ஒப்பக் கூடியனவாய் இருக்கும். இக் காரணம்பற்றித் திருவள்ளுவர் கௌடில்யரைப் பின்பற்றியே பொருட்பாலை அமைத்தார் என்பது பொருந்தாது. கௌடில்யரின் தர்மம், தண்டம், நீதி என்ற கருத்துகளுக்கும் திருவள்ளுவரின் அறம், சான்றாண்மை போன்ற கருத்துகளுக்கும் நுட்பமான வித்தியாசங்களைக் காணலாம். கௌடில்யரின் சில கருத்துகள் காலமாற்றத்தால் இன்றைய நாளுக்கு ஒவ்வாதனவாகக் காணப்படும். திருவள்ளு வர் ஓர் அரசியல்நூலை எழுதாமல் பொதுநூலாகப் பொருட்பாலை அமைத்துள்ளதால், அடிப்படைக் கருத்துகள் எக்காலத் துக்கும் ஏற்றதாகும். திருவள்ளுவர் 'செங்கோன்மை' என்று குறிப்பிடும் அரசியலை உரையாசிரியர் பரிமேலழகர் 'தண்ட நீதி' என்று பெயர் அளவில் கொண்டாலும், வித்தியாசம் உண்டு. தண்டநீதி என்பது பழைய தர்ம சாத்திரங்களில் கூறப்படும் மத்ஸ்ய நியாயம் (Matsya niyaya) என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்டது. பெருமீன் சிறுமீனை விழுங்குவது உயிர் வர்க்கத்தில் இயல்பானதொன்று; சமதர்ம சமுதாயத்தில் அது முரணாகும். குடிகள் அரசனுக்குத் தண்டத்தால் கட்டுப்பட்ட வர்களாயின் அது பண்டைய சமுதாயத்தின் நிலையாகும். எனவே, திருவள்ளுவர் அரசனுக்குச் செங்கோன்மையை (Cenkonmai) அறமாகக் கூறுவதுபோல் குடிகளுக்குச் 'சான் றாண்மை'யை அறமாகக்கூறுகிறார். ஒழுக்கம், வாய்மை, நாண், தன்னிலை திரியாமை என்ற இவை குடிகளுக்கும், அரசனுக்கும் பொதுவாயினும், அரசன் நீதி தவறாது அரசு செலுத்துவது சிறப்பான அறமாகும். கௌடில்யரே தர்ம சாத்திரங்களில் கூறியுள்ள சிலவற்றைக் கைவிட்டுச் சமகாலத்தில் வழங்கிவந்த நீதியையே எடுத்துத் தம் நூலில் எழுதியுள்ளார் எனக் கூறப் படும். திருவள்ளுவர் குறைந்தது 400 ஆண்டுகட்குப் பிற்பட்ட வராகையினாலும், அவர் வாழ்ந்த நிலம் வேறுபட்டதாலும் அவருடைய கருத்துகள் வேறுபட்டிருப்பது இயல்பே. உதார

ணமாக, அரசன் தெய்வமூலம் (Divine Origin) உடையவனென்றும், அரசனுக்குப் பிறந்தவனே அரசனுகலாம் என்றும் கௌடில்யர் கூறுவர். திருவள்ளுவர் 'இறை மாட்சி' (Irai Maatchi) என்ற அதிகாரத்தில் அரசன், இறைவன் எப்படி உலகைக் காப்பாற்றுகிறுனே அதுபோல் குடிகளைக் காப்பாற்றுவதால் இறை என அரசனுக்குப் பெயர் எனக்கூறுவார். அரசன் இறைவன் அம்சம் என்று கூருது, இறைவனைப்போல் வைக்கப்படும் என்று கூறியுள்ளது கவனிக்கத்தக்கது. 'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட் கிறையென்று வைக்கப்படும்'—குறள் 398. உரையாசிரியரும் 'பிறப்பான் மகனேயாயினும் செயலான் மக்கட்குக் கடவுள்' என்று கூறிய இடத்து, செயலின் முக்கியத்துவத்தைக் காட்டி உள்ளார். வேந்தனுக்கு 'ஒளி' தெய்வச் சாயல் அன்று, ஆனுல் அவனுடைய முறை செய்து காப்பாற்றும் செயலில் கொடை, அளி, செங்கோல், குடி ஓம்பல் என்ற நான்கு நற்குணங்களும் காணப்படுவதால் என வள்ளுவர் கூறுவர். பரிமேலழகரும் 'ஒளி' என்பதற்கு ' உலகம் காக்கின்ற தெய்வத்தன்மை ' எனச் சிறந்த விளக்கம் தந்துள்ளார்.

பிறிதொரு குறளில் திருவள்ளுவர் இன்னும் விளக்கமாக 'மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல் மன்னுவாம் மன்னர்க் கொளி' எனக் கூறியவிடத்து மன்னர்க்குச் செங்கோன்மை மன்னுவதால், ஒளி நிலைபெறுகிறது என்று கூறுவார். அத்தகைய ஒளி அரசன் உறங்குங்காலும் மக்களைக் காப்பாற்றும் என்று சீவகசிந்தாமணி கூறுகிறது. எனவே, அரசன் ஒரு குலத்திலிருந்தோ ஒரு குடும்பத்திலிருந்தோ தோன்ற வேண்டும் என்ற நியதி இல்லை. அறிவியலுக்கு ஒத்த கருத்துகளைத் திருவள்ளுவர் புரட்சியாகச் செய்தார் என்பது பொருள் அன்று. கௌடில்யரும், பின் நீதி சாத்திரம் இயற்றிய காமந்தகரும் மக்கள் தர்மத்தை மட்டுமல்லாமல், அர்த்தத்தையும் (பொருளையும்) பேணி நல்வாழ்வு செலுத்தவேண்டியவர்களாகையால், பழைய தர்மசாத்திரங்களில் கூறியுள்ள பல கொள்கைகளைக் கைவிட்டார்கள். பேராசிரியர் கீத் என்ற மேனுட்டு அறிஞரும் அர்த்த சாத்திரமும் நீதி சாத்திரமும் தர்மசாத்திரத்துக்கு முற்றும் ஒவ்வாமல் இருப்பது இயல்பே எனக் கூறுவார். பேராசிரியர் கானே அர்த்த சாத்திரமும் தர்மசாத்திரமும் வேறுபட்டாலும் முன்னையது பின்னையதில் அடக்கம் என்றும், பின்னையது முக்கியமாக அரசர்களுக்கு உரிய தர்மத்தைப் பேசுவதாகவும் கூறுவர். கௌடில்யர் அர்த்த சாஸ்திரத்தின் நோக்கம் அரசன் இப் பூவுலகில்

ஆதிக்கத்துடன் இருக்கக் கூறும் நெறி என்றும் கூறுவர். 'பிரித்விய லாபபலேஞே உபயசாஸ்திரம் அர்த்த சாஸ்திரமிதி' என்பது அவர் கூற்று. கௌடில்யரும் யாஞ்யவல்கியரும் தர்மசாத்திரத்திற்கும் தண்டநீதிக்கும் முரண் காணப்படின், தர்மசாத்திரத்தின் ஆஞ்ஞையே கொள்ளற்பாலது எனக் கூறுவர்.

திருவள்ளுவர் அறம் என்ற ஒன்றையே அடிப்படையாக வைத்துக் கூறுவர். அறம் என்பது தண்டநீதியே கூறும் கட்டுப்பாடு அன்று. 'அறனினும் இன்பமும் ஈனும் திறனறிந்து தீதின்றி வந்த பொருள்' என்பது அவர் வாய் மொழி. அன்பில்லாத அறம் ஒரு பயனையும் தராது. திருவள்ளுவர் அன்பையும் அறனையும் மனிதநீதிக்கும் அரச நீதிக்கும் அடிப்படையாகக் கொள்வர். கிரேக்கத் தத்துவஞானி பிளேட்டோ அரசன் நல்ல பண்பாடுடையவனுக இருத்தல் வேண்டுமென்று கூறுவர். தனது இலக்ஷிய அரசியல் சமுதாயத்தில் பாமரர்கள், படைவீரர்கள், அரசைக் காப்பவர்கள் (Guardian) என்ற மூவருள், மூன்ருமவர்க்கு முக்கிய இடம் கொடுப்பார். அவர்களே அரசனைக் கண்ணிமைபோல் காத்து அரசைக் காப்பாற்றக்கூடியவர்கள். அரிஸ்டாட்டில் மக்கள் ஆட்சியைவிட, செல்வாக்குடையவர்கள் ஆட்சி நல்லது; அதைவிட மன்னராட்சி நல்லதெனக் கருதுவர். மக்கள் ஆட்சியும் ஒருசமயம் கொடுங்கோன்மையாக முடிந்துவிடும் என்பது பொருள். பிளேட்டோ நற்குடிப் பிறந்த அரசர்கள் குடும்பப்பாரம்பரியமாக வருதலையே கற்பிக்கிருர். மக்கள் தேர்தலால் மன்னரை அமைத்தல், பிரபுக்கள் கூடி மன்னனை அமைத்தலைப் போன்ற குறைபாடுடையது என்று எண்ணுவார். பிளேட்டோ குடிமக்களின் அறிவைக் குறைவு படுத்தா விட்டாலும், நற்குடி அரசனின் (Philosopher King) வழுவாத நெறியில் பெரிதும் நம்பிக்கை உடையவர்.

திருவள்ளுவர் பிளேட்டோவைப்போல் அரசனின் நற்பண்புகளில் நம்பிக்கை உடையவராயினும் குடும்பப்பாரம் பரியம் அதற்குத் தேவை எனக் கூறவில்லை. பிளேட்டோ அரசனுக்குத் துணைவர்கள் 'கார்டியன்' என்ற பெருமக்கள் என்ற மட்டில் நின்றுவிடுவார். திருவள்ளுவர், அரசன் சான்ருண்மைக்கு மட்டும் முக்கியத்துவம் தராமல், அவன் செங்கோன்மைக்குப் பண்புடைய அமைச்சர்களும் தேவை எனக் கருதுவார். ஒரு நல்லவனின் ஏகாதிபத்தியமும்கூட இழுக்குப்படும் என்பது கண்கூடு. திருவள்ளுவரின் கருத்து மனு, கௌடில்யர், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் என்ற

இவர்களின் கொள்கைகட்கு மாறுபட்டதாகக் காணப்படுகிறது. அரசன் இந்தக் குலத்தில் பிறக்கவேண்டும், இன்னுரால் முடிசூட்டப்படவேண்டும், இன்ன யாகங்கள் செய்ய வேண்டுமென்றும்; அல்லது மன்னன் இன்னுரால் நியமிக்கப் பட்டு அவர்கள் ஆதிக்கத்தில் அரசு செலுத்தவேண்டுமென்றும் கூறவில்லை. அரசன் கல்வியுடையவனுக இருத்தல் வேண்டும் எனக் கூறினுலும், இந்தச் சாத்திரங்களைத்தாம் படிக்கவேண்டு மென்று விதிக்கவில்லை. பொதுவாக, அரசன் நிரம்பிய நூலறிவு படைத்தவனுக இருத்தல் வேண்டுமென்பர். இல்லையேல், அது அரங்கின்றி வட்டு ஆடியது போலாகும் என்பர். ரோம அரசியல் தத்துவஞ்ஞானி சிசிரோ அரசனுக்கும் மக்களுக்கும் உள்ள சம்பந்தத்தைச் சட்டரீதியில் பார்ப்பார். அது ஒருவித மான ஒப்பந்தம் (Social Contract) என்பர். அரசன் காப்பாற்ற ஒப்புக்கொண்டதால், குடிகள் அவனுக்குப் பணிந்துநடக்கி ருர்கள் என்ற தத்துவத்தைப் புகட்டுவார். பின் யூதர், கிறித்துவ சம்பிரதாயத்திலும் இந்தக் கொள்கை இடம் பெறுகிறது. ஏசுநாதர் 'சீசர் சக்கரவர்த்திக்குக் கொடுக்கவேண்டியவைகளைக் கொடுத்துவிடுங்கள்' என மக்களுக்குக் கூறியதும், பின்வந்த செயின்ட் அகஸ்டின் தமது 'தேவனின் நகரம்' (City of God) என்ற நூலில் சமுதாயம் சட்டத்தாலும் பொதுநலத்தாலும் கட்டப்பட்ட கூட்டம் என்று கருதியதும் இதன் அடிப்படை யிலேதான். திருவள்ளுவர் வேத சம்மதம், சாதிஉரிமை, அறிவாளிகளின் நியமனம், சட்ட நிருபணத்தின் பந்தம் இவைகளினுல் தகுதி பெற்றவன் அரசன் என்று கூறவில்லை. சீனதேசத்துக் கன்ஃபூஷியஸ் (கி.மு. 557 — 479) தமது 'அனுலக்ட்ஸ்' என்ற போதனையில் அரசன் (சுன்) இலக்கணம் பிறப்பினுலும் பாதிக்கப்படாது என்பர். நல்ல குணமும் நல்ல நடத்தையுமே முக்கியமானது என்பர். திருவள்ளுவர் போலவே சான்ருண்மையை வற்புறுத்துவர். பரதகண்டத்தில் மனுநீதி காலம்தொட்டே கௌடில்யர் காலத்துக்கும் முன்பே, ஜைன பௌத்தச் சம்பிரதாயங்கள் இருந்துவந்தன. இவர்களுடைய சமயக் கொள்கைகள் வேறுபாடு மட்டுமன்றி, அரசியல் கொள்கையும் வேறுபட்டது. மேலுலகிலுள்ள பக்குவப்பட்ட உயிர்கட்கு அரசாட்சி தேவை யில்லை. இப் பூவுலகில் ஒழுங்குமுறைக்கு ராஜன் தேவை. அவன் மகா சம்மதத்தால் நியமிக்கப்படுபவன். அஸ்வகோசம் என்று நூல் ராஜன் (மகிழ்ச்சியை உண்டுபண்ணுபவன்) தெய்விக உரிமையால் வந்தவன் அல்லன்; சிற்றரசர்களால் தேர்ந்து நியமிக்கப்படுபவன் என்று கூறும். ஜாதகமதம் என்ற வேருரு நூல் ராஜன்கூடப் போதிசத்துவர் என்ற அம்சத்தை

உடையவனென்று கூறும். அவன் யாகங்கள் செய்யத் தேவை இல்லை, வர்ணாஸ்ரமக் கட்டுப்பாடுகளை வற்புறுத்துபவன் இல்லை, அரசனாவதற்கு அவனுக்குப் பிறவி உரிமை இல்லை. தர்ம, அர்த்த, காமம் என்ற மூன்றிற்கும் ஏதுவாய் அரசு செலுத்து பவன்தான் அரசன் என்பது பௌத்தக் கொள்கை. ஜைன சூத்திரங்கள் என்ற நூலில் சிறிது மனுஸ்மிருதிக்கு உடன் பாடாய்க் காணப்படலாம். பல ஜைன ஆசிரியர்கள் (ஜீவசேன ஆசாரியர், சோம தேவசூரி, ஹேமசந்திர ஆசாரியர் முதலி யோர்) அரசியலைப்பற்றி எழுதினார்கள். அவர்கள் வர்ணாஸ் சிரமத்தைத் தழுவி நின்றாலும் எல்லாம் கடவுள் ஆணை என்று கொள்ளவில்லை. இளங்கோவடிகள் இயற்றிய 'சிலப்பதி கார'த்தில் அரசியல் உண்மைகளைச் சிற்சில இடங்களில் தூய்மையாகக் காணலாம். தென்னாட்டு நாகரிகத்தின் தலைசிறந் ததும் பொதுவானதும் திருவள்ளுவர் வகுத்த அரசும் அமைச்சும் ஆகும் என்று கூறலாம்.

இதுகாறும் கூறியவற்றால் அசோகர் காலம்வரை உள்ள சமுதாயத்தின் அரசியல் கொள்கைகளைச் சிறிது கவனித்தோம். அசோகர் காலத்துக்கு முன்பு வடநாட்டில் சிற்றரசுகளே மிகுந்து இருந்தன. வம்சம், குலம், கோத்திரங்களால் பிரிவு பட்ட சிறிய சமுதாயங்கள் இருந்தன. தென்னாட்டிலே இத்தகைய பிரிவுகள் இல்லை. நாடு, திணை என்ற அடிப் படையில் மக்கள் பிரிந்து வாழ்ந்தார்கள். பின், மூவேந்தர்கள் காலத்தில் இராச்சியம் என்ற முறையில் விரிவடைந்தது. இம் மூவேந்தர்கள்கூட ஆங்காங்கே அரசாட்சியைச் சிற்றரசர் களிடமே விட்டு இருந்தார்கள். பின், சோழ சாம்ராஜ்யக் காலத்தில்தான் பேரரசு என்ற அமைப்புக் காணப்படும். சேக்கிழாரின் 'பெரியபுராணத்திலும்' கம்பரின் 'இராமா யணத்திலும்' அரசியல் கருத்துகளைக் கூறுங்கால் திருக்குறளின் சாயைகளைக் காணலாம். பின், வடநாட்டில் முகலாயர் ஆட்சி யில் அரசியல் தத்துவங்கள் விரிவடைந்தன. தென்னாட்டில் முகலாயர் ஆதிக்கம் அவ்வளவு பரவலாய் இல்லை. அதன்பின் ஆங்கிலேய அரசாட்சி (பத்தொன்பதாம் நூற்றாண்டு) வேரூன்றி வளர்ந்து அரசியலையே மாற்றியது. ஆங்கிலேயர் காலத்திலும் 1937வரை பாரதம் குடியேற்ற நாட்டின் அரசியல் ஆட்சி முறையில் (Colonial rule) தான் இருந்தது. மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட அமைச்சர்கள் 1937ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டத்தில் முதன்முதலாகக் காணப்படுவர். 1947ஆம் ஆண்டு பாரதம் விடுதலை அடைந்தபின் அரசியல் முற்றிலும் மாறியது.

3. இந்திய வரலாற்றில் அமைச்சு

பிரிட்டிஷ் ஆட்சி ஆரம்பம் வரை

திருவள்ளுவர் கூறிய நெறி முடியாட்சிக்கும் குடியாட்சிக்கும் ஒப்ப உகந்தது. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான்' என்ற ஒப்புயர்வற்ற கொள்கையின் அடிப்படையிலேதான் திருவள்ளுவர் அரச ஞயினும் சரி, அமைச்சனுயினும் சரி, வேறெவனுயினும் சரி, அவனுடைய தர்மத்தை விளக்குவார். கௌடில்யரோ பழைய தர்மசாத்திரங்களினின்று வேறுபடுகிருர் என்பது கண்கூடு. (அவர் தென்னுட்டுத் 'திரமிளர்' என்ற ஒரு கூற்றும் ஆராய்ச்சி யாளரிடம் காணப்படுகிறது). கௌடில்யராயினும் சரி, திருவள்ளுவராயினும் சரி, அரசு என்ற வொன்று அவசியம் என்றும், அதனுடைய இன்றியமையாத அம்சங்கள் சில வென்றும் கூறுவர். அரசின் அங்கம் அமைச்சு என்று இருவரும் கூறுவர். பொருட்பாலில் அரசியல் 25, அமைச்சியல் 10, அறம் 2, கூழ் 1, படை 2, நட்பு 17, குடி 13 அதிகாரங்கள் அடங்கியுள்ளன. அரசைப் போலவே, அமைச்சுக்கும் குடிக்கும் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. இதனுல் அமைச் சரின் பலமும், குடிகளின் பலமுமே அரசின் பலம் என்பது புலனுகும். திருவள்ளுவர் அரசு, வேந்து, மன்னன் என்ற சொற்களை ஆட்சித் தலைவன் என்ற பொருளில்தான் உபயோகிக்கிருர். காவலன், கோலோடு நின்ருன் என்ற தொழிற் பெயர்களிட்டுக் குறிப்பிடுவார். அரசுக்கு அங்கங்கள் : படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்ற ஆறு என கூறுவர் (கூழ் = பொருள்). கௌடில்யர் சுவாமின், ஆமாத்திய, ஜனபாத, துர்க், கோச, தண்ட, மித்ராணி எனக் கூறுவர். அரசனை (சுவாமின்) அரசின் ஓர் அங்கமாகக் கூறுவர். திருவள்ளுவர் அங்கங்களில் ஒன்ருகவோ வேருகவோ கூருமல், அரசுக்கும் அங்கத்திற்கும் அபேதமின்மையைக்

குறிப்பிடுவார். அரசனுக்கு முக்கியமான அறிவு 'எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது' ஆகும். இதில் அமைச்சர்கள், ஒற்றர்கள், நண்பர்கள், குடிகள் யாவர் கூறுவதும் அடங்கும். அரசனுக்கு இருக்கவேண்டியவை மூவகை ஆற்றல் (இடம், காலம், வலியறிதல்), நால்வகை உபாயம் (வன்கண், குடிகாத்தல், கற்றறிதல், ஆள்வினை), ஐவகைத் தொழில் (வினைவலி, தன்வலி, மாற்ருன்வலி, துணைவலி, தெரிந்துசெய்யும் வலி,) அறுவகைக் குணம் (நட்பாக்கல், பகையாக்கல், மேற்சேறல், இருத்தல், பிரித்தல், கூட்டல்), எல்லா வலிமைகளும் செங்கோன்மையையே குறிக்கோளாகக் கொண்டதாக இருத்தல் வேண்டும். பரிமேலழகர் 'ஒருபாற் கோடாது, செவ்விய கோல் போறலின் செங்கோன்மை எனப்படும்' என்பர். புறநானூறு 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' எனக் கூறும். அரசை நடத்துதற்கு அரனுக்குச் சமானமான அமைச்சனின் இயல்பைத் திருவள்ளுவர் விவரமாக எடுத்துக் கூறுவார். முதற்கண் அமைச்சன், ஒரு காரியம் செய்யுமிடத்து அதற்கு வேண்டிய கருவிகள் (பொருள், சேனை முதலியன), தொடங்குவதற்கு ஏற்ற காலம், செய்யும் உபாயம், இடையூறு வரின் அதை நீக்கி முடிவாகும் வரை செய்யவேண்டுவன செய்வதற்கு ஆற்றல் உடையவனுக இருத்தல் வேண்டும். மனத்தளர்ச்சி இல்லாமை, குடிகளைக் காத்தல், நீதிநூல் அறிவு, விடாமுயற்சி முதலியன அமைச்சனுக்கு இன்றியமையாதன. அரசுக்குப் பகையாயிருப்பவரைப் பிரித்தலும், துணையாயிருப் பவரைப் பேணுதலும், முன் பிரிந்தவரை மீண்டும் சேர்த்தலு மான திறமை வேண்டும். எந்தப் பொருளையும் சீராக ஆராய்ந்து அரசனுக்கு ஒருதலையாக யோசனை கூறுவது அமைச்சரின் தலையாய அம்சமாகும். பொருள், படை விரிந்த காலத்தும் சுருங்கிய காலத்தும் நடுவுநிலையாக நின்று, கொண்ட காரி யத்தைச் சாதித்தல் அமைச்சரின் திறமையாகும். அமைச் சனுக்கு மதிநுட்பம்மட்டும் போதாது, வினைநுட்பமும் தேவை. உலகநடை அறிந்து செயல்வகை செய்தல் வேண்டும். அரசன் குற்றமுடையவனுயினும், சொல்வதைக் கேளாதவனுயினும், அஞ்சாது அவனுக்கு உறுதியைக் கூறவேண்டும். பழுதுபட யோசனைகூறும் அமைச்சன் அரசனுக்கு எழுபதுகோடிப்பகைவர் கட்குச் சமானமானவன். ஒரு காரியத்தை முறைப்பட எண்ணு மலும் முடிவுறச் செய்யாமலும் விடும் அமைச்சன் தகுதிஇல்லாத வன் என்பர் திருவள்ளுவர். அமைச்சனுக்குச் சொல்வன்மையும் நாநலமும் எல்லா நலங்களையும்விடச் சிறந்தது. சொல்லில்

சோர்வு படுதலும் தகாது; சோர்வு ஆக்கத்தை அழிக்கும். ஆக்கமும் அழிவும் சொல்லால் வரும். ஆகையால், பொருள றிந்தும் அதன்நீர்மையை அறிந்தும் சொல்லவேண்டும். அதிகாரம் செலுத்தும் அமைச்சன் தன் சொல் கேளாரையும் கேட்கச் செய்து, கேட்பவர் தாம் கூறியபடி செயலாற்றுமாறு பிணிக்கும் தகைமை உடையதாய் இருத்தல் வேண்டும். சொல்லப்படுங் காரியங்கள் நிரல்படச் சேர்த்து இனிதாகச் சொல்லப்படின், அவைகளை எல்லோரும் விரைந்து கொள்வார்கள். சொல் வன்மை மட்டுமன்றிச் செயல் தூய்மையையும் அமைச்சன் கடைப்பிடிக்க வேண்டும். மாண்பைக் கெடுக்கும் செயலைச் செய்யாதவரே தம்மை மேலாகக் கருதப்படவேண்டுமென்று விழைகின்றவர்களுடைய நியதியாகும். வினைத்தூய்மை மட்டு மன்றி வினைத்திட்பமும் வேண்டும். மனவலிமையின்றி வேறு எந்த வலிமை இருப்பினும் பயன்தராது. தகுதியானவை களையே செய்தல் வேண்டும். அப்படிச் செய்யும்போது ஊக்க முடைமையே எடுத்ததைப் பழுதுபடாது முடிக்கும். சில காரியங்களை முடியும்வரை இரகசியமாக வைத்து, முடிந்தபின் வெளிப்படுத்த வேண்டும். இல்லையேல் தீங்கையும் விளை விக்கலாம். வினைத்திட்பம் உடைய அமைச்சனால் அரசனுக்கு ஆக்கம் உண்டாவதால் குடிகளும் அவ் வமைச்சனை மதிப் பார்கள். எண்ணியபடியே முடிந்த காரியம் நாடிய பயனைத் தருமாதலால், வினைத்திட்பம் மிக வேண்டுவதாகும். தீர்மானித்த ஒரு காரியத்தைச் செய்யுங்காலத்துத் தளர்ச்சி இல்லாமலும், காலம் தாழ்த்தாமலும் அமைச்சன் செய்யக்கடவன். செய்யுங் கால் முன்பே துன்பமாகக் காணப்படினும் பின் நன்மையை அளிக்குமாதலால் அமைச்சன் அஞ்சுவதாகாது. விரைவில் செய்ய வேண்டியனவற்றை விரைவாகச் செய்தல் வேண்டும். நிதானித்துச் செய்யத் தக்கவைகளை மெள்ளச் செய்தல் வேண்டும். முக்கியமாக, பகைவர் விவகாரங்களில் கூடியவரை சமாதானப் பேச்சுகளால் காரியத்தை நடத்தல் வேண்டும். அது ஒவ்வாத காலத்து வேறு தீவிரமான நடத்தை எடுத்தல் வேண்டும். செய்யத் தக்கதையும், களையத்தக்கதையும் சரி யாகச் செய்யாது, இகழ்ச்சியால் பராமுகமாய் இருந்தால், எரிந்து சாம்பலாய்ப் போனதை மீண்டும் எரியவிடுவது போலாகும். பொருள், கருவி, காலம், வினை, இடம் இவை ஐந்தையும் மயக்கமற எண்ணி உபயோகித்துக் கொள்வது அமைச்சனது வினைசெயல் வகையின் திறமையாகும். முயற்சி யில் வரக்கூடிய இடையூறுகளை முன்பாகவே எண்ணி அவை களைக் களையவேண்டும்.

அமைச்சன் அரசனுக்கு மிக நெருங்கி இருந்து அல்லது வெகு தொலேவிலே இருந்து உறவாடுதலும் கூடாது. அரச னுக்குச் சமானமானவன் என்று எண்ணிக்கொண்டு அரசன் விளைபவைகளில் தானும் ஈடுபடுவானுயின் கேட்டை விளேவித் துக்கொள்வான். தன்னிடத்தில் பிழையும் சந்தேகமும் வராமல் நடந்துகொள்ள வேண்டும். அவையில் அவையறிந்தும், வேண்டுங்காலத்து அஞ்சாமலும் பேசுதல் வேண்டும். பழங் காலத்தில் ஐம்பெருங்குழுவும், எண்பேராயமும் இருந்தன என்பர். ஐந்து பெருங்குழுவாவன: அமைச்சர், காலக் கணிதர், தானேத்தலேவர், தூதுவர், சாரணர். எட்டுப் பெரிய ஆயங்களாவன: கரணத்தியலவர், கருமகாரர், கனகச் சுற்றம் கடைகாப்பாளர், நகரமாந்தர், நளிபடைத்தலேவர், யானே வீரர், இகுளிமறவர். (அதாவது நகரசபை, காப்பாளர், வேலேயாள்கள், பொருளாளர்கள், சேவகர்கள், எல்லேக் காவலர், யானே வீரர் முதலியோர்) இந்தச் சிறு சபைகள் பிற்காலத்துத் தல ஆட்சிக் கழகங்கட்கு அடிகோலின. அந்தக் காலத்தில் மன்னனும் அமைச்சனும் இந்தச் சபைகளிடமும், வாரியங்களிடமும் நேர்தொடர்புகொண்டிருந்தார்கள்.

திருவள்ளுவர் வடித்துக்காட்டிய அமைச்சர் இலக்கணம் பொதுப்படக் கூறியுள்ளபடியால் எக்காலத்துக்கும் பொருந்தும். இந்தக் கூற்றுகள் சங்க இலக்கியங்களில் ஆங்காங்கே காணக் கிடக்கின்றன. தமிழ் வேந்தர்கள் காலத்தில் அமைச்சரவை ஒழுகியவகையைச் சிறிது ஆராய்வோம்.

மூவேந்தர்கள் காலம் முதல் விஜயநகர ஆட்சி வரை அமைச்சு

மூவேந்தர்கள் காலத்துக்கு முன்பு தென்னிந்தியாவில் களப்பிரர்கள், சாளுக்கியர்கள், ராஷ்டிரகூடர்கள் என்ற பரம் பரையினர் ஆட்சிகளே பிரபலமாக இருந்தன. சாளுக்கியர்கள் பாதாபியிலிருந்து ஆண்டு வந்தார்கள். அவர்கள் 8ஆம் நூற்றுண்டில் வலிவிழந்தார்கள். அவர்கள் ராஜ்ஜியத்தின் மேற்குப்பிரதேசத்தில் பின் ராஷ்டிரகூடர்கள் ஆண்டார்கள். பின், தென்பாகத்தில் பல்லவர்கள் ஆதிக்கம் பெற்றுர்கள். சாளுக்கியர்களுக்கும் பல்லவர்கட்கும் அடிக்கடி சண்டை நேரிட்டன. தெற்கே பாண்டியர்கள்தாம் பிரபலமாக இருந் தார்கள். சோழர்கள் இன்னும் பிரபலமடையவில்லே. ராஷ்டிர கூடர்களுடைய ஆதிக்கம் பாண்டியர்களால் அடக்கப்பட்டது. சுமார் 9ஆம் நூற்றுண்டுவரை பெரிய அரசர்கள் தோன்றிய இடங்களில் முடியாட்சியே நடைபெற்று வந்தது. வேறு இடங் களில் தல ஆட்சியே சிறு தலேவர்களின் ஆதிக்கத்தில் நடந்து வந்தது. ஊர், சபை, நகரம் என்ற சமுதாய ஆட்சிப் பாகு

பாடுகள் இருந்தன. ஊர், குடியானவர்கள் சமுதாயம்; சபை என்பது அநேகமாகப் பிராமணர்கள் கூட்டம்; நகரம் என்பது வியாபாரத் தலங்கள். இவை மூன்றும் ஒரே இடத்திலும் காணப்படும். ஊர்க் கூட்டங்களே ஆட்சியை நடத்திவந்தன. நாட்டின் பெரிய பிரிவுகள் வளநாடு, மண்டலம் என வழங்கி வந்தன. 9ஆம் நூற்றுண்டுக்குப்பின் ராஷ்டிரகூடர்களும் சாளுக்கியர்களும் வலிவிழந்தனர். சோழர்கள் ஆதிக்கம் பெற்று 11ஆம் நூற்றுண்டில் சோழவரசு சாம்ராஜ்ஜியமாக விளங்கிற்று. மன்னர் ஆட்சி உருவாயிற்று. சாளுக்கியர்கள் பட்டடக் கல்லில் முடிசூட்டிக் கொண்ட முறைபோலச் சோழர் களும் முக்கிய நகரங்களில் முடிசூட்டிக் கொண்டார்கள். மைய அரசாட்சி சோழர்காலத்திலேதான் உருவாயிற்று. சோழ மன்னர்கள் அமைச்சர்களையும் 'உடன்கூட்டம்' என்ற அதிகாரக் குழுவினரையும் 'ஓலைநாயகம்' என்ற தஸ்தாவேஜிக் காப்பாளர், பொருளாளர் முதலிய உத்தியோகஸ்தர்களோடு கூடி ஆட்சிபுரிந்தார்கள். நிலங்கள் அளவிடப்பட்டுத் தீர்வை இடப்பட்டன. கிராம சபையோர்களே வரிவகைகளை வசூலித்து ஊராட்சி புரிந்துவந்தார்கள். வாரியங்களில் சேர்க்கப்பட்ட அதிகாரிகளினுல் நிர்வாகம் செய்யப்பட்டு வந்தன. கிராமப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு முறை களும் கையாளப்பட்டு வந்தன. (பராந்தகசோழன் காலத்து உத்திரமேரூர்க் கல்வெட்டு இதற்குச் சான்று). ஊர்க் காப்புக்கு படிக்காவலும் நீதி வழங்குவதற்குச் சபைகளும் இருந்தன.

பின் பாண்டியர்கட்கும் சோழர்கட்கும் அடிக்கடி சண்டைகள் நேர்ந்தன. சேர, சோழ, பாண்டிய நாடுகளிலும், மேற்கே கங்கர், ஹொய்சளர் வடக்கே காகடீயர் இவர்களுள் பேர்பெற்ற அரசர்கள் இருந்தார்கள். தெலுங்குச் சோழர்கள் ஆந்திரநாட்டு எல்லைவரை ஆதிக்கம் செலுத்திஞர்கள். கல்வி, சமயம், கலை, வாணிகம், நாகரிகம் முதலியன வளர்ந்தன. அவைகளுடன் ஆட்சிமுறையும் விரிவடைந்தது. தலைசிறந்த அமைச்சர்களும் இந்தக் காலப் பரப்பில் காணப்பட்டார்கள். இலக்கியத்திலும் பலபேர்பெற்ற அமைச்சர்களைக் காண்கிறோம். திருஞானசம்பந்தரால் சுரம் தீர்க்கப்பட்ட கூன்பாண்டியற்கு அமைச்சராக இருந்த குலச்சிறையார் பாண்டிய நாட்டின் திலகு அரசி மங்கையர்க்கரசியார் துணைகொண்டு ஒரு திருப்பத்தைத் தந்தார். அநபாயச் சக்கரவர்த்திக்கு (குலோத் துங்கன் II) அமைச்சராக இருந்த தொண்டை நாட்டைச் சார்ந்த சேக்கிழார் தலைசிறந்த அமைச்சராக இருந்தார். நாயன்மார்கள் சரிதத்தை உருவாக்கி அரசனையும் நல்வழிப்

படுத்தினர். மாணிக்கவாசகர் அரிமர்த்தன பாண்டியற்கு அமைச்சராக இருந்து, பாண்டியனுக்குக் குதிரை வாங்க வேண்டிய பணத்தால் திருப்பெருந்துறையில் பெரியகோயிலைக் கட்டி அரசன் தண்டனைக்கு உட்பட்டு, பின்னர் அரசனை நல் வழிப்படுத்தினர்.

பெரிய புராணத்தில் (இது புராணம் எனப் பெயருடைய தாயினும், பெருமளவுக்கு வரலாற்று உயிர்ப்புடையது) தென்னட்டு அரசியல், அமைச்சு, குடிமை முதலிய தகவல்கள் 13ஆம் நூற்ருண்டுக்கு முன் சுமார் ஆறு நூற்ருண்டுக் கால அளவுக்குக் கிடைக்கின்றன. நாயன்மார்கள் வரலாற்றில் பேரரசர்கள், சிற்றரசர்கள், அமைச்சர்கள், வீரர்கள் என்ற பல திறப்பட்டோரையும் காணலாம். புகழ்ச்சோழர், கோச் செங்கட் சோழர் முடியுடைச் சோழ மன்னர்கள்; நின்றசீர் நெடுமாறன் பாண்டிய மன்னன்; நரசிம்மவர்மன் பல்ல மன்னன்; ஐயடிகள் காடவர் பல்லவக் காடவர் குல அரசன்; சேரமான் பெருமாள் சேர அரசர்; இடங்கழியார் வேளிர் குலத்தரசர்; நரசிங்கமுனையர் சிற்றரசர். அரசு ஆளும் வம்சக் கிரமமானது தந்தையினிடமிருந்து பிள்ளைக்கு வருவது மரபு. மகனில்லாதபோது வேறு வார்சுகளுக்கும் செல்லும். குல மைந்தரும் வாரிசுகளும் இல்லாதபோது அமைச்சர்களும் குடி மக்களும் கூடி ஒருவரை அரசனக நியமிப்பதும் உண்டு. பேரரசர்களே முடிசூட்டப்படுவார்கள்; சிற்றரசர்கள் முடிசூடுவ தில்லை. அரசனின்றி மக்கள் தாமே அரசு செலுத்திக் கொள்ளுதல் என்ற முறை அந்தக் காலத்தில் இல்லை. அரசர்கள் எல்லா அரச காரியங்களையும் தாங்களே செய்துவிடுவதென்ப தில்லை. தங்களுக்குக்கீழ்ப் பல துறைகளில் பல்வேறு அமைச்சர்களைக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் ஆலோசனை செய்தே அரச காரியங்களை நடத்தினர்கள். நிர்வாக ஆலோசனையுடன்கூடக் குடிகாத்தலும், சேனைத் தலைமை பூண்டு போர்செய்து நாடுகாத்தலும், பகைவரை அழித்தலும், நீதிமுறைசெய்தலும், அரசாணை நிறைவேற்றுதலும் அமைச்சர் கடமையாகும். அமைச்சர்கள், அரசன் செய்ய வேண்டிய கடமைகளாகிய குடிகளைத் தன்னுலும், தன் பரிசனத் தாலும், கள்வராலும், பகைவராலும், ஏனைய உயிர் களாலும் வரும் ஐவகைப் பயமும் வராமல் காத்தலுக்கு உதவிபுரியும் பொறுப்புடையவர்கள். இந்த முறை சுமார் 4,000 ஆண்டுகட்கு முன்னே ஆண்ட மனுநீதிச் சோழன் ஆட்சி யிலும் இருந்ததாகக் காணப்படுகிறது. அரசனின் குமரன் ஓட்டிய தேரில் சிக்கி இறந்த கன்றின் தாய்ப்பசுவுக்கும் நீதி

செலுத்துகையில் தன் மகன் என்றும் பாராது தண்டனை இட்ட விவரம் யாரும் அறிந்ததே. நீதி கூறும்போது அமைச்சர்கள், காவலாள்கள் சார்பின்றி நடந்த நிகழ்ச்சியை அப்படியே கூறினர்கள்.

இம்மட்டுமன்றி, பேரரசர்க்குத் திறை கொடாமலும் ஆணைக்கு அடங்காமலுமுள்ள சிற்றரசர்மீது படை எடுத்துச் சென்று அவர்களை வென்று அடிப்படுத்துதலும் அக் காலத்து மந்திரிகளின் கடமைகளுள் ஒன்று என்பதனைப் புகழ்ச்சோழன் தன் அமைச்சர்களுக்கு அதிகன் என்பவன்மீது படை எடுக்கும் படி ஏவின வரலாற்ருல் அறிகிருேம். குடிகளுக்குத் தீங்கும் அநீதியும் வராமல் காத்தல் அமைச்சர் கடனுகையால் அரசன் தன்னைச் சேர்ந்தவர்கட்கு அனுகூலமாக இல்லாதபடி ஆலோசனை கேட்க வற்புறுத்தல் வேண்டும். யாராவது பெரியோர்கள் முதலியவர்கள்மீது குற்றம் சாட்டப்பட்டு விசாரணைக்காக அரச சபைக்குக் கொண்டுவரப்படவேண்டு மானல் ஒரு மந்திரியைக் காவலாளர்களுடன் அனுப்பி அழைத்து வருதல் வழக்கம். இது குணபரன் என்ற மகேந்திரவர்மன் திருநாவுக்கரசரை அழைத்து வர மந்திரியையும் சேனையாள்களை யும் அனுப்பினுன் என்ற வரலாற்ருல் தெரியவருகிறது. சமயப் பாதுகாப்பிலும் அமைச்சர்களுக்குப் பங்கு உண்டு என்பதைச் சம்பந்தர், திருநாவுக்கரசர் சரித்திரங்களால் அறிகிருேம். அமைச்சர் குலச்சிறையார் எவ்வளவு சாமர்த்தியமாக நடந்து கொண்டார் என்பது வியக்கத்தக்கது.

பெரியபுராணம் போன்ற வரலாற்று இலக்கியங்களிலோ, கல்வெட்டுகளிலோ அமைச்சரவை என்று சீராக அமைக்கப் பட்ட ஒரு குழு காணப்படவில்லை. நந்திவர்வன் II என்ற பல்லவ மன்னன் காலத்தில் 'மந்திரி மண்டலம்' என்று ஒரு குழு இருந்த தாகவும், அந்த அவை அந்த அரசனுக்கு முடிசூட்டியதாகவும் அறிகிருேம். கி. பி. 300 முதல் கி. பி. 650 வரை பாதாபிச் சாளுக்கியர்கள், காஞ்சிப்பல்லவர்கள், மதுரைப் பாண்டியர்கள் தாம் ஆதிக்கம் பெற்றிருந்தார்கள். ஆனல், அடிக்கடி அவர் களிடையே சண்டை சச்சரவுகள் இருந்து வந்தன. இருப்பினும் கலைகள் வளர்ந்து வந்தன. காப்புத் தொழிலுக்கன்றி மற்றவற் றுக்குச் சமுதாயம் அரசர்களை எதிர்பார்க்கவில்லை. ஊர்ச் சபைகள்முதலான தல ஸ்தாபனங்கள் மக்கள்நலத்தை வளர்த் தன. கிராமம், கோட்டம், நாடு, மண்டலம் என்ற முறையில் இவை நிலவின. அரசர்கள் அதிகாரிகளை அமர்த்தினர்கள். ஒரு விதத்தில் மக்கள் ஆட்சி நடந்தது எனக் கூறலாம். அரசன்

சகல அதிகாரம் பெற்றிருந்தாலும் அரச குடும்பத்தினர், அமைச்சர், சிற்றரசர்கள், அதிகாரிகள் அந்த அதிகாரத்தை ஒருவாறு கட்டுப்படுத்தினர். 9ஆம் நூற்றுண்டுவரை இந்த நிலை இருந்தது. பின், சோழர்கள் ஆதிக்கம்பெற்று இருந்தார்கள். ராஷ்டிரகூடர்களோடும் சாளுக்கியர்களோடும் அடிக்கடி சச்சரவு இருந்தன. ஆனால், சுமார் 350 ஆண்டுகள் (கி.பி. 1200 வரை) சோழர் ஆதிக்கம் நாட்டை ஒழுங்குபடுத்தியது. இந்தக் காலத்திலேதான் பேர்பெற்ற அரசர்களும் அமைச்சர்களும் விளங்கினார்கள். நிர்வாகமும் பலதிறப்பட்ட அதிகாரிகளால் நடத்தப்பட்டது. அவர்கள் பெருந்தனம், சிறுதனம் என்ற இரு பிரிவுகளாக இருந்தார்கள். இராஜ்யம் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் மண்டலம், நாடு, கோட்டம் எனப் பகுக்கப்பட்டது. நிர்வாகத்திற்குச் சபைகளும், வாரியங் களும் ஏற்படுத்தப்பட்டன. இந்தக் காலத்தில் பல கோயில்கள் கட்டப்பட்டன. மக்கள் கொடுத்த வரியின் நன்மைகளைப் பெற்றார்கள். இந்தக் காலத்திலும் அமைச்சரவை என்று ஒன்று உருவாகக் காணப்படவில்லை.

சோழர்கள் ஆதிக்கம் 13ஆம் நூற்றுண்டின் முற்பகுதியிலே இளைத்துவிட்டது. அதற்குப்பின் சுமார் நூறுண்டு காலம் பாண்டியர்கள், ஹோய்சளர்கள் தெற்கிலும்; காகடீயர்கள், யாதவர்கள் வடக்கிலும் தலைதூக்கினார்கள். வடநாட்டில் முகலாய ஆதிக்கம் பரவிற்று. பாமினி அரசர்களின் ஆதிக்கம் தென்னாட்டு எல்லைக்கும் வந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் விஜயநகரப் பரம்பரை தலைதூக்கிற்று. விஜயநகர ஆட்சி துங்கபத்திர நதியிலிருந்து தெற்கே மதுரைவரை விளங்கியது. அரசியல் செம்மையுற்றது. பிரதேசங்கள் ஸ்தலம், நாடு எனப் பிரிக்கப்பட்டுக் கிராமங்களுக்குக் கர்ணங்கள் அமர்த்தப் பட்டார்கள். கிருஷ்ணதேவர் ஆட்சி மிகப் பிரசித்தமானது. அவர் ராஜதந்திரமும், நிர்வாகத்திறமையும் படைத்தவர். பாமினி முகம்மதியர் ஆதிக்கம் தெற்கு மதுரைவரை பரவி இருந்தது. அந்த ஆதிக்கம் விஜயநகர ஆட்சியில் ஒடுங்கியது.

விஜயநகர அரசர்கள் காலத்தில் அரசியல் குழப்பங்கள் இல்லை. அரசர்கள் அமைச்சர்களை ஆலோசித்து நிர்வாகம் செய்தார்கள். அமைச்சர்கள் அரசர்களால் நியமிக்கப் பட்டவர்கள். அதில் மக்களுக்கு அதிகாரம் இல்லை. எப்போது வேண்டுமானாலும் அமைச்சரை அரசன் நீக்கிவிடலாம். அமைச்சர் ஆலோசனைப்படியே நடக்கவேண்டும் என்றும்

கட்டுப்பாடு இல்லை. கிருஷ்ணதேவராயர் தமது அமைச்சராகிய சாளுவதிம்மரை, சிம்மாசனத்துக்கு வரவேண்டிய வாரிசைக் கொன்ற சதியில் ஈடுபட்டதால் நீக்கினார் என்பது வரலாறு. அரசு, பலதுறை அதிகாரிகள் நியமிக்கப்பட்டு நடந்துவந்தது. இரண்டு கஜானாக்கள் உண்டு. ஒன்று அன்றாட வரவுசெலவு வழக்குகளுக்கு உபயோகப்படுத்தப் பட்டது. பெரிய கஜானா அரசனால் வேண்டிய காலத்தில்தான் திறக்கப்படும். ஆனால், வழக்கமாக அடிக்கடி மேலும்மேலும் நிரப்பப்படும். நிலங்கள் அளக்கப்பட்டு வரிவிதிக்கப்பட்டன. சுங்கவரி ஏராளமாக வந்தன. தற்காலத்தில் உள்ளமாதிரி வீட்டு வரி முதலான பல வரிகள் விதிக்கப்பட்டன. வரிவசூலிப்பது ஏலத்துக்கு விடப்பட்டது. கிருஷ்ணதேவராயர் அரசாங்க வரவை நாலு பாகமாகப் பிரித்து, ஒன்றை அரண்மனைச் செல வுக்கும், ஒன்றைத் தருமத்துக்கும், மற்றொன்றைக் கஜானா வைப் பாகவும் மிகுதியை ராணுவம் முதலான செலவுகளுக்கும் பகிர்ந்து வழங்கினார். இராணுவம் வலுத்திருந்தது. வெவ்வேறு இடங்களில் நாயகர் எனப்படும் இராணுவ அதிகாரிகள் அமைக் கப்பட்டு அவர்களே ரெவினியு அதிகாரமும் செலுத்திவந்தார் கள். ஏற்கெனவே ஆண்டுவந்த சிற்றரசர்கள் கப்பம் செலுத்தி விட்டுத் தாமே நிர்வாகம் செய்யவிடப்பட்டார்கள். சோழர்கள் காலத்துக் கிராம பரிபாலன அமைப்பு ஏறக்குறைய அப்படியே வளர்ந்துவந்தது. கோட்டை கொத்தளங்களும் காவல் நிலையங் களும் ஆங்காங்கே உண்டாயின ; பாளையக்காரர்களும், ஜாகிர் தார்களும் கூடி நீதி அமைதியைக் காத்துவந்தார்கள் ; நீதி மன்றங்கள் ஆங்காங்கே இருந்தன; பல கோயில்கள் விரிவாக் கப்பட்டன ; கல்வியும் புலமையும் ஆதரிக்கப்பட்டன.

விஜயநகர அரசாட்சி மைய அரசியலாகவே இருந்தது, அதற்கு உட்பட்ட மகாமண்டலேசுவரர்கள், அமரநாயகர்கள், பாளையக்காரர்கள், ஜாகிர்தார்கள் எல்லாம் அரசனுக்குக் கட்டுப் பட்ட அடிமைகள். வரிவசூலித்தலும், இராணுவ உதவி மட்டுமே மைய அரசின் கண்காணிப்பு. மற்றைய விஷயங் களில் தல அரசாட்சி கிராம மக்களால் நடைபெற்றது. அரசர்கள் மதியுடை அமைச்சர்களைத் தங்கள் சமஸ்தானத்தில் உடைத்தாயிருந்தார்கள். வடக்கே முகலாயச் சக்கரவர்த்திகள் கூடப் பல அமைச்சர்களை வைத்திருந்தார்கள். அரசன் அமைச்சர்கள் யோசனைகளைக் கேட்பது வழக்கம். ஆனால், அமைச்சர்களுக்குத் தனி அதிகாரமோ, கூட்டுப்பொறுப்போ கிடையா. அமைச்சரவை என்பது உருவாகவில்லை.

அக்பர் காலத்தில் ராஜா தோடர்மால் என்பவர் (இந்து) பிரதம மந்திரியாக இருந்தார். அக்பர், அவருக்கு முன்னிருந்த டில்லி சுல்தான்கள்போல் நாட்டை ராணுவத் தலைவர்களால் ஆளலாம் என்ற கொள்கையைக் கடைப்பிடிக்காமல், ஏராள மான மன்சப்தார்கள் எனப்பட்ட நிர்வாக அதிகாரிகளை ஏற்படுத் தினர். அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் தரப்பட்டது. அக்பர் தமது திவானயாம் என்ற சபையில் பொதுமக்களின் மனுக்களை விசாரித்தார். திவானிகாஸ் சபையில் இரகசிய விவ காரங்களை ஆலோசனை செய்தார். தோடர்மால் துணைகொண்டு ரெவினியு சீர்த்திருத்தங்களைச் செவ்வையாய்ச் செய்தார். அக்பர் அரசில் அமைச்சர் குழு இருந்தது. முதல் அமைச்சர் வக்கில் எனப்படுவார். வஜுர் அல்லது திவான் என்பவர் நிதிஅமைச்சர். மற்றவர்கள் பக்ஷி, சாதர் எனப்படும் அதிகாரிகள். அவர்கள் எல்லாம் துறை அதிகாரிகளாயினும், சக்கரவர்த்தியின் ஆலோசகர்களே ஆவர். பிரதமருக்கு இரண்டு உதவித் திவான்கள். ஒருவர் ஜாகிர்களைப் பார்த்துக் கொள்ளவும், மற் றொருவர் கல்சா அல்லது சர்க்கார் நிலங்களைப் பார்த்துக்கொள் ளவும் உதவிபுரிந்தார்கள். பக்ஷி என்பவர் பணம் வினியோகம் செய்வது, ராணுவத்துக்கு ஆள் சேர்ப்பது, அதிகாரிகளின் ஜாபிதா வைப்பது, ராணுவ அதிகாரிகளைப் பல்வேறு இடங்க ளுக்கு அனுப்பி உத்தரவிடுவது முதலியவற்றைச் செய்தார். மன்சப்தார்களது முறையீடுகளைச் சக்கரவர்த்தி முன்வைத்து உத்தரவுகள் வாங்குவதும் அவர்பணி. சாதர்-இ-சுதூர் என்பவர் புரோகிதர் போன்றவர். புது அரசர் அரசு ஏறும்போது குத்பா படிப்பது அவர் தொழில். காஜிகள் நீதி நிர்வாகத்தை மேற் பார்வை பார்த்துவந்தார்கள். ஊதியம்பெற்றுத் தொழில் புரியும் உத்தியோகஸ்தர்கள் இந்தக் காலத்திலேதான் பெருகினர்கள். நிர்வாகம் அவர்கள்மூலம் நடத்தப்பட்டது. மகாராஷ்டிர அரசர்களும் இதே முறையைக் கைப்பற்றினர்கள். ஜாகிர் வழங்குவது கைவிடப்பட்டது.

சிவாஜி மன்னர் ஆட்சி கௌடில்யர், சுக்கிரர் அர்த்த சாத்திரங்களின்படி நடந்தது. அவர் அரசசபையில் 8 அமைச்சர்களும் 18 தலைவர்களும் இருந்தார்கள். இராஜ்ஜியம் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டு மூன்று பிரதிநிதிகளின் ஆட்சியில் வைக்கப்பட்டிருந்தது. நிலங்கள் அளக்கப்பட்டு வரி விதிக்கப்பட்டன. இராணுவம் வெகு விமரிசையாக அமைக்கப் பட்டது. பத்துச் சிப்பாய்களுக்கு ஒரு நாயக், அதற்குமேல் அவில்தார், அவர்களுக்குமேல் ஜம்லாதார். இது மாதிரிப் படிப் படியாய் அமைக்கப்பட்டது.

முகலாயர், மராத்தியர் ஆட்சிகளில் அமைச்சர்கள் இருந்தாலும், உண்மையில் அவர்கள் உயர்அதிகாரிகளே. அதிகார வர்க்கத்தினர் விரிவடைந்தார்கள். பழைய இராஜ்ஜியங்களில் வடக்கிலாயினும் சரி, தெற்கிலாயினும் சரி, அதற்கு முன் காலத்தில் அமைச்சர்கள் அரசனுடன் இருந்தார்கள். வெளியில் தல ஆட்சியே நடந்துவந்தது. சுமார் 15ஆம் நூற்றுண்டு முதல் அதிகாரவர்க்கத்தினரே (பியூராக்கிரசி) ஆட்சியில் பெரும்பங்கு எடுத்துக்கொண்டனர். இராணுவமும் பெரிய அமைப்பாக விரிந்தது. வீறுபெற்ற மன்னர்கள் அமைச்சர்களைத் துணைக் கொண்டிருந்தாலும், அவர்கள் பிரதம அதிகாரிகளாகவே தொழிற்பட்டார்கள். முடியாட்சிக்கும் மக்கள் ஆட்சிக்கும் இடைப்பட்ட காலம் இது. இது, பின் பிரிட்டிஷ் அரசாட்சிகளின் அமைப்புக்கு ஓரளவு ஒத்திருந்தது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்கள் ஆட்சி 20ஆம் நூற்றுண்டில் தான் காணப்படும்.

4. பிரிட்டிஷ் ஆட்சி ஆரம்ப முதல் இரட்டை ஆட்சி வரை

சீரடைந்துவந்த அரசியல் வடக்கே முகலாயர்; மராத்தியர்; தெற்கே விஜயநகரப் பரம்பரை, நாயக்கர்கள் அரசாட்சிக்குப் பின் மெலிவடைந்தது. சிற்றரசர்கள் குழப்பங்களினால் போர்த்துகீஸ், டச்சு, ஃபிரெஞ்சு, ஆங்கிலேயர்போன்றவாணிகத்துக்கு வந்தவர்கள், உள்நாட்டு விவகாரங்களில் தலையிடநேர்ந்தது. அவர்களுக்கு இடையேயும் போட்டியினால் சண்டை சச்சரவுகள் உண்டாயின. முதன்முதல் வந்தவர்கள் போர்த்துகீசியர்கள். கோவா, முகம்பீக் என்ற நகரங்களில் அவர்கள் முதலில் அமைத்தது ஒருவித இராணுவ நிர்வாகம்தான். இராணுவ அதிகாரிகள் ஆட்சியாளர்களாக நியமிக்கப்பட்டார்கள். சமய வெறியினாலும் பண ஊழல்களாலும் போர்த்துகீசியர் அரசாட்சி நீடிக்கவில்லை. டச்சுக்காரர்கள் வியாபாரத்தில் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். அவர்கள் போர்த்துகீசியர்களால் ஒடுக்கப்பட்டார்கள். ஃபிரெஞ்சுக்காரர்கள் வியாபாரத்தில் அவ்வளவு நிபுணர்கள் இல்லையானாலும் பலவிடங்களில் பண்டகசாலை அமைத்தார்கள். தற்காப்புக்கு இராணுவத்தை ஆங்காங்கே அமர்த்தினார்கள். டூப்ளே காலத்திற்குப் பின்தான் உள்நாட்டு விவகாரங்களில் தீவிரமாக இவர்கள் தலையிடலானார்கள். ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி (East India Company) எலிசபெத் மகாராணி காலத்தில் 1600ஆம் ஆண்டு வாணிகத்துக்குச் சாசனம் பெற்றது. நீள்கடல் வாணிகத்தில் தான் அவர்கள் முதலில் ஈடுபட்டார்கள். கம்பெனியின் முதல் கவர்னருக்கு 18 குழுக்கள் சாசனத்தில் (Charter) அமைக்கப் பட்டன. முதன்முதலில் சூரத்தில் இறங்கி வியாபாரம் தொடங்கினார்கள். போர்த்துகீசியர் எதிர்ப்பு முதலில் அதிகம் இருந்தது. கம்பெனிக்கு ஒரு தலைவரும் ஆலோசனைக் குழுவும் இருந்தன. பல இடங்களில் பண்டகசாலைகள் ஏற்படுத்தப்பட்டன. முதன் முதலில் சந்திரகிரி அரசரிடம் பெற்ற இடத்தில் ஏறக்குறைய

முழு அரசுசெலுத்தத் தொடங்கினர்கள். சர் ஜோசைய சையில்டு என்பவர் நாளடைவில் கம்பெனி ஆதிக்கம் பெற்று, இராணுவ, சிவில் ஆதிக்கம் பெருக்கி ஓர் இராஜ்ஜியத்திற்கு வழிவகுப்பதற்கு வாய்ப்புள்ளதைக் கண்டார். அது உண்மை ஆயிற்று. நாளடைவில் பல இடங்களில் ராஜாக்களிடம் நிலம் பெற்றும் பல சலுகைகள் பெற்றும் ஆதிக்கத்தைப் பெருக்கிக் கொண்டார்கள். கம்பெனியின் செல்வாக்கைக் கண்டு இங்கிலாந்தில் இருந்த வேறு வாணிகத் துறையினர்கள் பொருமை கொண்டார்கள். அதன் விளைவாகப் பல்வேறு கம்பெனிகளாக மாற்றம் அடைந்தது. முகலாய ஆட்சி முடிவடைந்ததாலும் பெரிய ஆதிக்கம் நிலைபெருததாலும் ஆங்கிலேய ஆதிக்கம் நீள் கடலில் பெருகினதுபோல், இந்திய நிலப் பகுதியிலும் பெருகிற்று. ராபர்ட் கிளைவ் காலத்தில் வங்காளம் பூராவும் கம்பெனி நிர்வாகத்தில் வந்தது. ரெவின்யூ அதிகாரமும் சிவில் நீதி வழங்குதலும் திவானி என்ற கொடையினுல் கம்பெனிக்கு விடப்பட்டன. வரி வசூல் முதலானவை இந்தியச் சிப்பந்திகளால் செய்யப்பட்டுப் பின் ஆங்கிலேய மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். இவர்களே பிற்காலத்தில் கலெக்டர்கள் (Collectors) என்று உருவாக்கப்பட்டார்கள். வாரன் ஹேஸ்டிங்ஸ் 1772-ல் வங்காளக் கவர்னர் ஆனுர். பின் ரெகுலேடிங் ஆக்டின்படி (Regulating Act, 1773, அவர் கவர்னர்ஜெனரல் ஆனுர். பம்பாய், சென்னை மாகாண அதிகாரமும் அவருக்கு உட்பட்டது. இந்தச் சட்டம் நிர்வாக வரலாற்றில் முக்கிய இடம் பெறுகிறது. இது நிறைவேறுவதற்குமுன் கம்பெனியின் உத்தியோகஸ்தர்கள் ஏராளமாகத் தமக்குப் பணம் சம்பாதித்துக்கொண்டார்கள். கம்பெனியின் டைரக்டர்கள் இங்கிலாந்தில் செல்வாக்கும் ஆதிக்கமும் பெற்றுவிட்டார்கள். இது பொருமையை விளைவித்தது. பிரிட்டிஷ் பாராளுமன்ற அமைச்சரவைக்குக்கூட அவ்வளவு ஆதிக்கம் இல்லை. ஆனுல், இந்திய ஆட்சியைத் தாமே எடுத்துக்கொள்ள அந்தக் காலத்தில் அவர்கள் விரும்பவில்லை. ஆனுல், பிரிட்டிஷ் சாசனம் பெற்று, வாணிகம் செய்து பெரும் பொருள் சேர்த்துவரும் கம்பெனியின் இலாபத்தில் ஒரு பங்கை அடையவும், கம்பெனி டைரக்டர்களின் ஆதிக்கத்தைக் குறைக்கவும் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டம்தான் முதன்முதலில் கவர்னர்ஜெனரலுக்கு ஓர் ஆலோசனை சபைக் கவுன்சில் (Council) இருக்கவேண்டும் என்று விதித்தது. கம்பெனி டைரக்டர்கள் நான்கு ஆண்டுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படவேண்டும். ஒவ்வோர் ஆண்டும்

நான்கில் ஒரு பங்கு அங்கத்தினர்கள் ஓய்வு பெறவேண்டும். வங்காளத்தில் கவர்னர் ஜெனரல் இருக்கவேண்டும். அவருக்கு நான்கு ஆலோசகர்கள் இருக்கவேண்டும். முடிவுகள் இந்தக் கவுன்சிலில் பெருவாரியான வாக்குகள்மூலம் எடுக்கப்பட வேண்டும். கவர்னர் ஜெனரலுக்கு முடிவு நிர்ணய வாக்கு (casting vote) இருத்தல் வேண்டும். இந்த நிர்வாக சபையே மாகாணங்களில் இந்திய ராஜாக்களுடன் கம்பெனியின் அரசியல் சம்பந்தங்களை ஒழுங்குபடுத்தவேண்டும். கம்பெனி டைரக்டர்கள் தங்கள் நடவடிக்கைகளின் அறிக்கையை, கவர்னர் ஜெனரலுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். கல்கத்தாவில் ஒரு நீதிமன்றம், ஒரு பிரதம நீதிபதியும், மூன்று சாதாரண நீதிபதிகளும் கூடியதாய் அமைத்தல் வேண்டும் என்றெல்லாம் இந்த ரெகுலேடிங் ஆக்டு விதித்தது. இது ஆங்கில ஆட்சியின் முதல் கட்டம் எனக் கூறலாம். கவர்னர் ஜெனரலுக்கோ, கம்பெனி டைரக்டர்களுக்கோ முழு ஆதிக்கம் தராமல், கவர்னர் ஜெனரலுக்கு ஆலோசனைக் குழு ஏற்படுத்தி ஒருவிதமான கூட்டுப் பொறுப்பை ஏற்படுத்தியது முதல், கவர்னர் ஜெனரல் உண்மையாகவே ஆலோசக சபை அங்கத்தினர்களின் ஏகாதி பத்தியத்தால் சிறிது அல்லற்பட்டார். சுப்ரீம் கோர்ட்டுக்கும் கவர்னர் ஜெனரல் கவுன்சிலுக்கும் அடிக்கடி முரண் ஏற்பட்டு வந்தது.

இங்கிலாந்துப் பிரதம மந்திரி பீட் என்பவர் இந்த நிலையைச் சீர்திருத்த 1784ஆம் ஆண்டு இந்திய ஆக்ட் (India Act, 1784) என்ற சட்டத்தை நிறைவேற்றினர். இந்தச் சட்டம் கிழக்கு இந்தியக் கம்பெனிக்கு வாணிகம், அதிகாரம் வழங்குதல் முதலியவைகளில் அதிகாரம் தந்தாலும் கம்பெனியை அரசாங் கத்துக்கு உட்பட ஒரு டிபார்ட்மென்டு (துறை) போல் ஆக்கி விட்டது. இந்திய விவகாரங்களைக் கண்காணிக்க ஒரு வாரியத்தை ஏற்படுத்திற்று. (இது இந்திய விவகாரங்களின் ஆணையாளர்கள் அல்லது சுருக்கமாக போர்டு ஆஃப் கன்ட் ரோல்—Board of Control எனப் பேர் பெற்றது.) இதற்கு நிதி காப்பாளர், ஒரு ராஜியச் செயலாளர், நான்கு அந்தரங்க ஆலோசகர்கள், பிரிவி கவுன்சிலர்கள் (Privy Councillors) அங்கத்தினர்கள். பிரிட்டிஷ் அரசுக்கு இது அதிகாரத்தைத் தந்தது. எனினும், கம்பெனியின் போக்குக் குறையவில்லை. இம் மாதிரி இரட்டை நிர்வாகம் 1858ஆம் ஆண்டுவரை நீடித்தது. 1786ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டம் ஹேஸ்டிங் சுக்குப் பின்வந்த கவர்னர்ஜெனரல் கார்ன்வாலிசுக்கு ஆலோசக சபை முடிவுகளில் சிற்சில சமயங்களில் நிராகரிக்

கவும், இந்திய நிர்வாகத்திற்கு உண்மையான தலைமை அதிகாரத்துவத்தையும் தந்தது. நிர்வாகத்தில் இருந்த ஊழல்களைக் காரன்வாலிஸ் சிறிது நிவாரணம் செய்தார். காரன்வாலிஸ் நிரந்தர நிலவரியை (Permanent settlement) ஏற்படுத்தினர். உயர்நிலை நிர்வாகப் பதவிகளை ஆங்கிலேயர் மயமாக்கினர். நான்கு நீதிமன்றங்களை வெவ்வேறு இடங்களில் அமைத்தார். கீழ்நிலை நீதி ஸ்தானங்களான முனிசீப் உத்தியோகத்திற்கு இந்தியர்களை நியமித்தார். பிரிட்டிஷ் இந்திய அரசாட்சிக்குக் காரன்வாலிஸ் அடிகோலினர் எனலாம். பின்வரும் காபினெட்டு அரசாங்கத்தை நோக்கும்போது காரன்வாலிஸின் ஆலோசகர் குழு (Council) முதல்படி எனலாம்.

கிழக்கிந்தியக் கம்பெனியின் சாசனம் புதுப்பிக்கும் விஷயம் 1808ஆம் ஆண்டு, பாராளுமன்றக் குழுவினால் பரிசீலனம் செய்யப்பட்டது. அதன் விளைவாகச் சாசனம் 1814-ல் இருந்து 20 ஆண்டுகட்கு நீட்டிக்கப்பட்டது. ஆனல், கம்பெனியின் வரும்படியிலிருந்து குறிப்பிட்ட தொகை பிரிட்டிஷ் அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் கல்வி அபிவிருத்தி முதலியவைகட்கு உபயோகிக்கவேண்டு மென்று நிர்ப்பந்தப்படுத்தப்பட்டது. இந்தியக் கவர்னர் ஜெனரல் கம்பெனி விவகாரங்களை மேற்பார்வை பார்த்து ஒழுங்குபடுத்துவதுமன்றி, பாராளுமன்றத்துக்கும் உட்பட்டவராய் இருந்தார். பின்வந்த கவர்னர் ஜெனரல் வில்லியம் பென்டிங்கு பிரபு முதலானவர்கள் பல சீர்திருத்தங்கள் செய்தனர். இருப்பினும், பிரிட்டிஷ் அரசாங்கம் பாரசீக யுத்தம், கிரிமியன் யுத்தம் இவைகளில் தலையிட்டதால், இந்திய ஆட்சி பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்திற்கு உபயோகப் படுத்தப்படுவதாக நாட்டில் விழிப்பு ஏற்பட்டது. 1857ஆம் ஆண்டில் நடைபெற்ற சிப்பாய்க்கலகம் (Indian Mutiny) இதற்கு அறிகுறி. இது நிர்வாக அவலத்தினல் விளைந்ததன்று எனக்கூறினலும், அந்நியர் ஆதிக்கத்தை எதிர்க்கும் மனப்பான்மையை அடிப்படையாக உடையது எனக் கருதப்படும். கலகம் அடக்கப்பட்டது. அதே சமயத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியின் முடிவுகளும் தீவிரமாகச் சிந்திக்கப்பட்டன. 1858ஆம் ஆண்டு இந்திய ஆட்சிச் சீர்திருத்தச் சட்டம் (Better Government of India Act, 1858) பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது. கம்பெனியின் நிர்வாக போர்டுக்குப் (Board of Control) பதிலாக அரசாங்கச் செயலாளர் (Secretary of State) நியமிக்கப்பட்டார். இவர் 15 பேர்அடங்கிய குழுவினல் உதவி செய்யப்படுவார். முதல் குழுவுக்கு மன்னர் 8 பேரையும்,

டைரக்டர்கள் 7 பேரையும் நியமித்தார்கள். இது ஒன்றிக்கப் பட்ட குழுவாகையால் இரட்டை அதிகாரம் நீக்கப்பட்டது. விக்டோரியா இராணியாரின் பிரகடனம் (Proclamation) வைசிராய் கானிங்குப் பிரபுவினால் 1878 நவம்பர் 1ஆம் தேதி அலகாபாத்தில் வாசிக்கப்பட்டது. இந்தப் பிரகடனம் அந்தச் சமயத்தில் இருந்த இந்திய அரசர்களின் ஆட்சிகளைக் குறைப் பதில்லை என்றும், வாரிசு இல்லாத அரசுகளை பிரிட்டிஷ் ஆட்சி ஆக்கிரமித்துக் கொள்ளாதென்றும், இந்தியர்களின் சமய விஷயங்களில் பிரிட்டிஷ் ஆட்சி தலையிடாதென்றும், இந்தியர்கள் உத்தியோகங்களில் பெருவாரியாக ஏற்றுக்கொள்ளப்படுவர் என்றும் உறுதி கூறிற்று.

பிரிட்டிஷ் அரசி 1858-ல் இந்திய ஆட்சிக்கு நேர்பொறுப்பு ஏற்றுக்கொண்டதாகக் கூறிய நாள்முதல் அடுத்த தொண்ணூறு ஆண்டுகளில், அதாவது 1947ஆம் ஆண்டில் இந்தியா விடுதலை அடைந்த நாள்வரை பின்வரும் இந்திய சுயஆட்சிக்குப் பல படிகள் இருந்ததெனக் கூறலாம். இந்திய தேசிய உணர்ச்சி பெருகி ஓங்கினதால் இந்தத் தொண்ணூறு ஆண்டுகள் நீண்ட காலமே. எனினும் சுயஆட்சி, அமைச்சரவை நிர்வாகம் இவைகளுக்கு அனுபவம் தேவைதான். பிரிட்டிஷ் அரசியல் கட்சிகளில் சில இந்தியாவிற்கு அவ்வளவு அவசரமாகச் சுய ஆட்சி தரத் தேவைஇல்லை என்று சுய நாட்டு நலம்கருதிக் கூறி வந்தமையால், இந்தியர்கட்கு அவநம்பிக்கையும் அதிருப்தியும் உண்டாயிற்று. மேலும், இந்திய மக்கள் வறுமையில் நீடித்து வந்ததால், சுதந்திரம் ஒன்றே அந்த நிலையை மாற்றக்கூடு மென்று தேசாபிமானிகள் நம்பினார்கள். அதில் சிலர் தீவிர வாதிகள்; சிலர் நிதானவாதிகள். உடனடியாகச் சுதந்திரம் வந்தால், முன்னேற்றமடையாத இந்திய மக்களில் பல பகுதி யினர் பாதிக்கப்படுவர் என்று உண்மையிலேயே எண்ணியவர் களும் உண்டு. நாட்டில் பல்வேறு தலைவர்கள் பொறுப்பாட் சிக்கும் சுதந்திரத்திற்கும் வாதாடி வந்தார்கள். 1858-ன் சட்டத் திற்குப்பின் இந்திய செக்ரடரி ஆஃப் ஸ்டேட் முழு அதிகாரம் செலுத்திவந்தார். வைசிராய் அவர் உத்தரவுக்கு உட்பட்டவர். இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் சூயஸ் கால்வாய்மூலம் கடல் தந்திக்கம்பி போட்டபின் செக்ரடரி ஆஃப் ஸ்டேட்டின் தலை யிடுதல் அதிகமாயின. ஆனால், வைசிராய் தமது ஆலோசகர் சபையோடு சேர்ந்து இயங்குதல் கொஞ்சம் சுலபமாயிற்று. கானிங்கு பிரபு ஒரு நிதி ஆலோசகர் (அங்கத்தினர்) சபையை ஏற்படுத்திக்கொண்டார். மற்றவர்கட்குக் குறிப்பிட்ட துறை களைப் பங்கிட்டுக்கொடுத்தார். இந்தியக் கவுன்சிலர் ஆக்டு

1861-ன் படி வைசிராய்க்கு இந்த உரிமை சட்டபூர்வமாயிற்று. தமது அங்கத்தினர்களோடும் (செயலகம் காரியதரிசிகளோடும்) அடிக்கடி கூடி ஆலோசனை நடத்தினர். இதனுல் முன்பு கடிதக் குறிப்புகள் எழுதி நிர்வாகம் செய்த முறை போய் நேரடியாக விவாதித்து முடிவு எடுக்கும் முறை உருவாயிற்று. இந்தச் சபையில் இராணுவத் தலைவர் (கமாண்டர்-இன்-சீப் —Commander-in-chief) சேர்க்கப்படவில்லை. வைசிராய்க்குச் சபையின் யோசனையை நிராகரிப்பதற்கு அதிகாரம் உண்டு. அவர் தனிப்பட்ட முறையில் உத்தரவு பிறப்பித்தாலும் சபையோடு கூடிப் பிறப்பித்ததன் யோக்கியதை உண்டு. வைசிராய் ஆட்சி இந்தியா பூராவும் ஒற்றை ஆட்சி எனினும், மாகாணங்களில் ஏற்கெனவே இருந்த கவர்னர் ஆட்சிகள் தெளிவான முறையில் உருவாயின. கவர்னர்கள் வைசிராயின் உத்தரவுக்கு உட்பட்டவர்கள். வைசிராயின் சட்ட அதிகாரங்களால் மாகாணங்கள் பூராவும் சில விஷயங்களில் ஒரே மாதிரியான சட்டம் நிலவின. உதாரணமாக. முன்னிருந்த முஸ்லிம் சட்டம், ஆங்கிலச் சட்டம் கலப்புப் போய் வைசிராயின் சட்டம் இடம் பெற்றது. நிதி விவகாரங்களிலும் மாகாணங்களுக்குத் தனி வரவுசெலவுத் திட்டம் ஆக்கப்பட்டன. மாகாணங்களுக்குச் சிற்சில உரிமைகள் நிதி விஷயங்களில் இருந்தன. சிவில் கணக்கு விதித்தொகுப்பு (Civil Account Code) உருவாயின. இந்தியர்கட்கு எல்லா உத்தியோகங்கட்கும் நுழைவு உண்டு எனினும் உயர்மட்ட கவர்ன்மென்ட் சிவில் சர்வீசுக்குப் பரீட்சை லண்டனில் நடத்தியபடியால், இந்தியர்கட்குக் கதவு அடைக்கப்பட்டிருந்த தென்றுதான் கூறலாம். சில உத்தியோகங்கட்கு அந்தப் பரீட்சைக்கு உட்படாமலே இந்தியர்களை அமர்த்தலாம் என்ற சலுகை தரப்பட்டது. இந்தியாவிலும் லண்டனிலும் ஒரே நேரத்தில் பரீட்சை இன்னும் நடத்தப்படவில்லை. நிர்வாகம் பல துறைகளிலும் கர்ச்சன்பிரபு வைசிராயாக இருந்த காலத்தில் விரிவடைந்தது. வைசிராயின் ஆலோசகர்கட்குத் தங்களுக்கெனத் தனிக் கொள்கைகளோ திட்டங்களோ கிடையா; எல்லாம் வைசிராயின் முடிவுகளே. அவர்கள் பெரும் உத்தியோகஸ்தர்கள் போல்தான் இருந்தார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களால் ஆக்கப்பட்ட அவைக்கும் வைசிராய் சபைக்குமுள்ள பல வித்தியாசங்களில் இது முக்கியமானது.

1858ஆம் ஆண்டுக்குப்பிறகு உள்நாட்டில் சண்டை சச்சரவுகள் இல்லை. இந்தியர்களுடைய ஆசைகளும், ஆவேசங்களும் ஆட்சி முறைகளில் தலையெடுத்தன. ஆட்சியில் பொறுப்புள்ள

பங்கு கிடைக்கவில்லை. பெரிய உத்தியோகங்களிலும் சிறு பான்மையருக்கே இடம் கிடைத்தது. எனவே, அதிருப்தி பெருகி வந்தது. பிரிட்டிஷ் ஆட்சியாளர்கட்கு இது தெரியாத தன்று. ஒருநாள் இந்தியர்கட்கு அதிகாரத்தை ஒப்படைக்க வேண்டும் என்பதை அறிந்தார்கள். வைசிராயின் கவுன்சிலில் (Viceroy's Council) முதலில் ஒரு சட்ட அங்கத்தினர் (Law Member) அமைக்கப்பட்டார். பின், சட்டசபை உருவாயிற்று. அதில் சட்ட அங்கத்தினர், சில முக்கிய மாகாணங்களின் உத்தியோகபூர்வமான அங்கத்தினர்கள், பிரதம நீதிபதி, மேலும் ஒரு நீதிபதி இடம் பெற்றுர்கள். இந்தச் சட்டசபை வைசிராயினுல் நியமிக்கப்பட்டாலும், சட்ட விஷயங்களில் மட்டும் எதேச்சையாகக் கருத்துக்கூறவும் சட்டம் நிறைவேற்றும் உரிமை பெற்றது. இந்தச் சபைக்குச் சட்டம் நிறைவேற்றும் கடமை ஒன்றுதான்; நிர்வாகத்தில் பங்கு இல்லை. வைசிராயின் அங்கத்தினர்களும் அதற்குப் பொறுப்புடையவர்கள் அல்லர். மக்களால் தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் ஆகையால் அது தற்காலச் சட்டசபை போன்றதன்று. வைசிராயும் செக்ரடரி ஆஃப் ஸ்டேட்டும் இந்தச் சபை நிறைவேற்றிய சட்டங்களை நிராகரிக்கலாம். இந்தச் சட்டசபையில் இந்திய அங்கத்தினர் களை நியமிக்க வைசிராய்க்கு அதிகாரம் இருந்தது. நாளடை வில் சிலர் நியமிக்கப்பட்டார்கள். ஆனல், அவர்கள் சுதந்திர மாகத் தொழிற்படமுடியாது. அடிப்படையான முக்கியச் சட்டங் கள் நிறைவேற்றப்பட்டன. சிவில் சட்டம் (Civil Code), கிரிமி னல் சட்டம் (Criminal Code), சாட்சிச் சட்டம் (Evidence Code) முதலியவை உதாரணங்கள். இவை இன்றும் நிலவிவரும் பெருமை உடையன.

தேசிய உணர்ச்சி மேலெழ இந்தச் சட்டசபையை விரி வாக்கிப் பலதிறப்பட்ட பிரதிநிதிகள் அதில் சேர்க்கப்படவேண்டு மென்ற புரட்சி வலுவடைந்து வந்தது. அங்கத்தினர்கள் கேள்வி கேட்கும் உரிமை, வரவுசெலவுத் திட்டத்தை (Budget) அங்கீகரித்தல் முதலிய உரிமைகளைத் தரலாம் என்று வைசிராய் டஃபரின் பிரபு பரிந்துரை கூறினர். 1892ஆம் ஆண்டு இந்தியன் கவுன்சில்ஸ் ஆக்டுப் பிரகாரம் கூடுதலான அங்கத்தினர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. இதன் விளைவாக 10 பேர் மாகாணச் சட்டசபைகள் நியமனத்தாலும் வைசிராய் நியமனத் தாலும் சேர்க்கப்பட்டார்கள். இதே சமயத்தில் மாகாணச் சட்ட சபைகளின் எண்ணிக்கையும் கூடுதலாயிற்று. இந்தச் சலுகை கள் இந்தியத் தேசியவாதிகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வில்லை, இந் நிலை மார்லிபிரபு (Morley) செக்ரடரி ஆஃப் ஸ்டேட்

டாயும் மின்டோ பிரபு (Minto) இந்தியாவில் வைசிராயும் ஆக இருந்த வேளையில் நிலவிற்று.

விக்டோரியா மகாராணியின் பிரகடனத்தின் ஐம்பதாம் ஆண்டு, சிறப்பாக 1908ஆம் ஆண்டில் எட்வார்டு VII மன்னர் இந்தியர்கட்குப் பொறுப்பாட்சியை விரிவுபடுத்துவதாக அறிக்கையிட்டார். அதற்கிணங்க, 1909ஆம் ஆண்டு புது இந்தியன் கவுன்சில்ஸ் ஆக்டு (Indian Councils Act) நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டமும் செக்ரடரி ஆஃப் ஸ்டேட்டுக்கு ஏராளமான அதிகாரம் தந்தது. மாகாணச் சட்டசபைகளின் அங்கத்தினர்கள் எண்ணிக்கையை அதிகரிக்கவும், நிர்வாக அங்கத்தினர்களின் (Executive Councilors) எண்ணிக்கையை அதிகரிக்கவும் இந்தச் சட்டம் வகைசெய்தது. மத்திய சட்ட சபையின் எண்ணிக்கை 21-ல் இருந்து 60 ஆயிற்று. மாகாணச் சபைகளின் எண்ணிக்கை இரு மடங்காகியது.

மாகாணங்களில் இரண்டுக்கு நாலாக எக்சிகியூடிவ் கவுன்சிலர்கள் நியமிக்கப்பட்டார்கள். இந்தியர்கள் எல்லா எக்சிகியூடிவ் கவுன்சில்களிலும் சேர்க்கப்பட்டார்கள். மார்லி பிரபுவுக்கு இந்தியர்கட்குப் பாராளுமன்ற அரசாட்சியை உடனடியாகத் தர எண்ணமில்லை. எனவே, தேசியவாதிகளுக்குக் கொடுக்கப்பட்ட சலுகைகள் திருப்தியைத் தரவில்லை. மின்டோவிற்குப் பின் ஹார்டிஞ்சுப் பிரபு இந்திய நோக்கங்களுக்கு அனுசரணையாக இருந்தார். எனினும், இந்தியர்களில் சிலர் வன்முறை வழிகளில் இறங்கினார்கள். கோகலே போன்ற மிதவாதிகள் சீர்திருத்தங்களினால் மிக மகிழ்ச்சி அடையவில்லையாயினும், அரசாங்கத்துடன் நட்புறவு கொள்ளவேண்டுமென்றே கருதினர். 1914ஆம் ஆண்டு முதல் உலக மகாயுத்தம் ஆரம்பமாயிற்று. இந்திய அரசாங்கம் அதற்குப் பக்கபலத்தைத் தரவேண்டியதாயிற்று. பணம் மட்டுமன்றி, இராணுவத்திலும் இந்தியர்கள் சேர்ந்து ஒத்தாசை செய்யவேண்டியதாயிற்று. திலகர், பெசன்ட் அம்மையார் போன்ற சுய ஆட்சிக்குப் பாடுபட்ட தலைவர்கள் போராட்டத்தைத் தொடங்கி நடத்திவந்தார்கள். இந்திய தேசியக் காங்கிரசும் முஸ்லிம் லீக்கும் இந்தப் போராட்டத்தில் சேர்ந்து தொழில்புரிந்தன. இதன் விளைவாக மான்டேகு (E. S. Montagu, Secretary of State) காமன்ஸ் சபையில் இந்திய அரசியல் சீர்திருத்த விஷயத்தில் ஓர் அறிக்கை செய்தார். அதனுடைய முக்கிய அம்சங்கள் : (1) இந்தியர்கள் நிர்வாகத்தில் இன்னும் அதிகமாகச் சேர்க்கப்படுதல், (2) சுய ஆட்சி அமைப்புகளை விரிவாக்கி இந்தியாவை

பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தில் தகுதியான இடம் பெறச்செய்தல், (3) எல்லா விஷயங்களிலும் படிப்படியாக முன்னேறுதல், (4) பிரிட்டிஷ் கவர்ன்மென்டும் இந்தியாவிலுள்ள கவர்ன் மென்டுமே இந்தியர்களின் ஒத்துழைப்புக்குச் சமமாக முன்னேற்ற முடிவுகளின் முறையையும் நேரத்தையும் நிர்ண யித்தல் என்பன. இவைகளைத் தொழிற்படுத்த மான்டேகு இந்தியாவிற்கு வந்தார். மான்டேகுவும் வைசிராய் செம்ஸ் ஃபோர்டு பிரபுவும் (Lord Chelmsford) சேர்ந்து ஓர் அறிக்கையை 1918, ஜூலை 8 அன்று வெளியிட்டார்கள். இந்த அறிக்கை டையார்க்கி (Dyarchy) என்ற இரட்டை ஆட்சியைத் தருவதாகக் கூறிற்று. ஆட்சியில் சில துறைகளை மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்ட அமைச்சர்கள் அதிகாரத்திலும், மற்றைய நிதி, பாது காப்பு, சட்டம் முதலிய துறைகளை வைசிராய்க்கு உட்பட்ட அங்கத்தினர்கள் அதிகாரத்திலும் விடும் திட்டம் அது. இந்த ஏற்பாட்டைச் சுயஆட்சிக் கட்சி (Home Rule League) கண்டித்தது. மிதவாதிகள் ஒருவாறு ஏற்றுக்கொண்டனர். இந்தத் திட்டம் பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்பட்டது.

இந்தச் சட்டம்தான் கவர்ன்மென்டு ஆஃப் இந்தியா ஆக்டு (Government of India Act, 1919). அதன்படி மாகாணங்களில் கவர்னர் தலைமையில் ஒரு பகுதிக்கு 2-க்கு மேல் 4 வரை அங்கத் தினர்களும் (Members of Council) மற்றைய பகுதிக்கு அமைச்சர் களும் தொழில்புரிவார்கள். முன்னையோர் பிரிட்டிஷ் கவர்ன் மென்டால் நியமிக்கப்படுவார்கள்; பின்னையோர் கவர்னரால் நியமிக்கப்படுவார்கள். முன்னையோர் ஒதுக்கப்பட்ட துறை களுக்கு (Reserved subjects) அதிகாரிகள்; பின்னையோர் மாற்றப்பட்ட துறைகளுக்கு (Transferred subjects) அதி காரிகள். நாளடைவில் ரிசர்வ்டு சப்ஜெக்டை டிரான்ஸ்பர்டு சப்ஜெக்டாக மாற்றவேண்டும் என்பது நோக்கம் எனக் கூறப் பட்டது. மாகாணச் சட்டசபைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப் பட்டது. அவைகளில் சுமார் 70 சதவீதம் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களாக இருப்பார்கள். ஜாதிவாதப் பிரதிநிதித்துவத் துக்கு இந்தப் புதிய திட்டத்தில் அதிகமாக இடம் தரப்பட்டது. மாகாணச் சட்ட மன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலை வர்கள் இருப்பார்கள். சட்ட மன்றம் பணம் அனுமதிக்காவிட் டால் கவர்னர் அதை நிராகரிக்க அதிகாரம் உண்டு. இந்திய கவர்னர் ஒருமுகக் கவர்ன்மென்டு (Unitary Government) தான். அது செக்ரடரி ஆஃப் ஸ்டேட்டுக்குத்தான் உத்தரவாதம். வைசிராயின் நிர்வாகக் கவுன்சில் (Executive Council) விஸ்தரிக் கப்பட்டது. அதில் பகுதிப்பேர் இந்தியர்களாக இருத்தல்

வேண்டும். சட்டமன்றம் கீழ்சபை மேல்சபை (Lower House and Upper House) என ஈரங்கமாக இருக்கும். மேல்சபையிலும் பெரும்பாலான அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். அதிகாரவர்க்கத்தினர் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. சில சமயங்களில் இரண்டு சபைகளும் கூட்டு அமர்வு ஏற்படுத்திச் சிக்கல்களைத் தீர்க்கலாம். கீழ்சபைக்குச் சில விஷயங்களை விவாதிக்க அதிகாரம் கிடையாது. சம்பளப் பணத்தைக் குறைக்கவோ, மறுக்கவோ கீழ்சபைக்கு அதிகாரம் உண்டு. ஆனல், கவர்னர் ஜெனரலுக்கு அதை ரத்துசெய்ய அதிகாரம் உண்டு. நாட்டின் அமைதிக்கு அவசரச் சட்டங்கள் இயற்றவும், பணம் ஒதுக்கவும் அவருக்கு அதிகாரம் உண்டு.

இந்த அரசியல் சீர்திருத்தங்களுக்கு மான்டேகு செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தங்கள் (Montagu - Chelmsford Reforms) என்று பெயர். இவை 10 ஆண்டுகள் அமலில் இருந்தபின் எவ்வளவு வெற்றி பெற்றது என்று பரிசீலிக்க வேண்டியதாக ஏற்பாடு செய்யப்பட்டது. நாட்டில் ரௌலட்டுச் சட்டம் போன்ற அடக்குமுறைகளால் அதிருப்தி இருந்தாலும், டையார்க்கி ஏற்பாடு கூடியவரை நல்லமுறையில் நடந்தது.

இரட்டை ஆட்சியின்கீழ் எந்த அளவு காபினெட்டு அம்சங்கள் இல்லை அல்லது இருந்தது என்பதை அடுத்த அத்தியாயத்தில் கவனிப்போம்.

5. இரட்டை ஆட்சியில் கூட்டுப்பொறுப்பு

1919ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி இரட்டை ஆட்சியில் (Dyarchy) சில நல்ல வளர்ச்சிகளும், புது அனுபவங்களும், முன்னேற்றமும் இருந்தபோதிலும் பொறுப்புடைய ஆட்சியின் முக்கிய அம்சமான கூட்டுப் பொறுப்பு (Collective responsibility) இல்லை என்பதுதான் ஆதிமுதற்கொண்டே காணப்பட்ட குறை. கவர்னர், கவுன்சில் அங்கத்தினர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்கள், சட்டமன்றம் என்ற அம்சங்களில், அமைச்சர்கள் சட்டமன்றத்துக்கோ தேர்ந்தெடுத்த வாக்காளர்கட்கோ முழு உத்தரவாதமாக நடந்துகொள்வதற்கு ரிசர்வ்டு பாதி தடையாயிருப்பது ஒரு தடங்கலாக இல்லை. கவர்னருக்கும் சில பிரத்தியேக அதிகாரங்கள் இருந்தன. கவர்னர் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டவராகையால், அவர் சட்டமன்றத்துக்கு முற்றும் கட்டுப்பட்டவர் (Responsible to the Legislature) அல்லர். எனவே, அமைச்சர்களுக்குச் சுயேச்சை அதிகாரமும் இல்லை; கூட்டுப்பொறுப்பும் இல்லை. டில்லி அரசாங்கமும் செக்ரடரி ஆஃப் ஸ்டேட் உத்தரவுக்குக் கட்டுப்பட்டது. அதை யதேச்சை அரசாங்கம் எனச் சொல்ல முடியாது. கவர்னர் ஜெனரலுக்கு இந்தியாவில் எல்லாப் பாகங்களிலும் அதிகாரம் உண்டு. அவர் தமது கவுன்சிலின் ஆலோசனையுடன் நடந்தாலும் அதை நிராகரிப்பதற்கு அதிகாரம் உண்டு. அவர் என்ன செய்தாலும் முழுக் கவர்ன்மென்டு செய்ததாகவே எண்ணப்பட வேண்டும். கவர்னர் ஜெனரலின் கவுன்சிலில் 6 பேர்கள் உண்டு. சேனாதிபதி ஒரு பிரத்தியேக அங்கத்தினர். முதலில் விஷயங்கள் முழுக் கவுன்சிலினால் விவாதிக்கப்பட்டு, பெருவாரியான வாக்குப் பிரகாரம் முடிவு எடுக்கப்பட்டன. பின்னால் ஒவ்வோர் அங்கத்தினருக்கும் துறைகள் (Portfolio) நியமிக்கப்பட்டன. பிரிட்டிஷ் பார்லிமென்டின் ஆணைக்கு உட்பட்டதாக இருந்தாலும் கவர்னர் ஜெனரல்

சட்டமன்றத்தின் கருத்துகளை அறிந்து நிர்வாகம் செய்யவேண்டு மென்பது கருத்து. கவர்னர் ஜெனரலின் அரசாட்சி மாகாண அரசாங்கங்கட்கு அதிகாரம் கொடுத்திருந்தாலும் நிதி விநியோகம், சட்டம் நிறைவேற்றுதல், உயர்தர ஆபீசர்களை (ஐ. சி. எஸ். முதலியன) நியமித்தல், நிர்வாகம் செய்தல் இவை போன்றவைகளால் மாகாண அரசாங்கங்கள் கட்டுப் பட்டவை. மாகாண வரிவசூல்களிலிருந்து மத்திய அரசாங்கம் பங்கு பெறவும் அதிகாரம் உண்டு. ஆனால், புது அரசியலின் சீர்திருத்தம், இந்தியாவுக்குச் சுய ஆட்சி தருவதற்குமுன் மாகாணங்கள் மத்திய ஆட்சியின் இரும்புப் பிடியிலிருந்து தளர்த்தப் படவேண்டுமென்பதுதான். அந்த விடுதலை மாகாணங்களில் உள்ள அரசாங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் கருத்துகளுக்கு உகந்தவாறு கூடியவரை நடத்தப்படவேண்டு மென்பதுதான். இந்தவகையில் தேர்தெடுக்கப்பட்ட மாகாண அமைச்சர்கள் மக்கள் ஆசைகளை நிறைவேற்றக்கூடும் என்று எண்ணப்பட்டது. ஆனால், மாகாண அமைச்சர்கட்குச் சில துறைகளே கட்டுப்பாடுகளுடன் விடப்பட்டதால், இந்த நல்ல நோக்கம் பேரளவில்தான் நிறைவேறிற்று. மாற்றப்பட்ட துறைகளுக்குத் தேவையான சட்டங்களை நிறைவேற்றுவதற்குக் கூட கவர்னர் ஜெனரலின் அங்கீகாரம் தேவையாயிருந்தது. சில சட்டங்கள்கூட, கவர்னர் அனுமதித்தால்தான் அமலுக்கு வரலாம். எனவே, அமைச்சர்களின் அதிகாரம் மிகக் கட்டுப் பட்டதே. எனினும், மாற்றப்பட்ட துறைகளின் தேவைகளுக்கு அமைச்சர்கள் வாதாட வாய்ப்பு இருந்ததால் தரப்படாத துறை களின் நிர்வாகத்துடன் சமன்செய்யச் சிறிதளவு முடிந்தது. இந்த இரட்டை ஆட்சிக் காலத்தில் நாட்டில் தேசியப் புரட்சி அதிகமாக இருந்ததால் அமைச்சர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத் தோடு ஒத்துழைப்பவர்கள் எனக் கருதப்பட்டு, முழு மக்கள் ஆதரவு இல்லாமல் இருந்தது. இந்த நிலை பின் சுயராஜ்யக் கட்சி உத்தியோகம் பெறலாம் என்ற நோக்கம் கொண்ட பிறகு சிறிது மாறிற்று. எனவே, இரட்டையாட்சியில் அமைச்சர்களுக்கு மத்தளம்போல் இருபக்கமும் அடி ஏற்கும் நிலை இருந்தது.

இரட்டையாட்சியின் பல்வேறு கோணங்களில் காணக் கூடிய கருத்துகள் பல. இந்த நூலில் அமைச்சர்களுக்கும் கவர்னருக்கும் இருந்த உறவு, அமைச்சர்களுக்கும் ரிசர்வ்டு பாதி அங்கத்தினர்கட்கும் இருந்த உறவு, அமைச்சர்களுக்கும் சட்டசபைக்கும் இருந்த உறவு, அமைச்சர்கள் தம்மிடையே கூட்டுப்பொறுப்பு வளர்ந்த விதம் இவைகளைத்தாம் முக்கிய மாகக் கவனிக்க வேண்டியுள்ளது. முதற்கண் அமைச்சர்கட்குச்

சில துறைகள் தரப்பட்டிருந்தாலும் அவைகளுக்குத் துணையாக இருக்கவேண்டிய வசதிகள் தரப்படவில்லை. இந்தக் குறைபாடு நிதி விஷயத்தில் எல்லாத் துறைகளையும் பாதித்தது. இது தவிர, தனிப்பட்ட துறைகளிலும் வில்லங்கங்கள் இருந்தன. விவசாயம் மாற்றப்பட்ட துறை; ஆனால், நீர்ப்பாசனம் மாற்றப் படாத துறை. எனவே, விவசாய அமைச்சர் முழுதும் பயனு டைய முறையில் செயல்பட முடியாது. இனிக் கவர்னரின் உறவை எடுத்துக்கொண்டால், மாற்றப்படாத துறை விஷயங்களில் கவர்னர், செக்ரடரி ஆஃப் ஸ்டேட்டுக்கு உத்தரவாதம், மாற்றப்படாத துறைகளில் அவர் யாருக்கும் உத்தரவாதம் இல்லாதபடியால் அமைச்சர் நிர்வாகத்தைப் பாதிக்கும்படி நடந்துகொள்ளலாம். இல்லை என்றாலும் இடைஞ்சல்கள் செய்யக்கூடும். சட்டத்தின் நோக்கம் மாற்றப் பட்ட துறைகளில் அமைச்சர்கள் கருத்துக்கு இசையத்தான் கவர்னர் நடந்துகொள்ள வேண்டுமென்பது. ஆனால், நடை முறையில் இது மறக்கப்படலாம் அல்லது சாத்தியமில்லாமல் இருக்கலாம். சட்டத்தின் 49 (2) பிரிவுப்படி கவர்னருக்கு நிர்வாக முறை நடத்த விதிகள் செய்வதற்கு அதிகாரம் உண்டு. இந்த அதிகாரத்தால் எல்லாவற்றையும் கவர்னர் கண்காணிப்பில் வைத்துக்கொள்ள ஏதுவாயிருக்கும். அதுவு மன்றி இரட்டையாட்சியில் கவர்னர் அந்தந்தத் துறைஅமைச்சர் களுடன் அவரவர்கள் விவகாரங்களை ஆலோசிப்பார். கருத்து வேற்றுமைஇருப்பின் கவர்னர் அமைச்சர் கருத்தைநிராகரிப்பது சுலபம். அந்த அமைச்சரின் சகாக்களான மற்றைய அமைச் சர்களின் பக்கபலம் அவருக்குக் கிடையாது. எனினும், இரட்டை ஆட்சியில் சில முதலமைச்சர்கள் பலசாலியாக இருந் தார்கள். மற்ற அமைச்சர்களை விட்டுக்கொடுப்பதில்லை. கவர்னருக்குக் கவுன்சில் மெம்பர்களை நிராகரித்தல் கஷ்டம். ஆனால் அமைச்சர்களை நிராகரித்தல் சுலபம். அமைச்சர்கள் கவர் னருக்கு ஆலோசனை கூறுபவர் என்றவளவில்தான் பொறுப்பு என்றநிலை இருந்தது. இந்த அவலத்தை முட்டிமான் கமிட்டிக்குச் (Muddiman Committee) சமர்ப்பித்த சாட்சியங்களில் பல அமைச்சர்கள் (கே. வி. ரெட்டி, சி. ஒய். சிந்தாமணி, ஹரி கிருஷ்ணலால் முதலியோர்) சுட்டிக்காட்டினர்கள். கவர்னர் அரசாங்க உத்தியோகஸ்தர்களின் உரிமைகளைக் காப்பாற்ற வேண்டுமென்று செக்ரடரி ஆஃப் ஸ்டேட் கொடுத்த குறிப்பு களில் இன்ஸ்டுருமெண்ட்ஸ் ஆஃப் இன்ஸ்டிரக்ஷன்ஸ் ஒன்று. இந்தக் குறிப்பின் நோக்கத்தை அதிகப்படுத்தி, அமைச்சர்கள்

தங்களுக்குக் கீழ்பட்ட அதிகாரிகளை நியமிக்கவோ மாற்றவோ கூட முழு அதிகாரம் இல்லாதவர்களாக இருந்தார்கள். இம் மட்டுமன்றி, கவுன்சில் மெம்பர்கட்கும் அமைச்சர்கட்கும் கருத்து வேற்றுமையோ வாதமோ நேரிடின், கவர்னர் எதேச்சாதிகார மாய் முடிவு செய்வதற்குஅதிகாரம் உண்டு. இதனால் அமைச்சர் களுக்கு முழு உரிமை இல்லை; கூட்டுப்பொறுப்பும் இல்லை. கவர்ன ருக்குச் சட்டமன்றத்தில் நிதி சட்டம் சம்பந்தமான விஷயங்களின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் அதிகாரம் இருந்தது. சில தீர்மானங்களைக்கூட அனுமதிக்காமல் தள்ளிவிடலாம். சில சட்டங்கள் நிராகரிக்கப்பட்டாலும், கவர்னர் அதைச் சட்ட மாக ஏற்றுக்கொள்ளலாம். சர்டிஃபை (Certifying Power) செய்தல் என்று இதற்குப் பெயர். கவர்னர் மாற்றப்பட்ட ஒதுக்கப்பட்ட இரு பாதிகளுக்குமிடையில் இருந்தாலும், மாற்றப் பட்ட துறை விவகாரங்களில் அவரது அதிகாரம் அதிகமாய் விட்டது. சட்டசபையின் பொறுப்புக் குறைந்துவிட்டது. எக்சி கியூடிவ் கவுன்சிலில் (Executive Council) பெரிய மாகாணங்களில் இரண்டு உத்தியோகபூர்வமான நபர்களும் இரண்டு இந்தியர்களும் இருந்தார்கள். இந்த இந்தியர்களின் நிலை சுய நாட்டவர்களான தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களை ஆதரிக்க முடியாமல் பல நேரங்களில் இருந்தது. கவர்னருக்குக் கொடுக் கப்பட்டிருந்த குறிப்புகளில் ஒன்று கவர்னர் இரண்டு பாதி களையும் சேர்த்து யோசனைகேட்டு நடத்தவேண்டுமென்று (Joint deliberations) இருந்தது. இந்தமுறை சுயஆட்சியில் வரப் போகும் காபினெட்டுக்குக் கூட்டுப்பொறுப்புக்கு (Cabinets' Collective responsibles) முதல்படியாக இருக்கவேண்டுமென்பது கருத்து. கூட்டாக ஆலோசிக்கப்பட்டாலும், முடிவுகள் தனித் தனியே எடுக்கப்பட்டுவந்தது. சென்னை மாகாணத்தில் கவர்னர் வில்லிங்டன்பிரபு ஆட்சியில் சிலகாலம் கூட்டுக் காபினெட்டு போல் ஒரேசமயத்தில் முடிவுகள் செய்யப்பட்டன. இதுதான் சென்னை மாகாணத்தில் இரட்டையாட்சி வெற்றிகரமாக (Successful Dyarchy in Madras) நடந்ததற்கு ஒரு காரணம்.

அமைச்சர்களுக்கும் கவுன்சில் மெம்பர்களுக்கும் எல்லா விஷயங்களிலும் சமரசம் ஏற்படுவது கடினம். கவுன்சில் மெம்பர்கள் செக்ரடரி ஆஃப் ஸ்டேட் எதை விரும்புவாரோ அதைத்தான் செய்ய விரும்புவார்கள். அவை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களும் அவர்களின் கட்சியும் எதிர்க்கக்கூடியதாக இருக்கலாம். அந்த நேரங்களில் மோதல்கள் இருக்கலாம். ஆனால், கவுன்சில் மெம்பர்களே பெரும்பாலும் மேல்கை என்பதில் ஆச்சரியம் இல்லை.

வேற்றுமை வந்த விஷயம் உத்தியோகபூர்வமான அங்கத்தினரின் பொறுப்பாக இருந்தால், சட்டமன்றம் நிராகரித்தாலும் அவரை அசைக்கமுடியாது. உத்தியோகபூர்வ மில்லாத மெம்பர் பொறுப்புடையவராக இருந்தால் அவர் ராஜிநாமாச் செய்வது முறை. (சென்னை மாகாணத்தில் சர் கே. சீனிவாசய்யங்கார் கொண்டுவந்த நீர்ப்பாசன மசோதா அமைச்சர் கட்சியின் ஆதரவின்றித் தள்ளபட்டபோது, அவர் ராஜிநாமாச் செய்தார்). சட்டமன்றத்தில் தலைவர் (Leader of the House) ஸ்தானம் ரிசர்வ்டு பாதி அங்கத்தினர் ஒருவருக்குத்தான் கவர்னரால் தரப்படும். சட்டமன்றத்துக்குட்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்கள் அவர் வழிகாட்டித்தனத்தில்தான் நடக்கவேண்டும். அமைச்சர்கள் ரிசர்வ்டு பாதியின் மேல்கை அதிகாரத்தில் கட்டுப்பட்டு இருந்தார்கள்.

அமைச்சர்களின் கூட்டுப்பொறுப்பைக் கொஞ்சம் விவரமாக ஆராய்வோம். 1919ஆம் ஆண்டுச் சட்டத்தின் நோக்கம் அமைச்சர்கள் தங்கள் துறைகளைப் பொறுத்தமட்டில் சட்டமன்றத்துக்குப் பொறுப்புடையவர்களாக இருத்தல் வேண்டும் என்பதே. இதன் அடிப்படை அம்சம் அமைச்சர்கள் சட்டமன்ற உறுப்பினர்களின் வாக்கால் வெளியேற்றப்படும் அதிகார முடைமை. இரண்டாவது, தமது துறைகளின் கொள்கைகள், ஏற்பாடுகளைத் திறமையாகப் பாதுகாத்து நிறைவேற்றும் பொறுப்பு. மூன்ருவது, சட்டமன்றத்திற்கு அமைச்சர்களின் வேலைகளை ஆராய்ந்து ஆதரித்தோ, கண்டித்தோ கருத்தைத் தெரிவிக்கும் உரிமை. நான்காவது, அமைச்சர்கள் தங்கள் கட்சியின் கொள்கைகளுக்கு ரிசர்வ்டு பாதியின் ஆதரவைப் பெற்றுத் தமக்குள் ஒற்றுமையாக நடந்துகொள்ளுதல். ஐந்தாவது, நம்பிக்கை இல்லாத்தீர்மானம் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களால் கொண்டு வரப்பட்டால் ரிசர்வ்டு பாதியின் பலத்தை நாடாமல் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் வாக்கின் தீர்ப்பை ஒட்டி நடந்துகொள்ளுதல். இந்தப் பொறுப்புகள் மிகவும் நல்லதாக இருப்பினும், சட்டமன்ற உறுப்பினர்களின் அமைப்பைப் பார்த்தால் பிரச்சினைகள் கூடியதாகக் காணப்படும். சட்டமன்றம் மூன்றில் ஒரு பங்கு உத்தியோகஸ்தர்களும், கவர்னரால் நியமிக்கப்பட்டவர்களும் (nominated) கூடியது. எனவே, சிறுபான்மை தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உதவிதான் பெற்றிருந்தாலும் அமைச்சர்கள் நம்பிக்கை இழப்புத் தீர்மானத்தை மேற்கூறியவர்களின் பலத்தைக்கொண்டு தவிர்க்கலாம். இது சுயமரியாதைக்கு விரோதமாக இருந்தாலும், சில சந்தர்ப்பங்களில் தவிர்க்கமுடி

யாததாக இருக்கும்; அல்லது தனிப்பட்ட அமைச்சர்களின் பிரேரேபணைகள் தோல்வி அடைந்தால் அவரைமட்டும் கைவிட்டு மற்றவர்கள் நீடித்து இருக்கலாம். இதை ரிசர்வ்டு பாதி ஆதரிக்கலாம். எனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களின் பொறுப்பைத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களால் கட்டுப்படுத்த முடியாது. சட்டமன்றத்தின் அமைப்புப்படி எந்த அமைச்சர் கூட்டத்திற்கும் சொந்தமான பெருவாரி (majority) இருக்கவே முடியாது. நிர்வாகத்துக்கும் அமைச்சர் பொறுப்பு என்றாலும், செக்ரடரி ஆஃப் ஸ்டேட்டினால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களின் மேல் முழு அதிகாரம் கிடையாது. இந்த நிலையில் அமைச்சர்களின் நிலை சங்கடமானது.

'கூட்டுப்பொறுப்பு' என்பது சட்டமன்றம்கொண்ட மக்கள் ஆட்சியின் உயர்ந்த இலக்கணம். ஆனால், இரட்டை ஆட்சியில் அதன் பூரண இலக்கணம் அமைவதற்கு இடமில்லை. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் கூட்டுப்பொறுக்குக் கமிட்டி (Joint select committee of Parliament) பின்வருமாறு இது விஷயமாகக் கருத்துக் கொண்டது. யாதொரு முடிவு அமைச்சர்கள் கூடிய பாதிக்கு விடப்பட்டிருந்தால், அமைச்சர்களின் கூட்டுப்பொறுப்புக் குறையக்கூடாது. முக்கியமான விஷயங்கள் முழுக் கவர்ன்மென்டின் சிந்தனைக்கு விடப்பட்டிருந்தால், இறுதி முடிவு அந்த விஷயம் எந்தப் பகுதிக்குச் சம்பந்தமோ அந்தப் பகுதியின் முடிவாகத்தான் இருத்தல்வேண்டும்.' அதாவது, முழுக் கவர்ன்மென்டின் விவாதத்தின் பின் முடிவு சம்பந்தப்பட்ட பாதியால் எடுக்கப்படவேண்டும்.' சட்டத்தின் 53 (2) பிரிவும் இதையே குறிக்கிறது. 'மாற்றப்பட்ட விஷயங்களில் கவர்னர் அமைச்சர்களின் கருத்துப்படி நடந்துகொள்வார். போதுமான காரணம் வேறு இருந்தாலன்றி அவ்வாறு நடந்துகொள்வார்'. இந்தப் பிரிவில் அமைச்சர்கள் என்று பன்மையில் பதம் உபயோகப்பட்டிருக்கிறது. அமைச்சர் குழு என்ற கூட்டு அதிகாரம் இல்லை என்பது இதனால் வெளிப்படை. செயல்முறை விதிகளிலும், அமைச்சர்கள் தனித்தனியாகத் தொழிற்படுகிறார்கள் என்று தான் கூறப்பட்டது. (சென்னையில் மட்டும் வில்லிங்டன் பிரபு கவர்னராக இருந்த காலத்தில் இரண்டாண்டுகள் கூட்டுப் பொறுப்பு ரீதியாக நடவடிக்கைகள் நடந்துவந்தன.) இந்தக் கூட்டுப்பொறுப்புக்குச் சட்ட சம்மதம் இல்லாதது மட்டுமன்றி அரசியல் தடைகளும் இருந்தன. அமைச்சர்கள் கட்சி, பெருவாரியாக இருந்தால்தான் எதிர்க்கட்சியை வெல்லலாம். சாதாரணமாக அமைச்சர்கள் விவகாரங்களில் ரிசர்வ்டு பாதிக் கவுன்

சிலர்கள் நடுநிலையில்தான் (nutral) இருப்பார்கள். எனவே, அமைச்சர்களுக்கு வேறு பலம் கிடையாது. எதிர்க்கட்சியாளர்கள் எதிர்த்தால் அமைச்சர்கள் தனியாகத்தான் நிற்க வேண்டும். அவர்களிடையேயும் கருத்து வித்தியாசமோ வேறு இகலோ இருந்தால் சம்பந்தப்பட்ட அமைச்சரின் நிலை நிரம்ப அவலமாகிவிடும். அமைச்சர்கள் இந்துக்கள், முஸ்லிம்கள் போன்ற பிரிவினராய் இருந்தால் அதுவும் கூட்டுப்பொறுப்பைப் பாதிக்கும் (வங்காளம், பஞ்சாப் முதலிய மாகாணங்களில் இம்மாதிரிச் சங்கடங்கள் இருந்தன). இந்தப் பிரச்சினை இல்லாத சில மாகாணங்களில்கூட அம் மாகாணத்துக் கவர்னர்கள் தனித் தனி அமைச்சர்களுடன் விவகாரம் செய்தார்களேயன்றிக் கூட்டுப் பொறுப்பை வளர்க்கவில்லை (எ.டு. : பம்பாய், மத்திய மாகாணம், ஐக்கிய மாகாணம்).

இரட்டையாட்சியில் கூட்டுப்பொறுப்பு வற்புறுத்தப்படவில்லை. அது வளர்வதற்கு வாய்ப்பும் இல்லை. அமைச்சர்களின் பலம் பெயரளவில்தான் இருந்தது. அவர்கள் சட்டமன்றத்துக்கு முழுப் பொறுப்புடையவர்களாக இருக்க முடியவில்லை. அவர்களது கூட்டுப்பொறுப்பும் உருவாகவில்லை. இக்காரணங்கள்பற்றித்தான் காங்கிரசுக் கட்சியினர் ஒத்துழையாமைக் கொள்கையைக் கடைப்பிடித்தார்கள்; பொறுப்பு ஏற்க மறுத்தனர்; பொறுப்பு ஏற்றவர்களை பிரிட்டிஷ் ஆட்சிக்குக் கையாள்கள் எனவும் ஏசினார்கள். இந்த நிலையை உண்மையில் எல்லோரும் அறிந்திருந்தார்கள். அதிகாரபூர்வம் இல்லாத அரசியல்வாதிகள்கூட அரசியல் சீர்திருத்தங்களின் குறைபாடுகளை எடுத்துக் கூறினார்கள். இத்தனை இடையூறுகட்கு இடையேயும் சென்னை மாகாணத்தில்மட்டும் இரட்டையாட்சியின் முக்கியத் தத்துவப்படி கூடியவரையில் ஆட்சி நடந்தது. ஆனால், அதிகாரத்தில் இருந்த நீதிக்கட்சியும், வில்லிங்டன் பிரபுவும் பிரித்து ஆளும் தந்திரத்திற்கு உடந்தையாயிருந்து, பிரிட்டிஷ் ஆட்சியை நீடிக்க வழிகோலினார்கள் என்று குற்றம் சாட்டப் பட்டார்கள். எனினும் கூட்டுப்பொறுப்பின் முக்கியத்துவத்தையும் அதன் சீரிய நெறியின் கட்டுப்பாடுகளையும் இரட்டையாட்சி நன்கு விளக்கியது. மேல் நிகழ இருக்கும் அரசியல் சீர்திருத்தங்களுக்கு அது படிப்பினையாக இருந்தது.

அமைச்சரவை சட்டமன்றத்தின் கட்டுப்பாட்டில் ஒருபுறமும், ரிசர்வ்டு பாதி, கவர்னர் கட்டுப்பாட்டில் மற்றொரு புறமும் செயற்பட இருந்தது. இரட்டையாட்சிச் சட்டசபைதான் முதல் முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பெரும்

பாலோர் கூடிய சட்டசபையாக (Representative Legislature) இந்தியாவில் முதன்முதலாக இருந்தது. எனவே, உறுப்பினர் களின் கடமைகளும், அமைச்சர்களின் கடமைகளும் நன்கு உணரப்பட்டன. சட்டசபையில் பிரேரேபணைகள், தீர்மா னங்கள் முதலியன கொண்டுவருதல், கேள்விகள் கேட்டல் என்ற சடங்குகளின் முறைகள் பழக்கத்துக்கு வந்தன. அமைச் சர்களின் ஒற்றுமையும், அமைச்சர்களும் கவுன்சில் மெம்பர்களும் முரண் இல்லாமல் நடந்து கொள்ளும் பண்பும் வளர்க்கப்பட்டது. அந்தக் காலத்துச் சட்டமன்ற ரிப்போர்ட்டுகளில் வெகு ரசமான விஷயங்களைக் காணலாம்.

இரட்டையாட்சியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வர்கள் அமைச்சர்களாயினும், கட்சிகளால் உருவாக்கப்பட்ட குடியாட்சி வளரவில்லை என்று கூறப்படும். பார்லிமென்டரிக் கட்சிகள் (Parliamentary Party) அந்தக் காலத்தில் வளர்வதற் குப் போதுமான வாய்ப்பில்லை. வாய்ப்பு வளர்ந்த இந்தக் காலத் திலும் வளரவில்லை எனக் கூறப்படுகிறது. கட்சியின் பேரில் அமைச்சர்கள் தேர்தல்களில் வெற்றி பெற்றிருந்தாலும், சட்டமன்றத்தில் அமைச்சர்களுக்கு ஒத்தாசை செய்யும் கட்சி என்றும், எதிர்க்கட்சி என்றும்தான் நடைமுறையில் இருந்தது. கொள்கைகளினுல் வேறுபட்ட கட்சிகள் இல்லை. சுயராஜ்யக் கட்சி (Swarajaya Party) உத்தியோகம் ஏற்காது உள்ளிருந்து முட்டுக்கட்டை போடும் நோக்கத்துடன் இருந்ததால், பொறுப் பாட்சியின் ஆதிகாலத்திலேயே சரியான கட்சிகளால் நடத்தப் படும் ஆட்சிக் கட்சி, எதிர்ப்புக்கட்சி என்று ஆக்கவேலைக் கொள்கைகளால் வேறுபாடுள்ள கட்சி அமைப்புகள் வளர வில்லை. கட்சிக் கவர்ன்மென்டு, ஆளும் கட்சியை வெளியேற்று வதற்குச் சட்டமன்றத்திற்குச் சக்தி இருந்தால் நல்ல முறையில் உருவாகும். இரட்டை ஆட்சியில் ரிசர்வ்டு பாதியின் தயவு இருக்கும்வரை எந்த ஆளும் கட்சியையும் வெளியேற்ற முடி யாதபடி சட்டமன்றத்து உறுப்பினர்களின் எண்ணிக்கை அமைப்பு இருந்தது. பல சமயங்களில் நம்பிக்கை இல்லாத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டாலும், அவை உண்மையி லேயே நல்ல காரணம் இல்லாததால் தோற்கடிக்கப்பட்டாலும், அமைச்சர்கள் ரிசர்வ்டு பாதியின் தயவினுல் இடத்தைப் பிடித் துக் கொண்டிருக்கிறுர்கள் எனக் கூறப்படும். இந்த விந்தை யான நிலை கூட்டுப்பொறுப்பை வளர்க்கவில்லை என்று சொல்ல இயலாது. அதனுடைய நுட்பங்கள் எல்லாம் இரட்டையாட்சி யால்தான் இந்தியர்கள் குறுகிய காலத்தில் புரிந்துகொண் டார்கள் எனலாம். பிரிட்டனில் மூன்று நூற்றுண்டுகளில்

வளர்ந்த கூட்டுப்பொறுப்பு இந்தியாவில் இருபது ஆண்டு களில் வளர்வதெப்படி? எனினும், இரட்டையாட்சி இந்தமாதிரி அம்சங்களுக்கு இந்தியர்களின் தகுதியை விளக்கிற்று.

அமைச்சர்கள் நிதி விஷயத்தில் ரிசர்வ்டு பாதியின் இரும்புப் பிடியாலும், தங்கள் பாதியில் அதிகாரிகளின் அசைக்க முடியாத நிலையாலும், அரசியல் கட்சி முதல்வர்களாக இருந்து தங்கள் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்த முடியாமல், வெறும் பொம்மைகளாக இருந்தார்கள் என்று கூறப்படுவது வழக்கம். இது முற்றிலும் உண்மை அன்று என்ருலும், ஓரளவு உண்மையே. ரிசர்வ்டு பாதியின் திட்டங்களெல்லாம் டிரன்ஸ் பர்டு பாதிக்குத் தெரியப்படுத்துவதில்லை. எவ்வளவு பணம் கிடைக்குமென்றும் அமைச்சர்கள் அறியமுடியாது. தங்கள் துறைகளுக்கு நிதி வேண்டியிருப்பின் ரிசர்வ்டு பாதியின் தய வில்தான் பெறலாம். அதுவும் நிதி மெம்பர்தாம் பணத்தில் சர்வாதிகாரியாக இருப்பார்.

இரட்டையாட்சியில் அமைச்சர்களுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பு மின்டோ-மார்லி சீர்திருத்த நாள்களைவிடக் கொஞ்சம் வலிவுற்றது. மான்டேகு-செம்ஸ்ஃபோர்டு சீர்திருத் தத்தில் வாக்காளர்களுக்கும் வேட்பாளர்களுக்கும் யோக்கிய தாம்சங்கள் உண்டு. மகாத்மாகாந்தியின் ஒத்துழையாமை இயக் கத்தினுல் முதல் தேர்தலில் பல வாக்காளர்கள் உரிமையை உபயோகப்படுத்தவில்லை. அதுவுமன்றி ஒவ்வொரு மாகா ணத்திலும் பல மொழிகளைப் பேசும் மக்கள் இருந்தபடியால் அரசியல் பிரசாரமும் சிறிது கடினமாயிருந்தது. (அந்தக் காலத்தில் தேர்தல் பிரசாரம்கூட ஆங்கிலத்தில்தான் நடை பெற்றது.) இருப்பினும், மக்கள் தங்கள் அரசியல் கடமைகளை நன்கு உணர்ந்தார்கள்; அமைச்சர்களின் கடமைகளையும் நன்கு உணர்ந்தார்கள். இன்னும், தல ஆட்சி விரிவடைந்த தால் மக்களின் அரசியல் விவேகமும் அனுபவமும் வளர்ந்தன. மக்கள் தொடர்பு பொதுவாக அதிகமாக இல்லாமற்போனுலும், இரட்டையாட்சிக் காலத்தில் மிக முக்கியமான சட்டங்கள் முதன்முறையாகப் பல மாகாணங்களில் நிறைவேற்றப் பட்டன என்பது பிரசித்தம். சில மாகாணங்களில் குறை பாடுகள் காணப்பட்டாலும் சட்டமன்றங்கள் பொறுப் புடன் தொழிற்பட்டன. அமைச்சர் பொறுப்பு வளர்வதற்கு இது முக்கியமான தேவை ஆனதால், அமைச்சர்களின் பணியும் பொறுப்பும் குளறுபடவில்லை.

இரட்டையாட்சி பூரணமான அமைச்சரவையை வளர்க்கா விட்டாலும், நிர்வாகம், சட்டம் நிறைவேற்றல் முதலிய நிலை களில் அமைச்சர்களுக்கு நல்ல வாய்ப்புகளைத் தந்தது; நிர்வாகத்தின் திறம் குறையவில்லை. சட்டங்கள் நன்கு சிந்திக்கப் பட்டு நிறைவேற்றப்பட்டன; அரசியல் வளர்ச்சிக்கு அதிக இடம் இல்லை எனினும், அமைச்சர்கள் பிரிட்டிஷ் வழக்கங் களைப் பின்பற்ற முயன்றார்கள்.

மத்திய அரசில் இரட்டையாட்சி புகுத்தப்படவில்லை. மத்திய அரசாங்கம் செக்ரடரி ஆஃப் ஸ்டேட்டுக்கும் (Sceretary of State) பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்குந்தாம் உத்தரவாத மாக இருந்தது. எனினும் அரசாங்கத்தில் இந்தியர்களின் கூட்டு றவு அதிகமாக்கப்பட்டது. மத்திய சட்டமன்றம் லெஜிஸ் லேடிவ் அசெம்பிளி (Legislative Assembly) என்றும், கவுன்சில் ஆஃப் ஸ்டேட் (Council of State) என்றும் இரண்டு சபைகளாக அமைக்கப்பட்டது. அசெம்பிளியில் 140 உறுப்பி னர்கள் இருந்தார்கள். அவர்களில் 26 பேர் உத்தியோகஸ் தர்கள், 14 பேர் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வமற்றவர்கள், 100 பேர் வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். ஒவ்வொரு சட்டமும் இரண்டு சபைகளிலும் நிறைவேற்றப்பட வேண்டும். ஆனால், கவர்னர் ஜெனரல், சட்டம் பிரிட்டிஷ் இந்தியாவின் பாதுகாப்புக்கும், நன்மைக்கும் தேவை என்று கருதினால், இரண்டில் ஒரு சபையோ இரண்டுமோ இல்லா மலே நிறைவேற்றப்பட்டுக் கவர்னர் ஜெனரல் கையெழுத் தின்பேரில் அமலுக்குக் கொண்டுவரலாம். அத்தகைய சட்டம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். (ஒரு முறைதான் பண மசோதா— Finance Bill அம் மாதிரி அமலாக்கப்பட்டது.) ஒவ்வொரு பண டிமாண்டுக்கும் அசெம்பிளியின் அங்கீகாரம் வேண்டும். நிராகரிக்கப்பட்டால், கவர்னர் ஜெனரல் அவ்வாறு கருதினால் நிறைவேற்றப்பட்ட தாகக் கருதலாம். நிதி விஷயங்களில் கவர்னர் ஜெனரலின் அதிகாரத்தால் நிர்வாகம் பாதிக்காது என்ற உறுதியால், சட்ட சபையில் தீவிரவாதிகள் நிதி மசோதாக்களை நிராகரிப்பது வழக்கம். தங்கள் அதிருப்தியைத் தெரிவிக்கக் கையாண்ட முறை இது. நிர்வாகத்தைப் பொறுத்தமட்டில், அசெம்பிளியில் கேள்விகள் கேட்டும், தீர்மானங்கள் கொண்டுவந்தும் உறுப்பினர்கள் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றினார்கள். பல அரசியல் தீர்மானங்கள்கூட நிறைவேற்றப்பட்டன. சட்ட சபையின் முக்கியத்துவம் இனிது உணரப்பட்டது. மாகாணங்

களைப் பொறுத்தவரை மத்திய சட்டசபை இடைஞ்சலாக இல்லை. மத்திய எக்சிகியூடிவ் கவுன்சில்கள் மாகாண அமைச்சரவை விவகாரங்களில் தலையிடவில்லை.

மத்திய அரசாங்கத்தில் கவர்னர் ஜெனரலின் கவுன்சில் அமைச்சரவை போன்றது எனச் சொல்ல முடியாது. கவர்னர் ஜெனரல் வெளிநாட்டு விவகாரங்களைத் தாமே பார்த்து வந்தார். இந்திய அரசர்களின் (Indian Stater) உறவு விவகாரங்கள், கண்காணித்தல் முதலியவற்றைப் பார்க்கும் அதிகாரம் அவருடையதே. வெளிநாட்டு விவகாரங்கட்கு ஒரு தனிக் கவுன்சிலர் கிடையாது. கவர்னர்ஜெனரல் பிரிட்டிஷ் முடிமன்னருக்கும் பிரிட்டிஷ் அமைச்சரவைக்குமே பொறுப்புடையவர். அவர் ஓர் 'ஏஜெண்டு' மாதிரிதான்; தம் கவுன்சிலர்கட்கோ இந்தியச் சட்டசபைக்கோ முழு உத்திரவாதமுள்ளவர் அல்லர். எனவே, மத்திய அரசாட்சியில் இரட்டை ஆட்சியும் இல்லை; அமைச்சர் ஆட்சியும் இல்லை. கவர்னர் ஜெனரல்களும் அவர்களின் கவுன்சிலர்களும் எவ்வளவு திறமை வாய்ந்தவர்களாக இருந்தாலும், அது அமைச்சர் கூடிய ஆட்சி ஆகாது. எனவே, இந்த நிலையில் மாகாணங்களிலாவது அமைச்சர்களின் பொறுப்புக்குக் கொஞ்சம் இரட்டையாட்சியில் இடம் இருந்தது. மத்திய ஆட்சியில் அதுவும் இல்லை. இரட்டை ஆட்சியை இகழ்ந்து கூறும் கூற்று இதை உணராதன் காரணம்தான் எனக் கூறலாம்.

1917ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் கவர்ன்மென்டு விடுத்த அறிக்கையின்படியும் 1919ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படியும் இந்த அரசியல் சீர்திருத்தங்கள் (இரட்டை ஆட்சி) ஆரம்பித்து 10 ஆண்டுகள் முடிவடையும்போது இந்திய செக்ரடரி ஆஃப் ஸ்டேட் அவை எவ்வாறு செயல்பட்டன என்று பரிசீலிக்கவும் மேலும் எந்த அளவு பொறுப்பாட்சி இந்தியாவுக்குத் தரப்படலாம் என்று பரிந்துரை கூறவும் ஒரு கமிஷனை நியமிக்க பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் இரு சபைகளுக்கும் யாதாஸ்து சமர்ப்பிக்குமாறு விதிக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாகச் சைமன் கமிஷன் (Simon Commission) எனக் கூறப்பட்ட குழுவானது நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவின் விளைவாக, மேலும் அரசியல் சீர்திருத்தங்கள் கவர்ன்மென்டு ஆஃப் இந்தியா ஆக்டு, 1935 (Government of India Act, 1935) படி தரப்பட்டன. இதை அடுத்த அத்தியாயத்தில் கவனிப்போம்.

குறிப்பு : இந்த நூல் தமிழில் எழுதப்பட்டுப் பெரும்பாலும் தமிழ்நாட்டு மாணவர்கட்கும், மற்றவர்கட்கும் உபயோகமாக வேண்டும் என்ற நோக்கம் உடையதால், சென்னை மாகாணத்தில் இரட்டை ஆட்சியில் ஏற்பட்ட அமைச்சர்களின் பெயர்கள் பிற்சேர்க்கையில் தரப்பட்டுள்ளன. சென்னை மாகாண முதல் சட்டசபை 1921 ஜனவரி 12 அன்று, மன்னர் குடும்பத்தைச் சேர்ந்த கன்னாட் கோமகனுரால் தொடங்கிவைக்கப்பட்டது. 1937-ல் புது ஆக்டின்படி நடந்த தேர்தல் வரை நான்கு சட்ட சபைகள் இந்த இடைக்காலத்தில் கூடின.

6. 1935ஆம் ஆண்டுச் சட்டம் முதல் 1947 விடுதலை வரை அரசியலும் அமைச்சும்

1927 நவம்பரில் பிரிட்டிஷ் அரசாங்கம் சர் ஜான் சைமன் (Sir John Simon) தலைமையில் இந்திய அரசியல் சீர்திருத் தங்களைப் பரிசீலனை செய்ய ஒரு சட்டபூர்வமான குழுவை (Indian Statutory Commission) நியமித்தது. குழு இந்தியாவில் வந்துஇறங்கும்போதே (3-2-1928) நல்ல வரவேற்பு இல்லை. ஊரெங்கும் ஹர்த்தால் (Hartal) நடத்தப் பட்டது. கமிஷனுக்குத் தன்னுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு மத்திய சட்டமன்ற உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ள அனுமதி தரப்பட்டிருந்தாலும், எதிர்ப்பு அதிகமாக இருந்தது. சில நாள்களுக்கு முன் சென்னையில் நடந்த இந்தியன் நேஷனல் காங்கிரசு (Indian National Congress) 'பூரண ஸ்வராஜ்யம்' தவிர இந்திய மக்கள் ஏற்கமாட்டார்கள் என்று முடிவு செய்தது. மோதிலால் நேருவும் தேஜ்பகதூர் சப்ருவும் சேர்ந்து எழுதிய ஓர் அரசியல் சீர்திருத்த யாதாஸ்தில் ஜாதிவாரிப் பிரதி நிதித்துவம் கைவிடப்படவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். முஸ்லிம்கள் எல்லோரும் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. தாழ்த் தப்பட்ட வகுப்பினர்களும் இதற்கு உடன்படவில்லை. இந்தி யாவில் அரசியல் நிலைமை குழப்பமடைந்தது. கல்கத்தா காங்கிரசு மாநாட்டில் மோதிலால் நேரு 1929-க்குள் பிரிட்டிஷ் அரசாங்கம் நேரு-சப்ரு யாதாஸ்தில் சொல்லியபடி முழு சுயராஜ்ஜியம் தராவிட்டால் ஒத்துழையாமை இயக்கமும், வரிகொடா இயக்கமும் ஆரம்பிக்கப்படுமென்று தீர்மானத்தை நிறைவேற்றினார். இர்வின் பிரபு (Lord Irwin) இந்திய செக்ரடரி ஆஃப் ஸ்டேட் சர்வெட்ஜ்உட்பென் (Sir Wedge wood Benn) உடன் ஆலோசித்து, இந்திய அரசியலில்

சீர்திருத்தத்தின் நோக்கம் இந்தியாவுக்கு டாமினியன் ஸ்டேட்டஸ் (Dominion Status) (அந்தஸ்து) தரவேண்டுமென்பது என்றும், சைமன் குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்தபின் லண்டனில் இந்தியப் பிரதிநிதிகளோடு வட்டமேஜை மாநாடு (Round Table Conference) கூட்டி முடிவுகள் செய்யப்படும் என்றும் அறிக்கை செய்தார். லாகூரில் நடந்த காங்கிரஸில் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. 1930 ஜனவரி 26-ஐக் காங்கிரசு இந்திய சுதந்திரதினமாக அனுட்டித்தது. மகாத்மா காந்திக்குச் சட்ட மறுப்பு இயக்கத்தைநடத்த முழு அதிகாரத்தைத் தந்தது. 1930 மார்ச்சில் உப்புச் சத்தியாக்கிரகம் (Salt Satyagraha) ஆரம்பிக்கப்பட்டது. இந்தநிலையில் சைமன் கமிஷன் 1930 மே-ல் தனது அறிக்கையை வெளியிட்டது. கமிஷன் மாகாணங்களுக்குச் சுய ஆட்சியைத் தரவும், ஆனால் மத்திய அரசாங்கம் ஒரு கூட்டு அமைப்பாய் பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகளும், இந்திய அரசர்கள் சேர விரும்பினால் அவர்களும் சேர்ந்து அமைய வேண்டும் எனப் பரிந்துரை கூறிற்று. இந்த அறிக்கை போதுமான கவனத்துடன் இந்தியாவில் மதிக்கப்பட வில்லை. 1930 நவம்பர் முதல் 1931 ஜனவரி வரை முன் அறிவித்தபடி லண்டனில் வட்ட மேஜை மாநாட்டை பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்படுத்தியது. மாநாடு வெற்றிகரமாக முடிய வில்லை. இர்வின் பிரபு மீண்டும் ஒரு முயற்சியில் இந்தியாவில் சட்ட மறுப்பைச் சமாளிக்க கையாண்ட அடக்குமுறைகளைத் தளர்த்திக் காந்திஜியுடன் ஓர் ஒப்பந்தத்தை (Gandhi-Irwin Settlement), 5—3—1931 செய்தார். அதன்படி சட்டமறுப்பு இயக்கம் விடப்பட வேண்டுமென்றும், அடுத்த வட்டமேஜை மாநாட்டில் காங்கரசு பங்குகொள்ள வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. கராச்சியில் நடந்த காங்கிரசு மாநாடு (1931 மார்ச்சு) ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டது. இர்வின் 1931 ஏப்ரலில் பதவியைவிட்டு இங்கிலாந்து திரும்பினார். அவர் ஸ்தானத்தில் வில்லிங்டன் பிரபு கவர்னர் ஜெனரல் ஆனார். காந்திஜிக்கும் அவருக்கும் நடந்த பேச்சின் விளைவாக, காந்திஜி இரண்டாம் வட்ட மேஜை மாநாட்டுக்குச் சென்றார் (1931 செப்டம்பர் முதல் 1931 டிசம்பர் வரை). இடையில் ராம்சே மாக்டோனல்டு பிரிட்டிஷ் பிரதமர் பதவியிலிருந்து நீங்கினார். புது இந்தியா செக்ரடரி சர் சாமுவேல் ஹோர் என்பவரின் மனப்பான்மை இந்தியாவிடம் அனுதாபம் அதிகம் இல்லாததால் காந்திஜி இந்தியமக்களுக்குத்தனிப் பிரதிநிதியாகக் கருதப்படவில்லை. முஸ்லிம்களும், தாழ்த்தப்பட்டவர்களும் தங்களுடைய பாதுகாப்புக்குத் தனிப் பிரச்சினைகளை எழுப்பினார்கள். காந்திஜி இந்தியா திரும்பியவுடன், அவரும் சிறைசெய்யப்

பட்டார். காங்கிரசுச் செயற்குழு மீண்டும் அராசரீகமானது என்று பிரகடனம் செய்யப்பட்டது. ஏராளமான அரசியல் வாதிகள் சிறை செய்யப்பட்டனர். காந்திஜி வகுப்புவாரிப் பிரதி நிதித்துவத்துக்கு எதிர்ப்பாக உண்ணுவிரதம் இருந்தார். அதன் விளைவாகச் சிறிது மாறுதல்கள் செய்யப்பட்டன. மூன்ருவது வட்டமேஜை மாநாட்டிற்கு (1932 நவம்பர்-டிசம்பர்) காங்கிரசுப் பிரதிநிதிகள் எவரும் போகவில்லை. அந்த மாநாட்டில் இந்திய அரசுகள் கூட்டு அரசியலில் (federation) சேர்வதற்கு முறைகள், மத்திய அரசாங்கத்திற்கும் மாகாணங் களுக்கும் அரசர்களுக்கும் உள்ள உறவுகள்பற்றி விவாதிக்கப் பட்டன. பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவின் அரசியல் அமைப்பை வரைவதற்குப் பார்லிமென்டுக் கூட்டுப் பொறுக்குக் கமிட்டியை நியமித்தது. ஒரு வெள்ளை அறிக்கையும் (White Paper) அதனுடன் வெளியிடப்பட்டது. இந்த அறிக் கையின்படி இந்திய ஃபெடரேஷன் உருவாவதற்கு வெகுகாலம் ஆகும் என்பது வெளிப்படையாயிற்று. எனினும், இந்தச் சீர்திருத்தத்திற்குக்கூட வின்ஸ்டன் சர்ச்சில் போன்ற பழைமை வாதிக்கட்சியினர் (Conservatives) எதிர்ப்புத் தெரிவித்தார்கள். புதிய அரசியல் மசோதா 1935 ஆகஸ்டு 2-ல் பிரிட்டிஷ் பார்லி மென்டில் நிறைவேற்றப்பட்டது.

இந்த 1935ஆம் ஆண்டுச் சட்டம் மிகவும் முக்கியமானது. அதில் எவ்வளவு குறைபாடிருப்பினும், அதன் பல அம்சங்கள் 1950ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்திய அரசியல் அமைப்பில் தொடர்ந்துநின்றன. இந்தச் சட்டம் மாகாணங் களுக்கு முழு ஆட்சியையும் தந்தது. அதாவது இரட்டையாட் சியில் அமைச்சர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்துக்கு முழுப் பொறுப்பாளிகளாக இருக்க முடியவில்லை. புதுச் சட்டத் தில் கொடுக்கப்பட்ட அதிகாரங்களில் அத்தகைய குறைபாடு இல்லை. சுயஆட்சி (Self Government-Autonomy) என்று பேசப் படுவது சுதந்திரம் (Independence) என்ற பொருளில் அன்று. சட்ட சபையே நிதி, சட்டம் முதலியவைகளில் முழு அதிகாரம் பெற்றது. எல்லாத் துறைகளுக்கும் வாக்காளர்களால் தெரிந் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாகிய அமைச்சர்களே எஜமானர் கள். உயர்நீதிமன்றம், செக்ரடரி ஆஃப் ஸ்டேட்டால் நியமிக்கப் பட்ட ஆபீசர்களின் சம்பளங்கள்மட்டும் சட்டசபை அனுமதிக்க (வாக்களிக்க) வேண்டுமென்ற நிபந்தனை இல்லை. அவை அத்த கைய அனுமதிக்கு அப்பாற்பட்டவை. மத்திய அரசாங் கத்தில் ஃபெடரல் சட்டசபைக்குப் பாதுகாப்பு, வெளிநாட்டு விவ காரங்கள், நாணயச் செலாவணி முதலியவை தவிர்த்து எல்லா

இதரவிஷயங்களிலும் சட்டம்இயற்றுவதற்கும் விவாதிப்பதற்கும் அதிகாரம் உண்டு. வாணிகம் பொருளாதாரக் கொள்கைகள் செக்ரடரி ஆஃப் ஸ்டேட்டின் அங்கீகாரத்துக்கு உட்பட்டது. இந்தக் கட்டுக்கோப்பு பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்துக்கு உட்பட்ட மற்ற டொமினியன் அந்தஸ்து உடைய நாடுகளின் சுதந்திரத்தைவிட மட்டமானது. கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் கூட நிறைவேற்றுவதற்குத் தாமதமாகும்படி அமைந்திருந்தது. இந்தியக் கூட்டாட்சி இரண்டு படிகளில் நிறைவேற வேண்டுவதாக இருந்தது. முதல் படி, பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள எல்லா மாகாணங்களிலும் சுயாட்சி அரசாங்கங்கள் ஏற்படுத்தப் பட வேண்டும். இரண்டாவது படி, இந்திய அரசர்கள் விருப்பப்பட்டுச் சேரும்போது கூட்டாட்சி ஏற்படுத்தவேண்டும். இந்த உறவுகளில் பிரிட்டிஷ் முடியாட்சியின் பிரதிநிதியாக (Crown Representative) கவர்னர் ஜெனரலோ நியமிக்கப்பட்ட மற்றொருவரோ இருப்பார். மாகாணக் கவர்னர்கள் நாட்டின் அமைதிக்கும், பாதுகாப்புக்கும், சிறுபான்மையர் நன்மைக்கும் சம்பந்தப்பட்ட விஷயங்களில் தமது அமைச்சரவையை நிராகரித்து முடிவு செய்யலாம். கூட்டாட்சியில் உள்நாட்டுஅமைதி, பாதுகாப்பு, வெளிநாட்டுக் கொள்கைகள், நாணய அசைவின்மை, சிறுபான்மையோர் சலுகையில் வைசிராய்க்குத் தனிப் பொறுப்புகளும் அதிகாரங்களும் உண்டு. கூட்டாட்சி இம்மாதிரி அமையும்வரை முன்பு உள்ள முறையிலேயே மத்திய ஆட்சியும், சட்டமன்றமும் தொழிற்படும். ஆனால், மாகாணங்கள் தரப்பட்ட சுய ஆட்சியைச் செலுத்தும். ஆறு மாகாணங்களில் சட்டமன்றம் கீழ்ச்சபை, மேல்சபை என்ற இரு மன்றங்களாகச் செயற்படும். செக்ரடரி ஆஃப் ஸ்டேட்டின் ஆலோசனை சபை கலைக்கப்படும். இந்த அமைப்புகளில் மாகாணங்களுக்கு ஓரளவு சுயஆட்சி வந்தாலும் மத்திய அரசுக்குப் பல கட்டுப்பாடுகளும் தடைகளும் இருந்தன. அது உருவாவதற்குப் பல ஆண்டுகள் ஆகலாம். (ஜவஹர்லால் நேரு இந்தப் புதிய ஏற்பாடுகளை எல்லாம் 'பிரேக் மயமும் இன்ஜின் இல்லாததுமான மோட்டார்க்காரை ஒத்தவை' எனக் கூறினர்.) சில கட்டுப்பாடுகளும் பாதுகாப்புகளும் தேவை என்பதைப் பலரும் ஒப்புக்கொண்டாலும், சட்டத்தில் எழுதப்பட்டவை அதிகமானவை என்றும், உண்மையிலேயே இந்திய சுயஆட்சி ஓர் ஏமாற்றம் என்றுந்தான் கருதப்பட்டது. 1937-ல் பாஜிபூரில் நடந்த காங்கிரசு மாநாடு இந்த அரசியல் சீர்திருத்தங்களை உதறித் தள்ளியது. எனினும், தொடர்ந்து போராட்ட முறைகள் அதிகம் பயன்படாது என்றும் சட்டபூர்வமான முறைகளில் ஊடாடுவது தவிர்க்க முடியாது என்றும் கருத்து வளர்ந்தது.

குறிப்பு: 1935ஆம் ஆண்டுச் சட்டத்தின் முக்கியப் பிரிவுகள் பிற்சேர்க்கையில் தரப்பட்டுள்ளன.

1937ஆம் ஆண்டு ஆரம்பத்தில் புதுச் சட்டத்தின்படி தேர்தல்கள் நாடுபூராவும் நடந்தன. காங்கிரசு அதில் பங்கு கொண்டது. ஆறு மாகாணங்களில் (சென்னை, ஐக்கிய மாகாணம், பீஹார், மத்திய மாகாணம், ஒரிஸா) பெருவாரியான இடங்களை வென்றது. பம்பாயில் சுயேச்சையாளர்களுடன்கூடிப் பெரும்பான்மை கிடைத்தது. அகில இந்தியக் காங்கிரசுக் கமிட்டி உத்தியோகம் ஏற்றுக்கொள்வதை நிராகரித்தலை ரத்து செய்தது எனினும், கவர்னர்கள் தங்கள் தனி அதிகாரங்களை உபயோகிக்கமாட்டார்கள் என்று உறுதி தந்த பிறகுதான் மந்திரிசபை ஏற்கக் காங்கிரசுக் கட்சி தயாராயிற்று. முஸ்லிம் லீக் (Muslim League) தனது பிரதிநிதிகளைக் காங்கிரசு ஏற்க வேண்டுமென்று வாதாடிற்று. இந்த விவகாரமும் சரிப்பட்டு வரவில்லை. 1937 ஏப்ரலில் புதிய மாகாண ஆட்சிகள் வரவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

எல்லா மாகாணங்களிலும் மந்திரிசபை ஏற்பட்டன. முதலில் ஏற்பட்ட நெருக்கடி சிறையிலுள்ள அரசியல் போராட்டக்காரர்களை விடுதலை செய்யும் விஷயமாகும். நன்னோக்கமாக வைசிராய், அமைச்சர்கள் ஆலோசனைப்படி நடக்கலாமென்று கவர்னர்களுக்கு அனுமதி தந்தார். இந்திய அரசர்கள் மத்திய சட்டமன்றத்திற்குத் தாங்கள் நியமித்த நபர்களைத்தாம் உறுப்பினராக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கூறினார்கள். இதைக் காங்கிரசுக் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. காங்கிரசுக்குள்ளேயே இடசாரிக் கருத்துகள் மேலோங்கின. அதன் விளைவாகக் காந்திஜியின் நியமனத்துக்கு எதிராகச்சுபாஷ் சந்திரபோஸ் காங்கிரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இரட்டையாட்சிக்குப்பின் அமைச்சரவை ஆட்சியின் முக்கியத்துவம் பின்னுக்குப்போய், சுதந்திரக் கொள்கையே முன்னின்றது என்று மேற்கூறிய சுருக்க வரலாற்றால் அறியக் கூடும். மாகாணங்களில் பதவி ஏற்ற அமைச்சரவைகள் சிறிது காலம்தான் இருந்தன. இடையில் 1939 செப்டம்பரில் இரண்டாவது உலகமகாயுத்தம் தொடங்கிற்று. காங்கிரசு, போர் முயற்சிகளில் இந்தியா பிரிட்டனுடன் ஒத்துழைக்கத் தயாராக இல்லை எனத் தெரிவித்தது. பிரிட்டனின் போர் நோக்கங்கள் என்னவென்றும் போரின் விளைவாக இந்தியா விடுதலை அடையுமா என விளக்குமாறும் பிரிட்டிஷ் அரசாங்

கத்தை வற்புறுத்திக் கேட்டது. வைசிராய் இந்த விஷயங்கள் எல்லாம் பின்னுல் பிரதிநிதித்துவம் வாய்ந்த இந்திய பிரமுகர்களுடன் பேசப்படும் என்றும், கூட்டாட்சி எப்படி அமைக்கப்படும் என்பது அதன்பின் தீர்மானிக்கப்படு மென்றும் அறிக்கை செய்தார். மகாத்மா காந்தி இதை ஏற்றுக் கொள்ளவில்லை. காங்கிரசுச் செயற்குழு மாகாணத்தில் உள்ள அமைச்சர்களை ராஜிஞமாச் செய்யும்படி உத்தரவிட்டது. இதன் விளைவாக மத்திய அரசின் எக்சிகியூடிவ் கவுன்சிலை விரிவு படுத்தும் (Executive Council expansion) முயற்சியும் கைவிடப் பட்டது. (சென்னை மாகாணத்தில் திரு. சி. இராஜகோபாலாச் சாரியார் தலைமையில் பதவிவகித்த காங்கிரசு அமைச்சரவையும் ராஜிஞமாச் செய்தது.)

இடையே 1939 மார்ச்சில் லாகூரில் நடந்த மாநாட்டில் முஸ்லிம் லீக் இந்தியாவை இரண்டு நாடுகளாகப் பிரிக்கவேண்டு மென ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இந்துமகாசபை இதைத் தீவிரமாக எதிர்த்தது. வைசிராய் லின்லித்கோ பிரபு சமரசம் செய்யும் முறையில் பிரிட்டிஷ் அரசாங்கம் எஃலோ ராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசுக்குத்தான் அதிகாரத்தைத் தந்துவிட்டு வெளியேறும் என்றும், இந்தியர்களே சுதந்திர இந்தியாவின் அரசியல் அமைப்பை ஏற்படுத்திக்கொள்ள ஏற்பாடு செய்யப்படும் என்றும் அறிவித்தார். சண்டை முடிந்த வுடன் தக்க இந்தியப் பிரமுகர்கள் அடங்கிய குழு ஏற்படுத்தப் படும் என்றும், அந்தக் குழுவின் முடிவுகள் பிரிட்டிஷ் அரசாங்கத் திற்கு இந்தியா விஷயமாகவுள்ள பொறுப்புகள் நிறைவேறும் வரை செயற்படுத்தப்படும் என்றும் உறுதிதந்தார். முஸ்லிம் லீக்கும், இந்துமகாசபையும் (Hindu Mahasabha) இதை ஏற்றுக் கொண்டதாயினும் காங்கிரசு ஏற்றுக்கொள்ளவில்லை. மகாத்மா காந்தி தொடர்ந்து பிரிட்டனின் போர் முயற்சிகளை எதிர்த்து, பெருவாரியான சட்டமறுப்பு இல்லாமல், தனித்தனியாகக் காங் கிரசுக்காரர்கள் சட்டமறுப்புச் செய்யும்படியாக அறைகூவினர். இதனுல் அமைச்சர்களாக இருந்த பலரும், வேறு பலரும் சிறைக்குச் சென்றுர்கள். வைசிராய் தமது கவுன்சிலில் ஐந்து இந்தியர்களைக் கூடுதலாகச் சேர்த்து விரிவுசெய்தார். நேரு, அசாத் போன்ற தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். பிரிட்டிஷ் அரசாங்கம் மீண்டும் ஒருமுறை சமரசம் செய்யும் முறையில் ஒரு முயற்சி எடுத்தது.

பிரதமர் சர்ச்சில் தமது காபினெட் அமைச்சரான சர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் (Sir Stafford Cripps) என்பவரை

இந்தியாவுக்குச் சமரசப் பேச்சு நடத்த (மார்ச்சு, 1942) அனுப்பினர். கிரிப்ஸ் கொண்டுவந்த திட்டம் பின்வருமாறு: (1) டொமினியன் அந்தஸ்தில் ஓர் இந்திய யூனியன் (Indian Union) அமைக்கப்படும், (2) அரசியல் அமைப்பை (Constituent Assembly) நிர்ணயம் செய்ய ஒரு குழு கூட்டப்படும், (3) அந்தக் குழு மாகாணங்கள் இந்திய அரசுகள் என்ற இரு பிரிவுகளையும் பிணைக்கும், (4) இந்த யூனியனில் சேர விரும்பாத மாகாணங்கள் யூனியனிலிருந்து விலகித் தங்கள் அரசியல் அமைப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம், (5) அரசியல் அமைப்புக் குழுவும் பிரிட்டிஷ் அரசாங்கமும் ஒப்புக்கொண்ட விஷயங்கட்கு ஓர் உடன்படிக்கைக்கு உள்ளாக வேண்டும், (6) அதுவரை இந்தியாவின் பாதுகாப்பு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பொறுப்பு. ஆனால், இந்தியர்கள் அந்த விஷயத்தில் வைசிராயுடன் ஒத்துழைக்கலாம் என்பன. இந்தத் திட்டங்கள் இந்தியாவைப் பிரிவினை செய்யும் கூற்றுக இருந்ததென்றும், பிரிட்டிஷ் அரசாங்கம் சண்டையின் போக்கைக் கண்டு அச்சப்பட்டுத்தான் சில சலுகைகள் காட்டுகிறது என்றும் அவநம்பிக்கையைக் கிளப்பின. காந்திஜி, இது கவிழ்ந்துபோகும் பாங்குக்குப் பின்தேதியிட்ட செக்குத் (Post date of cheque on a bankrupt Bank) தருவதுபோல் உள்ளது என்று கருதினர். முஸ்லிம் லீக், பிரிவினைக்குக் கிரிப்ஸ் திட்டம் இடம் கொடுத்ததை வரவேற்றது. ஆனால், பிரிவினையை முன்பே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தியது. கிரிப்ஸ் தூது பயனற்றுப் போயிற்று. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்மட்டும் உடனடியாகச் சர்வகட்சி கூடிய தேசிய கவர்மென்டை (All Party National Government) உடனடியாக ஏற்படுத்திச் சண்டை முடிந்தபின் பாகிஸ்தான் பிரச்சினையை ஏற்றுக்கொள்ளலாம் எனக்கூறினர். ஆனால், அதை இந்தியத் தலைவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மகாத்மா காந்தி பிரிட்டிஷார் இந்தியாவில் ஆதிக்கம் வைத்திருப்பதால்தான் ஜப்பான் சண்டையில் இந்தியாவின்மேல் படை எடுப்பதற்குத் தூண்டுதலாக இருக்கிறதென்றும், வெள்ளையர்கள் வெளியேறினல் ஜப்பானின் அபாயம் தொலையும் என்றும் கருதினர். காங்கிரசு செயற்குழு காந்திஜியின் 'பிரிட்டனே வெளியேறு' (Quit India Movement) இயக்கத்தை (1942 ஆகஸ்டு 8) ஆமோதித்தது. காந்திஜி அடக்குமுறையில் வைக்கப்பட்டார். நாடெங்கும் ஒரே புரட்சி உண்டாயிற்று. ரயில் தண்டவாளம் தகர்த்தல், தீ வைத்தல், போலீஸ் நிலையங்களையும் போலீசுக்காரர்களையும் தாக்குதல் முதலிய சம்பவங்கள் நடந்தன. பலபேர் உயிர் துறந்தார்கள். அரசாங்கம் இந்த

ஆகஸ்டு அராஜரிகத்துக்குக் காங்கிரசுதான் காரணம் என்று ஒரு வெள்ளைப் பத்திர (White paper) அறிக்கைவிட்டது. சிறையி லிருந்த காந்திஜி மீண்டும் ஒருமுறை உண்ணுவிரதம் மேற் கொண்டார். கண்டனமாக வைசிராய்க் கவுன்சில் பல உறுப் பினர்களில் மூவர் (எச். பி. மோடி, என். ஆர். சர்க்கார், எம். எஸ். ஆனே) ராஜினுமா செய்தார்கள். இந்த இடைக் காலத்தில் வைசிராய்க் கவுன்சிலில் இந்தியர்கள் இருந்தும், அது காபினெட் அமைச்சரவைபோல் நடந்துகொள்ள முடியவில்லை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறவேண்டும். அவர்கள் வைசி ராய்க்கு ஆலோசகர்களே தவிர, அவர்கட்கு வேறு அதிகாரம் இல்லை. அவர்கள் கருத்துகள் அரசாங்கத்தைக் கட்டுப்படுத் தாதனவாக இருந்தன.

முஸ்லிம் லீக் பல மாகாணங்களில் தனது கட்சி அமைச்ச ரவையை ஏற்படுத்தியது. பஞ்சாப் மாகாணத்திலும் ஏற்படுத்த முயன்றது. காந்திஜியின் 'பிரிட்டனே வெளியேறு' என்ற அறைகூவலுக்கு எதிர்ப்பாக முஸ்லிம் லீக் தலைவர் முகமது அலி ஜின்ஞ சாகிப் 'பிரித்துக் கொடுத்துவிட்டு வெளியேறு' என்று வற்புறுத்திஞர். காந்திஜி சிறையிலிருந்து உடல்நிலை காரண மாக விடுதலைசெய்யப்பட்டார். ராஜாஜி, சப்ரு சமரச முயற்சி கள் வெற்றி பெறவில்லை. வைசிராய் வேவல் பிரபு (Lord Wavell) 1945 ஜூன் மாதம் மீண்டும் எல்லாத் தலைவர்களுடனும் சிம்லாவில் ஒரு சமரச விவாதம் நடத்திஞர். காங்கிரசும் முஸ்லிம் லீக்கும் ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுக்காததால் இந்த முயற்சியும் தோல்வி அடைந்தது.

இங்கிலாந்தில் 1945 ஆகஸ்டில் லேபர் கட்சி (Labour Party) திரு. கிளெமென்ட் அட்லி தலைமையில் ஆட்சிக்கு வந்தது. மாகாணங்களில் சண்டைப் பிரச்சினை காரணமாக அமைச் சர்கள் இல்லாத நிலை இருந்ததை உடனே தீர்க்கும்பொருட்டு மாகாணச் சட்டசபைகட்கும், மத்திய சட்டசபைகட்கும் தேர்தல்கள் நடத்த முடிவு எடுக்கப்பட்டது. அரசியல் சட்ட அமைப்புக்குப்பின், அரசியல் புனைசபை ஏற்படுத்துவதாகவும் முடிவுசெய்யப்பட்டது. தேர்தலில் காங்கிரசு எட்டு மாகாணங் களில் அமோகமான வெற்றி பெற்றது. சுபாஷ் சந்திரபோஸின் இந்திய தேசியச் சேனை (Indian National Army) போரில் விரோதிகளுடன் சேர்ந்ததற்கு நடத்திய விசாரணையும், இந்தியக் கடற்படைக்குள் இந்தியர்கட்கும் ஐரோப்பியர்கட்கும் இருந்த வித்தியாசங்களிஞல் ஏற்பட்ட கலகமும் நாட்டில் பிரிட்டிஷ்காரர்மேல் தீவிர வெறுப்பை வளர்த்தது. பிரிட்டிஷ்

லேபர் கட்சி இந்தக் கஷ்டநிலையில் சமரசம் காணும் விருப்பம் கொண்டது. பிரதமர் அட்லி காமன்ஸ் சபையிலிருந்து மூன்று காபினெட் அமைச்சர்களை இந்தியத் தலைவர்களுடன் சமரசம் பேச இந்தியாவுக்கு அனுப்பிவைத்தார். இந்தக் காபினெட் மிஷன் (Cabinet Mission) 1946 மார்ச் 23-ல் இந்தியாவுக்கு வந்தது. காங்கிரசும் முஸ்லிம் லீக்கும் ஒத்து வராததால் இந்தத் தூது தானே ஒரு திட்டத்தை வகுத்து வெளியிட்டது. அரசியல் புனைகுழு ஏற்படுத்தும்வரை இடைக்கால அரசை ஏற்படுத்த வேண்டுமென்பதும் இந்த ஏற்பாடுகளில் ஒன்றாகும். முஸ்லிம் லீக்கும், அரசர்களும் இதற்கிசைந்தனர். காங்கிரசு இடைக் கால அரசில் பதவியேற்க மறுத்துவிட்டது. எனவே, உத்தி யோகஸ்தர்கள் கொண்ட ஓர் இடைக்கால அரசு ஏற்படுத்தப் பட்டது. ஜின்னா, காங்கிரசு எதிர்ப்பைப் பொருட்படுத்தி வைசி ராய் மத்திய இடைக்கால அரசை அமைக்கக் கைவிட்டதைக் கண்டித்து, நேர்முகப் போராட்டம் ஏற்பாடு செய்யப் போவ தாகக் கூறினார். காபினெட் மிஷன் திட்டத்துக்குத் தாம் தந்த இசைவையும் மறுத்துவிட்டார்.

காங்கிரசுமட்டும் திட்டத்தை ஒப்புக்கொண்டதால் வேவல் நேருவை இடைக்கால மந்திரிக் குழுவை (Interim Cabinet) ஏற்படுத்தும்படி அழைத்தார். நேருவின் குழுவில் 12 அமைச் சர்கள் (மூன்று காங்கிரசு முஸ்லிம்கள் உட்பட), சேர்க்கப் பட்டார்கள். ஜின்னாவின் நேர்முறைப் போராட்ட அறை கூவலின் காரணமாக வங்காளம், பீகார் முதலிய பிரதேசங் களில் அகோரமான இந்து - முஸ்லிம் சச்சரவும் கொலைகளும் நடந்தன. பின் மீண்டும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு முஸ்லிம் லீக், அமைச்சர் குழுவில் ஐந்து உறுப்பினர்களுடன் சேர இசைந்தது. ஆனால், அமைச்சர் குழுவில் ஒருமைப்பாடு இல்லை. முஸ்லிம் லீக் அமைச்சர்கள் ஒரு புறமும், மற்றவர்கள் ஒரு புறமும் பிரிந்து தொழில் செய்தார்கள். ஜின்னா, நேருவின் தலைமையை ஏற்றுக்கொள்ளவில்லை. பாகிஸ்தான் பிரிவினை செய்தபிறகுதான் அரசியல் புனைகுழுவில் சேரத் தயார் என்றும் பிடிவாதம் செய்தார். 1946 ஜூலையில் அரசியல் புனை சபைத் தேர்தல்கள் முடிவடைந்தன. 296 இடங்களில் காங்கிரசு 202-ம், முஸ்லிம் லீக் 73-ம் பெற்றன. டிசம்பர் மாதம் முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் இல்லாமல் சபை கூடிற்று. பாபு இராஜேந்திர பிரசாத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். முஸ்லிம் லீக் 1947 ஜனவரியில் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குச் சபையைக் கலைத்துவிடுமாறு அறிக்கைவிட்டது. இந்த முட்டுக்

கட்டைகளையும் இந்தியப் பிரச்சினைகளையும் தீர்க்க இங்கிலாந்தில் லேபர் அரசு வழிகளைத் தேடியது.

1947 பிப்ரவரி 20-ல் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியர்களுக்கு முழு ஆட்சியை (Full Responsible Government) 1948 ஜூனுக்குள் தர உத்தேசித்திருப்பதாகவும், அதற்குள் முழு மத்திய அரசு உருவாகவில்லை என்ருல், மாகாணங்களுக்குத் தரப்போவதாகவும், பிரிட்டிஷ் ஆதிக்கம் (Paramountacy) நிச்சயமாக நீக்கப்படும் என்றும், அதுவரை பிரிட்டிஷ் அரசுக்கும் இந்திய அரசர்கட்கும் இருக்கக் கூடிய சம்பந்தத்தைப் பேச்சு வார்த்தை செய்து ஒழுங்குபடுத்துவதாகவும் அறிவித்தது. இந்த ஏற்பாட்டைச் செயற்படுத்துவதற்கு லூயி மவுன்ட்பாட்டன் பிரபுவை வேவலுக்குப் பின் வைசிராயாக 1947 மார்ச்சில் நியமித்தது. மவுன்ட்பாட்டன் (Lord Mountbattan) தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளைத் தீவிரமாகச் செய்யத் தொடங்கினர். ஜின்ஞ அரசியல் புனைசபைக்குத் தொடர்ந்து எதிர்ப்பைத் தெரிவித்தார். நேரு எந்த முஸ்லிம் மாகாணங்கள் பாகிஸ்தானில் சேர விரும்புகின்றனவோ அவை சேரலாம் என்றும், வற்புறுத்தல் கூடாதென்றும் தெரிவித்தார். மவுன்ட் பாட்டன் 1947 ஏப்ரலில் கண்டிப்பாகப் பிரிட்டன் இந்தியர்கட்கு அரசாட்சியை மாற்றிவிடும் என்றும், அது ஒன்ருயிருந்தாலும், இரண்டாயிருந்தாலும் அக்கறை இல்லையென்றும், புது அரசாங்கம் டொமினியின் அந்தஸ்துப் பெறும் என்றும், புது அரசியல் அமைப்பை முடிவு செய்யப்போகும் அரசியல் புனை சபையே (Constituent Assembly) இந்திய ஆட்சி காமன் வெல்த்தில் (Commonwealth) இருக்குமா வெளியேறுமா என்ற முடிவு செய்யவேண்டும் என்றும் அறிவித்தார். இந்த ஏற்பாட்டைச் சட்டரீதி ஆக்குவதற்குப் பாராளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்படும்என்றும் தெரிவித்தார். எல்லாக் கட்சிகளும் ஏறக்குறைய இந்த உத்தேசங்களுக்கு இசைந்தன.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் 1947 ஜூலையில் இந்திய சுய ஆட்சி மசோதா (Indian Independence Act) நிறைவேறியது. இந்தியாவில், வங்காளத்தில் இந்து-முஸ்லிம் சண்டைகளும், பஞ்சாபில் சீக்கிய-முஸ்லிம் சண்டைகளும் தலையெடுத்தன. இந் நிலையில் 1947, ஆகஸ்டு 15 அன்று இந்தியாவும் பாகிஸ்தானும் இரண்டு தனி டொமினியன்களாகச் சட்டப்படி பிரிந்தன. இந்தியாவுக்கு மவுன்ட்பாட்டன் கவர்னர் ஜெனரலாக ஆனர். பாகிஸ்தானுக்கு ஜின்ஞ கவர்னர் ஜெனரலாக ஆனர். இங்கிலாந்து மன்னர் இந்தியச் சக்கரவர்த்தி (Emperor of India)

என்ற பேரை அன்றுமுதல் துறந்தார். பிரிட்டிஷ் ஆட்சியி லிருந்து இந்தியா விடுதலை அடைந்தது. ஆனால், மாகாணங் களையும் அரசர்களையும் இணைக்கும் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்கவேண்டியிருந்தது. மாகாணங்கள் தங்கள் இஷ்டப்படி தமக்கு அருகிலுள்ள இந்திய டொமினியனையோ பாகிஸ்தான் டொமினியனையோ சேர முடிவு செய்யும் உரிமையைச் செலுத்த லாம் என்று விதிக்கப்பட்டன. எல்லா மாகாணங்களும் இந்த உரிமையைத் தக்கபடி நிறைவேற்றின. அரசர்களில் காஷ்மீர்-ஜம்மு சிறிது தாமதித்து இந்தியாவுடன் சேர்ந்தது. ஐதராபாத் தனித்து நின்றது. அதுவும் பின்னால் பலவந்தமாக இந்தியா வுடன் சேர்க்கப்பட்டது. இந்தியத் துணைக் கண்டத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் பிறந்தன.

7. சுதந்திர இந்திய அரசியல் அமைப்பு

இந்திய சுதந்திரச் சட்டம் 1947, அதன் பெயர் குறிப்பது போல் முழுச் சுய ஆட்சியைப் பிரிக்கப்பட்ட இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் தந்தது. இந்த இரண்டு டொமினியன்களின் சட்டமன்றங்களும் வெளி அதிகாரத்திற்குக் கட்டுப்படாமல் செயல்பட வாய்ப்புப்பெற்றன. பிரிட்டிஷ் பார்லிமென்டின் அதிகாரமோ கட்டுப்பாடோ கிடையாது. இந்தச் சுதந்திரச் சட்டத்தையோ வேறு பார்லிமென்டினுல் இந்தியா சம்பந்தமாக இயற்றப்பட்ட முந்திய சட்டங்களையோ திருத்தவோ ரத்து செய்யவோ இந்தியச் சட்டமன்றத்திற்கு உரிமை தரப்பட்டது. இதனுல் பிரிட்டிஷ் ஆதிக்கம் அறவே விடப்பட்டதென்றும், முழு இறைமை (Sovereignty) இந்தியா பெற்றுவிட்ட தென்றும் பொருள். இந்த உரிமையை ஏற்றுக்கொள்ளும் சட்டமன்றம் எத்தகையதாய் இருக்கவேண்டுமென்பது அரசியல் புணசபை யால் (Constituent Assembly) தீர்மானிக்க விடப்பட்டது. இடைக்காலத்தில் இதே கான்ஸ்டிடூவென்டு அசெம்பிளிக்குச் சட்டம் இயற்றும் அதிகாரம் தரப்பட்டது. புதுச் சட்டம் கவர்ன்மென்டு ஆஃப் இந்தியா ஆக்ட், 1935ஐத் திருத்தி இடைக் காலத்தில் இந்த வேலைகளைச் சட்டப்படி செயலாற்ற அதிகாரம் தந்தது.

இந்த அரசியல் புணசபை தனது குறிக்கோள் தீர்மானத்தில் (Objective Resolution) இந்தியாவைச் சுயேச்சையான இறைமையுடைய குடியரசு (Independent Sovereign Republic) என்று உறுதிசெய்தது. மாகாணங்களையும் இந்திய அரசுகளையும் ஒருமைப்பாடு செய்து யூனியனில் உள்ளடங்கிய ஒவ்வோர் அங்கமும், யூனியனுக்குத் தரப்படும் அதிகாரங்களைத் தவிர்த்து மற்றைய விஷயங்களில் முழுச் சுதந்திரம் உடைய தென்றும் விளக்கப்பட்டது. இந்தியாவிலுள்ள மக்கள் யாவருக்கும் சமுதாய, பொருளாதார, அரசியல் நீதியும், சம அந்தஸ்தும் உரிமைகளும் உண்டு என்றும், அவர்கட்குப் பேச்சுரிமை,

சமயம், வழிபாடு முதலியவைகளில் சுயஉரிமை உண்டென்றும், சிறுபான்மையர்கட்கும், தாழ்த்தப்பட்டவர்கட்கும், ஆதி சாதியர் கட்கும் பாதுகாப்புகள் உண்டென்றும் உறுதி கூறப்பட்டது. இந்தத் தீர்மானம் பாகிஸ்தான் பிரிவினைக்கு முன் நிறைவேற்றப் பட்டதால், மத்தியக் கூட்டரசுக்கு எவ்வளவுக் கெவ்வளவு அதிகாரத்தைக் குறைத்தும், யூனியனில் சேர்ந்த அங்கங்களுக்கு எவ்வளவுக் கெவ்வளவு உரிமைகளை அதிகப்படுத்தவும் வேண்டுமோ அவ்வாறு நிறைவேற்றப்பட்டது, அந்தக் கூற்றுகள் எந்த யூனியனுக்கும் இன்றியமையாதன வாகும். கான்ஸ்டிடுவென்ட் அசெம்பிளி சுமார் மூன்று ஆண்டுகள் செயல்பட்டு இந்திய அரசியல் அமைப்புச் (Constitution of India) சட்டத்தை 1949 நவம்பர், 26 தேதியில் நிறைவேற்றியது. பின் தொடர்ந்து இடைக்காலப் பாராளுமன்றமுமாக 1952 பொதுத் தேர்தல்கள் வரை தொழில்புரிந்தது. நேரு தலைமையில் நடந்துவந்த இடைக்கால அமைச்சரவையும் அதுவரை நீடித்தது.

இந்திய அரசியல் அமைப்பு, பிரிட்டிஷ் அரசியல் அமைப்பைப் பெரும்பான்மை பின்பற்றியும், சிற்சில விஷயங்களில் அமெரிக்கச் சட்டத்தைப் பின்பற்றியும் பொதுவாக, இந்தியாவின் தேவைகளுக்கு ஒத்தபடி நல்லமுறையில் அமைக்கப்பட்டது.[1] அதனுடைய அம்சங்களை எல்லாம் இங்குக் கூறப்புகின் விரியும். அமைச்சரவை ஆட்சியைப்பற்றிய அம்சங்களே விரிவாக விளக்கப்படும்.

சட்டத்தின் பொது அமைப்புகளைமட்டும் சுருக்கமாக ஈண்டுக் கூறுவோம். அரசியல் அமைப்பின் தோற்றுவாய் (Preamble) இந்திய மக்கள் ஆட்சியுடைய இறைமை நாடு (Sovereign Democratic Republic) என்று முதற்கண் பிரமாணிக்கிறது. அதனுடைய அதிகாரம் மக்கள் சம்மதத்தில் விளைவது என்றும், இந்திய மக்களுக்குச் சமுதாய, பொருளாதார, அரசியல் நீதி தரும் என்றும், மனோபாவம், பேச்சு, நம்பிக்கை, சமயம், வழிபாடுகளில் ஒவ்வொருவருக்கும் சுய உரிமை உண்டென்றும், அந்தஸ்தும் வாய்ப்பும் யாவருக்கும் சமஉரிமை என்றும், மக்களிடையே சகோதரத்துவத்தை வளர்த்துத் தனிப்பட்டவரின் மேன்மையையும், நாட்டின் ஒருமைப்பாட்டையும் வளர்க்குமென்றும் உறுதி கூறுகிறது.

1 இந்தச் சட்டம் 395 பிரிவுகளும், 22 பாகங்களும் பின் அட்டவணைகளும் கொண்டது. இந்த நூலை வாசிப்பவர்கள் அந்தச் சட்டத்தையும் உடன்வைத்து வாசித்தல் நலம்.

(இந்த உரிமைகள் மக்கள் தங்களே தாங்களுக்கு அளித்துக் கொண்டது; வேறு ஒருவர் தயவும், நன்கொடையும் அல்ல.) சட்டத்தின் உள்ளடக்கம் கீழே சுருக்கமாகக் கூறப்படுகிறது.

பாகம் 1: இந்தியா இராஜ்ஜியங்களின் ஐக்கியத்தால் ஆன இணைப்பையும் (Union) அதில் அடங்கியுள்ள பாகங்களையும் (Union and Union Territories) குறிக்கிறது.

பாகம் 2: இந்தியக் குடிகள் யார் என்றும், குடிமை பெறுவதற்கும் நீக்குவதற்கும் நாடாளுமன்றத்தின் அதிகாரம் இன்னதென்றும் கூறுகிறது (Citizenship).

பாகம் 3: குடிகளின் அடிப்படை உரிமைகள் இன்னவை என்று வெகு விரிவாகக் கூறுகிறது. சம உரிமை, எதேச்சை, அடிமையின்மை, சமய உரிமை, படிப்பு கலாசார உரிமை, சொத்து உரிமை, சட்டபூர்வமான பரிகாரங்கள் முதலியவற்றைக் கூறுகின்றது. இந்தப் பாகம் வெகு முக்கியமானது. எழுதப் பட்ட அரசியல் அமைப்புகளில் இந்தியச் சட்டம் மிகவும் விரிவானது. (Fundamental Rights.)

பாகம் 4: ஆட்சியின் கொள்கைகளுக்கு நெறிசெய் நியதிகளைக் கூறுகிறது. சமுதாய ஒழுங்கு, சேமநல வளர்ச்சி, வாழ்க்கை ஆதாரத்துக்கு வழிவகுத்தல், பொது உடைமைகளை ஆட்சி செய்தல், மக்களின் தேகநலன், குழந்தைகளைப் பேணல் போன்ற நியதிகள், வேலை செய்ய உரிமை தருதல், உபசாரங்கள் முதலியவற்றைக் கூறுகிறது. (Directive Principles of State Policy)

பாகம் 5: இந்தப் பாகம் யூனியன் கவர்ன்மென்டு அதிகாரிகளான ஜனாதிபதி, உபஜனாதிபதி, அமைச்சர் அவை, அட்டர்னி ஜெனரல் இவர்களின் நியமனம், அரசாங்க அலுவல்களை நடத்துவதற்கு விதிகள் முதலியவைபற்றியும், நாடாளுமன்றத்தின் அமைப்பு, அதிகாரம், உரிமைகள், முறைகள் முதலியவைகளைப்பற்றியும், ஜனாதிபதியின் சட்டமியற்றும் அதிகாரத்தைப்பற்றியும், யூனியன் அரசாங்கத்தின் நீதித் துறையைப் பற்றியும், கம்ப்ட்ரோலர்-ஆடிட்டர் ஜெனரல் (Comptroller and Additor General) நியமனத்தைப் பற்றியும் கூறுகின்றது.

பாகம் 6: இது இராஜ்ஜியங்களின் அதிகாரிகளான ஆளுநர், (கவர்னர்) இராஜ்ஜிய அமைச்சரவை அமைப்பு,

அட்வகேட்-ஜெனரல் நியமனம், அரசாங்க முறைகள் பற்றி ஆளுநரின் சட்டம் இயற்றும் அதிகாரம், இராஜ்ஜியங்களில் உயர்நீதி மன்றம், கீழ் நீதிமன்றங்கள் இவைகளைப்பற்றிக் கூறுகின்றது.

பாகம் 7 : இது ' B ' பகுதி இராஜ்ஜியங்களைப்பற்றியது. ரத்து செய்யப்பட்டது.

பாகம் 8 : யூனியன் அரசாங்கத்திற்குட்பட்ட பிரதேசங்களின் நிர்வாகத்தைப்பற்றியது.

பாகம் 9 : இது 'B' பகுதிப் பிரதேசங்களைப்பற்றியது. ரத்து செய்யப்பட்டது.

பாகம் 10 : ஷெட்யூல்டு, ஆதிஜாதிப் பிரதேசங்களைப் பற்றியது.

பாகம் 11: இது மத்திய அரசுக்கும் (யூனியன்) இராஜ்ஜியங்களுக்கும் உள்ள உறவுகளைப்பற்றி விரிவாகக் கூறுகிறது. சட்டம் செய்யும் உரிமைகளின் பகிர்வு, அதிகாரங்களின் வரம்புகள், மத்திய இராஜ்ஜிய அரசாங்கங்களுக்கிடையே நீர்ப்பாசன விஷயங்களில் வரக்கூடிய சச்சரவுகளைத் தீர்த்தல், இராஜ்ஜியங்களுக்கிடையே கூட்டமைப்புச் சபை (Inter - State Council) முதலியவைகளைப்பற்றிக் கூறுகிறது.

பாகம் 12 : வரி விதிக்கச் சட்ட அனுமதி, அரசின் மொத்தப் பணம் என்ன என்பது, மத்திய அரசுக்கும் இராஜ்ஜியங்களுக்கும் வரிவருமானம் பகிர்ந்து கொடுத்தல், இராஜ்ஜியங்களுக்காக மத்தியஅரசு வரி சேமித்தலும், மத்திய அரசுக்காக இராஜ்ஜியங்கள் வரி சேமித்தலும், தொகைகளை எப்படி ஒப்படைத்துக் கொள்வது, இராஜ்யங்கள் பெறத்தக்க மானியங்கள், வரிவிதிப்பதற்கு நிபந்தனைகள், வரி விதிக்கும் சட்டங்களை நிறைவேற்ற ஜனாதிபதியின் இசைவு இவைகளைப்பற்றிக் கூறுகிறது; இராஜமானியங்களைப் பற்றியும் கூறுகிறது. மேலும்; நிதிக் கமிஷனை நியமிக்க ஜனாதிபதியின் அதிகாரம், அரசுக்காகக் கடன் வாங்க மத்தியஅரசு, இராஜ்ஜிய அரசுகளின் அதிகாரங்கள் முதலியவைகளைப்பற்றியும் கூறுகிறது.

பாகம் 13 : வர்த்தகம், வாணிகம், போக்குவரத்துகளுக்கு இடக்கூடிய கட்டுப்பாடுகள் முதலியவைகளைப்பற்றிக் கூறுகிறது.

பாகம் 14: மத்தியஅரசு இராஜ்ஜிய அரசுகளின்கீழ்ப் பணிபுரிவோர்களின் தேர்வு, நிபந்தனைகள், ஒழுங்கு, பணியாளர்களைப் பொறுக்கும் ஆய்வுக்குழு முதலியவைகளைப் பற்றிக் கூறுகிறது.

பாகம் 15: மத்திய, இராஜ்ஜிய சட்டசபைகளுக்குத் தேர்தல்கள், அதை நடத்துவதற்குக் கமிஷன், நாடாளுமன்றத்துக்கும் இராஜ்ஜிய சட்டசபைகளுக்குமுள்ள அதிகாரங்கள் முதலியன.

பாகம் 16: அட்டவணையில் கண்ட சாதிகள், ஆதி சாதிகளுக்கு (Schedule Castes and Tribes), உரித்தான தனிச் சலுகைகள், அவர்களுடைய முன்னேற்றத்தைக் கவனித்தல் முதலியவைகளைப்பற்றிக் கூறுகிறது.

பாகம் 17: மத்திய அரசு, இராஜ்ஜிய அரசுகளின் அதிகார பூர்வமான மொழிகள், இந்திய யூனியன் மொழி என்ன என்பது, நீதி மன்றங்களின் மொழி, மொழியைப்பற்றித் தனிக் கவனிப்புகள் இவைகளைப்பற்றிக் கூறுகிறது.

பாகம் 18: ஜனாதிபதி, இராஜ்ஜிய ஆளுநர்களின் நெருக்கடி அதிகாரங்கள் (Emergency Powers), அரசியல் அமைப்புப்படி இராஜ்ஜியங்களில் அரசாட்சி நடக்க இயலவில்லை என்றால் எடுக்கும் நடவடிக்கைகள் முதலியவைகளைப்பற்றிக் கூறுகிறது.

பாகம் 19: ஜனாதிபதி, ஆளுநர்களுக்குச் சட்ட நடவடிக்கைகளிலிருந்து விலக்களித்தல் முதலிய எஞ்சிய விஷயங்கள்பற்றிக் கூறுகிறது.

பாகம் 20: அரசியல் அமைப்பைத் திருத்துவதற்கு முறைகளையும் நிபந்தனைகளையும் கூறுகின்றது.

பாகம் 21: இடைக்காலத் தாற்காலிகமான அமைவுகளைக் கூறுகின்றது.

பாகம் 22: சட்டத்தின் பெயர், தொடங்கும் தேதி, முன் போன சட்டங்களின் ரத்து முதலியவைபற்றி கூறுகின்றது.

சட்டத்துக்கு எட்டு அட்டவணைகள் உள்ளன.

மேலே தரப்பட்டுள்ளபடி இந்திய அரசியல் அமைப்பை மேல்நோக்காகப் பார்க்கினும், அமைச்சரவை ஆட்சியின்

(Cabinet Government) ஆதாரங்களும், கட்டுப்பாடுகளும். வரக்கூடிய இடையூறுகளும் சிறிது விளங்கும். இந்தியக் குடியரசு பல மகாணங்களும் பழைய அரசர் இராஜ்ஜியங்களும் சேர்ந்த ஓர் இணைப்பு. புதிய சட்டம் வருவதற்கு முன் எல்லா அங்கங்களும் ஒரேமாதிரியான அதிகாரமும், நிர்வாகமும் கொண்டவை அல்ல. எனவேதான், புது மாகாணங்கள் மூன்று கூறுகளாகப் (A, B, C States) பிரிக்கப்பட்டன. முன் அரசர் இராஜ்ஜியங்களும் வெவ்வேறு அந்தஸ்துகளுடன் இருந்தன. அந்தந்தத் தரங்களுக்கு ஒப்ப மாகாணங்களும், அரசர் இராஜ்ஜியங்களும் கலக்க வேண்டுமென்பது கருத்து. இந்தக் காரணத்தால்தான் புதுக் கூட்டாட்சி அமைப்பில் புது இராஜ்ஜியங்களைச் சேர்க்கவும் (உதாரணம் : பாகிஸ்தானுடன் சேராத இராஜ்ஜியங்கள்) எல்லைகளை மாற்றவும், அரசாங்கத்துக்கு அதிகாரம் தரப்பட்டுள்ளது. வேறு நாடுகளில் பல தனிப்பட்ட இராஜ்ஜியங்கள் தங்கள் இசைவுப்படி ஒன்றுசேர்ந்து கூட்டு அரசாக (Federation) ஆயின. இந்தியாவில் நடந்த முறைவேறு. இந்தியாவின் சுதந்திரத்திற்காகவும், ஒருமைப்பாட்டிற்காகவும், வெவ்வேறு மாகாணங்களும் இராஜ்ஜியங்களும் பிணைக்கப் பட்டன. வேறு பெடரேஷன்களில் சேர்ந்த இராஜ்ஜியங்கள் தாம் அழியாதன; பெடரேஷன் செயற்கை. இந்தியாவில் பெடரேஷன் சட்டத்தால் அழிக்கமுடியாததாக வைக்கப்பட்டு இராஜ்ஜியங்கள் எல்லை முதலானவைகளில் மாறுதல் அடையலாம் எனச் சட்டத்தில் எழுதப்பட்டுள்ளது. பிரிட்டிஷார் காலத்தில் இருந்த ஒருமுக (Unitary) ஆட்சியின் அம்சத்தின் தத்துவம் ஒரு சில தொடர்ந்து உள. இது தவிர்க்க முடியாதது. இதனால் கூட்டாட்சிக்குப் (Fedration) பாதகம் இல்லை. பழைய 1919 ஆம் ஆண்டுச் சட்டத்தால் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாணங்களுக்கும் சட்டம் இயற்றும் அதிகாரம், நிர்வாக அதிகாரம் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருந்தாலும், மத்திய அரசாங்கம் ஒருமுக ஆட்சியே. 1935ஆம் ஆண்டுச் சட்டத்தில் இந்தியர்களின் சுதந்திரப் போராட்டத்தின் காரணமாக, மக்களுக்கு அதிகாரம் அதிகமாகத் தருவதற்கு, மாகாணங்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டு எல்லாம் கூடிக் கூட்டாட்சியாக மத்தியஅரசு அமையவேண்டுமென்பது குறிக்கோள். ஆனால், கூட்டாட்சியின் அம்சங்கள் அந்தச் சட்டத்தின்படி நிறைவேறவில்லை. ஏனெனில், போதுமான இந்திய அரசர் இராஜ்ஜியங்கள் (Princely States) சேரவில்லை. எனினும், 1935ஆம் ஆண்டுச்

சட்டத்தின் அச்சுக் கோப்பு அம்சங்களை 1947ஆம் ஆண்டுச் சுதந்திர அரசியல் அமைப்பில் ஓரளவு காணலாம். இந்தியன் பெடரேஷனில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளும், இதுவரை எதேச்சாதிகாரமான அரசர்கள் இராஜ்ஜியங்களும் பிணைக்கப்பட வேண்டிய கஷ்டம் ஒருபக்கமும், பாகிஸ்தான் பிரிவினைப் பிரச்சினை மற்றொருபக்கமும் இருக்க மத்திய அரசைப் பலமாக அமைக்கவேண்டி இருந்தது. ஆனால், ஏற்கெனவே அங்கங்களாகிய மாகாணங்கள், அரசர்கள் இராஜ்ஜியங்கள் இவைகளின் தனி அதிகாரத்தைக் குறைக்க முடியவில்லை. இந்த இரண்டு நிலைகளையும் சமன்செய்து இந்திய ஃபெடரேஷன் கூடுமானவரை சாமர்த்தியமாக ஆக்கப்பட்டுள்ளது. இதுகாறும் கூறியவற்றால் புது அமைப்பில் இராஜ்ஜிய அமைச்சரவைகள் மத்திய அமைச்சரவைக்கு அடிமை அல்ல என்பது நனிவிளங்கும். இராஜ்ஜிய அமைச்சரவை ஆட்சிக்கு அதிகாரம் குறைச்சலாக இருக்கலாம்; ஆனால், கொடுக்கப்பட்ட அதிகாரங்களில் இராஜ்ஜிய அமைச்சரவை ஆட்சி தனி அதிகாரம் படைத்தவைகளே. அதிகப்படியாக அதிகாரங்கள் தரப்படவேண்டுமென்பது வேறு; மத்திய அரசுக்குக் கட்டுப்படப்போவதில்லை என்பது வேறு. அதிகாரப் பெருக்கம் வேறு; பிரிவினை வேறு. பிரிவினைக்குப் புது அரசியல் அமைப்பில் இடமில்லை. அதிகாரப் பெருக்கம் பெறுவதற்கு மத்திய நாடாளுமன்றத்தையும், மத்திய அமைச்சரவையின் ஆதரவையும் எதிர்பார்த்துத்தான் தீரவேண்டும். அதிகாரப் பங்கீடுகளுக்கு அரசியல் அமைப்பு இடம் தருகிறது; வேண்டுமென்ற திருத்தங்களுக்கும் இடம் உண்டு. ஆனால், அரசியல் விவகாரங்களினால் அனுகூலமோ, தடையோ ஏற்படலாம். சமரசமான ஃபெடரேஷனுக்கு முழு வாய்ப்பு உளது.

அரசியல் அமைப்புக்குச்சிகரமாக உள்ளவரும் அதைக் காப்பாற்றும் பொறுப்புடையவரும் ஜனாதிபதி (President of India) ஆவார். அவரும், இராஜ்ஜிய சபையும் (Council of States), லோக் சபையும் (House of the People) சேர்ந்து இந்தியப் பாராளுமன்றமாகும். ஜனாதிபதி பாராளுமன்றத்து இரு சபைகளின் உறுப்பினர்களும் இராஜ்ய சட்டசபைகளின் உறுப்பினர்களும் கூடிய வாக்காளர் தொகுதியால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். பாராளுமன்றத்து வாக்காளர்கள் அதிகப்படியாயிருந்தாலும், அவர் இந்திய யூனியன் முழுமைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர். அவர் ஐந்தாண்டுகட்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுவார், உபஜனாதிபதி (Vice-President) பாராளு

மன்றத்தின் இரு சபைகளாலும் தேர்ந்தெடுக்கப்படுவார். அவர் மேல்சபைத் தலைவராகவும் தேவைப்பட்டபோது ஜனுதிபதிக்குப் பதிலியாகவும் தொழில்புரிவார். ஜனுதிபதிக்குப் பாராளுமன்றத்தைக் கூட்டவும் கலைக்கவும் அதிகாரம் உண்டு. பாராளுமன்றமும் இராஜ்ஜிய சபைகளும் நிறைவேற்றும் சட்டங்களுக்கு இசைவுதரும் அதிகாரம் அவருடையது. பாராளுமன்றம் கூடாதபோது அவசரச்சட்டம் பிரேரேபிக்கும் அதிகாரமுண்டு. லோக்சபை உறுப்பினர்கள் வயதுவந்தோர் வாக்குரிமையால் தேர்ந்தெடுக்கப்படுவர். இராஜ்ஜிய சபை உறுப்பினர்கள் இராஜ்ஜிய சபைச் சட்டமன்றங்களினுல் (Lower House) தேர்ந்தெடுக்கப்படுவர். லோக்சபை நிர்வாகத்தில் முதன்மை முக்கியத்துவம் பெற்றது. அமைச்சரவை (Council of Ministers or Cabinet) அதற்கு முழு உத்தரவாதம் உடையது. காபினெட் அந்தச் சபையின் கருவி எனலாம். மாகாணங்களில் கவர்னர்கள் ஜனுதிபதியால் நியமிக்கப்படுவார்கள். கவர்னர்கட்கு இராஜ்ஜியசட்டசபை நிறைவேற்றிய சட்டங்களை ஜனுதிபதியின் இசைவுக்கு உட்படுத்த அதிகாரம் உண்டு. இராஜ்ஜியச் சட்டசபையைக் கூட்டவும் கலைக்கவும் கவர்னர்களுக்கு அதிகாரம் உண்டு.

மத்திய அரசின் இராஜ்ஜியசபை (Council of States) இராஜ்ஜியங்களின் ஜனத்தொகையின் பிரகாரம் தேர்ந்தெடுக்கப்படுவது. இது மற்றைய பெடரேஷன்களின் அம்சத்துக்கு மாருனது. அவைகளில் இணைப்புப் பெறும் இராஜ்ஜியங்கள் பெரிதாஞலும் சிறிதாஞலும் சம அந்தஸ்தும் இயைபும் உள்ளவை. இந்திய அரசர்களின் இராஜ்ஜியங்கள் பெரிதாக இருந்தால், அவைகளின் கூட்டால் அவை அதிக இடங்கள் பெறும். தவிரச் சில இடங்களுக்கு ஜனுதிபதி தேர்தல் இல்லாமல் நியமனம் செய்யலாம். இந்த விஷயத்தில் இந்தச் சபை முழுவதும் ஃபெடரல் என்று சொல்ல இயலாது. இருப்பினும் இந்தச் சபை கீழ்ச்சபையின் போக்குகளைத் திருத்தச் சிறிதளவு பயன்படும். மேலும், இடங்கள் நேர் தேர்தல்களால் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. இதனுல் அனுபவமுள்ள முதியோர்கள் இந்தச் சபையில் இடம் பெறுவதற்கு வாய்ப்பு உண்டு. இந்தச் சபைக்குக் கீழ்ச்சபை செய்யும் சட்டத்தை நிராகரிக்க அதிகாரம் இல்லை. இந்தச் சபை ஒரு கால அளவில் கலைக்கப்படுவதில்லை. மூன்றில் ஒருபங்கு உறுப்பினர்கள் இரண்டாண்டுகட்குஒருமுறை சீட்டுக் குலுக்கல்படி விலகுவார்கள். இது மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்படி (Representation of People's Act, 1950) நடைபெறும்.

மக்கள் சபை (கீழ்ச்சபை) வயதுவந்தோர் வாக்களிப்பால் நேர் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் தொகுதிகள் தக்கபடி பிரிக்கப்பட்டுள்ளன. ஏழரை இலட்சம் ஜனத்தொகைக்கு ஓர் உறுப்பினருக்குக் குறையாமல் இருக்கும்படி தொகுதிகள் ஏற்பட்டுள்ளன. ஆனால், தொகுதிகள் குடிக்கணக்கு (census) எடுப்புக்குத் தக்கபடி மாற்றப்படும். தொகுதிகளை வரையறுத்தல் சட்டப்படி நியமிக்கப்பட்ட ஒரு குழுவினால் (Delimitation Commission) ஆக்கப்படும். இந்தச் சபை, உறுப்பினர்களால் தங்களுக்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரைத் தலைவராகப் பெற்றுள்ளது. அவருக்குச் சபாநாயகர் (Speaker) என்று பெயர். இந்தச் சபை ஐந்தாண்டு காலம் நிலவும். இடைத் தேர்தல் (Bye elections) ஏற்படினும் அல்லது நெருக்கடிப் பிரகடனம் (Proclamation of Emergency) செய்யப்பட்டாலும் அப்போது முடிவு பெறும்.

இந்த இரண்டு சபைகளுக்கும் ஒவ்வொரு குடியும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உரிமை தரப்பட்டுள்ளது. மேல்சபைக்கு 30 வயதுக்கு மேற்பட்டவராய் இருக்கவேண்டும்; கீழ்ச்சபைக்கு 25 வயதுக்கு மேற்பட்டவராய் இருக்கவேண்டும். மத்திய இராஜ்ஜிய அரசுகளால் ஊதியம் கிடைக்கும் பதவியை உடையவர்கள் தேர்தலுக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். புத்தி ஸ்வாதீனமில்லாதவர்களும், மீட்கப்படாது கடன்பட்டவர்களும் நிற்கக் கூடாது. இந்த இழுக்குகள் தேர்தலுக்குப்பின் கண்டு பிடிக்கப்பட்டாலும் இடத்தை இழப்பார்கள்.

மக்கள்சபைதான் மக்கள் ஆட்சியின் அதிகாரத்தைப் பிரதிபலிப்பதாகக் கருதப்படும். அமைச்சரவை, மக்கள் சபையின் முடிவுகளுக்கு உட்பட்டு நடத்தல் வேண்டும். இரண்டு சபைகளில் எதில் ஒன்றிலாவது மசோதாக்களைக் கொண்டுவரலாம். ஆனால், இரண்டு சபைகளும் நிறைவேற்ற வேண்டும். முரண்பாடு இருப்பின் இரண்டு சபைகளின் கூட்டு அமர்வில் அவை தீர்க்கப்படும். அத்தகைய கூட்டு அமர்வு ஜனாதிபதியால்தாம் அனுமதிக்கப்படும். இரண்டு சபைகளிலும், முடிவுகள் பெருவாரியான வாக்குகளின்பேரில் நிர்ணயிக்கப்படும். நிதிசம்பந்தமான மசோதாக்கள் கீழ்ச்சபையில்தான் முதலில் நிறைவேற்றப்படவேண்டும். பின் மேல்சபைக்கு அனுப்பப்பட்டு, அதன் கருத்தைமட்டும்தான் அது தெரிவிக்கலாம். மசோதாவை நிராகரிக்க அதற்கு அதிகாரம் இல்லை. மானியக் கோரிக்கைளும் கீழ்ச்சபையில்தான் நிறைவேற்றப்படவேண்டும். மேல்சபை வரவுசெலவுக் கணக்கைப் பொதுவாகத்தான் விவாதிக்கலாம்.

மத்திய அரசுக்கும் இராஜ்ஜிய அரசுகளுக்கும் சட்டம் இயற்றும் அதிகாரமும், நிர்வாக அதிகாரமும் அரசியல் அமைப்பால் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. சில கூட்டாட்சிப் பட்டியலிலும் (Federal list) சில இராஜ்ஜிய பட்டியலிலும் (State List) சில பொதுப் பட்டியலிலும் (Concurrent List) சேர்க்கப்பட்டுள்ளன. விடுபட்ட அதிகாரங்கள் இராஜ்ஜியங்களுக்கு விடப்பட்டாலன்றி, மத்திய சபைக்கே உரிமையாகும். மத்திய அரசின் நடவடிக்கைகள் ஜனாதிபதியின் பேராலேயே நடைபெறும். அதே மாதிரி இராஜ்ஜிய அரசின் நடவடிக்கைகள் கவர்னரின் பெயராலேயே நடைபெறும்.

பாராளுமன்றத்தின் இறைமை அதாவது சட்டம் நிறைவேற்றும் அதிகாரம், சில முக்கிய விஷயங்களில் கட்டுப்பட்டது. அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு விரோதமாக ஒரு சட்டமும் இருக்கக் கூடாதென்பது வெளிப்படை. சட்ட அமைப்பிலேயே குடிகளின் அடிப்படையான உரிமைகளை (Fundamental Rights) ரத்துசெய்யவோ, குறைக்கவோ பாராளுமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்று எழுதப்பெற்றுள்ளது. இராஜ்ஜிய விஷயங்களிலும் தலையிடமுடியாது. ஆனால், இவை முழுதிலும் அனுட்டிக்கப்படமாட்டாது. சில சமயங்களில் அந்த நிபந்தனைகளைத் தளர்த்தப் பாராளுமன்றத்துக்குப் பிரத்தியேக முறைகளின்படி சட்டம் நிறைவேற்ற இடம் உண்டு. இந்த அடிப்படை உரிமைகளை முன்பே சிறிது விளக்கியுள்ளோம். இவை இல்லையேல் மக்களின் உரிமைகளுக்கும் அரசாங்கத்துக்குமே அசைவின்மை இல்லாது போய்விடும். இந்த உரிமைகளைப் பொதுவாக இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று அரசாங்கத்தின் அதிகாரத்துக்கு எல்லை விதிப்பது; மற்றொன்று, தனிப்பட்டவர் உரிமைகட்குக் காப்புச் செய்வது. முதல் இனத்தில் உள்ளது அசைக்க முடியாதது. முரணாக உள்ளதை நீதிமன்றம் நிராகரித்துவிடலாம். இரண்டாவது, அரசாங்கம் சில வரம்புகளுக்குள் ஒழுங்குபடுத்தலாம். (உ-ம், நில உரிமை). எனவே, இந்தியாவில் பாராளுமன்றம் தனது அதிகாரத்தை நீதிமன்றங்களின் பரிசீலனைக்குட்பட்டுத்தான் நடத்தலாம். எழுதப்படாத அரசியல் அமைப்புள்ள நாடுகளில் (உ-ம். பிரிட்டன்) இந்தக் கட்டுப்பாடு இல்லை. எழுதப்பட்ட அரசியல் அமைப்பு உள்ள நாடுகளில் (உ-ம். அமெரிக்கா) இந்த உரிமைகள் முழுக்கமுழுக்க நீதிமன்றங்களினாலேயே நிறைவேற்றப்படுகின்றன. இந்தியா இந்த இரண்டு முறைகளுக்கும் மையமாக அமைந்துள்ளது. இந்த விஷயத்தில் பாராளுமன்றத்துக்கும் சுப்ரீம் கோர்ட்டுக்கும்

கருத்து வித்தியாசம் வரலாம். பாராளுமன்றம் அரசியல் அமைப்பைத் திருத்தம் செய்துதான் மக்கள் அடிப்படை உரிமைகளைக் குறைக்கலாம்; ஒழுங்குபடுத்தலாம். ஆனால், அத்தகைய நடவடிக்கைக்கு எடுக்கவேண்டிய முறை கடினமாக விதிக்கப்பட்டுள்ளதால், அசட்டைத்தனமாக இருக்கமுடியாது. சட்டசபையில் ஆஜராகும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் ஆதரவு தரவேண்டும். அந்த எண்ணிக்கையும் சபையின் மொத்த எண்ணிக்கையில் பாதிக்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும். இவ்வளவு கடினமான முறை இருந்தும் பல திருத்தங்கள் சமீப காலத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இராஜ்ஜியங்களின் சட்டம் இயற்றும் அதிகாரங்களும், நிர்வாக அதிகாரங்களும் அரசியல் அமைப்பில் வரையறுக்கப்பட்டுள்ளன. எல்லா அதிகாரமும் கவர்னர் பேரால்தான் நடைபெறவேண்டும். பொதுவாக, இராஜ்ஜிய விஷயங்களில் கவர்னர்களுக்கு ஜனாதிபதிக்கு இருப்பது போன்ற அதிகாரங்கள் உண்டு. கவர்னர் ஜனாதிபதிக்கு உட்பட்டவர். இராஜ்ஜிய அதிகாரத்துக்கு உட்பட்ட விஷயங்களையும் மத்திய அரசு தனக்குச் சட்டப்படி மாற்றிக்கொள்ளலாம். ஜனாதிபதிக்கும், மத்திய அரசுக்கும் கொடுக்கப்பட்ட அதிகாரங்களால் இராஜ்ஜியங்களுக்கும் கீழ்ப்பட்ட (subordinate) அந்தஸ்துதான். இராஜ்ஜிய அதிகாரங்கள் பொதுவாக மத்திய அரசாங்கம் விடும் பொதுக் குறிப்புகளுக்குட்பட்டவை. சில விஷயங்களில் மத்திய அரசாங்கத்துக்கு இராஜ்ஜியங்களை இன்னது செய்யவேண்டுமென்று ஆணையிடுவதற்கும் சட்டபூர்வமான அதிகாரம் உண்டு. (உ-ம்: ரயில்பாதை, பாதுகாப்பு, இராணுவத்துக்கு வேண்டிய சாலைகளை ஏற்படுத்திப் பராமரித்தல் முதலியன.) இராஜ்ஜிய அரசாங்கம் இந்த ஆணைகளை நிறைவேற்றுவிட்டால், ஜனாதிபதி இராஜ்ஜிய அதிகாரத்தைத் தாமே மேற்கொள்ளலாம். அப்போது இராஜ்ஜிய சட்டமன்றத்தின் கடமைகளைப் பாராளுமன்றமே நிறைவேற்றும். அதுமட்டுமன்றி நாட்டின் நிதிநிலைக்கு மோசம் வரும் என்று கருதினாலும், நாட்டின் பாதுகாப்புக்கோ அதன் பகுதிகளுக்கோ அபாயம் வரும் என்று கருதப்பட்டாலும் ஜனாதிபதி அம்மாதிரி நெருக்கடி நேர்ந்துள்ளது என்று பிரகடனம் செய்து, இராஜ்ஜியங்களின் எல்லாச் சட்டம் இயற்றும், நிர்வாக அதிகாரங்களைத் தாமே ஏற்றுக்கொள்ளலாம். மக்களின் அடிப்படையான உரிமைகளையும் தாற்காலிகமாக நிறைவேற்றுமல் வைக்கலாம். மத்திய அமைச்சரவை பாராளுமன்றத்துக்கு உத்தரவாதம் ஆனபடியாலும், ஜனாதிபதியின் அதிகாரங்கள் அமைச்

சரவையின் ஆலோசனையின்பேரில் நடைபெறுவதாலும், எல்லா அதிகாரங்களுக்கும் பாராளுமன்றமே மூலம் என்று கருதப்படும்.

இந்தக் கட்டுப்பாடுகள் சரியான கூட்டாட்சிக்கு (Fedaration) முழு இலக்கணம் அல்ல. ஆனால், அவைகளை இந்தியாவின் சூழ்நிலையில் தவிர்க்க முடியாது என்று கருதப்படுகிறது. இந்த விஷயங்களில் பாராளுமன்றம் எதேச்சாதிகாரமாக எது ஒன்றையும் செய்யமுடியாது. அரசியல் அமைப்புச் சம்பந்தமான திருத்தங்களை நிறைவேற்ற மூன்று விதமான நெறிகள் விதிக்கப்பட்டுள்ளன. ஒன்று, சாதாரணப் பெருவாரி வாக்குகள்; இரண்டு, மூன்றில் இரண்டு பங்குப் பெருவாரியான வாக்கும், மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் பாதிக்கு மேற்பட்டதும்; மூன்று, சில கூட்டு விஷயங்களில் மாநிலச் சட்டசபைகளின் பாதிக்கு மேலான அங்கீகாரம். இவை ஓரளவு பாதுகாப்பைத் தருகின்றன. அரசியல் அமைப்பு வேதவாக்குப் போன்றது; அதை அநாவசியமாக அதிகம் திருத்தக் கூடாதென்று சிலர் கூறுவர். சிலர் அரசியல் அமைப்பு மக்களுக்கு ஏற்பட்டது; வளர்ச்சிக்கு இடம் தரவேண்டுவது. எனவே, மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குச் சிறுபான்மையோர் உரிமைகளைப் பாதிக்கச் செய்வது நீதி, நல்லது என்று கருதுவர்.

நெறிசெய் நியதிகள் (Directive Principles) நீதிமன்றங்களால் கட்டாயப்படுத்தப்படாவிட்டாலும் ஆட்சிக்கு ஆணைகளாக இருக்கின்றபடியாலும், ஜனாதிபதி அவைகளைப் பராமரிக்காமல் போவதைத் தடுப்பதற்குப் பொறுப்பாளியுமாகையால் நிர்வாகம் (Executive) அதாவது ஆளும் அமைச்சரவை அவைகளை நிறைவேற்றுவதற்கு அடிப்படையான உரிமைகளை (Fundamental Rights) ஓரளவு ஒழுங்குபடுத்தும் முறையில் குறைப்பது அரசியல் அமைப்புக் கருத்துகளுக்கு விரோதமானது என்று கருதப்படும். அரசியல் அமைப்பைத் திருத்துவதற்கு முறை அதிகக் கஷ்டமாக இயற்றப்பட்டிருப்பதால், அதுவே ஆட்சியின் விருப்பங்களை அடக்கி நடத்தும் என்றும் கருதப்படும். ஆட்சிக்கு இந்த அளவாகிலும் எதேச்சை இல்லாவிடின், நெறிசெய் நியதிகளைக் கட்டாயப்படுத்தாமல் காகிதம் அளவில் அரசியல் அமைப்பில் எழுதிவைப்பது அர்த்தம் இல்லை என்றும் கருதப்படும்.

மத்திய அமைச்சரவை ஆட்சி, மாநில அமைச்சரவை ஆட்சியை ஜனாதிபதியின் பலம்கொண்டு நெறிசெய் நியதிகளில் கட்டுப்படுத்தலாம் அரசியல் அமைப்பைக் கூட்டாட்சி (Federa-

tion) என்று கூருமல் 'யூனியன்' என்று கூறியது இந்தியாவில் நிலவப்போகும் எல்லா ஆட்சிகளின் ஒருமைப்பாட்டைக் குறிக்கவே என்பது உணரற்பாலது. அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்கும் முறையிலும் மத்திய ஆட்சியை வலுவாக்கவேண்டும் என்ற நோக்கம் கொண்டதே. மத்திய ஆட்சிக்குத் தரப்பட்ட யூனியன் பட்டியலில் சேர்க்கப்பட்டவை: பாதுகாப்பு, வெளி நாட்டு விவகாரங்கள், காகிதச் செலாவணி, நாணயச் செலாவணி, வெளிவாணிகம், இரயில்வே, அஞ்சல், தந்தி, துறைமுகங்கள், விமானப் போக்குவரத்து, சில முக்கியக் கைத்தொழில்கள், எண்ணெய்ச் சுரங்கங்கள், உலோகச் சுரங்கங்கள், சுப்ரீம் நீதிமன்றம் (Supreme Court), உயர்நீதி மன்றங்கள் முதலிய 72 தலைப்புகள். மாநிலப் பட்டியலில் (State List) சேர்க்கப்பட்டவை: பொது அமைதி, காவல்துறை, நீதிநிர்வாகம், சிறை நிர்வாகம், முனிசிபல் கார்ப்பரேஷனை ஏற்படுத்துதல், பொதுநலமும் துப்புரவும், கல்வி, விவசாயம், நிலவரி, காடுகள், மின் அளங்கள் முதலிய 66 தலைப்புகள். பொதுப்பட்டியலில் சேர்க்கப்பட்டவை: குற்றச் சட்டம், பாதுகாப்பு அடக்குமுறை, விவாகமும் விவாகரத்தும், சிவில் சட்டமுறை, பொருளாதாரச் சமூகநலத் திட்டம், டிரேட் யூனியன், சமூகநலப் பாதுகாப்பு, விலைவாசிக் கட்டுப்பாடு, தொழிற்சாலைகள், மின்சக்தி, பத்திரிகைகள், புத்தகங்கள், அச்சியந்திரச்சாலைகள் பதிவு முதலிய 47 தலைப்புகள். இதனுல் மத்திய ஆட்சிக்கு ஏராளமான அதிகாரம் தரப்பட்டுள்ளதென விளங்கும். பொருளாதாரத் திட்டம் என்ற முறையில் மாநிலங்கள் திட்டங்களை நிறைவேற்ற மத்திய ஆட்சியின் அதிகாரத்திற்கும் தயவுக்கும் மேன்மேலும் கட்டுப்பட்டன என்பதும் ஊகிக்கத்தக்கது.

அமைச்சரவையின் அதிகாரங்களை விளக்கப் புகுமுன் நீதித் துறை, நிர்வாகத்துறை இவைகளைப்பற்றியும் சிறிது விசாரிப்போம். அரசியல் அமைப்பில் இந்தியா முழுதுக்கும் ஒரு மேல் நீதி மன்றம் (சுப்ரீம் கோர்ட்) உள்ளது. அந்த நீதிமன்றத்தின் பிரதம நீதிபதியும் மற்ற நீதிபதிகளும் ஜனுதிபதியால் நியமிக்கப் படுபவர்கள். இந்த நீதிமன்றத்திற்கு, மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே ஏற்படும் வியாஜ்யங்களையும், மாநிலங்களுக்குத் தங்களிடையே நேரக்கூடும் வியாஜ்யங்களையும் விசாரித்துத் தீர்ப்புக்கொடுக்க அதிகாரம் உண்டு. இந்த நீதிமன்றத்துக்கு குடிகளின் அடிப்படை உரிமைகளைப் பற்றி ஆணைகள், உத்தரவுகள், ரிட்டுகள் கொடுக்க அதிகாரமுண்டு. இந்த நீதிமன்றம் செய்யும் சட்டத்தின் நிர்ணயங்கட்கு இந்தியா

விலுள்ள எல்லா நீதிமன்றங்களும் உட்பட்டன. ஜனாதிபதியால் அனுப்பப்படும் சட்ட விஷயமாகவோ வேறு தகவல் விஷயமாகவோ பிரச்சினைகளுக்கு ஆலோசனை தர இந்தக் கோர்ட்டு கட்டுப்பட்டது. பாராளுமன்றமும் மாநிலச் சட்ட மன்றங்களும் நிறைவேற்றும் சட்டங்கள் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு விரோதமாக இருப்பின், அவை செல்லா என்று தீர்ப்புத்தரவும் இந்தக் கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு. அதன் கடமையும் கூட. எனவே, சுப்ரீம் கோர்ட்டு இந்திய அரசியல் திட்டத்திலும், மக்கள் ஆட்சியிலும் முக்கிய இடம்பெற்றுள்ளது. அது அமைச்சரவை அதிகாரத்துக்கோ தயவுக்கோ உட்பட்டதன்று. மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இன்றியமையாத ஒரு கருவியாகும். மாநிலங்களில் உயர் நீதி மன்றங்களும் கீழ் நீதிமன்றங்களும் கூடி நீதித்துறையாக அமையும். (மத்திய அரசுக்குக் கீழ் நீதிமன்றங்கள் கிடையா). உயர் நீதிமன்றத்துக்கு ஒரு பிரதம நீதிபதியும் மற்ற நீதிபதிகளும் உண்டு. அவர்களின் எண்ணிக்கை ஜனாதிபதியால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும். உயர்நீதி மன்றங்களின் சிவில், கிரிமினல் வழக்குகளில் மேல்விசாரணைத் (appeal) தீர்ப்புக்கூறச் சுப்ரீம் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு.

இந்தியாவில் அதிகார வர்க்கத்தினரின் 'சர்வீஸ்' (Public Service) எனப்படும் வரலாறு மிக முக்கியமானது. அந்நியர் ஆட்சியில்அதிகாரவர்க்கத்தினரின் செம்மையால்தான் நிர்வாகம் அத்தனைகாலம் நீடித்துநின்றது எனலாம். அதிகாரவர்க்கத்தினர்களுக்கு நிரம்பச் செல்வாக்கும் அதிகாரமும் இருந்தன. அந்நிய ஆட்சியின் ஆதாரம் அதிகாரவர்க்கத்தினரின் அமைப்பாகும். எனவே, பழைய இந்திய ஆட்சிச் சட்டங்கள் இந்த விஷயத்தைப்பற்றி விரிவாகக் கூறின. கிழக்கிந்தியக் கம்பெனிக் காலத்திலிருந்தே உத்தியோகஸ்தர்களின் யோக்கியதைகளை வகுத்து ஆட்சியில் அவர்களுக்கு முக்கியப் பங்கு கொடுக்கப்பட்டிருந்தது. பின், கவர்னர் ஜெனரல் நியமிக்கப்பட்டுக் காரன் வாலிஸ் பிரபு நிர்வாகத்தைச் சீர்திருத்தி ஒழுங்குபடுத்தினர். கவர்னர் ஜெனரலின் கவுன்சிலில் இடம் பெற்ற உத்தியோகஸ்தர்கள் பொதுக்குழு உன்னத ஸ்தானமாக இருந்தது. 19ஆம் நூற்றுண்டில் உத்தியோகஸ்தர்கள் வெவ்வேறு இனங்களாகப் (சிவில் சர்வீஸ், போலீசு முதலியன) பிரிக்கப்பட்டார்கள். பின்பு பல்வேறு அகில இந்திய சர்வீசுகளும் உண்டாயின. இந்தச் சர்வீசு இனங்களுக்கு இங்கிலாந்திலேயே ஆள்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பின்னுல் இந்தியர் மயமாக்க வேண்டுமென்ற போராட்டத்தினுல் இந்தியாவிலும் ஆள்கள் தேர்ந்தெடுக்கப்

பட்டார்கள். இந்தியன் சிவில் சர்வீசில் இந்தியர்கள் சேர்க்கப் பட்டார்கள். இந்தியன் பொலிடிகல் சர்வீசில் ஆங்கிலேயர்கள் நெடுநாள்வரை இருந்தார்கள். 1919ஆம் ஆண்டுச் சட்டத்தில் உத்தியோகஸ்தர்களின் நியமனம், மேற்பார்வை முதலியவை களைப்பற்றித் தெளிவாகக் கூறப்பட்டது. இந்தச் சட்டத்தின் பயனாக மாநிலங்களில் இரட்டையாட்சி நடந்தபோது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 'மாற்றப்பட்ட துறை'களின் அமைச்சர் களுக்கு அகில இந்திய இனத்து உத்தியோகஸ்தர்களின்மேல் முழு அதிகாரம் இல்லை. வைசிராயும் அவருக்குமேல் செக்ரடரி ஆஃப் ஸ்டேட்டுமே முழு அதிகாரம் செலுத்திவந்தார்கள். மாற்றப்பட்ட துறை உத்தியோகஸ்தர்களின் உரிமைகள் கூட கவர்னர் பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டு இருந்தன. பிரிட்டிஷ் ஆட்சி உத்தியோகஸ்தர்களின்மேல் இருந்த பிடியை விட்டுத்தர விரும்பவில்லை. இரட்டை ஆட்சியில் அமைச்சர்கட்குத் தமது துறைகளில் மேலதிகாரிகளை நியமிக்கவோ, மாற்றவோ, மேற்பார்வை மட்டுமன்றித் தண்டிக்கவோ அதிகாரம் இல்லை. உத்தியோகஸ்தர்கள் கவர்னரிடம் நேரடியாக அணுகவும் உரிமை இருந்தது. 1935ஆம் ஆண்டுச் சட்டப்படி மாநிலங் களுக்குச் சுய ஆட்சி தரப்பட்டது. பல இன உத்தியோகங்கள் மாநிலமயம் (Provincialisation) ஆக்கப்பட்டன. இதனால் ஆள்கள் அகில இந்தியா முழுதிலும் தேர்ந்தெடுக்கப்படாமல், அந்தந்த மாநிலங்களில் பல இனங்களுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். அகில இந்திய சர்வீசுகளின் (I.C.S., I.P.S.) ஆட்சி இன்னும் செக்ரடரி ஆஃப் ஸ்டேட்டின் கையிலேயே இருந்தது. ஆனால், 1937 முதல் 1947 வரை உலகப்போரினாலும் சட்டமறுப்பு இயக்கத்தினாலும் பல மாநிலங்களில் அமைச்சரவை ஆட்சி நன்கு நடைபெறவில்லை. இந்த இடைக்காலத்திலும் சர்வீசுகள் கவர்னர், கவர்னர் ஜெனரல் மேற்பார்வையிலேயே இருந்துவந்தன.

1947ஆம் ஆண்டு இந்திய விடுதலைக்குப்பின் இந்தியர்களுக்கு முழு ஆட்சி தந்தபோது, இந்தியன் சிவில் சர்வீசும் இந்தியன் போலீசுமே அகில இந்திய சர்வீசுகளாய் ஜனாதிபதியின் பாதுகாப்புக்கு உட்பட்டுத் தங்கின. சர்வீசுகள் மூன்று இனங் களாகப் பிரிக்கப்பட்டன: (1) அகில இந்தியா, (2) சென்ட்ரல், (3) ஸ்டேட்ஸ் (இந்தப் பாகுபாட்டில் ஸ்தல அதிகாரிகள் -Local Administrative officers- சேரார்.) இடைக்கால அமைச்சர்கள் ஆட்சியிலும் சர்வீசுகளுக்கு ஆதிக்கம் இருந்தது. 1950ஆம் ஆண்டில் இந்திய அரசியல் அமைப்பு அமலுக்கு வந்தது. இந்த அமைப்பில் இந்திய யூனியனில் சேர்க்கப்பட்ட மாநிலங்களும்

இணைக்கப்பட்ட அரசர்கள் மாநிலங்களும் யூனியனால் நேரிடை நிர்வாகம் செய்யப்பட்ட பிரதேசங்களும் சேர்ந்து பலதரப் பட்ட நிர்வாக நிலையாக இருந்தன. எனவே, சர்வீசுகளைப் புனர்அமைப்புச் செய்வது அத்தியாவசியமானதொன்று. முழு ஆய்வு செய்யப்பட்டு ஒரு சிவில் சர்வீசுச் சட்டம் இன்னும் உருவாக்க முயற்சிக்கப்படவில்லை. எனினும், அரசியல் அமைப்புத் திட்டம் போதுமான அளவு நிர்வாக ஒழுங்குக்கு வேண்டிய விதிகளைக் கொண்டுள்ளது. அரசியல் அமைப்புப் பாகம் XIV-ல் விதிகள் 308 முதல் 323 வரை இவை கூறப்பட் டுள்ளன. அரசு உத்தியோகங்களில் ஆள் அமர்த்துதல், பணியாளர்களின் சம்பளம் முதலியவைகளை ஒழுங்கு படுத்துதல் அரசியல் அமைப்பு ஷாராக்கள்படியும், மத்திய மாநிலச் சட்டமன்றங்கள் நிறைவேற்றும் சட்டங்கள்படியும் அமையவேண்டும். சட்டம் நிறைவேறும்வரை ஜனாதிபதி தம் அதிகாரத்திலுள்ள சர்வீசுகளுக்கும் ஸ்தானங்களுக்கும் ஆளுநர் அம்முறையிலும் அதற்கு வேண்டிய விதிகள் செய்ய அதிகாரம் உண்டு. சிவில் சர்வீசிலோ பாதுகாப்புச் சர்வீசிலோ பணிபுரியும் ஒவ்வொருவரும் ஜனாதிபதி, மாநிலங்களில் ஆளுநர் மன உவப்பில்தான் (Pleasure of the President or Governor) ஸ்தானங்களை வகிப்பார்கள். அதாவது ஸ்தானங்களில் இருப் பதற்கு (சர்வீஸ் உரிமைகள் -Service rights- தவிர்த்து) சொந்த உரிமை கிடையாது. ஒப்பந்த காலத்துக்கு முன் எவராயினும் நீக்கப்பட்டால், அவர் பெறுமானம் அடைவதற்கு உரிமை உண்டு. எவர் ஒருவரும் தம்மை நியமித்தவர் நிலையின் கீழ்ப்பட்ட நிலையிலுள்ள ஒருவரால் நீக்கப்படவோ, தள்ளப்படவோ, கீழிடத்துக்குத் தாழ்த்தப்படவோ கூடாது. ஆனால், குற்றவழக்கில் தண்டிக்கப்பட்டவராயின் இந்தப் பாது காப்பு அவசியம் இல்லை. அல்லது எவர் ஒருவர் தேசப் பாது காப்புக்கு விரோதம் என்று கருதப்படினும், அந்தப் பாதுகாப்பு அவசியம் இல்லை. விதிப்படி நீக்கப்படுபவர்களுக்குங்கூட அப்படி நீக்கப்படுவதன்முன், ஏன் அப்படிச் செய்யக்கூடாது என்று காரணம் கூற வாய்ப்புத் தரவேண்டும். அதாவது வாய்ப்புத் தராமல் எவரும் தண்டிக்கப்படக் கூடாது என்பது நோக்கம். மாநில சபையின் தீர்மானத்தின்மேல் மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் பொதுவாகப் புது அகில இந்தியப் பணிகளை (All India Services) ஏற்படுத்தலாம். (அதாவது இந்தியன் சிவில் சர்வீசு, இந்தியன் போலீஸ் சர்வீசு இவைகள் தவிர்த்து). மாநிலங்களின் உறுப்பினர்கள் இடம் பெறும் மாநில சபையின் அனுமதியின்றிப் புது அகில இந்திய

சர்வீசுகளை உண்டாக்கக்கூடாது என்றபடி, இது மாநிலங்களின் சுய ஆட்சியைப் பாதுகாக்கவேண்டிச் செய்யப்பட்ட நிபந்தனை ஆகும். இனி மத்திய அரசுக்கோ, மாநில அரசுக்கோ பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் அமைச்சரவை தலையிடக்கூடாதென்பதற்கு, ஆள் ஆய்வுக் கமிஷன்கள் மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இருத்தல் வேண்டும். அந்தக் கமிஷன்களுக்கு ஜனாதிபதி யூனியன் கமிஷன் உறுப்பினர்களையும், ஆளுநர்கள் மாநிலக் கமிஷன் உறுப்பினர்களையும் நியமிக்க அதிகாரம் உண்டு. கமிஷன் உறுப்பினர்களை நீக்கவோ தாற்காலிகமாக வேலையிலிருந்து ஒதுக்கிவைக்கவோ ஜனாதிபதிக்குத் (அல்லது ஆளுநருக்கு) தான் அதிகாரம் உண்டு. கமிஷன் உறுப்பினர்களின் சம்பளம் சட்டமன்ற வாக்குக்கு உட்பட்டதன்று. கமிஷன் அரசாங்கப் பணியாளர்களை நியமிப்பதற்குச் செய்யப்படும் விதிகளை அரசு வெளியிடுவதன்முன் தாம் பார்த்து ஆலோசனை கூற அவற்றிற்கு உரிமையுண்டு; ஒழுங்கு விசாரணைகளின்பேரிலும் தமது கருத்தைக்கூற உரிமையுண்டு. கமிஷன்கள் தமது அறிக்கைகளில் எந்த விஷயத்தில் அரசாங்கம் தமது கருத்துகளை நிராகரித்தது என்று வெளிப்படுத்த உரிமை உண்டு. கமிஷனின் ஆண்டு அறிக்கைகள் பாராளுமன்றத்திலும் மாநில சபைகளிலும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேற்கூறிய நிபந்தனைகள் அரசியல் பணியாளர்களை அரசியல் தலையிடுதலுக்கு உள்ளாக்காமல் காப்பாற்றவும், பணியாளர்கள் ஒழுங்கின்படி நிர்வாகத்தை நடத்தவும் ஏற்படுத்தப்பட்டன.

அமைச்சரவை ஆட்சியில் நீதிமன்றங்களும் நிர்வாகமும் அரசியல் சார்பின்றி, நடுவுநிலைமையில் தொழிற்பட அரசியல் அமைப்புத் தக்க ஒழுங்குகளையும் காப்புகளையும் கொண்டுள்ளது.

8. அரசியல் அமைப்புச் சட்டத்தில் அமைச்சரவை இலக்கணம்

அரசியல் அமைப்பு ஐந்தாம் பாகத்தில் நிர்வாகத்தைச் சட்ட மன்றத்தினின்றும் நீதித் துறையினின்றும் பிரித்து, ஜனுதிபதியுடனும் அட்டர்னி ஜெனரலுடனும் சேர்த்து, அமைச்சரவையை 'நிர்வாகம்' (Executive separate from the Judiciary and the Legislature) என்ற தலைப்பில் வைத்து, அந்த அவையின் இலக்கணம் கூறப்படுகிறது. அதேபோல் ஆறும் பாகத்தில் மாநில அமைச்சரவையைப்பற்றிக் கூறப்படுகிறது. பிரிவுகள் 74-ம், 75-ம் பின்வருமாறு கூறுகின்றன.

1. ஜனுதிபதிக்குத் தமது கடமைகளை நிறைவேற்றப் பிரதமர் தலைமையில் ஓர் அமைச்சரவை இருத்தல் வேண்டும்.
2. அமைச்சர்களால் ஜனுதிபதிக்கு ஆலோசனை கூறப் பட்டதா இல்லையா என்றும், கூறப்பட்டதாயின் என்ன ஆலோசனை கூறப்பட்டதென்றும் எந்த நீதிமன்றத்தாலும் விசாரிக்கப்படலாகாது.
3. பிரதமர் (Prime Minister) ஜனுதிபதியினுல் நியமிக்கப் படுவார்; மற்றைய அமைச்சர்கள் பிரதமரின் ஆலோசனையின்மீது ஜனுதிபதியால் நியமிக்கப்படுவார்கள்.
4. அமைச்சர்கள் ஜனுதிபதியின் மனஉவப்பின்படி பதவிகளை வகிப்பார்கள்.
5. அமைச்சரவை கூட்டாக மக்கள்சபைக்குப் பொறுப் புடையது.
6. அமைச்சர் பதவி ஏற்குமுன் ஜனுதிபதியால் பதவி யேற்பு மொழியும் (Oath of office), இரகசிய உறுதியும் அமைச்சரிடமிருந்து பெறப்படும்,

7. ஓர் அமைச்சர் தொடர்ந்து ஆறுமாத காலத்தில் இரண்டு சபைகளில் ஒருசபையிலும் உறுப்பினராக இல்லாமல் இருந்தால், அந்த ஆறுமாத காலம் முடிந்த வுடன் பதவியிலிருந்து நீக்கப்பட்டவராவார்.

8. அமைச்சர்களின் சம்பளம், படி இவை பாராளுமன்றம் அவ்வப்போது இயற்றும் சட்டப்படி தீர்மானிக்கப் படும்.

(அரசியல் அமைப்பு 'காபினெட்' (Cabinet) என்ற சொல்லை உபயோகிக்கவில்லை. கவுன்சில் ஆஃப் மினிஸ்டர்ஸ் (Councils of Ministers) என்ற தொடர்தான் சட்டப்படி உள்ளது. பொதுவழக்கில் கவுன்சில் ஆஃப் மினிஸ்டர்ஸ் என்பது காபினெட் என்ற சொல்லாலும் குறிக்கப்படும்.

9. ஜனாதிபதி அரசாங்கக் காரியங்களைச் சௌகரியமாக நடத்துவதற்கும், அந்தக் காரியங்களை அமைச்சர் களுக்குப் பிரித்துக் கொடுப்பதற்கும் விதிகளைச் செய்ய வேண்டும்.

10. அரசாங்கம் எடுக்கும் எல்லா நிர்வாக நடவடிக்கை களும் ஜனாதிபதியின் பேரால் எடுப்பதாகக் குறிப்பிடப் பட வேண்டும்.

11. உத்தரவுகளும் பத்திரங்களும் ஜனாதிபதியால் செய்யப் பட்ட விதிப்படி கையெழுத்திடப்படவேண்டும். அப்படி முறைப்படி கையெழுத்திடப்பட்டதை, அவை ஜனாதிபதியால் செய்யப்பட்டதல்ல என்று விவாதிக்க லாகாது.

12. பிரதமர், அமைச்சரவை யூனியன் நிர்வாகத்துக்குச் சம்பந்தப்பட்ட முடிவுகளையும், சட்டம் இயற்றுவதற்குச் செய்யப் படும் ஏற்பாடுகளைப்பற்றியும் ஜனாதிபதிக்குத் தெரிவிப்பது கடமையாகும். ஜனாதிபதி நிர்வாகத் தைப்பற்றியும் சட்டம் இயற்றும் ஏற்பாடுகளைப் பற்றியும் தகவல்களைக் கேட்பின் அவற்றைத் தருவதும் கடமையாகும். ஜனாதிபதி விரும்பினால் அமைச்சரவை முடிவு இல்லாவிட்டாலும், தனிப்பட்ட அமைச்சர் எடுத்த முடிவைப்பற்றியும் தகவல் தருவது கடமையாகும்.

ஆளுநரைப்பற்றிய கடமைகளும் மாநில நிர்வாகத்தைப் பொறுத்தமட்டில் ஏறக்குறைய ஜனாதிபதியின் கடமைகளைப் போலவே அரசியல் அமைப்பின் 163, 164, 166, 167 ஆம் பிரிவு களில் எழுதப்பட்டுள்ளன, ஆனால், அரசியல் அமைப்பின்படி

சில விஷயங்களில் ஆளுநர் தமது தனிப்பட்ட முடிவுக்கு விடப்பட்டிருப்பின், அந்த விஷயங்களில் அவருக்கு மாநில அமைச்சரவையின் ஆலோசனை தேவைப்படாது. எந்த விஷயம் தமக்கு விடுபட்ட விஷயமாகக் கருதப்படவேண்டு மென்பதில் ஆளுநர் முடிவே முடிவானது.

ஈண்டு ஒரு குறிப்புக் கவனிக்கத்தக்கது. எல்லா அமைச்சர் களும் காபினெட் அமைச்சர் நிலையினராக ஆகமாட்டார்கள். பிரதமரால் எவரெவர் காபினெட் அமைச்சர் எனக் குறிக்கப் பட்டு, ஜனாதிபதியால் அவ்வாறு நியமிக்கப்பட்டார்களோ அவர்கள்தாம் காபினெட் அமைச்சர்கள் (Cabinet Ministers). சிலர் காபினெட் அந்தஸ்து இல்லாமல் அமைச்சரவையில் இருப்பார்கள். அவர்கள் ஸ்டேட் மினிஸ்டர் (State Minister), டெபுடி மினிஸ்டர் (Deputy Minister) என்றவகையில் எண்ணப் பட்டுக் காபினெட்டுக்குள் இடம்பெறமாட்டார்கள். எனவே, எல்லா விஷயங்களும் கவுன்சில் ஆஃப் மினிஸ்டர்களால் கருதப் பட்டவை ஆகமாட்டா. நடைமுறையில் காபினெட் அமைச்சர்கள்தாம் ஜனாதிபதிக்கு ஆலோசனைகளைக் கூட்டாகத் தருபவர்கள். எல்லா அமைச்சர்கள்மீதும் ஜனாதிபதிக்கு மேற் பார்வை உண்டு.

இந்திய அரசியல் அமைப்பு எத்தனை காபினெட் அமைச்சர் கள் இருக்கலாம் என்று வரையறுக்கவில்லை. (இங்கிலாந்தில் மினிஸ்டர்ஸ் ஆஃப் கிரௌன் ஆக்டு, 1937, (Ministers of Crown Act, 1937 (U. K.) வெவ்வேறு அந்தஸ்துள்ள அமைச்சர் களின் எண்ணிக்கையையும், அவர்கள் மேல்சபை, கீழ்சபைகளில் எத்தனைபேர் இடம்பெறுவார்கள் என்பதையும் குறிக்கிறது.)

ஜனாதிபதியும் ஆளுநரும் முறையே சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெருவாரிக் கட்சியின் உறுப்பினர்களால் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரையே பிரதமராகவும், முதலமைச்சராகவும் நியமிப்பர். மற்ற அமைச்சர்கள் அரசு தலைவரால் (Head of State) நியமிக்கப்பட்டவர்கள் என்று கருதப் பட்டாலும், பிரதமரின் (Prime Minister)/முதலமைச்சரின் (Chief Minister) நம்பிக்கை இருக்கும் வரையில்தான் அவர்கள் அமைச் சர்களாக நீடிக்க முடியும். பிரதமர்/முதலமைச்சர் எக்காரணம் பற்றியோ ஒருவரை நீக்கவேண்டுமென்று கூறினால் ஜனாதிபதி/ ஆளுநர் அப்படியே செய்யவேண்டியவர்தாம். கட்சியிலோ நாட்டிலோ ஒருவர் அமைச்சராக நீடிக்கக்கூடாதென்று அழுத்த மான கருத்துத் தெரிவிக்கப்படினும், பிரதமரோ/முதலமைச்சரோ சொன்னால்தான் நீக்கப்படுவர். சில சமயங்களில் பிரதமரோ முதலமைச்சரோ ஓர் அமைச்சரைக் கைவிட மனமில்லை

யாயினும், பொதுக்கருத்துக்கு உடன்பட்டவராக வேண்டி யிருக்கும். (இம்மாதிரி அண்மை வரலாற்றில் நிகழ்ந்துள்ளது).

காபினெட்டுக்குத் (அமைச்சரவைக்கு) தலைமை தாங்குவது பிரதமர். அவர் தலைமைதாங்க இயலாத காலத்தில், உப பிரதமர் (Deputy Prime Minister) என்று ஒருவர் நியமிக்கப் பட்டிருந்தால் அவராவது அல்லது அமைச்சர்கள் வரிசையில் அடுத்த இடத்தைப் பெறுபவராவது தலைமை வகிப்பார். (இம் மாதிரி சர்தார் படேல், மவுலானா அசாத், கோவிந்த வல்லப பந்த், மொரார்ஜி தேசாய் தலைமை வகித்துள்ளார்கள்.) அமைச் சரவைக் கூட்டங்களுக்குக் குவோரம் (quorum) (கட்டாயமாக இருக்கவேண்டிய குறைந்த எண்ணிக்கை) கிடையாது. அமைச் சரவைக் கூட்டங்கள் புதுதில்லி இராஷ்டிரபவனில் கூடும். சாதாரணமாக வாரத்திற்கு ஒருமுறை கூடும். பாராளுமன்றத் தொடர்நிகழ்ச்சி இருக்கும் போதாவது அல்லது வேறு காரணம் இருந்தாலாவது இடையே கூடலாம். இது அவசரமாக உள்ள காரியத்தைப் பொறுத்தது. நிகழ்ச்சிநிரலும் (Cabinet Agenda) சம்பந்தப்பட்ட குறிப்புகளும் அமைச்சரவை கூடும் தினத்திற்கு முன் குறிப்பிட்ட சில தினங்களுக்குள் எல்லா அமைச்சர் களுக்கும் காபினெட் செயலகம் சம்பந்தப்பட்ட துறைச் செயலர்களிடம் இருந்து வாங்கிச் சேர்த்து அனுப்பப்படும். நிகழ்ச்சிநிரலில் இல்லாத பொருளைப் பிரதமர் அனுமதியின் பேரில் விவாதிக்கலாம். அமைச்சரவை இத்தனை மணிக் காலம் விவாதத்தில் செலவழிக்கும் என்று குறிப்பிடமுடியாது. சாதா ரணமாக, இரண்டு மணிக்குமேல் உட்காராது. காபினெட் அமைச்சர்கள்தாம் அமைச்சரவைக் கூட்டத்தில் சேர்ந்து கொள்ளலாம். (காபினெட் அமைச்சரல்லாத ஸ்டேட் அமைச்சர், டெபுடி அமைச்சர் இவர்கள் காபினெட் கூட்டத்திற்கு அழைக்கப்படுவதில்லை. தேவையானபோது கூப்பிடப்படலாம்; அல்லது சம்பந்தப்பட்ட காபினெட் அமைச்சர் வர இயலாத காலத்தில் சம்பந்தப்பட்ட ஸ்டேட் அமைச்சர் பதிலியாக வரலாம்). மாநில முதலமைச்சர்கள் அழைக்கப்படுவதில்லை. (ஏதோ சில சமயங்களில் கூப்பிடப் பட்டதுண்டு; அது சாதாரணம் அன்று.) சில சமயங்களில் ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றிய விஷயங்களை விவாதிக்க நேரிடின், திட்டக்கமிஷனின் (Planning Commission) உப தலைவரோ, உறுப்பினர்களோ கூப்பிடப்படலாம். சில நுட்ப மான விஷயங்கள் (டெக்னிகல், விஞ்ஞானப் பாதுகாப்பு விஷயங் கள் (Technical and Defence matters) விவாதிக்க நேரிடின், சம்பந்தப்பட்ட நிபுணர்கள் அழைக்கப்படுவதுண்டு. அவ்வாறே

அட்டர்னி ஜெனரலும் அழைக்கப்படலாம். சில சமயங்களில் விவாதிக்கப்படும் விஷயத்துக்குச் சம்பந்தப்பட்ட துறைச் செயலர் அழைக்கப்படுவதும் உண்டு. அவர்கள் தகவல் கொடுப்பதற்குமட்டும்தாம்; வேறு பங்கு எடுத்துக்கொள்வதற்கோ, தமது கருத்துகளைக் கூறுவதற்கோ வேண்டப்படுவதில்லை. காபினெட் முடிவுகள் (Cabinet decision) வாக்கு எடுத்து முடிவு செய்யப்படுவதில்லை. பிரதமர், அமைச்சர்களின் கருத்துகளை விமரிசனம் செய்து முடிவு கூறுவார். அது ஏகமனதாக ஒப்புக் கொள்ளப்படுவது ஆகும். வாக்கு எடுத்தால் அமைச்சரவையின் ஒற்றுமைக்குப் பங்கம் வந்தது போலாகும். காபினெட் முடிவுகளைக் காபினெட் செயலகம் சேகரித்து எல்லா அமைச்சர்களுக்கும் அனுப்பிவைக்கும். எல்லா முடிவுகளும் ரிகார்டுகளும் ரகசியம் (confidential) என்றே கருதப்படும். ஏதாவது ஒரு முக்கிய விஷயத்தைப்பற்றிக் காபினெட் விவாதித்தால், பிரதமர் அதனைப் பத்திரிகையாளர்களுக்குக் கூறலாம். இது தப்புத் தகவல்கள் பரவாமலிருப்பதற்கும், பத்திரிகையாளர்கள் மற்ற அமைச்சர்களைத் தகவல் கொடுக்கு மாறு வற்புறுத்தாதவாறு தவிர்ப்பதற்குமாகும். இதைப்பற்றித் திட்டமான விதி கிடையாது. சந்தர்ப்பத்தையொட்டி பொது நன்மைக்கு எது நல்லதோ, அமைச்சரவையில் கருத்து வெளியாவது எது சரி என்று கருதப்படுகிறதோ அது அவ்வாறு முடிவு செய்யப்படும்.

காபினெட்டில் எந்த விஷயங்கள் கட்டாயம் விவாதிக்கப்பட வேண்டுமென்பதற்கு விதிகள் உண்டு. மற்றவை தனிப்பட்ட அமைச்சர் வேண்டினாலோ, பிரதமர் அவ்வாறு விரும்பினாலோ தாம் விவாதிக்கப்படும். ஜனாதிபதியும் சில விஷயங்கள் காபினெட்டில் வைக்கப்படவேண்டும் என உத்தரவிடலாம். அப்படி உத்தரவான பொருள்களின் பட்டியல் சம்பந்தப்பட்ட துறைச் செயலர், காபினெட் செயலகத்துக்கு அப்போதைக்கப்போது தெரிவிப்பார். அந்தப் பொருள்கள் எல்லாம் சேர்ந்ததுதான் காபினெட்டின் ‘அஜெண்டா’ (Cabinet Agenda). ஒவ்வொரு பொருளுக்கும் சம்பந்தப்பட்டசெயலர் தெளிவான குறிப்பெழுதிச் சம்பந்தப்பட்ட அமைச்சரின் பார்வைக்கு வைத்தபின், போதுமான பிரதிகள் செய்து காபினெட் செயலருக்கு அனுப்புவார். சாதாரணமாக, வரவுசெலவுத் திட்டம் (Budget) காபினெட்டில் வைக்கப்படுவதில்லை. அதை நிதி அமைச்சரும் பிரதமருமே முடிவு செய்வார்கள். ஆனால், கொள்கை அளவில் பாதிக்கக் கூடிய சில விஷயங்கள் வரவுசெலவுத் திட்டத்தில் வருமாகில், அந்த விஷயங்கள்மட்டும் முன்னதாகவே காபினெட்டில்

வைக்கப்பட்டு ஆலோசிக்கப்படும். காபினெட்டுக்கு வைக்கப் படும் குறிப்புகள், பிரச்சினைகளின் முன்வரலாறு, அதைப்பற்றிச் சம்பந்தப்பட்ட துறைகளின் கருத்துகள், பிரச்சினைகளுக்குச் சம்பந்தமான சட்டங்கள், விதிகள், கடைசியாகக் காபினெட் முடிவு எடுக்க வேண்டிய விஷயங்கள் இன்னின்னவை என்பதன் சுருக்கம் (points for orders) இவைகள் சுருக்கமாக எழுதப்பட வேண்டும். காபினெட் விவாதங்களெல்லாம் சுருக்கெழுத்திலோ சுருக்கமாகவோ எழுதி ரிகார்டு செய்யப்படுவதில்லை. முடிவுகள் மட்டும்தாம் எழுதப்படும். அவை பிரதமரின் பார்வைக்கு வைக்கப்பட்டபின், மற்றைய அமைச்சர்களுக்கு அனுப்பப்படும். அதனுடைய கருத்து அமைச்சர்கள் முடிவு இன்னதென்பதைத் தெளிவாக அறிவதற்கும், மேல் நடவடிக்கை எடுக்க ஆயத்த மாக இருக்கவேண்டும் என்பதற்குந்தான்.

அமைச்சரவை தனக்குள்ளேயே முக்கியமான விஷயங் களைப் பரிசீலனை செய்ய (முடிவு எடுக்க அன்று) குழுக்கள் (Cabinet Committees) ஏற்படுத்திக் கொள்ளலாம். அத்தகைய குழுக்களில் சில பின்வருமாறு : வெளிநாட்டு விவகாரங்கள் (Foreign Affairs), பொருளாதார விவகாரங்கள் (Economic Affairs), பாதுகாப்பு (Defence Matter), அகதிகள் புனர்வாழ்வு (Rehabilitation), பார்லிமென்டரி விவகாரங்கள் (Parliamentary Affairs) முதலியன. சில குழுக்கள் குறிப்பிட்ட விஷயங்களைப் பரிசீலிப்பதற்கு ஏற்படுத்தப்பட்டு அதோடு முடிந்துவிடலாம். வெளிநாட்டு விவகாரங்கள்போன்ற குழுக்கள் நிரந்தரமானவை. அண்மைக் காலத்தில், மாநில முதலமைச்சர்களின்மீது கூறப் பட்ட ஊழல் வழக்குகளைப் பரிசீலிக்கக் குழுக்கள்(Vigilance Committees) ஏற்படுத்தப்பட்டன. இந்தக் குழுக்களின் இன்றியமை யாமை, முழுக் காபினெட்டில் காலத்தைச் சிக்கனப்படுத்து வதற்குத்தான். எல்லாத்தகவல்களையும் குழு முன்பே பரிசீலித்து விட்டுப் பிரச்சினைகளைத் தெளிவுபடுத்திவிட்டால், காபினெட் சிரமமில்லாமலும், தள்ளிப்போடாமலும் முடிவு எடுக்கலாம். [1962ஆம் ஆண்டில் சீனப் படையெடுப்பின்போது ஆறு உறுப்பினர்கள் கூடிய அவசரக் (Emergency) காபினெட் குழு ஏற்படுத்தப்பட்டது. இது ஜவஹர்லால் நேரு காலத்தில். (இங்கி லாந்தில் லாயிட்டு ஜியார்ஜ் காலத்தில் போர்க் காபினெட் -War Cabinet- என்ற உள் காபினெட்டே எல்லா விஷயங்களையும் சமாளித்து வந்தது.) இம்மாதிரி அவசரக் குழுக்கள் ஏற்படுத் தும்போது மற்றைய குழுக்களுக்கு முக்கியத்துவம் குறைந்து விடலாம். ஆனல், நெருக்கடிகாலத்தில் பிரதமர் எந்த நாட்டிலும் எல்லாக் காபினெட் உறுப்பினர்களையும் கூட்டி

ஆலோசிப்பது ஆகாத காரியம். இதனுல் பெரும்பாலும் கருத்துவேறுபாடோ ஒற்றுமையின்மையோ நேரிடுவதில்லை].

அமைச்சரவை வேலைகளைக் கவனிப்பதற்கு ஒருவிதமான செயலகம் வெகுநாள்களாகவே இருந்துவந்துள்ளது. அது இப்போது காபினெட் செயலகம் (Cabinet Secretariat) என்று கூறப்பட்டு அதற்குத் தனிச் செயலாளரும் நியமிக்கப்பட்டுள்ளார். பழைய காலத்தில் வைசிராயின் அந்தரங்கச் செயலாளர் எக்சிகியூடிவ் கவுன்சிலின் வேலைகளைக் கவனித்து வந்தார். ஆனுல், 1935 வரை அவர் எக்சிகியூடிவ் கவுன்சிலின் கூட்டங்களில் உட்காருவது இல்லை. அதன் பின்பு அந்தரங்கச் செயலாளர் அவ்வாறு உட்கார்ந்தார். (இது வில்லிங்டன் -Lord Willington- காலத்திலிருந்து ஏற்பட்டது). இந்திய விடுதலைக்குப்பின் எக்சிகியூடிவ் கவுன்சில் செயலாளரே காபினெட் செயலாளர் (Cabinet Secretary) என்று அழைக்கப்பட்டு, அந்த ஸ்தானம் தொடர்ந்து வருகிறது. இந்தக் காபினெட் செயலகம் காபினெட்டின் வேலைகளையும் காபினெட் குழுக்களின் வேலைகளையும் கவனிக்கிறது. இந்தச் செயலகம் பிரதமரின் நேர் அதிகாரத்தின்கீழ் இயங்குகிறது. இந்தச் செயலகத்தின் எல்லைக்குள் அமைப்புமுறைக் கிளை (Organisation and Methods Wing-O & M), இராணுவக் கிளை (Military Wing), பொருளாதாரக் கிளை (Economic Wing), மத்தியப் புள்ளி விவர அமைப்பு (Central Statistics Organisation) உள்ளன.

காபினெட் செயலகத்தின் வேலைகளையும் செயல்முறைகளையும் அந்தந்தப் பிரதமர் விருப்பப்படி அமைத்துக் கொள்ளலாம். (நேருவுக்குப் பின் லால்பகதூர் சாஸ்திரி சிறிய மாறுதல்கள் செய்தார்.) திருமதி இந்திரா காந்தி பிரதமர் ஆன பின்பு உத்தியோகஸ்தர்கள் நியமனம் முதலிய விஷயங்கள் பற்றிய விவகாரங்களை (personnel) காபினெட் செயலகத்தில் சேர்த்து விரிவு செய்துள்ளார். திட்டக்கமிஷனைப் (Planning Commission) பொறுத்த காரியங்களும் இப்போது இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

அமைச்சரவையில் அதில் சேர்க்கப்படாத அமைச்சர்களும் சேர்ந்து எத்தனை பேர் இருக்கவேண்டுமென்பதும், ஸ்டேட் அமைச்சர்களின் அந்தஸ்து முதலியவையும் சாதாரணமாக விளக்கம் பெறுவதில்லை. அவைகளைப்பற்றிச் சிறிது கூறுவோம். அரசியல் அமைப்பில் (Constitution) இதைப் பற்றி நிபந்தனைகள் ஒன்றும் இல்லை. ஆனுல், அமைச்சரவை

ஏற்படுத்தும்போது யாரைச் சேர்ப்பது யாரை விடுவது என்ற பிரச்சினை, பிரதமர் நிர்வாகத்தைத் தொடங்குமுன் தீர்க்க வேண்டியதொன்றாகும். பிரதமர் பல கோணங்களிலிருந்து இந்தப் பிரச்சினையை நோக்கவேண்டும். முதலில், அரசியல் கண்ணோட்டத்தில் எல்லா அரசியல் உட்குழுக்களையும் திருப்தி செய்தல் அவசியமாகும். நிர்வாகத்தைப் பொறுத்தமட்டில் எல்லாப் பிரதேசங்களும் ஏறக்குறைய இடம்பெறுமாறு அது அமையவேண்டும். இதைவிட முக்கியமானது பல்வேறு ஜாதியார் (இந்து, முஸ்லிம், கிறித்துவர், சீக்கியர், ஷெட்யூல் வகுப்பினர்) கூடுமானவரை இடம் பெறவேண்டும். இந்திய அரசியல் அமைப்பில் ஷெட்யூல் வகுப்பினர்கட்கும் ஆதி ஜாதியார்க்கும் அமைச்சரவையில் இடம் தரவேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படாவிட்டாலும், அவர்கள் நலனுக்காக ஒருவரை நியமித்தல் வழக்கம். எல்லாவற்றையும்விட அரசியல் விவேகமும், முதிர்ச்சியும், பல துறைகளில் அறிவுமுள்ளவர்கள் இடம் பெறல் அத்தியாவசியமாகும். சுதந்திரத்திற்குமுன் வைசிராயின் எக்சிகியூடிவ் கவுன்சிலில் மிகக் குறைந்த எண்ணிக்கை உடையவரே இருந்தனர். 1939-ல் 7 பேர்தாம் இருந்தார்கள். பின்னுல் 15 பேர் ஆனுர்கள். 1946-ல் இருந்த இடைக்கால அமைச்சர்கள் ஏறக்குறைய இவ்வளவு பேர் இருந்தார்கள். இங்கிலாந்திலும் இந்தப்பிரச்சினை உண்டு. அங்கே பொதுவான கருத்து அதிகப்பட்சம் மொத்தம் 20 பேர்தாம். அடக்கமான எண்ணிக்கையாயிருந்தால் பிரதமர் அமைச்சர்களைச் சந்திப்பதும், ஆலோசனை பெறுவதும் எளிதாக இருக்கும். எனினும் பலதிறப்பட்ட வேட்பாளர்களின் விண்ணப்பங்களை ஒருவாறு நிறைவேற்றியாக வேண்டும். 1950-ல் இந்தியா குடியரசு ஆனபோது 14 காபினெட் அமைச்சர்கள், 4 ஸ்டேட் அமைச்சர்கள், 2 டெபுடி அமைச்சர்கள் இருந்தார்கள். 1957 தேர்தலுக்குப்பின் 13 காபினெட் அமைச்சர்கள், 14 ஸ்டேட் அமைச்சர்கள், 12 டெபுடி அமைச்சர்கள் இருந்தார்கள். 1962 தேர்தலுக்குப் பின் 17 காபினெட் அமைச்சர்கள், 12 ஸ்டேட் அமைச்சர்கள், 22 டெபுடி அமைச்சர்கள் இருந்தார்கள். 1967 தேர்தலுக்குப் பின் 16 காபினெட் அமைச்சர்கள், 18 ஸ்டேட் அமைச்சர்கள், 17 டெபுடி அமைச்சர்கள் இருந்தார்கள். 1971 இடைத் தேர்தலுக்குப்பின் 13 காபினெட் அமைச்சர்கள், 22 ஸ்டேட் அமைச்சர்கள், 17 டெபுடி அமைச்சர்கள் இருந்தனர்.

1962ஆம் ஆண்டில் லோக்சபையில் அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஆனுல் அது ஏற்கப்படவில்லை. (மாநில

அமைச்சரவையின் பெருக்கம் மத்திய அமைச்சரவையைவிடச் சில மாநிலங்களில் அதிகமாயிற்று).

ஸ்டேட், டெபுடி அமைச்சர்களின் (State and Deputy Ministers) அத்தியாவசியத்தைச் சிறிது கவனிப்போம். 1952-ல் அமைச்சரவை புனரமைப்புப்பெற்றபோது பல அமைச்சர்களைக் காபினெட் அமைச்சர்களாகச் சேர்க்க வேண்டியிருந்தது. சில நிர்வாகத் துறைகளில் ஒரு துறையில் இரண்டு காபினெட் அமைச்சர்கள் இருந்தார்கள். ஏனெனில், ஒரே துறையில் இரண்டு மூன்று முக்கிய இலாகாக்கள் சேர்க்கப்பட்டன (உ-ம். உணவு, விவசாயம்). ஸ்டேட் அமைச்சர் என்ற பேர் நீக்கினதால் குளறுபாடு உண்டாயிற்று. எனவே, 1957 தேர்தலுக்குப்பின் காபினெட், ஸ்டேட், டெபுடி என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டனர். டெபுடி அமைச்சர்கள் பதவி, வயதில் சிறியவர்களுக்கு அமைச்சர் கடமைகளில் பயிற்சி தருவதற்காக ஏற்படுத்தப்பட்டது எனலாம். ஆனால், அமைச்சர் பதவிப் போட்டியில் வயதானவர்களும் டெபுடி அமைச்சரானார்கள். காபினெட் அமைச்சர்கள் தங்களது டெபுடி அமைச்சர்களை நிர்வாக வேலைகளில் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். ஆனால், டெபுடி அமைச்சர்கள், நிரந்தரத் துறைச்செயலாளர்கள் (Permanent Secretary) வேலையைச்செய்ய முடியாது. டெபுடி அமைச்சர்கள் தங்கள் தலைவர்களுக்குப் பதிலாகப் பாராளுமன்றத்தில் கேள்விகளுக்குப் பதில் அளிக்கலாம். நிர்வாக வேலைகள் மட்டுமன்றி, அரசியல் வேலைகட்கும் அவர்களை உபயோகித்துக்கொள்ளலாம். பொதுவாகப் பொறுப்பைப் பகிர்ந்து கொடுப்பதை யாரும் விரும்புவதில்லை. சில சமயங்களில் டெபுடி அமைச்சர் பதவி பொதுவாக அரசியலில் செய்த பணிகளுக்குப் பிரதி உபகாரமாகக் கொடுக்கப்பட்ட வேலைகளாகத்தாம் இருக்கும். ஸ்டேட் அமைச்சர்கள் பிரத்தியேகமான துறைகளுக்குத் தலைவர்கள்தாம். இருப்பினும் காபினெட் அந்தஸ்து அவர்கட்கு இல்லை. இங்கிலாந்தில் ஸ்டேட் மினிஸ்டர், காபினெட் மினிஸ்டருக்கு உதவியாளர்தாம். எனவே, இரண்டாம் தர அந்தஸ்துதான். காபினெட் மினிஸ்டரைவிடச் சம்பளம் சிறிது குறைவு. ஆனால், காபினெட்டுக்குள் சேர்க்கப்பட்டவர். பொதுவாகப் பெரிய துறைகளைப் (portfolio) பெற்றுள்ள அமைச்சர்கள் காபினெட் அமைச்சர்களாகவும், தனித்துறைக்குத் தலைமையுடையவராயினும், சிறிய துறையாயின் ஸ்டேட் அமைச்சர்களாகவும் இருத்தல் என்பது வழக்கு. காபினெட் கமிட்டிகளில் பெரும்பான்மையாகக் காபினெட் அமைச்சர்களே இடம்பெறுவதால், ஸ்டேட் அமைச்சர்களின்

அந்தஸ்து சிறிது குறைவே; டெபுடி அமைச்சர்களைவிட அதிக அதிகாரம் உடையவர்கள் ; பாராளுமன்றத்தில் காபினெட் அமைச்சர்களுக்கு ஒத்த பொறுப்பு இவர்கட்கு இருக்கின்றன.

இந்த அத்தியாயத்தை முடிக்குமுன் இந்தியக் காபினெட் அமைச்சரவையின் சில முக்கிய அம்சங்களைக் கூறுவோம். இவை பிற நாட்டின் அம்சங்களுக்கு வேறுபட்டவை. இந்தியக் காபினெட் சபையில் லோக்சபை, இராஜ்ஜியசபை இவற்றில் உறுப்பினரல்லாதாரும் அமைச்சராக நியமிக்கப்படலாம். ஆனால், ஆறு மாதங்களுக்குள் இரண்டில் ஒன்றுக்கு அவர் தேர்ந்தெடுக்கப்படவில்லையானால், அந்தக் காலவரம்புக்குப் பின்பு அமைச்சராக நீடிக்க முடியாது. இராஜ்ஜிய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர் இரண்டு சபைகளிலும் விவாதங்களில் பங்கு கொள்ளலாம். ஆனால், எந்தச் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டாரோ, அந்தச் சபையில்தான் விவாதங்களில் வாக்களிக்க உரிமையுண்டு. இந்தச் சலுகைகளால் காபினெட் அவையில் சேர்க்கக்கூடியவர்களை ஆய்ந்தெடுப்பது கொஞ்சம் சுலபம். இங்கிலாந்தைப்போல் மேலவையில் குறைந்தளவு அமைச்சர் எண்ணிக்கை இருக்கவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்கும் மற்றொரு வேறுபாடு, இங்கு அட்டர்னி ஜெனரலைத் (Attorney-General) தவிர்த்துத் தனியாக நிதிஅமைச்சர் உள்ளார். அட்டர்னி ஜெனரல் அமைச்சரவையின் சட்ட ஆலோசகராயினும் அவருக்குக் கீழ்ச்சபையிலாவது மேல்சபையிலாவது இடம் இல்லை. (ஆனால் வேண்டியபோது சட்டவிளக்கம் தர அழைக்கப்படலாம்.)

அமைச்சரவைக்கும் ஜனாதிபதிக்கும் உள்ள சம்பந்தத்தை (Relations between the President and the Parliament) அரசியல் அமைப்பு விரிவாகக் கூறவில்லை. அமைச்சரவை ஜனாதிபதிக்கு யோசனைகூறும் அளவோடு நின்றுவிடுகிறது. அமைச்சரவை என்ன ஆலோசனை கூறிற்று என்று கேட்கச் சட்ட உரிமை இல்லாததால் ஜனாதிபதி அமைச்சரவையின் ஆலோசனைக்கு மாறாகவும் நடந்துகொள்ளலாம். அதைப்பற்றிக் கேள்வி கேட்கவும் அறிந்து கொள்ளவும் உரிமை இல்லை. இங்கிலாந்தில் மன்னர் (அரசி) அமைச்சரவையின் ஆலோசனைப்படியே நடக்க வேண்டுமென்ற கட்டுப்பாடு உள்ளது. அதைப்போன்ற கட்டுப்பாட்டைக் காரணம்கொண்டே இந்திய அரசியல் அமைப்பு விட்டுவிட்டது என்று ஊகிக்கவேண்டும். ஆனால், அமைச்சரவை ஆலோசனைப்படியே நடக்க வேண்டியது

நடைமுறை வழக்கு என்பது உட்கிடை. அமைச்சரவை ஏதாவது ஒரு சட்டத்தை, நெறிசெய் நியதிகள் (Directive Principles) ஆதரவுகொண்டு குடிகளின் அடிப்படை உரிமைகளைப் (Fundamental Rights) பாதிக்குமாறு இயற்றும்போது சம்பிரதாயத்துக்குட்பட்டு ஜனாதிபதி வாளா இருந்துவிட்டால், அரசியல் அமைப்புக்கு மீறின இழுக்குச் சேரும். எனவே, அமைச்சரவை ஜனாதிபதிக்கு அந்த வில்லங்கம் வராதவாறு நடந்துகொள்ளுதல் வேண்டும்.

ஜனாதிபதி அமைச்சரவையின் ஆலோசனைப்படியே நடக்க வேண்டுமென்பதுதான் அரசியல் அமைப்பு வரைந்தவர்கள் எண்ணம் என்று பொதுவாகக் கூறப்படும். அதனால்தான் ஜனாதிபதியை நேரிடைத் தேர்தல் இல்லாமல், பாராளுமன்றமும் மாநிலச் சட்டமன்றங்களும் சேர்ந்து தேர்ந்தெடுக்க வேண்டுமென்று அமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு காரணம். மற்றொன்று, 1935ஆம் ஆண்டு இந்தியச் சட்டத்தில் (Government of India Act, 1935) கவர்னர் ஜெனரலுக்குத் தமது சொந்தத் தீர்ப்பாலும் இச்சையாலும் சில முடிவுகள் செய்யலாம் என்ற ஷரத்துக்களைப் புது அரசியல்அமைப்பில் விலக்கிவிட்டபடியால், அம்மாதிரி அதிகாரங்கள் வேண்டியதில்லை என்றும் கூறுவர். மேலும், பார்லிமென்டின் இறைமையைத்தான் அமைச்சரவை பிரிதிபலிப்பதால், ஜனாதிபதிக்கு வேறு இறைமை அதிகாரம் தருவது முரண் என்றும் கருதுவர். அப்படி இரண்டு அதிகாரங்கள் இருப்பின் முட்டுக்கட்டை (Deadlock) ஏற்படக்கூடும். அது அரசியல் அமைப்பையே பாதிக்கும். தவிர, ஜனாதிபதி அதிகாரத்தால் ஒரு காரியம் தீர்வுசெய்யப்பட்டால் பாராளுமன்றம் அமைச்சரவையையே பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டுமென்பது முறையாகாது. ஆகக்கூடிப் பாராளுமன்றத்தின் இறைமைக்கும் பலம் குறைந்துவிடும். ஜனாதிபதி, பெருவாரிக் கட்சியினர் தேர்ந்தெடுத்ததற்கிணங்க அதன் தலைவரைப் பிரதமராக நியமிக்கிறார். பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டுமென்றாலும், பிரதமரின் ஆலோசனைப்படியே செய்யவேண்டும். தம் சொந்தப் பொறுப்பில் எந்த ஜனாதிபதியும் பாராளுமன்றத்தைக் கலைக்க எண்ணமாட்டார். பிரதமருடன் முரண்பட்டு அப்படிச் செய்யத் தலைப்படுவாராயின், மீண்டும் அந்தப் பிரதமரே வெற்றிபெற்று அமைச்சரவை அமைப்பதற்குத் தகுதியுடையவரானால், அது ஜனாதிபதியின் முடிவு சரியன்று என்று ஆகிவிடும். பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு இசைவுதரும் விஷயத்திலும் ஜனாதிபதி தமது சொந்தக் கருத்துகளைச் செலுத்த இயலாது. (இந்து லா மசோதாவைப் -Hindu

Law Bill- பற்றி ஜனுதிபதி இராஜேந்திர பிரசாத் வேறு கருத்துடையவராக இருந்தாலும், மசோதாவைத் திருப்பிவிடவில்லை.) இந்தச் சம்பிரதாயம் ஏறக்குறைய இங்கிலாந்தில் அரசிக்கும் அமைச்சரவைக்குமுள்ள சம்பந்தம்போலவே, அரசியல் அமைப்புத் தொடக்க நாளிலிருந்து இற்றைநாள்வரை வந்துள்ளது. அதனுல் இடர்ப்பாடுகள் ஒன்றும் வரவில்லை. அரசியல் அமைப்புச் சபை அரசியல் அமைப்பு நகல் வரைவில் ஜனுதிபதி அமைச்சரவையின் ஆலோசனைப்படியே நடக்க வேண்டுமென்று ஒரு குறிப்புவிதி (Instrument of instruction) சேர்க்க வேண்டுமென்று கருதியது. ஆனுல் அதைக் கைவிட்டது. ஜனுதிபதி அமைச்சரவையின் ஆலோசனைகளை ஏற்கவேண்டுமென்பதற்கு உடனடியாக இயந்திரரீதியாக ஏற்கவேண்டுமென்பது பொருள் அன்று என்று சிலர் கருதுவர். ஜனுதிபதி தமது கருத்தை அந்தரங்கமாகப் பிரதமருக்குத் தெரிவித்து மீண்டும் பரிசீலிக்கக் கேட்பதற்குத் தடையில்லை என்றும் கருதுவர். (ஆனுல், அவசரக் காரியங்களில் இது ஆகாது.) அமைச்சரவையின் கடைசி யோசனைக்கு உட்பட்டவர் ஜனுதிபதி என்பதில் ஐயமில்லை. இந்தச் சம்பந்தத்தை அரசியல் அமைப்பு வெளிப்படையாக எழுதவில்லை என்ருலும் அதுதான் உண்மை. ஆனுல், சிலர் ஜனுதிபதி பாராளுமன்றத்தாலும், மாநிலச் சட்டமன்றங்களாலும் சேர்ந்து தேர்ந்தெடுக்கபட்டதால், மாநிலங்களின் உரிமைகளைக் காக்க ஜனுதிபதிக்குச் சொந்த அதிகாரம் இருக்கவேண்டும் என்று கருதுவர்; இல்லையேல் பிரதமர் மாநிலச் சட்டமன்றங்களுக்கும் உத்தரவாதம் ஏற்கவேண்டியதாகும்; இந்திய அரசியல்அமைப்பு, ஃபெடரேஷன் இல்லாமல் யூனிடரி ஆகிவிடும் என்றும் கூறுவர். ஜனுதிபதிக்கு உண்மையிலேயே அமைச்சரவைக்கு அப்பாற்பட்ட அதிகாரம் உள்ளதென்றும், 61ஆம் பிரிவிலிருந்து ஊகிக்கலாம் என்றும் கூறுவர். இந்த விவாதம் வலுப்படவில்லை. இருதிறக் கருத்துகளின் இடையே ஜனுதிபதி அமைச்சரவை ஆலோசனையைச் சட்டத்துக்கு விரோதமில்லாமல் நிறைவேற்றுவார் என்பதுதான் ஒப்ப முடிந்த முடிபு ஆகும்.

9. சுதந்திரத்திற்கு முன் இடைக்கால அமைச்சரவை

இந்தியா சுதந்திரம் அடைந்தபின் இப்போதுள்ள (ஏப்ரல் 1972) அமைச்சரவை உட்பட ஆறு அமைச்சரவைகள் ஏற்பட்டுள்ளன. முதல் அமைச்சரவை 1947 ஆகஸ்டு 15-ல் சுதந்திர தினத்தன்று ஏற்பட்டது. இரண்டாவது, 1950 ஜனவரி 26-ல் இந்தியா குடியரசு ஆன தினத்தன்று ஏற்பட்டது. மூன்ருவது, நாலாவது, ஐந்தாவது அமைச்சரவைகள் முதல், இரண்டாம், மூன்ரும் பொதுத்தேர்தலுக்குப்பின் 1952 மே 13, 1957 ஏப்ரல் 15, 1962 மே 12-ல் ஏற்பட்டன. இந்த அமைச்சரவைகட்கு ஜவஹர்லால் நேரு பிரதமராக இருந்தார். ஆருவது அமைச்சரவை நேரு இறந்தபின் 1964 ஜூனில் லால்பகதூர் சாஸ்திரி தலைமையில் ஏற்பட்டது. (இடைக்காலத்தில் குல்ஜாரிலால் நந்தா சிறிதுகாலம் தாற்காலிகப் பிரதமராக இருந்தார்.) சாஸ்திரி இறந்தபின் திருமதி இந்திரா காந்தி தலைமையில் 1966 ஜனவரி 24-ல் அமைச்சரவை ஏற்பட்டது. 1967 பொதுத் தேர்தலுக்குப்பின் இந்திரா காந்தி தலைமையிலேயே அடுத்த அமைச்சரவையும் ஏற்பட்டது. 1971 செப்டம்பர் இடைக்காலத் தேர்தலுக்குப்பின் மீண்டும் இந்திரா காந்தி தலைமையிலேயே இப்போதுள்ள அமைச்சரவை ஏற்பட்டது. கடைசியில் கூறிய அமைச்சரவை காங்கிரசுக் கட்சி பிளவு பட்ட பிறகு அமைந்தது.

சுதந்திர இந்தியாவில் அமைச்சரவை ஏற்படுமுன் இடைக்கால அமைச்சரவை எந்த முறையில் அமைச்சரவை இலக்கணங்களை உருவாக்கியது என்று சிறிது கவனிப்போம். 1935ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி கவர்னர் ஜெனரலின் கவுன்சில் இந்தியா செக்ரடரியால் கொடுக்கப்பட்ட அதிகாரங்களையே செலுத்திவந்ததெனக் கூறினேம். அந்த நிர்வாக சபைக்கு

அமைச்சரவை இலக்கணங்கள் இல்லை. அது சட்டமன்றத்தின் பிரதிநிதியுமன்று; சட்டமன்றத்துக்கு முழுப் பொறுப்புடையதும் அன்று. உத்தியோகஸ்தர்கள் அல்லாத ஒருவர் கவுன்சில் உறுப்பினராக நியமிக்கப்பட்டால், அவர் சட்டசபை உறுப்பினராய் இருப்பதிலிருந்து நீங்கவேண்டும். நிர்வாகசபை கவர்னர் ஜெனரல் தலைமையில் இயங்கினாலும், அதிகாரம் இந்திய செக்ரடரியினது (Secretary of State for India) தான். அரசியல், பொருளாதார, நிர்வாக நடவடிக்கைகள் எல்லாம் செக்ரடரி ஆஃப் ஸ்டேட் இட்ட வழியில்தான் நடத்தப்படவேண்டும். நிர்வாகசபை ஒரே குணாதிசயமுடையதுமன்று. சிலர் இந்தியா செக்ரடரியால் அமைக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள்; சிலர் உத்தியோகச் சார்பில்லாத இந்தியர்கள். இருதிறத்தார்க்கும் ஒரேமாதிரி மனப்பான்மை இருக்கமுடியாது. எக்சிகியூடிவ் கவுன்சில் அந்தச் சமயத்தில் 6 உறுப்பினர்களை உடையதாயிருந்தது. சேனாதிபதி (Commander-in-Chief) நீங்கலாக மூவர் பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள்; மூவர் இந்திய அரசியல்வாதிகள். இந்தக் கவுன்சிலைப் பெரிதாக்க முயற்சிக்கப்பட்டது. 1941-ல் ஐந்து இந்தியர்கள் அதிகப்படி உறுப்பினர்களாக அமர்த்தப்பட்டார்கள். பாதுகாப்பு, நிதி, உள்நாட்டு விவகாரங்கள் ஆகியவை பிரிட்டிஷ் உறுப்பினர்கள் கையிலேயே இருந்தன. 1946ஆம் ஆண்டில் இந்திய தேசியக் காங்கிரசும் முஸ்லிம் லீகும் பிரிட்டிஷ் அரசாங்கம் அரசியல் அமைப்பை எழுத ஏற்பாடுகள் செய்யப்போவதை ஒப்புக்கொண்ட பிறகு தான், உண்மையிலேயே ஓர் அரசியல் ரீதியாக அதாவது உத்தியோகஸ்தர்கள் மாதிரி இல்லாத (Political and not official) அமைச்சரவையை அமைக்க வாய்ப்புக் கிட்டியது. இருகட்சிச்சார்பிலும் எத்தனைபேர் சேர்க்கப்பட வேண்டுமென்ற சச்சரவு தலைப்பட்டது. 1946 செப்டம்பரில் காங்கிரசுப் பிரதிநிதிகள் மட்டும் சேர்ந்தார்கள். பின் முஸ்லிம் பிரதிநிதிகளும் சேர்ந்தார்கள். தாங்கள் சேர்வதற்கு நிபந்தனையாக இந்த அவைக்குக் காபினெட் (Cabinet) என்று பெயரிடவேண்டும் என்று காங்கிரசு வற்புறுத்தியது. இந்தக் கவுன்சிலும் அமைச்சரவை (காபினெட்) போல் இயங்கவேண்டும் என்று இருசாராரும் கவர்னர் ஜெனரலும் ஒப்புக்கொண்டார்கள். இந்தச் சம்பவத்தை இந்தியாவில் காபினெட் பிறந்த கதையின் தொடக்கம் எனக் கூறலாம்.

முழு அதிகாரம் காபினெட்டுக்கு மாற்றப்படும் என்ற முறையில் வைசிராய் தாமே பார்த்துவந்த வெளிநாட்டு விவகாரங்களும், சேனாதிபதி பார்த்துவந்த பாதுகாப்புத் துறையும் இந்தக்

கவுன்சிலர்கள் கையிலேயே ஒப்படைக்கப்பட்டன. (இந்த உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல ரென்றும், காங்கிரசு-முஸ்லிம் லீக்கினால் நியமிக்கப்பட்டவர்கள் என்றும் நினைவுகொள்ள வேண்டும்). இந்த இடைக்கால அரசாங்கத்தில் 18 துறைகள் (Departments) இருந்தன. வைசிராய் பிரிட்டிஷ் முடியரசின் பிரதிநிதியாக இந்திய மன்னர்களுடன் நேரிடைத் தொடர்பு வைத்திருந்தாலும், வரப்போகும் இந்தியக் கூட்டாட்சி அமைப்பிற்குள் அவர்கள் வர, இந்திய மன்னர்களும் இந்த இடைக்கால ஆட்சியுடன் தொடர்புகொள்ள வேண்டும் என்று கருதப்பட்டது.

இடைக்கால அரசாட்சி ஆரம்பிக்கும்போது காபினெட் முறையில் இயங்கவேண்டுமென்று யாவரும் ஒப்புக்கொண்டாலும் சில நாள்களுக்குப்பின் முஸ்லிம் லீக் கூட்டுப்பொறுப்பை நிராகரித்துத் தனது உறுப்பினர்கள் கவுன்சிலின் தனிக்குழுவாக (Separate block) இருக்கப் போவதாகக் கூறிற்று. இதனால் சச்சரவு ஏற்பட்டுக் காபினெட் கூட்டுப்பொறுப்புப் போய்க் குழப்பம் நேரிட்டது. இந்தக் குழப்பத்தினால் அதிகார வர்க்கத்தினரின் உபயோகமும் பாதிக்கப்பட்து. இந்த நெருக்கடியைத் தீர்க்க 1946 டிசம்பரில் பிரிட்டிஷ் அரசாங்கம் லண்டனில் ஒரு கூட்டத்தைக் கூட்டி விவாதித்தது. ஒற்றுமை காணமுடியாமையினால், 1947 பிப்ரவரி 20 ஆம் தேதி அன்று இந்தியர்களுக்கு ஏதாவது ஒரு முறையில் ஆட்சிப்பொறுப்பை மாற்றப் போவதாகத் தனது தீர்மானத்தை வெளிப்படுத்தியது. இந்தத் தீர்மானம் இந்தியாவில் குழப்பத்தை உண்டாக்கியது. நிதி உறுப்பினர் லியாகத் அலிகான் மற்றவர்களோடு கலந்து பேசாமல் தமது வரவுசெலவுத் திட்டத்தைச் சட்டசபையில் தாக்கல் செய்தார். இது இந்திய ஒருமைப்பாட்டைக் குலைக்கும் என்றும் கருதப்பட்டது. இந்த இடைக்கால அரசாங்கம் ஓர் ஆண்டுகூட நிலவவில்லை. எனினும், அது இந்தியக் காபினெட் அமைப்பு வரலாற்றில் பின்வரக்கூடிய இடர்ப்பாடுகளுக்கு அறிகுறியாக இருந்தது. எனவே, அரசியல் சம்பந்தமான முக்கியத்துவம் பெறுகிறது.

இந்த இடைக்கால அரசு 1946 செப்டம்பர் 2-ல் ஆட்சிக்கு வந்தது. வைசிராய் வேவல் பிரபு (Lord Wavell), இது இந்திய சுய ஆட்சிப் பாதையில் ஒரு முக்கியமான படி என்று பாராட்டினார். இந்த அவையில் இடம்பெற்றவர்கள் பன்னிருவர் : ஜவஹர்லால் நேரு, வல்லபாய் படேல், இராஜேந்திர பிரசாத், சரத்சந்திர போஸ், சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார், ஆசப்அலி,

ஜான் மத்தாய், ஜகஜீவன்ராம், ஷபத் அகம்மதுகான், பலதேவ் சிங்கு, சி. எச். பாபா, அலி ஜஹுர். 1946 அக்டோபர் 15-ல் முஸ்லிம் லீக் இந்தச் சபையில் சேர்ந்தது. லீக்கின் பிரதிநிதிகள் ஐந்து பேர்: லியாகத் அலிகான், கஸ்பைர் அலிகான், சர்தார் அப்துர் ரப் நிஷ்டார், ஐ. ஐ. சுந்திரிகார், ஜோகேந்திரநாத் மண்டல். (இவர்கள் லீக் தலைவர் முகமது அலி ஜின்னாவினால் நியமிக்கப்பட்டவர்கள்; இறுதியவர் வங்காளத் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்). லீக் சேர்ந்தவுடன் காங்கிரசு நியமனம் செய்தவருள் மூவரான சரத்சந்திரபோஸ், ஷபத் அலிகான், அலி ஜஹுர் ஆகியோர் விடப்பட்டார்கள். காங்கிரசுக்கும் லீக்குக்கும் துறைகளைப் பங்கு போட்டுக் கொள்வதில் சச்சரவு ஏற்பட்டது. இந்தக் குழப்பத்தில்தான் நிதித்துறை லியாகத் அலி கானுக்குத் தரப்பட்டது. மேற்கூறியபடி இவர் மற்றத் துறைகளுக்குத் தம் நிதி சம்பந்தமான அதிகாரத்தை உபயோகித்து இடைஞ்சலாக இருந்தார். லீக் சேர்வதற்குமுன் நேரு தலைமையில் உறுப்பினர்கள் ஒன்றுகூடி எல்லா விஷயங்களையும் ஆலோசனை செய்வார்கள். ஒருவரையொருவர் விட்டுக்கொடுக்கக்கூடாதென்றும், வைசிராய் ஒருவர் துறையில் தலையிட்டாலும் அதை எல்லோரும் கூட்டுப்பொறுப்பில் எதிர்க்க வேண்டுமென்றும் ஒரு கொள்கையை மேற்கொண்டார்கள். இந்தக் கூட்டுப்பொறுப்பு லீக் சேர்ந்தபின் நிலவ முடியவில்லை. வேவல்பிரபு காபினெட் கூடுவதற்கு முன்பே கருத்துவேற்றுமைகளைச் சரிசெய்ய முடியாவிட்டால், கூட்டு ஆட்சி (Coalition Government) நடத்துவது அரிது என்று எடுத்துக்காட்டினார். ஆனால், லீக் உறுப்பினர்கள் நேரு கூட்டிய சம்பிரதாயமல்லாத கூட்டங்களுக்கு வருவதில்லை; வைசிராய் கூட்டிய காபினெட் கூட்டங்களில் அந்நியர்கள்போல் கூடினார்கள். எனவே, இந்த ஆட்சி காபினெட் இலக்கணத்திற்குப் பொருந்தியதாக இல்லை. 1947 ஆகஸ்ட் 15-ல் இந்தியா பிரிவினை செய்யப்பட்டது.

10. சுதந்திரத்தின்பின் அமைச்சரவைகள்

(அ) நேரு சகாப்தம்

பிரிட்டிஷ் பாராளுமன்றம் நிறைவேற்றிய இந்திய சுதந்திரச் சட்டப்படி (Indian Independance Act, 1947), பிரிட்டிஷ் மன்னர் அரசு இந்தியா, பாகிஸ்தான் என்ற இரு தேசங்களின் நிர்வாகப் பொறுப்பைக் கைவிட்டது. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் இறைமையை இந்த இரண்டு தேசங்களின் சட்ட மன்றங் களுக்கு மாற்றியது. 1935-ல் கவர்ன்மென்டு ஆஃப் இந்தியாச் சட்டத்தில் கவர்னர் ஜெனரல் சொந்த எதேச்சையாலும் நிதானத்தாலும் (Individual judgment or discretion) சில விஷயங்களைச் செய்வதற்குத் தந்திருந்த அதிகாரம் விடப் பட்டது. இது புதுக் காபினெட் சபைக்கு முழு நிர்வாகப் பொறுப்பைத் தந்தது. 1947 ஆகஸ்டு 15-ல் இருந்த எக்சி கியூடிவ் கவுன்சிலே அமைச்சரவையாக மாற்றப்பட்டது. பிரதமருக்குத் தமது சகாக்களை நியமிக்க அதிகாரம் (Prime Minister's responsibility) கிடைத்தது. இதனுல் அமச்சரவை ஒரே குறிக்கோள் உள்ளதாயும் பிரதமரின் முழுப் பொறுப்பில் உள்ளதாயும் அமைந்தது.

இந்த அமைச்சரவை பிரதமர், ஒரு துணைப் பிரதமர், 12 அமைச்சர்கள் கூடியதாக இருந்தது. ஜவஹர்லால் நேரு பிரதமரானுர். மவுன்ட்பாட்டன் பிரபு (Lord Mountbattan) கவர்னர் ஜெனரலாக இருந்தார். (ஜின்ஞ—Md. Ali Zinna—பாகிஸ்தானுக்குக் கவர்னர் ஜெனரல் ஆனுர்.) இங்கிலாந்து மன்னர் இந்தியச் சக்கரவர்த்தி என்பதை இழந்து வெறும் இங்கி லாந்து மன்னர் ஆனுர். இந்தியாவில் அமைந்த புது அரசாங் கத்திற்கு மன்னர் தமது நல்லெண்ண ஆசிகளை அனுப்பினுர். பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய மன்னர்களைச் சேர்ந்தாற்போல் இருக்கும் மாநிலங்களோடு சேர ஆலோசனை கூறிற்று.

எல்லா அரசர்களும் சேர்வதற்குக் கையொப்பம் தந்தனர். மவுன்ட்பாட்டன் பிரபு கவர்னர் ஜெனரல் பதவி ஏற்று வானொலியில் பேசும்போது, 'நான் உங்கள் சட்டபூர்வமான கவர்னர் ஜெனரல்தான் (Conditional Governor General only); என்னை இந்தியாவின் நலனைப் பெருக்குவதற்கு அர்ப்பணம் செய்யும் உங்களில் ஒருவனாகக் கருதவேண்டுகிறேன்' என்று கூறினார்.

பிரதமர் ஜவஹர்லால் நேரு தாம் முன்பு பெற்றிருந்த வெளிநாட்டு விவகாரங்கள் துறையைத் தாமே ஏற்றுக் கொண்டார். மற்றைய அமைச்சர்களின் துறைகள் அப்படியே மாறின்றி இருந்தன. வல்லபாய் படேல் துணைப் பிரதமர் என்று அழைக்கப்பட்டார். அவர் உள்நாட்டு விவகாரங்கள், செய்தி, மாநிலங்கள் என்ற துறைகளைப் பெற்றிருந்தார். சில மாதங்களுக்குப் பிறகு அரசாங்கத் துறைகளை மாற்றி அமைக்க (Administrative reforms) ஓர் அமைச்சர் அமர்த்தப்பட்டார். (அவர் கோபாலசுவாமி அய்யங்கார்.) பின்பு பாகிஸ்தான் பிரிவினால் இந்தியாவுக்கு வந்துவிட்ட அகதிகளின் புனர்வாழ்வைக் (Rehabilitation of refugees) கவனிக்கக் கே. சி. நியோகி என்பவர் அமைச்சராக ஆனார். சில ஸ்டேட் அமைச்சர்களும் டெபுடி அமைச்சர்களும் இருந்தார்கள். கோபாலசுவாமி அய்யங்கார் அமைச்சரவையில் காபினெட் அமைச்சர், ஸ்டேட் அமைச்சர், டெபுடி அமைச்சர் என்ற மூன்றுவகை அமைச்சர்களும் இடம் பெற்றிருந்தால்தான் சட்டசம்மதமாகும் என்றும், இல்லையேல் காபினெட் அமைச்சராக இல்லாத அமைச்சர்களுக்குச் சம்பளம் தரமுடியாது என்றும் கூறினார். ஆனால், அதைப்பற்றிக் கவனம் செலுத்தப்படவில்லை.

ஆரம்பகாலத்திலேயே அமைச்சரவைக் கூட்டங்கள் மிகவும் ஒழுங்காக நடைபெற்றன. கூட்டங்கள் ராஷ்டிரபதி பவனில் காபினெட் அறையில் நடைபெறும். அமைச்சர்கள் ஒரு நீள்சதுர மேசையைச் சுற்றிலும் உட்காருவார்கள். பின் அறையில் செயலர்களும் துறைக் கீழ்அதிகாரிகளும் காத்திருப்பார்கள். காலை 10 மணியிலிருந்து சுமார் பகல் 1 மணி வரை பிரதி வியாழக்கிழமைகளிலும் நடைபெறும். ஆரம்பமாகும் நேரம் தவறுவதே இல்லை. பிரதமர் நேரு தலைமைவகிப்பார். அவர் இல்லாதபோது, வல்லபாய் படேலும், படேல் இறந்த பின் இராஜகோபாலாச்சாரியாரும் தலைமை வகிப்பார்கள். சட்டமன்றம் கூடும் நாள்களில் அமைச்சரவைக் கூட்டம் பாராளுமன்றக் கூட்டத்திலேயே ஒரு தனி அறையில் கூடும். சில சமயங்களில், சாதாரணமான இரண்டுநாள் முன் எச்சரிக்கை

இல்லாமல் அரைமணிநேர எச்சரிக்கையாலும் கூட்டம் கூட்டப் படுவதுண்டு. கூட்டம் சில சமயங்களில் 9 மணிவரைகூட நடப்பதுண்டு. அமைச்சரவைக்கூட்டங்களுக்கு வைக்கப்பட்ட நிகழ்ச்சிநிரலும் குறிப்புகள் முதலியனவும் ' இரகசியம் ' என்பதாகக் கருதப்படும். ஓர் அமைச்சர் அமைச்சரவை யிலிருந்து நீங்கினுல், மிகவும் முக்கியமான ' இரகசிய ' ரிகார்டுகள் (Confidential Record) காபினெட் செயலகத்துக்கு அவரால் திருப்பி அனுப்பிவிடப்படும். நிகழ்ச்சிநிரலில் முதல் நிகழ்ச்சி முந்திய வாரத்தின் முக்கிய நிகழ்ச்சிகள், ஒவ்வோர் அமைச்சகமும் எடுத்துக்கொண்ட முக்கிய நடவடிக்கைகளின் சுருக்கமான அறிக்கையாக இருக்கும். அடுத்தபடி விவாதத் திற்கு வைக்கப்பட்டுள்ள புதிய பொருள்களாகும். சாதா ரணமாக, ஓர் அமைச்சர் மற்ருேர் அமைச்சரின் துறை விஷயங்களில் தலையிடுவதில்லை. பிரதமர் கொள்கை விஷய மான கருத்தை விரும்பினுலன்றியும், அல்லது தமது துறை பாதிக்கப்பட்டாலன்றியும், ஓர் அமைச்சர் மற்ருேர் அமைச்சர் துறைப் பிரச்சினைகளைப்பற்றிக் கருத்து வழங்குவதில்லை. பொது விவாதங்கள் சுருக்கமாக இருக்கும்; சொற்பொழிவு போல் பேசுவதற்கு இடம் இல்லை. முடிவு எடுக்க வேண்டிய விஷயத்தைப்பற்றிய எல்லாத் தகவல்களையும் சம்பந்தப்பட்ட அமைச்சர் கூறவும், சந்தேகம் கேட்கப்பட்டால் விளக்கம் செய்யவும் தயாராக இருக்கவேண்டும். சம்பந்தப்பட்ட அமைச்சர் விமரிசனம் செய்தபின் பிரதமர் ஒவ்வோர் அமைச்ச ரையும் கருத்து இருந்தால் தெரிவிக்கும்படி கேட்பது வழக்கம். பிரதமர், முடிவாகப் பொதுக் கருத்தையும் தமது முடிவையும் கூறுவார். பேச்சுகளின் முழு அறிக்கையும் எடுக்கப் படுவதில்லை. முடிவுகளைமட்டும் காபினெட் செயலர் (Cabinet Secretary) எழுதிக்கொண்டு பின் பிரதமர் கையெழுத்துப் பெறுவார். முடிவுகளின் குறிப்பைப் பின்னுல் காபினெட் செயலகம் ஒவ்வோர் அமைச்சருக்கும் அனுப்பிவைக்கும். அமைச்சர்கள் ஏதாவது திருத்தம் கூற விரும்பின் அதைச் செயலகத்துக்குத் தெரிவித்தால், பிரதமரின் உத்தரவு பெற்று, வேண்டியிருப்பின் திருத்தம் செய்யப்படும்.

இந்த முதல் அமைச்சரவை நல்ல சம்பிரதாயங்களை முந்திய வைசிராயின் எக்சிகியூடிவ் கவுன்சில் பழக்கத்தினுல் ஆதியி லிருந்தே கடைப்பிடித்தது. எல்லா அமைச்சர்களும் சம அந்தஸ்துடையவர்களாகக் கருதப்பட்டார்கள். எனினும் பிரதமர் நேருவும் வல்லபாய் படேலும் தனி மதிப்புப் பெற்றி ருந்தார்கள். விவாதங்களில் சாதாரணமாக, காரசாரமான

பேச்சு நேரிடுவதில்லை என்று அமைச்சர் என். வி. காட்கில் எழுதியுள்ளார். இருப்பினும் காரசாரமாக அமைச்சர் சியாம் பிரசாத் முகர்ஜி போன்றவர்கள் பேசுவதும் வழக்கம். எந்த ஒருவருடைய கருத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டால், அது முழு அமைச்சரவைக் கருத்தாகக் கருதப்படும். யாராவது ஓர் அமைச்சர் கருத்து வேறுபடின் இராஜிநாமாச் செய்ய வேண்டியதுதான்; அல்லது தமது சொந்தக் கருத்தை வற்புறுத்துவதற்கு உரிமை இல்லை. தமது கருத்து எடுபடவில்லை என்று வெளியில் விளம்பரம் செய்வதற்கும் உரிமை இல்லை. முடிவு எடுத்தபின், அதைப் புனர்ஆலோசனை செய்யும்படி ஓர் அமைச்சர் கேட்கலாம். ஆனால், புனர் முடிவு தமது கருத்துக்கு வேறுபடின், முக்கிய விஷயமாக இருந்தால் இராஜிநாமாச் செய்வதன்றி வேறு வழியில்லை. ஆனால், சிறிய விஷயங்களில் எந்த ஓர் அமைச்சரும் தம் கருத்தை வற்புறுத்தமாட்டார். வெளியில் பொதுமக்களுக்கு அமைச்சரவையில் என்ன நடந்தது என்று ஒன்றுமே தெரிவதற்கு வாய்ப்பில்லை. ஓர் அமைச்சர் கருத்துவேறுபாட்டினாலோ, தகுதியற்ற காரியம் ஏதாவது நடந்துவிட்டதன் காரணமாகவோ இராஜிநாமாச் செய்ய நேரிடின், சம்பந்தப்பட்ட அமைச்சர் பாராளுமன்றத்தில் விளக்கம் கூறுவதற்கு உரிமை உண்டு. எனினும் அமைச்சரவையில் நடந்தவை எல்லாவற்றையும் வெளிப்படுத்துவது தகுதியன்று. நேருவுக்கும் வல்லபாய் படேலுக்கும் கருத்து வித்தியாசங்கள் ஏற்படுவது வழக்கம். ஆனால், பிளவுகள் ஏற்படவில்லை. முதல் அமைச்சரவைக் காலத்தில் பல்வேறு முதல்தரமான அரசியல், நிர்வாகச் சிக்கல்களைச் சமாளிக்க நேரிட்டது. பாகிஸ்தான் பிரிவினையின் விளைவாக ஏற்பட்ட பணச்செலவும் அகதிகளின் பிரச்சினையும் அமைச்சரவையின் காலத்தை மிகவும் எடுத்துக்கொண்டது. மகாத்மா காந்தி 1948 ஜனவரி 30-ல் சுடப்பட்டு உயிரை இழந்தது ஒரு பெரிய சம்பவம். அதன் விளைவாக இராஷ்டிரிய சேவா சங்கத்தை அடக்குமுறை செய்ய வேண்டியிருந்தது. நிதி விஷயங்களில் நிதி அமைச்சரின் கண்டிப்பும் துறை அமைச்சர்களுக்குச் சிறிது சங்கடம் ஏற்படுத்தியிருக்கலாம். முதல் அமைச்சரவையில் காங்கிரசுக் கட்சியினர் பெரும்பான்மை பெற்றிருந்தாலும், சில வெளியார்களும் அதில் இடம் பெற்றுர்கள். ஆரம்பத்தில் காங்கிரசுக் கட்சியில் இல்லாத 5 சுயேச்சையாளர்கள் சேர்க்கப்பட்டார்கள். நாளடைவில், 1950-ன் ஆரம்பத்தில் அது மூன்ருகக் குறுகியது. (1953-ல் அது இரண்டாயிற்று). சுயேச்சையாளரான ஆர். கே. சண்முகம் செட்டியார் நிதி அமைச்சராக இருந்தார்.

பொதுவாக, ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் சுயேச்சை வாதிகள் அமைச்சரவையில் சேர்க்கப்படுவதை விரும்பவில்லை. எனினும் அவர்கள் சேவை தேவையாயிருந்தது. மேலும், இந்த அமைச்சரவை புதுத்தேர்தல் நடத்தப்பட்டு ஏற்பட்டதன்று. இதனை ஒருவிதமான கூட்டு (coalition) ஆட்சி என்றுதான் கருத வேண்டும். 1948-ல் ஆர். கே. சண்முகம் செட்டியார் ஒரு வருமானவரிச் சலுகை விஷயத்தில் தயவுகாட்டியதாக எண்ணப் பட்டதால், அதில் சிறிதும் தவறில்லையாயினும் தாமே இராஜி நாமாச் செய்துவிட்டார். இந்த இராஜிநாமாவை அமைச்ச ரவையோ பிரதமரோ கேட்கவில்லையாயினும், அரசியல் கொள் கைகளின் முக்கியத்துவத்தையும் சம்பந்தப்பட்ட அமைச்சரின் பொறுப்பையும் இது விளக்கிற்று. பின்னுல் சியாம் பிரசாத் முகர்ஜியும், கே. சி. நியோகியும் இந்தியாவின் சிறுபான்மை யர்கள் (முஸ்லிம்கள்) பற்றிய விஷயத்தில் நேரு - லியாகத் அலிகான் (பாகிஸ்தான் பிரதமர்) ஒப்பந்தத்தைப் பற்றிய கருத்து வித்தியாசங்களினுல் இராஜிநாமாச் செய்தார்கள். அதே ஆண்டில் (1950) சண்முகம் செட்டியாருக்குப்பின் நிதி அமைச்சராக வந்த டாக்டர் ஜான் மத்தாய், திட்டக் கமிஷனர் களின் அந்தஸ்தைப்பற்றியும், நிதி நிலைமைக்கு மீறித் திட்டம் வகுப்பதன் பொருந்தாமைபற்றியும், லண்டனில் இந்தியன் ஹைகமிஷனராக இருந்த திரு. வி. கே. கிருஷ்ணமேனன் கொண்டுவந்த சில செலவுகள் குறித்த முறைத்தவறுகள் பற்றியும் ஏற்பட்ட கருத்து வித்தியாசங்களினுல் பதவியை இராஜிநாமாச் செய்தார். அடுத்த ஆண்டு (1951 அக்டோபர்) நீதித்துறை அமைச்சர் டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் தாழ்த்தப்பட்டோர்களின் நிலைமை சீர்படுத்தப்படவில்லை என்ற காரணத்தாலும், தமக்கு அமைச்சரவையில் சரியான பொறுப்புத் தரப்படவில்லை என்ற காரணத்தாலும், இன்னும் சில காரணங் களாலும் இராஜிநாமாச் செய்தார். அம்பேத்தகார் அரசியல் அமைப்புச் சட்டத்தைச் சட்டமன்றத்தில் வழிமுறைப்படுத்தி நிறைவேற்றியவர். இது ஒரு பெரிய பொறுப்பு. எனினும் அவர் அமைச்சரவை மறைவில் எடுக்கப்படும் முடிவுகளைத் தாம் வெறுமனே ஆமோதிக்கிற நிலையில் இருப்பதாகக் குறைகூறிக் குற்றஞ்சாட்டினர்.

இந்த வகையில் இராஜிநாமாச் செய்த அமைச்சர்கள் ஒவ்வொருவரும் பாராளுமன்றத்தில் தமது முடிவைப்பற்றி விளக்கம் தந்தார்கள். ஏனெனில், மக்கள் ஆட்சியில் அமைச் சர்கள் பாராளுமன்றத்துக்குப் பொறுப்புடையவர்களாவர். இந்த இராஜிநாமாக்களில் சண்முகம் செட்டியார் இராஜிநாமா

மட்டும் அமைச்சரவையில் வந்த இகலின் விளைவினால் அன்று. மற்றைய மூன்றும் சம்பந்தபட்ட அமைச்சர்களின் கருத்து வேற்றுமைகளின் விளைவாகும். இந்த நான்குபேரும் காங்கிரசுக் கட்சியில் சேர்ந்தவர்கள் அல்லர். இவர்கள் விலகியதால் கட்சியிலோ அமைச்சரவையிலோ பிளவுகள் ஏற்பட்டுவிட வில்லை. அமைச்சரவையில் கருத்து வித்தியாசங்களுக்கு இடம் உண்டென்பதையும், அப்படி இருந்தால், வேறு கருத்துடையவர் சிறுபான்மையில் இருக்கிறோம் என்று உணர்ந்தால் இராஜிநாமாச் செய்வதைத்தவிர வேறு வழியில்லை என்பதும் அமைச்சரவைச் செயல்முறையின் இலக்கணம் என்பதை நிருபித்தன. இராஜிநாமாச் செய்வதன்முன் அமைச்சரவையில் சம்பந்தபட்ட அமைச்சர் அதைப்பற்றிப் பேசுவதில்லை. இராஜிநாமாவைப் பிரதமருக்குச் சமர்ப்பிக்க வேண்டியது. பிரதமர் தம் கருத்தையோ, தமது கட்சியின் கருத்தையோ மாற்றிக் கொள்வதற்கு ஆகாது என்று நினைப்பின் ஜனாதிபதிக்கு இராஜிநாமாவை அனுப்பிவைக்க வேண்டியதுதான். சண்முகம் செட்டியார் விஷயத்தில் அமைச்சர் இராஜிநாமாச் செய்வதற்கு நிமித்தமே இல்லை என்று பிரதமர் கூறினாலும், செட்டியார் பாராளுமன்றத்தின் உயர்ந்த கொள்கைகளை நிறைவேற்றுவதன் அவசியத்தைக்குறித்துத் தாம் இராஜிநாமாச் செய்வதாகக் கூறினார். சியாம் பிரசாத் முகர்ஜியும் பாகிஸ்தான் விஷயத்தில் தமது கொள்கைக்கும் அமைச்சரவைக் கொள்கைக்கும் அடிப்படையில் முரண் இருப்பதால், தாம் தொடர்ந்து அமைச்சராக இருப்பது தகுதியில்லை எனக் கூறி இராஜிநாமாச் செய்தார். டாக்டர் ஜான் மத்தாய் திட்டக்கமிஷன் ஏற்படுவதால் காபினெட்டின் பொறுப்புப் பலவீனப்படுவதாகவும், கமிஷன் உறுப்பினர்களுக்கும் அமைச்சரவை உறுப்பினர்களுக்கும் சமானமான அந்தஸ்துக் கொடுப்பது சரி இல்லை என்றும், பிரதமரே திட்டக்கமிஷனுக்குத் தலைவராக இருப்பதால், அந்தக் கமிஷன் ஒரு மேல்அமைச்சரவை (Super Cabinet) ஆகிவிடும் என்றும் கருத்து வித்தியாசங்களைத் தெரிவித்தார். அம்பேத்கார் தமக்குச் சட்டத்துறைமட்டும் இருந்தால் அதிகாரம் இல்லையென்றும், வேறு நிர்வாகத்துறை தரப்படவில்லை என்றும் மனக்குறை அடைந்தார். தமக்கு வெளிநாட்டு விவகாரங்கள் குழு, பாதுகாப்புக் குழு முதலிய காபினெட் குழுக்களில்கூட உறுப்பினராக இடம் தரப்படவில்லை என்றும் வருந்தினார். காஷ்மீர் விஷயத்தில் பிரதமர் கொள்கைகள் சரி இல்லை என்றும் இந்து லா சட்டச் சீர்திருத்தத்தில் (Hindu-Law-Reforms) பிரதமர் அக்கறை எடுக்கவில்லை என்றும் கூறினார்.

முதல் அமைச்சரவையில் ஒரே கட்சியினர் உறுப்பினர்களாக இல்லாததாலும், பலவிதமான புதிய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியிருந்ததாலும் இம்மாதிரிக் கருத்து வித்தியாசங்கள் இருந்தன. பிரதமர் நேருவுக்குக் கட்சிப்பற்று இல்லாமல் இருந்ததாலும், பிறரைத் தமது கருத்துகளுக்கு இசையும்படி செய்கிற உணர்ச்சி உண்மையாலும் அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்பு நல்ல முறையிலேயே நடந்து வந்தது. நேருவுக்கும் படேலுக்கும் போட்டி இருந்தது. 'படேல் சிறந்த சாமர்த்தியசாலி; ஆனல், நேருவுக்கு மக்களுடன் இருந்த அளவு தொடர்பு இல்லை. கருத்துவேற்றுமைகள் இருப்பினும் நேரு சர்தாரின் நிர்வாகத்திறமையை (அப்போது மிகத் தேவையான தொன்று) உணர்ந்து அமைச்சரவையில் வைத்துக்கொண்டார்.' என்று மைக்கேல் பிரெச்சர் எழுதுவார். காந்திஜியின் மரணத்துக்குப்பின் இந்தப் போட்டி மழுங்கிற்று. அதன்பின் இரண்டாண்டுகட்குள் படேலும் இறந்தார். முதல் அமைச்சரவையில் நேருவும் படேலுமே பலசாலிகளாக இருந்தார்கள். இருப்பினும் காபினெட் உடைபடவில்லை; பாராளுமன்றத்திலும் அது பிரதிபலிக்கவில்லை. கூட்டுப்பொறுப்புப் போதுமான அளவுக்குப் பொருந்தி இருந்தது.

இந்தியாவின் இரண்டாவது அமைச்சரவை குடியாட்சி தினமான 1950 ஜனவரி 26-ல் அமைந்தது. மூன்ருவது சபை இந்தியாவின் முதல் பொதுத்தேர்தலின் பிறகு 1952 மே 13-ல் அமைக்கப்பட்டது. நான்காவது, இரண்டாம் பொதுத்தேர்தலின் பின் 1957 ஏப்ரல் 17-ல் அமைந்தது. ஐந்தாவது, மூன்ரும் பொதுத்தேர்தலுக்குப்பின் 1962-ல் ஏற்படுத்தப்பட்டது. ஆருவது, நான்காம் பொதுத்தேர்தலின்பின் 1967-ல் ஏற்பட்டது. இப்போதுள்ள அமைச்சரவை இடைத்தேர்தலின் பின் 1971 மார்ச்சில் அமைக்கப்பட்டது. இந்தத் தேர்தல்களில் ஒரே கட்சியின் பெருவாரி எண்ணிக்கையால் அமைச்சரவை ஏற்பட்டதால், அரசாங்கத்துக்கும் அமைச்சரவைக்கும் அசைவு ஏற்படவில்லை. நேரு இறந்தபின் (1964 மே 27), இரண்டு அமைச்சர்களுக்குள் (லால்பகதூர் சாஸ்திரி, மொரார்ஜி தேசாய் இருவருக்குள்) பிரதமர் ஸ்தானத்துக்குப் போட்டி ஏற்பட்டு சாஸ்திரி பிரதமரானர். அதே முறையில் சாஸ்திரி இறந்தபின் (1966 ஜனவரி 11) திருமதி இந்திரா காந்திக்கும், திரு. மொரார்ஜி தேசாய்க்கும் போட்டி ஏற்பட்டு இந்திரா காந்தி பிரதமரானர். 1971-ல் காங்கிரசுக் கட்சிப் பிளவினல் இந்திரா கட்சிக்குப் பாராளுமன்றத்தில் மற்றைய கட்சிகளின் ஆதரவினல்தான் ஆட்சி நடத்த முடிந்தது. இடைத்தேர்தலில் இந்திரா கட்சிக்கு

அமோகமான வெற்றி கிடைத்தது. இந்த அமைச்சரவைகளைப் பற்றி விரிவாக எழுதப்புகின் விரியும். முக்கியமாக, இந்த நூலில் கவனிக்கத்தக்கது அமைச்சரவை ஆட்சிஇயல் எப்படி வளர்ந்தது என்பதும், எந்த அளவு மக்கள் ஆட்சியின் நோக்கங்களையும், பாராளுமன்றத்தின் பொறுப்பையும், பொது மக்களின் உரிமைகளையும் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு இணங்கக் கடைப்பிடித்தது என்பதும் ஆகும். இந்த 22 ஆண்டு களில் நாட்டில் பல்வேறு பிரச்சினைகளும் மாறுதல்களும் உண்டாயின. சீனப் படையெடுப்பு, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கள், கடைசியாக 1971 டிசம்பரில் பாகிஸ்தானோடு 14 நாள் சண்டை முதலியன எந்த ஆட்சியையும் பரீட்சிக்கும் தகைமையுடைய சம்பவங்கள் ஆகும். நாட்டில் பல்வேறு கட்சிகள், கட்சிக்குள் பல்வேறு உட்கட்சிகள் தோன்றத் தலைப்பட்டன. மொழிவாரியாக அமைக்கப்பட்ட மாநிலங்கள், அந்த மாநிலங்களுக்கிடையே எல்லை சம்பந்தமான சச்சரவுகள், மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் கட்சி வித்தியா சங்களில் உண்டான இகல்கள் எல்லாம் பாராளுமன்றம் கொண்ட மக்கள் ஆட்சியின் கருவியாக உள்ள மத்திய அமைச்சரவையையும், மாநில அமைச்சரவைகளையும் சோதிக்கும் தன்மையில் உண்டான பிரச்சினைகளாகும். இவைகளைப்பற்றிப் போதுமான தகவல்களும் ஆய்வுகளும் சேமிக்கப்படவில்லை; நூல்களும் எழுதப்படவில்லை. எனினும், பொதுவாகத் தேர்தல்களின் போக்கும் பயன்களும் காணத் தக்கன.

முதல் காபினெட் 1947 ஏப்ரல் 15 முதல் 1950 ஜனவரி 25 வரை மேற்கூறியபடி அரசியல் செல்வாக்கும் அறிவும் கூடிய வர்கள் அமைந்ததாக இருந்தது. சண்முகம் செட்டியார் முகர்ஜி, அம்பேத்கார் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர் களல்லர்; கட்சிக் கட்டுப்பாடின்றிச் செயலாற்ற வாய்ப்புடைய வர்கள். மேலும், படேல் பலசாலி; செயலாற்றல் உடையவர்; சில விஷயங்களில் கருத்துவேற்றுமை உடையவர்; எனினும், மகாத்மா காந்தியின் சொல்லுக்கு அடங்கியவர்; காந்திஜி மரண மடைந்த பின்னும் நாட்டின் நலத்துக்காக ஒற்றுமையைக் கைவிடாதவர். நேருவும் படேலும் முரண்பட்டாலும், ஒருவரையொருவர் நீக்க முயலவில்லை. தனிப்பட்ட காரணங் களால் மூன்று அமைச்சர்கள் மேற்கூறியபடி இராஜிநாமாச் செய் தாலும் அமைச்சரவை அசைவின்றித் தொழிற்பட்டது.

இரண்டாம் காபினெட் இந்தியா குடியாட்சியாக ஏற்பட்ட தினத்தன்று சம்பிரதாயமாகப் புனர்நியமனம் செய்யப் பட்டது. அந்த ஆண்டுக் கடைசியில் (1950 டிசம்பர்) படேல் இறந்தார். நேருவின் ஆதிக்கம் மேன்மை அடைந்தது. இந்த மூன்றும் காபினெட் 1952 மே 13-லும், நான்காம் காபினெட் 1957 ஏப்ரல் 17-லும், ஐந்தாம் காபினெட் 1962 மே 12-லும் அமைக் கப்பட்டன. ஆறும் காபினெட் நான்காம் பொதுத் தேர்தலின் பின் 1967-ல் அமைவதற்கு முன் நேரு 1964 மே 17-ல் இறந்த தால் இடைக்காலத்திலேயே ஏற்பட்டது. நேரு 17 ஆண்டுகள் பிரதமராக இருந்தார். படேல் இறந்தபின் காபினெட்டின் நிலை எவ்வாறு மாறிற்று என்று வெகு சுருக்கமாகக் கவனிப்போம். சென்ற காலத்தில் நேரு, படேல் ஆதிக்கம் பெற்றதாகக் காபினெட் விளங்கியது. அடுத்த நாலைந்து ஆண்டுகளில் மவுலானு அபுல்கலாம் அஜாத், கோபாலசுவாமி அய்யங்கார், ரஃபி அகமது கிட்வாய் இவர்கள் சூபர் காபினெட் நிலையில் நேரு வுக்குத் துணையாக இருந்தார்கள். 1957-க்குப்பின், நேரு கோவிந்த வல்லப பந்த், மொரார்ஜி தேசாய் மூவரும் சூபர் காபி னெட்டுப்போல் இயங்கினுர்கள் என்று கூறப்படுவதுண்டு. 1963 ஜூலையில் காமராஜர் திட்டம் என்று கூறப்பட்ட திட்டத்தின்படி சில சீனியர் அமைச்சர்கள் கட்சி வேலையைத் தீவிரமாகக் கவனிப்பதற்கு இராஜிநாமாச் செய்தார்கள். அதன் காரணமாக அமைச்சரவை புனரமைக்கப்பட்டது. இது ஒரு பெரிய மாறுதல். இடையில் பல அமைச்சர்கள் கருத்துவேற்றுமைகளாலும், குற்றம் சாட்டப்பட்டதாலும், பொதுமக்களின் கருத்துத் தீவிரத்தாலும் பதவியிலிருந்து நீங்கிய சம்பவங்கள் உண்டு. இவை அமைச்சரவைகளுக்கு அசைவைத் தந்து பாராளு மன்றத்தில் தோல்விக்குக் காரணமாக ஏற்படாவிட்டாலும், அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு, மக்களாட்சியில் பொறுப்புடைமை ஆகிய இவற்றை விளக்குகின்றன. நேருவின் அமைச்சரவையில் பல அனுபவம் உள்ள அமைச்சர்கள் இருந் தார்கள். உதாரணமாக அஜாத், கிட்வாய், லால்பகதூர் சாஸ்திரி, மொரார்ஜி தேசாய், வி. வி. கிரி, எஸ். கே. பட்டீல் முதலியோர். மத்தாயின் ஸ்தானத்தில் நியமிக்கப்பட்ட திரு. சிந்தாமன் தேஷ்முக் நிதி அமைச்சரின் அதிகாரத்திற்கு இடையூறுவரும் என்ற கருத்தில் தமது பதவியை இராஜிநாமாச் செய்து திரும்பப் பெற்ருர். திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் உற்பத்தி அமைச்சகம் தனியாக வேண்டியதில்லை என்று வற்புறுத்துவதற்காக இராஜிநாமாச் செய்து பின் வாபஸ் வாங்கிக்கொண்டார். திரு. வி. வி. கிரி, அரசு பாங்குப் பணி

யாளர்களின் சம்பளத்தீர்ப்பை ஏற்காததால், தொழில் அமைச்சரின் மதிப்புக் குறைவுபடுகிறது என்று எண்ணி 1954 ஆகஸ்டில் இராஜிநாமாச் செய்தார். திரு. தேஷ்முக் பம்பாய் நகரை மகாராஷ்டிர மாநிலத்தில் சேர்க்கவேண்டுமென்பது காபினெட்டில் சிந்திக்கப்படாமல் நேரு தாமே முடிவு செய்து விட்டார் என்று குறை கூறி இராஜிநாமாச் செய்தார். இந்த இராஜிநாமா காபினெட் செயல்முறையைப்பற்றிச் சில விஷயங்களை வெளிப்படுத்தின. தேஷ்முக் பம்பாய் பிரச்சினை காபினெட்டிலாவது, காபினெட் அமைச்சர்களுக்குக் கோப்புக் (file) கட்டை அனுப்பியாவது கருத்துப்பெற்றுப் பிரதமர் முடிவு எடுக்கவில்லை என்று குறைகூறினார். பிரதமர் பாராளுமன்றத்தில் அமைச்சரவைக்குத் தெரிவிக்காமல் ஒன்றும் செய்யப்படவில்லை என்று மறுத்தார். பல தருணங்களில் பம்பாய்ப் பிரச்சினை பேசப்பட்டதென்றும், ஏற்படுத்தப்பட்ட ஒரு தனிக் குழுவின் நடவடிக்கைகள் அமைச்சரவைக்குத் தெரிவிக்கப்பட்டன என்றும் கூறினார். பிரதமர் அமைச்சர்களைக் கலந்து பேசாமல் முக்கியமான விஷயத்தில் எதேச்சையாக அறிக்கை செய்தார் என்ற குற்றச்சாட்டை நிராகரித்து 'இந்தியாவின் பிரதமர் நான். பிரதமரின் கடமைபற்றியும், டிமாகிரடிக் முறைபற்றியும், இந்திய அரசியல் அமைப்புப் பற்றியும், பிரிட்டிஷ் அரசியல் அமைப்புப்பற்றியும் சிறிது அறிவேன். பிரதமர் ஆட்சியின் அச்சாணி. பிரதமர் ஆட்சியின் சார்பில் எந்த அறிக்கையையும் செய்யலாம்' என்று நேரு திட்டவட்டமாகக் கூறினார். தேஷ்முக் 1956 ஜூலையில் இராஜிநாமாச் செய்தார்.

அடுத்தபடியாக நிதி அமைச்சராக இருந்த திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் இராஜிநாமா வேறுவிதமானது. இது ஹரிதாஸ் முந்தராவின் கம்பெனிகளின் பங்குகளை இந்தியன் லைப் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் அதிகமாக வாங்கினதற்காகப் பாராளுமன்றத்தில் மும்மரமான கேள்விகள் எழுப்பப்பட்டன. இந்த விவகாரத்துக்கு யார் பொறுப்பாளி என்று விவாதிக்கப்பட்டது. பின்னல் பம்பாய் உயர்நீதி மன்றத்து நீதிபதி சக்ளா என்பவரால் விசாரணை செய்யப்பட்டது. விவகாரத்துக்கு யார் சம்பந்தப்பட்டிருந்தாலும், அமைச்சர் முழுப் பொறுப்பு ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று விசாரணையின் முடிவாகக் கூறப்பட்டதால் திரு. கிருஷ்ணமாச்சாரியார் இராஜிநாமாச் செய்தார். இந்த இராஜிநாமா அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பைப் பாதிக்காவிட்டாலும், அமைச்சரின் நிர்வாகப் பொறுப்புகளை விளக்கம் செய்தது.

அடுத்தபடியாக ஏற்பட்ட இராஜிநாமா, பாதுகாப்பு அமைச்சர் திரு. வி. கே. கிருஷ்ணமேனனுடையது. இது ஒரு தனிப்பட்ட கூற்றை விளக்கியது. மேனனின் நிர்வாகத்தில் பல குறைகளைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எடுத்துக்காட்டி, இராணுவத்தின் ஒழுங்கு பாதிக்கப்பட்டது என்று குற்றம் சாட்டினார்கள். சீனாவின் ஆக்கிரமிப்பு முயற்சிகளைப் பாதுகாப்பு அமைச்சர் பராமுகமாய் இருந்து, தடுக்க முயலவில்லை என்றும் குறை கூறப்பட்டது. நேரு மேனனை ஆதரித்தார். 1962 அக்டோபரில் சீனப் படையெடுப்பு உண்மையிலேயே ஏற்பட்டது. இந்திய இராணுவம் அதைத் தடுக்கத் தயாரிக்கப் படவில்லை. இதைப்பற்றிப் பாராளுமன்றம் அதிருப்தியைத் தெரிவித்தது. அதன் விளைவாகப் பிரதமர் பாதுகாப்புத் துறையைத் தாமே ஏற்றுக்கொண்டு பாதுகாப்பு உற்பத்தித் துறையை மட்டும் திரு. மேனனிடம் விட்டுவைத்தார். திரு. மேனன் நீக்கப்படவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. பிரதமர் இராணுவக் குறைபாட்டுக்கு முழு அமைச்சரவையும் பொறுப்பு ஏற்றுக்கொள்ளும் என்று கூறியும், அது திருப்தி அளிக்கவில்லை. திரு. மேனன் இராஜிநாமாச் செய்தார். இந்த இராஜிநாமா, பிரதமர் கூட்டுப்பொறுப்பு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தாலும், பொது உணர்வு ஒரு தனிப்பட்ட அமைச்சரிடம் நம்பிக்கை இழந்ததாகத் தெரிவிக்கப்பட்டதால் அவ்வளவில் நின்றது. உண்மையிலேயே முழு அமைச்சரவையும் இராஜிநாமாச் செய்திருக்க வேண்டும். சீனப்படையெடுப்பு நெருக்கடிக்கு மத்தியில் பாராளுமன்றமும் பொதுமக்களும் இதை விரும்பவில்லை என்பது அரசியல் விவேகத்தை உணர்த்தியது.

அடுத்தபடியாக 1963-ல் திரு. கெ. டி. மாளவியாவின் இராஜிநாமா ஊழல் விவகாரத்தால் ஏற்பட்டது. 1962-ல் அவர் சுரங்கம் எண்ணெய்த் துறைக்குக் காபினெட் அமைச்சராக உயர்த்தப்பட்டார். அவர் ஒரு கல்கத்தாச் சுரங்க முதலாளியிடம் ரூ. 10,000 வாங்கியதாகப் பாராளுமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டது. அமைச்சர் சுரங்க முதலாளிக்கு ஒரு சலுகையும் காட்டவில்லை என்றும், பணம் பெற்றது ஒரு காங்கிரஸ் தேர்தல் வேட்பாளருக்கு உதவிக்காக என்றும் விளக்கம் கூறினார். இது பாராளுமன்றத்துக்குத் திருப்தி அளிக்கவில்லை. பிரதமர் நேரு சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி ஒருவரை விசாரணை செய்யும்படி அமர்த்தினார். ஆறு பிராதுகளில் இரண்டு மட்டும் குற்றம் கற்பித்ததாக நீதிபதி கூறினார். பிரதமர் மாளவியாவின் இராஜிநாமாவை ஏற்றுக்கொண்டார். ஆனால், தாம் மாளவியா

விடம் குற்றம் காணவில்லை என்றும், இருப்பினும் பார்ராளு மன்றத்தின் உயரிய கொள்கைகளையொட்டி இராஜிநாமாவை ஏற்றுக்கொண்டதாகவும் கூறினர். மாளவியாவும் தமது அறிக்கையில் விசாரணை சட்டப்படியான விசாரணையன்றுதலால், தாம் வழக்கறிஞரை வைத்து வாதாடவில்லை என்றும், தாம் மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்கவில்லை என்றும் கூறினர். இந்த இராஜிநாமா மொத்த அரசாட்சியையும் பாதிக்காமையால் முழு அமைச்சரவையும் இராஜிநாமாச் செய்தாக வேண்டுமென்று எவரும் கூறவில்லை.

1963 ஆகஸ்டில் ஓர் அசாதாரணமான அமைச்சரவை மாற்றம் நேர்ந்தது. காமராஜர் திட்டத்தைப் பிரதமர் ஏற்றுக் கொண்டார். அதன்படி ஆறு அமைச்சர்கள் கட்சி வேலை செய்வதற்காக அமைச்சர் பதவியிலிருந்து விலக இராஜிநாமாச் செய்தார்கள். அவர்கள் மொரார்ஜி தேசாய், என். கே. பட்டீல், லால்பகதூர் சாஸ்திரி, ஜகஜீவன்ராம், ஸ்ரீமாலி, கோபாலரெட்டி ஆகியோர். காமராஜர் திட்டத்திற்காக இவர்கள் விலகினர்கள் என்ருலும், வேறு காரணங்களால் அவர்கள் இராஜிநாமா வேண்டத்தக்கது என்றும் ஒரு கருத்து நிலவிற்று. வெளியேறுபவர்கள் வலசாரி மனப்பான்மையுடையவர்கள் ஆகையால் அவர்கள் போகத்தக்கதே என்ற கருத்தும் இருந்ததெனச் சிலர் கூறினர். பிரதமர் நேரு கொள்கை வேற்றுமையாலும் அல்லது சொந்தக் கருத்துவேற்றுமைகளாலும் கைவிடப்படவில்லை என்று உறுதி கூறினர். இந்தக் கூட்டுஇராஜிநாமாப் பகுதி காபினெட் ஆட்சி வரலாற்றிலேயே விசித்திரமானது. இது வாக்காளர்கள் கருத்துக்கு இசைவோ பாராளுமன்றத்தின் கட்டளையோ அன்று. ஆளும் கட்சியினது உள்விவகாரங்களின் சௌகரியத்துக்காக நடந்த இராஜிநாமாக்கள்.

பிரதமர் நேருவே சில சமயங்களில் தாம் இராஜிநாமாச் செய்ய விரும்புவதாகத் தமது கட்சிக்கூட்டங்களில் சொல்லுவது வழக்கம். 1954 அக்டோபரில் தாம் ஓய்வு எடுக்க விரும்புவதாகவும் கட்சி வெற்றிகரமாக நடந்து வருவதால் தம் இராஜிநாமாவால் பாதிக்கப்படாது என்பதாகவும் கூறினர். 1958 ஏப்ரலில் மீண்டும் தாம் இராஜிநாமாச்செய்ய விரும்புவதாகச் சொல்லி இந்த முறையும் ஓய்வுவேண்டும் என்ற காரணத்தையே கூறினர். மொழிவாரி மாநிலப் பிரிவினைகளால் வந்த தொல்லைகளும், இந்திப் பிரச்சினையால் வந்த தொல்லைகளும் அவருக்கு ஆயாசம் தந்தன என்று சிலர் கருதினர். சிலர் கட்சிக்கு ஓர் அதிர்ச்சியைக் கொடுத்துச் சீர்ப்

படுத்த வேண்டுமென்று கருதினார் என்றும் எண்ணினார்கள். கடைசியில் தம் கருத்தைக் கைவிட்டார். சில தருணங்களில் உணர்ச்சி வசத்தால் இம்மாதிரி எண்ணங்கள் வந்தாலும், கட்சியின்பால் வைத்த பற்றினால் அந்த எண்ணங்களைக் கைவிடுவார். அமைச்சரவைப் பிளவுகளின் காரணத்தால் இவை ஏற்படவில்லை.

(ஆ) லால்பகதூர் சாஸ்திரி சகாப்தம்

நேரு இறந்தபின் பிரதமர் பதவி ஏற்பைப்பற்றிப் போட்டி இருந்தது. லால்பகதூர் சாஸ்திரியும் மொரார்ஜி தேசாயும்தாம் கட்சியில் செல்வாக்குப் படைத்தவர்கள். பண்டிட் கோவிந்த வல்லபபந்த் 1962-ல் இறந்தபின் நேரு சாஸ்திரியின்பால் ஆதரவு காட்டினார். 1964 ஜனவரியில் ஓர் அமைச்சரை நியமிக்கும்போது காமராஜ் திட்டத்தால் விலகிய அமைச்சர்களில் சாஸ்திரி ஒருவரையே மீட்டுக்கொண்டார். மொரார்ஜி தேசாய் போட்டியிடாமல் சாஸ்திரி பிரதமரானார். சாஸ்திரி அமைச்சரவையை விரிவுபடுத்தினார். அவர் அமைச்சரவை 1964 ஜூனில் ஏற்பட்டது. அதில் 16 காபினெட் அமைச்சர்கள், 15 ஸ்டேட் அமைச்சர்கள், 20 டெபுடி அமைச்சர்கள் இருந்தார்கள். புதிதாகச் சேர்க்கப்பட்ட அமைச்சர்களில் திருமதி இந்திரா காந்தி ஒருவர். சாஸ்திரியின் அமைச்சரவை சரிசமானமாக இருந்ததெனலாம். ஆனால், துறைகள் பிரிக்கப்பட்டது அவ்வளவு உசிதமாயில்லை. உதாரணமாக, தொழில் கன இன்ஜினீரிங்கும் ஒரு ஸ்டேட் அமைச்சர் பதவிக்கு விடப்பட்டது. சாஸ்திரி அமைச்சரவையிலும் ஓர் உள்காபினெட் இருந்ததென்பார்கள். அவர்கள் கிருஷ்ணமாச்சாரி, நந்தா, பட்டீல், இந்திரா காந்தி, சஞ்சீவிரெட்டி யாவர். சாஸ்திரி சில சீர்திருத்தங்களைச் செய்தார். பிரதமருக்கென்று ஒரு செயலகம் ஏற்படுத்திக்கொண்டார். அதற்கு ஒரு சீனியர் உத்தியோகஸ்தரைச் செயலாளராக நியமித்தார். காபினெட் செயலகம் தனியாக இயங்கிற்று. இன்னொரு சீர்திருத்தமாக, 'இரகசியம்' என்று கருதப்படாத அமைச்சரவை முடிவுகளைக் காபினெட் செயலர் பத்திரிகையாளர்கட்குக் கொடுக்க ஏற்பாடு செய்தார். முறைப்படி ஏற்படுத்தப்படாத அமைச்சரவைக் கூட்டங்களை ஏதாவது ஓர் அமைச்சர் வீட்டிலேயே நடத்தினர். சாஸ்திரி அடக்கமான குணமுடையவர். ஆகையினால், அவர் அமைச்சரவையில் பலமுள்ள அமைச்சர்கள் (Syndicate) சொல்வது போல் நடப்பார் என்று முதலில் நம்பப்பட்டது. இந்தத் தப்பு

அபிப்பிராயத்தை அவர் சிதைவு செய்தார். தாம் அமைச்சரவையை ஏற்படுத்தும்போதும் பின் மாறுதல்கள் செய்யும் போதும் ஒருவரையும் யோசனை கேட்பதில்லை என்றும், ஒருவர் வற்புறுத்தல்களுக்கும் இடம் கொடுக்கமாட்டார் என்றும், அப்படி இடம் கொடுத்தால் தாம் பிரதமர் அல்லர் என்றும் பிடிப்புடன் கூறினர். சில விஷயங்களில் அமைச்சரவையின் கருத்தைக் கேட்காமலே விவாதம் நேரிட இடமில்லாமல் விஷயங்களில் தமது கருத்தைத் தெரிவிப்பார். அணுக்குண்டை இந்தியா தயாரிக்காது என்று சாற்றினர். சீனு அணுக்குண்டு வெடித்ததன் பாதகத்தை அமைச்சரவையில் விவாதிக்கவில்லை என்று வெளிப்படையாகவும் கூறினர். சாஸ்திரி காலத்தில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்புத் தலையெடுத்தது. அது விஷயமாகச் சாஸ்திரி அமைச்சரவையை யோசனை கேட்டு வந்தார்; எதிர்க் கட்சித் தலைவர்களின் யோசனையையும் கேட்டார். காபினெட்டின் அவசரக்குழுவின் எண்ணிக்கையைப் பெருக்கினர். இந்த அவசரக்குழுக் (Emergency Committee) கூட்டங்களுக்கு உயர் சிவிலியன் ஆபீசர்களும், இராணுவ ஆபீசர்களும் வரவழைக்கப்பட்டு யோசனை கேட்கப்படுவது வழக்கம். பிரதமரும் ஜனுதிபதியுடன் நாட்டு விஷயங்களைப்பற்றி நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு விஷயத்தில் மிகவும் உறுதியுடன் இந்திய இராணுவப் படையை, கச்சு ராண் பிரதேசத்தில் புகும்படி உத்தரவிட்டார். ஐக்கிய நாடு நிறுவனத்தின் தலையீட்டால் சமாதானம் சீக்கிரத்தில் ஏற்பட்டது. சாஸ்திரி எல்லோருடைய நல்லுறவையும் பெற்று இருந்தார். சண்டை நின்றவுடன் அமைச்சரவையில் வேறுவிதமான சில பிளவு சக்திகள் தலைதூக்கின. ஒவ்வோர் அமைச்சரும் தமது துறையை ஓர் அரசு போல் ஆக்கிக் கொள்ள விரும்பினர்கள். பரஸ்பர ஒத்துழைப்பும் ஒருமைப்பாட்டு உணர்வும் சிறிது பலவீனம் அடைந்தது; பொருளாதார நிலை பல்வேறு காரணங்களால் கொஞ்சம் கடினமாயிற்று. நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி இடைக்கால வரிவிதிப்புகளைக் கொண்டு வந்தார். நான்காவது ஐந்தாண்டுத்திட்டத்தை நல்ல முறையில் அமைப்பது கஷ்டமாயிற்று. நேரு காலத்தில் இயற்றப்பட்ட நிர்வாக மொழிச் சட்டப்படி 1965ஆம் ஆண்டு வரை இந்தி புகுத்தப்படாமல் ஒத்திப் போடப்பட்டது. லால் பகதூர் சாஸ்திரி 1965 ஜனவரி 26-லிருந்து இந்தியை நிர்வாக மொழியாய்க் கொண்டுவரத் தீர்மானித்தார், இதைத் தெற்கில் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்தது. சென்னைக் காங்கிரசு அரசு பல பேர்களைச் சிறைசெய்தது. சுமார் 50 பேர்கள் போலீசார் சுட்டதில் உயிர் இழந்தார்கள். இரண்டு போலீசு,

சப் இன்ஸ்பெக்டர்கள் கொளுத்தப்பட்டுக் கொல்லப்பட்டார்கள். பொது உடைமைகளுக்கு மிகவும் சேதம் உண்டாயின. தமிழ்நாடுமட்டுமன்றி மேற்கு வங்காளமும் இந்தித் திணிப்பை எதிர்த்தது. சாஸ்திரி, நேரு கொடுத்த உறுதிமொழியைக் காப்பாற்றுவதாகக் கூறிச் சமரசம் செய்ய முயன்றார். இது திருப்தி அளிக்கவில்லை. அரசியல் அமைப்பையே திருத்த வேண்டுமென்று போராட்டம் நடந்தது.

காபினெட்டில் இந்தப் பிரச்சினையினால் ஒருமைப்பாடு ஏற்படவில்லை. இதன் காரணமாக உணவு அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியமும், பெட்ரோலியம் கெமிக்கல்ஸ் ஸ்டேட் அமைச்சர் திரு. ஓ. வி. அளகேசனும் இராஜிநாமாச் செய்தார்கள். சாஸ்திரியின் உறுதிமொழியின்மீது இருவரும் இராஜிநாமாவைத் திருப்பி வாங்கிக்கொண்டார்கள். பிளவு சமாளிக்கப்பட்டாலும், ஆத்திரம் தரக்கூடிய விஷயமாகிய மொழிப் பிரச்சினையில் அமைச்சரவை ஆழ்ந்து சிந்தித்து நல்ல முடிவை முதலிலேயே எடுக்கத் தவறியது. சில அமைச்சர்கள் அமைச்சரவையில் அமைச்சரவையோடு கலந்து சிந்திக்காமலே தங்கள் கருத்துகளைக் கூறி வந்தார்கள். உதாரணமாக, திரு. என். கே. பாடிலும், திரு. அசோக் சென்னும் சிக்கலைத் தீர்க்கத் தங்கள் தங்கள் வழிகளைக் கூறி வந்தார்கள். மக்கள் ஆட்சியில் அமைச்சரவை ஒருமனதாக அதன் கருத்தைத் தெரிவித்து மக்களின் கருத்தையும் அறிந்து முடிவு எடுக்கவேண்டுமென்ற கொள்கை மறக்கப்பட்டது. சாஸ்திரி மொழிப்பிரச்சினையைத் தீர்க்க மாநில முதலமைச்சர்களைக்கூட்டி ஆலோசித்தார். அந்தக் கூட்டத்தில் ஒரு முதலமைச்சர் (திரு. டி. என். திவாரி, பீகார்) மத்திய அமைச்சரவையில் அமைச்சர்கள் இருமனப்பட்டவர்களாய் இருப்பதைச் சுட்டிக் காட்டினார். ஜனாதிபதி டாக்டர் இராதா கிருஷ்ணன் ஒரு பொதுக் கூட்டத்தில் மக்களாட்சி மக்கள் சம்மதம் பெற்ற ஆட்சி என்றால், முன்கூட்டியே வரும் எதிர்ப்புகளைப்பற்றி ஆலோசித்துத் தவிர்க்க வேண்டுமெனக் கூறினார்.

1965 ஜூனில் மத்திய அரசு தனது புது மொழிக் கொள்கையை விளம்பரப்படுத்தியது. அதன்படி மத்திய அரசில் இந்தியும் ஆங்கிலமும் தொடர்ந்து உபயோகத்திலிருக்கும்; மத்தியப் பப்ளிக் சர்வீசு கமிஷன் தேர்வுகளுக்கு எல்லாப் பிரதேச மொழிகளையும் (14 மொழிகள்) உபயோகப்படுத்தலாம்; கல்வித் துறையில் மாணவர்கள் மும்மொழித் (அதாவது இந்தி, ஆங்கிலம், பிரதேசமொழி) திட்டத்தின்படி கல்வி பெறுவார்கள்

என்பது. இந்த முடிவு அமைச்சரவையால் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. காங்கிரசுச் செயற்குழுவும் மாநில முதலமைச்சர்களும் சேர்ந்து எடுத்தது ஆகும். இந்த முடிவு அமைச்சரவையாலோ அமைச்சரவை உட்குழுவாலோ எடுக்கப்படவில்லை. இந்த மொழி விஷயத்தில் அமைச்சரவை முழுப்பொறுப்புடன் செயற்படவில்லை என்று பலர் கருதினர். ஒரிசா முதலமைச்சர்கள்மேல் சாற்றப்பட்ட சில ஊழல் புகார்களைப்பற்றியும் காபினெட் சரிவர நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால் சாஸ்திரி அமைச்சரவையில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் பாராளுமன்றத்தில் ஓர் எதிர்க்கட்சி உறுப்பினரால் கொண்டுவரப்பட்டது.

சாஸ்திரி, நிதி அமைச்சர் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியின் மேல் சாற்றப்பட்ட சில குற்றங்களைச் சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி விசாரிக்குமாறு அனுப்பிவைத்தார். திரு. டி.டி. கிருஷ்ணமாச்சாரி தம்மீது சுமத்தப்பட்ட அவதூறுகளைப் பிரதமரே விசாரித்துப்பார்க்காது, நீதிபதியிடம் விசாரணையை விட்டுவிட்டதால் தாம் பிரதமரின் நம்பிக்கையை இழந்ததாக எண்ணி இராஜிநாமாச் செய்தார். சாஸ்திரி தாம் தனிப்பட்ட பொறுப்பு எடுத்துக்கொள்ள முடியாததால், நீதிபதி விசாரணைக்கு விட்டுவிட்டதாகக் கூறினர். திரு. கிருஷ்ணமாச்சாரி இந்த வழி காபினெட் ஆட்சிமுறையைக் கடினமாக்கும் என்று கூறினர். திரு. கிருஷ்ணமாச்சாரி இராஜிநாமா காபினெட்டின் பலவீனங்களை வெளிப்படுத்தியது. ஒவ்வோர் அமைச்சரிடமும் நிதித் துறையின் கட்டுப்பாடின்றி இயங்க வேண்டுமென்ற போக்குக் காணப்பட்டது. இந்த விஷயத்திலும் அமைச்சர்களின்மேல் சுமத்தப்படும் அவதூறுகளை விசாரிக்க அமைச்சரவை ஒரு பொறுப்பும் எடுக்காமலிருந்ததும் குறைபாடுகளாகக் கருதப்பட்டது.

நேரு காலத்தில் அமைச்சர்கள் இராஜிநாமா, திருத்தமான காரணங்கள்கொண்டதாயும் அமைச்சரவைச் சம்பிரதாயங்களை ஒட்டியதாகவும் இருந்தன. லால்பகதூர் சாஸ்திரி காலத்து இராஜிநாமாக்கள் அரசியல் போக்குகளினலும், சொந்த மரியாதையின் பொருட்டும் நேர்ந்தன. அமைச்சரவைப் பொறுப்பு, கட்சி ஒழுங்குச் சிதைவால் சிறிது தளர்ச்சி அடைந்ததெனலாம். மக்கள் ஆட்சியில் இந்தக் கூற்றுகளின் விளைவுகளால் உடனடியாக அமைச்சரவைக்கு அபாயம் இல்லையாயினும் அடுத்த தேர்தலில் சிறிதளவு அது பிரதிபலிக்கிறது.

சாஸ்திரிக்குப்பின் திரு. குல்ஜாரிலால் நந்தா இடைக்காலத் தாற்காலிகப் பிரதமராக இருந்தபோது சாஸ்திரி தாஷ்கென்டில்

செய்த இந்தியா - பாகிஸ்தான் சமாதானத்தைப்பற்றிய ஒப்பந்தத்தை ஒப்புக்கொண்டதால், அந்த ஒப்பந்தத்தைப்பற்றிய தமது மறுப்பைத் தெரிவிப்பதற்கு அமைச்சர் மகாவீரர் தியாகி இராஜிநாமாச் செய்தார். இதுவும் அமைச்சரவைக் கருத்துக்குத் தமது கருத்துவேறுபாட்டால் இராஜிநாமாச் செய்வது முறை என்பதை விளக்கியது. திரு. அஜித் பிரசாத் ஜெயின் தமது உணவு அமைச்சர் பதவியை இராஜிநாமாச் செய்தது கருத்து வேறுபாட்டால் அன்று. உணவு தானியங்கள் உற்பத்தி, விநியோகம் முதலானவைகளில் அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் வெற்றிகரமாக இல்லை என்று பாராளுமன்றத்தில் புகார் இருந்தபடியால் இராஜிநாமாச் செய்தார். இந்த நடவடிக்கைகளுக்கு முழுக் காபினெட்டும்தான் பொறுப்பு. எனினும் காபினெட் இராஜிநாமாவை எவரும் வற்புறுத்தவில்லை. பிரதமரும் அமைச்சரது நிர்வாகம் திருப்தி இல்லை என்று கருதவில்லை. பிரதமரையும், முழுக் காபினெட்டையும் விட்டுவிட்டு தனிப்பட்ட துறையைப் பாராளுமன்றம் குறைகூறினுல், சம்பந்தப்பட்ட அமைச்சர் இராஜிநாமாச் செய்ய நேரிடுகிறது. இது கூட்டுப் பொறுப்புத் தத்துவத்தில் கட்டுப்பட்ட முறை இல்லாவிட்டாலும், நடைமுறையில் இவ்வாறு முடிகிறது ஒரேகட்சி ஆதிக்கத்தில் இருக்கும்போது. அந்தக் கட்சியைத் தோற்கடிக்க இயலாமற் போனுல், தனிப்பட்ட அமைச்சர்களை அகலச் செய்வது இந்தியாவில் ஒரு தனிக் கூற்றுகக் காணப்படுகிறது. எதிர்ப்புக் கட்சி வலுப்பெற்றுல் இந்த முறைக்கு இடம் இராது.

(இ) இந்திரா காந்தி சகாப்தம்

அமைச்சரவை ஆட்சியில் பிரதமர் இறந்தாலோ வேறு காரணங்களால் பதவியினின்று நீங்கினுலோ அடுத்த பிரதமரை எப்படி நியமிப்பது என்பது மிக முக்கியமான பிரச்சினை. இங்கிலாந்தில் சர்ச்சில் (Sir Winston Churchill) இரண்டாவது உலக யுத்தத்தில், தாம் உயிரிழந்தால் (விமானத்தாக்குதல்கள் போர்முனையில் மட்டும் அல்லாமல், சிவிலியன் நகரங்கள்மீதும் கடுமையாக இருந்தன). தமக்குப்பின் சர் அந்தோனி ஈடன் (Sir Anthoney Eden) பிரதமராகப் பணிபுரிய வேண்டுமென்று நியமித்தார். போர்க் காலங்களில் எதிர்பாராத முறையில் ஏதாவது நடந்துவிட்டால், அப்போது பிரதமர் ஸ்தானத்திற்குப் போட்டி இருக்கக்கூடாது என்று இந்த முறை கையாளப்படுவது பொருத்தம். ஆனுல், சாதாரண காலங்களில் போட்டி இருக்கத்தான் செய்யும். ஒரே கட்சியூராலான அமைச்சரவையின்

பிரதமர் ஸ்தானத்துக்கு வாரிசு யாரென்று முன்னமே ஏற்படுத்துவது மக்கள் ஆட்சித் தத்துவத்துக்கு முரண் ஆனது. இந்தக் காரணம்பற்றியே நேரு தமக்குப்பின் யார் பிரதமர் என்பதைப் பற்றி நியமிக்கவும் இல்லை; பேசவும் இல்லை. பிரதமரால் ஒருவர் நியமிக்கப்பட்டாலும், அமைச்சரவையோ முக்கியமான கட்சியின் பார்லிமெண்டரிக் குழுவோ அதை மேற்கொள்ள வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. அத்தகைய விதியும் எந்தக் கட்சியின் விதிகளிலும் கிடையாது. இதுவரை இந்தியக் காபினெட் வரலாற்றில் தேர்தல் என்ற மக்களாட்சித் தத்துவமே பின்பற்றி-வரப்பட்டுள்ளது. நேருவும் சாஸ்திரியும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். திருமதி இந்திரா காந்தி போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

லால்பகதூர் சாஸ்திரி 1966 ஜனவரி 11 அன்று தாஷ்கென்டில் இறந்தார். ஜனாதிபதி உடனே திரு. குல்ஜாரிலால் நந்தாவைத் தாற்காலிகப் பிரதமராக நியமித்தார். நேரு இறந்தபோது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் லால்பகதூர் சாஸ்திரி என்று கருதப்பட்டு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். சாஸ்திரி இறந்தபோது அவ்வளவு தெளிவாக ஒருவர் காணப்படவில்லை. திரு. குல்ஜாரிலால் நந்தா அமைச்சரவையில் மூத்தஸ்தானம் பெற்றவராயினும் சில வட்டாரங்களில் அவர் ஏற்கப்படவில்லை. திரு. மொரார்ஜி தேசாயும் சில வட்டாரங்களில் ஏற்கப்படவில்லை. திருமதி இந்திரா காந்தி அமைச்சர்களிடையேயும், மாநில முதலமைச்சர்களிடையேயும் செல்வாக்கு உடையவராகக் காணப்பட்டார். கட்சிப்பிரமுகர்கள் திருமதி இந்திரா காந்தியைக் கட்சிக்கூட்டத்தில் பிரேரேபிக்க முடிவு செய்தார்கள். தமக்கும் தகுதி இருக்கிறது என்ற நம்பிக்கையில் திரு. மொரார்ஜி தேசாய் கொள்கை அடிப்படையில் போட்டியிட்டார். இந்திரா காந்தி 355 வாக்குகளும், தேசாய் 169 வாக்குகளும் பெற்றார்கள். ஜனாதிபதி, திருமதி இந்திரா காந்தியைப் பிரதமராக நியமித்தார். இந்தியக் காபினெட் வரலாற்றில் பிரதமர் பதவிக்குப் போட்டி ஏற்பட்டது இதுதான் முதல் முறை. மக்கள் ஆட்சித் தத்துவத்தில் இரகசிய வாக்குமுறையில் தேர்ந்தெடுப்பது நல்லது என்று பலர் கருதுவர். ஆனால், போட்டி தலைப்பட்டால், ஆதரவு தேடுதலால் (canvasing) சலசலப்பு இருந்தே தீரும். அது தவிர்க்க முடியாதது. (பின் ஜனாதிபதி தேர்தலிலும், இம் மாதிரியே இருக்க நேரிட்டது). பிரதமர் தேர்தல் நாகரிகமாக நடந்தது என்று அடுத்துவந்த இந்தியக் குடியரசு தின ஒலிபரப்பில் ஜனாதிபதி கூறினார்.

இந்தப் பிரதமர் தேர்தலில் குறிப்பிடத்தக்கது, திருமதி இந்திரா காந்தி கீழ்ச்சபை உறுப்பினர் அல்லர்; இராஜ்ஜியசபை உறுப்பினராக இருந்தார். சாதாரணமாக, கீழ்ச்சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் பிரதமராக வருவது சிறப்பு என்று கருதப்படுவதுண்டு. ஏனெனில், லோக் சபைக்கு ஒருவர் மக்களின் நேரிடை வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்படுகிருர். இந்தத் தேர்தலில் காங்கிரசுத் தலைவரும், மாநிலக் காங்கிரசு முதலமைச்சர்களும் லோக்சபை உறுப்பினர்களை இந்திரா காந்திக்கு வாக்களிக்க வேண்டினர்கள் எனக் கூறப்பட்டது. அதில் ஒன்றும் தவறில்லை. ஏனெனில், அநேகமாக எல்லா மாநிலங்களிலும் ஒரே கட்சியே ஆளுங்கட்சியாக இருந்தது. வேறு வேறு கட்சிகள் இருந்தால், இது சிரமமான காரியமாக இருக்கும். (ஒரு மாநில ஆளுநரும் இந்திரா காந்திக்கு வேலை செய்தார். ஆளுநர் கட்சிக்கு அப்பாற்பட்டவர் ஆகையால் அது உசிதமன்று.)

இந்திரா காந்தி வெற்றி பெற்றவுடன் காங்கிரசுப் பார்லி மென்டரிக் கட்சிக் கூட்டத்தில் பேசும்போது தாம் ஒரு ‘ தேச சேவிகர் ’ என்றும், தேர்தலில் தமக்கு யார் வாக்களித்தாலும், அளிக்காவிட்டாலும் தமது ஆட்சிக்கு எல்லோரும் ஆதரவு தருவார்கள் என்று நம்புவதாகவும் கூறினர். இந்திரா அமைச்சரவை 16 காபினெட் அமைச்சர்கள், 18 ஸ்டேட் அமைச்சர்கள், 17 டெபுடி அமைச்சர்களுடன் பணியைத் தொடங்கியது. இந்த அவையில் குறைந்த வயதுள்ளவர்களின் எண்ணிக்கை அதிக எண்ணிக்கையாய் இருந்தது. பிரதமர் இந்திரா காந்தியின் வயது 48. அமைச்சரவை 1966 ஜனவரி 24 அன்று பதவி ஏற்றது. இரண்டு பழைய அமைச்சர்கள் விடப்பட்டார்கள் ; மூன்று புதியவர்கள் (அசோக் மேத்தா, பாதக், பக்ருடீன் அகம்மது) சேர்க்கப்பட்டார்கள்; துறைகளில் சிற்சில மாறுதல்கள் செய்யப் பட்டன. இந்திரா காந்தி பிரதமரானபோது சாஸ்திரி ஆட்சியில் சுமார் ஒன்றரை ஆண்டு தகவல் துறைக்கு ஸ்டேட் அமைச்சராக இருந்தார். (காங்கிரசுத் தலைவராகவும் சுமார் ஓர் ஆண்டு இருந்தார்). காபினெட் அமைச்சராக முன் இல்லாவிட்டாலும், ஆட்சி விஷயங்களை நன்கு உணர்ந்திருந்தார். ஏனெனில், தந்தை ஜவஹர்லால் நேருவுடன் கூட இருந்ததன் பழக்கமும் தமது அரசியல் பயிற்சியும் அவருக்கு உதவின. பதவியேற்ற சில மாதங்களுக் குள்ளேயே ஃபிரான்சு, அமெரிக்கா, ருஷ்யா முதலிய வெளிநாடுகளுக்கு விஜயம் செய்தார். காங்கிரசில் பல தலைவர்கள் அப்போது இருந்தாலும், அகில இந்தியத் தலைவர் என்று வெளிநாடுகளுக்குத் தெரிந்தவர்கள்

நேருவுக்குப் பின் வெகு சிலரே. இந்திரா காந்திக்கு வெளிநாடுகளில் போதுமான மரியாதை இருந்தது. காங்கிரசுக்குள்ளே கட்சிக்கும் அரசாங்கத்துக்கும் ஒற்றுமை குறையத் தலைப்பட்டது. 1966 மே 23-ல் இந்தியக் காங்கிரசுக் கமிட்டிக் கூட்டத்தில் இந்திரா காந்தி இந்தப் போக்கைக் குறித்து வெகு கடுமையாகப் பேசினர். 'கட்சி நாட்டுக்குத் தேவைப்படுகிற சமூகப் புரட்சியைக் கொண்டுவரவில்லை. எனவே, ஆட்சிதான் இதைச் செய்யவேண்டி இருக்கிறது. கட்சியும் ஆட்சியும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டு'மென வற்புறுத்தினர். பதவி ஏற்ற 11 மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியால் 1966 நவம்பர், 7 அன்று மந்திரி சபையின்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. பிரதமர் நாட்டில் வன்முறை வளர்வதைக் கண்டித்துப் பேசும்போது, எதிர்க்கட்சி வலுவில்லாத போதிலும் தமது ஆட்சி அதன் குறை கூறுதல்களைக் கவனமாகக் கேட்பதாகவும், ஆனல் எதிர்க்கட்சி சட்ட ஒழுங்கீனத்தை அடக்கும்போது ஆட்சியைக் குறை கூறினல் மக்கள்ஆட்சியே இராமல் போய்விடும் எனவும் கூறினர். காபினெட்டில் பிரதமர் தமது பொறுப்பை முறைப்படி கடைப்பிடித்தார் எனக் கூறப்படுகிறது. நேருவை ஒருவரும் கேள்வி கேட்பதில்லை. சாஸ்திரியைக் கேள்வி கேட்காமலே எல்லாம் நடந்தது என்று கூறுவது வழக்கம். இந்திரா காந்தி தலைமையில் காபினெட் கூட்டங்கள் தவருமல் நடந்து வந்தன. காபினெட் குழுக்கள் நல்ல முறையில் பணியாற்றப் பிரதமர் வாய்ப்புத் தந்தார். சீரிணைப்புத் (co-ordination) துறையை நிதித்துறையினின்றும் எடுத்துக் காபினெட் செயலகத்தில் சேர்த்துவிட்டார். அமைச்சர்களின் அந்தஸ்திலும் துறைப் பிரிவுகளிலும் சிற்சில நல்ல மாற்றங்களும் செய்தார். சில ஸ்டேட் அமைச்சர்கள் காபினெட் அமைச்சர்களாக ஆனர்கள்.

பிரதமர் பதவி ஏற்ற ஓர் ஆண்டுக்குள்ளேயே 1967 மார்ச்சில் நடைபெற்ற இந்தியாவின் நான்காவது பொதுத் தேர்தலுக்குப் பிரசாரத்தில் இறங்க வேண்டி இருந்தது. பல மாநிலங்களில் மொத்தம் சுமார் 15,000 மைல்கள் சுற்றி வந்து பிரசாரம் நடத்தினர். தேர்தலுக்கு வேட்பாளர்களை முடிவு கட்டுதல், முன் தேர்தல்களைவிட அதிகச் சிரமமான வேலையாயிருந்தது. தாமும் முறைப்படி இராஜ்ஜியசபை ஸ்தானத்தை விட்டு லோக்சபை ஸ்தானத்துக்குப் போட்டி இட்டார். உத்தரப் பிரதேசத்து ரேபாரில்லி என்ற தொகுதியில் போட்டியிட்டார். இந்தத் தேர்தலில் பல தொகுதிகளில் இளைஞர்

களுக்குப் போட்டியிட அதிக வாய்ப்புத் தரப்பட்டது. இதனால் அதிக எதிர்ப்பு இல்லையாயினும் கட்சிக்குள்ளேயே சிலர் முணுமுணுத்தார்கள். ஆனால், முதிய தலைவர்கள் பல விடங்களில் தோல்வி அடைந்தார்கள். எவ்வளவு ஆதிக்கம் செலுத்தியவராக இருந்தாலும், அவர்களின்பேரில் குற்றம் இருந்ததால் அவர்கள் கைவிடப்பட்டார்கள். சில மாநிலங்களில் காங்கிரசு பெரும்பான்மையை இழந்து, எதிர்க்கட்சி நிலைக்கு வந்துவிட்டது. பாராளுமன்றத்திலும் பெரும்பான்மை சிறிது குன்றிவிட்டது; ஆனால், அதை இழக்கவில்லை.

திருமதி இந்திரா காந்தி காபினெட் சபையின் ஆரம்ப காலத்திலே பல பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியிருந்தது. முதலாவது, டாக்டர் இராதாகிருஷ்ணனுக்குப் பின் யார் ஜனாதிபதியாக வேண்டுமென்பது. பிரதமர் டாக்டர் ஜாகீர் உசேன் வரவேண்டுமென்று கருதினார். அது நியாயம் மட்டு மன்றி, இந்தியா மதச்சார்பற்ற அரசு என்பதையும் நிரூபிக்கும். இதைப்பற்றிச் சிற்சில கருத்து வேறுபாடுகள் அரசியல்வாதி களிடம் இருந்தது. இரண்டாவது இந்தியா, இஸ்ரேல் நாட்டிற்கு எதிராக அரபு நாடுகளிடம் நேசம் கொள்வது என்பதைப் பற்றியதாகும். மூன்றாவது, சோவியத் யூனியன் செக்கோஸ்லாவாகியா நாட்டுக்குள் நுழைந்து தனது ஆதிக்கத்தை ஊர்ஜிதப்படுத்தியது. நான்காவது, ருஷ்யா பாகிஸ்தானுக்குத் தளவாடங்கள் கொடுத்து உதவியது. ஐந்தா வது, கச்சுச் சச்சரவில் கிடைத்த தீர்ப்பினால் இந்தியா சில நிலப் பகுதிகளைப் பாகிஸ்தானுக்குத் தர நேர்ந்தது. இவைகளைப் பற்றி நாட்டிலும் அமைச்சரவையிலும் கருத்து வேறுபாடுகள் இருந்தன. செக்கோஸ்லோவாகியா விஷயத்தில் இந்தியா கண்டனம் தெரிவியாததைத் குறித்துத் திரு. அசோக் மேத்தா அமைச்சர் பதவியை இராஜிநாமாச் செய்தார். இது தனிப் பட்ட கருத்து வித்தியாசத்தால் எடுத்த முடிவாகையால், அமைச்சரவை பாதிக்கப்படவில்லை.

1967ஆம் ஆண்டுத் தேர்தலின் பின்பு சிண்டிகேட் என்று கூறப்பட்ட உட்குழுவின் செல்வாக்குக் குறைந்துவிட்டது. பிரதமரின் சோஷியலிசக் கொள்கையில் உள்ள ஆழ்ந்த நம்பிக் கையால் கட்சியிலுள்ள இளைஞர்களின் (Young Turks) பேச்சுக்குப் பலம் அதிகரித்தது. பாங்குகள் தேசியமயமாக்கு தலைப்பற்றியும், தொழில்களைப் பொதுமயமாக்குதலைப் பற்றியும் இளைஞர்களின் ஆதரவு பிரதமரின் அமைச்சரவைக்கு இருந்தது. பணமதிப்புக் குறைத்தலைப்பற்றிக் கருத்து வேறுபாடுகள்

நாட்டில் இருந்தன. பணமதிப்புக் குறைவு, வெளிநாட்டு யோசனையின்பேரில் நடந்தது என்றும் குறைகூறப்பட்டது. இந்த விஷயங்களில் அமைச்சரவை ஒருமனதாகச் செயலாற்றியது.

1967 பொதுத்தேர்தலில் காங்கிரசுக் கட்சிக்கு லோக்சபையில் மொத்தம் 520 இடங்களில் 282 இருந்தன. கட்சியின் உட்பிரிவால் 1969-ல் இந்தப் பெரும்பான்மை 227 ஆகக் குறைந்துவிட்டது. எனவே, திருமதி இந்திரா காந்தி அமைச்சரவை லோக்சபையில் சிறுபான்மையாகிவிட்டது. இந்திரா காந்தியின் கட்சியோடு சேர்ந்திருந்த கட்சிகளின் ஆதரவு கொண்டே ஆட்சி இயங்க வேண்டியிருந்தது. பொதுத் தேர்தலுக்குப் பின்பு எதிர்க்கட்சியில் கூட்டுப் பிரயத்தனங்கள் பல நடந்தன. சுதந்தராக் கட்சி குடியாட்சியைக் காப்பாற்ற ஒத்த மனமுடைய கட்சிகளையெல்லாம் ஓர் அணியாகச் சேர்க்க முயன்றது. சுதந்தரா, ஜனசங்கக் கட்சிகளின் இணைப்பு முயற்சி வெற்றி அடையவில்லை. பிரஜா சோஷியலிஸ்ட் கட்சி, சம்யுக்த சோஷியலிஸ்ட் கட்சிகளிடையே ஒத்துழைப்பு முயற்சியும் வெற்றியடையவில்லை. பாரதிய கிராந்தி தளம், பிரஜா சோஷியலிஸ்ட் கட்சி இரண்டும் ஒன்ருகச் சேரும் முயற்சியும் கைகூடவில்லை. கம்யூனிஸ்ட் (இந்திய) கட்சிக்கும் (Communist Party of India—C.P.I.), கம்யூனிஸ்ட் மார்க்ஸிஸ்ட் கட்சிக்கும் (Communist Party (Marxist)—C.P.M.) இடையேயுள்ள பிளவும் நீங்கவில்லை. காங்கிரசுக் (பழைய) கட்சியின் கூட்டுப் பிரயத்தனங்கள் வெற்றி பெருதலால் மிகவும் பலவீனப்பட்டது. காங்கிரசு (ஆளும்) கட்சியும் ஸ்திரமான கூட்டு ஒப்பந்தங்களைச் செய்ய முடியவில்லை. எனவே இந்த இரண்டு ஆண்டுகளில் கட்சிகளின் நிலவரம் திருப்திகரமாக இல்லை.

இந்த நிலையில் இடசாரிக் கட்சிகள் ஆளும் கட்சியை ராஜமானிய ஒழிப்பு, குடிகளின் அடிப்படை உரிமைகளைத் திருத்துவதற்கு அதிகாரம் பெறல் போன்ற சோஷியலிசக் கொள்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று வாதாட, வலசாரிக் கட்சிகள் ஆளும் கட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்தன. இதனுடன் இராஜஸ்தானம், ஹரியாஞ, மேற்கு வங்காளம் முதலிய மாநிலங்களில் ஜனதிபதி ஆட்சி புகுத்தப்படுவதைப்பற்றித் தீவிரமான வாக்குவாதங்கள் இருந்தன. மாநிலச் சுய ஆட்சிக்கான கூடுதலான அதிகாரங்களும் மொழிப்பிரச்சினை போன்ற உள்நாட்டு விவகாரங்களும், வியட்நாம், அரபு நாடு முதலிய வெளிநாட்டு விவகாரங்களும் தீவிரமாக வாதாடப்பட்டன. மத்திய அரசு ஊழியர்களின் வேலைநிறுத்தத்தைத் தடுக்க

அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட ஒரு மசோதா இடசாரிக் கட்சிகளால் எதிர்க்கப்பட்டது.

பிரதமர் இந்திரா காந்தியின் அமைச்சரவை இவற்றை யெல்லாம் சமாளிக்க வேண்டியிருந்தது. லோக்சபையில் அதனுடைய பலம் சில எதிர்க்கட்சிகளின் ஒத்தாசையால்தான் நிலைக்கவேண்டியிருந்தது. இந்த எதிர்க்கட்சிகளும் எல்லா விஷயங்களிலும் ஒரேமாதிரியாக ஆதரவு நல்குவதில்லை. ஆளும் கட்சியின் பலத்தைப் பெருக்கவேண்டியிருந்தது. காங்கிரசுப் பிளவினுல் ஏற்பட்ட இருபகுதி உறுப்பினர்களின் சார்பும் தேர்தல் மூலமாகத்தான் பகிரங்கமாக அறியக்கூடியதாக இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் மக்களின் தீர்ப்பை நாடுவதே ஜனநாயகத்தின் இலக்கணம். அதற்குப் பொதுத்தேர்தல் ஒன்றுதான் வழி. பிரதமரின் அமைச்சரவை 1970 டிசம்பர் 27-ல் லோக்சபையைக் கலைக்குமாறு தீர்மானித்தது. அமைச்சரவை யின் அவசரக் கூட்டம் அன்று மாலை நடந்தது. ஜனுதிபதி அன்று இரவு 9 மணிக்கு லோக்சபையைக் கலைக்கும் உத்தரவில் கையொப்பம் இட்டார். அந்தப் பிரகடனத்தின் வாசகம் பின்வருமாறு :

'பிரதமர் ஜனுதிபதியை டிசம்பர் 24 அன்று சந்தித்து லோக் சபையைக் கலைக்கும் ஏற்பாட்டைத் தெரிவித்தார். இந்தக் கோரிக்கைக்கு ஒரே காரணம் ஆட்சி தனது சோஷியலிச மதச் சார்பற்ற (Socialistic, Secularistic) உத்தேசங்களையும் கொள் கைகளையும் நிறைவேற்ற மக்களிடமிருந்து புது ஆணையைப் பெறுவதே என்று பிரதமர் கூறினர். அதே தினம் சிறிதுநேரத் துக்குப்பின் சில எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஜனுதிபதியைச் சந்தித்தார்கள். பிரதமர் மீண்டும் இன்று மாலை ஜனுதிபதியைச் சந்தித்து, லோக்சபையைக் கலைக்குமாறு, ஜனுதிபதிக்கு ஆலோசனை கூறும் அமைச்சரவை செய்த முடிவைத் தெரி வித்தார். சீராக ஆலோசித்தபின் ஜனுதிபதி அந்தப் பரிந் துரையை ஒப்புக்கொண்டார்.'

பிரதமர் திருமதி இந்திரா காந்தி உடனே வானெலிமூலம் பேசினர். பிரதமர் பாராளுமன்றம் கூடிய ஜனநாயகத்தில் இடைக்காலத் தேர்தலே நேர்மையான வழியென்றும் அது அசாதாரணம் இல்லையென்றும், ஆனல் நமது தேசத்தில் அதுதான் முதன்முறை என்றும் கூறினர். இந்தச் சந்தர்ப்பத்தில் தமது ஆட்சி தமது திட்டங்களை நிறைவேற்றவும், மக்களுக்குக் கொடுத்த உறுதிகளை நிறைவேற்றவும் வேறு வழியில்லை எனக் கூறினர். தமது ஆட்சி நீடித்து இருக்கவேண்டும் என்ற நோக் கத்தில் மட்டும் அல்லாமல், மக்களின் ஆவேசங்களைப் பூர்த்தி

செய்யவும் அவர்கட்கு நல்வாழ்வு அளிக்கவும் லோக்சபையைக் கலைத்து, புதுஆணையைப் பெறவேண்டும் என்றும் குறிப்பிட்டார். புதுத் தேர்தல்கள் அந்த அரசாங்க ஆண்டு முடியுமுன் நடைபெற்று, புது லோக்சபை தொடங்கப்படும் என்று உறுதிகூறினர். அரசியல் அமைப்புக்கு ஆதாரமாக உள்ள பொருளாதார, சமூக, அரசியல் உரிமைகளையும் நீதியையும் மக்களுக்குத் தரப் பல பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்றும், தமது அரசு பாங்குகளைப் பொதுவுடைமையாக்கவும் இராஜமானியங்களை ஒழிக்கவும் எடுத்துக்கொண்ட தொடக்க வேலைகட்குச் சில எதிர்ச் சக்திகளும் ஆதாயமுடையவர்களும் அவற்றை நிறைவேற்றுவதற்கு முட்டுக்கட்டை போட்டார்கள் என்றும் குறிப்பிட்டு, 'ஒரு நாட்டின் வாழ்விலே ஒரு காலத்தில் அப்போது ஆளும் அரசாங்கம் கஷ்டங்களை அறுத்தெறியவும், தீர்க்கவேண்டிய பிரச்சினைகளைத் தீர்க்கவும் அசாதாரண நடவடிக்கை எடுக்க நேரம் வருகிறது இயல்பே. இது அது போன்ற ஒரு தருணம்' எனக் கூறினர்.

ஈண்டுக் குறிப்பிடத்தக்கது லோக்சபையைக் கலைக்கும் முடிவு கடைசியாக அமைச்சரவையின் முடிவு என்று பிரதமர் ஜனாதிபதிக்குத் தெரிவித்தது ஆகும். அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பையும் அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி ஜனாதிபதி நடக்கவேண்டிய பொறுப்பையும் இது எடுத்துக் காட்டும். பிரதமரே தாம் இராஜிநாமாச் செய்வதுடன் தமது சகாக்களை விலக்குவதாகவோ, இராஜிநாமாச் செய்வார்கள் என்றோ கூறி அமைச்சரவையின் காலத்தை முடிவுசெய்யலாம். தனிப்பட்ட முறையில் அல்லாமல், அமைச்சரவை முடிவாக இதைச் செய்தது அரசியல் சம்பிரதாயத்திற்கு உகந்ததாகும். (இங்கிலாந்தில் திரு. ஹெரால்டு வில்சனும் இம்மாதிரி இடைக் காலத் தேர்தலைக் கோரினர்).

லோக்சபை கலைக்கப்பட்ட நேரத்தில் கட்சிகளின் பலம் பின்வருமாறு இருந்தது. காங்கிரசு ஆளும் கட்சி (Congres R) 228, காங்கிரசு (பழைய) (Congress O) 65, சுதந்தரா 35, ஜனசங்கம் 33, திராவிட முன்னேற்றக் கழகம் 24, கம்யூனிஸ்ட் கட்சி(இந்தியா) 24, கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்) 19, சம்யுக்த சோஷியலிஸ்ட் 17, பிரஜா சோஷியலிஸ்டு 17, ஐக்கிய சுயேச்சையாளர் 25, பாரதிய கிராந்தி தளம் 10, ஒன்றிலும் சேராதவர்கள் 24, காலி இடம் 3. மொத்தம் (சபாநாயகர் தவிர்த்து) 522.

இந்த இடைத்தேர்தல் முடிவைப்பற்றிப் பல கருத்துகள் இருந்தன. ஜனசங்கம் (தலைவர் திரு. வாஜ்பாய்) இடைத்

தேர்தல் அரசியல் அமைப்பு ஒழுங்குக்கு மாருனது என்று கருதியது. காங்கிரசுச் (பழைய) செயலர் (திரு சர்மா) சிறுபான்மைக் கட்சிக்குத் தலைவராக இருக்கும் பிரதமர் லோக்சபையைக் கலைக்க ஜனுதிபதியைக் கோருவது வாதுக்குரியது எனக் கூறினுர். சுதந்தராக் கட்சித் தலைவர் (திரு. என். ஜி. ரங்கா) சிறுபான்மை ஆட்சி விடுத்த சவாலை ஜனநாயகக் கட்சிகள் காலந்தாழ்த்தாமல் ஒன்றுகூடி எதிர்க்கவேண்டும் எனக் கூறினுர். திரு. கே. காமராஜர் இடைத்தேர்தல் எதிர்பாராதது அன்று என்றும், பழைய காங்கிரசு தேர்தலில் போட்டியிட ஆயத்தமாக வேண்டுமெனவும் கூறினுர். தமிழ்நாடு முதலமைச்சர் லோக்சபையைக் கலைத்தல் மக்களால் எதிர்பார்க்கப் பட்டதுதான். ஆனுல், அதைத் தவிர்த்திருக்கலாம் எனவும் கூறினுர். பலர் திருமதி இந்திரா காந்தியின் முடிவு சூதாட்டக் காரனின் தைரியம் போன்றது என்று கூறினுர்கள். இடைக் காலத் தேர்தல்களை ஒரே காரணத்தால்தான் தவிர்க்க முடியும். ஆளும்கட்சி சிறுபான்மையிலிருந்து புதுத்தேர்தலைக் கோரினுல், எதிர்க்கட்சி அல்லது எதிர்க்கட்சிகள் வெளியேறும் கட்சியின் இடத்திலே வேறு ஒரேகட்சி அரசு அல்லது கூட்டு ஆட்சியை ஏற்படுத்த நம்பிக்கையுடன் முன்வந்தால் புதுத்தேர்தல் தேவை இல்லை. 1970 டிசம்பரில் பாராளுமன்றத்தில் வேறு எந்த ஒரு கட்சிக்கும் அந்த வாய்ப்பு இல்லை. எனவே, ஜனுதிபதி வேறு கட்சியை அமைச்சரவை ஏற்படுத்த அழைக்காமல், லோக் சபையைக் கலைத்தது பொருத்தமாகும். திரு. ரங்கா அதற்கு முன்பு இடைக்கால அமைச்சரவை ஏற்படுத்த வேண்டுமென ஒரு கருத்துக் கூறினுர். அதற்கும் வழிஇல்லை; இடைக்காலத் தேர்தல் கட்சிப் பிரிவினைக் குழப்பங்களைத்தீர்த்து அரசியல் நிலையைத்தெளிவுபடுத்தும் அளவிலாவது ஏற்கத்தக்கது என்று சிலர் கருதினர். பொதுவாக அமைச்சரவை ஆட்சியின் தத்துவ அடிப்படையில் இடைக்காலத்தேர்தல் பொருத்தம்இல்லை எனலாகாது.

(மேற்கு வங்காள மாநிலத் தேர்தலையும் இந்த இடைத் தேர்தலுடன் சேர்த்து நடத்த அரசாங்கம் முடிவுசெய்தது. தமிழ்நாட்டு முதலமைச்சர் தமிழ்நாட்டுச் சட்டசபையைக் கலைக்க முடிவுசெய்து அதன்படியே ஆளுநரும் உத்தரவிட்டார்).

இடைத்தேர்தல் 1971 மார்ச்சில் நடைபெற்றது. புதுக் காங்கிரசு பெரிய வெற்றி பெற்றது. கட்சிகளுக்குக் கிடைத்த இடங்கள் பின்வருமாறு: லோக்சபையின் மொத்த இடங்கள் 518. அதில் புதுக் காங்கிரசு 350. கம்யூனிஸ்டு (மார்க்ஸிஸ்டு) 25, கம்யூனிஸ்டு (இந்தியா) 23, திராவிட முன்னேற்றக் கழகம் 22,

ஜனசங்கம் 22, பழைய காங்கிரசு 16, டி.பி.எஸ். 10, சுதந்தரா 8, முஸ்லிம் லீக் 4, ஆர். எஸ். பி. 3, சம்யுக்த சோஷியலிஸ்டு 3, பிரஜா சோஷியலிஸ்டு 2, மற்றையவர் 27.

திருமதி இந்திரா காந்தியின் புதுக் காங்கிரசுக் கட்சி லோக் சபையின் மொத்த இடங்களில் 2/3 பாகத்திற்குமேல் சிறிது அதிகமாகவே பெற்றது; தெளிவான பெரும்பான்மைக் கட்சியாக நின்றது. ஜனாதிபதியின் அழைப்பின்பேரில் திருமதி இந்திரா காந்தி ஒரேகட்சி மந்திரி சபையை ஏற்படுத்தினார். மொத்தம் 36 உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவை 1971 மார்ச்சு 18 அன்று உத்தியோகப் பிரமாணம் எடுத்தது. திருமதி இந்திரா காந்தி பிரதமரானார். (துணைப் பிரதமர் —Deputy Prime Minister— என்று ஒருவரும் நியமிக்கப் படவில்லை.) காபினெட்டில் சேர்க்கப்பட்ட அமைச்சர்கள் 12 பேர். அவர்கள் திரு. பக்ருதீன் அகம்மது, ஒய். பி. சவான், ஜகஜீவன் ராம், சுவரண்சிங்கு, கெ. அனுமந்தையா, டாக்டர் கரண்சிங்கு, இராஜ்பகதூர், மோய்னுல், ஹக் சௌதுரி, சித்தார்த்த சங்கர் ரேய், எப். ஆர். கோகலே, எஸ். மோகன் குமாரமங்கலம், கெ. கெ. ஷா ஆவர். இந்தத் தேதிக்குப் பின் மாறுதல்களுடன் 1972 ஏப்ரலில் இருந்த அமைச்சர்களின் பட்டியலைப் பிற்சேர்க்கையில் கண்டு கொள்க. இது திருமதி இந்திரா காந்தியின் இரண்டாவது அமைச்சரவை. இது காங்கிரசுக் கட்சியின் பிளவினால் பெரும்பான்மையை இழந்து பிற கட்சிகளின் ஆதரவுடன் இயங்கியது. மூன்றாவது அமைச்சரவை முழுப் பெரும்பான்மையைப் பெற்றது. பிறகு 1972 மார்ச்சில் நடந்த மாநிலத் தேர்தல்களிலும் புதுக் காங்கிரசுக்கட்சி பலமான வெற்றி பெற்று அமைச்சரவைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த விளைவு முன் நேரு காலத்தில் இருந்ததுபோல் ஒரே கட்சி ஆட்சியாக மீண்டும் நேரிடும் என்று கூறுவாரும் உண்டு. லோக்சபையில் அமைச்சரவையைத் தோற்கடித்து மாற்று ஆட்சியை ஏற்படுத்தக் கூடிய தனி வலிவுகொண்ட கட்சி வேறு இல்லை. எனவே, இப்போதுள்ள ஆளும்கட்சியின் அமைச்சரவை அசைவின்றி இருக்கக் கூடும். 1971 மார்ச்சுத் தேர்தலின்பின் அமைச்சரவை நடவடிக்கைகள் அண்மைக் காலத்தினதாகை யால் அவற்றை ஈண்டுக் கூறுவது தேவையில்லை. தேர்தல் நடப்பைப்பற்றிச் சிலர் சில குறைகளைக் கூறினாலும், இந்தியாவில் பாராளுமன்றம் கொண்ட மக்கள்ஆட்சியும் ஒழுங்கான அமைச்சரவையும் வெற்றிகரமாக இயங்குவதற்குத் தடையில்லை என்பது தேற்றம்.

11. அமைச்சரவை ஆட்சியில் பிரதமரின் முக்கியத்துவம்

பாராளுமன்றம் கொண்ட மக்கள் ஆட்சி என்கிற கட்டடத்திற்கு அமைச்சரவை என்பது சிகரம் போன்றது. அந்தச் சிகரத்துக்குப் பிரதமர் நெற்றிக்கல் (keystone) போன்றவர். இது அரசியல் மேதை மார்லி பிரபு கூறிய வாக்கு. எல்லா அமைச்சர்களும் ஒரே நிலையில் இருந்தாலும், சமமான உரிமையுடன் பேசினாலும், ஒருவர் போலவே மற்றவருக்கு வாக்குரிமை இருந்தாலும், பிரதமர் என்பவர் சம அந்தஸ்துள்ளவர்களிடையே முதல்வராகவும், சிறப்பான அதிகாரமுடையவராகவும் இருக்கிறார். பாராளுமன்றத்தின் நம்பிக்கையை அவர் பெற்றிருந்தால் ஏகாதிபத்தியமான அதிகாரங்களைக்கூட அவர் செலுத்த வாய்ப்பு இருக்கும். இது பாராளுமன்றத்தின் பெரும்பான்மைக் கட்சியின் தலைவர் என்ற காரணத்தினால் மட்டும் அன்று. அரசியல் அமைப்புப்படி பாராளுமன்றம் சட்டங்கள் செய்ய, நீதிமன்றம் அந்தச் சட்டங்களின்படி மக்களின் உரிமைகளைக் காப்பாற்ற, ஆட்சியில் நடக்கும் ஒவ்வொரு காரியமும் சட்டத்துக்கு முரணாகாமல், மக்களுடைய நலனையும் நாட்டின் பாதுகாப்பையும் வளர்க்கப் பிரதமர் ஜனாதிபதிக்குக் கட்டுப்பட்டவர். நிர்வாகத்துக்கும் ஜனாதிபதிக்கும் தொடர்பு பிரதமர் தாம். இன்னும், கூட்டாட்சியியலில் (Federation) மாநிலங்களில் வெவ்வேறு கட்சி ஆட்சிகள் இருந்தாலும், எல்லோருடைய நம்பிக்கையையும் ஆதரவையும் பெற்று நாட்டின் ஒருமைப்பாட்டை வளர்க்க வல்லவர் பிரதமர்தாம். மாநிலங்களில் வெவ்வேறு அரசியல் கட்சிகள் பதவியில் இருந்தால், பிரதமர் பொறுப்புப் பன்மடங்காய் விடுகிறது. மாநிலங்களில் ஆளும்கட்சி வலுவுடையதாய் இல்லாமல் போனாலும், ஒற்றுமை இழந்தாலும், ஆளும் கட்சியினர் வேறு கட்சிக்கு மாறினாலும்,

பிரதமர் அந்தக் கட்சிக்கு உதவியாயும் இருக்கலாம்; பாதகமாகவும் இருக்கலாம். மாநிலங்களில் ஜனாதிபதி ஆட்சி ஆளுநர் ஆலோசனையின்மீது புகுத்தப்பட்டாலும், பிரதமர் ஜனாதிபதிக்குத் தரும் ஆலோசனைப்படிதான் செயல்கள் நடக்கும். மாநிலங்களில் ஏதாவது ஒரு கட்சியின் ஆட்சி வலுக் குறைந்து போகும்போது, அதை ஆட்சியிலிருந்து விலகச் செய்வதில் பிரதமரின் வாக்குச் செல்லுபடியாகும். மாநிலங்களில் ஜனாதிபதி ஆட்சியைப் புகுத்த ஜனாதிபதிக்கு ஏகாதிபத்தியம் இருக்கிறது என்று கூறுவது வழக்கம். எனினும், பிரதமரின் வற்புறுத்தலாலோ உடன்பாட்டாலோதான் அது நடைபெறும். கூட்டாட்சியில் (Federation) இந்தக் கூற்று மேலும்மேலும் முக்கியத்துவம் பெறும். இது மாநிலங்களில் அசைவில்லாத ஆட்சியைக் காப்பாற்ற நல்ல தூண்டுகோலாகவும் அமையும்.

பிரதமர் ஜனாதிபதியின் செயல்முறை பழுதுபடாமல் நடைபெற மிகவும் உதவியாய் இருக்கக்கூடும். அரசியல் அமைப்பை அனுசரணையுடன் நடத்துவதற்கு உள்ள துணையாகவும் இருக்கலாம்; சில சமயங்களில் பிரச்சினைகளையும் எழுப்பலாம். அரசியல் அமைப்பைக் காப்பாற்றுபவர் ஜனாதிபதிக்கு அடுத்தபடியாகப் பிரதமர் என்று கூறினால் மிகையாகாது. பாராளுமன்றத்துக்கும் அமைச்சரவைக்கும் இடையே நின்று ஆட்சியின் எண்ணங்களையும் செயல்களையும் விளக்கிக் கூறவும், மக்களின் விருப்பங்கள், குறைகள் முதலியவைகளைப் பாராளுமன்றத்தில் உறுப்பினர் கூறும் முறையீடுகளைக் கவனத்தோடு ஏற்று அதிகாரத்துடன் தமது அமைச்சரவையைச் செயற்படுத்த வல்லவர் அவர் ஒருவரே. பாராளுமன்றத்தில் எல்லா அமைச்சர்கட்கும் பரிந்துபேசி ஆட்சியின் மதிப்பைக் காப்பாற்றுபவர் அவரே. எதிர்க்கட்சிகள், அமைச்சர் அணிவகுப்பைத் (Treasury Bench) தாக்கும்போதும், தக்கசமயத்தில் தாம் தலையிட்டு நிலைமையைச் சமாளித்து அமைச்சரவையைக் காப்பாற்றுபவரும் அவரே. ஜனாதிபதிக்கு ஆலோசகர் இருப்பதுபோல, பாராளுமன்றத்தில் அமைச்சர் அணிக்குத் தளகர்த்தர்போலப் பிரதமர் நிற்கிறார். எதிர்க்கட்சிகளின் வாதாட்டத்தில், சம்பந்தப்பட்ட அமைச்சர் இடங்கொடுக்காது சாமர்த்தியம் காட்டும்போது, நியாயமான விஷயங்களில் பிரதமர் தலையிட்டு எதிர்க்கட்சியின் முறையீடுகளை ஏற்றுக்கொள்ளும் சுயஅதிகாரம் படைத்தவர் பிரதமர். எனவே, பிரதமர் தமது உதார குணத்தினால் எதிர்க்கட்சிக்கு நண்பராகவும் இருக்கக் கூடும். எனவே, மக்கள்ஆட்சியில் பாராளுமன்ற முறையில் பிரதமர் காப்பாளராகவும் விளங்கவேண்டியவர் ஆவார். எனவேதான், பிரதமர் ஆளுங்கட்சியினர்

இடையே மட்டும் செல்வாக்குடையவராக இருந்தால் போதாது; நாட்டிலும், எல்லாக் கட்சிகளின் இடையேயும் நன்மதிப்புப் பெற்றவராக இருத்தல் வேண்டும். அம்மட்டுமன்றி வெளி நாட்டு விவகாரங்களில் திறமையுடனும் சுமுகமாகவும் வெற்றி பெற வேண்டுமென்றால், பிரதமரின் விவேகமும் பெருந்தன் மையும் பிற நாட்டாராலும் மதிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். இந்தியா, சார்பற்ற வெளி நாட்டுக் கொள்கையைக் (Non-alignment) கடைப்பிடித்ததால், உலகத்திலுள்ள இரண்டு அணிகள் (Communist Countries, Democratic Countries) நாட்டினரிடையேயும் நம்பிக்கையும் நன்மதிப்புமுடையவராக வும் இருத்தல் வேண்டும். காபினெட் சகாக்களையும், கட்சிப் பரிவாரங்களையும் மரியாதையுடன் ஆனால் கட்டி ஆளும் திறமை யுடையவராய் இருத்தல் வேண்டும். மேலும், பிரதமர் நிர்வாகத் துக்குத் தலைவராகையினால், அதிகார வர்க்கத்தினர்களுடன் நல்ல தொடர்புகொண்டவராயும், திறமையுடன் செயல்படுத்து பவராயும், தக்க மரியாதையுடன் நடத்துபவராகவும் இருத்தல் வேண்டும்; மக்களிடத்தே அன்பும் செல்வாக்கும் கூடியவராய் இருத்தல்வேண்டும். அரசியல் அமைப்பின் இயக்கும் நியதிகளை இடைவிடாது கருத்தில்கொண்டு செயற்படுபவராக இருத்தல் வேண்டும். சோர்வின்மை, நடுவுநிலைமையை இழக்காமை, வினைத்திட்பம், பேச்சுவன்மை, சான்றாண்மை முதலியவற்றைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்; இந்திய ஆட்சியின் மந்திர மொழியான 'வாய்மையே வெல்லும்' (Satyameva Jayate) என்னும் குறிக்கோளைத் தாமும் கடைப்பிடித்து, தம் ஆட்சியை யும் கடைப்பிடிக்கச் செய்யும் திறன் உடையவராகவும் காணப் படவேண்டும். இந்தியா, பல்வேறு மதம், ஜாதி, பிரிவுகள் கொண்ட மக்கள் இனமுடைய நாடு. ஆகையால், ஒவ்வொரு வருடைய உரிமையையும் குறைக்காது, சமரசத்தை வளர்க்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். இந்தியா, இளமையான 'மக்கள் ஆட்சி'யாகையால், நல்ல சம்பிரதாயங்களை (Democratic precedents) வளர்த்தலும் வேண்டும். பிரதமர் பாராளுமன்ற முறைகளை (Parliamentary practice) நன்கு உணர்ந்தவராதலும் வேண்டும். (இந்த இலக்கணங்கள் எல்லாம் மாநில முதலமைச் சர்கட்கும் அமைந்திருக்க வேண்டும். பிரதமர் மத்திய நிர்வா கத்தில் மக்களை நேரில் சந்திக்க அதிக வாய்ப்புகள் கிடையாது. ஆனால், மாநில முதலமைச்சர்கட்கோ அன்றாடம் மக்களோடு பழக வாய்ப்பு இருக்கும். மாநில நிர்வாகம் மக்கள் தேவைகளை நேரிடையாகத் தீர்க்கும் கடமைகளையும் பணிகளையும் மேற் கொள்கிறது. மத்திய நிர்வாகத்துக்கு நிதி வழங்கல், அகில

இந்தியப் பொதுச் சட்டங்கள் இயற்றுதல் இவைகளில்தாம் மிகப் பொறுப்பு உண்டு).

இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு. சுதந்திரத்திற்கு முன் மாநிலங்களில் சில பேர்பெற்ற முதலமைச்சர்கள் இரட்டை ஆட்சியில் இருந்தார்கள். ஆனால், அந்தக் காலத்தில் மத்திய ஆட்சியில் முதலமைச்சர் என்ற பதவி இல்லை. நேரு 58 ஆம் வயதில் பிரதமர் ஆனார். இங்கிலாந்திலும் பிரதமர்கள் ஏறக்குறைய அந்தப் பின்வயதில்தான் பிரதமர் பதவிக்கு வந்துள்ளார்கள். ஆஸ்குவித், பால்டுவின் 56, சாலிஸ்பரி 55, லாயிட் ஜார்ஜ் 53, பால்ஃபோர் 54, ஈடன் 57, மாக்மில்லன் 53, வில்சன் 48, ஹீத் 54. ஆனால் சர்ச்சிலும் அட்லியும் 66, 68 வயதுகளில்தாம் பதவிக்கு வந்தார்கள். நேரு ஐந்து அமைச்சரவைக்குப் பிரதமராக இருந்தார். சுமார் 17 ஆண்டுகள் தொடர்ந்து அந்தப் பதவியை வகித்திருந்தார். இங்கிலாந்துப் பிரதமர்கள் பதவிக்கு வருவதற்கு முன் ஏராளமான பாராளுமன்ற அனுபவமும், அமைச்சராக இருந்த அனுபவமும் பெற்றிருந்தார்கள். இங்கிலாந்தில் காபினெட் கவர்மென்டு சுமார் நான்கு நூற்றுண்டுகளாக இருந்துள்ளது. ஆகையால், இதில் ஓர் அதிசயம் இல்லை. இந்தியாவில் 1935ஆம் ஆண்டுச் சட்டப்படி நிறுவப்பட்ட பாராளுமன்றத்தில் இங்கிலாந்துப் பாராளுமன்ற ரீதிகளே பின்பற்றப்பட்டன. அந்த நாளில் பாராளுமன்றத்தில் வெகு திறமையான இந்தியர்கள் உறுப்பினர்களாகவும் எக்சிகியூடிவ் கவுன்சிலர்களாகவும் இருந்துள்ளார்கள். எனவே, இந்த இடைக்காலப் பயிற்சி பின்னால் வந்த அமைச்சர்களுக்கு நல்ல வழிகாட்டியாக அமைந்தது. பிரிட்டிஷ் பாராளுமன்ற முறைகள், வழக்கங்கள் முதலியவைகளைப்பற்றிய மே எழுதிய தொகுப்பு (மே இயற்றிய பார்லிமென்டரி பிராக்டீஸ்) இந்தியச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மனப்பாடமாகப் போய்விட்டது என்று கூறலாம். விடுதலைக்குப்பின் 1947 ஆகஸ்டு 15-ல் பிரதமர் என்ற ஒரு தலைவர் பாராளுமன்றத்தில் ஏற்படுத்தப்பட்டார். பாராளுமன்றத்தின் முழு நம்பிக்கை உடையவரே அந்த ஸ்தானத்துக்கு (முன் கவர்னர் ஜெனரலாலும், பின் 1950 முதல் ஜனாதிபதியாலும்) அங்கீகரிக்கப்பட்டவர். பிரதமரைச் சுற்றித்தான் பாராளுமன்றம் சுழன்று பணி செய்யும். எதிர்க்கட்சி எந்த நேரத்திலும் ஆளும் கட்சியை நீக்கித் தான் பதவிக்கு வருவதற்குச் சட்டப்படி வாய்ப்பு இருப்பதால், பிரதமர் தம் நிலையை வெகு எச்சரிக்கையாகக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். எதிர்க்கட்சியில் ஒரு சாயல் காபினெட்

(Shadow Cabinet) ஆதிக்கத்துக்கு வரக் காத்துக்கொண்டே இருக்கும். பிரதமர் ஜனுதிபதியால் நியமிக்கப்பட்டவர். நீக்குவதற்கு அவருக்கு அதிகாரம் இருந்தாலும், உண்மையிலேயே அந்த அதிகாரம் உபயோகப்படாது. பிரதமரை விலச்குவதற்குப் பாராளுமன்றம் ஒன்றுலேயே இயலும். காபினெட் கொண்டு வரும் முக்கியப் பிரேரணை ஏதாவது தோல்வி அடைந்தாலும், பிரதமர் அல்லது அவர் அமைச்சரவை மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும், அமைச்சரும் அவரது அமைச்சரவையும் இராஜிநாமாச் செய்ய வேண்டும். பிரதமருக்குப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு இருந்தால், அவரையும், அவரது அமைச்சரவையையும் அசைக்கவே முடியாது. பாராளுமன்றம் நாட்டின் பல்வேறு அரசியல் கருத்துகளைப் பிரதிபலிக்கிறது ஆனுல், நாட்டின் நல்லாட்சிக்குப் பிரதமரின் அமைச்சரவை பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடையது. 1950-லிருந்து பாராளுமன்றத்தில் ஒரே கட்சி (காங்கிரசு) பெருவாரியான கட்சியாக இருந்ததால், காபினெட் அவை அசைவுபடவில்லை. 1971ஆம் ஆண்டு காங்கிரஸ் பிளவுக்குப் பின் (Congress split) புதிய காங்கிரசு சில மாற்றுக்கட்சியின் நட்பினுலும் ஆதரவினுலும் பதவியை இழக்கவில்லை. எனினும், மாற்றுக்கட்சியின் ஆதரவில் உயிர் வாழ்வது அரசியல் கொள்கைக்கு விரோதமாகையால் திருமதி இந்திரா காந்தி இடைக்காலத் தேர்தலைக் கொண்டுவந்து வெற்றி பெற்றுர். எதிர்க்கட்சியால் பாராளுமன்றத்திலாவது, தேர்தலிலாவது ஆளும் கட்சி தோற்கடிக்கப்படாவிட்டாலும் மாற்றுக்கட்சிகளின் கருத்துகளாலும் நேர்மையான வற்புறுத்தல்களாலும் அது தனது நடைமுறைச் செயல்களையும் பொருத்தமாகத் திருத்திக்கொள்ள வேண்டியிருக்கும். எதிர்க்கட்சி ஆளும் கட்சியின் பிரேரணைகளில் குற்றம் குறை காண்பது மட்டும் அல்லாமல், அவைகளுக்குப் போட்டியாகவோ எதிர்முகமாகவோ வேறு பிரேரணைகளை வகுத்துக் காட்டும். வரவு செலவுத் திட்டம் முதலியவற்றில் வேண்டுமென்றுல் ஆளும் கட்சி எதிர்க்கட்சியால் அதிகம் மாறுபடாவிட்டாலும், எல்லா மக்களையும் பாதிக்கும் சட்டம் இயற்றும் விஷயங்களில் ஆளும் அமைச்சரவை எதிர்க்கட்சியின் நியாயமான திருத்தங்களை ஏற்றுக்கொள்வது அரசியல் விவேகமாகும். இல்லையேல் அடுத்த தேர்தலில் ஆளும் கட்சியின் தவறுதல்களையும், விட்டுக்கொடுக்காத பான்மைகளையும் வாக்காளர்கள் மறந்துவிட மாட்டார்கள். இந்த விஷயங்களில் சம்பந்தப்பட்ட அமைச்சர் தம் துறையளவு குறுகிய நோக்கால் சமரசம் இன்றி

இருக்க விரும்பினுலும், பிரதமர் கட்சிக்கு அப்பாலாய் நின்று நாட்டின் நன்மையைக் கவனிக்க வேண்டியவராகையால், தாம் தலையிட்டு எதிர்க்கட்சிகளின் கருத்துகளுக்குக் கூடியவரை இடம் கொடுக்க வேண்டும். இது அமைச்சரவைக்குப் பலவீனத்தையோ தாழ்வையோ தராது. உண்மையிலேயே அமைச்சரவைக்குப் பெருமையை விளைவிக்கும். இம் மாதிரி நிரவல்களினுல்தாம் பிரதமர் 'கட்சித்தலைவர்' என்ற நிலைக்கு மேலாய் அரசியல் மேதை (Statesman) என்ற புகழைப் பெறுகிருர். இல்லையேல், எதிர்க்கட்சி சிறுபான்மையிலிருந்து பெரும்பான்மையாக மாறிவிடும். பாராளுமன்றம் அமைச்சரவையை மூன்று விதங்களால் அடக்க முயலும். ஒன்று, அது கேட்கும் மானியங்களுக்கு இசைவு தருவதில் விவாதங்கள்; இரண்டு, அது கொண்டுவரும் வரிவிதிப்புப் பிரேரணைகளையும், சட்ட மசோதாக்களையும் எதிர்த்தும், திருத்தியும் வாதாடுதல்; மூன்று, கொள்கையளவில் ஆளும் அமைச்சரவையின் எல்லாக் காரியங்களையும் ஏகதேசமாக எதிர்த்துத் தாக்குதல். இந்த மூன்று விதமான தாக்குதல்களுக்கும் பிரதமர் நிலைபெயராது நின்று சமாளிக்க வேண்டும். அமைச்சரவையை ஒருமுகமாகப் பேசவைக்கும் கடமையும் அவருடையது. இல்லையேல் ஒவ்வோர் அமைச்சரும் ஒவ்வொரு விதமாகப் பேச நேரிடும். பாராளுமன்றத்தில் கட்சிகள் இயங்குவது அமைச்சரவையை எதிர்த்தும், திருத்தியும், முடியுமானுல் ஆதரவு தந்தும் வழிப்படுத்தும் பயன்பாடுதான் மிகவும் முக்கியம். ஆளும் கட்சிக்கு நேராக வலுவுள்ள ஒரு கட்சி இருக்குமாயின் கட்சி வாரியான மக்கள் ஆட்சி நல்லமுறையில் செயற்படும். எதிர்க்கட்சி நிரம்பவும் பலவீனமாக இருந்தாலும் சரி, ஒற்றுமையில்லாத பல்வேறு கட்சிகளாக இருந்தாலும் சரி பாராளுமன்றத்தினுல் முழுப்பயன் இல்லாமல் போய்விடும். இந்தக் கூற்றுகள் அமைச்சரவையின் வெளிநாட்டுக் கொள்கைகள், அரசியல் அமைப்பைத் திருத்தும் பிரேரணைகள் முதலிய கனமான விஷயங்களில் நன்கு வெளியாகும். இன்னும் எதிர்க்கட்சிகள் கொண்டுவரும் பிரேரணைகளுக்குப் போதுமான அவகாசம் கொடுக்காவிட்டாலும், முட்டுக்கட்டைகள் போட்டாலும், அது பாராளுமன்றத்தின் முழுப் பலனைத் தராது. பரஸ்பரம் கொடுக்கல், வாங்கல் மனப்பான்மை இருந்தால்தான் மோதல்களுக்கிடையேயும், நல்லெண்ணமும் நன்னம்பிக்கையும் உருவாகும். இதற்கெல்லாம் சூத்திரதாரியாக இருக்க வேண்டியவர் பிரதமர். பாராளுமன்றத்தின் கருத்துகளைமட்டும் கண்ணேட்டம் செய்யாமல், நாட்டில் பொதுமக்களின் கருத்து

களையும் ஊன்றிக் கவனித்து அமைச்சரவைக் கப்பலைச் செலுத்த வேண்டும். இல்லையேல் அமைச்சரவை இடைமுறிந்து போகா விட்டாலும், மேலான பலன்களை விளைவியாது. இந்தியாவில் பொதுமக்களின் கருத்து உருவாகவும் வெளிப்படவும் போது மான கருவிகள் இல்லாமையால் பிரதமரின் பொறுப்பு, பிரிட்டிஷ் பிரதமர் பொறுப்பைவிடப் பளுவானது எனலாம்

நேரு காலத்தில் அமைச்சரவையின் செயலாற்றலை நான்கு கால அளவில் வைத்துப் பார்க்கலாம். ஒன்று, 1947 ஏப்ரல் 15 முதல் 1950 டிசம்பர் வரை ; இரண்டு, 1951 ஜனவரி முதல் 1957 மே வரை ; மூன்று, 1957 மே முதல் 1963 ஆகஸ்டு வரை; நான்கு 1963 செப்டம்பர் முதல் 1964 மே வரை.

முதல்காலத் தொடக்கத்தில் அமைச்சரவை அமைப்பதில் ஒரு சிரமமும் ஏற்படவில்லை. நேருவைப் பிரதமராகக்கொண்ட திலும் இடர்ப்பாடுகள் இல்லை. இந்த அமைச்சரவையின் முக்கியாம்சங்கள் : கவர்னர் ஜெனரல் மவுன்ட்பாட்டனின் அனுசரணையான உதவி, பாகிஸ்தான் பிரிவினையினால் நிதித் தொல்லை, அகதிகள் வருகையால் நிர்வாகப் பளு, மகாத்மா காந்தியின் மறைவு, இந்திய மன்னர்களின் அரசுகளை ஒன்றியப் படுத்தும் பெரும்பணி, சர்தார் வல்லபாய் படேலின் உற்ற துணை. மேலும் அமைச்சரவையில் திறமையுள்ள அமைச்சர்கள் (சண்முகம் செட்டி, சியாம் பிரசாத் முகர்ஜி, அம்பேத்கார் முதலியோர்). படேல் மிக்க வலுவுடைய அமைச்சர். நேரு வுக்கும் அவருக்கும் கருத்து வித்தியாசங்கள் இருப்பினும் அமைச்சரவை அதனால் பாதிக்கப்படவில்லை. படேலின் திறமையால் இந்திய மன்னர்களின் அரசுகள் வியக்கத்தக்க அளவில் இந்தியக் கூட்டாட்சியில் சேர்ந்தன. படேல் நிர்வாகத் தையும் உற்சாகப்படுத்தித் தமது நம்பிக்கையைக் காட்டினார். படேல் துணைப்பிரதமராகவும் உள்நாட்டு அமைச்சராகவும் இருந்தபடியால், பலசாலியாக விளங்கினார். நேரு வெளிநாட்டு விவகாரங்களில் மிகவும் ஈடுபட்டிருந்தார். சில விஷயங்களில் நேருவுக்கும் படேலுக்கும் சீரிய கருத்துவேறுபாட்டால் வில்லங் கங்கள் ஏற்பட்டதுண்டு. பின்பு, காந்தி இறந்த அதிர்ச்சியினால் அவை மழுங்கிப் போயின. (மைக்கேல் பிரெட்சர் நேரு-படேல் பிணக்குகளைப்பற்றிப் பல பேரைக் கேட்டு எழுதியுள்ளார்.) படேல் இறந்த பின்பு பெரிய பிரச்சினைகள் எழவில்லை. சியாம் பிரசாத் முகர்ஜியின் இராஜிநாமாவைப்பற்றி முன்பே கூறினோம். இதுவும் அமைச்சரவையைப் பாதிக்கவில்லை. வி. பி. மேனன் எழுதியுள்ளதைப் போல, படேலின் உலக அறிவு நேருவின்

கனவை ஒத்த போக்குகளை நிறைவுபடுத்தியது. இல்லையேல், இருவரும் இரு கோடியில் இருந்து சொண்டிருப்பார்கள். பாகிஸ்தானுக்குப் பண ஈடுகொடுக்கும் விஷயத்தில் படேலின் முட்டுக் கட்டையைக் காந்தி கண்டித்தார் என்று கூறப்படுகிறது. நேருவுக்கும் படேலுக்கும் கொள்கை அளவில் கருத்துவேறுபாடு இருந்தாலும், செயல்முறையில் ஓர் ஊறும் ஏற்படவில்லை. காட்சிலுக்கும் நிதி அமைச்சர் ஜான்மத்தாயுக்கும் நிதி ஒதுக்கலில் கருத்து வேறுபாடு ஏற்படின், படேலிடம் தீர்த்துக்கொள்ளும்படி நேரு கூறுவது வழக்கம் என்று காட்கில் எழுதியுள்ளார். படேல் இறக்கும் சில நாள்கட்கு முன்பு அவருக்கு நேருவுடன் சில கருத்து வேறுபாடுகள் இருந்து வந்திருப்பினும் சேர்ந்து உழைக்குமாறு தமக்குக் கூறினதாகவும் எழுதியுள்ளார்

இரண்டாது மூன்ருவது காலத்தில் படேல் இறந்தபின் நேருவின் ஆதிக்கத்தில் போட்டி இல்லை. நல்ல திறமையுடையவர்கள் அவ்வப்போது சேர்க்கப்பட்டார்கள். அவர்களில் இராஜகோபாலாச்சாரியார், கோவிந்த வல்லபபந்த், மவுலானு அபுல்கலாம் அசாத், ரஃபி அகமத் கிட்வாய் முதலியோர் தலைசிறந்தவர்கள். காபினெட்டில் உத்தரப் பிரதேசத்தவரே அதிகமாக உள்ளனர் என்ற கருத்து அரசியல்வாதிகளிடத்தில் உருவாயிற்று. துறைகள் பங்கீட்டிலும், அமர்த்தப்பட்ட அமைச்சர்களிடமும் சிறு அதிருப்திகள் இருந்தன. இராஜாஜி, கே. எம். முன்ஷி இவர்கள் கருத்துவேற்றுமையால் இராஜிநாமாச் செய்தார்கள். மற்றவர்களில் பலர் குறிப்பிட்ட துறைகளுக்காகப் போராடினுர்கள். டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் 1962 தேர்தலுக்குப்பின், நிதித்துறைதான் வேண்டுமென வற்புறுத்தினுர். எஸ். கே. பாட்டில் உணவுத்துறையினின்று ரயில்வேத் துறைக்குப் போக மறுத்தார். அதன் விளைவாக இராஜிநாமாவும் செய்தார். பாதுகாப்புத்துறை இரண்டாகப் பிரிக்கப்பட்டுச் சவானுக்கும், கிருஷ்ணமாச்சாரிக்கும் கொடுக்கப்பட்டது. ஒரிஸ்ஸா முதலமைச்சர் திரு. பிஜு பட்நாயக்கு அமைச்சரவையில் இல்லாவிட்டாலும், பாதுகாப்பு விஷயங்களில் ஒருவிதமான ஆலோசகராக அவருக்கு இடம் கொடுக்கப்பட்டது. திரு. மனுபாய் ஷா வாணிகத்துறையின் குறைகளைப் பற்றி வற்புறுத்தினுர். இதுபோலத் துறைகள் ஒருமைப்பாடு இல்லாமல் பல குழப்பங்கள் உண்டாயின. பிரதமர் எந்த அமைச்சருக்கு எந்தத் துறை கொடுக்க வேண்டுமென்று தீர்மானிப்பதில் முழு அதிகாரம் பெற்றிருந்தாலும் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல் நல்ல அமைச்சரவைக்கு அடையாளம் ஆகும். தனிப்பட்ட அமைச்சர்கள் குறிப்பிட்ட துறைதான்

வேண்டுமென்று பிடிவாதம் செய்தலும் தவறு. இந்தக் குழப்பங்களில் மக்களின் பொருளாதார நிலை கீழ்நிலைக்குப் போயிற்று. திரு. கிருஷ்ணமேனன் இராஜிநாமா நேருவின் பொறுப்பைப் பாதித்தது. அமைச்சரவை பாதிக்கப்படாத தற்கு எதிர்க்கட்சியின் வலிவின்மையே காரணம் எனலாம்.

நான்காவது காலத்தில் காமராஜ் திட்டத்தின் விளைவாக அமைச்சரவையைத் திருத்தி அமைப்பதற்கு நேருவுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. அமைச்சர்களின் எண்ணிக்கை சிறிது குறைக்கப்பட்டது. துறைகளை அமைச்சர்களுக்கு ஒப்படைப் பதிலும், சிறிது அர்த்தமுடைய பாகுபாடுகள் கடைப்பிடிக்கப் பட்டன. விவசாய அமைச்சருக்கு (திரு. சுவரண்சிங்கு) நீர்ப் பாசனம், மின்சக்தி, சமுதாய அபிவிருத்தி, கூட்டுறவு இனங் களும் சேர்த்துத் தரப்பட்டன. கிருஷ்ணமாச்சாரிக்கு நிதித் துறை தரப்பட்டு, அந்தத் துறையில் வெவ்வேறு பிரிவுகள் நன்கு அமைக்கப்பட்டன. ஒரே அமைச்சரின்கீழ் (திரு. சக்ளா) கல்வி, விஞ்ஞான ஆராய்ச்சி, கலாசார விவகாரங்கள் சேர்த் துக் கொடுக்கப்பட்டன. லால்பகதூர் சாஸ்திரிக்குக் குறிப்பிட்ட துறை தரப்படாமல், வெளிநாட்டு விவகாரங்கள், அணுச்சக்தி, அமைச்சரவைச் செயலகம் இவற்றைப் பிரதமர் கொடுக்கும் அளவில் கண்காணிக்க விடப்பட்டது. இவ்வாறு சீர்திருத்தங் களின் பின்பும் தொழில் அபிவிருத்தி விவகாரங்கள் நான்கு அமைச்சர்களிடையே பிரிவுபட்டது. (சுப்பிரமணியம்—எஃகு, கபீர்—பெட்ரோலியம், இரசாயனம், கனுங்கோ—உள்நாட்டு வாணிகம், மனுபாய் ஷா — கைத்தொழில்) மனுபாய் ஷா இருமுறை துறைப் பிரிவுபாடுகளைப்பற்றிய தமது குறைபாடு களைப் பிரதமருக்குச் சமர்ப்பித்தார். இரகசியமாக எழுதிய கடிதங்கள் எப்படியோ அம்பலமாயிற்று. துறைக்குறைபாடுகள் இருப்பினும், அமைச்சரவை எண்ணிக்கையில் அடக்கமாக இருந்தது. பிரதமர் அதிகாரம் ஓங்கி இருந்தது.

நேருவின் பிரதமர் ஆட்சியைப் பாராட்டியவர்களும் பலர்; குறைகூறியவர்களும் பலர். எனினும், வரலாற்றில் அவரது அமைச்சரவை நிர்வாகம் முக்கிய இடம் பெறும். அவரது அமைச்சரவைச் சிறப்பியல்புகளைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம். ஒரேகட்சி ஆதிக்கத்திலிருந்ததால் அமைச்சரவை அசைவில்லாமல் நடைபெற்றது. நேருவின் கருத்துவேறு பாட்டால் படேல் இருந்த காலத்தில் அமைச்சரவை இரட்டை ஆதிக்கம் (Duvumvirate) என்று கூறப்பட்டாலும் பிளவுகள் ஏற்படாதது. அமைச்சரவையிலிருந்த தனிப்பட்ட அமைச்சர்

கள்மீது பாராளுமன்றத்தில் கடும் தாக்குதல் இருந்தாலும், அமைச்சரவையே இராஜிநாமாச் செய்ய வேண்டுமென்று வற் புறுத்தப்படவில்லை. நேரு, குறை கூறப்பட்ட அமைச்சர்களைத் தாமே கைவிடாமற் போனாலும், அவர்களே விலகினார்கள். நேருவின் ஒவ்வோர் அமைச்சரவையிலும் உள் காபினெட் இருந்ததென்று கருதப்பட்டாலும், மற்றைய அமைச்சர்கள் சக்தி யற்று இருக்கவில்லை. நேரு எதிர்க்கட்சிகளுக்குக் கூடுமான வரை விட்டுக்கொடுத்துச் சமரசமாக இருந்தபடியால், அமைச்ச ரவைகட்கு நெருக்கடிகள் வருவதில்லை. நேரு திட்டக்கமிஷனுக்கு மிகுந்த அதிகாரம் தந்து ஒருவிதமான மேல்காபினெட்டாக (சூபர் காபினெட்டாக) ஆக்கிவிட்டார் என்பதில் சிறிது உண்மை இருப்பினும், பிற்காலத்தில் அமைச்சரவையில் நிதி அமைச்சருக்குப் போதுமான அதிகாரம் இருந்தது. நேரு காலத்தில் ஜனாதிபதிக்கும் அவருக்கும் முரண் ஏற்படவில்லை. பாதுகாப்பு விஷயத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சரின் சில தயக்கங்களால் பாராளுமன்றத்திலும் நாட்டிலும் பெரிய அதிருப்தி இருந்தபோதிலும், பிரதமர் கூட்டுப்பொறுப்பைக் கைவிடாது அமைச்சரைத் தாமாகவே விலக்கவில்லை. அநேகமாக எல்லா மாநிலங்களிலும் ஒரேகட்சி ஆட்சி இருந் தமையால் நேருவின் அமைச்சரவைக்குச் சங்கடங்கள் ஏற்பட வில்லை. ஆனல், மொழிவாரி மாநிலங்கள் ஏற்பட்டமையால் உண்டான எல்லைத் தகராறு குறித்து அமைச்சரவைக் குள்ளேயே தொடர்புடைய மொழி அமைச்சர்களுக்கிடையே கருத்துவேற்றுமை ஏற்பட்டாலும், அது ஒரு நெருக்கடியாய் உருவாகவில்லை. நேருவின் தயக்கம் (vacillation) ஒரு விதத் தில் அமைச்சரவையில் எழுப்பிய கருத்துவேற்றுமைகளால் பிளவுகளை ஏற்படுத்தவில்லை என்றும், நாட்டில் அது சமரசத் தின் முக்கியத்துக்குத் தவிர்க்க முடியாதது என்றும் கருதப் பட்டு வந்தது.

லால்பகதூர் சாஸ்திரியின் அமைச்சரவையைப்பற்றி முன் அத்தியாயத்தில் சிறிது கூறினோம். சாஸ்திரி தமது அமைச் சரவை அமைப்பால் மக்களின் எல்லாச் சார்புடையவர்களும் திருப்தி அடையவேண்டுமென்று விரும்பினார். அவர் பதவிக் காலத்தில் ஊழலைப்பற்றிக் கூப்பாடு அதிகமாக இருந்ததால் அதையும் தவிர்க்கக் கருத்துக் கொண்டார். தெரிந்த விஷயங் களில் அமைச்சரவையின் கருத்தைக் கேட்காமலே, தாமே அர சாங்கத்தின் கருத்துகளை வெளியிடுவார். உதாரணமாக, அணுக் குண்டை இந்தியா செய்ய முற்படாது என்று காபினெட் முடிவு இல்லாமலே கூறி வந்தார். சீனப் படையெடுப்புப்பற்றியும்

காபினெட்டில் விளக்கமாக விவாதித்ததாகக் கூறப்படவில்லை. அமைச்சரவை கூடுமானவரை எண்ணிக்கையில் சுருக்கமாக இருக்க வேண்டுமென்று கருத்துக் கொண்டார். அவர் அமைச்சரவையில் ஒரு புதுப்பிரச்சினை உருவாகியது. அது அமைச்சர்களின் வரிசையில் யார் முந்தி, யார் பிந்தி என்பது. பிரதமருக்குப் பின் இரண்டாம் இடம் குல்ஜாரிலால் நந்தாவைச் சேர்ந்தது. ஆனால் மொரார்ஜி தேசாய் தமக்கு இரண்டாம் இடம் தந்தால்தான் அமைச்சரவையில் இருப்பதாக வற்புறுத்தினார், அது இயலவில்லை. மூன்றும் இடத்தை டி.டி. கிருஷ்ணமாச்சாரி யார் வகித்தார். நான்காம் இடத்தைத் திருமதி இந்திரா காந்தி வகித்தார். சாதாரணமாக, அமைச்சர்கள் முதன்முதல் அமையும்போது அவர்களின் அனுபவம், கட்சியில் செல்வாக்கு, அவர்களின் நீண்ட பணி முதலியவற்றைக் கொண்டு பிரதமர் இடம் வகுப்பார். பின் வகுக்கப்படும் அமைச்சரவையில் முன்னிருந்தவர்கள் முன்னும், பின்வந்தவர்கள் தகுதிப்படி பின்னும் வைக்கப்படுவார்கள். இங்கிலாந்தில் இடம் முறையில் (ranking) விவாதம் ஏற்படுவதில்லை. ஒவ்வொருவரும் தனிப் பட்ட பதவிப் பெயர் பெற்றவர்கள். துணைப் பிரதமர் ஒருவர் தாம் பிரதமருக்கு இரண்டாவதாக உள்ளவர். நேரு காலத்தில் இருந்ததுபோலவே சாஸ்திரி அமைச்சரவையிலும் ஓர் 'உள் அமைச்சரவை' உளது என்றும் கூறுவதுண்டு அவர்கள் கிருஷ்ணமாச்சாரி, நந்தா, பாட்டில், இந்திரா காந்தி, சஞ்சீவ ரெட்டி என்பவர்கள். நிதி அமைச்சருக்கு எந்த அமைச்சரவையிலும் முக்கியத்துவம் உண்டு. ஏனெனில், மற்ற அமைச்சர்களின் துறைகளுக்கு மானியம் ஒதுக்கும்போது நிதி மந்திரி முட்டுக்கட்டை போடாமல் இருக்கவேண்டும். சாஸ்திரி அமைச்சரவையிலிருந்து திரு. சுப்பிரமணியம் மொழிப் பிரச்சினையின் காரணமாக இராஜிநாமாச் செய்தார். பின் அதைத் திருப்பிப் பெற்றார். அமைச்சரவையில் பெரும்பான்மையர் இந்திச் சார்புடையவர்கள் ஆதலால் சுப்பிரமணியம் இராஜிநாமாச் செய்ய வேண்டியிருந்தது. அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பில் பொறுப்பு ஏற்றுக்கொள்ள முடியாத தருணங்களிலே இராஜிநாமா நேர்மையானது. இல்லையேல் சொந்தக் கருத்துக்கு விரோதமாக அமைச்சரவையில் இடம் வைத்திருக்க வேண்டும். லால்பகதூர் சாஸ்திரி காஷ்மீரத்தின்மீது பாகிஸ்தான் படையெடுப்பால் உட்பிளவுகள் சில பல இருந்தாலும், நாட்டிலும் அமைச்சரவையிலும் ஒற்றுமை ஏற்பட்டது. ஐக்கிய நாடு தலையிட்டதால் அந்தச் சண்டை நீண்டகாலம் நீடிக்கவில்லை. பாராளுமன்றத்திலும் நாட்டின் பாதுகாப்பின் முக்கியத்

தால் அமைச்சரவை இடர்ப்படவில்லை. அமைச்சரவையின் அவசரக் குழு (Emergency Committee) இயங்கி வந்தது. பின் தெற்கில் இந்தியை அரசாங்க மொழியாகக் கொண்டுவருவதை எதிர்த்துநிகழ்ந்த சம்பவங்களினால் அமைச்சரவை அந்த விஷயத்தைக் கவனிக்க வேண்டியிருந்தது. ஒரிஸ்ஸா மாநிலத்தில் சில அரசியல் புகார்கள் காரணத்தால் சாஸ்திரி காபினெட்டின்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஒன்று கொண்டு வரப்பட்டது. ஆனால், அது தோல்வியுற்றது. திரு. கிருஷ்ணமாச்சாரியின்மீது சில பாராளுமன்றத்து உறுப்பினர்கள் குற்றச்சாட்டு மனுவைச் சமர்ப்பித்தபோது, சாஸ்திரி அதை ஒரு நீதிபதியின் விசாரணைக்கு விட்டுவிட்டார். கிருஷ்ணமாச்சாரியார் பிரதமரே விசாரித்து முடிவுக்கு வரலாமென வாதாடினார். பிரதமர் விசாரணைக்கு ஆதாரம் இல்லை என்பதையும் நம்பிக்கையுள்ள ஒரு நடுவர் சொல்வதுதான் நல்லது என்று கருதி தமது கருத்தை வற்புறுத்தினார். திரு. கிருஷ்ணமாச்சாரி இந்தப் பூர்வாங்கமான பரிசீலனையையும் இந்த மூன்றும் தரப்பினர்தாம் செய்ய வேண்டும் என்ற கொள்கையால் அமைச்சரவை செயலாற்றும் சம்பிரதாயமே இடர்ப்படும் எனக் கருதினர். இந்த முறை விவகாரத்திலேயே கருத்துவேறுபாட்டால் திரு. கிருஷ்ணமாச்சாரி இராஜினாமாச் செய்தார். அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்பில் தனிப்பட்ட அமைச்சரின்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டை விசாரிக்க இன்றும் ஒரு முறை உருவாகவில்லை. நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷன் (Administrative Reforms Commission) 1966ஆம் ஆண்டில் லோக்பால் (Lokpal) என்ற அதிகாரி அமைச்சர்கள்மேல் வரும் ஊழல் குற்றச்சாட்டை விசாரிக்க அமைக்கவேண்டுமென்று பரிந்துரை கூறியது. அது இன்னும் சட்டமாக வில்லை). பிரதமர் சாஸ்திரியின் காலம் குறுகியது. இருப்பினும் மேற்கூறிய முக்கியமான அமைச்சரவை முறைகள்பற்றிய பிரச்சினைகள் தலையெடுத்தன. ஆளும் கட்சியில் உட்பிளவுகளோ உட்குழுக்களோ தலையெடுத்தால் அமைச்சரவை ஆட்சி கவிழ்ந்து போகாமல் போனாலும் பல இடர்ப்பாடுகளைச் சந்திக்கும். எதிர்க்கட்சிப் பலத்தால் ஆட்சி மாறும். அது இல்லையேல் பாராளுமன்றத்தின் ஆதிக்கம் பயனற்று நிற்கும்.

12. அமைச்சரவைச் செயலகம்

காபினெட் செயல்படும் முறை முதலிலிருந்தே நல்ல முறையில் அமைந்தது எனலாம். பிரிட்டிஷ் ஆட்சி இருந்தபோதே ஒரு செம்மையான செயலகம் (Cabinet Secretarial) உண்டாக வாய்ப்பு ஏற்பட்டது. வைசிராய் ஆட்சியில் அவரது அந்தரங்கச் செயலர் (Private Secretary) எக்சிகியூடிவ் கவுன்சிலுக்குச் (Executive Council) செயலராக இருந்தார். 1946-ல் விடுதலைக்கு முன் இடைக்கால மந்திரிசபை அமைந்தபோது அவர்கள் காபினெட் அமைச்சர்கள் என அழைக்கப்பட்டதல்லாமல், அவர்களுக்கு உதவ ஒரு செயலகமும் ஏற்படுத்தப்பட்டது. சுதந்திரம் வந்தே தீரும் என்ற நம்பிக்கையால் அமைச்சரவை அலுவல்களைப் பார்க்கப் பயிற்சிபெற்ற ஒரு செயலகம் முன்கூட்டியே ஏற்படுத்தப்பட்டது. சர் எரிக் கோட்ஸ் என்பவர் முதல் காபினெட் செயலராக நியமிக்கப்பட்டார். அவர் இங்கிலாந்தில் காபினெட் செயலகம் தொழிற்படும் முறையைப் பார்த்தவர். செயலகம் இரண்டு பிரிவுகளாக, ஒன்று சிவில் நிர்வாகத்திற்கும் (Civil Administration) மற்றொன்று இராணுவ நிர்வாகத்திற்கும் (Military Administration) ஏற்படுத்தப்பட்டது. இதற்குமுன் உயர்ந்த சிவில் உத்தியோகஸ்தர்கள்கூட எப்படி இராணுவ விஷயங்களைத் தாக்குப்பிடிப்பது என்று உணர வாய்ப்பில்லை. அதேபோல் உயர் இராணுவ அதிகாரிகளும் சிவில் நிர்வாகக் காரியங்களைப்பற்றி அறிந்திருக்க மாட்டார்கள். எனவே, இந்தக் காபினெட் செயலகம் இருதரத்தார்களுக்கும் நல்ல பயிற்சி அளித்தது. முன்பு வைசிராயின் கீழ் இருந்த செயலகம் இப்போது பிரதமரின்கீழ்ச் செயலாற்றியது. சர் எரிக்கோட்சின் கீழ்த் (Sir Ericcoates) திரு. எச். எம். படேல் கூட்டுச் செயலராக இருந்தார். அவர் பிரதமர் நேருவுக்கு முதன்மை அந்தரங்கச் செயலாளராகவும் (Principal Private Secretary) இருந்தார். கோட்ஸ் நீங்கிய பின் திரு. படேலே காபினெட் செயலாளரானர். இந்தச் செயலகம் சுதந்திரத்

திற்கு முன் இருந்த ஆட்சிமுறையைப் பற்றியும், அதன்பின் நடந்துவரும் முறையைப்பற்றியும் தொடர்புபடுத்தி அமைச்சர்களுக்கு உதவிபுரிந்தது எனலாம். மேலும், காபினெட் கமிட்டிகள் பல ஏற்பட்டன. அவற்றின் வேலைகளை ஒன்றுக்கொன்று ஒழுங்குபடுத்தவும் இந்தச் செயலகம் உதவுகிறது. பிரதமரின் கடமைகள் பல்வேறு வகையானதும் மிகவும் பளுவானதுமாக இருப்பதால், காபினெட் செயலகம் ஒருமுகமாகக் கவனம் செலுத்தி அவருக்கு உதவியாக இருக்கிறது. காபினெட் செயலர் சாதாரணமாக மிக்க அனுபவமுள்ளவரும் அறிவும் திறமையுள்ளவரும், நம்பிக்கையுள்ளவரும் பிரதமர் மட்டுமன்றி மற்ற அமைச்சர்களுக்கும் திருப்திகரமாக நடந்து கொள்பவரும் ஆக இருத்தல் வேண்டும். அவரது கடமை தனிப்பட்ட செயலகங்கள் (Ministry) அனுப்பும் காகிதங்கள் சரியான முறையில் இருக்கின்றனவா என்று தணிக்கை செய்யவும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களின் கருத்துகள் எழுதப்பட்டுள்ளனவா என்று பார்க்கவும் காபினெட்டுக்கு வைக்கப்படும் குறிப்புகள் அரைகுறையில்லாமல் இருக்கின்றனவா எனப் பார்த்துக்கொள்வதும் ஆகும். எனவே, காபினெட் செயலரும், செயலகமும் மற்ற அமைச்சர்களின் செயலகங்களுடன் தொடர்பு வைத்துக்கொண்டு காரியங்களைத் தொடர்புபடுத்த வேண்டும். காபினெட் முடிவு எடுத்த பின் அவற்றை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறதாவென்றும் பார்க்க வேண்டும். ஒவ்வொரு மினிஸ்டரியும் காபினெட் முடிவுகளின்மீது எடுத்த நடவடிக்கைகளைக் குறித்துக் காபினெட் செயலகத்துக்கு அப்போதைக்கப்போது தகவல்கள் அனுப்ப வேண்டும். ஏதாவது முக்கிய விஷயங்கள் விடுபட்டுப்போனால், காபினெட் செயலர் பிரதமர் கவனத்துக்கு அதைக் கொண்டு வரவேண்டும். எனவே, இந்தச் செயலகம் காபினெட் காரியங்களைச்செவ்வனே கண்காணிப்பது மட்டுமல்லாமல், அமைச்சர்களின் கூட்டுப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கும் உறுதுணையாக இருக்கும். காபினெட்டுக்கு வைக்கவேண்டிய விஷயம் வைக்கப்படாமல் போனால், அதைக் காபினெட் செயலகம் எடுத்துக்காட்ட வேண்டும். பல்வேறு துறைச் செயலகங்களுக்குள் (Ministry) காகிதங்கள் அனுப்புவதில் தடங்கலோ உராய்தலோ ஏற்பட்டால், அதையும் காபினெட் செயலர் சரிப்படுத்த வேண்டும். துறைச்செயலர், சம்பந்தப்பட்ட அமைச்சரைச் சில விஷயங்களைக் கேட்கத் தயங்கினால், காபினெட் செயலர் தாமே கேட்டுக் காபினெட் பரிசீலனைகளில் உதவ வேண்டும்.

காபினெட் செயலர் எல்லா அமைச்சரவைக் கூட்டங் களிலும் ஆஜர் ஆவார். எனவே, அவருக்கு எல்லா விஷயங் களும் தொடர்பாகத் தெரியும். அவர் பிரதமருக்கு மட்டுமன்றி, மற்றைய அமைச்சர்களுக்கும் உதவியாளராக இருப்பது மல்லாமல், சீனியர் ஆபீசராகையால் துறைச் செயலர்களுக்கும் வழி சொல்லுபவராக இருப்பார். உத்தியோக விஷயங்களும் காபினெட் செயலகத்தின் பார்வையின்கீழ்க் கொண்டுவரப் பட்டதால், அவர் நம்பிக்கை உள்ளவராகவும், பிரதமருக்குத் துறைக் குறிப்புகளுக்கு மேற்கொண்டு ஏதாவது விளக்கங்கள் வேண்டியிருப்பின் சரியானபடி தரக்கூடியவராகவும் இருப்பார். சில காலத்துக்கு முன்வரை காபினெட் செயலர், திட்டக் கமிஷனுக்கும் செயலாளராகப் பணியாற்றினர். அவரது எல்லாத் துறைகளுடனும், அமைச்சர்களுடனும் உள்ள தொடர் பும், பல விஷயங்களில் திட்டக் கமிஷனுக்குப் பொதுவகையில் அனுகூலமாக இருந்தது. காபினெட் செயலகம் தானுகவே நிர்வாகத்தில் ஒன்றும் செய்வதற்குக் கடமை இல்லையாயினும், காபினெட் நல்லமுறையில் தொழிற்படவும், சிரமமில்லாமல் தொழிற்படவும் துணைபுரியும்.

காபினெட் செயலகத்தில் பர்சன்னெல் துறையும் (Personnel Division), புள்ளிவிவர அமைப்பும் (Statistical Organisation) அடங்கியிருக்கின்றன. காபினெட் செயலாளர் தவிர்த்து புள்ளிவிவரத் துறைக்குத் தனிச்செயலர் உண்டு. பர்சென்னல் துறையில் பிரதமரின் தனிச்செயலர் சேர்க்கப்பட்டுள்ளார்.

காபினெட் செயலகம் பிரதமர் சாஸ்திரி காலத்தில் வலு வடைந்தது. நேரு காலத்தில் உயர்அதிகாரிகளை அவர் பயன் படுத்திக்கொண்டாலும், அவர்கட்கு முடிவு எடுக்கும் மட்டத்தில் அதிக இடம் கொடுக்கப்படவில்லை. சாஸ்திரி உயர்அதிகாரி களின் ஆலோசனைக்கு மதிப்புத் தந்தார். இதை அதிகார வர்க்கம் பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்ததுபோல் மீண்டும் ஆதிக் கத்துக்கு வருவதன் அறிகுறி என்று கருதினர்கள். அது உண் மையன்று. ஆனல், சாஸ்திரி காலத்தில் திறமையான பல ஆபீசர்கள் காபினெட் செயலகத்துக்கு மாற்றப்பட்டார்கள். திரு. எல். கே. ஜா என்பவர் காபினெட் செயலராக இருந்தார். நேரு சில முடிவுகளை முக்கியமாக, வெளிநாட்டு விவகாரங்களில் தாமே எடுப்பார். வேறு விஷயங்களில் சம்பந்தப்பட்ட அமைச் சருக்கு ஐயங்களைத் தெரிவித்து விளக்கம் கேட்பார். குறிப்புகள் பலமாகத் தயாரிக்கப்படுவதன்முன் தாமே ஒரு முடிவுக்கு வந்து விடுவார். சாஸ்திரி காலத்தில் குறிப்புகள் வருகிறவரை பிரச்சினை

காத்திருக்கும். காபினெட் செயலர் ஒரு சூபர் செக்ரடரிபோல் செயலாற்ற வேண்டியிருந்தது. திரு. பிரெட்சர் காபினெட் செயலகம் அகில இந்திய அரசியல் விஷயங்களுக்கு முக்கிய மத்திய ஸ்தானமாகிவிட்டது என்று கூறுவார். காபினெட் செயலர் பிரதமர் செயலருக்குப் பொருளாதார ஆலோசகர் போல் ஆகிவிட்டார் எனவும் கூறுவார். பிரதமரின் முக்கிய அறிவிப்புகளின் வரைநகல்களைப் பெரும்பாலும் அவர் தயாரிக்க வேண்டியிருந்தது. ஐந்தாண்டுத் திட்ட விஷயங்களிலும், வெளிநாட்டு விவகாரங்களிலும் காபினெட் செயலர் பெரும் பங்கு எடுத்துக்கொண்டார். காபினெட் செயலகம் பிரதமருக்குத் தகவல் தரும் குழாய் (pipe line) ஆகமட்டும் இல்லாமல், அதிக ஆதிக்கம் பெற்றது. இது மற்றைய துறைச் செயலர்கட்குப் பிடிக்கவில்லை. அமைச்சரவைக்கு வெளியே சிண்டிகேட் என்று சொல்லப்பட்ட குழு ஆதிக்கம் பெற்றதுபோல், அதிகார வர்க்க மட்டத்தில் காபினெட் செயலகம் வலுவடைந்தது.

காபினெட் செயலகம் வேறு, பிரதமரின் அந்தரங்கச் செயலரின் அலுவலகம் வேறு. பிரதமரின் அலுவலகம் லால்பகதூர் சாஸ்திரி காலத்தில் 1964 ஜூலையில் உருவாயிற்று. அலுவல்களைத் தாமே பார்க்கும் நேருவுக்கு இருந்த ஆற்றல், உடல் நலக்குறைவான சாஸ்திரிக்கு இல்லை. எனவே, முதிய ஆபீசர்களின் உதவி தேவையாயிருந்தது இதனைப் பழைய ஐ.சி.எஸ். ஆதிக்கம் திரும்பி வந்ததாகச் சிலர் கருதினர். சாஸ்திரி உள்நாட்டு அமைச்சராக இருந்தபோதே உத்தியோகஸ்தர்களுடன் கலந்து ஆலோசிப்பது வழக்கம். நேரு உத்தியோகஸ்தர்களின் துணையை அதிகமாக நாடுவதில்லை. சாஸ்திரி இரண்டு உயர்நிலைச் செயலர்களை (திரு. எல். கே. ஜா, திரு. எல். பி. சிங்கு) நியமிக்க எண்ணினர். பின்னையவரை அமைச்சர் குல்ஜாரிலால் நந்தா தமது துறைச் செயலகத்தி லிருந்து விடத் தயாராக இல்லை. திரு. ஜா ஒருவராகவே செயலாற்றினர். அவர் செயலகம் முக்கியத்துவம் அடைந்தது.

13. மாநில அமைச்சரவைகள்

(அ) பொது

மாநில அமைச்சரவைகளின் (State Cabinets) அமைப்பு, அரசியல் அமைப்புச் சட்டத்தின் VIஆம் பாகத்தில் கூறப்பட்டுள்ளது. மாநில அரசாங்க அமைப்பு யூனியன் அமைப்பைப் பெரிதும் ஒத்திருக்கிறது. மாநில நிர்வாகத்தின் உறைவிடமாக ஆளுநர் (Governor) இருக்கிறார். ஆளுநரை ஜனாதிபதி நியமிக்கிறார். இராஜிநாமாச் செய்தால் அல்லது விலக்கப்பட்டாலொழிய, ஆளுநர் பொதுவாக ஐந்தாண்டுக் காலம் பதவி வகிப்பார். 35 வயது நிரம்பிய இந்தியக் குடியையே ஆளுநர் பதவிக்கு நியமிக்கலாம். பாராளுமன்றம் அல்லது மாநிலச் சட்டமன்றத்தின் உறுப்பினராக அவர் இருத்தலாகாது. அத்தகைய உறுப்பினர் ஆளுநராக நியமிக்கப்பட்டால் அவர் சட்டமன்றத்தினின்று விலகவேண்டும்.

மாநில முதலமைச்சரை ஆளுநர் நியமிக்கிறார். முதலமைச்சரின் யோசனையின்மீது மற்ற அமைச்சர்களை அவர் நியமிக்கிறார். மாநில அட்வகேட் ஜெனரலையும் அவரே நியமிக்கிறார். மாநில அரசின் அலுவல்களை நடத்துவதற்கு வேண்டிய விதிகளை இயற்ற ஆளுநருக்கு அதிகாரம் இருக்கிறது. மாநிலச் சட்டமன்றக் கூட்டத்தைக் கூட்டுவதும் கலைப்பதும் அவருடைய ஆணையின் பேரில்தான் நடக்கும். மாநிலச் சட்டமன்றத்தில் கொண்டுவரப்படும் யாதொரு மசோதாவுக்கும் அவரது ஒப்புதலைப் பெறவேண்டும். ஒரு மசோதாவை அவர் ஒப்புதலளிக்காமல் ஜனாதிபதி பரிசீலனைக்கு அனுப்பிவைக்கவும் அவருக்கு அதிகாரம் உண்டு. ஒரு மசோதாவை மறுபரிசீலனைக்கும் அவர் திருப்பி அனுப்பலாம். சட்டமன்றத்தில் உரைநிகழ்த்தவும், செய்திகள் அனுப்பவும் அவருக்கு அதிகாரம் உண்டு. சட்டமன்றம் கூடியில்லாத சமயங்களில் அவசரச் சட்டங்களை

(Ordinance) பிறப்பிக்க அவருக்கு அதிகாரம் உண்டு. அவரது அனுமதியில்லாமல் நிதி மசோதாவையோ, நிதி சம்பந்தமுள்ள வேறு மசோதாவையோ, செலவுக் கோரிக்கைகளையோ சட்ட மன்றம் சமர்ப்பிக்க முடியாது. அரசியல் அமைப்புப்படி மாநிலத்தில் நிர்வாகம் நடத்தமுடியாது என்று கருதி ஜனாதிபதி மாநில நிர்வாகப் பொறுப்பைத் தாமே ஏற்றுக்கொண்டால், ஆளுநர் அத்தகைய நிர்வாகத்தை நடத்துவார். ஆளுநர் ஜனாதிபதிக்கு உட்பட்டவர்.

மத்திய அரசைப் போலவே, மாநிலங்களிலும் அமைச்சரவைமூலம் நிர்வாகம் நடைபெறுகிறது. ஆளுநர் தமது கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஆலோசனை கூறவும் உதவி புரியவும் அமைச்சரவை அமைக்கப்படுகிறது. தேர்தலில் பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவரை ஆளுநர் அமைச்சரவை அமைக்கும்படி அழைப்பார். ஓர் அமைச்சரவை இராஜிநாமாச் செய்துவிட்டால், அவர் கருத்தில் எந்த எதிர்க்கட்சி பதில் அமைச்சரவை அமைக்க ஆற்றல் உடையது என்று எண்ணப்படுகிறதோ, அந்தக் கட்சி அல்லது கூட்டுக்கட்சியின் (Coalition parties) தலைவர் அழைக்கப்படுவார். எந்தக் காரணத்தினாலோ அரசியல் அமைப்புப்படி நிர்வாகம் நடத்த முடியாது என்று ஆளுநர் கருதினால், ஜனாதிபதிக்கு உடனே அறிவிப்பது அவரது கடமையாகும். அவர் அறிக்கையின்மீது தான் ஜனாதிபதி தமது ஆட்சியை மாநிலத்தில் புகுத்த வேண்டுமா வேண்டாமா என்று முடிவு செய்வார். ஆனால், இந்த விஷயங்களில் மத்திய அமைச்சரவையின் யோசனைப்படி ஜனாதிபதி இயங்குவார். பொதுத்தேர்தலுக்குப் பின் அமைச்சரவையை அமைக்கும் செயலில் ஆளுநர் ஜனாதிபதியைக் கலந்து முடிவு எடுக்கத் தேவையில்லை. மாநிலச் சட்டமன்றம் கலைக்கப்பட்டு அமைச்சரவையும் கலைக்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சியைப் புகுத்தியபின் மீண்டும் கூடுமானால், ஓர் அமைச்சரவையை நியமிப்பதிலேயோ ஜனாதிபதி ஆட்சியை விலக்கிப் பொதுத்தேர்தல் நிகழ்த்த முடிவு செய்வதிலேயோ ஆளுநர் ஜனாதிபதிக்குத் தெரிவித்து முடிவுக்கு வரவேண்டும். இந்த விஷயங்களில் மத்திய அமைச்சரவை நேர்முகமாக இல்லையாயினும் ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறும் முகமாகத் தனது கருத்தைப் புகுத்தலாம். இந்திய அரசியலமைப்புக் கூட்டாட்சி (Federation) ஆகையால் ஜனாதிபதிக்கு மாநில அமைச்சரவையின் கலைப்பிலும் புனரமைப்பிலும் பங்குண்டு. சுதந்திரத்திற்கு முன் ஒருமுக ஆட்சியில் (Unitary Government) கவர்னர் ஜெனரலின் பிரதிநிதியாக மாநில ஆளுநர்கள் தொழிலாற்றினார்கள்.

சுதந்திரத்திற்குப்பின் அமைச்சரவை விஷயத்தில் மாநில ஆளுநர்களுக்கு மாநிலத் தலைவர் என்ற முறையிலே அதிகாரம் பல இருப்பினும் ஜனாதிபதியின் அதிகாரத்திற்கு அவர் உட்பட்டவராவார். அண்மைக் காலத்தில் பல மாநிலங்களில் பெரும்பான்மை பெற்ற கட்சிகள் இல்லாததாலும் அல்லது பெரும்பான்மையை இழந்ததாலும் அடிக்கடி ஜனாதிபதி ஆட்சி புகுத்தப் பட்டுள்ளது. இது இந்திய அரசியல் போக்கின் காரணத்தால் உண்டானது. இந்த நிலையில் ஆளுநர்களின் நிலை சங்கடமானது எனக் கூறலாம். மேலும், மத்திய அரசில் ஆளும் கட்சியும் மாநிலங்களில் ஆளும் கட்சிகளும், அல்லது ஆட்சிக்கு வர முயலும் கட்சிகளும் வெவ்வேறு அரசியல் கொள்கைகளையுடையனவாக இருந்தால் சிக்கல்கள் ஏற்படும். இந்தியச் சமஷ்டி (Union) அமைப்பில் மாநில அமைச்சரவைகளின் நிலை மேலும் மேலும் சிக்கல் உடையதாக மாறும். எனவே, மாநில அமைச்சரவைகள் இனி மிக முக்கியமானவை ஆகும். இந்திய அரசியல் அமைப்புக்கும் குடியாட்சிக்கும் அரணாக நிற்கவேண்டியன இவையே. ஒருவிதத்தில் மத்திய அமைச்சரவையைவிட் நிர்வாகப் பொறுப்பும், இந்திய ஒருமைப்பாட்டைக் காக்கும் திறனும் இவற்றுக்கு மிகுதி என்பது உணரத்தக்கது.

மாநில அமைச்சரவை வரலாறுகளின் தகவல்கள் செவ்வையாகச் சேர்க்கப்பட்டு அதிகாரபூர்வமாக எழுதப்படவில்லை. மத்திய அரசு மாநிலங்களைக் குறித்து ஆதாரமான வெளியீடுகளையும் வழங்குவதில்லை. மாநில அமைச்சரவையின் விரிவான தத்துவங்களை எழுதப்புகின், அது ஒரு பெரிய நூலாகி விடும். அரசியல் அமைப்பில் கண்டுள்ள 15 மாநிலங்களுக்கு மேல், அண்மைக் காலத்தில் புது மாநிலங்களும் அமைக்கப் பட்டுள்ளன. இந்த மாநிலங்களில் பல்வேறு கட்சிகள், பல்வேறு பிரச்சினைகள் இருந்துள்ளன. எல்லாவற்றையும் சேர்த்துப் பார்ப்பது தக்கதே. இந்திய அமைச்சரவைத் தத்துவத்தைக் கவனிக்கும்போது மத்திய அமைச்சரவையும் மாநில அமைச்சரவைகளும் அடிப்படையிலே ஒரே முறையினதாகக் காணப்படினும், மாநில அமைச்சரவையின் விஷயங்களுக்குப் போதுமான கவனம் செலுத்தப்படுவதில்லை.

(ஆ) தமிழ்நாடு

இந்த நூல் தமிழில் எழுதப்படுவதால் தமிழ்நாட்டு அமைச்சரவையின் இலக்கணங்களை மின்டோ-மார்லிச் சீர்திருத்த

(Minto-Morli Reforms) நாள்தொட்டுச் சுருக்கமாகக் கூறுவோம். 1909ஆம் ஆண்டு மின்டோ-மார்லிச் சீர்திருத்தங்கள் அமலுக்கு வந்தன. அப்போது இருந்த ஆளுநரின் எக்சிகியூடிவ் கவுன்சிலில் (Executive Council) கூடுதலான உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுச் சட்டமன்றமாக ஏற்படுத்தப் பட்டது. கூடுதலான உறுப்பினர்கள் எண்ணிக்கை 20 முதல் 43 வரை இருந்தது. அதில் 19 பேர் தேர்தலில் வந்தவர்கள். உத்தியோகஸ்தர்களின் பெரும்பான்மை விடப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தீர்மானங்களைக் கொண்டுவரவும், கேள்விகள் கேட்கவும், வரவுசெலவுத் திட்டத்தை நிறைவேற்றவும் உரிமைபெற்றனர். இருந்தபோதிலும் சட்டமன்றத்தின் தீர்மானம் முதலியன நிர்வாகத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் பெறவில்லை. ஏனெனில், சட்டமன்றத்துக்குப் பொறுப்புள்ள நிர்வாகம் ஏற்படுத்தப்படவில்லை. 1919-ல் மான்டேகு-செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தம் அமலுக்கு வந்தபோது பொதுவாகச் சட்டமன்றம் வழங்கிய குழு நிர்வாகக் குழுவாக இல்லை. சட்டமன்றம் தனியாகப் பிரிக்கப்பட்டது. அதில் எக்சிகியூடிவ் கவுன்சிலர்கள் உறுப்பினர்களானார்கள். இது பொறுப்புள்ள அரசியல் அமைப்பில் சட்டம் இயற்றும் (Legislative) பொறுப்பும் நிருவாகப் (Executive) பொறுப்பும் பிரிக்கப்பட வேண்டுமென்ற கொள்கையின் முதற்படி ஆகும். இந்தச் சட்டமன்றத்தின் எண்ணிக்கை விரிவாக்கப்பட்டது. மொத்தம் 98 உறுப்பினர்கள் இருந்தார்கள். அவர்களுள் 30 பேர் ஆளுநரால் நியமிக்கப்பட்டவர்கள். அவர்களுள்ளும் 15 பேர் உத்தியோகஸ்தர்கள். இந்தச் சட்டமன்றத்துக்கு ஆளுநர் தலைமை வகிப்பதில்லை. ஆனால், ஆளுநருக்கு எப்போது வேண்டுமாயினும் சட்டமன்றத்தில் பேசும் உரிமை உண்டு. இந்தச் சட்டமன்றத்தின் உரிமைகள் விரிவாக்கப் பட்டன. தீர்மானங்கள் கொண்டுவருவது, கேள்விகள் கேட்பது, வரவுசெலவுத் திட்டத்தை அங்கீகரிப்பது மட்டுமன்றி, சட்டசபை நடவடிக்கைகளை ஒத்திவைக்கப் (Adjournment) பிரேரபணை கொண்டுவரவும் அதிகாரம் தரப்பட்டது. நிர்வாக ஆட்சியின் அமைப்பு மாற்றப்பட்டது. ஒதுக்கிய துறைகள் (Reserved Departments) என்றும் மாற்றப்பட்ட துறைகள் (Transfered Departments) என்றும் பிரிக்கப்பட்டன. இது இரட்டை ஆட்சி என்று பேர் பெற்றது. (இதைப்பற்றி முந்திய அதிகாரத்தில் கூறினோம்.) ஒதுக்கிய துறைகள் ஆளுநர் தலைமையிலான குழுவினாலும் (Governor-in-Council), மாற்றப்பட்ட துறைகள் அமைச்சர்களோடு கூடிய ஆளுநர்

நிர்வாகத்தாலும் (Governor acting with Ministers) நிர்வாகம் செய்யப்பட்டன. இந்த இரண்டாம் பகுதி சட்டமன்றத்துக்குப் பொறுப்புடையது. இரு பகுதிகளுக்கும் கூட்டுப் பொறுப்பு இல்லை. ஆனால், இரண்டு பகுதிகளும் வெளிப்படையாக எதிர்க்கக் கூடாது என்று மான்டேகு-செம்ஸ்ஃபோர்டு அறிக்கை கருதியது. மாற்றப்பட்ட பகுதியின் நிர்வாகத்துக்கு வந்த அமைச்சர்கள் தங்களுக்கிடையே கூட்டுப் பொறுப்பைக் கைக் கொண்டார்கள். இதுதான் முதன் முறையாகக் காபினெட் அரசின் இலக்கணமாக மாநில நிர்வாகத்தில் வித்திடப் பட்டது. எனவே, இரட்டை ஆட்சி மாநில ஆட்சியின் கூர் தலில் முக்கிய இடம் பெறுகிறது. சென்னை மாநிலத்தில் இரட்டை ஆட்சி நல்ல முறையில் நடத்தப்பட்டதால், இந்த மாநிலத்தின் அமைச்சரவை வரலாறு அந்தநாள் தொட்டு இதுவரை இந்தியாவில் மாநில ஆட்சி விமர்சனத்தில் முக்கிய இடம் பெறுகிறது.

மான்டேகு - செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தங்கள் (Montegu-Chemsford Reforms) வந்தபோது சென்னை மாநிலத்தில் ஒரு செம்மையான அரசியல் கட்சியாக நீதிக்கட்சி (Justice Party) உருவானது. அது 1916ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதன் பிரமுகரான சர் பி.டி. தியாகராஜசெட்டியார் 1916 டிசம்பரில் ஓர் அறிக்கை (Manifesto) விடுத்தார். அது சுயஆட்சிக்கு முன் வரவேண்டிய முக்கிய அரசியல் உரிமைகளையும், சமூக உரிமைகளையும் வற்புறுத்தியது. 1919ஆம் ஆண்டின் அரசியல் சட்டம் முற்றும் இந்தக் கட்சிக்குத் திருப்தி இல்லையாயினும், அந்தச் சட்டத்தின்கீழ் அமைச்சரவை அமைக்க முன்வந்தது. (முதல் அமைச்சரவையின் பட்டியல் பிற்சேர்க்கையில் தரப்பட்டுள்ளது.) இந்தக் கட்சி பிரிட்டன் பாராளுமன்றக் கட்சியின் அரசியல் முறைகளையும் வழக்கங்களையும் பின்பற்றிற்று. உதாரணமாக, கட்சித் தலைவரும், முதலமைச்சரும் வெவ்வேறு நபர்களாக இருத்தல் வேண்டுமென்பது. சட்டமன்றத்தின் கட்சி உறுப்பினர்கள் கொள்கை அளவில் மன்றத்தின் வேறுன கட்சி ஆணைக்கு உட்பட்டாலும், மன்ற விவகாரங்களில் மன்றத்தில் கட்சித் தலைவரான முதலமைச்சரின் ஒழுங்குக்கு உட்பட்டவர்கள் என்பது முதலியன. சர் பி. டி. தியாகராஜ செட்டியார் கட்சித் தலைவராயினும் முதலமைச்சர் பதவியை ஏற்க விரும்பவில்லை. சட்டமன்ற விவகாரங்கள் முதலமைச்சர் ஒழுங்குக்கே விடப்பட்டன. இந்திய தேசியக் காங்கிரசின் ஒத்துழையாமைப் (Non-Cooperation) போராட்டம் வலுத்து, தேசத்தில் சுதந்திர உணர்ச்சி மேலிட்டது. 1926ஆம் ஆண்டு நடந்த தேர்தலில்

நீதிக்கட்சி பெரும்பான்மையை இழந்தது. காங்கிரசுக் கட்சி ஒத்துழையாமைக் கொள்கையை விட்டுத் தேர்தலில் பங்கு கொண்டது. இந்த மாறுபாட்டையும் காங்கிரஸில் ஒருபகுதியினர் எதிர்த்தார்கள். சட்டமன்றம் புகுதலைக் (Council entry) கைக் கொண்ட சுயராஜ்ஜியக் கட்சி(Swarajya Party) பெரும்பான்மை யைப் பெற்றுலும் அமைச்சரவைஅமைக்க அது மறுத்துவிட்டது. எனவே, அந்தக் கட்சியின் ஆதரவு கொண்ட ஒரு 'சுயேச்சை' அமைச்சரவை (Independence Ministry) பதவிக்கு வந்தது. நீதிக்கட்சி எதிர்க்கட்சியாகத் தொழிலாற்றியது; பிரிட்டிஷ் அரசாங்கம் மேலும் அரசியல் உரிமைகளைத் தரவேண்டுமென்று போராடியது. 1930ஆம் ஆண்டுத் தேர்தல்களில் காங்கிரசு, சுயராஜ்ஜியக் கட்சிகள் பங்கு கொள்ளவில்லை. நீதிக்கட்சி மீண்டும் அமைச்சரவை அமைத்தது; பல முக்கியமான சட்டங் களை நிறைவேற்றியது. மகாத்மா காந்தியின் சட்ட எதிர்ப்பு இயக்கம் வலுப்பெற்றதால் 1934ஆம் ஆண்டுத் தேர்தலில் இந்தக் கட்சி தோல்வியுற்றது. காங்கிரசுக் கட்சி அமைச்சரவை அமைக்க மறுத்ததால், மீண்டும் நீதிக்கட்சி அமைச்சரவையை அமைத்தது. (ஈண்டுக் கவனிக்கத்தக்கது, அந்த நாளில் இரண்டு கட்சிகளே இயங்கின. ஒரு கட்சி தோல்வியுற்றுலும் அல்லது அமைச்சரவையை யாதொரு காரணத்தால் அமைக்க வில்லையாலுைம், எதிர்க்கட்சி அமைச்சரவை ஏற்படுத்துவது நல்ல அரசியல் நியதியாக நின்றது. பல கட்சிகள் இருப்பின், கட்சி மாறுதல், கூட்டுச் சேர்தல் போன்ற தீய வழக்கங்கட்கு இடம் உண்டாகிறது). சட்டமறுப்பை உடைக்க பிரிட்டிஷ் அரசாங்கம் பல்வேறு அடக்குமுறைகளைக் கையாண்டது. இதனுல் நீதிக்கட்சிக்குச் செல்வாக்குக் குறைந்தது. 1937ஆம் ஆண்டுத் தேர்தலில் இந்தக் கட்சி தோல்வியுற்றது. பெரும்பான் மைபெற்ற காங்கிரசுக் கட்சி அமைச்சரவை அமைத்தது. 1939-ல் பிரிட்டிஷ் அரசு இந்தியாவின் சம்மதம் பெறுமல் உலகயுத்தத் தில் பிரிட்டனின் சார்பில் இந்தியாவை உட்படுத்தியதை எதிர்த்து ஓராண்டுக்குள் இராஜிநாமாச் செய்தது. 1939 முதல் 1947 வரை தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவை ஆட்சியில் இல்லை. ஆளுநருக்கு உதவியாக ஆலோசகர்களைக் கொண்ட அரசே (Advisery Government) இருந்தது.

1920 முதல் 1947 வரை அமைச்சரவை ஆட்சி இயல் எப்படி உருவாகி வளர்க்கப்பெற்ற தென்பதைச் சிறிது கவனிப் போம்.

முதல் அமைச்சரவைக்கு, திரு. சுப்பராயலு ரெட்டியார் சில மாதங்களில் இறந்தபின் திரு. பி. இராமராயனிங்காவாரு

பனகல் ராஜா முதலமைச்சரானார். அவர் நல்ல அரசியல் விவேகி என்று பேர் எடுத்தார்; பல சட்டங்களை மாற்றப்பட்ட துறையின் வளர்ச்சிக்காக நிறைவேற்றினார்; ஒதுக்கிய துறைகளின் எக்சிகியூடிவ் கவுன்சிலர்கட்கு உட்படாமல் தமது மக்களாட்சிக் கடமைகளை நிறைவேற்றினார். சர். கெ. சீனிவாசய்யங்கார் (Member of Council) கொண்டு வந்த நீர்ப்பாசன மசோதா (Irrigation Bill) சட்ட மன்றத்தின் எதிர்ப்பினால் கைவிடப்பட்டது. அவர் அதன் காரணமாக இராஜிநாமாச் செய்தார். அமைச்சரவை சட்டமன்றத்தில் மசோதாவை எதிர்க்கவில்லை. ஆனால், கட்சி உறுப்பினர்கள் எதிர்த்தார்கள். சில நாள்களுக்குப்பின் சட்டமன்றத்தைக் கலைக்கும் பேச்சில் ஆளுநர் வில்லிங்டன் பின்வருமாறு கூறினார். 'என்னுடைய அமைச்சர்களுக்கு நியாயம் செலுத்தும் முறையில் இதைக் கூற விரும்பினேன். இந்த மசோதாவுக்குப் பெரும்பான்மை வராது என்ற சந்தேகத்தை அமைச்சர்கள் எனக்கும் எனது இதரக் கவுன்சிலர்கட்கும் தெரிவித்தார்கள். மசோதாவைச் செலுத்தியதற்கு முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். மசோதா கொண்டுவந்தபின் பொறுக்குக் குழுவில் வேண்டிய திருத்தங்கள் செய்யப்படும் என்று எண்ணினேன். ஆனால், எதிர்பாராத முறையில் மசோதா கொண்டு வந்த உடனே அது தள்ளப்பட்டது.'

இரண்டாவது அமைச்சரவைக் காலத்தில் சுயராஜ்ஜியக் கட்சி உள்ளிருந்து முட்டுக்கட்டை போடும் கொள்கையில் இயங்கியமையால், இரட்டையாட்சியைப் (Dyarchial Government) முறியடிக்க முயன்றது. அமைச்சரவையின் உத்தியோகங்களில் வகுப்புவாரிப் பங்கு என்கிற ஏற்பாட்டை ஆங்கிலக் கவுன்சில் மெம்பர்களில் சிலரும்கூட எதிர்த்தார்கள். அமைச்சரவை இவைகளினால் உடைபடவில்லை. அமைச்சரவையின் முக்கியமான இந்துமத அறக்கட்டளைப் பாதுகாப்புச் சட்டத்திற்கு ஆங்கிலக் கவுன்சில் மெம்பர்கள் ஆதரவு தந்தார்கள்.

மூன்றாவது அமைச்சரவை சுயேச்சையாளர்கள் கூடிய அவை. ஆனால், சுயராஜ்ஜியக் கட்சியின் ஆதரவு அதற்கு இருந்தது. சைமன் குழுவுடன் (Simon Commission) ஒத்துழைக்கும்படி அமைச்சரவையை ஆளுநர் கேட்டுக்கொண்டாலும், முதலமைச்சரைத் (டாக்டர் சுப்பராயன்) தவிர மற்றைய அமைச்சர்கள் உடன்படவில்லை. எனவே, கூட்டுப்பொறுப்பு என்ற கொள்கையில் இந்த அமைச்சரவை இராஜிநாமாச் செய்துவிட்டது. ஆளுநருக்கு ஒத்துழைக்காத அமைச்சரவையை

நீக்கி, வேறு அமைச்சரவையை நியமிப்பதற்கு அதிகாரம் இருந்தது. ஆனால், அது செய்யப்படவில்லை. மாற்றுக் கட்சியும் உத்தியோக வெறியில் அரசுபீடம் பிடிக்க முயலவில்லை.

அடுத்த தேர்தலில் நீதிக் கட்சி ஆட்சிக்கு வந்தது. இரண்டாண்டுகட்குப் பின் முதலமைச்சர் (திரு. பி. முனுசாமி நாயுடு) அரசியல் காரணத்தால் மாற்றம் அடைந்தார். பொப்பிலி ராஜா முதலமைச்சரானார். அமைச்சரவை கூட்டுப்பொறுப்பைக் கடைப்பிடிக்கத் தவறவில்லை. இந்த நான்கு சட்ட மன்றங்களிலும் அடிக்கடி ஆளும் கட்சியின்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானங்கள் (No-Confidence Motion) எதிர்க்கட்சி உறுப்பினர்களால் கொண்டுவரப்படுவது வழக்கம். எதிர்க் கட்சிகளில் வெகு திறமையுடையவர்கள் இருந்தார்கள். பின் வரவிருக்கும் சுதந்திர அமைச்சரவைக்கு இந்தப் பழைய அமைச்சரவைகள் நல்ல நியதிகளை உருவாக்கின. 1937ஆம் ஆண்டுத் தேர்தலுக்குப்பின் காங்கிரசுக் கட்சி ஆட்சிக்கு வந்தது. புதுச் சட்டத்தின்படி சட்டமன்றம் கீழ்ச்சபை (Legislative Assembly), மேல்சபை (Legislative Council) என்று இரண்டாக அமைக்கப்பட்டது. திரு. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் கீழ்ச்சபைக்குப் பட்டதாரித் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் முதலமைச்சரானார். இந்தத் தேர்தலில் 8 மாநிலங்களில் காங்கிரசு வெற்றிபெற்றது; அதில் சென்னை மாநிலம் ஒன்று. திரு. இராஜகோபாலாச்சாரியாரின் அமைச்சரவை ஏறத்தாழ ஓராண்டுதான் இருந்தது. பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவின் சம்மதம் பெறுமல் உலகப் போரில் அதனை உட்படுத்தியதை எதிர்த்து இராஜிநாமாச் செய்தது. போர்க் காலமாகையால் பொதுத்தேர்தல் நடத்தப்படவில்லை.

சுதந்திரம் பெறுவதற்கு முன் இருந்த சென்னை மாநில முதலமைச்சர்கள் : திரு. சுப்பராயலு ரெட்டியார், பனகல் ராஜா, டாக்டர் பி. சுப்பராயன், திரு. பி. முனுசாமி நாயுடு, பொப்பிலி ராஜா, திரு. சி. இராஜகோபாலாச்சாரியார். இவர்கள் அமைச்சரவை இலக்கணத்தை இனிது வளர்த்தார்கள்.

1946ஆம் ஆண்டில் அமைந்த அமைச்சரவைக்குத் திரு. டி. பிரகாசம் முதலமைச்சரானார். பின் திரு. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் காங்கிரசுக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதால் திரு. பிரகாசம் இராஜிநாமாச் செய்தார்; காங்கிரசை விட்டும் விலகினார். திரு. ரெட்டியார் முதலமைச்சரானார்,

அடுத்த 1952 ஆம் ஆண்டுத் தேர்தலில் காங்கிரசுக் கட்சிக்குப் பலம் குறைந்தது. திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் கட்சிக் குத் தலைவராக ஆகும்படி கட்சியினரால் அழைக்கப்பட்டார். ஆளுநர் அவரை மேல்சபைக்கு உறுப்பினராக நியமித்து (Nomination) அமைச்சரவை அமைக்கும்படி அழைத்தார். 1952 மே 6 அன்று இரண்டு மன்றங்களிலும் ஆளுநர் பேருரை ஆற்றியபோது, ஒருவர் தேர்தலில் நின்று வராமல் அமைச்ச ரவை அமைப்பது சரியன்று என்று கூறி திரு. பிரகாசம் வெளியேறினர். திரு. இராஜகோபாலாச்சாரியார் 10—4—1952 முதல் 15—4—1954 வரை ஈராண்டு முதலமைச்சராக இருந்தார். இராஜகோபாலாச்சாரியார் காங்கிரசுக் கட்சி பலம் குறைந்த காலத்தில் நிர்வாகம் ஏற்றுக்கொண்டார். 1946ஆம் ஆண்டுத் தேர்தலில் காங்கிரசுக் கட்சிக்கு 205 இடங்களில் 165 இருந்தன. 1952 தேர்தலில் 375 இடங்களில் 152 இடங்கள்தான் பெற்றது. இது இந்தியா சுதந்திரம் பெற்ற பின் (15—8—1947) முதலாவ தாக நடந்த தேர்தல். பல பழைய அமைச்சர்கள் (திரு. குமார சுவாமிராஜா, திரு. எம்.பக்தவத்சலம், திரு. காலாவெங்கடராவ், திரு. பி. கோபால ரெட்டி, திரு. கெ. சந்திரமௌலி, திரு. கெ. மாதவ மேனன்) தோற்கடிக்கப்பட்டார்கள். திரு. பிரகாசம் தமது கூட்டுக் கட்சிக்குப் போதுமான பலம் இருக்கிறதென்றும் ஆளுநர் தம்மை அமைச்சரவை அமைக்கக் கோரவேண்டு மென்றும் கருதினர். திரு. காமராஜரும் கட்சியின் பலக்குறை வினல் எதிர்க்கட்சியில் இருத்தலே நலமென்று கருதினுலும், கூட்டுக் கட்சியில் கம்யூனிஸ்டுகள் சேர்ந்திருந்தது விரும்பத் தக்கதாக இல்லை என்று கருதினர். எனவே, இராஜாஜி கட்சித் தலைவராக்கப்பட்டார். தமது முதுமை காரணமாக தேர்தலில் நின்று அசெம்பிளியில் இடம்பெற முடியவில்லை. எனவே, ஆளுநரால் உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார். இராஜாஜி காமன்வீல் (Commonweal Party) கட்சியைச் சேர்த் துக்கொண்டு தமது கட்சியைப் பலப்படுத்தி, கம்யூனிஸ்டு கட்சியை ஒடுக்கினர். இராஜாஜியின் அமைச்சரவை நீடித்து இருந்திருக்கும். ஆனல், அவர் கொண்டுவர எண்ணிய குலத் தொழில் கல்வித் திட்டத்திற்கு எதிர்ப்பு உண்டாயிற்று. திரு. காமராஜருக்கும் இராஜாஜிக்கும் இருந்த பல கருத்து வேறு பாடுகளினல் இராஜாஜி இராஜிநாமாச் செய்தார். காங்கிரசுச் சட்டமன்றக் கட்சியின் (Congress Parliamentary Party) 1964 மார்ச்சு 31-ல் நடந்த கூட்டத்தில் திரு. காமராஜர் கட்சித் தலை வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கட்சியின் வற்புறுத்தலின் பேரில் முதலமைச்சராகி அமைச்சரவையை ஏற்படுத்தினர்.

இரண்டாவது பொதுத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி பெரும்பான்மை பெற்றது. திரு. காமராஜ் மீண்டும் 1956 ஏப்ரல் 13-ல் முதலமைச்சரானார். திராவிடக் கழகத்தின் (Dravida Kazhagam) தலைவரான திரு. ஈ. வெ. ராமசாமிப் பெரியாரின் பொது ஆதரவு முதலமைச்சருக்கு இருந்தது. திரு. காமராஜர் அமைச்சரவை ஒழுங்காக நடந்தது. அவர் சட்டமன்றத்தில் வேண்டிய போதுதான் சுருக்கமாகப் பேசுவார். திரு. சி. சுப்பிரமணியமும், திரு. பக்தவத்சலமும் வாதங்களில் பங்கெடுத்து வந்தார்கள். முதலமைச்சர் பிரதேசக் காங்கிரசுக் கட்சிக்கும் தலைவராக இருந்தபடியால் பொறுப்பும் வேலைப்பளுவும் அதிகமாக இருந்தன.

1957ஆம் ஆண்டுத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி மீண்டும் பெரும்பான்மை பெற்றது. 205 இடங்களில் 151 இடங்களைப் பெற்றது. காங்கிரசுக்குள் சீர்திருத்தக் கட்சி (Congress Reforms Party) ஒன்று ஏற்பட்டு, அது 14 இடங்களைப் பெற்றது. திராவிட முன்னேற்றக் கழகம் (D. M. K.) முதன்முறையாகத் தேர்தலில் போட்டியிட்டு 15 இடங்களைப் பெற்றது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் எண்ணிக்கை சிறிதாயினும் அதன் வளர்ச்சிக்கு அது அறிகுறியாகக் காணப்பட்டது. உதாரணமாக, 1959ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சித் தேர்தலில் பெரும்பான்மை பெற்றது. காங்கிரசுக்கு இராஜாஜியின் எதிர்ப்பு வலுத்தது. 1959ஆம் ஆண்டு இராஜாஜி சுதந்தராக் கட்சியைத் தொடங்கினார். சுதந்தராக் கட்சி திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டாகச் சேர்ந்து இயங்கிற்று.

1962ஆம் ஆண்டுத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி 13 இடங்களை இழந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் 14 பழைய இடங்களை இழந்தாலும், 49 புது இடங்களைக் கைப்பற்றியது. சட்டசபையில் மொத்தம் 206 இடங்களில் காங்கிரசு 139 இடங்களைப் பெற்றது. தி. மு. க. 50 பெற்றுப் பலமான எதிர்க் கட்சியாய் இருந்தது. இந்தச் சட்டசபையில்தான் மக்கள் ஆட்சியில் பலமான எதிர்க்கட்சி (Strong Opposition) ஒன்று இருக்க வேண்டுமென்ற இலக்கணம் உருவாயிற்று. இராஜாஜியின் அமைச்சரவைக்குச் சொந்தக் கட்சியின் பலம் குறைவாக இருந்தாலும், எதிர்க்கட்சி பலமானதாக இல்லை. அடுத்த அமைச்சரவையில் ஆளுங்கட்சிக்கு மிகுந்த பலம் இருந்தது. எதிர்க்கட்சியில் தி. மு. க.-வுக்கு 15 இடங்கள் தாம் என்றாலும், திரு. சி. என். அண்ணாதுரை கட்சித் தலைவராக இருந்தார். இந்த அமைச்சரவைக்கு எதிர்க்கட்சித் தலைவராக திரு. மு.

கருணாநிதி இருந்தார். காங்கிரசு அமைச்சரவை அமைதியாகப் பிளவின்றித் தொழிற்பட்டாலும், நாட்டில் ஆளுங்கட்சிக்கு எதிர்ப்பு அதிகமாயிற்று. உதாரணமாக, திருவண்ணாமலையில் 1963 ஜூனில் நடந்த இடைத்தேர்தலில் முதலமைச்சர் திரு. காமராஜர் தீவிரமாகப் பிரசாரம் செய்தும், காங்கிரசு வேட்பாளர் தோல்வியுற்ருர். எனவே, திரு. காமராசர் காங்கிரசை வலுப்படுத்த சில அமைச்சர்கள் பதவியிலிருந்து விலகி நாட்டில் அமைப்பு வேலையைத் தீவிரமாகச் செய்ய வேண்டுமென ஒரு திட்டத்தை (Kamaraj Plan) வகுத்தார். அது அகில இந்தியக் காங்கிரசுக் குழுக் கூட்டத்தில் 1963 ஆகஸ்டு 10-ல் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்தத் தீர்மானத்தின்படி திரு. காமராஜர் இராஜிநாமாச் செய்தார். மத்திய அமைச்சரவையிலும் ஆறு மூதிய அமைச்சர்கள் இராஜிநாமாச் செய்தார்கள். இந்தத் திட்டத்தின் விளைவாக அமைச்சரவை பாதிப் பலங்குறைந்ததெனக் காணப்பட்டது. மூதிய தலைவர்கள் காங்கிரசு அமைச்சரவைக்கு வெளியே ஒரு 'சிண்டிகேட்' போல் இயங்கினுர்கள். நேருவுக்குப் பின் யார் பிரதமராக வேண்டுமென்பதையும் இந்த வெளிக்குழு திருப்பதியில் 1963 செப்டம்பரில் கூடி ஆலோசித்தது. இத்தகைய போக்கு அமைச்சரவைத் தத்துவத்துக்குப் புறம்பானது. பிரதமர் ஸ்தானத்துக்கு அதுமுதற்கொண்டே போட்டி மனப்பான்மை ஏற்பட்டது.

திரு. காமராஜர் இராஜிநாமாச் செய்தபின் யாரை முதல் அமைச்சராக நியமிப்பது என்ற பிரச்சினை கிளம்பியது. திரு. எம். பக்தவத்சலம் அமைச்சரவையில் பல ஆண்டுகளாகப் பணி செய்தவர். தாம் அமைச்சராக இருந்தபோது, முதலமைச்சர் திரு. காமராஜரைக் கேட்காமல் எதையும் செய்வதில்லை எனத் தமது 'நினைவுகளில்' குறிப்பிட்டிருக்கிறுர். திரு. கக்கனை முதலமைச்சராக ஆக்குவதென்று பேச்சு இருந்தது. ஆனுல், திரு. பக்தவத்சலம் நியமிக்கப்பட்டார். 1963 அக்டோபர் 3ஆம் தேதி அவர் முதலமைச்சரானுர். மற்ற அமைச்சர்களில் மாறுதல் செய்யப்படவில்லை. அமைச்சரவை நிர்வாகத்தில் காமராஜரின் தலையீடு இருந்ததென்று திரு. பக்தவத்சலம் தமது நூலில் கூறுவார். காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது தமிழ்நாட்டுக் காங்கிரசுக் கமிட்டித் தலைவரைப் பெரிதும் மதிப்பதில்லை யென்றும். ஆனுல், தாம் முதலமைச்சரானபின் 'காமராஜரை எல்லா முக்கியமான விஷயங்களிலும் ஆலோசனை கலந்துகொண்டு செய்யப்பட்ட நிலையிலும் அவர் நிர்வாகத்தில் தலையிடுவார். அரசாங்க அதிகாரிகள் தம்மை நேரில் பார்ப்பதை ஊக்கப்படுத்துவார்' என்று கூறியுள்ளார்,

திரு. பக்தவத்சலம் ஆட்சியில் இந்தி எதிர்ப்பும், உணவு நெருக்கடியும், விலைஉயர்வும், ஊழல் புகார்களும் தீவிரமாக இருந்தன. இந்த நிலையில் மக்களின் அதிருப்தி அதிகரித்தது. அமைச்சரவைச் சட்டமன்றத்துக்குப் பொறுப்புடைமை குன்றிவிட்டது.

1967ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் காங்கிரசுக் கட்சி படுதோல்வி அடைந்தது. 231 இடங்களில் காங்கிரசு 49 தான் பெற்றது. திராவிட முன்னேற்றக் கழகம் 138 இடங்களைப் பெற்றது. தி. மு. க. வுடன் கூட்டணியாக இருந்த கட்சிகள் 45 இடங்கள் பெற்றன. (சுதந்தரா 20, கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்டு) 11, பி. எஸ். பி. 3, எஸ். எஸ். பி. 3, முஸ்லிம் லீக் 3, சுயேச்சை 4). காங்கிரசு 238 இடங்களுக்குப் போட்டியிட்டு 49 இடங்களைத்தாம் பெற்றது. வாக்குச் சதவீதம் 41·4 ஆகும். திராவிட முன்னேற்றக் கழகம் 173 இடங்களுக்குப் போட்டியிட்டு 138 இடங்களைப் பெற்றது. வாக்குச் சதவீதம் 41·2 கூட்டணிக் கட்சிகள் எல்லாம் சேர்ந்து பெற்ற வாக்குச் சதவீதம் 12 ஆகும். கம்யூனிஸ்டு (இந்தியா) கூட்டணியில் சேரவில்லை. அது பெற்ற இடங்கள் 2; வாக்குச் சதவீதம் 1·8. தி. மு. க. வின் அமோகமான வெற்றிக்குப் பல காரணங்கள் கூறப்படும். முதலாவதாக, அது இந்திய யூனியனிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டது. இரண்டாவது, இந்தித் திணிப்பை எதிர்த்ததும், விலைவாசி உயர்வைக் கண்டித்ததும் ஆகும். மூன்ருவது, சுதந்தராக் கட்சித் தலைவர் திரு. இராஜகோபாலாச்சாரியார் தந்த ஆதரவு என்றும் கூறுவர். மாநிலத் தேர்தலில்மட்டும் இந்த வெற்றி அடங்கிவிடவில்லை. லோக்சபைத் தேர்தலில் தி. மு. க. 25 இடங்களுக்குப் போட்டியிட்டு அனைத்தையும் பெற்றது. அகில இந்தியக் கட்சியான காங்கிரசு 59 இடங்களுக்குப் போட்டியிட்டு 3 இடங்கள் பெற்றது. சுதந்தரா 6, சி.பி.ஐ. (மார்க்சிஸ்டு) 1, முஸ்லிம்லீக் 1 பெற்றன. இரண்டாண்டுகளுக்கு முன் தர்மபுரி இடைத்தேர்தலில் காங்கிரசு வெற்றி பெற்றது. அந்தத் தொகுதியிலும் பொதுத்தேர்தலில் அது தோல்வி அடைந்தது; 20 ஆண்டு ஆட்சியிலிருந்து கட்சி வீழ்ந்தது.

பெரும்பான்மைக் கட்சியாகிய (Majority Party) திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரான திரு. சி. என். அண்ணுதுரையை அமைச்சரவை அமைக்க ஆளுநர் அழைத்தார். திரு. அண்ணுதுரை முதலமைச்சராக, ஒன்பது பேர்கொண்ட அமைச்சரவை 1967 மார்ச்சு 6 அன்று பதவி ஏற்றது. இந்த அமைச்சரவை முழுதும் தி.மு.க. கட்சியினரை மட்டும்

கொண்டது. தேர்தலில் கூட்டணி இருந்தபோதிலும், அமைச்சரவையில் வேறு கட்சியினர்களுக்கு இடம் தரப்படவில்லை தி. மு. க. தனிப்பட்ட பெரும்பான்மையைத் தேர்தலில் பெற்றதால், கூட்டு அமைச்சரவை தேவையில்லை என்பது கொள்கையளவில் குற்றமற்றது. எனவே, அமைச்சரவையில் இடம் பெற விரும்பியவர்கள் ஏமாற்றம் அடையவில்லை. கூட்டணிக் கட்சிகள் தங்கள் ஆதரவைத் தொடர்ந்து தந்தன. முதலமைச்சர் திரு. அண்ணுதுரையினிடம் இருந்த நன்மதிப்பினுல் குழப்பம் ஒன்றும் ஏற்படவில்லை. அமைச்சரவை அமைக்கும் கொள்கைகள் தமிழ்நாட்டில் நன்கு அனுசரிக்கப் பட்டதை இது விளக்கிக் காட்டியது. இதே சம்பவத்தில் வேறு மாநிலங்களில் அமைச்சரவைக்குப் போட்டி இருந்திருக்கலாம். பிரிட்டிஷ் வரலாற்றிலும் கூட்டு அமைச்சரவை (Coalition Government) முக்கியக் கட்சிக்குப் போதுமான வலிவு பாராளுமன்றத்தில் இல்லாமல் இருந்த காலத்திலும், போர்போன்ற நெருக்கடி காலத்திலுந்தான் ஏற்படுத்துவது வழக்கம். தேர்தலில் ஆதரவுக்காகக் கூட்டமைச்சு அமைக்கப்படுவதில்லை. எனவே, திரு. அண்ணுதுரை அமைத்த ஒரேகட்சி அமைச்சரவை பிற்காலத்தில் நல்ல காப்பாக இருக்கும்; கட்சி மாற்றங்களுக்கு வழியில்லாமலும் இருக்கும். அமைச்சரவை ஆதிக்கத்தைப் பங்கு போட்டுக்கொள்ள அது ஒரு பரிசன்று என்பதை இந்தத் தமிழ்நாட்டுச் சம்பவம் உறுதிப்படுத்தியது.

திரு. அண்ணுத்துரை இராஜ்ஜிய சபை உறுப்பினராக இருந்த அனுபவத்தாலும், பிரிட்டிஷ் அரசியல் தத்துவத்தைக் கற்றிருந்தபடியாலும், பழைய நீதிக்கட்சித் தொடர்பினுலும் அமைச்சரவையை எப்படி நடத்தவேண்டுமென்பதை நன்கு உணர்ந்திருந்தார். மத்திய அரசாங்கத்தோடும் மாநில ஆளுநருடனும் பண்பான உறவு வைத்திருந்தார். அமைச்சரவையிலும் பிளவுகள் அல்லது கருத்துவேறுபாடுகள் காணப்படவில்லை. காங்கிரசுக் கட்சி, 'ஆளுங்கட்சிக்குத் திட்டம் இல்லை. தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை' என்று இடைவிடாது குறை கூறி வந்தது. முக்கியமாக, ரூபாய்க்கு மூன்றுபடி அரிசி போடுவதாகத் தேர்தல் பிரசாரத்தில் சொல்லப்பட்ட பேச்சைப் பயன்படுத்தியது. முதலமைச்சர் ரூபாய்க்கு ஒரு படி அரிசி விற்பனை செய்யும் திட்டத்தைச் சென்னையிலும், கோயம்புத்தூரிலும் அமலுக்கு கொண்டுவந்தார். முந்தைய ஆட்சி வைத்த கடன் பளுவால் பணநெருக்கடி அதிகம் இருந்தாலும், மதுவிலக்கை ரத்து செய்யவில்லை என்று உறுதி அளித்தார். கட்சிக்குள்ளே மூன்று அமைச்சர்கள் பதவியைவிட்டு விலகி

நாட்டில் கட்சிவேலை செய்ய வேண்டுமென்று ஒரு வதந்தி கிளப்பப்பட்டு, அமைச்சர் இருவருக்கிடையே பகிரங்க அறிக்கைகள் விடப்பட்டன. இந்தச் சிறு பூசலை முதலமைச்சர் சுமுகமாகத் தீர்த்துவைத்தார்.

திரு. அண்ணாதுரை புற்றுநோயினால் பீடிக்கப்பட்டு 1969 பிப்ரவரி 2 அன்று காலமானார். அடுத்த முதலமைச்சர் யார் என்பது குறித்து லால்பகதூர் சாஸ்திரி இறந்தபின் ஏற்பட்டது போல் இங்கும் ஒரு சிக்கல் ஏற்பட்டது. திரு நெடுஞ்செழியன் திரு. அண்ணாதுரைக்கு அடுத்தபடியாக அமைச்சரவையில் இடம் பெற்றிருந்ததாகவும், அண்ணா வெளிநாடு போயிருந்த போது அவர்தாம் அண்ணாவின் பொறுப்பைப் பார்த்து வந்ததாகவும் அதனால் அவர்தாம் முதலமைச்சர் ஆக வேண்டுமென்றும் கருத்து உருவாயிற்று. ஆனால், கட்சிக் கூட்டத்தில் திரு மு. கருணாநிதி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திரு. நெடுஞ்செழியன் போட்டியிடாமல் தம் பெயரைத் திரும்பப் பெற்றுக்கொண்டார். அமைச்சரவையைப் புனரமைப்புச் செய்யும்போது திரு. நெடுசெழியன் அதில் சேரவில்லை (சில காலத்துக்குப்பின் அவருக்குக் கட்சிச் செயலர் பதவி தரப்பட்டு அமைச்சரவையில் சேர்ந்தார்). திரு. கருணாநிதி அமைச்சரவையைச் சிறிது விரிவுபடுத்தினார். அவரது அமைச்சரவை 1969 பிப்ரவரி 15 அன்று பதவி ஏற்றது

திருமதி இந்திரா காந்தியின் கட்சி, சிறுபான்மையாக இருந்ததால் இடைத்தேர்தல் நடத்த ஜனாதிபதியை வேண்டிக் கொள்ளப் பாராளுமன்றம் 1970 டிசம்பர் 27 அன்று கலைக்கப் பட்டது. தமிழ்நாட்டில் அமைச்சரவை பெரும்பான்மையைப் பெற்றிருந்த போதிலும் திரு. கருணாநிதி தமிழ்நாட்டிலும் சட்ட மன்றத்தைக் கலைக்க ஆளுநரை வேண்டிக்கொண்டார். சட்டமன்றம் அவ்வாறே 1971 ஜனவரி 5-ல் கலைக்கப்பட்டது. ஆளுநரின் அறிக்கை பின்வருமாறு கூறிற்று: ‘முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி இன்று திங்கட்கிழமை காலை 11-15 மணிக்கு ராஜபவனத்தில் ஆளுநரைச் சந்தித்துத் தமிழ்நாட்டுச் சட்ட மன்றம் 1971 ஜனவரி 5 முதல் கலைக்கப்பட வேண்டுமென்று தெரிவித்தார். எதற்காகவெனின் சோஷியலிஸ, மதச்சார்பற்ற திட்டங்களுக்கும் கொள்கைக்கும் ஆதரவு பெற மக்கள் ஆணையைப் பெறுவதற்கும், லோக்சபைத் தேர்தலுடன் சேர்த்துத் தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தேர்தலை நடத்துவதற்கும் என்று கூறினார். கவனத்துடன் ஆலோசித்தபின் ஆளுநர் இந்தப் பரிவை ஏற்றுக்கொண்டு சட்டமன்றத்தை 1971 ஜனவரி 7 முதல் கலைக்

கும்படி ஆணையிட்டுள்ளார்.' இந்த முடிவு அமைச்சரவையின் முடிவு (Cabinet decision) என்பது கவனிக்கத்தக்கது. பொதுவாக, சிறுபான்மையிலுள்ள அரசாங்கம் இடைத்தேர்தலை நாடுவது வழக்கம். பெரும்பான்மையிலுள்ள ஆளுங்கட்சிக்குத் தெளிவான ஆதரவு வேண்டுமென்றால், சட்டமன்றத்திலேயே நம்பிக்கை உறுதித் தீர்மானத்தைக் கொண்டுவந்தால் போதும். ஆனால், உயிர்நாடியான கொள்கைகளுக்கு வாக்காளர் ஆணை நல்லதுதான். தேர்தல் கொள்கைப் பிரகடனத்தில் (Election Manifesto) இல்லாத திட்டங்களையோ, சட்டங்களையோ நிறைவேற்றவேண்டின் இந்த முறை தகுதியுடையதே. எனவே, திரு. கருணாநிதியின் முடிவு சில வட்டாரங்களில் வியப்பைத் தந்ததானாலும் சட்ட அமைப்புக்கு விரோதமில்லை.

இடைத்தேர்தல் 1971 மார்ச்சில் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு அமோகமான வெற்றி கிடைத்தது, புதுக் காங்கிரசு தேர்தலில் பங்கு பெறவில்லை. 234 இடங்களில் தி. மு. க. 184, பழைய காங்கிரசு 15, சுதந்தரா 6; சி. பி. ஐ. 8, பி. எஸ். பி. 4, முஸ்லிம் லீக் 6, எஃப். பி 7 சுயேச்சை 4 இடங்கள் பெற்றன. தி. மு. க.வின் பலம் 138-லிருந்து 184 ஆகப் பெருகியது. காங்கிரசின் பலம் 49-லிருந்து 15 ஆகப் (பழைய காங்கிரசு மட்டும்) குறுகியது. திரு. கருணாநிதி மீண்டும் ஒருமனதாகத் தி. மு. க. கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சரவை அமைத்தார். புதுஅமைச்சரவை 1971 மார்ச்சு 15 அன்று பதவி ஏற்றது. புது அமைச்சரவையில் ஐந்து புது அமைச்சர்கள் (திரு. க. அன்பழகன், திரு. அன்பில் தர்மலிங்கம், திரு. கே. ராஜாராம், திரு. எஸ். ராமச்சந்திரன், திரு. எம். கண்ணப்பன்) சேர்க்கப்பட்டார்கள். ஒரு பழைய அமைச்சர் (திரு. கே. வி. சுப்பையா) விடப்பட்டார். திரு. கருணாநிதியின் இரண்டாவது அமைச்சரவை இன்று ஆட்சியிலுள்ளது.

தமிழ் நாட்டில் அமைச்சரவை அரசியல்முறை இரட்டையாட்சிக் காலம்முதல் இன்றுவரை நல்ல முறையில் நடந்து வருகிறது. இதற்கு அடிப்படை அசைவில்லாத பெரும்பான்மைக் கட்சிகள் ஆட்சிக்கு வருவதும், கட்சி மாறுதல் இன்மையும், வாக்காளர்களின் விவேகமும், முதலமைச்சர்களின் திறமையும் எனக் கூறலாம். மேலும், தமிழ்நாட்டில் கட்சிகள் பல இருப்பினும் ஏதோ ஒரு கட்சி ஆட்சி ஏற்பதற்குப் போதுமான பெரும்பான்மை அடைகிறது. எதிர்க்கட்சிகளிலும் ஏதாவது ஒரு கட்சி எண்ணிக்கையில் குறைவாயிருந்தாலும் கொள்கைப்

பலம் கொண்டதாய் இருந்து வந்துள்ளது. சுதந்திரம் பெற்ற முதல் ஆண்டுகளில் கம்யூனிஸ்டு கட்சியும் முஸ்லிம் லீக்கும் சட்ட மன்றத்தில் எதிர்க்கட்சித் தலைமையை ஏற்றிருந்தன. திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் பங்கு எடுத்தபின் காங்கிரசுக்கு எதிர்க்கட்சியாக இருந்தது. 1967ஆம் ஆண்டிலிருந்து பெரும்பான்மை அடைந்தவுடன் அது ஆளுங்கட்சியாக உள்ளது. காங்கிரசு எதிர்க்கட்சித் தலைமையில் உள்ளது. 1971 இடைத் தேர்தலில் மற்றக் கட்சிகளின் எண்ணிக்கை (பழைய காங்கிரசு உட்பட) மிகவும் மெலிந்துவிட்டது. புதுக் காங்கிரசு இன்னும் இடம் பெறவில்லை. 1971 தேர்தலில் கூட்டணியிலிருந்த புதுக் காங்கிரசு, சுதந்தரா முதலிய கட்சிகளுடன் கொண்டிருந்த கூட்டு விடப்பட்டது. தமிழ்நாட்டில் மற்றைய மாநிலங்களில் காணப்படுவதைப் போல ஆளுங்கட்சிக்குப் பக்க பலமாகச் சட்டமன்றத்தில் மற்றக் கட்சிகளின் பக்க பலம் தேவையில்லை. அரசியல் வரலாற்றில் இன்றுவரை அமைச்சரவை ஆட்சியியல் அரசியல் கொள்கைகளின்படியும் அரசியல் அமைப்புக்கு விரோதமில்லாமலும் நடைபெற அதிக வாய்ப்பு இருந்து வருகிறது. தமிழ்நாட்டு ஆளுநருக்கு வேறுசில மாநிலங்களில் உள்ளதுபோல் இன்னல் தரும் பிரச்சினைகள் இருந்ததில்லை. அமைச்சரவை ஆட்சியின் உண்மை வெற்றிக்கு இது ஒரு சான்றாகும். ஆளுங்கட்சிகள் மத்திய அமைச்சரவைக்கோ ஜனாதிபதிக்கோ பிரச்சினைகளைத் தீர்க்கும் முறையில் யோசனை தருதல் அல்லது கட்சி விவகாரங்களில் தலையிடல் முதலிய சங்கடங்களைத் தந்ததில்லை. 1967ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசிலும், தமிழ்நாட்டிலும் ஒரே கட்சி ஆட்சி இல்லாவிட்டாலும் சில நிர்வாக விஷயங்களிலும் அதிகாரப் பிரிவினைகளிலும் விவாதம் இருந்ததே யொழிய, அரசியல் நெருக்கடிகள் விளையவில்லை. இந்தியக் கூட்டாட்சி அரசியலில் (Federalism) மாநில அமைச்சரவை ஆட்சியியல் ஆந்திரப் பிரதேசம், மைசூர், குஜராத்து, மகாராஷ்டிரம் போன்ற வேறு பெரிய மாநிலங்களில்கூட, அண்மைக்காலத்தில் சில நெருக்கடிகள் உண்டாயின. தமிழ்நாட்டு அமைச்சரவை ஆட்சி அசைவின்றி (Stable Government) வலிவுடையதாக இருந்து அரசியல் அமைப்பைக் காத்து வருகிறது.

14. அமைச்சரவையும், பாராளுமன்றமும், ஜனாதிபதியும்

பாராளுமன்றத்தின் (Parliament) தொழிலும் அமைச்சரவையின் (Cabinet) தொழிலும் ஆட்சி செய்வது என்று பொதுவாகக் கூறப்படும். இரண்டும் வேறுவேருயினும், ஒன்றுடன் ஒன்று பிணைந்துள்ளது. பாராளுமன்றத்தின் ஆதரவு தொடர்ந்து இல்லையாயின் அமைச்சரவையின் ஆட்சிப்பொறுப்பை நீடித்து நடத்தமுடியாது. பாராளுமன்றத்தின் அங்கீகாரம் இன்றிச் சட்டங்கள் நிறைவேற்றவோ, வரிகள் விதிக்கவோ, நிர்வாகம் நடத்த மானியங்களைப் பெறவோ முடியாது. அமைச்சரவை ஆளுங்கட்சியாகப் பெரும்பான்மை பெற்றிருந்த போதிலும், பாராளுமன்றத்தின் ஏகதேசச் சம்மதம் அதனுடைய ஏற்பாடுகளுக்குத் தரப்படவில்லையாயின், அது மக்கள் ஆட்சியைப் பிரதிபலிக்காது. ஆட்சி தன்னரசாக (Autocracy) மாறிவிடும். எனவே, அமைச்சரவை மக்களது விருப்பு வெறுப்புகளைக் கவனித்து ஆட்சி செய்யவேண்டும். அவற்றை அறியப் பல்வேறு வழிகள் இருப்பினும் பாராளுமன்றம் இணையற்ற அரங்கமாக அமைந்துள்ளது.

பாராளுமன்றம் என்பது சட்டப்படி மேல்சபை (Upper House), கீழ்ச்சபை (Lower House), ஜனாதிபதி என்ற முறையைக் குறிக்கும். பிரிட்டனில் அரசியின் பார்லிமென்டு முடிவுகள் (Queen-in-Parliament) பேசப்படுவது மரபு. இங்கு ஜனாதிபதியின் பார்லிமென்டு முடிவுகள் (President-in-Parliament) என்று பேசப்படுகிறதில்லை. எனினும், மசோதாக்கள் (Bills), மானியங்கள் (Appropriations), பாராளுமன்ற அமர்வைத் தொடங்குவது (Inauguration of Parliament Sessions), கலைப்பது (Prorogation) இவற்றுக்கு ஜனாதிபதியின் அங்கீகாரம் தேவை. பாராளுமன்றத்தின் இரண்டு மன்றங்களிலும் ஒரு மசோதா நிறைவேற்றப்

பட்டாலும், ஜனாதிபதியின் இசைவு இன்றி அது சட்டமாகாது. (மாநிலங்களில் ஆளுநர் நிலையும் இதேபோல் என்று கூட்டிக் கொள்க). ஆண்டு வரவுசெலவுத் திட்டம் (Budget) இரண்டு மன்றங்களிலும் சமர்ப்பிக்கப்பட்டாலும் லோக்சபைதான் மானியங்களுக்கு அனுமதி தருகிறது. நிதி சம்பந்தப்படும் யாதொரு மசோதா விஷயத்தில் மேல்சபைக்கும் கீழ்ச்சபைக்கும் கருத்துவேறுபாடு இருப்பின், ஜனாதிபதி இரண்டு சபைகளும் ஒரு சேரக்கூடி முடிவு செய்ய ஆணையிடலாம். அமைச்சரவை இரண்டு சபைகளுக்கும் உத்தரவாதம் தரவேண்டும். அமைச்சர்கள் இரு சபைகளிலும் பேசலாம். ஆனால், எந்தச் சபையின் உறுப்பினரோ அந்தச் சபையில்தான் வாக்களிக்கும் உரிமை உண்டு. சில சமயங்களில் ஆளுங்கட்சிக்கு மேல்சபையில் பெரும்பான்மை இல்லாமல் இருக்கலாம். மேல்சபை பிரேரணைகளைக் கீழ்ச்சபைப் புனர்முடிவுக்கு அனுப்பலாம். அமைச்சரவை மேல்சபை நடவடிக்கைகளால் தோல்வி அடைவதில்லை. மேல்சபை கீழ்ச்சபையின் முடிவுகளைத் திருத்துவதற்கு ஒரு வாய்ப்பு உண்டு. சிலர் இது நடைமுறையில் பயனில்லாத அம்சம், எனவே மேல்சபை அநாவசியம் என்று கருதுவதும் உண்டு. இந்தியாவில் மேல்சபைக்கு பிரிட்டனிலுள்ள பிரபுக்கள் சபை (House of Lords) போலல்லாமல் ஒரு தனி முக்கியத்துவம் உள்ளது. மேல்சபை மாநிலச் சட்டமன்றங்கள் (State Legislatures) தேர்ந்தெடுத்து அனுப்பப்படும் உறுப்பினர்கள் கூடியது. இந்த அமைப்பு இல்லையேல் கூட்டாட்சி அமைப்பில் (Federation) மாநிலங்களுக்குப் பாராளுமன்றத்தில் தொடர்பே இல்லாமல் போகும். ஆனால், பொதுவாக மேல்சபை மாநிலங்களின் உரிமைகளையும், இந்திய மன்னர்களுக்குத் தரப்பட்ட சலுகைகளையும் இனிது காக்க முழுஆற்றல் படைத்ததாக இல்லை. எனினும் ஜனாதிபதியின் தொடர்பு இரு சபைகளுக்கும் ஒத்ததே. மேல்சபைக்கு உறுப்பினர் தேர்தல்கள் நேரிடைத் தேர்தல்கள் அல்ல. ஆளும் கட்சி மத்திய அரசிலும், மாநில அரசுகள் பலவற்றிலும் ஆட்சி செலுத்தினால், இராஜ்ஜியசபைத் தேர்தல்களையும் தனக்கு அனுகூலமாக ஆக்கிக்கொள்ள வாய்ப்புண்டு. எனவே, இராஜ்ஜிய சபை உபயோகமற்ற அனுபந்தம் என்று கருதுவதற்கு இடமில்லை.

அமைச்சரவையை எதேச்சாதிகாரமின்றித் தடுக்கப் பாராளுமன்றம் கருவியாக இருக்கிறது. அந்தந்த நேரத்தில் ஆதிக்கத்திற்கு வரும் அமைச்சர்கள் தம் வயப்படி பொதுக்கொள்கைகளை மாற்றிக்கொள்ளாமல், அரசியல் நலனுக்குத் தொடர்ந்து ஒழுகும் கொள்கைகளிலிருந்து மிகுதியும் பிறழாமல் அமைச்சரவையைப்

பாராளுமன்றம் அடக்கிச் செல்லும். பிரதமரைப் பாராளு மன்றம் நியமிக்காவிட்டாலும், பிரதமர் பாராளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெறுவாரா என்று ஜனாதிபதி சிந்தித்துத் தான் நியமிப்பார். எனவே, பிரதமரைச் சுற்றித்தான் பாராளு மன்றமும் சுழலும். அமைச்சரவை முக்கியக் கொள்கை விஷயங்களில் பாராளுமன்றத்தில் தோல்வி அடைந்தால் ஜனாதிபதி பிரதமரின் முடிவை அறிந்து, வேண்டியிருப்பின் தாமே பிரதமரை அகற்ற அதிகாரம் உண்டு. எனவே, அமைச் சரவை எதிர்க்கட்சியின் (Opposition) பலத்தையும், மனோ பாவத்தையும் நன்கு அறிந்து நடக்கவேண்டும். தனது கட்சிக் குள்ளே உண்டாகும் பிளவுகளினால் கட்சிமாறுதல்கள் நிகழலாம்; அல்லது எதிர்ப்பில் உள்ள சிறிய கட்சிகள் அமைச்சரவையை ஒரோவழி ஆதரிப்பதை விடுத்து முழு எதிர்ப்பையும் கையாள லாம். இம்மாதிரி அரசியல் சலனங்களினால் அமைச்சரவைஆட்சி அசைவு அடையலாம். ஆனால், ஒரேகட்சி பெரும்பான்மை யோடு பலகாலம் இருந்தால், எதிர்க்கட்சிகள் ஆற்றலின்றித் தன்னம்பிக்கை இழக்கும். இல்லையேல் பாராளுமன்றத்தில் பயனற்ற முட்டுக்கட்டைகளைப் போட்டுத்தமது அதிருப்தியைத் தெரிவிக்கும். எனவே, பாராளுமன்றத்தின் மனோபாவத்தை அறிவதற்கு அமைச்சரவையில் ஒருவர் (Minister for Parliamentary Affairs) இவைகளைக் கவனித்து அமைச்சரவைக்கும் பிரதமருக்கும் அடிக்கடி எச்சரிக்கை செய்யவேண்டும். எதிர்க் கட்சியின் வேலை அமைச்சரவையை அகப்பட்ட போதெல் லாம் மடக்கி அதனுடைய பலவீனங்களை எடுத்துக்காட்டுவ தேயாகும். ஆனால், எதிர்ப்பாகப் பல கட்சிகள் இருந்தும் ஒன்றும் பலமான கட்சியாக இல்லாவிட்டால், ஆளுங்கட்சியைத் தோற்கடித்துத் தாம் அமைச்சரவையை ஏற்க ஆற்றலற்றதாக இருக்கும். எனவே, ஒரு கட்சி பலமானதாகத் திரண்டு எதிர்க் கட்சியாக உருவாவது முக்கியம். அத்தகைய எதிர்க்கட்சியின் தாக்குதலால் அமைச்சரவை சிற்சில விஷயங்களிலாவது இடங் கொடுத்துத் தனது பாராளுமன்ற விவகாரங்களில் திருத்தம் செய்ய வேண்டியிருக்கும். உதாரணமாக, ஒரு மசோதாவை எதிர்க்கட்சியின் வற்புறுத்தலின்மேல், கூட்டுப் பொறுக்குக் குழு வுக்குப் (Joint Select Committee of Parliamentary) பரிசீலனைக் கனுப்புதல், சட்டங்களின் திருத்தங்களை ஏற்றுக்கொள்ளுதல், சந்தேகமான பிரேரேபணைகளை ஒத்திப்போடுதல் முதலியன வாகும். சில சமயங்களில் தனி உறுப்பினர் கொண்டுவரும் சேமநலத் தீர்மானங்கள், மசோதாக்களையும் அமைச்சரவை ஏற்றுத் திருப்தி அளிக்கவேண்டும். எல்லா நடவடிக்கைகளை

யும் அமைச்சரவையே எடுத்துத் தம் சுயநலத்தைப் பெருக்கிக் கொள்ளவேண்டும் என்ற மனப்பான்மை வெறுப்பையும் எதிர்ப்பையும் வளர்க்கும். பிரிட்டனில் பாராளுமன்றத்தில் இரு பக்கத்திலிருந்தும் கொண்டுவரப்படும் பிரேரேபணைகளில் ஒற்றுமை, ஆமோதித்தல் என்ற நல்ல பண்பாடுகளால் அமைச் சரவையும் பாராளுமன்றமும் சேர்ந்து தொழிற்படுகின்றன. வல்லரசு நாடுகளில் (Dictatorship countries) வல்லரசு கொண்டு வருவதுதான் சட்டம். மற்றவர்கள் பேசுவதற்கோ, குறை காட்டுவதற்கோ இடம் இல்லை. மக்களாட்சியுள்ள பாராளுமன் றத்தில் சபாநாயகர் எல்லாக் கட்சிகளும் தங்கள் கருத்துகளை விதிப்படி கூறும் உரிமையைக் காப்பாற்றுகிறார். அமைச்சரவை மக்கள் சபைக்குப் பொறுப்புடையதாக இருந்தால், அமைச்ச ரவையின் பலமும் மக்கள் சம்மதத்தால் பெருகும்; இல்லையேல் குன்றும். அதன் விளைவு உடனே தெரியாவிட்டாலும் அடுத்த தேர்தலில் தெரியும். அமைச்சரவை பாராளுமன்றத்தில் முதல் அமர்வுக்கு (Inaugural Session) ஜனாதிபதி நிகழ்த்தும் உரையில் (President's Address) தனது உத்தேசங்களை (Proposals and Policy) விளக்கிக் கூறும். பாராளுமன்றத்தின் பணிகள் அந்த அமர்வில் பெரும்பாலும் அந்தத் தண்டவாளத்தின் மேல்தான் செல்லும். உத்தியோகத் தரப்பற்ற தீர்மானங்கள் (Non-official Resolutions) முதலிய நடவடிக்கைகளுக்கும் நாள் ஒதுக்கித் தரப்படுவதால், அமைச்சரவையின் எண்ணங்களும், உத்தியோ கத்தரப்பில்லாதவர்களின் பிரேரேபணைகளும் சேர்ந்து மக்கள் எண்ணங்களைப் பிரதிபலிக்கும். அமைச்சரவைக்கு எவ்வளவு உரிமை இதில் உள்ளதோ, அவ்வளவு உரிமை எதிர்க்கட்சிக்கும் உண்டு.

அண்மைக்காலத்தில் விளைந்த ஒரு போக்கு, கட்சி மாறுதல் களால் (Party defectors) அல்லது பிளவுகளால், ஆளுங்கட்சியின் பெரும்பான்மை பாதிக்கப்படுவது ஆகும். இதற்குப் பரிகார மாகப் பிரதமர் ஜனாதிபதியைப் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட (Dissolution of Parliament) யோசனை கூறலாம். கான்ஸ்டிடியூ ஷனல் ஜனாதிபதி (Constitutional President) ஆகையால் அவர் பிரதமர் யோசனையை ஏற்கக் கடமைப்பட்டவராவார். பாராளு மன்றம் கலைக்கப்படுவதால் எல்லாக் கட்சிகளுக்கும் ஒரேவித மான சாதகபாதகந்தான் ஏற்படும். ஆனால், ஆளுங்கட்சிக்குச் சில பெருத்த இலாபகரமான வாய்ப்புகள் உண்டு. நிர்வாகப் பலத்தின் பின்னணியும், தேர்தல் நிதிதிரட்டுவதில் அதிகாரமும் உண்டு. தேர்தல் பிரசாரத்திலும் போலீசு உபகாரங்கள் ஆளுங்கட்சிக்குச் சிறிது அதிகமாகவே கிடைக்கும். பாராளு

மன்றத்தைக் கலைப்பதுபோலவே, மாநிலச் சட்டமன்றங்களையும் கலைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு. இந்த விஷயத்தில் ஆளுநர்கள் ஆலோசனையின்பேரில் ஜனாதிபதி நடந்தபோதிலும் மத்திய அமைச்சரவை தலையிடலாம். இம்மாதிரி தலையிடுவதால் வேண்டாத மாநில அமைச்சரவைகளைக் கவிழ்க்க (Toppling State Ministers) மத்திய அமைச்சரவைக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

பாராளுமன்றம்தான் ஜனாதிபதியின் ஏகாதிபத்தியப் போக்கையும், அமைச்சரவையின் ஏகாதிபத்தியப் போக்கையும் (Dictatorship of President or Prime Minister) அவை காணப் பட்டால் அடக்கமுடியும். ஜனாதிபதி பாராளுமன்றத்தின் கருத்தை ஒட்டித்தான் நடக்க வேண்டும். அந்தக் கருத்தை அமைச்சரவை அறிவிக்க வேண்டும். பாராளுமன்றத்தின் கருத்துக்கு இசைய அமைச்சரவை ஒழுக மறுத்துவிட்டால் ஜனாதிபதி அமைச்சரவையைச் சீர்திருத்த முயலலாம்; அல்லது பாராளுமன்றத்துக்குத் தாம் உரை நிகழ்த்திச் சமரசம் செய்யலாம். ஆனால், அமைச்சரவையின் பலத்தால் பாராளுமன்றத்தின் வாக்கு ஜனாதிபதியின் எண்ணத்துக்கு மாறாகப் போனாலோ வேறு பிரதமரைக் கண்டுபிடிக்க முடியாமற் போனாலோ விபரீத மான நெருக்கடியில் (Deadlock) முடியும்.

மத்திய அமைச்சரவையின் ஏகாதிபத்தியப் போக்கு அரசியல் அமைப்பின் கூட்டாட்சித் (Federation or Union) தத்துவத்தைப் பாதிக்குமானால், ஜனாதிபதி தம் உத்தியோகப் பிரமாணப்படி அரசியல் அமைப்பைத்தான் காப்பாற்ற (Safe guarding the Contitution) வேண்டும். அண்மைக்காலத்தில் மாநில அமைச்சரவைகள் வீழ்ந்தமை, கட்சித் தலைவர்கள் மாற்றப்பட்டதாலன்றி வேறு விபரீதப் போக்கால் அன்றென்று தெரிகிறது. இது கட்சியின் உள்விவகாரங்களைப் பொறுத்தது. எனினும் மத்திய அமைச்சரவை ஜனாதிபதியின் துணைகொண்டு வேண்டாத மாநில ஆட்சிகளைக் கவிழ்க்கிறது என்ற ஐயத்துக்கு இடம் தராமலிருப்பது, அரசியல் அமைப்புச் சாசனத்தைக் காப்பாற்றுவதாகும்.

15. எதிர்காலம்

அரசியல் தத்துவத்துக்கு பிரிட்டிஷ் அரசியல் அமைப்புத் தந்த உயர்கொள்கை பிரதிநிதித்துவம் கூடிய ஆட்சி (Representation Government) மட்டும் அன்று; பொறுப்புடைய ஆட்சி (Responsible Government) என்பதும் ஆகும். பிரதிநிதித்துவமும் பொறுப்பும் சட்டரீதியாய் நிர்ணயிக்கப்படுகின்றன. பொறுப்பு பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் ஒரு சார்பாரின் கையில் ஒப்படைக்கப்படுகிறது. அந்தப் பொறுப்பை ஏற்கும் குழுத்தான் அமைச்சரவை ஆகும். அந்தப் பொறுப்பு மேலும் ஒவ்வொருவரின் தனிப்பட்ட பொறுப்பன்று; அமைச்சரவை சேர்ந்து ஏற்கும் பொறுப்பாகும். அந்தப் பொறுப்பை நிறைவேற்றப் பாதுகாப்புக்கு எதிர்க்கட்சிகளும், ஜனாதிபதியும், நீதிமன்றமும், தேர்தல்களும் துணைபுரிகின்றன. அமைச்சரவை தனது கொள்கைகளை நிறைவேற்றப் போதுமான சுயேச்சை பெற்றிருந்தாலும், ஏகாதிபத்தியம் செலுத்த முடியாது. அமைச்சரவையின் ஈடுபாடு மக்களின் ஆதரவைப் பெற்று நீடித்து ஆட்சியில் இருக்கவேண்டுமென்பது. எனவே, பொதுமக்களின் மனோபாவத்தை மீறி அமைச்சரவை நீடிக்க முடியாது. பொதுமக்களின் கண்காணிப்புக் குறைந்தாலோ, உறக்கமடைந்தாலோ அமைச்சரவை ஆட்சி தன்னாட்சியாக (Autocratic) மாறிவிடும். எனவே, அரசியல் அமைப்பைக் காப்பாற்றுவதற்குப் பாராளுமன்றம், நீதிமன்றம் இவற்றைவிட மக்களின் மாமன்றமாகிய கண்காணிப்புத்தான் (People's vigilance) ஏற்றது. மக்கள் அரசியல் அமைப்பையும், கட்சி ஆட்சியையும், அமைச்சரவைப் பொறுப்பாட்சியையும் நன்கு உணராவிடில் எந்த அரசியல் அமைப்பும் பழுதுபடாமல் நிலவிப் பயன்தராது.

பிரிட்டனில் அமைச்சரவை ஆட்சி பல ஆண்டுகள் நிலவி வந்தாலும், மக்களின் கல்விநிலை உயர்தரமாக இருந்தாலும்

அந்த ஆட்சி அமைப்புச் சீர்திருத்தப்பட வேண்டுமென்று கருதுபவர்களும் உளர்.

வெஸ்ட் மினிஸ்டர் சட்ட அமைப்பை (West Minister Constitution) ஆசிய, ஆஃப்ரிக்க நாடுகளுக்குப் புகுத்தி அங்கு ஜனநாயகத்தை வளர்க்க ஆசைப்படுபவர்கள் தாயகமாகிய பிரிட்டனிலேயே அது அடைய வேண்டிய சீர்திருத்தங்களைச் சிந்திப்பதில்லை என ஓர் ஆசிரியர் கூறுவார். இந்தச் சீர்திருத்தத் தேவை அரசியல் முறைகளை அறியாததால் அன்று; அல்லது பிரிட்டிஷ் சமுதாயத்துக்கு ஒவ்வாததன்று என்பதாலும் அன்று. பத்தொன்பதாம் நூற்றுண்டுதான் அதன் உன்னதமான காலம். அதற்கு முன்பு 600 ஆண்டுகள் மக்கள் தங்கள் உரிமைகளைப் பாராளுமன்றம்மூலம் பாதுகாக்க உறுதியுடன் இருந்தார்கள். நூறு ஆண்டுகளுக்குமுன் பாகாட் (Walter Baghot) என்ற அரசியல் மேதை, பிரிட்டிஷ் அரசியல் அமைப்பின் கௌரவமான பகுதி சிக்கலானதும், கணிசமானதும், மரியாதைக்கு உரியதானதும் ஆக இருக்கிறதென்றும், அதனுடைய நடைமுறைப் பயனளிக்கும் பகுதி மகத்தான நேரங்களில் எளிமையானதும் நாகரிகமானதுமாக உள்ளது என்றும் கூறினுர்.

நாளடைவில் பாராளுமன்றத்தின் உன்னதநிலை—இறைமை நிலை (Sovereignty of Parliament)—சிறிது குறைந்துவிட்டதாகச் சிலர் கருதுவர். காமன்ஸ் சபைக்கும் லார்ட்ஸ் சபைக்கும் இருந்த போட்டி என்பது ஒரு காரணம். இக் காரணம்பற்றி லார்ட்ஸ் சபையை ஒழித்துவிட வேண்டுமென்று அறைகூவுவாரும் உண்டு. அண்மைக்காலத்தில் லேபர் அரசு (Labour Government) அடிக்கடி ஆட்சிக்கு வருவதால், இது ஒரு பெரிய இடர்ப்பாடாக இல்லை. ஆனுல், பிரதமரின் ஆதிக்கம் அதிகமாகிவிட்டது என்று சில விமர்சனக்காரர்கள் கூறுவர். பிரதமர் முன்போல் ஒத்த தகுதியுள்ளவர்களில் முதலாமவர் (First among equals) என்பது போய், மற்ற அமைச்சர்கள் அவருடைய துணைவர்களாகிவிட்டார்கள் என்று கூறப்படுகிறது. சட்டப்படியே பிரதமர்தாம் அரசிக்குப் (Queen) பொறுப்புடையவர். பிரதமர்தாம் அமைச்சரவையின் கூட்டுக்கருத்து (Collective view) இது என்று அரசிக்குச் சொல்ல உரிமையுடையவர். எனவே, அமைச்சர் ஒருவர் தமது கருத்தை வற்புறுத்த வேண்டின், பிரதமருடன் முதலிலேயே கூடிப் பேசவேண்டும் இல்லையேல், அமைச்சரவையில் வாதாடி வெல்லவேண்டும். இந்த விஷயத்தில் அமெரிக்கன் பிரசிடென்டுக்கு (American President) ஏராளமான அதிகாரம் உண்டு. அவர் தமது காபி

னெட் உறுப்பினர்களின் ஆலோசனையைக் கேட்கவேண்டும்; கட்டாயமாய் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற வற்புறுத்தல் இல்லை. நிர்வாகத்துக்கும் அவரே தலைவரானபடியால் (Head of the Executive) தமது கருத்துகளை உத்தியோகஸ்தர்கள்மூலம் நிறைவேற்றிக்கொள்ளலாம். பிரிட்டிஷ் பிரதமருக்கு அந்த வாய்ப்பில்லையாயினும், அரசியல் வாய்ப்புகள் பல உண்டு. தமது சகாக்களின் அரசியல் எதிர்காலம்கூட அவர் கையில் அடங்கி இருக்கிறது எனச் சிலர் கருதுவர். சென்ற இருநூறு ஆண்டுகளில் நிகழ்ந்த மாறுதல்களினால் பிரதமரின் அரசியல் ஆதிக்கம் அதிகரித்துவிட்டது. அதைப் பாராளுமன்றம் சிறிது சிறிதாகத்தான் அறிய முடியும். எந்த நேரத்திலும் குறிப்பிட்ட தாக்குதல்களால் சட்டப்படி ஒன்றும் செய்ய முடியாது. நாளுக்குநாள் நடக்கும் அரசியல் சொக்கட்டான் ஆட்டத்தை அவர் ஒருவர்தாம் பார்க்கக்கூடும். மற்றைய அமைச்சர்களும், பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சியினரும் ஓரளவுதான் பார்க்க முடியும். இது வெளிநாட்டு விவகாரங்கள் விஷயத்தில் உண்மை எனினும், எல்லாவற்றிலும் முழு உண்மை அன்று. பாராளுமன்றத்தில் அமைச்சரவை சில முக்கிய சம்பவங்களைப் பற்றிய தகவல்களைத் தராததற்கு அடிக்கடி கூச்சல் எழுப்பு வதைச் செய்தித்தாள்களில் காணலாம். பிரதமர் விரும்பினால் தாமாகவே பல முடிவுகளை எடுக்கலாம்.

மிக முக்கியமான முடிவு பாராளுமன்றத்தைக் கலைக்கும் தீர்வு (Dicision to desolve Parliament). பிரதமர் விரும்பினால் எந்த நேரத்திலும் பாராளுமன்றத்தைக் கலைக்கத் தீர்மானம் செய்யலாம். அடுத்து வரும்படியான தேர்தல் அமெரிக்கப் பிரசிடென்டு பிரசாரம்போல் ஆகிவிடுகிறது. கட்சியினரால் கொள்கைகளைப்பற்றிப் பேசப்படுவதில்லை. மக்கள் வாக்கும், இந்தப் பிரதமர் கட்சியை ஆட்சிக்கு மீண்டும் அனுப்பலாமா, வேண்டாமா என்ற ஒரே கேள்வியில் அடங்கிவிடுகிறது. பாராளுமன்றத்தைக் கலைப்பது அரசியின் அதிகாரமும் விருப்ப முந்தான். ஒவ்வோர் அமைச்சரவையையும் தனித்தனியாகக் கூட அரசி விலக்கிவிடலாம். ஆனால், அது பொதுவாகச் செய் யப்படுவதில்லை. மற்ற அமைச்சர்களைவிடப் பிரதமருக்கு இந்தப் பாராளுமன்றத்தைக் கலைக்கும் சக்தி மிகவும் வலிமை யானது. பிரதமர் தம்மால் நியமிக்கப்பட்ட அமைச்சர்களைத் தாமே ஆட்சி பீடத்திலிருந்து இறக்கிவிடலாம். இது 'கூடி இடர்' (Coup de etat) என்ற வலுவந்தமான அரசுமாற்றம் போன்றது. இந்தக் கருத்துகளை எல்லாம் கொஞ்சம் மிகை யாகக் கூறுவதாகத்தான் எடுத்துக்கொள்ளவேண்டும். பிரதமர்

பாராளுமன்றத்தைக் கலைக்குமுன்பு தமது சகாக்களுக்கு எச்சரிக்கை தரலாம். ஆனால், அவர்கள் அதை விரும்பவில்லையானால், அதற்கு அவர் கட்டுப்பட்டவரல்லர். கட்சியிலும் ஆட்சியிலும் பிரதமரின் தலைமைத்தானம் அதிக வலுவைக் கொடுக்கிறது. அது தவறில்லை. ஆனால், அதை அவிவேகத்தால் அரசியல் சூதாட்டமாக உபயோகிக்கக் கூடாது. சில அரசியல் ஆசிரியர்கள் பிரதமரின் அதிகாரத்தைக் குறைக்க வேண்டுமென்று எண்ணுகிறார்கள். இதற்கு (1) பிரதமர் இரண்டு முறைக்குமேல் தொடர்ந்து பிரதமராக இருத்தலாகாது, (2) பிரதமரும் அமெரிக்கப் பிரசிடென்டுபோல் நேர்முகத் தேர்தலால் வரவேண்டும், (3) எல்லா உறுப்பினர் தேர்தலுக்கும் விகிதப் பங்கீட்டு வாக்குமுறை (Proportional Representation) அமைக்கவேண்டும், (4) பாராளுமன்றக் குழுக்களை விரிவுபடுத்தி மேற்கொண்டு அதிகாரம் தரவேண்டுமென்று சொல்கின்றார்கள். இந்தப் பிரச்சினைகளை பிரிட்டனில் தீவிரமாக யாரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. ஆனால், சீர்திருத்தங்கள் சில தேவை என்பதை மட்டும் பொதுவாக ஒப்புக்கொள்வர்.

இந்தியா உலகத்திலேயே மக்கள்தொகையில் பெரிய மக்களாட்சி நாடாகும். பிரிட்டிஷ் தொடர்பால் இந் நாட்டின் அமைச்சரவை ஆட்சி குறித்துப் பாமரர்கள்கூட ஓரளவு அறிந்துள்ளார்கள். பிரிட்டிஷ் ஆட்சி மாறி, விடுதலை அடைந்தபோது பல அரசியல்வாதிகளும், உத்தியோகஸ்தர்களும் அதில் பரிச்சயமுடையவர்களாக இருந்தார்கள். நிர்வாகத் திறமையினால் ஐந்து பொதுத்தேர்தல்கள் அமைதியாக நடந்தேறின. பாராளுமன்றத்தின் நடவடிக்கைகள் உலகத்தில் வேறு நாடுகளிலுள்ள பாராளுமன்றங்கட்கு ஒப்பாக, கௌரவமாக நடந்துவருகிறது. ஆனால், ஒரே கட்சி ஆட்சியால் சில அரசியல் முறைகள் வலுவடையவில்லை. இந்த நிலை இப்போது சற்று மாறியுள்ளது. இந்திய அரசியலில் குற்றம் காண்பவர்கள் இருகட்சி அரசியல் (Two Parties system) உருவாகவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுவார்கள். இன்னும் சிலர் பிரதமரின் ஆதிக்கம் அதிகம் என்று கூறுவார்கள். சிலர், அமெரிக்கப் பிரசிடென்ஷியல் அமைப்புத்தான் நல்லதென்பார்கள். இந்தியக் கூட்டாட்சி (Federation) என்ற அம்சம் மாறுவதற்கு இடம் இல்லை. ஒருமுக ஆட்சி (Unitary system) வந்தால் மின்டோ-மார்லி காலத்துக்குப் பின்நடை போட்டதாக முடியும். இன்னும் சிலர் பிரதமரின் ஏகாதிபத்தியத்தை ஜனாதிபதியால் தவிர்க்க முடியாது என்பர். ஜனாதிபதி சட்டத்துக்குப்பட்டவராகையால் வலுவற்றவர் எனக் கூறுவார்கள், ஆனால், சில

சட்ட நிபுணர்கள் ஜனாதிபதி பிரதமரைக் கேட்காமலோ, அவர் கூறிய யோசனைப்படி நடவாமலோ இருக்க அதிகாரம் உண்டு என்பர். அத்தகைய அதிகாரம் இருப்பினும் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் உராய்தல் இருந்துகொண்டே இருக்கும். இது அரசியல் அமைப்புக்கே பழுது விளைவிக்கும். இன்னும் கூட்டாட்சியில் பிரதமர் தம் கட்சி அல்லாத வேறுகட்சி ஆட்சியிலுள்ள மாநில அரசுகளை விரும்பினால் கவிழ்க்கும் ஆற்றல் உள்ளவராய் இருக்கிறார் என்பது. இந்த வாய்ப்பை நிராகரிக்க முடியாவிட்டாலும், அது விரும்பத்தக்கதன்று என்றுதான் கூற வேண்டும். ஆனால், மாநிலச் சட்டமன்றத்தைக் கலைப்பதற்கு ஜனாதிபதி, தொடர்புள்ள ஆளுநர்கள் யோசனை (consultation with Governor) இல்லாமல் பிரதமர் யோசனையைக் கேட்கத் தேவையில்லை என்று சட்டத்தையோ, சம்பிரதாயத்தையோ திருத்திவிடலாம். நாளடைவில் இடையில் உண்டான இந்தச் சிக்கல்கள் நீங்கிப்போய்விடும் என்பதில் ஐயமில்லை. மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்களைத் தந்து, ஏகதேசமாக எல்லா விஷயங்களிலும் (பாதுகாப்பு, செலாவணி, வெளிநாட்டு வாணிகம் முதலியவைகளைத் தவிர்த்து) மாநிலச் சட்டமன்றங்களின் மொத்தப் பொறுப்புடைமை (Full autonomy) வற்புறுத்தப்பட்டால் கூட்டாட்சி போதுமான அளவு வெற்றிகரமாக நிலவும்.

இந்திய அமைச்சரவை ஆட்சிஇயல் அண்டை நாடுகளாகிய பர்மா, பாகிஸ்தான், இலங்கை முதலிய நாடுகளைவிடச் செம்மையாக நடந்துவருகிறது. புரட்சி ஆற்றல்களை வெல்வதற்கு இந்திய மக்களாட்சி அமைச்சரவை ஆட்சியியலை நல்ல முறையில் உணர்வது இந்திய மக்கள் அனைவரின் கடமையுமாகும்.

பிற்சேர்க்கை—I

இந்திய அரசியல் அமைப்பு முக்கியப் பிரிவுகளின் தொகுப்பு

EXTRACTS, FROM THE CONSTITUTION OF INDIA

Art. 52. There shall be a President of India. *The President of India.*

53 (1) The executive power of the Union shall be vested in the President and shall be exercised by him either directly or through officers subordinate to him in accordance with this Constitution. *Executive power of the Union.*

(2) Without prejudice to the generality of the foregoing provision, the supreme command of the Defence Forces of the Union shall be vested in the President and the exercise thereof shall be regulated by law.

(3) Nothing in this article shall—

(a) be deemed to transfer to the President any functions conferred by any existing law on the Government of any State or other authority ; or

(b) prevent Parliament from conferring by law functions on authorities other than the President.

54. The President shall be elected by the members of an electoral college consisting of— *Election of President.*

(a) the elected members of both Houses of Parliament; and

(b) the elected members of the Legislative Assemblies of the States.

Oath of affirmation by President.

60. Every President and every person acting as President or discharging the functions of the President shall, before entering upon his office, make and subscribe in the presence of the Chief Justice of India, or, in his absence, the seniormost Judge of the Supreme Court available, an oath or affirmation in the following form, that is to say—

'I, A. B., do swear in the name of God/solemnly affirm that I will faithfully execute the office of President (or discharge the functions of the President) of India and will to the best of my ability preserve, protect and defend the Constitution and the law and that I will devote myself to the service and well-being of the people of India'

Extent of executive power of the Union.

73. (1) Subject to the provisions of this Constitution, the executive power of the Union shall extend—

(a) to the matters with respect to which Parliament has power to make laws; and

(b) to the exercise of such rights, authority and jurisdiction as are exercisable by the Government of India by virtue of any treaty or agreement:

Provided that the executive power referred to in sub-clause (a) shall not, save as expressly provided in this Constitution or in any law made by Parliament, extend in any State to matters with respect to which the Legislature of the State has also power to make laws.

(2) Until otherwise provided by Parliament, a State and any officer or authority of a State may,

notwithstanding anything in this article, continue to exercise in matters with respect to which Parliament has power to make laws for that State such executive power or functions as the State or officer or authority thereof could exercise immediately before the commencement of this Constitution.

Council of Ministers

74. (1) There shall be a Council of Ministers with the Prime Minister at the head to aid and advise the President in the exercise of his functions. **Council of Ministers to aid and advise President.**

(2) The question whether any, and if so what, advice was tendered by Ministers to the President shall not be inquired into in any Court.

75. (1) The Prime Minister shall be appointed by the President and the other Ministers shall be appointed by the President on the advice of the Prime Minister. **Other provisions as to Ministers.**

(2) The Ministers shall hold office during the pleasure of the President.

(3) The Council of Ministers shall be collectively responsible to the House of the People.

(4) Before a Minister enters upon his office, the President shall administer to him the oaths of office and of secrecy according to the forms set out for the purpose in the Third Schedule.

(5) A Minister who for any period of six Consecutive months is not a member of either House of Parliament shall at the expiration of that period cease to be a Minister.

(6) The salaries and allowances of Ministers shall be such as Parliament may from time to time by law determine and, until Parliament so determines, shall be specified in the Second Schedule.

Conduct of Government Business

Conduct of business of the Govt. of India.

77. (1) All executive action of the Government of India shall be expressed to be taken in the name of the President.

(2) Orders and other instruments made and executed in the name of the President shall be *authenticated in such manner as may be specified* in rules to be made by the President, and the validity of an order or instrument which is so authenticated shall not be called in question on the ground that it is not an order or instrument made or executed by the President.

(3) The President shall make rules for the more convenient transaction of the business of the Government of India, and for the allocation among Ministers of the said business.

Duties of Prime Minister as respects the furnishing of information to the President, etc.

78. It shall be the duty of the Prime Minister-

(a) to communicate to the President all decisions of the Council of Ministers relating to the administration of the affairs of the Union and proposals for legislation ;

(b) to furnish such information relating to the administration of the affairs of the Union and proposals for legislation as the President may call for ; and

(c) if the President so requires, to submit for the consideration of the Council of Ministers any matter on which a decision has been taken by a Minister but which has not been considered by the Council.

THE STATES

The Governor

153. There shall be a Governor for each State : — Governors of States.

Provided that nothing in this article shall prevent the appointment of the same person as Governor for two or more States.)

154. (1) The executive power of the State shall be vested in the Governor and shall be exercised by him either directly or through officers subordinate to him in accordance with this Constitution. — Executive power of State.

(2) Nothing in this article shall —

(a) be deemed to transfer to the Governor any functions conferred by any existing law or any other authority; or

(b) prevent Parliament or the Legislature of the State from conferring by law functions on any authority subordinate to the Governor.

155. The Governor of a State shall be appointed by the President by warrant under his hand and seal. — Appointment of Governor.

158. (1) The Governor shall not be a member of either House of Parliament or of a House of the Legislature of any State specified in the First Schedule, and if a member of either House of Parliament or of a House of the Legislature of any such State be appointed as Governor, he shall be deemed to have vacated his seat in that House on the date on which he enters upon his office as Governor. — Conditions of Governor's office.

(2) The Governor shall not hold any other office of profit.

(3) The Governor shall be entitled without payment of rent to the use of his official residences and shall be also entitled to such emoluments, allowances and privileges as may be determined by Parliament by law and, until provision in that behalf is so made, such emoluments, allowances and privileges as are specified in the Second Schedule.

[(3A) Where the same person is appointed as Governor of two or more States, the emoluments and allowances payable to the Governor shall be allocated among the States in such proportion as the President may by order determine.]

(4) The emoluments and allowances of the Governor shall not be diminished during his term of office.

Oath or affirmation by the Governor.

159 Every Governor and every person discharging the functions of the Governor shall, before entering upon his office, make and subscribe in the presence of the Chief Justice of the High Court exercising Jurisdiction in relation to the State, or, in his absence, the seniormost Judge of that Court available, an oath or affirmation in following form, that is to say—

'I, A.B., do swear in the name of God/ solemnly affirm that I will faithfully execute the office of Governor (or discharge the functions of the Governor) of... ..(name of the State) and will to the best of my ability preserve, protect, and defend the Constitution and the law and that I will devote myself to the service and well-being of the people of......(name of the State).'

162. Subject to the provisions of this Constitution, the executive power of a State shall extend to the matters with respect to which the Legislature of the State has power to make laws: **Extent of executive power of State.**

Provided that in any matter with respect to which the Legislature of a State and Parliament have power to make laws, the executive power of the State shall be subject to, and limited by, the executive power expressly conferred by this Constitution or by any law made by Parliament upon the Union or authorities thereof.

Council of Ministers

163. (1) There shall be a Council of Ministers with the Chief Minister at the head to aid and advise the Governor in the exercise of his functions, except in so far as he is by or under this Constitution required to exercise his functions or any of them in his discretion. **Council of Ministers to aid and advise Governor.**

(2) If any question arises whether any matter is or is not a matter as respects which the Governor is by or under this Constitution required to act in his discretion, the decision of the Governor in his discretion shall be final, and the validity of anything done by the Governor shall not be called in question on the ground that he ought or ought not to have acted in his discretion.

(3) The question whether any, and if so what, advice was tendered by Ministers to the Governor shall not be inquired into in any Court.

164. (1) The Chief Minister shall be appointed by the Governor and the other Ministers shall be appointed by the Governor on the advice of the Chief Minister, and the Ministers shall hold office during the pleasure of the Governor: **Other provisions as to Ministers.**

Provided that in the States of Bihar, Madhya Pradesh and Orissa, there shall be a Minister in

charge of tribal welfare who may in addition be in charge of the welfare of the Scheduled Castes and Backward Classes or any other work.

(2) The Council of Ministers shall be collectively responsible to the Legislative Assembly of the State.

(3) Before a Minister enters upon his office, the Governor shall administer to him the oaths of office and of secrecy according to the forms set out for the purpose in the Third Schedule.

(4) A Minister who for any period of six consecutive months is not a member of the Legislature of the State shall at the expiration of that period cease to be a Minister.

(5) The salaries and allowances of Ministers shall be such as the Legislature of the State may from time to time by law determine and, until the Legislature of the State so determines, shall be as specified in the Second Schedule.

Duties of Chief Minister as respects the furnishing of information to Governor, etc.

167. It shall be the duty of the Chief Minister of each State—

(a) to communicate to the Governor of the State all decisions of the Council of Ministers relating to the administration of the affairs of the State and proposals for legislation;

(b) to furnish such information relating to the administration of the affairs of the State and proposals for legislation as the Governor may call for; and

(c) if the Governor so requires, to submit for the consideration of the Council of Ministers any matter on which a decision has been taken by a Minister but which has not been considered by the Council.

356. (1) If the President on receipt of a report from the Governor of a State or otherwise, is satisfied that a situation has arisen in which the Government of the State cannot be carried on in accordance with the provisions of this Constitution, the President may be Proclamation—

Provisions in case of failure of Constitutional machinery in States.

(a) assume to himself all or any of the functions of the Government of the State and all or any of the powers vested in or exercisable by the Governor or any body or authority in the State other than the Legislature of the State;

(b) declare that the powers of the Legislature of the State shall be exercisable by or under the authority of Parliament;

(c) make such incidental and consequential provisions as appear to the President to be necessary or desirable for giving effect to the objects of the Proclamation, including provisions for suspending in whole or in part the operation of any provisions of this Constitution relating to any body or authority in the State:

Provided that nothing in this clause shall authorise the President to assume to himself any of the powers vested in or exercisable by a High Court, or to suspend in whole or in part the operation of any provision of this Constitution relating to High Courts.

(2) Any such Proclamation may be revoked or varied by a subsequent Proclamation.

(3) Every Proclamation, under this article shall be laid before each House of Parliament and shall, except where it is a Proclamation revoking a previous Proclamation, cease to operate at the expiration of two months unless before the expiration of that period it has been approved by resolutions of both Houses of Parliament:

Provided that if any such Proclamation (not being a Proclamation revoking a previous Proclamation) is issued at a time when the House of the People is dissolved or the dissolution of the House of the People takes place during the period of two months referred to in this clause, and if a resolution approving the Proclamation has been passed by the Council of States, but no resolution with respect to such Proclamation has been passed by the House of the People before the expiration of that period, the Proclamation shall cease to operate at the expiration of thirty days from the date on which the House of the People first sits after its reconstitution unless before the expiration of the said period of thirty days a resolution approving the Proclamation has been also passed by the House of the People.

(4) A Proclamation so approved shall, unless revoked, cease to operate on the expiration of a period of six months from the date of the passing of the second of the resolutions approving the Proclamation under clause (3):

Provided that if and so often as a resolution approving the continuance in force of such a Proclamation is passed by both Houses of Parliament, the Proclamation shall, unless revoked, continue in force for a further period of six months from the date on which under this clause it would otherwise have ceased to operate, but no such Proclamation shall in any case remain in force for more than three years:

Provided further that if the dissolution of the House of the People takes place during any such period of six months and a resolution approving the continuance in force of such Proclamation has been passed by the Council of States, but no resolution with respect to the continuance in force of such Proclamation has been passed by the

House of the People during the said period, the Proclamation shall cease to operate at the expiration of thirty days from the date on which the House of the People first sits after its reconstitution unless before the expiration of the said period of thirty days a resolution approving the continuance in force of the Proclamation has been also passed by the House of the People.

Exercise of Legislative powers under Proclamation issued under Article 356.

357. (1) Where by a Proclamation issued under clause (1) of article 356, it has been declared that the powers of the Legislature of the State shall be exercisable by or under the authority of Parliament, it shall be competent—

(a) for Parliament to confer on the President the power of the Legislature of the State to make laws, and to authorise the President to delegate, subject to such conditions as he may think fit to impose, the power so conferred to any other authority to be specified by him in that behalf;

(b) for Parliament, or for the President or other authority in whom such power to make laws is vested under sub-clause (a), to make laws conferring powers and imposing duties, or authorising the conferring of powers and the imposition of duties, upon the Union or officers and authorities thereof ;

(c) for the President to authorise when the House of the People is not in session expenditure from the Consolidated Fund of the State pending the sanction of such expenditure by Parliament.

(2) Any law made in exercise of the power of the Legislature of the State by Parliament or the President or other authority referred to in sub-clause (a) of clause (1) which Parliament or the President or such other authority would not,

but for the issue of a Proclamation under article 356, have been competent to make shall, to the extent of the incompetency, cease to have effect on the expiration of a period of one year after the Proclamation has ceased to operate except as respects things done or omitted to be done before the expiration of the said period, unless the provisions which shall so cease to have effect are sooner repealed or re-enacted with or without modification by Act of the appropriate Legislature.

Suspension of Provision of Article 19 during Emergencies.

358. While a Proclamation of Emergency is in operation, nothing in article 19 shall restrict the power of the State as defined in Part III to make any law or to take any executive action which the State would but for the provisions contained in the Part be competent to make or to take, but any law so made shall, to the extent of the incompetency, cease to have effect as soon as the Proclamation ceases to operate, except as respects things done or omitted to be done before the law so ceases to have effect.

Suspension of the enforcement of the rights conferred by Part III during Emergencies.

359. (1) Where a Proclamation of Emergency is in operation, the President may by order declare that the right to move any court for the enforcement of such of the rights conferred by Part III as may be mentioned in the order and all proceedings pending in any court for the enforcement of the rights so mentioned shall remain suspended for the period during which the Proclamation is in force or for such shorter period as may be specified in the order.

(2) An order made as aforesaid may extend to the whole or any part of the territory of India.

(3) Every order made under clause (1) shall, as soon as may be after it is made, be laid before each House of Parliament.

பிற்சேர்க்கை—II

(அ) பிரிட்டன்

பிரிட்டனில் தற்போதுள்ள அமைச்சரவை
(ஏப்ரல் 1972)

காபினெட் அமைச்சர்கள்

1. ரைட் ஆனரபிள் திரு. எட்வர்டு ஹீத் (பிரதமர்)
2. ,, சர் அலெக் டக்ளஸ் ஹியூம்
3. ,, ஹெயில்ஷாம் பிரபு
4. ,, திரு. அந்தோனி பார்பர்
5. ,, திரு. உவில்லியம் ஒயிட்லா
6. ,, கார்னிங்க்டான் பிரபு
7. ,, சர் ஹீத் ஜோசப்
8. ,, திரு. ஜியாஃப்ரே ரிப்பன்
9. ,, திரு. இராபர்ட் கார்
10. ,, திருமதி மார்கரெட் தாச்சர்
11. ,, திரு. கார்டன் காம்பெல்
12. ,, திரு. ஏர்ல் ஜெல்லிகோ
13. ,, திரு. பீட்டர் வாக்கர்
14. ,, திரு. பீட்டர் தாமஸ்
15. ,, திரு. ஜேம்ஸ் பிரயர்
16. ,, திரு. ஜான் டேவிஸ்

காபினெட்டில் இல்லாதவர்கள்

1. ரைட் ஆனரபிள் திரு. கிரிஸ்டபர் காட்வே
2. ,, திரு. வைகவுண்டு எக்கின்ஸ்
3. ,, ,, ஃபிரடெரிக் கார்ஃபீல்டு
4. ,, ,, மைக்கேல் நோபிள்
5. ரைட் ஆனரபிள் திரு. ரிச்சர்டு உட்
6. ,, ,, ஜீலியன் அமெரி
7. ,, ,, ஜான் பீடன்
8. திரு. கிரஹேம் பேஜ்
9. சர் ஜான் ஈடன்
10. திரு. ஆர். ஷார்ப்பின்ஸ்

11. விண்டின்ஷாம் பிரபு
12. ரைட்ஆனரபிள் ஜோசப் காட்பெர்
13. திரு. மாரிஸ் மாக்மில்லன்
14. ரைட் ஆனரபிள் ஃபிரான்சிஸ் பை
15. திரு. பாட்ரிக் ஜெங்கின்ஸ்
16. திரு. டெரென்சு ஹிக்கின்ஸ்
17. பால்னியல் பிரபு
18. திரு. இபான் கில்மூர்
19. அபர்டேர் பிரபு
20. திரு. பால் பிரயன்
21. டிவீடிஸ்மூர் பிரபு
22. திரு. டேவிட் சிப்சன் வாட்
23. ரைட் ஆனரபிள் டுருமால்பின் பிரபு

அட்டர்னி ஜெனரல் :	ரைட் ஆனரபிள் சர் பீடர் ராலின்சன்
லார்ட் அட்வொகேட் :	ரைட் ஆனரபிள் நார்மன் வைலி
சொலிசிடர் ஜெனரல் :	சர் ஜிபாஃபிரே ஹோவ்
ஸ்காட்லாந்து ஜெனரல் :	திரு. டேவிட் பிராண்டு

ஜூனியர் அமைச்சர்கள் (26 பேர்) — (இங்கு அச்சிடப் படவில்லை).

(ஆ) இந்தியா

(i) திருமதி இந்திரா காந்தியின் முதல் அமைச்சரவை 1966 ஜனவரி, 24

காபினெட் அமைச்சர்கள்

1. திருமதி இந்திரா காந்தி
2. திரு. குல்ஜாரிலால் நந்தா
3. ,, ஜகஜீவன்ராம்
4. ,, சுவரண் சிங்கு
5. ,, எஸ். கே. பாடில்
6. ,, ஒய். பி. சவான்
7. ,, என். சஞ்சீவ ரெட்டி
8. ,, எஸ். சுப்பிரமணியம்
9. ,, சசீந்திர சவுதுரி
10. திரு. சத்திய நாராயண் சின்ஹா
11. ,, எம். சி. சாக்ளா
12. ,, டி. சஞ்சீவய்யா
13. ,, அசோக் மேத்தா
14. ,, மனுபாய் ஷா
15. ,, ஜி. எஸ். பாதக்
16. ,, பக்ருடீன் அகமத்

ஸ்டேட் அமைச்சர்கள்

1. திரு. ஜெயசுக்லால் ஹாத்தி
2. ,, எம். தாமஸ்
3. ,, தினேஷ்சிங்கு
4. ,, சி. பி. பூனசா
5. ,, பி. கோவிந்த மேனன்
6. டாக்டர் ராம்சுபாக் சிங்கு
7. திரு. பிபுதேந்திர மிஸ்ரா
8. ,, பி. ஆர். பகத்
9. ,, சி. ஆர். பட்டாபிராமன்
10. திரு. மேர்சந்த் கன்னா
11. ,, டி. என். சிங்கு
12. ,, ஓ. வி. அளகேசன்
13. ,, டி. இரகுராமய்யா
14. டாக்டர் சுசீலா நய்யார்
15. திரு. இராஜ் பகதூர்
16. ,, டி. ஜகன்னாத ரெட்டி
17. டாக்டர் கே. எல். ராவ்
18. திரு. எஸ். கே. டே

டெபுடி அமைச்சர்கள்

1. திரு. பிஸ். நஸ்கார்
2. ,, ஷா நவாஸ் கான்
3. ,, ஷாம் நாத்
4. ,, சியாம் தார் மிஸ்ரா
5. ,, அன்னா சாகேப் சிண்டே
6 ,, எல். என். மிஸ்ரா
7. ,, வி. சி. சுக்லா
8. ,, பக்த் தர்சன்
9. டாக்டர் (திருமதி) சவுந்தரம் இராமச்சந்திரன்
10. திரு. டி. ஆர். சவான்
11. ,, ஷாஃபி குரேஷி
12. ,, பி. சி. பகவதி
13. ,, பி. சி. சேத்தி
14. ,, சர்தார் இக்பால் சிங்கு
15. திருமதி மரகதம் சந்திரசேகர்
16. திரு. பி. எஸ். மூர்த்தி
17. திருமதி நந்தினி சத்பதி

(ii) திருமதி இந்திரா காந்தியின் அமைச்சரவை 1967 தேர்தலுக்குப் பின்

காபினெட் அமைச்சர்கள்

திருமதி இந்திராகாந்தி
திரு. பக்ருடீன் அலி அகமத்
திரு. ஒய். பி. சவான்
,, ஜகஜீவன்ராம்
,, சுவரண்சிங்கு
,, பி. ஆர். பகத்
,, கே. அனுமந்தய்யா
,, குல்ஜாரிலால் நந்தா
திரு கே. ரகுராமய்யா
,, டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ்
,, டி. சஞ்சீவய்யா
,, டாக்டர் திரிகுண சென்
,, கே. கே. ஷா
,, தினேஷ் சிங்கு
,, டாக்டர் கரண்சிங்கு
,, சத்யநாராயண் சின்ஹா

ஸ்டேட் அமைச்சர்கள்

திரு. பகவத் ஜா அஸாத்
,, பக்த்தர்சன்
,, டி. ஆர். சவான்
,, பரிமள கோஷ்
,, ஐ. கே. குஜ்ரால்
,, கே. ஜகந்நாத ராவ்
,, ஆர். கே. கடில்கர்
,, நரேந்திர சிங்கு மஹிதா
,, ஓம் மேத்தா
திரு. ராம் நிவாஸ் மிர்தா
,, லலித் நாராயண் மிஸ்ரா
,, பி. எஸ். மூர்த்தி
,, நீதிராஜ் சிங்கு சவுதுரி
டாக்டர் கே. எல். ராவ்
திருமதி நந்தினி சத்பதி
திரு. பி. பி. சேதி
,, ஏ. பி. ஷிண்டே
,, ஷேர் சிங்கு

டெபுடி அமைச்சர்கள்

திரு. ரோஹன்லால் சதுர்வேதி
,, கே. ஆர். கணேஷ்
,, எஸ். சி. ஜமீர்
,, ஏ. கே. சிங்கு
,, எம். ஆர். கிருஷ்ணு
டாக்டர் சரோஜினி மகிஷி
திரு. ஜகந்நாத் பகாடியா
,, பி. பார்த்தசாரதி
, ரக்பீர்சிங்கு பஞ்சசாரி
திரு. முகம்மது ஷபி குரேஷி
,, சவுதுரிராம் சேவக்
,, கே. எஸ். இராமசாமி
,, விஸ்வநாத் ராய்
,, முகம்மது யூனஸ் சலீம்
,, சித்தேஸ்வர் பிரசாத்
,, பானுபிரகாஷ் சிங்கு
,, சர்தார் இக்பால் சிங்கு
,, சுரேந்திர பால் சிங்கு

(iii) 1971 மார்ச்சு இடைக்காலத் தேர்தலுக்குப் பின் மத்திய காபினெட்

(1971 மார்ச்சு 18, பதவியேற்றம்)

காபினெட் அமைச்சர்கள்

1. திருமதி இந்திரா காந்தி
2. திரு ஒய். பி. சவான்
3. ,, ஜகஜீவன்ராம்
4. ,, சுவரண்சிங்கு
5. ,, கே. அனுமந்தய்யா
6. ,, டாக்டர் கரண்சிங்கு
7. ,, இராஜ் பகதூர்
8. திரு. மோய்நுல் அக் சவுதுரி
9. ,, சித்தார்த்த சங்கர் ரே
10. ,, எச். ஆர். கோகலே
11. ,, எஸ். மோகன் குமாரமங்கலம்
12. ,, கே. கே. ஷா
13. ,, பக்ருடீன்அலி அகமத்

ஸ்டேட் அமைச்சர்கள்

1. டாக்டர் கே. எல். ராவ்
2. திரு எல். என். மிஸ்ரா
3. ,, ஆர். கே. கடில்கர்
4. ,, ஐ. கே. குஜ்ரால்
5. பேராசிரியர் ஷேர் சிங்கு
6. திரு கே. வி. ரகுநாத ரெட்டி
7. ,, டி. ஆர். சவான்
8. ,, நீதிராஜ் சவுதுரி
9. திரு. ஓம் மேத்தா
10. ,, ராம்நிவாஸ் மிர்தா
11. ,, பி. சி. சேத்தி
12. ,, கே. சி. பந்த்
13. திருமதி நந்தினி சத்பதி
14. திரு. வி. சி. சுக்லா
15. ,, அன்னுசாகேப் சிண்டே

டெபுடி அமைச்சர்கள்

1. திரு. கே. ஆர். கணேஷ்
2. ,, ஏ. கே. குஷ்கு
3. டாக்டர் சரோஜினி மகிஷி
4. திரு. ஜகந்நாத் பகாடியா
5. திரு. முகம்மது ஷபி குரேஷி
6. ,, கே. எஸ். இராமசுவாமி
7. ,, சித்தேஸ்வர பிரசாத்
8. ,, சுரேந்திர பால் சிங்கு

(iv) 1971 ஜூனில் இருந்த அமைச்சரவை

காபினெட் அமைச்சர்கள்

திருமதி இந்திரா காந்தி
திரு. ஒய். பி. சவான்
,, ஜகஜீவன்ராம்
,, சுவரண் சிங்கு
,, பக்ருடீன் அகமத்
,, உமா சங்கர் தீட்சித்
,, எச். ஆர். கோகலே
திரு. கே. அனுமந்தய்யா
,, எஸ். மோகன் குமார மங்கலம்
,, இராஜ்பகதூர்
,, சித்தார்த்த சங்கர் ரேய்
டாக்டர் கரண் சிங்கு
திரு. சி. சுப்பிரமணியம்

ஸ்டேட் அமைச்சர்கள்

திரு. எச். என். பகுகுணா
,, டி.பி. சட்டோபாத்தியாயா
,, நீதிராஜ் சௌதுரி
,, டி. ஆர். சவான்
,, மோகன் தாரியா
,, கே. ஆர். கணேஷ்
,, ஐ. கே. குஜ்ரால்
,, ஆர். கே. கடில்கார்
,, ஷாநவாஸ் கான்
டாக்டர் சரோஜினி மகிஷி
திரு. ஓம் மேத்தா
திரு. ராம் நிவாஸ் மிர்தா
,, எல். என். மிஸ்ரா
,, கணஷ்யாம் ஓஜா
,, கே. சி. பந்த்
,, கே. எல். ராவ்
,, கே. வி. ரகுநாத ரெட்டி
திருமதி நந்தினி சத்பதி
திரு. பிரகாஷ்சண்ட். பி சேதி
,, அன்னுசாகேப் பி. ஷிண்டே
,, பி. சி சுக்லா
பேராசிரியர் ஷேர் சிங்கு

டெபுடி அமைச்சர்கள்

திரு. வேதவ்ராதா பாருவா
,, ஏ சி. ஜியார்ஜ்
,, ஏ. கே. சிங்கு
,, வெய்ஜ்நாத் குரீல்
,, பி. எச். மொஹிதீன்
,, ஜகந்நாத் பகாடியா
,, முகம்மது ஷபி குரேஷி
,, கே. எஸ். இராமசாமி
திருமதி சுசீலா ரோஹாட்சி
திரு. பி. சங்கரானந்த்
,, சித்தேஸ்வர பிரசாத்
,, தன்பீர்சிங்கு
,, தரம்பீர் சின்ஹா
,, கேதார்நாத் சிங்கு
,, சுரேந்திர பால் சிங்கு
,, பால் கோவிந்த் வர்மா
பேராசிரியர் டி. பி. யாதவ்

(v) 1972 ஏப்ரலில் உள்ளபடி

மத்திய அரசு காபினெட்

காபினெட் அமைச்சர்கள்

1. திருமதி இந்திரா காந்தி
2. திரு. ஒய். பி. சவான்
3. ,, ஜகஜீவன்ராம்
4. ,, பக்ருடீன் அகமத்
5. ,, சுவரண் சிங்கு
6. ,, கே. அனுமந்தய்யா
7. டாக்டர் கரண்சிங்கு
8. திரு. இராஜ்பகதூர்
9. ,, மோய்நுல் அக் சவுதுரி
10. ,, எச். ஆர். கோகலே
11. ,, எஸ். மோகன் குமாரமங்கலம்
12. ,, சி. சுப்பிரமணியம்
13. ,, உமாசங்கர் தீட்சித்

ஸடேட் அமைச்சர்கள்

1. டாக்டர் கே. எல். ராவ்
2. திரு. எல். எம். மிஸ்ரா
3. ,, ஆர். கே. கடில்கர்
4. ,, கே. வி. ரகுநாதரெட்டி
5. ,, டி. ஆர். சவான்
6. ,, பி. சி. சேத்தி
7. ,, எச். என். பகுகுணா
8. ,, ஐ. கே. குஜ்ரால்
9. பேராசிரியர் ஷேர்ஷா
10. திரு. நீதிராஜ் சவுதுரி
11. ,, ஓம் மேத்தா
12. ,, இராம்நிவாஸ்மிர்தா
13. திரு. கே. சி. பந்த்
14. திருமதி நந்தினி சத்பதி
15. திரு. வி. சி. சுக்லா
16. ,, அன்னுசாகேப் சிண்டே
17. ,, கே. ஆர். கணேஷ்
18. ,, கே.கே. நவாஸ்கான்
19. பேராசிரியர் சட்டோபாத்தியாயா
20. திரு. கணஸ்யாம் ஓஜா
21. ,, மோகன் தாரியா
22. டாக்டர் சரோஜினி மகிஷி

(இ) தமிழ்நாடு

1919ஆம் ஆண்டு ஆக்டின்கீழ் இரட்டை ஆட்சி அமைச்சரவைகள்

முதல் அமைச்சரவை (ஜஸ்டிஸ் கட்சி)

17—12—1920 முதல் 19—11—1925 வரை

1. திரு. ஏ. சுப்பராயலு ரெட்டியார், (முதலமைச்சர், 1921 நவம்பரில் இறந்தார்)
2. ,, பி. ராமராயநிங்கார், பனகல் ராஜா
3. ,, கே. வெங்கடரெட்டி நாயுடு
4. ,, ஏ. பி. பாத்ரோ (முதலமைச்சர் இறந்தபின் நியமிக்கப்பட்டார்)

இரண்டாவது அமைச்சரவை (ஜஸ்டிஸ் கட்சி)

19—11—1925 முதல் 5—12—1926 வரை

1. திரு. பி. ராமராய நிங்கார், பனகல் ராஜா (முதலமைச்சர்)
2. ,, ர. பி. பாத்ரோ
3. ,, டி. என். சிவஞானம் பிள்ளை

மூன்ருவது அமைச்சரவை (சுயேச்சை)

4—12—1926 முதல் 27—10—1930 வரை

1. திரு. டாக்டர் பி. சுப்பராயன் (முதலமைச்சர்)
2. ,, ஏ. ரங்கநாத முதலியார்
3. ,, ஆர். என். ஆரோக்கியசாமி முதலியார்
4. ,, எம். ஆர். சேதுரத்தினம் அய்யர்
5. ,, எஸ். முத்தைய முதலியார்

நான்காவது அமைச்சரவை (ஜஸ்டிஸ் கட்சி)

27—10—1930 முதல் 4—11—1932 வரை

1. திரு. பி. முனுசாமி நாயுடு (முதலமைச்சர்)
2. ,, பி. டி. ராஜன்
3. ,, எஸ். குமாரசாமி ரெட்டியார்

ஐந்தாவது அமைச்சரவை (ஜஸ்டிஸ் கட்சி)

5—11—1932 முதல் 1—4—1937 வரை

1. திரு. ராமகிருஷ்ண ரங்கராவ் பகதூர், பொப்பிலி ராஜா (முதலமைச்சர்)
2. ,, பி. டி. ராஜன்
2. ,, எஸ். குமாரசாமி ரெட்டியார்
4. ,, எம். ஏ. முத்தைய செட்டியார்

ஆருவது அமைச்சரவை (இடைக்கால அவை)

1—4—1937 முதல் 14—7—1937 வரை

1. திரு. கே. வெங்கடரெட்டி நாயுடு (முதலமைச்சர்)
2. ,, ஏ. டி. பன்னீர்செல்வம்
3. ,, எம். ஏ. முத்தைய செட்டியார்
4. ,, பி. கலிஃபுல்லா சாயபு
5. ,, எம் சி. ராஜா
6. ,, ஆர். எம். பாலாத்

1935ஆம் ஆண்டு ஆக்டின்கீழ் மாநில சுயஆட்சி அமைச்சரவைகள்

1. (காங்கிரசுக் கட்சி)

15—7—1937 முதல் 20—10—1939 வரை

1. திரு சி. இராஜகோபாலாச்சாரி (முதலமைச்சர்)
2. ,, டி. பிரகாசம்
3. ,, யாகூப் ஆசன்
4. ,, பி.சுப்பராயன்
5. டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்
6. ,, வி. ஐ. முனுசாமி பிள்ளை
7. ,, வி.வி. கிரி
8. ,, எஸ். இராமநாதன்
9. ,, கே. ராமன்மேனன் (5-1-1939-ல் இறந்தார்)
10. ,, பி. கோபால் ரெட்டி
11. ,, சி. ஜெ. வார்ச்சி.

இந்த அமைச்சரவை இரண்டாவது உலகப் போரில் இந்தியாவை பிரிட்டன் சம்பந்தப்படுத்தியதற்கு எதிர்ப்பாக இராஜிநாமாச் செய்தது.

20—11—1937 முதல் **1—5—1946** வரை கவர்னரின் ஆலோசகர்களால் ஆட்சி நடத்தப்பட்டது.

1—5—1946 முதல் 23—3—1947 வரை

இடைக்கால அமைச்சரவை (காங்கிரசு சுயராஜ்யக் கட்சி)

1. திரு. டி. பிரகாசம் (முதலமைச்சர்)
2. ,, வி. வி. கிரி
3. ,, எம். பக்தவத்சலம்
4. ,, டி. எஸ். அவிஞசிலிங்கம் செட்டியார்
5. ,, கே. பாஷியம்
6. ,, பி. எஸ். குமாரசுவாமி ராஜா
7. ,, டேனியல் தாமஸ்
8. திருமதி ருக்மணி லட்சுமிபதி அம்மையார்
9. திரு. கே. ஆர். கரந்த்
10. ,, கே. கோட்டி ரெட்டி
11. ,, வி. கூர்மய்யா
12. ,, பி வீராசாமி
13. ,, ஆர். ராகவமேனன்
14. ,, பி. வெங்கடரத்தினம்

1947 இந்திய சுதந்திரச் சட்டத்தின்கீழ்

முதல் காங்கிரசுக் கட்சி அமைச்சரவை

24—3—1947 முதல் 6—4—1949 வரை

1. திரு. ஓ. பி. இராமசுவாமி ரெட்டியார் (முதலமைச்சர்)
2. ,, எம். பக்தவத்சலம்
3. டாக்டர் பி. சுப்பராயன்
4. டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்
5. திரு. டி. எஸ். அவிஞசிலிங்கம் செட்டியார்
6. ,, பி. கோபால் ரெட்டி
7. ,, டேனியல் தாமஸ்
8. ,, வி. கூர்மய்யா
9. ,, கே. சீதாராம ரெட்டி

10. திரு. கே. சந்திரமௌளி
11. ,, கே. மாதவ மேனன்
12. ,, காலா வெங்கடராவ்
13. ,, ஏ. பி. ஷெட்டி
14. டாக்டர் எஸ். குருபாதம்

இரண்டாவது காங்கிரசு அமைச்சரவை

7—4—1949 முதல் 9—4—1952 வரை

1. திரு. பி. எஸ். குமாரசாமி ராஜா (முதலமைச்சர்)
2. டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்
3. திரு. எம். பக்தவத்சலம்
4. ,, எச். சீதாராம ரெட்டி
5. ,, கே. சந்திரமௌளி
6. ,, பி. கோபால ரெட்டி
7. ,, கே. மாதவ மேனன்
8. ,, காலா வெங்கடராவ்
9. ,, ஏ. பி. ஷெட்டி
10. ,, பி. பரமேசுவரன்
11. ,, சி. பெருமாள்சாமி ரெட்டியார்
12. ,, ஜே. எல். பி. ரோச்சு-விக்டோரியா
13. ,, என். சஞ்சீவி ரெட்டி

மூன்றுவது காங்கிரசு அமைச்சரவை

10—4—1952 முதல் 12—4—1957 வரை

1. திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் (முதலமைச்சர்)
2. ,, ஏ. பி. ஷெட்டி
3. ,, சி. சுப்பிரமணியம்
4. ,, கே. வெங்கடசாமி நாயுடு
5. ,, என். ரங்கா ரெட்டி
6. ,, எம். வி. கிருஷ்ண ராவ்
7. ,, வி. சி. பழனிசாமிக் கவுண்டர்
8. டாக்டர் யு. கிருஷ்ணராவ்
9. டாக்டர் நாகண கவுடா

10. திரு. ராஜா சண்முக ராஜேசுவர சேதுபதி (இராமநாதபுரம்)
11. ,, எம். ஏ. மாணிக்கவேலு நாயக்கர்
12. ,, சங்கர ரெட்டி
13. ,, எஸ். பி. பி. பட்டாபிராம ரெட்டி
14. ,, பி. சஞ்சீவையா
15. ,, எம். பக்தவத்சலம்
16. ,, செ. ராஜாராம்
17. திருமதி ஜோதி வெங்கடாசலம் அம்மையார்

நான்காவது காங்கிரசு அமைச்சரவை

13—4—1954 முதல் 12—4—1957 வரை

1. திரு. கே. காமராஜ் (முதலமைச்சர்)
2. ,, எம். பக்தவத்சலம்
3. ,, ஏ. பி. ஷெட்டி
4. ,, பி. பரமேசுவரன்
5. ,, சி. சுப்பிரமணியம்
6. ,, ராஜா சண்முக ராஜேசுவர சேதுபதி (இராமநாதபுரம்)
7. ,, எம். ஏ. மாணிக்கவேலு நாயக்கர்
8. ,, எஸ். எஸ். இராமசாமிப் படையாச்சி

ஐந்தாவது காங்கிரசு அமைச்சரவை

13—4—1957 முதல் 14—3—1962 வரை

1. திரு கே. காமராஜ் (முதலமைச்சர்)
2. ,, எம். பக்தவத்சலம்
3. ,, சி. சுப்பிரமணியம்
4. ,, எம். ஏ. மாணிக்கவேலு நாயக்கர்
5. ,, ஆர். வெங்கடராமன்
6. ,, பி. கக்கன்
7. ,, வி. ராமையா
8. திருமதி லூர்தம்மாள் சைமன் அம்மையார்

ஆருவது காங்கிரசு அமைச்சரவை

15—3—1962 முதல் 2—10—1963 வரை

1. திரு. கே. காமராஜ் (முதலமைச்சர்)
2. ,, எம். பக்தவத்சலம்
3. திருமதி ஜோதி வெங்கடாசலம் அம்மையார்
4. திரு. ஆர். வெங்கடராமன்
5. ,, பி. கக்கன்
6. ,, வி. ராமையா
7. ,, நல்ல சேனுபதி சர்க்கரை மன்ருடியார்
8. ,, ஜி. பூவராகன்
9. ,, எஸ். எம். அப்துல் மஜீத்

ஏழாவது காங்கிரசு அமைச்சரவை

3—10—1963 முதல் 25—3—1967 வரை

1. திரு. எம். பக்தவத்சலம் (முதலமைச்சர்)
2. ,, ஆர். வெங்கடரா்மன்
3. திருமதி ஜோதி வெங்கடாசலம் அம்மையார்
4. திரு. பி. கக்கன்
5. ,, வி. ராமையா
6. ,, நல்ல சேனுபதி சர்க்கரை மன்ருடியார்
7. ,, ஜி. பூவராகன்
8. ,, எஸ். எம். அப்துல் மஜீத்

காங்கிரசுக் கட்சி 1967 தேர்தலில் தோல்வியுற்றது.

திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை

6—3—1967 முதல் 6—3—1968 வரை

1967 (பிப்ரவரி பொதுத்தேர்தல் வெற்றிமுதல்

திரு. சி. என். அண்ணுதுரை இறந்த வரைக்கும்)

1. திரு. சி. என். அண்ணுதுரை (தமிழக முதல்வர்)
2. ,, வி. ஆர். நெடுஞ்செழியன்
3. ,, மு. கருணுநிதி
4. ,, கே ஏ. மதியழகன்
5. திருமதி. சத்தியவாணிமுத்து அம்மையார்
6. திரு. ஏ. கோவிந்தசாமி
7. ,, எஸ். மாதவன்
8. ,, சாதிக் பாட்சா
9. ,, எம். முத்துசாமி

திராவிட முன்னேற்றக் கழக இரண்டாவது அமைச்சரவை

1968 மார்ச்சு முதல் 1971 இடைக்காலத் தேர்தல் வரை

(டாக்டர் சி. என். அண்ணுதுரை அவர்கள் இறந்ததால் புனரமைப்பு)

1971 மார்ச்சு இடைக்காலத் தேர்தலுக்குப்பின்

தமிழ்நாட்டு அமைச்சரவை

1971 மார்ச்சு 15-ல் பதவியேற்றம்

1. டாக்டர் மு. கருணாநிதி (தமிழக முதல்வர்)
2. ,, வி. ஆர். நெடுஞ்செழியன்
8. திரு. க. அன்பழகன்
4. ,, என். வி. நடராஜன்
5. ,, பி. யு. சண்முகம்
6. திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார்
7. திரு. எஸ். மாதவன்
8. ,, என். ஜே. சாதிக் பாட்சா
9. ,, சி. ப. ஆதித்தனுர்
10. ,, ஏ. பி. தர்மலிங்கம் (1972 மார்ச்சில் இராஜிநாமாச் செய்தார்)
11. ,, ஓ. பி. இராமன்
12. ,, எஸ். இராமச்சந்திரன்
13. ,, எம். கண்ணப்பன்
14. ,, கே. இராஜாராம்

(இது 1972 ஏப்ரல், நிலவரம்).

பிற்சேர்க்கை — III

இந்தியக் காபினெட் செயலர்களின் பட்டியல்

		முதல்	வரை
1.	திரு. என். ஆர். பிள்ளை	6-2 -1950	15- 5-1953
2.	,, ஒய். என். சுக்தாங்கர்	14-5 -1953	31- 7-1957
3.	,, எம். கே. வெள்ளோடி	1-8 -1957	4- 6-1958
4.	,, விஷ்ணு சகாய்	1-7 -1958	10-11-1960
5.	,, பி. என். ஜா	10-11-1960	8- 3-1961
6.	,, விஷ்ணு சகாய்	9- 3-1961	15- 4-1962
7.	,, எஸ். எஸ். கேரா	15- 4-1962	18-11-1964
8.	,, தர்ம வீரா	18-11-1964	27- 6-1966
9.	,, டி. எஸ். ஜோஷி	27-6 -1966	31-12-1968
10.	,, பி. சிவராமன்	1- 1-1969	30-11-1970
11,	,, டி. சுவாமிநாதன்	1-12-1970	

பிற்சேர்க்கை—IV

காபினெட் அமைச்சர்களின் இராஜிநாமாக்களும் காரணங்களும்

எண்	பெயர்	பதவி	துறை	இராஜிநாமா தேதி	கட்சி	இராஜிநாமாவிற்குக் காரணம்
1.	டாக்டர் இராஜேந்திரப் பிரசாத்	காபினெட் அமைச்சர்	உணவு விவசாயம்	14-1-1948	காங்கிரசு	அரசியலமைப்பு சபைக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்
2.	திரு. சி. எச். பாபா	,,	வாணிகம்	6-4-1948	சுயேச்சை	சொந்தக் காரணமாக
3.	திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார்	,,	நிதி	17-8-1948	,,	வருமான வரி நிர்வாகத்தில் சலுகை காட்டியதாகக் குறைகூறப்பட்டதன் காரணமாக
4.	திரு. எஸ். பி. முகர்ஜீ	,,	தொழில்	19-4-1950	,,	முஸ்லிம் லீக்குடன் பிரதமர் செய்துகொண்ட ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளாத கருத்து வேற்றுமை காரணமாக
5.	திரு. கே. சி. நியோகி	,,	வாணிகம்	19-4-1940	சுயேச்சை	ஷை

எண்	பெயர்	பதவி	துறை	இராஜிநாமா தேதி	கட்சி	இராஜிநாமாவிற்குக் காரணம்
6.	திரு. ஜெயராம்தாஸ் தௌலத்ராம்	,,	உணவு விவசாயம்	13-5-1950	காங்கிரசு	அஸ்ஸாம் கவர்னராக நியமிக்கப்பட்டதன் காரணமாக
7.	டாக்டர் ஜான் மத்தாய்	,,	நிதி	1- 6-1950	சுயேச்சை	பிரதமருடன் திட்டக் கமிஷன் சிறுபான்மையோர் இவற்றில் கருத்துவேற்றுமை காரணமாக
8.	திரு. மோகன்லால் சாக்சேனு	ஸ்டேட் அமைச்சர்	புனர்வாழ்வு	1- 8-1950	காங்கிரசு	நினைத்த காரியங்களை நிறைவேற்ற இயலாமை காரணமாக
9.	திரு. ரஃபி அகம்மது கிட்வாய்	காபினெட் அமைச்சர்	போக்கு வரத்து	2- 8-1951	,,	கட்சி விவகாரங்களில் அதிருப்தி காரணமாக
10.	திரு. சி. இராஜகோபா லாச்சாரியார்	,,	உள் நாடு	5-11-1951	,,	காங்கிரசு அரசியலிலிருந்து விலகத் தீர்மானித்ததன் காரணமாக
11.	டாக்டர் பி. ஆர். அம்பேத்கார்	,,	நிதி	11-10-1951	சுயேச்சை	பிரதமருடன் கருத்துவேற்றுமைகள். இது 'லா கோடு தாமதமானது இவை காரணமாக

12.	திரு வி. வி. கிரி	,,	தொழிலாளர்	7-9-1954	காங்கிரசு	பாங்கு அலுவலர் போனஸ் தீர்ப்பில் திரு, ராஜத்தியாஷா தீர்ப்புவிஷயத்தில் காபினெட்டுடன் கருத்து வேற்றுமை காரணத்தால்
13.	திரு சி. டி. தேஷ்முக்	காபினெட் அமைச்சர்	நிதி	1- 8-1956	சுயேச்சை	பிரதமர் பண்டிட் நேருவுடன் பம்பாய் நகரத்தைத் தனிப் பிரதேசமாக வைக்க வேண்டுமென்ற கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக
14.	திரு லால் பகதூர் சாஸ்திரி	,,	ரயில் போக்குவரத்து	7-12-1956	காங்கிரசு	சில ரயில் விபத்துகளுக்காக லோக்சபை கண்டனத்தை ஏற்றுக்கொண்டு பரிகாரமாக இராஜிநாமா
15.	திரு கே. என். கட்ஜு	,,	பாதுகாப்பு	30- 1-1957	,,	மத்தியப் பிரதேசத்துக்கு முதலமைச்சராக இராஜிநாமா
16.	திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரி	,,	நிதி	14- 2-1958	,,	முந்தரா ஊழலில் திரு சாக்ளா அறிக்கையின் பேரில் தம் பங்குப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு இராஜிநாமா

எண்	பெயர்	பதவி	துறை	இராஜிநாமா தேதி	கட்சி	இராஜிநாமாவிற்குக் காரணம்
17.	திரு. எ. பி. ஜெயின்	காபினெட் அமைச்சர்	உணவு விவசாயம்	24-8-1958	காங்கிரசு	உணவு தானியங்களில் அரசு வியாபாரம் செய்வதைப்பற்றிய கொள்கையில் கருத்துவேறுபாடு
18	திரு எம். வி. கிருஷ்ணப்பா	டெப்டிஸ்டேட் அமைச்சர்	விவசாயம்	14-3-1962	,,	மைசூர் இராஜ்ஜிய அரசியலில் நுழைய
19.	திரு. வி. வி. கிருஷ்ண மேனன்	காபினெட் அமைச்சர்	பாதுகாப்பு, உற்பத்தி	9-11-1962	,,	சீனப் படையெடுப்புக்குத் தக்க தடுப்பு நடவடிக்கை எடுக்காததற்குக் கூறப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு வணங்கி இராஜிநாமா
20.	திரு. கே. டி. மாளவியா	,,	சுரங்கம், எரிபொருள்	26- 6-1963	,,	சிராஜுடீன் கம்பெனி ஊழல் விவகாரத்தின் காரணமாக
21.	டாக்டர் கே. எல். சிரிமாலி	,,	கல்வி	31-8-1963	,,	காமராஜ் திட்டத்தின்படி சில அமைச்சர்கள் பதவியை விட்டுக் கட்சிக்கு வேலை செய்யத் தீர்மானிக்கப்பட்டபடி

22.	திரு பி. கோபால ரெட்டி	காபினெட் அமைச்சர்	செய்தி ஒலிபரப்பு	31-8-1963	காங்கிரசு	காமராஜ் திட்டப்படி
23.	திரு மொரார்ஜி தேசாய்	,,	நிதி	31-8-1963	,,	,,
24.	திரு ஜகஜீவன்ராம்	,,	போக்கு வரத்து	31-8-1963	,,	,,
25.	திரு லால் பகதூர் சாஸ்திரி	,,	உள் நாடு	31-8-1963	,,	,,
26.	திரு எஸ். கே. பாடில்	,,	உணவு, விவசாயம்	1- 9-1963	,,	,,
27.	திரு டி. டி. கிருஷ்ண மாச்சாரி	,,	நிதி	31-12-1965	,,	ஊழல் குற்றச்சாட்டுகள் காரணமாக
28.	திரு மகாவீர தியாகி	,,	புனர்வாழ்வு	15-1-1966	,,	திரு நந்தா காபினெட் தாஷ் கென்டு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட பிறகு எதிர்ப்புத் தெரிவிக்க
29.	திரு ஜி. எல். நந்தா	காபினெட் அமைச்சர்	உள்நாட்டு விவகாரங்கள்	9-11-1966	,,	டெல்லியில் பசுவதை எதிர்ப்புக் கிளர்ச்சியைச் சரியானபடி சமாளிக்க வில்லை என்ற குற்றச் சாட்டுக்காக

எண்	பெயர்	பதவி	துறை	இராஜிநாமா தேதி	கட்சி	இராஜிநாமாவிற்குக் காரணம்
30.	திரு எஸ். கே. டே	ஸ்டேட் அமைச்சர்	சுரங்கங்கள் உலோகம்	17- 1-1967	காங்கிரசு	காங்கிரசுக் கட்சி டிக்கட் தரப்படாததால்
31.	திரு எம். சி. சாக்ளா	காபினெட்	வெளிநாட்டு விவகாரங்கள்	5-9-1967	சுயேச்சை	மொழிப் பிரச்சினையில் கருத்துவேறுபாடு காரணமாக
32.	திரு பி. சென்னு ரெட்டி	,,	இரும்பு, சுரங்கம், உலோகம்	27-4-1968	காங்கிரசு	தேர்தலில் ஊழல் பழக்கத்தைப்பற்றி ஆந்திரா உயர்நீதி மன்றத் தீர்ப்பில் கண்டனத்தின் காரணமாக

குறிப்பு:—(இந்தப் பட்டியல் பெரும்பாலும் திரு. எஸ். டி. ஜாத்கார் 'Journal of Constitutional and Parliamentary Studies, January-March, 1969' இதழில் தந்துள்ள தகவல்களை ஒட்டித் தயாரிக்கப் பட்டது.) சில ஸ்டேட் அமைச்சர்களின் இராஜிநாமாக்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

பிற்சேர்க்கை—V

SELECT BIBLIOGRAPHY

Acts and Documents

(Montagu-Chelmnsford) Report on Indian Constitutional Reforms, 1918 (Cmd 9109)

(Simon) Report of the Indian Statement Commission, 1930 (Cmd 3568-9)

Statement by the Cabinet Mission and H.E. the Viceroy, 1946 (Cmd 6829)

Govt. of India Act, 1909

Govt. of India Act, 1919

Govt. of India Act, 1935

The Constitution of India (1950) with amendments upto date

Constitutional Assembly Debates, Official Reports, New Delhi, 1947—1950.

Report of the States Recognisation Committee, 1955.

Books and Articles

Coupland, R.—Indian Policies 1936—42
The Cripps Mission, 1942
India, a Re-Statement 1948

Gledhill, A— The Republic of India (1951)

Jennings, W. Ivor—Some Characteristics of the Indian Constitution (1952)

Jennings, W. Ivor—Cabinet Govt. (1957)

Keith, A. B.—A Constitutional History of India, 1608—1935 (1936)

Lumby, E. W. R.—The Transfer of Power in India (1954)

Gadgil, N. V.—Government from Inside (1968)

Menon, V. P.—The Story of Integration of Indian States (1956)
„ —The Transfer of Power in India (1957)
Herbert Morrison—Government and Parliament-A Survey from Inside (1959)
Morarji Desai—A Minister and his Responsibilities (1970)
Moris—Jones, W. H.—Parliament in India.
Jawarlal Nehru's Speeches—Publications Division
Lal, A. P.—The Indian Parliament (1956)
Ashok Chanda—Indian Administration (1958)
Murugesa Mudaliar, N.—Indian Administration—Today and Tomorrow (1970), Orient Longman.
Murugesa Mudaliar, N.—Polity in Tirukkural (1968)
Subramanian, N.—Sangam Polity.
Venkateswaran, R. J.—Cabinet Govt. in India (1967)
Nilakanta Sastri, K. A.—History of India, 3 Parts (1953)
Pandithamani Kathiresan Chettiar—Artha Sastram (Tamil Translation) (1955).
Sharma—Artha Sastra.
Michael Bnetcher—Nehru, A Political Biography (1959)
Mankekar—Lal Bhadur Shastri
Bakthavachalam, M.—Enathu Ninaivugal (Tamil) (1972).
Maraimalaiyan, A.—Perarignar Annavin Peruvazhvu (1969)
Thangavelar, M.—Annavin Arasu (1968)
Philip Spratt—D. M. K. in Power (1970)
Publications Division—Speeches of Indra Gandhi (1969)
Graffith, P. V.—British Impact of India.
Jack Bell—The Presidency—Office of Power (1967)
Richard F. Fenno Jr.—The President's Cabinet, An analysis of the period from Wilson to Eisenhover (1959)
Srinivasan, N.—Democratic Govt. of India (1954).
Myron Weiner—Party Politics in India (1957).
Kerala Putra—Dyarchy at work (1927).
Krishna Ayyar, R. V.—In the Legislature of those days (1956)
Finer, H. M.—World Governments.

Mackintosh—The British Constitution.

Amery, L. S.—*Thoughts on the* Constitution.

Justice Party Golden Jubilee Souvenir, 1968, Madras.

Administrative Reforms Committee. Report of the Study team on Machinery of the Govt. of India, its products of work, 1968 and 1969.

Anthony Howard and Richard West—The Making of a Prime Minister,

Jain H. M.—Union Executive, 1969.

Morrs Jones —The Govt. and Politics of India, 1970.

Norman Palmer, D.—The Indian Political System, 1961

Park, R. L. and Tinker, L.—Leadership and Political Parties in India, 1960

Patel, H. M.—Cabinet Govt. in India in Studies in Indian Democracy (Ed), S. P. Ayyar and R. Srinivasan, 1965.

Rao, C. V. H.—Parliament and Cabinet in the Indian Parliament (1958).

Shah, S. H.—Cabinet System of Govt. in Lectures on Parliamentary Practice and Procedures, 1966.

Rajeswar Goel—Report on Union Govt. in the Journal of the Society for the Study of the State Govts., 1968.

Narashiman, V. K.—Kamaraj - A Study, 1967.

Saraswathi, S.—Opposition in Indian Parliment in the Journal of Constitutional and Parliamentary Studies, 1970.

Mackenzee, J. P.—*The British* Cabinet.

Byram Carter—Office of Prime Minister.

Crossman, R. H. S.—Bagheot's English Constitution.

Mackintosh—British Parliamentary System.

Dugdale, J. S.—British Constitution.

Hans Dalader—Cabinet Reforms on British.

Rau, B. N.—Indian Constitutional Reforms.

Munshi, K. M.—The President under the Indian Constitution 1963.

Iqbal Noorani—Government and Politics in Indian States
Menon, V. P.—An Outline of Indian Constitutional History (1965)
Myron Weiner—State Governments in India.
,, —Indian Political Synthesis
Humphrey Berkely—The Power of the Prime Minister (1968)
Grenvile Austin—The Indian Constitution, Corner - stone of a Nation (1966)
Pylee—Coustitutional Government in India (1970)
Ashok Mehta—Under the Indian Sky (1971)
Michael Edwards—Nehru, A Political Biography
Ramanujam, K. S —The Big Change (1967)
,, —Challenge and Response (1971)
Kalhan, D. N.—Indira Gandhi—Three Years as Prime Minister (1969)

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை

★

பின்வரும் பொருள்களில்
பட்டப்படிப்பிற்குரிய நூல்கள்
விரைவில் வெளிவரும்

கணிதம்	—	41	நூல்கள்
இயற்பியல்	—	28	,,
வேதியியல்	—	39	,,
தாவரவியல்	—	30	,,
விலங்கியல்	—	40	,,
பொறியியல்	—	50	,,
வரலாறு	—	45	,,
அரசியல்	—	34	,,
பொருளாதாரம்	—	83	,,
வணிகவியல்	—	36	,,
புள்ளியியல்	—	16	,,
உளவியல்	—	8	,,
புவியியல்	—	18	,,